
வந்துவிட்டார்! திகம்பர சாமியார்
பூர்ண
சந்திரோதயம்
5
வடுவூர் கே.துரைசாமி ஐயங்கார்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# பூர்ண சந்த்ரோதயம்

ஐந்தாம் பாகம்

வடுவூர்
கே. துரைசாமி அய்யங்கார்

**ஜெனரல் பப்ளிஷர்ஸ்**
**244, (ப. எண்.) ராமகிருஷ்ணா மடம் சாலை,**
**மயிலாப்பூர், சென்னை – 600 004.**

உரிமை பதிப்பு
முதற் பதிப்பு : டிசம்பர், 2004

© பதிப்பாளர்

விலை: ரூ. 130.00

மொத்த பக்கங்கள் 2+342=344

Laser Typeset by: Keerthana Laser, Madurai

Printed at: M/s. Jai Ganesh Offset Printers, Chennai - 600 004.

# பூர்ணசந்திரோதயம்

*4ம் பாகம் தொடர்ச்சி....*

அவ்வாறு கூறிக்கொண்டே போனவள், "ஐயோ! உங்கள் தகப்பனாரைத் தெய்வமென்றுதான் கொண்டாட வேண்டுமே அன்றி, மனிதரென்று எண்ணுவதற்கே இல்லை. அவர் உங்களுடைய தகப்பனார்; நீங்கள் அவருடைய குமாரர் என்ற முறையில் நீங்கள் அவர் செய்த காரியத்தைப் பற்றி தோஷம் கற்பித்துப் பேசக்கூடாது. அவர் வெந்நீர் அண்டாவிற்குள் இருந்தபோது, என்னுடைய புருஷர் அவர் இருந்ததைப் பார்த்துவிடப் போகிறாரே என்று நான் மூடமதியினால் பெட்டியை வைத்து அண்டாவின் வாயை மூடினேனே, அப்போது அவர் மூச்சுத் திணறித் திக்குமுக்காடி மரண அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்திருக்கலாமே! அப்படி இருக்கையில் வேறே யாராக இருந்தாலும்,வேறே எதையும் கவனிக்காமல் தம்முடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஆவல் கொண்டு மேலே இருந்த பெட்டியைத் தள்ளிவிட்டு வெளியில் வந்திருப்பார்கள் அல்லவா! இவர் அப்படிச் செய்யாமல், என் மானம் போவதைவிடத் தம்முடைய பிராணன் போவதே தக்கதென்று நினைத்து மரண அவஸ்தையைப் பொறுத்துக்கொண்டு தம்முடைய உயிரையே விட்டுவிட்டாரே! அவருடைய பெருந்தன்மையையும் வீரத்தையும் நான் என்னவென்று சொல்லுவேன்! நீங்கள் அவருடைய வயிற்றில் உதித்தவர்கள். ஆகையால், அப்படிப்பட்ட சுத்த வீரத்தனம் உங்களிடமும் இல்லாமல் போகாது. ஆகையால், அவருடைய அரிய செய்கையைப் பற்றி நீங்கள் அவரைப் புகழ்ந்து மெச்சுவீர்கள் என்றே நினைக்கிறேன்'' என்றாள். அவள் சொல்லிய வரலாற்றைக் கேட்டு வந்த நீலமேகம் பிள்ளை கண்ணீர் வடித்தபடி துயரமே வடிவாக மௌனமாய்

உட்கார்ந்திருந்தார். லீலாவதி அன்றைய தினம் பொழுது விடிந்தது முதல் அந்த அகாலவேளை வரையில் தண்ணீரும் அருந்தாமல் வாட்டமடைந்திருந்தது அன்றி, இறந்துபோன ஜெமீந்தாரின் உருவப் படத்தைக் கண்டு அவரது மரணத்தைப் பற்றி அளவற்ற துயரமடைந்து கலங்கி உருகி அழுதாள். ஆதலால், அவளது நிலைமை முற்றிலும் பரிதாபகரமாக இருந்தது. அவளைப் பார்க்கப் பார்க்க, நீலமேகம் பிள்ளை யினது துரயம் முன்னிலும் ஆயிரமடங்கு பெருகியது. தனது தந்தை கேவலம் சாதாரணமான ஒரு ஸ்திரீயை நாடி அலைந்து திரிந்து அபாயத்திற்கு ஆளாகிவிட்டாரே என்று அவர் அதுவரையில் நினைத்துத் தமது தந்தையைப் பற்றி இழிவாக எண்ணியிருந்த அபிப்பிராயம் சிறிதளவு மாறியது. அவ்வளவு அபாரமான கட்டழகும் யௌவனமும் வாய்ந்த அப்ஸர ஸ்திரீபோல இருக்கும் அந்த வடிவழகி அந்தரங்கமான காதலும் பிரேமையும் கொண்டு நேசிக்கையில் அவளது விஷயத்தில் தமது தந்தை தமது மதியை இழந்து அவள்மீது மோகம் கொண்டது மன்னிக்கத் தக்கதே என்று எண்ணம் நீலமேகம் பிள்ளையின் மனதில் பட்டது. அப்படிப்பட்ட சிலாக்கியமான பெண்ணைக் கண்டு, உலகத்தை நீத்த தவசிகள் கூட இச்சை கொள்வார். ஆதலால், தமது தந்தை அவளை நாடி நூலேணியின் வழியாக மேன்மாடத்துக்குச் சென்றது சர்வ சாதாரணமான செய்கை என்றே அவர் மதித்து, அவளையும், தனது தந்தையின் உருவத்தையும் மாறி மாறிப் பார்த்தவராயிருந்தார்.

லீலாவதி மேலும் பேசத்தொடங்கி, "நாங்கள் மைசூரி லிருந்து திரும்பிவந்து மாரியம்மன் கோவிலில் ஒரு ரகசியமான இடத்தில் குடியிருந்தோம். அப்போது என் புருஷர் வெண்ணாற்றங்கரையில் நாங்கள் அதற்குமுன் வசித்து வந்த பங்களாவிற்கு ஏதோ ஒரு காரணமாகப் போனவர் அவ்விடத்தில் வெந்நீர் அண்டாவிற்குள் இறந்துகிடந்த உங்கள் தகப்பனா ருடைய பிரேதத்தைப் பார்த்து அவருடைய அடையாளத்தைக் கண்டுபிடித்துக்கொண்ட தன்றி, எனக்கும் இவருக்கும் சிநேகம்

உண்டென்று அதற்கு முன்பே ஒருவித சந்தேகம் கொண்டிருந்தார். ஆதலால், அவர் உடனே உண்மையை யூகித்து அறிந்துகொண்டவராய் என்னிடம் வந்து என்னை எவ்வளவு கொடுமையாக நடத்தினார் தெரியுமா? அதன்பிறகு அந்தப் பிரேதத்தை எடுத்து அதே பங்களாவின் பின்புறத் தோட்டத்தில் அடக்கம் செய்வதற்குள் அவர் படுத்தி வைத்த பாடு ஈசுவரனுக்கே தெரியவேண்டும். பிரேதம் அடக்கம் செய்யப்பட்ட குழியில், அவர் ஏறிவந்த நூலேணியும் வைத்துப் புதைக்கப்பட்டிருக்கிறது. அவரைப் புதைத்த பிறகு என் புருஷர் நான் செய்த அந்தக் குற்றத்தை மன்னிப்பதாகச் சொல்லி, அதற்குப்பதிலாக, என்னை எப்படிப்பட்ட கேவலமான காரியங்களை எல்லாம் செய்யச் சொன்னார் தெரியுமா? உங்கள் தகப்பனார் விஷயத்தில் நான் என் கற்பை இழந்த தவறுக்கு நான் மகா கொடிய தண்டனைகளை எல்லாம் அனுபவித்தாய் விட்டது. இனி ஒன்றும் மிச்சமே இல்லை. என் புருஷர் என் விஷயத்தில் செய்த அக்கிரமங்களை வாயில் வைத்துச் சொல்லவும் எனக்குக் கூசுகிறது'' என்றாள்.

நீலமேகம்பிள்ளை, ''ஓகோ! இப்போதுதான் உண்மை ஒரு மாதிரியாக விளங்குகிறது. உங்கள் புருஷர் உங்களை அவ்வளவு கொடுமையாக நடத்தி வதைத்தபடியால்தான் நீங்கள் நியாயாதிபதிக்குக் கடிதம் எழுதி அவரைக் காட்டிக் கொடுத்தீர்கள் என்பது நன்றாகத் தெரிகிறது. நீங்கள் சொல்வதைப் பார்த்தால், அவர் எப்படிப்பட்ட இழிவான காரியத்துக்கும் துணியக்கூடிய மகா துஷ்ட மனிதரென்பதும் தெரிகிறது'' என்றார்.

லீலாவதி நிரம்பவும் ஆக்கிரோஷமும் பதைபதைப்பும் அடைந்தவளாய், ''ஆம் ஆம்; உண்மைதான். அவர் என்னை வேறு எந்த விதத்தில் உபத்திரவித்திருந்தாலும், அல்லது, அவர் என்னை வைது அடித்து, உதைத்துச் சித்திரவதை செய்திருந்தாலும் நான் அவர் மேல் அவ்வளவு ஆத்திரம்

கொண்டிருக்கமாட்டேன். ஒரு பெண் பிள்ளை செய்யத்தகாத காரியத்தையும், பௌரஷமுள்ள ஒரு புருஷன் தன் பெண் ஜாதியை ஏவத்தகாத காரியத்தையும், நான் செய்ய வேண்டுமென்று அவர் வற்புறுத்தினார். ஆகையால் அப்படிப்பட்டவர் எனக்குப் புருஷராக இருக்கத் தகுந்தவரல்ல என்றும் அவரிடம் நான் இருந்து வாழ்வது உசிதமானது அல்லவென்றும் நினைத்து நான் அந்தக் கடிதத்தை எழுதி ரகசியமாக அனுப்பி, போலீசார் அவரைப் பிடித்துக்கொண்டு போகும்படிச் செய்தேன்'' என்றாள்.

நீலமேகம்பிள்ளை இரக்கமாகவும் உருக்கமாகவும் பேசத் தொடங்கி, ''அம்மா! நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையாக இருக்கலாம். ஆனால், உங்கள் கட்சி நியாயமானதா, உங்கள் புருஷருடைய கட்சி நியாயமானதா என்பதைப்பற்றித் தீர்மானம் செய்யும் யோக்கியதையை நான் வகித்துக்கொள்வது சரியல்ல. அதுவுமன்றி, அந்த விஷயத்துக்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை ஆகையால், அதைப்பற்றிப் பேசுவதை இவ்வளவோடு விட்டு என் தகப்பனார் விஷயத்தில் நாம் இனிச் செய்யவேண்டிய காரியத்தைப் பற்றிப் பேசுவதே நல்லது'' என்றார்.

லீலாவதி, ''இனி நாம் உங்கள் தகப்பனாருடைய விஷயத்தை மறைத்துவைக்க வேண்டிய அவசியமே இல்லை. நடந்த காரியங்களை எல்லாம் நடந்தபடியே நாம் வெளியிட்டு அவருக்கு ஆகவேண்டிய உத்தரகிரியைகளையும் ஒழுங்காக நடத்துவதே நலமென்று நினைக்கிறேன். அப்படிச் செய்வதனால், என்னுடைய பெயர் கெட்டுப் போகும். இருந்தாலும், அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. இதனால் எனக்கு எப்படிப்பட்ட இழிவாவது அவமானமாவது ஏற்பட்டாலும் அதை நான் ஏற்றுக்கொள்வதே நியாயம்'' என்றாள். உடனே நீலமேகம்பிள்ளை, ''அம்மா! நீங்கள் வயசில் என்னைவிடச் சிறியவராக இருந்தாலும், எப்போது

உங்களுக்கும் என் தகப்பனாருக்கும் சிநேகம் ஏற்பட்டதோ, இனி நான் உங்களை என்னுடைய தாயாக மதிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்மேல் நீங்கள் எவ்வளவு ஆழ்ந்த பிரியம் வைத்திருந்தீர்கள் என்பதை நான் உங்களுடைய கடிதத்திலிருந்து நன்றாக அறிந்து கொண்டிருக்கிறேன். அவர் இறந்தபோனதைப்பற்றி உங்கள் மனம் எப்பாடு படும் என்றும் நன்றாகத் தெரிகிறது. அதன் உண்மையை நான் இப்போது என் கண் முன்பாகவே காண்கிறேன். அப்படியிருக்க இந்த நிலைமையில் நான் என்னலான உதவியைச் செய்து உங்களுடைய துயரத்தைப் போக்கி உங்களுக்கு எவ்வித அவமானமும் தூஷணையும் உண்டாகாமல் தடுப்பதே ஒழுங்கான காரியம். அப்படிச் செய்யாமல் உங்களிடம் வீண் ஆக்கிரோஷமும் குரோதமும் பாராட்டி உங்களை அவமானத்துக்கும் துன்பத்துக்கும் ஆளாக்குவது மனுஷத்தனம் ஆகாது. ஆகையால், என் தகப்பனார் இறந்துபோய் விட்டார் என்ற விஷயத்தை மாத்திரம் நான் வெளிப்படுத்தி அவருடைய உத்தரகிரியைகளை நடத்துவதொன்றே முக்கியமான விஷயம். அவர் இறந்துபோன வரலாற்றை எல்லாம் வெளிப்படுத்துவது அனாவசியமென்று நினைக்கிறேன். நான் உங்கள் விஷயத்தில் க்ஷமையோடு நடந்துகொள்ள விரும்புகிறது ஒரு பக்கமிருக்க, இந்த விவரத்தை எல்லாம் நான் வெளியிட்டால், என் தகப்பனாருடைய பெயருக்கும் யோக்கியதைக்கும் ஒருவித களங்கம் ஏற்படுமல்லவா? அதைத் தடுப்பதற்காகவும் நாம் எச்சரிக்கையாக நடந்து கொள்வதோடு இந்த வரலாற்றை எல்லாம் கூடியவரையில் நாம் மறைத்துவிடுவதே நல்லது. எல்லாவற்றிற்கும் நான் இதுவரையில் எனக்கு உதவியாக இருந்த அந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் கலந்து யோசனை செய்து அவருடைய புத்திமதிப்படி நடந்து கொள்ளலாம் என்று உத்தேசிக்கிறேன்'' என்றார்.

அதைக்கேட்ட லீலாவதி, ''சரி; உங்களுக்கு எது ஒழுங்காகப் படுகிறதோ, அதைச் செய்யுங்கள். அந்தப் போலீஸ்

இன்ஸ்பெக்டர் இந்த விஷயங்களை எல்லாம் நியாயாதிபதிக்கு அறிவித்து விசாரணை நடத்தவேண்டுமென்று பிரியப் பட்டாலும், நான் அதற்கு இணங்குகிறேன். இதனால் எனக்கு எப்படிப்பட்ட தண்டனையாவது கெடுதலாவது நேர்ந்தாலும், நான் அவைகளை நிரம்பவும் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளத் தடையில்லை'' என்று உறுதியாகவும் முடிவாகவும் கூறினாள்.

அதைக்கேட்ட நீலமேகம் பிள்ளை, ''அம்மா! நீங்கள் வேறு, என் சொந்தத் தாய் வேறென்று நான் எண்ணவில்லை. ஆகையால், அப்படிப்பட்ட அவமானமும் கெடுதலும் உங்களுக்கு நேருவதை நான் பார்த்துச் சகிக்கமாட்டேன். அதுவுமன்றி, ஓர் அன்னியருடைய சம்சாரத்தைக் கெடுத்தாரென்ற கெட்ட பெயர் என் தகப்பனாருக்கு வராதா? அப்படிப்பட்ட இழிவு ஏற்படும்படி நானே செய்யலாமா? நீங்கள் சொன்னதெல்லாம் உண்மையென்று நான் நம்புவதாக நான் ஏற்கெனவே உறுதி சொல்லிவிட்டேன். நான் என் தகப்பனார் விஷயத்தில் செய்யவேண்டிய ஒரு கடமையாக பாவித்து நான் வேறே இரண்டு வைத்தியர்களை வைத்துக் கொண்டு என் தகப்பனாருடைய சவத்தை ரகசியமாக வெளிப்படுத்திப் பரீட்சை செய்து ஒருவிதமாகத் திருப்தி செய்துகொள்ள உத்தேசிக்கிறேன். அதுவே போதுமானது. அப்படி நாம் செய்துவிட்டால், அந்தப் போலீஸ் இன்ஸ்பெக்ட ரிடம் என்னால் இயன்றவரையில் சிபாரிசு செய்கிறேன். அவர் சகலமான நற்குணங்களும் வாய்ந்த மனிதர்; அவர் என்னுடைய சொல்லை மீற மாட்டார். ஆகையால், இந்த விஷயம் நியாய ஸ்தலத்துக்குப் போகுமோ என்ற கவலையே உங்களுக்கு வேண்டியதில்லை'' என்று உறுதியாகக் கூறினார்.

உடனே லீலாவதி ''சரி; அப்படியே செய்யலாம். இன்ஸ்பெக்டரிடம் இப்போதே போகலாமா? நானும் உங்களுடன் கூடவே வருகிறேன்'' என்றாள்.

நீலமேகம்பிள்ளை, ''அப்படியே செய்யலாம். ஆனால்,

உங்களுடைய முகவாட்டத்தைப் பார்த்தால், நீங்கள் காலையிலிருந்து இன்னமும் சாப்பிடவில்லை போலத் தோன்றுகிறது; இவ்விடத்திலேயே கொஞ்சம் ஆகாரம் பார்த்துக் கொள்ளுங்கள். பிறகு உடனே புறப்பட்டுப் போகலாம்'' என்றார்.

லீலாவதி:- நான் காலையிலிருந்து சாப்பிடவில்லை என்பது உண்மைதான். இருந்தாலும் பரவாயில்லை. நாம் இன்ஸ்பெக்டரிடம் போனபின் நான் அவ்விடத்திலிருந்து எங்களுடைய ஜாகைக்குப் போய்ச் சாப்பிட்டுக் கொள்ளுகிறேன். இப்போது அவசரமில்லை; புறப்படுங்கள் போகலாம்- என்றாள்.

உடனே இருவரும் புறப்பட்டு வெளியில் நடந்தனர்.

## 40 - வது அதிகாரம்

## சவப்பரிசோதனை - புதிய ரகசியம்

அன்றையதினம் இரவு சுமார் எட்டுமணி சமயமிருக்கலாம். வெண்ணாற்றங்கரை என்னும் ஊரில் அதற்குமுன் லீலாவதியும் மாசிலாமணிப் பிள்ளையும் வசித்திருந்த பங்களாவின் வாசலில் இரண்டு குதிரை வண்டிகள் வந்து நின்றன. அவர்கள் அந்த மாளிகையைவிட்டு மைசூருக்குப் போனதுமுதல் அதுவரையில் வேறே யாரும் அவ்விடத்தில் குடியேறவில்லை ஆதலால், அது காலியாகவே இருந்தது. அதன் சொந்தக்காரரிடத்திலிருந்து போலீஸ் இன்ஸ்பெக்டர் அதைச் சில நண்பருக்கு காட்ட வேண்டுமென்ற முகாந்திரத்தின்மேல் அதன் திறவு கோலை அன்றைய தினம் பகலிலேயே வாங்கி வைத்துக் கொண்டிருந்தார். வண்டிகள் வந்து நின்றவுடனே ஒன்றிலிருந்து போலீஸ் இன்ஸ்பெக்டர், நீலமேகம்பிள்ளை, இரண்டு வைத்தியர்கள் ஆகிய நால்வர் இறங்கினார்கள்; இன்னொன்றிலிருந்து லீலாவதி கீழே இறங்கினாள். மறுபடி பத்து, அல்லது, பதினொரு மணி சமயத்துக்கு மூன்றாவது வண்டி ஒன்றையும்

அழைத்துக்கொண்டு வரும்படி போலீஸ் இன்ஸ்பெக்டர் வண்டிக்காரர்களுக்கு உத்தரவு செய்ய அவர்கள் வண்டிகளை ஓட்டிக்கொண்டு அவ்விடத்தை விட்டுப் போய்விட்டனர். உடனே இன்ஸ்பெக்டரும் மற்றவர்களும் அந்த பங்களா விற்குள் நுழைந்தனர். உள்ளே இருந்த கட்டிடத்தண்டை அவர்கள் போகவே, போலீஸ் இன்ஸ்பெக்டரால் முன்னரே அனுப்பப்பட்டிருந்த இரண்டு கூலியாட்கள் மண்வெட்டி, கடப்பாரை, லாந்தர் முதலிய கருவிகளோடு அவ்விடத்தில் எதிர்ப்பட்டனர்.

நீலமேகம்பிள்ளையும், லீலாவதியும் முன்னால் நடந்து செல்ல, போலீஸ் இன்ஸ்பெக்டரும், வைத்தியர்களும், கூலியாட்களும் சிறிது பின்னால் தொடர்ந்து சென்றனர். லீலாவதி அந்த பங்களாவில் நீண்டகாலம் வசித்திருந்தவள் ஆதலால், அந்தத் தோட்டத்தின் ஒவ்வொரு பாகமும் அவளுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. முதல் நாள் இரவு முதல் அவள் ஓய்வில்லாமல் அல்லல்பட்டிருந்தவள் ஆதலால், அவளது மனதும் உடம்பும் முற்றிலும் தளர்வடைந்து சோர்ந்து போயிருந்தன. ஆனாலும், தான் எடுத்த காரியத்தை நிறைவேற்றியே தீரவேண்டுமென்ற உறுதியான சங்கற்பம் ஒன்றே அவளது மனோமெய்களுக்கு அபாரமான வலுவூட்டிக் கொண்டிருந்தது. ஆகவே, அவள் திடமாகவே நடந்து சென்றாள். இறந்துபோன ஜெமீன்தார் புதைக்கப்பட்ட இடத்தில் புல் முளைத்தும், சருகுகளும் செத்தைகளும் படிந்தும் அடையாளம் தெரியாதபடி மறைந்து போயிருந்தது. ஆனாலும் அவள் தனது கவனத்தை நன்றாகச் செலுத்தி, அன்றைய தினம் தான் கண்ட மரங்கள் செடிகள் முதலியவற்றின் அடையாளங் களைக் கொண்டு அந்த இடத்தைக் கண்டுபிடித்து அவ்விடத்தில் வெட்டும்படி கூலியாள்களிடம் கூறினாள். அவர்கள் உடனே அவ்விடத்தில் தரையை வெட்டி மண்ணைப் பெயர்க்கத் தொடங்கினர். அவ்விடத்தில் காவலாகவும் சாட்சியாகவும்

இருக்கும்படி ஒரு வைத்தியரை வைத்துவிட்டு மற்ற மூவரையும் அழைத்துக் கொண்டு இன்ஸ்பெக்டர் கட்டிடமிருந்த இடத்திற்குச் சென்றார்.

அந்த இடத்திற்கு அருகில் நெருங்க நெருங்க லீலாவதியின் மனம் தவித்தது. இருதயம் தடதடவென்று அடித்துக்கொண்டது. கைகால்களெல்லாம் நடுங்க ஆரம்பித்தன. கூலியாட்களிடம் கொடுத்தனுப்பப் பட்டிருந்த ஒரு பெரிய லாந்தரை இன்ஸ்பெக்டர் கொளுத்திக் கையில் பிடித்துக்கொண்டிருந்தார். ஆதலால், அந்த வெளிச்சத்தின் உதவியால் அவர்கள் கட்டிடத்தின் கதவைத் திறந்துகொண்டு மேன்மாடத்திற்குச் சென்று லீலாவதி சயனக்கிரகமாக உபயோகித்துவந்த அறையை அடைந்தனர். கட்டில் முதலிய சாமான்களெல்லாம் அப்போது விலக்கப்பட்டுப் போயிருந்தன. ஆனாலும், பக்கத்திலிருந்த ஸ்நான அறைக்குள்ளிருந்த வெந்நீர் அண்டா அடுப்போடு வைத்துக் கட்டப்பட்டிருந்தது ஆகையால், அது மாத்திரம் விலக்கப்படாமல் பழைய மாதிரியே இருந்தது. அந்த இடத்தை அடைந்தவுடனே லீலாவதியின் சிரம் சுழலவும், அறிவு மயங்கவும் ஆரம்பித்தன. கண்களில் கண்ணீர் பெருகி வழிந்து கொண்டே இருந்தது. அவள் நிற்கமாட்டாமல், அவளது கால்கள் தள்ளாடின. ஆதலால், அவள் அப்படியே சுவரில் சாய்ந்து கொண்டாள். நீலமேகம்பிள்ளையின் நிலைமையும் அதுபோல நிரம்பவும் பரிதாபகரமாக இருந்தது. தமது தந்தையின் உயிரைக் குடித்த வெந்நீர் அண்டாவைப் பார்க்கும் போது, அவரது உடம்பு நடுங்கியது. மயிர்கள் சிலிர்த்தன. ஒருவிதமான திகிலும், துயரமும் பெருகின. லீலாவதியின் கண்ணீரைக் காண, அவரது கண்களிலும் கண்ணீரருவி பெருகி வழிந்தது.

இன்ஸ்பெக்டரும், வைத்தியரும் சயனக்கிரகத்தையும், ஸ்நான அறையையும் வெந்நீர் அண்டாவையும் உற்று நோக்கி நன்றாக ஆராய்ச்சி செய்து முடித்தனர். லீலாவதி ஒவ்வோரிடத்

தையும் சுட்டிக்காட்டி, ஜெமீந்தார் இறந்த தினத்தன்று அவ்விடத்தில் நடந்த சம்பவத்தை எல்லாம் தெளிவாக எடுத்துரைத்தாள். அவ்வாறு அவ்விடத்தில் அவர்கள் ஒரு நாழிகை சாவகாசம் இருந்து சகலமான விஷயங்களையும் திருப்திகரமாகத் தெரிந்துகொண்டு அவ்விடத்தை விட்டுக்கீழே இறங்கி, கூலியாட்கள் வெட்டிக்கொண்டிருந்த இடத்திற்கு மறுபடி வந்து சேர்ந்தனர்.

லீலாவதி சிறிது தூரத்திற்கு அப்பாலிருந்த ஒரு மேடையின் மீது உட்கார்ந்துகொண்டு அவ்விடத்தில் நடந்த ஆராய்ச்சியின் முடிவை அறிய ஆவல்கொண்டவளாக இருந்தாள். மற்றவர்கள் எல்லோரும், குழியைச் சுற்றி நின்று கொண்டிருந்தனர். அவர்கள் வெந்நீர் அண்டா இருந்த இடத்தைப் பார்த்துவிட்டு வந்ததற்குள் கூலியாட்கள், வெகுதூரம் குழிவெட்டி விட்டார்கள். அதற்குமேல் தாங்கள் முரட்டுத்தனமாக வெட்டினால் தங்களது ஆயுதங்கள் சவத்தின் மேல் படுமென்று நினைத்து அவர்கள் நிரம்பவும் ஜாக்கிரதையாக வெட்டிக் கொண்டே போய்ச் சிறிது நேரத்தில் சவமிருந்த இடத்தை அடைந்தனர். அவர்கள் சவத்தைக் கெட்டியான ஒரு துப்பட்டியில் சுற்றி அடக்கம் செய்திருந்தனர். ஆதலால் மண் துப்பட்டி முழுமையும் அறித்துத் தின்று, சவத்தையும் அறித்துத் தின்ன அப்போதே ஆரம்பித்திருந்தது. பட்டு நூலேணி ஒன்றும் அவ்விடத்தில் இருந்தது. லீலாவதி விவரித்ததுபோல, அவ் விடத்தில் எல்லாக் குறிப்புகளும் இருந்ததை இன்ஸ்பெக்டர் முதலியோர் நன்றாக உணர்ந்தனர். சவத்தை அவ்விடத்திலிருந்து வெளியில் எடுக்க அவர்கள் முயற்சிக்க அது அழுகித் தண்ணீராய்ப் போகும் நிலைமையில் இருந்தது. ஆகையால், அவர்கள் கொண்டு வந்திருந்த சில துப்பட்டிகளைப் போட்டுச் சுற்றியே அதை அவர்கள் வெளியில் எடுக்கும்படி நேர்ந்தது.

கூலியாட்கள் அவ்வாறு சவத்தை வெளிப்படுத்தி எடுத்துக்கொண்டு போய்க் கட்டிடத்துத் தாழ்வாரத்தில்

வைத்தனர். தமது தந்தையின் விகாரமான சவத்தைக் கண்ட நீலமேகம் பிள்ளையின் மனம் எவ்வாறு பதறியிருக்கும் என்பதை வாசகர்கள் யூகித்துக் கொள்வதே நன்று. தந்தையிடத்தில் அபாரமான வாஞ்சையும் பயபக்தியும் வைத்திருந்த சற்புத்திரரான நீலமேகம் பிள்ளையின் துயரம் வாக்கிலும், சொல்லிலும், மனதிலும் அடங்காததாக இருந்தது. அதைக் கண்ட இன்ஸ்பெக்டர், வைத்தியர்கள் சவத்தைப் பரீட்சிப்பதைப் பார்த்தால் நீலமேகம்பிள்ளையின் துயரம் இன்னமும் அதிகமாகப் பெருகுமென்று நினைத்தவராய் அவரை அழைத்துக்கொண்டு சிறிது தூரத்திற்கப்பால் போனார். லீலாவதி சொன்னபடி அந்த ஜெமீந்தார் வெந்நீர் அண்டாவில் மூச்சுத் திணறி இறந்தாரா அல்லது விஷத்தினாலாவது, அல்லது, அடித்துக் கொல்லப்பட்டதனாலாவது இறந்தாரா என்பதை வைத்தியர்கள் ஆராயத் தொடங்கினர். தனியாகச் சென்ற நீலமேகம்பிள்ளை இன்ஸ்பெக்டரை நோக்கி, "ஐயா! நாம் பார்த்தவரையில் இந்த அம்மாள் சொன்னபடி எல்லாக் குறிப்புகளும் இருக்கின்றன. பிரேத ஆராய்ச்சியும் அதையே உறுதிப்படுத்தும் என்பதைப்பற்றி சந்தேகமே இல்லை. வைத்தியர்களும் அதே அபிப்பிராயத்தை வெளியிடும் பட்சத்தில், நான் கேட்டுக்கொண்டபடி நீங்கள் இந்த விஷயத்தை நியாயஸ்தலத்துக்குக் கொண்டு போகாமல் விட்டுவிடுவீர்களல்லவா" என்றார்.

உடனே இன்ஸ்பெக்டர், "ஆம். தடையென்ன! நான் இதை விட்டுவிடத்தான் வேண்டும். இந்த மரணம் தற்செயலாக நேர்ந்த துர்மரணம். ஆகையாலும், இவர் இறந்ததற்கு இவரே உத்தரவாதி யன்றி, வேறே யாரும் உத்தரவாதி அல்ல, ஆகையாலும், நாம் இந்த வழக்கை நியாயஸ்தலத்திற்குக் கொண்டுபோக வேண்டுமென்ற அவசியமில்லை. சட்டப்படி பார்த்தால், நான் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை எல்லாம் நீதிஸ்தலத்தாருக்குத் தெரிவிக்க வேண்டியது அவசியமே. ஆனால் இந்த விஷயத்தை நாம் மேலுக்குத் தெரிவிப்பதால்

நிரபராதியான இந்தப் பெண்ணுக்கும் உங்களுடைய தகப்பனாருடைய பெயருக்கும் இழுக்கும் அவமானமும் உண்டுபண்ணுவதைத் தவிர, வேறு எவ்விதமான பயனும் உண்டாகப் போகிறதில்லை. ஆகையால், நீங்கள் நிரம்பவும் வேண்டி என்னிடம் கேட்டுக் கொண்டதைக் கருதி நான் இந்த விஷயத்தை நியாயஸ்தலம் வரையில் கொண்டுபோக விரும்ப வில்லை. என் மேலதிகாரிகளுக்கு மாத்திரம் இந்த நிகழ்ச்சியைச் சுருக்கமாக எழுதி சவத்தைப் பார்த்ததில் யாதொரு சந்தேகத்துக்கும் இடமில்லா திருந்தமையால், அதைத் தகனம் செய்ய அனுமதி கொடுத்து விட்டதாகவும் எழுதி அனுப்பிவிட்டு நேரில் போய் இந்த விஷயத்தை அதிகமாகக் கிளற வேண்டாமென்று சொல்லி அவர்களையும் அடக்கி விடுகிறேன்'' என்றார்.

நீலமேகம்பிள்ளை ஒருவித மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்தவராய், ''சரி; சந்தோஷம். நீங்கள் செய்யும் இந்தப் பெரிய உதவியை நான் ஒருநாளும் மறக்கவே மாட்டேன். நான் என் தகப்பனாருடைய பெயர்கெட்டுப்போய் விடுமென்றுகூட அவ்வளவாகக் கவலைப்படவில்லை. என் தகப்பனாரிடம் அபரிமிதமான பிரியம் வைத்திருந்த இந்த அம்மாள் விஷயந்தான் நிரம்பவும் பரிதாபகரமாக இருக்கிறது. இவர்களுக்காகத்தான் நான் அதிகம் இரங்குகிறேன்'' என்றார்.

*இன்ஸ்பெக்டர்:-* வாஸ்தவந்தான். ஆனால், இந்த அம்மாள் தன்னுடைய புருஷன் விஷயத்தில் நடந்துகொண்ட மாதிரி இருக்கிறதே, அது மகா துணிச்சலான நம்பிக்கைத் துரோகமல்லவா? உங்கள் தகப்பனார் சம்பந்தப்பட்டமட்டில் இந்த அம்மாள் விஷயத்தில் நாம் இரங்கவேண்டியது நியாயந்தான். ஆனால், தன் புருஷனுக்குத் துரோகம் செய்ததைப் பற்றி நான் ஒருநாளும் இரக்கமே கொள்ளமாட்டேன்- என்றார்.

*நீலமேகம்பிள்ளை:-* நீங்கள் சொல்வது உண்மைதான். ஆனாலும் இந்த அம்மாளுடைய புருஷர் பரமதுஷ்டராம்;

யோக்கியமான குடும்ப ஸ்திரீகள் செய்யத்தகாத காரியங்களை எல்லாம் செய்யும்படி வற்புறுத்தி அதட்டி மிரட்டிப் பல வகையில் வதைத்தாராம். அவரிடம் ஒரு க்ஷணநேரம் இருப்பதும் எமவேதனையாக இருந்ததாம். அதனால் இந்த அம்மாள் தம்முடைய மனசுக்கு விரோதமாகவே அவருக்கு துரோகம் செய்ய நேர்ந்ததாம்- என்றார்.

**இன்ஸ்பெக்டர்:-** ஆம். அந்த மனிதரும் நிரம்பவும் மூர்க்க குணமுடைய மனிதர்தான். அவருடைய சங்கதியை நான் பல தடவைகளில் நேரில் கண்டு கவனித்திருக்கிறேன். அந்த மனிதரும் துஷ்ட மனிதர்; இந்த அம்மாளும் சபலபுத்தி உடையவள். இல்லாவிட்டால் புருஷன் இருக்கையிலேயே இன்னொரு புருஷன்மேல் நாட்டம் செல்லுமா? இந்த அம்மாளுடைய அப்படிப்பட்ட நடத்தையைக் கண்டு எந்தப் புருஷன்தான் பொறுத்துக் கொண்டிருப்பான். அவராவது இவ்வளவோடு விட்டார்; மற்றவர்கள் இந்த அம்மாளைக் கொன்று போட்டிருப்பார்கள். அது எப்படியாவது போகட்டும். நமக்கும் அதற்கும் இப்போது யாதொரு சம்பந்தமுமில்லை. ஆகையால், இவர்களுடைய குடும்பச் சண்டையையும் இதையும் நாம் இப்போது சம்பந்தப்படுத்துவது நியாயமல்ல. ஆகையால், நாம் இது சம்பந்தப்பட்டவரையில் இந்த அம்மாளின்மேல் ஏதாவது குற்றமிருக்கிறதா என்று பார்த்துக் கொண்டு அதோடு விசாரணையை நிறுத்திக் கொள்வோம். இதுவரையில் நாம் பார்த்தமட்டிலும், இந்த அம்மாள் சொன்னதற்கு அனுசரணையாகவே எல்லா விஷயங்களும் இருக்கின்றன. வைத்தியர்கள் பிரேதத்தைச் சோதனைசெய்து பார்த்து, இந்த அம்மாளுடைய சொல்லை ஆமோதித்து விடுவார்களானால், அதுவே போதுமானது. இந்த அம்மாள் பேரில் யாதொரு வழக்கும் இல்லையென்றும், இனி இதைப் பற்றிக் கவலையுறாமல் சுயேச்சையாக இருக்கலாமென்றும், நான் இப்போதே நேரில் சொல்லிவிடுகிறேன்- என்றார்.

அவர்களிருவரும் அவ்வாறு சம்பாஷித்தபடி சிறிது தூரத்தில் நின்றுகொண்டிருக்க, சவத்தண்டை இருந்த வைத்தியர்களில் ஒருவர் வெளிப்பட்டார். சிறிது தூரத்திற்கு அப்பால் உட்கார்ந்திருந்த லீலாவதி பிரேத ஆராய்ச்சி முடிந்து விட்டதென்று தீர்மானித்துக் கொண்டவளாய் அவ்விடத்தை விட்டெழுந்து மற்றவர்களிடம் வந்து சேர்ந்தாள். அப்போது அவளது முகம் பயத்தினால் வெளிறடைந்து, அவளது மனதின் சங்கடங்களையும் உடம்பின் தளர்ச்சியையும் எளிதில் வெளிப்படுத்தியது. ஆனாலும், உண்மை எப்படியும் வெளிப்படுமென்ற உறுதியையும் நம்பிக்கையையும் அவள் கைவிடாமல் திடமாகவே அவர்களுக்கு முன்னர் காணப்பட்டாள்.

பிரேதத்தண்டையிலிருந்து புறப்பட்டு வந்த வைத்தியர் லீலாவதி வருவதைக் கண்டு சிறிது நின்று அவளும் வந்து சேர்ந்து தாம் சொல்லும் முடிவைக் கேட்கவேண்டுமென்று பொறுத்திருந்தார். அவள் வந்து சேர்ந்தவுடனே வைத்தியர் மற்றவர்களை நோக்கி, தாமும் தமது சகாவான இன்னொரு வைத்தியரும் பிரேதத்தை ஆராய்ச்சி செய்ததாகவும், லீலாவதி சொன்னதற்கு அனுகூலமாகவே சவத்தினிடம் குறிகள் காணப்படுவதாகவும் கூறினார்.

உடனே போலீஸ் இன்ஸ்பெக்டர் புன்னகை செய்த முகத்தோடு லீலாவதியை நோக்கி, ''அம்மா! நாங்கள் செய்யக் கூடிய ஆராய்ச்சிகளை எல்லாம் செய்து முடித்துவிட்டோம். நீங்கள் சொன்ன வரலாறெல்லாம் உண்மையென்றே ஏற்படுகிறது. ஆகையால், உங்கள் மேல் எங்களுக்கு யாதொரு சந்தேகமாவது தாவாவாவது கிடையாது. இனி நீங்கள் எங்களோடு போலீஸ் கச்சேரிக்கு வரவேண்டுமென்ற அவசியமும் இல்லை; இங்கே இருக்க வேண்டுமென்ற கட்டாயமும் இல்லை. உங்களுக்கு இஷ்டமானால் நீங்கள் இனி உங்களுடைய ஜாகைக்குப் போகலாம்'' என்றார்.

உடனே நீலமேகம் பிள்ளை லீலாவதியை அன்பாகவும் இரக்கமாகவும் பார்த்து, "அம்மா! நம்முடைய வண்டிகள் இந்நேரம் திரும்பி வந்திருக்கலாமென்று நினைக்கிறேன். உங்களை ஒரு வண்டியில் வைத்து அனுப்புகிறோம். நீங்கள் முன்னால் உங்களுடைய ஜாகைக்குப் போய்ச் சேருங்கள். நாங்கள் இன்னம் கொஞ்சநேரம் இவ்விடத்திலிருந்து என் தகப்பனாருடைய பிரேதத்தை எடுத்து வண்டியில் வைத்துக்கொண்டு அதிக பகிரங்கமில்லாமல் மேற்கு ராஜ வீதியிலுள்ள எங்களுடைய ஜாகைக்குப் போய்ச் சேர வேண்டும்" என்றார்.

அவர்களது முடிவான சொற்களைக் கேட்ட லீலாவதி அளவற்ற மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைந்தவளாய் நீலமேகம் பிள்ளை பிரஸ்தாபித்தபடி தான் முன்னால் போக ஒப்புக் கொண்டாள். உடனே நீலமேகம் பிள்ளையும், இன்ஸ் பெக்டரும் லீலாவதியை அழைத்துக்கொண்டு பங்களாவிற்கு வெளியில் வந்தனர். மூன்று வண்டிகள் வந்து ஆயத்தமாக நின்று கொண்டிருந்தன. அவர்கள் லீலாவதியை ஒரு வண்டியில் உட்காரவைத்து, வடக்கு ராஜ வீதியில் மருங்காபுரி ஜெமீந்தாரினது மாளிகைக்கு ஓட்டிக்கொண்டு போகும்படி வண்டிக்காரனிடம் கூற, அவன் அவ்வாறே வண்டியை ஓட்டிக்கொண்டு செல்லலானான். லீலாவதி தான் துணிந்து நீலமேகம் பிள்ளையிடம் ரகசியங்களை எல்லாம் வெளியிட்டதனால், தனது துன்பங்களெல்லாம் விலகிப் போயினவென்றும், தான் இனி எவ்விதக் கவலையுமின்றி சுயேச்சையாக இருக்கலாமென்றும் நினைத்து மகிழ்ச்சி அடைந்து அளவளாவியவளாய்த் தனது ஜாகைக்குப் போய்ச் சேர்ந்தாள். அவ்விடத்தில் மேலே நடந்த விஷயங்களை விவரிக்குமுன் நீலமேகம் பிள்ளை முதலியோர் வெண்ணாற்றங் கரையை விட்டு வந்த விவரத்தின் மிகுதியையும் கூறிவிடுவது அவசியமாதலால், அவரைக் கவனிப்போம்.

அவரும் நீலமேகம் பிள்ளையும் மற்ற இரண்டு வண்டிகளையும் அழைத்துக்கொண்டு பங்களாவிற்குள் சென்று, வண்டிகளைச் சிறிது தூரத்தில் நிற்க வைத்துவிட்டு பிரேதம் இருந்த இடத்தை அடைந்தனர். அவ்விடத்திலிருந்த வைத்தியர்களுள் ஒருவர இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "ஐயா! இந்தப் பிரேதத்தை நாங்கள் சோதனை செய்து பார்த்ததில், இவ் விடத்தில் ஒரு காகிதச் சுருள் இருந்தது. அதை எடுத்து இதோ பக்கத்தில் வைத்திருக்கிறோம். இவரைப் புதைத்த காலத்தில் இவருடைய உடம்பில் சட்டை துணி முதலியவைகளும் இருந்திருக்க வேண்டும். இந்தக் காகிதச்சுருளை இவர் சட்டைப் பைக்குள் வைத்திருந்திருக்கிறார் என்றே நினைக்கிறோம்" என்றார்.

உடனே இன்ஸ்பெக்டர், "ஓகோ! அப்படித்தான் இருக்க வேண்டும்" என்று கூறியவண்ணம் கீழே வைக்கப்பட்டிருந்த காகிதச் சுருளை எடுத்துப் பிரித்துப் பார்த்தார். அதற்குள் ஒரு தஸ்தாவேஜி மாத்திரம் காணப்பட்டது. அதைப்படிக்கத் தொடங்கி மேலே இருந்த இரண்டொரு வரிகளைப் படித்த இன்ஸ்பெக்டர், அது இறந்துபோன ஜெமீந்தார் தம்முடைய ஜீவ காலத்திலேயே எழுதி வைத்துக்கொண்டிருந்த தமது உயில் பத்திரம் என்பதைக் கண்டு, அதை உடனே நீலமேகம் பிள்ளையிடம் கொடுத்துவிட்டு வைத்தியர்களை நோக்கி, "இந்தப் பிரேதம் ரூபமில்லாமல் ஆற்று ஜலமாக ஓடிக் கொண்டிருக்கிறது, கைகால்களெல்லாம் தனித்தனியாகப் போய் மாம்சக் குவியலாக இருக்கின்றன. இந்த நிலைமையில் நீங்கள் இவர் இறந்துபோன வகை என்ன என்பதையும் எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?" என்றார்.

வைத்தியர், "இந்த நிலைமையில் யாராக இருந்தாலும் உண்மையைக் கண்டுபிடிப்பது துர்லபம்தான். நீங்கள் என்னை அழைத்து இந்தக் காரியத்தைச் செய்யும்படி கேட்டுக் கொண்டதைக் கருதி நாங்கள் அதைத் தடுக்கமாட்டாமல்

ஒப்புக்கொண்டு எங்களால் ஆனவரையில் பிரயாசைப்பட்டு ஒருவித முடிவிற்கு வந்தோம்; விஷமிட்டதனால் இந்த மரணம் நேர்ந்திருந்தால், இந்த மாமிசத்தின் நிறத்திலும் வாசனையிலும் இருந்தே, அது வெளியாகிவிடும். அப்படிப்பட்ட குறி எதுவும் இல்லை. ஆகையால் விஷமிடப்படவில்லை என்று நிச்சயித்துக் கொண்டோம். இவர் அடிபட்டு இறந்தாரா இல்லையா என்பதை பிரேதம் உருக்குலையாமல் இருந்தாலன்றி மற்றப்படி நிச்சயமாகக் கண்டுபிடிக்க முடியாது. இந்த மனிதர் எவ்விடத்தில் இறந்தாரோ அவ்விடத்திலேயே இதுவரையில் இருந்திருந்தால் அப்போதாவது நாங்கள் ஒருவிதமாகப் பிரயத்தனப்பட்டு உண்மையைக் கண்டு பிடிக்கலாம். இந்தப் பிரேதம் இரண்டு மூன்று தரம் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்குக் கொண்டு போகப்பட்டிருப்பதன்றி தாறுமாறாகவும் வைத்து துப்பட்டியால் கட்டப்பட் டிருக்கிறது. ஆகையால், இந்த நிலைமையில் உண்மையைக் கண்டுபிடிப்பது சாத்தியமில்லாத விஷயம். அந்த ஸ்திரீ சொன்ன விஷயங்களையும் இவ்விடத்திலிருந்த சகலமான குறிப்பு களையும் ஒத்திட்டுப் பார்த்துத்தான் உத்தேசமாக நாங்கள் ஒருவித முடிவு சொல்லக்கூடும். அதுபோலவேதான் நாங்கள் இந்த விஷயத்திலும் ஒருவித முடிவுக்கு வந்தோம். நாங்கள் சொன்ன முடிவு தவறாகவும் இருக்கலாம், சரியாகவும் இருக்கலாம். நியாயஸ்தலங்களில் சந்தேகமாக இருக்கும் அம்சங்களை, குற்றவாளிக்கு அனுகூலமாக வியாக்கியானம் செய்துகொள்ள வேண்டுமென்ற ஒரு நியாயம் இருக்கிறது ஆகையால், அதற்கிணங்க, நாங்கள் இந்த விஷயத்தை இந்த அம்மாளுக்கு அனுகூலமாகத் தீர்மானித்தோம். உண்மையில் குற்றம்செய்த ஆயிரம் மனிதரைத் தண்டனையில்லாமல் நாம் விட்டுவிடலாம். குற்றமே செய்யாத நிரபராதி ஒருவனைக்கூட தண்டிப்பது மகா பாவகரமான காரியம். ஆகையால், இந்த அம்மாள் சொன்ன விஷயங்களில் எதுவாவது தவறு என்று காட்டக்கூடிய குறியோ அல்லது சாட்சியோ இவ்விடத்தில்

காணப்படவில்லை. ஆகையால், இவள் சொன்னதெல்லாம் உண்மையென்றே நாம் ஒப்புக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த அம்மாள் சொன்னதெல்லாம் சரியல்லவென்றால், இவர் வேறுவிதமாகக் கொல்லப்பட்டார் என்றும் நாம் தீர்மானிப்பதற்கு இங்கே யாதொரு சாதனமும் இல்லை. ஆகையால், இந்த அம்சங்களை எல்லாம் கருதி நாங்கள் இந்த அம்மாளுக்கு அனுகூலமாக முடிவு செய்தோம். இப்படி உருக்குலைந்து கிடக்கும் பிரேதத்தை வைத்துக்கொண்டு நாங்கள் செய்யக் கூடியது வேறொன்றுமில்லை. எங்களுடைய சோதனை உங்களுக்குத் திருப்திகரமாக இல்லாவிட்டால், நீங்கள் வேறே யாரைக் கொண்டாவது மறுபடி சோதனை செய்து பார்த்துக் கொள்ளலாம். அல்லது, இந்த அம்மாள் குற்றவாளி என்பதை அறிந்த வேறு சாட்சிகள் இருந்தால், அவர்களுடைய உதவியைக் கொண்டு நீங்கள் இந்த வழக்கை நீதி ஸ்தலத்தில் நிறைவேற்றிக் கொள்ளலாம்'' என்றார்.

அதைக்கேட்ட இன்ஸ்பெக்டர் புன்னகை செய்து, ''வேறே வைத்தியர்கள் வந்து பார்த்தால், அவர்கள் மாத்திரம் உண்மையைக் கண்டுபிடிக்கப் போகிறார்களா? ஒருநாளும் இல்லை. நீங்கள் சொன்னதைத்தான் அவர்களும் சொல்லப் போகிறார்கள். ஆகையால், நீங்கள் சொன்னதையே நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். இதுவரையில் நாம் பார்த்த குறிகளெல்லாம் இந்த அம்மாள் சொன்னதற்கு அனுசரணையாகவே இருந்தன. ஆகையால், இந்த அம்மாள் குற்றமற்றவள் என்று தீர்மானித்து வீட்டுக்கு அனுப்பி விட்டோம். இனி இந்த விஷயத்தில் அந்த அம்மாளுக்கு விரோதமாக ஏதேனும் குறியோ, அல்லது சாட்சியோ கிடைக்குமானால், மறுபடியும் நாம் இந்த அம்மாவின் மேல் வழக்குத் தொடர, அதிக நேரம் பிடிக்காது. ஆகையால், அதுவரையில் இந்தத் தீர்மானமே முடிவான தீர்மானமாக இருக்கட்டும்'' என்று கூறினார்.

அதன்பிறகு பிரேதத்தின் மாம்சமெல்லாம் துப்பட்டியில்

மூட்டையாகக் கட்டி ஒரு வண்டியில் வைக்கப்பட்டது. அதே வண்டியில் மூட்டைக்குக் காவலாக கூலியாட்கள் உட்கார்ந்து கொண்டனர். அவர்கள் குழியை அதற்குள் மூடிவிட்டு வந்திருந்தனர். இன்னொரு வண்டியில் மற்றவர்கள் உட்கார்ந்து கொண்டனர்.

உடனே வண்டிகளிரண்டும் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு விரைவாக ஓடி ஒரு நாழிகை சாவகாசத்தில் தஞ்சை மேற்கு ராஜவீதியிலிருந்த நீலமேகம்பிள்ளையின் மாளிகையை அடைந்தன. பெரிய ஜெமீந்தாரினது பிரேதத்தை எடுத்துவர நீலமேகம்பிள்ளை வெண்ணாற்றங்கரைக்குப் போயிருக்கிறார் என்பது அந்த மாளிகையிலிருந்த வேலைக்காரர்களுக்கெல்லாம் தெரிந்திருந்ததால், அவர்களெல்லோரும் மாளிகையின் வாசலில் ஆயத்தமாகக் காத்திருந்தனர். வண்டிகள் போய் நின்ற உடனே வேலைக்காரர்கள் எல்லோரும் ஒன்றுகூடி பிரேதத்தை இறக்கி மாளிகைக்குள் கொண்டு போயினர். மறுநாள் பொழுது விடிந்தவுடனே முக்கியமான சில உறவினர்களை மாத்திரம் வருவித்து வைத்துக்கொண்டு அதிக ஆடம்பரமில்லாமல் பிரேதத்தை மயானத்துக்குக் கொண்டு போய்க் கொளுத்திவிட வேண்டுமென்று நீலமேகம் பிள்ளையும் இன்ஸ்பெக்டரும் தீர்மானம் செய்துகொண்டனர். தாம் அப்போது தமது வீட்டிற்குப் போய்விட்டு மறுநாட் காலையில் திரும்பவும் வருவதாக இன்ஸ்பெக்டர் நீலமேகம் பிள்ளையிடம் கூறி விடை பெற்று வைத்தியர் இருவரையும் அழைத்துக்கொண்டு போய் விட்டார்.

நீலமேகம்பிள்ளை அப்போதே சில ஆட்களை அனுப்பித் தமது நெருங்கிய பந்துக்களான சிலருக்கு அந்தச் செய்தியை அறிவித்து வரும்படி செய்ததன்றி, அந்த இரவு முழுதும் தூங்காமல் விசனத்தில் ஆழ்ந்திருந்தார். பொழுது விடிந்தது. அவரது முக்கியமான பந்துக்களும் நண்பர்களும் போலீஸ் இன்ஸ்பெக்டரும் வந்து சேர்ந்தனர். கொட்டு முழக்கு முதலிய

ஆடம்பரம் எதுவுமின்றியும், அந்த விஷயம் ஜனங்களுக்கு அதிகமாக பகிரங்கமாகாமலும், அவர்கள் அந்தப் பிரேதத்தை எடுத்துப்போய் மயானத்தை அடைந்து, சாஸ்திரமுறைப்படி அதைத் தகனம் செய்து பற்பலதானதருமங்களை நிறைவேற்றிய பின் வீட்டிற்குத் திரும்பினர். ஜெமீந்தார் இராமலிங்கம் பிள்ளை காசிக்குப் போயிருந்தவர் அவ்விடத்தில் நோய்கொண்டு படுத்திருந்து இறந்துபோய் விட்டார் என்றும், அவரது பிரேதம் அப்போதே வந்து கொளுத்தப்பட்டது என்றும் ஜனங்களுக்குள் ஒருவித வதந்தி பரவியது. நீலமேகம் பிள்ளை அதன் பிறகு பதினாறாம்நாள் நடத்த வேண்டிய கருமாந்திரத்தை அதிக விமரிசையாகவும் ஆடம்பரமாகவும் நடத்தி வைத்தார். இன்ஸ்பெக்டரோ அந்த மரணத்தைப் பற்றித் தமது மேலதிகாரிகளுக்கு மாத்திரம் ஒருவிதமாக அறிவித்துவிட்டு அவர்களிடம் போய்த் தந்திரமாகப்பேசி, அந்த விஷயத்தை அதற்குமேல் கிளப்பாமல் அடக்கிவிடும்படி செய்தார்.

கருமாந்திரம் முடிந்து சில நாட்கள் வரையிலும் நீலமேகம் பிள்ளையின்துயரம் நீங்காமலேயே இருந்து வந்தது. அவர்தமது போஜனம் நித்திரை முதலிய கடமைகளை எல்லாம் அசட்டை செய்து தமது தந்தையின் விபரீதமான முடிவைப் பற்றி சதாகாலமும் எண்ணியெண்ணி ஏக்கமும் சஞ்சலமும் அடைந்தவராய் இருந்தார்; ஆகவே, அவர் தமது தந்தையின் சட்டைப் பையிலிருந்து எடுக்கப்பட்ட உயிலைப் பற்றிய நினைவையே மறந்து விட்டார். அதன்பிறகு ஒருநாள் தற்செயலாக அந்த உயில் அவரது திருஷ்டியில் பட்டபோதே, அவருக்கு அதைப்பற்றிய ஞாபகம் உண்டாயிற்று. தமது தந்தை அந்த உயிலில் என்னென்ன விஷயங்களைப்பற்றி எழுதியிருக்கிறாரென்று படித்துப் பார்க்கவேண்டுமென்ற ஒருவித அவா அவரது மனதில் எழுந்தது. ஆகவே, அவர் மறைவான ஓர் இடத்தில் போய் உட்கார்ந்துகொண்டு அந்த உயிலை எடுத்துப் பிரித்துப் படிக்கலானார். அதன் முற்பாதியில் இருந்த விஷயங்களை

எல்லாம் அவர் படித்தபோது அவருக்கு எவ்வித ஆச்சரியமும் உண்டாகவில்லை. ஏனென்றால், அந்தப் பாகத்தில் தங்களுக்கிருந்த நிலங்கள், மாளிகைகள், வீடுகள், நகைகள், பணம், இதர சொத்துக்கள் ஆகிய சகலமான பொருட்களும் விவரமாகக் குறிக்கப்பட்டிருந்தன. அவைகளில் கோவில் களுக்கும், தர்ம சத்திரங்களுக்கும், மற்ற உறவினர்களுக்கும் இவ்வளவு இவ்வளவு கொடுக்கப்பட வேண்டும் என்று அவர் குறித்திருந்தார். அதன்பிறகு அவர் எழுதியிருந்த ஒரு விஷயம் நீலமேகம்பிள்ளைக்கு முற்றிலும் புதுமையாகவும் வியப்பாக வும் இருந்தது. அந்த விஷயத்தை அவர் அதுவரையில் காதால் கேட்டதே இல்லை. ஆகையால், அவர் அடைந்த ஆச்சரியம் அளவில் அடங்காததாக இருந்தது. அந்த பாகத்தை அவர் பன்முறை திருப்பித் திருப்பிப் படித்தார். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது-

நான் சமீபகாலத்தில் இறந்துபோய் விடுவேன் என்று நினைக்கத் தகுந்தபடி அவ்வளவு அதிக விருத்தாப்பியம் அடையாமல் இப்போது மத்தியகாலப் புருஷனாக இருக்கையி லேயே நான் இந்த உயிலை எழுதுவதற்கு முக்கியமான ஒரு காரணம் இருக்கிறது. என்னுடைய ஜீவகாலத்தில் நிரம்பவும் ரகசியமான ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. அந்தச் சம்பவம் எனக்குப் பிறகு என்னுடைய குமாரனான நீலமேகனுக்குத் தெரிவது அத்யாவசியம் ஆதலாலும், எனக்கு ஏதேனும் எதிர்பாராத அபாயம் நேர்ந்து, அதனால் என் பிராணன் போய் விடுமானால் அந்த ரகசியம் வெளியிடப்படாமல் போகுமாதலாலும், அப்படிப் போவதனால் நம்மை நம்பி இருக்கும் சிலர் ஜீவனத்துக்கு வேண்டிய பொருளில்லாமல் அநியாயமாகத் துன்புற்று ஏழ்மை நிலைமையடைந்து தவிக்க நேருமாதலாலும் நான் முன்னெச்சரிக்கையாக இந்த உயிலை இப்போதே எழுதி வைத்துக் கொண்டிருக்கிறேன். அந்த ரகசியம் அடியில் வருமாறு- என்னுடைய தர்மபத்தினியும் என்

ஏகபுத்திரனான நீலமேகனுடைய தாயுமான பங்கஜவல்லி இறந்துபோய் இப்போது சுமார் பதினான்கு வருஷகாலமாகிறது. ஆனாலும், அவள் உண்மையில் என்ன காரணத்தினால் அகால மரணமடைந்தாள் என்ற ரகசியம் இதுவரையில் எவருக்கும் தெரிந்திருக்காது என்பது நிச்சயம். அவள் சகலமான நற்குணங்களும் வாய்ந்த பரமசாது என்று ஜனங்கள் இன்னமும் எண்ணி அவளது மரணத்தைக் குறித்து விசனப்படுகிறார்கள் என்று நான் பலதடவைகளில் கேள்வியுற்றிருக்கிறேன். ஆனால் ஒரு விஷயம் மாத்திரம் நிச்சயம்; அவளுடைய அழகுக்குச் சமமாகச் சொல்லக் கூடிய பெண் சிருஷ்டி இந்த பூலோகத்தி லேயே இருக்காது என்று மாத்திரம் நான் நம்பிக்கையாகச் சொல்ல முடியும். அவள் என்னைக் கலியாணம் செய்து கொண்டு, என்னிடம் வந்து சுமார் ஒன்பது வருஷகாலம் வாழ்ந்திருக்கிறாள். அந்த ஒன்பது வருஷ காலத்திலும், அவள் ஒரே மாதிரியான வாஞ்சையும் பிரேமையும் உடையவளாய், சகலமான நற்குணங்களும் நிறைந்தவளாய், அவளைக்கண்ட எல்லோரும், அவள் மகா உத்தமியென்று புகழ்ந்து கொண்டாடும்படி பரிசுத்தமான நடத்தை உடையவளாய், மிருது பாஷிணியாய் இருந்துவந்தாள். அவளும் நானும் இரண்டுடலும் ஒருயிரும் போல மனமொத்து, துன்பமே கலவாத பரமானந்த சுகம் அனுபவித்து வந்தோம் என்பதும் உண்மையே. அவள் என்னிடம் வந்ததற்கு மறு வருஷத்தில் நீலமேகன் பிறந்தான். அப்படி அவள் வந்தவுடனே முதன் முதலாக ஆண் குழந்தையை ஈன்றதைக் கண்டு நான் அளவற்ற ஆனந்தமும் குதூகலமும் அடைந்ததன்றி, அவளிடத்தில் முன்னிலும் பதினாயிரமடங்கு அதிகரித்த பிரேமையும் பற்றும் உடையவனானேன். அதன் பிறகு நாலைந்து வருஷகாலம் வரையில் அவளுக்கு வேறு குழந்தை உண்டாகவில்லை. நீலமேகனைப் பெற்றபின் இரண்டொரு வருஷகாலத்தில், அவள் மறுபடியும் முன் போலவே கட்டழகும், யௌவனத்தின் ஜ்வலிப்பும் உடைய வளாய் மாறியதன்றி, குழந்தையே பெறாத பக்குவகாலப் பெண்

போலவே காணப்பட்டாள். அவளது அற்புதமான அழகையும், நற்குணங்களையும், அவள் என்னிடத்தில் நடந்துகொண்ட மாதிரியையும் காணக்காண அவளை நான் என்னுடைய குல தெய்வம் போலவே மதித்தேனன்றி வேறு சாதாரண ஸ்திரீயாக எண்ணவே இல்லை. அவளை நான் சதாகாலமும் என்னுடைய இருதய கமலத்தில் வைத்து அவளுடைய வடிவத்தையும் நினைவையுமே என் உயிர்த்தாரகமாகக் கொண்டு நான் நாள்களைப் பரம சந்தோஷமாகக் கழித்து வந்தேன். அதுவரை யில் அவளுக்கும் எனக்கும் கோபமான வார்த்தையாவது மனஸ்தாபமாவது ஏற்பட்டதே கிடையாது. ஆனால், இப்போதைக்குச் சுமார் பதினெட்டு வருஷகாலத்துக்குப் பிறகு எங்கள் குடும்பத்தைப் பிடித்த சனியன் பிரசன்னமானான். அந்தக் காலத்தில், எனக்கும் இந்த ஊர் இளவரசருக்கும் பழக்கம் ஏற்பட்டது. அந்தப் பழக்கம் முற்றி முற்றி ஆப்த சிநேகமாக மாறியது. அப்போது நானும் யௌவனப் புருஷன்; இளவரசரும் யௌவனப் புருஷர். இருவருக்கும் பலவித விளையாட்டு களிலும் வேடிக்கைகளிலும் ஆசை அதிகம். ஆகையால், நாங்களிருவரும் அடிக்கடி ஒன்றாகக் கூடிப் பலவிதமாக விளையாடி பொழுது போக்கி வந்தோம். நாங்கள் இருவரும் பரஸ்பரம் பிரியமும் பற்றும் உடையவர்களாய், ஒருவரை யொருவர் ஒரு க்ஷண நேரமேனும் விடுத்துப் பிரிய சகியாதவர்களாக மாறிவிட்டோம். இளவரசர் அடிக்கடி என்னைத் தம்முடைய அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு போய் விருந்து முதலியவை நடத்தி வைப்பார்; தமக்காகத் தயாரிக்கப்படும் மதுரமான பட்சண பலகாரங்களை எல்லாம் எனக்குக் கொடுத்து என்னையும் சமபந்தியாகக் கூடவைத்துக் கொண்டு அவர் சகலமான தின்பண்டங்களையும் உண்பார். அப்படி நாங்கள் இருவரும் புருஷர் பெண்சாதிகளைவிட அதிக அந்தரங்கமான பிரியமும் பாசமும் உடையவர்களாய் மாறிப்போனோம். நான் அரண்மனைக்குப் போகக் கொஞ்சம் தாமதமாகுமானால், அவர் என்னைத் தேடிக்கொண்டு என்

வீட்டுக்கு வரத் தொடங்கினார். அவர் இந்த ராஜ்யத்தின் பட்டத்துக்குரிய இளவரசராதலால், அவர் அரண்மனையை விட்டு எவருடைய மாளிகைக்கும் போவது இழுக்கென்று அரண்மனையிலுள்ள பெரியோர்கள் எவ்வளவு சொல்லியதையும் கேளாமல் அவர் நம்முடைய ஜாகைக்கு அடிக்கடி வந்துவிடுவார். அப்படி வருபவருக்கு நான் பதில் மரியாதைகளும், விருந்துகளும், பாட்டுக் கச்சேரிகளும் நடப்பிவித்தேன். அவர் அப்போது பார்வைக்கு மகா அற்புதமான தேஜஸோடு தத்ரூபம் மன்மதன்போலவே யிருந்தார். அந்தக் காலத்தில் அவரைப் பார்த்து ஆசைப்படாத பெண்டீரே இல்லையென்று நான் நிச்சயமாகச் சொல்லுவேன். அப்படிப்பட்ட யௌவன வடிவழகர் அடிக்கடி என் மாளிகைக்கு வருவதும், என்னோடு வெகு நேரம் விளையாடிக் கொண்டிருப்பதும் சில நாட்களில் இரவில்கூட நம்முடைய ஜாகையிலேயே படுத்து இரவைப் போக்குவதுமாகச் செய்யத் தொடங்கினார். நம்முடைய வீட்டிலுள்ள சகலமான மனிதர்களும், அவர் இந்த நாட்டின் அரசர் என்பதைக் கருதியும், அவரது வசீகரமான அழகையும் குணங்களையும் கண்டு மயங்கியும், அவரிடம் அபாரமான வாஞ்சையும் மரியாதையும் வைக்கத் தொடங்கினார். என் மனைவியான பங்கஜவல்லியும் அவரைப் பல தடவைகளில் பார்த்து, நானும் அவளும் தனியாக இருந்த காலங்களில் அவரது சிரேஷ்டமான அழகைப் பற்றியும் குணங்களைப் பற்றியும் ஒருவாறு புகழ்ச்சியாகப் பேசினாள். என்னுடைய தகப்பனார் என் பாலியப் பருவத்திலேயே இறந்துபோய் விட்டார். ஆதலால், நம்முடைய சமஸ்தான நிருவாக காரியமெல்லாம் என் மேல் வந்து இறங்கியிருந்தது. ஆகையால், நான் இடைவெளியில் அந்தக் காரியங்களையும் கவனித்துக் கொள்ள நேர்ந்தது; என்னுடைய கவனத்தையும், காலத்தையும் நான் முறையே என் சம்சாரத்தினிடமும், இளவரசரிடத்திலும், சமஸ்தான நிருவாக விஷயங்களிலும் செலுத்தி வந்தேன். வெளியூரிலுள்ள நம்முடைய

கிராமங்களுக்கு நான் அடிக்கடி போகவும் நேர்ந்தது. அந்தக் காலத்திலும் இளவரசர் நம்முடைய ஜாகைக்கு வருவதும் நான் ஊரிலில்லை என்பதை அறிந்துகொண்டு போவதுமாக இருந்தார். அப்படியிருக்க, என் சம்சாரம் மறுபடி கர்ப்பவதியாகி ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். அந்தப் பெண் தெய்வ சம்பந்தமாகப் பிறந்த குழந்தைபோல வர்ணிக்க இயலாத மகா சிரேஷ்டமான அழகு வாய்ந்ததாயிருக்கக் காணவே, என் உடம்பு பூரித்துப் பரவசமடைந்தது. என்னுடைய சந்தோஷம் முன்னிலும் பதினாயிரம் மடங்கு பெருகியது. நான் என் பெண் ஜாதியிடத்தில் வைத்திருந்த மதிப்பும், பிரேமையும், பாசமும் அபாரமாகப் பெருகின. அவளை நான் என்னுடைய உயிர் நிலையாகவே மதிக்கத் தொடங்கினேன். அதன்பிறகு சுமார் ஒரு வருஷகாலமாயிற்று. நான் நாலைந்து நாட்களுக்கு ஊரை விட்டு வெளியூருக்குப் போக வேண்டிய ஒரு சந்தர்ப்பம் வந்து வாய்த்தது. நான் என் சம்சாரத்தையும் குழந்தைகளையும் விட்டுப் பிரிய மனமற்றவனாய் அவர்களையெல்லாம் ஒவ்வொருவராக கட்டியணைத்து முத்தமிட்ட பின்னர் அவர்களை விட்டுப் பிரிந்து வெளியூருக்குப் போனேன். அப்படி நான் போன இடத்தில், நான் எந்த அலுவலைக் குறித்துப் போனேனோ அந்த அலுவல் இரண்டே நாட்களில் முடிந்துபோய் விட்டது. நான் எதிர்பார்க்காதபடி அந்த அலுவல் சீக்கிரத்தில் முடிந்து போனதைக் கண்டு நான் சந்தோஷமடைந்து, என் மனைவி மக்களையும் இளவரசரை யும் அடைய எண்ணி உடனே புறப்பட்டு தஞ்சைக்கு வந்தேன். அப்படி நான் வந்தது நடு இரவு சமயம். நான் வந்ததைக் கண்ட வாசல் காவல்காரன் திடுக்கிட்டு ஒருவித அச்சங் கொண்டு அதை என்னிடம் காட்டிக்கொள்ளாமல் மறைக்க எத்தனித்தான்.

அதைக் கண்ட நான், ''ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்? ஏதாவது விசேஷமுண்டா? குழந்தைகளெல்லாம் சௌக்கியந் தானே?'' என்று கேட்டேன். அவன் சிறிது தயங்கியபின்,

''ஒன்றும் விசேஷமில்லை. குழந்தைகளெல்லாம் சுகமாக இருக்கிறார்கள். சாயுங்காலம் இளவரசர் உங்களைத் தேடிக்கொண்டு வந்தார். நீங்கள் ஊருக்குப் போயிருப்பதாகச் சொன்னோம். அவர் இன்றைய தினம் இங்கேயே படுத்துக் கொள்வதாக அரண்மனையில் சொல்லிவிட்டு வந்தாராம். ஆகையால், மறுபடி திரும்பிப்போவது நன்றாக இருக்காதென்று சொல்லிவிட்டு இங்கேயே படுத்துக்கொண்டிருக்கிறார்'' என்றான். அந்த வார்த்தைகள் என் மனசில் விபரீதமான சந்தேகங்களைக் கிளப்பிவிட்டன. நான் இல்லாத சமயத்தில் அவர் வந்து நம்முடைய ஜாகையில் படுத்துக்கொண்டது முற்றிலும் புதுமையாகவும், அதற்குமுன் நடந்திராத காரியமாகவும் இருந்தது. ஆகையால், அந்த நிகழ்ச்சியில் ஏதோ சம்சயமிருக்கிறது என்று நினைத்து, அவனிடம் வேறு கேள்விகளைக் கேட்காமல் நான் உள்ளே நுழைந்து நேராக மேன்மாடத்துக்குள் போய் நானிருக்கும் காலத்தில் இளவரசர் வந்து எந்த இடத்தில் சயனித்துக் கொண்டாரோ அவ் விடத்திற்குச் சென்று பார்த்தேன். அங்கு கட்டில், மெத்தை, தலையணைகள் முதலியவை பரப்பப் பெற்றிருந்தன. ஆனாலும், அவற்றின்மேல் இளவரசர் காணப்படவில்லை. இளவரசர் விஷயத்திலும், என் மனைவியின் விஷயத்திலும் நான் அதுவரையில் அற்பமான சந்தேகமாவது கெட்ட அபிப்பிராயமாவது கொள்ளாமல் இருந்தவன் ஆகையால், இளவரசர் ஒருகால் தேகபாதை நிவர்த்தியின் பொருட்டு எழுந்து வெளியில் போயிருப்பாரோ என்று நினைத்தவனாய் நான் அவ்விடத்தைவிட்டு என்னுடைய சம்சாரத்தின் படுக்கை அறைக்குப் போய்ச் சேர்ந்தேன். அதன் வெளிக்கதவு மூடி வைக்கப்பட்டிருந்தது. அந்தப் படுக்கை அறைக்குள் எங்களுடைய அனுமதியில்லாமல் யாரும் எந்தக் காலத்திலும் நுழைகிறதில்லை. ஆதலால், அது எந்தக் காலத்திலும் தாளிடப்படாமல் சாதாரணமாகச் சாத்திவைக்கப்பட்டிருப்பது முறைமையாதலால், அவ்வாறு அது அன்றைய தினமும்

வைக்கப்பட்டிருந்தது. நான் அந்தக் கதவை மெதுவாகத் திறந்து கொண்டு தலையை மாத்திரம் இடைவெளியில் நீட்டி உட்புறத்தில் பார்த்தேன். ஆகா! உள் பக்கத்தில் தென்பட்ட காட்சியை நான் என்னவென்று சொல்லுவேன்! நானும் என் மனைவியும் சயனித்துக்கொள்ளும் மஞ்சத்தின் மேல் என் மனைவியும் இளவரசரும் சயனித்துக் கொண்டிருந்த விகாரக் காட்சி என் கண்ணில் பட்டது. சிறிதுநேரம் வரையில் அந்தக் காட்சி சொப்பனத்தின் காட்சியென்றே நான் எண்ணி என் கண்களையே நம்பாமல் பிரமித்து ஸ்தம்பித்து அப்படியே நின்று விட்டேன். அதுவரையில் என்னிடம் உயிருக்குயிராக இருந்து, மகா பரிசுத்தமாக நடந்துவந்த அவர்களிருவரும் அப்படிப்பட்ட பரம துரோகமான காரியத்தில் இறங்குவார்களா? என்ற சந்தேகமே அப்போதும் என் மனசில் எழுந்து போராடத் தொடங்கியது. அதுவுமன்றி, நான் அந்தத் தடவை ஊரைவிட்டுப் போயிருந்த காலத்திற்குள் அவர்களுக்கு அப்படிப்பட்ட துர்பழக்கம் ஏற்பட்டிருக்குமா, அல்லது அதற்குமுன் நெடுங்காலமாகவே அவர்களுக்கு அது ஏற்பட்டி ருக்குமோ என்ற சந்தேகமும் உதித்தது. வெளிப்பார்வைக்கு தத்ரூபம் மகாலக்ஷ்மிபோலவே இருப்பவளும், அதுவரையில் என்னை உயிருக்குயிராக மதித்து வந்தவளுமான அவள் அன்னிய புருஷனைத் தொட எப்படி மனத் துணிவு அடைந்திருப்பாள் என்ற சந்தேகமே பெரிதாக எழுந்து என்னை வருத்தியது. அவர்களிருவரும் ஒன்றாகப் படுத்திருந்ததைக் காணவே, ரௌத்ராகாரமான கோபம் என் மனசில் பொங்கி எழுந்தது. என் தேகம் கட்டிலடங்காமல் பதறியது. உள்ளே படுத்திருந்தது இந்த ராஜ்யத்தின் வருங்காலத்து மகாராஜா என்பதை அடியோடு மறந்துவிட்டேன். அவருக்குப் பக்கத்தில் படுத்திருப்பவள் அதுவரையில் நான் குலதெய்வமாக வைத்துக் கொண்டாடிய இன்பக்களஞ்சியம் என்ற நினைவையும் அடியோடு துறந்தேன். "பேஷ்! நல்ல காரியம் செய்தீர்கள்! நான் ஊரில் இல்லை என்கிற குறையே இல்லாமல் என்னுடைய

குடும்ப காரியத்தை ஒழுங்காக நடத்துகிறீர்களோ?'' என்று நான் கூறிக் கோபநகை செய்தேன். என் வருகையை அந்த அகாலத்திலும், அவ்வளவு சீக்கிரத்திலும் எதிர்பாராதவர்களான அந்தக் கள்ளக் காதலரிருவரும் உடனே திடுக்கிட்டு நடுநடுங்கிப் போய்ச் சுருட்டி வாரிக்கொண்டு எழுந்தனர். நான் வந்து உண்மையைக் கண்கூடாகக் கண்டுவிட்டேன் என்பதை அவர்கள் உணரவே, அவர்களது மனதில் அபாரமான திகிலும் கலவரமும் உண்டாகிவிட்டன. இருவரது தேகமும் பயத்தினால் வெடவெடவென்று ஆடுகிறது. முகத்தில் பிரேதக்களை உண்டாகிவிட்டது. இளவரசரது எண்சாண் உடம்பும் ஒரு சாணாகக் குன்றிப்போய் விட்டது. தாங்கவொண்ணாத பெருத்த கிலியினால் என் மனைவியின் உயிர் அநேகமாய் அப்போதே போய்விட்டதென்று சொல்ல வேண்டும். அவர்கள் இருவரும் அந்த மகா விபரீதமான நிலைமையில் தாங்கள் என்ன செய்வதென்பதை உணராதவர்களாய் சிறிது நேரம் மௌனமாக நின்று நாணித் தலைகுனிந்து தமது உடைகளைச் சீர்திருத்திக் கொண்டனர். அடுத்த க்ஷணத்தில் இருவரும் முன்னால் வந்து வேரற்ற மரம்போல என் காலடியில் சாஷ்டாங்கமாக விழுந்து, தாங்கள் தெரியாத் தனத்தினால் செய்த காரியத்தை மன்னித்துத் தங்களுடைய மானத்தையும் உயிரையும் காப்பாற்றும்படி வேண்டிக்கொண்டனர். நான் உடனே இளவரசரைப் பார்த்து, ''ஐயா! இளவரசரே! எழுந்திரும். நீர் எப்படிப்பட்ட பெரிய குற்றம் செய்திருந்தாலும் நீர் சர்வேசுவரனாகிய கடவுளின் காலில் மாத்திரம் விழுந்து கும்பிடத் தகுந்தவரே அன்றி, என்னைப் போன்ற சாதாரண மனிதர் காலில் விழுவது கொஞ்சமும் தகாத காரியம். இப்படிச் செய்வது, உம்முடைய ராஜ பதவிக்கு முற்றிலும் இழுக்கானது. இதனால் எனக்கும் பெருத்த பாவம் சம்பவிக்கும் என்றே நான் எண்ணுகிறேன். இந்த நாட்டின் பிரஜைகள் ஒருவருக்கொருவர் தீங்கும் அக்கிரமமும் செய்து கொள்ளாமல் தடுத்துக் காப்பாற்ற வேண்டியவராகிய நீர் வேலியே பயிரை அழிப்பதுபோல இப்படிப்பட்ட காரியத்தில்

இறங்கலாமா? அதிலும், உம்மை உயிருக்குயிராக மதித்திருக்கும் ஆப்த சிநேகிதனுடைய மனைவி பெற்ற தாய்க்குச் சமானமென்பதை நீர் அறியாதவரா? உம்முடைய மனைவியும் நானும் இப்படிப்பட்ட நிலைமையிலிருக்க நீர் அங்கே வந்திருந்தால் உம்முடைய மனநிலைமை எப்படி இருந்திருக்கு மென்பது உமது மனதிற்குப் படவில்லையா? அயலான் மனைவியின்மேல் ஆசை கொள்கிறவன் தன் மனைவியைக் கண்டு இன்னொருவன் அப்படி ஆசைப் பட்டால், அது தனக்கு எப்படி இருக்குமென்பதை முதலில் யோசித்துப் பார்க்க வேண்டியது அவசியமல்லவா. இப்படிச் செய்தது இந்த ஊரை ஆள இருக்கும் மகாராஜாவா இல்லாமல் வேறே யாராக இருந்தாலும் இந்நேரம் நான் கத்தியால் இரண்டு துண்டாக வெட்டிப் போட்டிருப்பேன். இவ்வளவு பெரிய ராஜ்யத்தின் தலைவன் என் காலில் விழுந்து வேண்டுவதைக் கருதியும், நமது ஆழ்ந்த சிநேகத்தைக் கருதியும், நான் இவ்வளவு ஆச்சரியகரமான பொறுமைக் குணத்தை வகித்திருக்கிறேன். நீர் இனி ஒருக்ஷண நேரங்கூட என்னுடைய மாளிகைக்குள் இருப்பது கூடாது. நீர் எழுந்து வெளியில் போகலாம். இனி என் உயிர் உள்ளவரையிலும், உம்முடைய உயிர் உள்ளவரையிலும் நாம் ஒருவர் முகத்தில் ஒருவர் முழிக்கக்கூடாது. இது உறுதியான வார்த்தை'' என்று முற்றிலும் அருவருப்பாகப் பேசினேன். இளவரசர் சகிக்கவொண்ணாத பிரமாதமான அவமானமும் சங்கடமும் அடைந்தவராய் முற்றிலும் குன்றிப் போய் என் முகத்தைப் பார்க்கக் கூசினவராய், மெதுவாக எழுந்து அந்த அறையைவிட்டு வெளியில் போய் நேராகக் கீழே இறங்கி அந்த அர்த்த ராத்திரியில் தனியாக நடந்து பல வீதிகளையும் கடந்து அரண்மனை போய்ச் சேர்ந்துவிட்டார்.

அதன்பிறகு என் மனைவியோடு முகங்கொடுத்துப் பேசவே எனக்கு அருவருப்பாக இருந்தது. அதுவுமன்றி, தேக பலத்திலும் மனோ பலத்திலும் அற்பத்தன்மை வாய்ந்தவளாகக்

காணப்பட்ட அந்த ஸ்திரீயை சரிசமானமாக மதித்து அவளை அடிக்கவும் தண்டிக்கவும் என் மனம் இடந்தரவில்லை. ஆகையால் நான் அவளைப் பொருட்படுத்தாமல் அவ்விடத்திலேயே விட்டுவிட்டு அந்த அறையிலிருந்து வெளியில் போய், என்னுடைய தனியான விடுதியை அடைந்தேன். அதன்பிறகு நான் என் மனைவியின் முகத்தையே பார்க்கவில்லை. அவளிடம் நான் எவ்விதச் சம்பந்தமும் வைத்துக்கொள்ளவுமில்லை. அவளடைந்த பெரும் பீதியே அவளுக்குப் பெருத்த தண்டனையாகவும் கடைசியில் யமனாகவும் முடிந்தது. அந்த இரவிலிருந்தே அவளது தேகமும் மனதும் இடிந்து உட்கார்ந்துவிட்டன. அன்றைய தினம் முதல் அவள் படுத்தபடுக்கையாக வீழ்ந்துவிட்டாள். வேலைக்காரிகள் தக்க வைத்தியர்களைக் கொண்டு அவளுக்குப் பலவகைப்பட்ட சிகிச்சைகள் செய்து வந்தனரானாலும், அவளது நிலைமையில் அநுகுணமே ஏற்படவில்லை. அவள் அப்போது ஏழு மாதகாலம் கர்ப்பிணியாக இருந்தாள். ஆதலால், அதற்குப் பிறகு இரண்டு மாதகாலத்தில் அவள் நோய்ப்பட்டிருந்த நிலைமையிலேயே இன்னொரு பெண் குழந்தையைப் பெற்றாள். அதனால் ஏற்பட்ட பலஹீனமும், அவளது மனதை அறித்துத் தின்று கொண்டிருந்த மனவியாதியும் ஒன்றுகூடி அதன்பிறகு இருபது நாளைக்குள் அவளது உயிரைக் குடித்துவிட்டன. என்னைப் பார்க்கவேண்டுமென்றும், என்னோடு பேசவேண்டுமென்றும் இரண்டு மூன்று தடவைகளில் அவள் ஆள்களை அனுப்பினாள். ஆனாலும், நான் அவளது முகத்தில் விழிக்க வெட்கி, அவளிடம் போகாமலேயே இருந்துவிட்டேன். கடைசியாக அவள் எனக்கு ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு இறந்து போய்விட்டாள். அவள் உயிர் துறந்தாளென்ற செய்தியைக் கேட்ட பிறகே, நான் போய் அவளைப் பார்த்து, அவளால் எழுதப்பட்டிருந்த கடிதத்தை எடுத்துப் படித்தேன். அந்தக் கடிதம் அவளது மரண காலத்தில் கைகால்களெல்லாம் செயலற்றுப் போயிருந்த காலத்தில் எழுதப்பட்டது. ஆகையால் அது நிரம்பவும்

சுருக்கமாக இருந்தது. ஆனாலும் மிக்க உருக்கமாக இருந்தது. அதைப் படித்த உடனே என் மனம் கலங்கி உருகிப் போய்விட்டது. அவளது விஷயத்தில் அளவற்ற பச்சாதாபமும் இரக்கமும் தோன்றி வதைக்க ஆரம்பித்தன. அவள் இயற்கையிலேயே நற்குணங்களும், மன உறுதியும் வாய்ந்தவள் என்பதும் அவள் இளவரசரால் ஏமாற்றப்பட்டுப் போனாள் என்பதும் நன்றாகத் தெரிந்தன. இளவரசர் இரண்டரை வருஷகாலமாகப் பலவகையில் ரகசியமாக முயற்சி செய்து அவளுடைய மனசை மயக்கி அவளை வசப்படுத்த யத்தனித்தாராம். அவள் முதலில் அதற்கு இணங்கவில்லை. அதன்பிறகு இளவரசர் ஒரு தந்திரம் செய்தாராம். அவளுடைய முக்கியமான ஒரு வேலைக்காரியை அவர் முதலில் கைவசப்படுத்திக்கொண்டு அவளுக்கு அபாரமான பொருள் கொடுத்தாராம். அந்த வேலைக்காரி எப்போதும் என் சம்சாரத்தின் பக்கத்திலேயே இருப்பவள். ஆதலால், அவள் சதாகாலமும் இளவரசருடைய அழகைப்பற்றியும், சரஸ குணங்களைப் பற்றியும் புகழைப்பற்றியும் ஸ்தோத்திரமாகப் பேசிக்கொண்டே வந்தாளாம். எனக்கும் இளவரசருக்கும் நிரம்பவும் அந்தரங்கமான சிநேகம் இருப்பதாகவும், இருவரும் ஒரு தாசி வீட்டுக்குப் போய் பழகினவர்களென்றும் சொன்னாளாம். அதன்பிறகு, அவள் இன்னொரு விஷயம் தெரிவித்தாளாம். இளவரசருடைய பிரியப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று நானே என் மனைவிக்குத் தன் மூலமாகச் செய்தி சொல்லியனுப்பியதாக அந்தத் தாதி என் மனைவியிடம் தெரிவித்தாளாம். அப்படி என் மனைவி இளவரசருடைய பிரியப்படி நடந்து கொள்ளாவிட்டால், நான் இனி என் ஆயிசு கால பரியந்தம் அவளுடைய முகத்தில் விழிப்பதே இல்லையென்று நான் சொன்னது போலவும் அவளிடம் வேலைக்காரி தெரிவித்தாளாம். அதற்கும் அவள் இணங்க வில்லையாம். கடைசியாக நான் இரண்டொருநாள் ஊரைவிட்டு கிராமத்துக்குப் போயிருந்த காலத்தில், நான் எழுதியதுபோல

என் மனைவிக்கு ஒரு கடிதம் அந்தத் தாதி கொண்டு போய்க் கொடுத்தாளாம். கடிதத்தின் எழுத்துக்கள் என்னுடைய எழுத்துக்கள் போலவே இருந்தனவாம். அவள் இளவரசருடைய பிரியத்துக்கு அதுவரையில் இணங்கி வரவில்லை. ஆகையால், நான் அவள்மேல் கோபித்துக்கொண்டு ஊரைவிட்டுப் போய்விட்டதாகவும், அன்றைய தினம் இரவில் இளவரசர் அவளிடம் வருவாரென்றும், அவள் தடைசெய்யாமல் அவருடைய இஷ்டம்போல நடந்துகொண்டால், அந்த விஷயத்தை இளவரசர் எனக்குத் தெரிவிப்பாரென்றும், அதன் பிறகு நான் ஊருக்குத் திரும்பி வருவேனென்றும், அவள் இணங்காவிட்டால், ஊருக்குத் திரும்பிவராமல் காசி ராமேசுவரம் போய்விடுவேன் எனப் பயமுறுத்தியும், நான் எழுதியதுபோல அந்தக் கடிதம் எழுதப்பட்டிருந்ததாம். அதைப் பார்த்தவுடன் அவள் உண்மையென்றே நம்பிவிட்டாளாம். அவ்வாறு தவறான வழியில் இறங்க அவளுடைய மனம் கொஞ்சமும் இடங்கொடுக்கவில்லை. ஆனாலும், புருஷனு டைய சொல்லை மீறமாட்டாமலும், அவருடைய பிரிவாற்றா மையைச் சகிக்கமாட்டாமலும், இளவரசருடைய மோச வலைகளினால் மதிமயக்கம் அடைந்தும் அவள் ஒருவாறு தளர்ச்சி அடைந்துவிட்டாளாம். அதற்கிணங்க, அன்றைய தினம் இரவில் இளவரசர் அவளுடைய சயன அறைக்குள் வந்து, கடிதத்தில் எழுதப்பட்டிருந்த விஷயங்களுக்கு ஒத்தபடியே பேசி, அவளுடைய மனம் நம்பும்படி விஷயங்களை எடுத்துச் சொல்லி, அவளை வற்புறுத்தி பலாத்காரமாக அவளுடைய பிரியத்தைச் சம்பாதித்துக் கொண்டாராம். இந்த விஷயங்களைப் பற்றி அதன்பிறகு என்னிடம் எவ்வித பிரஸ்தாபமும் செய்ய அவளது மனம் கூசியது ஆகையால், அவள் அதைப்பற்றிய பிரஸ்தாபத்தையே என்னிடம் எடுக்க வில்லையாம்; அதன்பிறகு நான் ஊரிலிருந்து திரும்பிவந்து வழக்கப்படி அவளிடம் சந்தோஷமாக இருந்ததைக் கண்டு, தான் செய்த காரியத்தை அறிந்து அதை ஆமோதித்தே நான் அப்படி சந்தோஷமாக

இருக்கிறேனென்று அவள் நினைத்துக் கொண்டாளாம். அதன்பிறகு சமயம் வாய்த்த போதெல்லாம் இளவரசர் அவளிடம் போய் சந்தோஷமாக இருந்து விட்டு வந்தாராம். கடைசியில் அவர்களிருவரும் ஒரு நாளிரவு ஒன்றாக சயனித்திருந்ததை நான் கண்டு இளவரசரைக் கண்டித்துத் தூஷித்த பிறகே, அவள் உண்மையை யூகித்துக்கொண்டு அந்த வேலைக்காரியை அழைத்துக்கேட்க, அவள் தான் செய்ததெல்லாம் நிஜமென்று சொல்லிவிட்டு, உடனே மாளிகையைவிட்டுப் போனவள் மறுபடி வேலைக்கு வராமல் ஊரை விட்டே ஓடிப்போய் விட்டாளாம். அவள் இறப்பதற்கு முன் இந்தச் சங்கதிகளையெல்லாம் மெய்ப்பிப்ப தற்கே தான் தன்னிடம் வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டாளாம். அந்தத் தாதி கொணர்ந்து அவளிடம் கொடுத்த கடிதத்தை அவள் தன்னுடைய பெட்டியில் பத்திரமாகப் பூட்டி வைத்திருப்ப தாகவும் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தாள். அதுவுமன்றி, அவள் முடிவாக இன்னொரு விஷயமும் எழுதியிருந்தாள். நீலமேகன் ஒருவனே எனக்குப் பிறந்தவனென்றும், அதன்பிறகு பிறந்த பெண் குழந்தைகளிரண்டும் இளவரசருடைய குழந்தைகளென்றும், பிறருடைய வஞ்சகத்தால் ஏமாறிப் போய்த் தான்கெட்டுப் போயிருந்தாலும், இனி தான் என்னுடைய முகத்தில் விழிப்பதற்கே அருகமற்றவளாய்ப் போய்விட்டபடியால் தான் உயிர் துறந்து எமதண்டனை அடைந்து, தனது பாவத்தையும் களங்கத்தையும் போக்கிவிட்டு மறுபடியும் பரிசுத்தமான தேகத்தோடு மறுஜென்மத்தில் வந்து என்னிடம் சேர்வதாகவும் அவள் எழுதியிருந்தாள். அதைப் படித்தபோதுதான், என் மனம் பதறிப் போய்விட்டது. கண்களில் கண்ணீர் தானாகப் பொங்கி வழிந்தது. என் மனைவியைக் கெடுத்து, அவளுடைய உயிரையும் குடித்து, எங்களுடைய குடும்ப வாழ்க்கையையும் நிகரற்ற சுகங்களையும் கெடுத்த படுபாவியாகிய இளவரசனுடைய உயிரை வாங்கிவிட வேண்டுமென்ற வீராவேசமும், ஆக்குரோஷமும் என் மனதில்

கொந்தளித்து எழுந்தன. ஆனாலும், நான் அவைகளை அந்தச் சமயத்தில் வெளியில் காட்டாமல் அடக்கிக்கொண்டு, அவளால் குறிக்கப்பட்டிருந்த பெட்டியைத் திறந்து அங்கிருந்த கடிதத்தை எடுத்துப் பார்த்தேன். அது நான் எழுதியதுபோலவே இருந்தது. அதை நான்தான் எழுதி இருப்பேனோ என்ற சந்தேகம் என் மனசிலேயே உண்டாயிற்று. அதிலிருந்த விஷயங்களெல்லாம் அவள் விவரித்த மாதிரியே இருந்தன. ஆகையால், நான் அவள் சொன்ன வரலாற்றை எல்லாம் உண்மையென்று நம்பி, அவள் நிரபராதியென்றும், அநியாயமாக இளவரசருடைய மோசத்தி னாலும், அவள் என் மேல் வைத்திருந்த அளவற்ற வாஞ்சையி னாலுமே, அவள் அந்தக் குற்றத்தைச் செய்ய நேர்ந்தது என்றும் முடிவு செய்து கொண்டு,அதன் பிறகு அவளுடைய பிரேதத்தை அதிக விமரிசையாக எடுத்துப்போய் தகனம் செய்து உத்தர கிரியைகளையெல்லாம் அமோகமாகவும் வெகு சிறப்பாகவும் நடத்திவைத்தேன்.

அதன்பிறகு அதே விசனமாகிய கடலில் நான் ஆழ்ந்து போய், அன்னம் ஆகாரம் முதலிய எதையும் நாடாமல் அகோராத்திரம் துக்கமாகிய பெரும் பேயினால் உலப்பப்பட்டவனாக இருந்ததன்றி, இனி அவளுக்கு நிகரான பெண்ணே கிடைக்க மாட்டாள் ஆதலால், இனி நான் வேறு கலியாணமே செய்து கொள்ளுகிறதில்லை என்று தீர்மானித்துக் கொண்டேன். அதுவுமன்றி, என் மனைவியின் விஷயத்தை மறந்துவிட வேண்டுமென்ற ஒரு முடிவையும் செய்து கொண்டேன். இளவரசருக்குப் பிறந்த இரண்டு பெண்களையும் நான் பார்க்கும் போதெல்லாம், என் மனைவிக்கு நேர்ந்த கெடுதல் நினைவிற்கு வருமென்று நினைத்து, நான் அவர்களை வேறே இடத்தில் தனியாக வைத்துவிட எண்ணினேன். என்னுடைய ஒன்றுவிட்ட அத்தை ஒருத்தி திருவாரூருக்கருகில் இருக்கிறாள். அவளுடைய பெயர் நீலலோசனி. அவளை வரவழைத்து, அவளிடம் அந்த இரண்டு பெண்களையும் ஒப்புவித்து வளர்த்து வரும்படி

அனுப்பிவிட்டேன். அவர்களுக்கு ஆறு மாதகாலத்திற்கு ஒருமுறை ஆயிரம் ரூபாய் செட்டியார் பாங்கியின் மூலமாக அனுப்பிவருகிறேன். தங்களுக்கு இன்னார் பணம் அனுப்புகிறார் என்பது தெரியாமலிருக்கும் பொருட்டு யாரோ சோமசுந்தரம் பிள்ளையென்ற ஒருவர் அனுப்புவதாக நான் சொல்லி வைத்திருக்கிறேன். கமலம், ஷண்முகவடிவு என்ற பெயருடைய அந்தப்பெண்கள் தங்கள் தகப்பனார் இறந்து போய்விட்டதாகவும் தங்களுடைய அத்தையிடம் இருந்து வளர்ந்து வருவதாகவும் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய வீட்டு விலாசத்தில் சோமசுந்தரம்பிள்ளை என்ற பெயருக்குக் கடிதங்கள் வருமானால், மற்றோர் இடத்தில் கொடுக்கும்படி நான் தபால்காரனிடம் சொல்லி ஏற்பாடு செய்திருக்கிறேன். இப்போது அந்த அத்தை பக்ஷவாத நோய் கொண்டு படுத்திருக்கிறாள். பெண்களிரண்டும் பக்குவகாலம் அடைந்து கலியாணத்துக்குத் தயாராக இருக்கிறார்கள். நாம் அவர்களை எங்கேயாவது நல்ல இடத்தில் கலியாணம் செய்துகொடுத்து ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு லக்ஷம் ரூபாய் ஸ்ரீதனமாகக் கொடுத்துவிட வேண்டும். நான் தெய்வச் செயலாக இறந்துவிட்டாலும், என் குமாரன் இந்தக் கடமையை நடத்தத் தவறக்கூடாது. அவர்கள் தன்னுடைய சொந்தத் தாயின் வயிற்றில் பிறந்த சகோதரிகள் என்ற முறைமையை நீலமேகன் ஒருநாளும் மறக்கக் கூடாது.

இது நிற்க, நான் இத்தனை வருஷகாலம் மறுபடி கலியாணம் செய்துகொள்ளாமலேயே இருந்து என் மன உறுதியை நிறைவேற்றியே வந்தேன். ஆனாலும், இத்தனை வருஷ காலத்திற்குப் பிறகு அந்த உறுதிக்குப் பங்கம் வந்துவிட்டது. மருங்காபுரி ஜெமீந்தாருடைய தம்பி மகளான லீலாவதி என்ற பெண் அழகு சாயல் முதலிய சகலமான விஷயங்களிலும் என் சம்சாரத்தைப்போலவே இருக்கிறாள். ஆகையால், அவளைக் கண்ட பிறகு என் மனம் மாறிப் போய்விட்டது. அவளும்

பரஸ்பரம் என்மேல் அத்யந்த பிரேமையும் வாஞ்சையும் வைத்திருக்கிறாள். ஆதலால் எங்களை மீறி எங்கள் இருவருக்கும் விலக்கமுடியா வகையில் நட்பு ஏற்பட்டு விட்டது. என் காலத்துக்குப் பிறகு என் மகன் இந்த லீலாவதிக்கும் பெருத்த பொருளுதவி செய்து இவளுடைய கடைசிக்காலம் வரையில் வைத்துக் காப்பாற்ற வேண்டியது.

★

என்று நீலமேகம் பிள்ளையின் உயிலின் ஒரு பாகத்தைப் படிக்கவே, அதுவரையில் அவருடைய அறிவுக்குத் தெரியாமல் மறைந்து கிடந்த ஒரு புதிய உலகமே அவரது திருஷ்டிக்குப் புலப்பட்டது போல இருந்தது. லீலாவதியைத் தான் வைத்துக் காப்பாற்ற வேண்டியது முக்கியமானது என்பதோடு, தான் உடனே புறப்பட்டுத் திருவாரூர் போய், அவ்விடத்தில் அநாதரவாக இருக்கும் தமது தங்கைகளைக் கண்டு, முக்கியமான ரகசியங்களையும் வெளியிட்டு, அவர்களுக்குச் சகலமான உதவிகளையும் செய்யவேண்டுமென்ற ஆவலும் ஆசையும் அபாரமாகப் பெருகி எழுந்தன. ஆகவே, நீலமேகம் பிள்ளை மறுநாளே தஞ்சையை விட்டுப் புறப்பட்டுத் திருவாரூருக்குப் போய் நீலலோசனி அம்மாளினது பங்களாவை அடைந்தார். அவ்விடத்தில் கமலம் ஷண்முகவடிவு ஆகிய இருவரும் இல்லையென்பது வாசகர்களுக்குத் தெரிந்த விஷயம். ஆதலால், நீலமேகம் பிள்ளை அடைந்த ஏமாற்றத்தை யும் துயரத்தையும் விவரித்து சொல்வதைவிட யூகித்துக் கொள்வதே எளிது.

41-வது அதிகாரம்

## கட்டாரியின் கடைசி வேட்டை

கட்டாரித்தேவன் லீலாவதியையும் திரவிய மூட்டையையும் எடுத்துக்கொண்டு வெளியில் போன காலத்தில், விசைவைத்த நாற்காலியில் மாட்டப்பட்டிருந்த மருங்காபுரி ஜெமீந்தார், தாம் கூச்சலிட்டால் அந்த முரட்டுத் திருடன் மறுபடிவந்து தம்மைக் கொன்று போட்டுவிடுவானோ என்று பெரும் பீதி அடைந்தவராய், அரைநாழிகை சாவகாசம் வரையில் வாயைத் திறவாமல் மௌனமாகவே இருந்தார். நாற்காலியின் இரும்பு விசைகள் அவரது உடம்பையும் கை கால்களையும் இறுகப் பிடித்துக் கொண்டு அங்கங்கு இரத்த ஓட்டத்தைத் தடைப்படுத்திக்கொண்டிருந்தன. ஆதலால், அவரது உடம்பு முழுதும் மரத்து விறைத்து ஜில்லிட்டு மரண வேதனை உண்டாகிக்கொண்டிருந்தது. தாம் வாய்விட்டுக் கதறி அழ வேண்டுமென்றும், பெருங்கூச்சல் செய்து யாரையாவது அழைக்க வேண்டுமென்றும், அவரது மனம் தூண்டியது. ஆனாலும், திருடன் அப்போதும் தமது மாளிகைக்குள் இருப்பானாகில், அவன் உடனே திரும்பி வந்து குரவளையைப் பிடித்து அமுத்தித் தம்மை ஒரு க்ஷணத்தில் கொன்று போட்டு விடுவான் என்ற பெருந் திகில் அவரது தேக பாதைகளைவிட அதிக வலுவாக உபத்திரவித்தது. ஆகையால், அவர் தமது நரகவேதனையைப் பொறுத்துக்கொண்டு சுமார் அரைநாழிகை சாவகாசம் வாளாவிருந்தார். தம்மால் வெளியில் அனுப்பப் பட்ட ஷண்முகவடிவு அந்த விஷயத்தை வேலைக்காரர் களுக்குத் தெரிவித்து அவர்களை உதவிக்கு அனுப்புவாள் என்று அவர் எதிர்பார்த்ததும் வீணாயிற்று. அந்த மெல்லிய மடந்தை திகிலடைந்து எவ்விடத்திலாகிலும் ஒளிந்து கொண்டிருப்பாள் என்ற எண்ணம் உண்டாயிற்று. கடைசியில் அந்த முரட்டுத் திருடன் பயமுறுத்தி விட்டுப் போனபடி அவன் லீலாவதி

யையும் ஒருவேளை அபகரித்துக்கொண்டு போய்விடுவானோ என்ற கவலையும் அவரது மனதில் தோன்றி வருத்தியது. தமது பொருட்களெல்லாம் போவதானாலும், தாம் லீலாவதியை மாத்திரம் அந்த முரட்டுத் திருடன் அபகரித்துப் போக விடக்கூடாதென்ற தீர்மானம் அவரது மனத்தில் உண்டாயிற்று. அந்த அபாரமான கவலையோடு அந்த நாற்காலியின் கொடுமையையும் சகித்திருக்க அவரால் கூடாமல் போயிற்று. அந்த மாளிகை முழுதும் அப்போது முற்றிலும் நிசப்தமாக இருந்தது. ஆகையால், அந்த முரட்டுத் திருடன் வெளியில் போயிருப்பான் என்ற எண்ணம் தோன்றியது. ஆகவே, அவரது மனதை அழுத்திக்கொண்டிருந்த பெரும் பீதி ஒருவாறு விலகத் தொடங்கியது. சிறிதளவு துணிவும் ஏற்பட்டது. அவர் உடனே தமது வாயைத் திறந்து ஓங்கிக் கூச்சலிட்டு தமது வேலைக்காரர்களின் பெயர்களை ஒவ்வொன்றாகச் சொல்லிச் சொல்லிக் கூவியழைத்துப் பார்த்தார். அரைநாழிகை நேரம் கழிந்தது. ஒரு நாழிகை, இரண்டு நாழிகை நேரமும் கழிந்தது. எவரும் அவ்விடத்திற்கு வரவில்லை. பொழுது ஏற ஏற அவரது மன வேதனைகளும், தேக அவஸ்தைகளும் விஷம்போலப் பெருகிக்கொண்டே போயின. தமது குரல் வெளியில் கேட்கவில்லை ஆதலால், யாரும் தமக்கு உதவி செய்ய வரவில்லையென்பதை அவர் எளிதில் உணர்ந்து கொண்டார். தாம் பிறர்க்குச் செய்ய நினைத்த தீங்கு தமக்கே வந்து வாய்த்ததை நினைக்க நினைக்க, அவரது மனம் கலங்கிக் கொதித்தது. தம்மால் அந்த நாற்காலியில் பலதடவைகளில் மாட்டி விடப்பட்ட அநந்தமான பெண்களின் தேகமும் மனதும் எவ்விதமான பாடுபட்டிருக்கும் என்பதை அவர் அப்போதே உணர்ந்தார். அவர்கள் எல்லோரும் வயிறெரியக் கதறி அழுது கெஞ்சி மன்றாடிக் கேட்டுக்கொண்டபோது தாம் சிறிதளவும் இரங்காமல் கடின மனதோடு தமது கோரிக்கை ஒன்றையே உறுதியாகக் கடைப்பிடித்த பெரும்பாவமும் பழியுமே அப்போது ஒன்றாகத் திரண்டுவந்து தம்மை அத்தகைய கொடிய

தண்டனைக்கு ஆளாக்கி இருக்கின்றனவோ என்ற எண்ணமும் அப்போதைக்கு அப்போது அவரது மனதில் தோன்றி மறைந்து கொண்டிருந்தது. துன்மார்க்கத்தில் பிரவேசிக்கும் மனிதர் எவ்வளவோ முன் யோசனையோடு நிரம்பவும் புத்திசாலித் தனமாக நடந்துகொண்டாலும், அவர்கள் எப்படியும் துன்பத்தில் அகப்பட்டு உழல நேரும் என்ற நினைவும், பிறர்க்குச் செய்ய நினைக்கும் தீங்கு தம்மை ஒருநாளும் விடாமல் எப்படியும் பழிக்குப்பழி வாங்கிவிடுமென்ற நினைவும் அவரது மனதில் பிடிவாதமாக எழுந்தெழுந்து மறைந்து கொண்டிருந்தன.

அவ்வாறு அவர் தமக்குத்தாமே உண்டாக்கிக்கொண்ட நரக வேதனையில் ஆழ்ந்து உழன்று தீயில் கிடந்து தவிக்கும் புழுவைப் போலத் தத்தளித்து வெகுநேரம் வரையில் துடிதுடித்திருக்க, அவரது உடம்பின் ஸ்மரணை படிப்படியாகத் தவறிக்கொண்டே போயிற்று. மூளையின் அறிவொளி குறைந்து இருளடையத் தொடங்கியது. சிறிது நேரத்தில் அவர் மூர்ச்சித்து அப்படியே நாற்காலியில் பிணம்போலச் சாய்ந்து விட்டார்.

★

பொழுது விடிந்தது. அந்த மாளிகையிலிருந்த வேலைக் காரர்கள் வழக்கம்போலத் துயில் நீத்தெழுந்து தத்தம் அலுவல்களைக் கவனிக்கலாயினர். அவர்களெல்லோரும் கீழ்க் கட்டிலேயே படுத்துத் தூங்குவது வழக்கம். ஆதலால் முதல் நாளிரவு மேன்மாடத்தில் நடந்த விஷயங்களை அவர்கள் வெகுநேரம் வரையில் தெரிந்துகொள்ளாமலேயே இருந்தனர். ஜெமீந்தாரும் லீலாவதியும் ஷண்முகவடிவு என்ற பெண்ணைக் கொணர்ந்து வைத்துக்கொண்டு மேன்மாடத்தில் பலாத்காரம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை மாத்திரம் அவர்கள் எளிதில் யூகித்துக்கொண்டார்கள். ஆதலால், அவர்கள் மூவரும் இரவு முழுதும் கண்விழித்துக் கூத்தடித்துவிட்டு அலுத்துத் தூங்குகிறார்கள் என்றும் அவர்களே விழித்தெழுந்து வருகிற வரையில் தாங்கள் போய் அவர்களை எழுப்பக் கூடாது என்றும்

வேலைக்காரர்கள் எண்ணிக்கொண்டு தங்களது கவனத்தை வேறு விஷயங்களில் செலுத்தி இருந்தனர்.

காலை பத்துமணி நேரமாயிற்று. அப்போதும் மேன்மாடத்தி லிருந்த மனிதர் வெளிப்படவில்லை. அதற்குமுன் ஜெமீந்தார் எத்தனையோ சந்தர்ப்பங்களில் இரவு முழுதும் பல மனிதருடன் குதூகலமாக விழித்திருந்து அலுத்துத் தூங்கி பொழுது விடிந்து வெகு நேரத்திற்குப் பிறகு எழுந்திருக்கும் வழக்கம் இருந்தது. ஆனாலும் அவர் அவ்வளவு அகாலம் வரையில் அதற்குமுன் எப்போதும் தூங்கியதில்லை. அதுவுமன்றி, அவரோடு லீலாவதியும் இரவு முழுதும் தூங்காமல் விழித்திருந்தாலும், அவள் அலுத்துப் போகவாவது, அவ்வளவு அதிக நேரம் தூங்கவாவது ஏதுவில்லை. ஆதலால் அவளும் அந்நேரம் வரையில் எழுந்து வராமல் இருந்தது ஒருவித சந்தேகத்தை உண்டாக்கிக்கொண்டே இருந்தது. ஆகவே ஜெமீந்தாரினது அந்தரங்கக் காரியதரிசியான கோவிந்தசாமி படிக்கட்டின் வழியாக ஏறி வெல்வெட்டு மாடத்திற்குச் சென்று பார்த்தான். அதன் வெளிக்கதவு ஒரு பெருத்த பூட்டினால் பூட்டப்பட்டி ருந்ததை அவன் காணவே, அவனது மனம் பெருத்த வியப்பும், கலக்கமும் கொண்டது. அந்த வெல்வெட்டு மாடம் அத்தகைய பெரிய பூட்டினால் ஒருநாளும் பூட்டப்பட்டி ருந்ததையே அவன் கண்டவனல்ல ஆதலால், அது புதுமையாகத் தோன்றியது. அதுவுமன்றி அந்தப் பூட்டு ஜெமீந்தாரினுடைய திரவிய மெல்லாம் வைக்கப்பட்டிருந்த பிரம்மாண்டமான இரும்புப் பெட்டியில் பூட்டப்பட்டிருந்த பூட்டு என்பதையும் அவன் எளிதில் கண்டுகொண்டான். உடனே அவனது மனதில் எண்ணிறந்த சந்தேகங்களும் நினைவுகளும் எழுந்தன. ஜெமீன்தார் தமது இரும்புப் பெட்டியின் பூட்டை எடுத்து வெளிக் கதவிற்கு உபயோகப்படுத்தக்கூடிய அப்படிப்பட்ட பிரமேயம் என்ன நேர்ந்திருக்கலாம் என்று அவன் யோசித்து யோசித்துப் பார்த்து, முடிவில், அவர் அப்படிப் பூட்டி இருக்க

மாட்டார் என்ற முடிவிற்கே வந்தான்; அவ்வாறு அவர்கள் வெளியில் பூட்டிக்கொண்டு உள்ளே இருப்பதும் அசம்பாவித மாகத் தோன்றியது; ஆகவே, அந்தப் பூட்டை அவ்விடத்தில் பூட்டியது வேறே மனிதராகத்தான் இருக்க வேண்டும் என்றும், அப்படிப் பூட்டிய மனிதர் திரவியங்கள் வைக்கப்பட்டிருந்த இரும்புப்பெட்டியைத் திறந்திருக்க வேண்டுமென்றும், அநேகமாய் அவர்கள் திருடராகத்தான் இருக்க வேண்டும் என்றும் அவன் தீர்மானித்துக் கொண்டான். அந்தச் சந்தேகம் தோன்றவே, ஜெமீந்தார் முதலியோரை அவ்வாறு அந்தத் திருடர்கள் கொன்றுபோட்டிருப்பார்களோ என்ற பெருத்த திகிலும் உடனே எழுந்து அவனது மனத்தை வதைக்கத் தொடங்கியது. ஆகவே, அவன் அந்தக் கதவைப் பலமாக இரண்டு மூன்று தரம் தட்டி, ''அம்மா! அம்மா! ஐயா! ஐயா!'' என்று ஐந்தாறு தடவை ஓங்கிக் கூப்பிட்டுப் பார்த்தான். உட்புறத்திலிருந்து அற்பமான ஓசைகூட உண்டாகவில்லை. ஆகையால், அவன் முற்றிலும் பதை பதைத்தவனாய்க் குழம்பித் தவித்த மனதோடு அவ்விடத்தைவிட்டு விரைவாகக் கீழே இறங்கி, அவ்விடத்திலிருந்த மற்ற வேலைக்காரர்களை அழைத்து, தாம் கண்ட புதுமையையும் கொண்ட சந்தேகத்தை யும் அவர்களிடம் வெளியிட்டதன்றி, அவர்களில் சிலரை அழைத்துக்கொண்டு ரகசிய வாயிலால் ரதிகேளி விலாஸத்திற் குள் நுழையும் படிக்கட்டை அடைந்து, அதன் வழியாக மேலே சென்றான்.

படிக்கட்டு முடிந்த இடத்தில் மறைவாக வைக்கப்பட்டிருந்த விசை இன்ன இடத்திலிருக்கிறது என்பது அவனுக்கு நன்றாகத் தெரியுமாதலால், கோவிந்தசாமி அந்த விசையை அழுத்த, அவ்விடத்திலிருந்த கண்ணாடிக் கதவு உடனே திறந்து கொண்டது. எல்லோரும் பெருத்த பயத்தோடும் கவலை யோடும் தங்களது பார்வையை உட்புறத்தில் செலுத்தவே, அவ்விடத்தில் ஜெமீந்தார் விசை வைத்த நாற்காலியில்

மாட்டிக்கொண்டு சோர்ந்து பிணம் போலக் கிடந்தது அவர்களது திருஷ்டியில் பட்டது. உடனே வேலைக்காரர்கள் எல்லோரும் நடுக்கமும் கலவரமும் அடைந்தவர்களாய் சரேலென்று உள்ளே நுழைந்து ஜெமீந்தாரிருந்த நாற்காலிக் கருகில் போய்ச் சேர்ந்து ஜெமீந்தாரை உற்று நோக்கினர். இரவில் இரும்புப் பொறியில் அகப்பட்டு மாண்டு விறைத்துக்கிடக்கும் எலிபோல ஜெமீந்தார் பேச்சு மூச்சு அசைவு முதலிய எவ்வித உயிர்ச் சின்னங்களு மின்றிப் பிணம்போலக் கிடந்ததைக் காணவே, அவர் இறந்து போய்விட்டார் என்ற எண்ணமே எல்லோரது மனதிலும் பட்டது. அவர்களது இருதயங்களெல்லாம் தடதடவென்று அடித்துக்கொண்டன. தேகங்கள் பதறி ஆடிப் போயின; மனம் பொங்கி எழுந்தது; அவர் இறந்து போயிருந்தால், அதன் முகாந்திரம் என்னவென்று தாம் வெளியில் சொல்லுகிற தென்பதை அறியாதவராய், அவர்கள் பெரிதும் கலங்கித் தத்தளித்தனர். அந்த நாற்காலியில் இன்னவித மான விசை வைத்திருக்கிறதென்பதை கோவிந்தசாமி அறிவான். ஆதலால், அவன் உடனே பாய்ந்து அந்த விசையை அழுத்த, அவரது உடம்பைப் பிடித்துக்கொண்டிருந்த வளையங்களெல்லாம் விலக்கிக் கொண்டன. ஜெமீந்தாரது தேகம் அப்படியே முன் பக்கத்தில் சாய்ந்து விழுந்துவிட்டது. வேலைக்காரர்கள் எல்லோரும் முனைந்து ஒன்றுகூடி அவரைத் தூக்கி எடுத்து பக்கத்திலிருந்த மேஜையின் மீது கிடத்தினர். கோவிந்தசாமி உடனே அவரது மார்பிலும் நாடியிலும் தனது கையை வைத்து ஆராய்ந்து பார்த்தான். நாடி அடித்துக்கொண்டதோ இல்லையோ என்பதை அவன் நிச்சயிக்க இயலாதபடி அது சந்தேகமறத் தோன்றியது. அவரது உடம்பு முழுதும் ஜில்லிட்டுப் போயிருந்தது. ஆனாலும், முகத்தில் பிரேதக்களை அவ்வள வாகத் தோன்றவில்லை. ஆதலால், அவர் இறந்து போயிருக்க மாட்டார் என்ற சந்தேகம் கோவிந்தசாமியினது மனத்தில் தோன்றியது. ஆகையால், அவன் உடனே ஒரு வைத்தியனை அழைத்து வரும்படி ஓர் ஆளை அனுப்பிவிட்டு, தனக்குத்

தெரிந்த பல சிகிச்சைகளைச் செய்து, அவரது உடம்பில் உஷ்ணம் உண்டாக்குவதற்கான காரியங்களைச் செய்தான். சிறிது நேரத்தில் அவரது நாடி அற்பமாக அடித்துக் கொள்வதை அவர்கள் உணர்ந்தனர். உடனே அவர்களது மனதில் ஒருவித நம்பிக்கையும் ஆவலும் எழுந்து தூண்ட ஆரம்பித்தன. அவர்கள் மேன்மேலும் பல வகையில் முயற்சித்து அவரது உயிரைத் திருப்ப முயன்று கொண்டிருந்த காலத்தில் வைத்தியர் ஒருவரும் வந்து சேர்ந்தார். அவர் செய்த திறமையான சிகிச்சை களினால், இரண்டொரு நாழிகை சாவகாசத்தில் ஜெமீந்தார் மறுபடியும் உணர்வு பெற்று விழித்துக்கொண்டார். அவரது தேகம் முற்றிலும் சோர்ந்து மெலிவடைந்து தளர்ந்து கிடந்தது. ஆகையால் எல்லோரும் அவரை எடுத்து வெல்வெட்டு மாடத்திலிருந்த ஒரு கட்டிலில் மெத்தையின்மீது திண்டுகளில் சார்த்தி வைத்தனர். அவர் தமது சுய உணர்வும் பலமும் அடைந்து கண்களைத் திறந்து பேச ஆரம்பித்து, ''கோவிந்தசாமி! நம்முடைய லீலாவதி இருக்கிறாளா?'' என்றார்.

அதைக்கேட்டவுடனே அங்கிருந்த ஆட்களெல்லோரும் அங்குமிங்கும் சென்று தேடிப்பார்த்துவிட்டு வந்து லீலாவதி காணப்படவில்லை என்று கூறினர்.

உடனே ஜெமீந்தார், ''இரண்டு நாளாக நம்முடைய வீட்டில் வந்திருந்த ஷண்முக வடிவென்ற இன்னொரு பெண் பத்திரமாக இருக்கிறாளா?'' என்று நிரம்பவும் கவலையோடு வினவ, கோவிந்தசாமி, ''அந்த அம்மாளும் காணப்படவில்லையே?'' என்று கூறிவிட்டு நிரம்பவும் கவலையோடு மேலும் பேசத் தொடங்கி, '' எஜமானே! நேற்று ராத்திரி இவ்விடத்தில் என்ன நடந்தது? இரும்புப்பெட்டி திறந்து கிடக்கிறது. அதற்குள் எவ்விதமான பொருளும் காணப்படவில்லை. அதிலிருந்த பூட்டினால் வெல்வெட்டு மாடத்தின் வெளிக்கதவு பூட்டப் பட்டிருக்கிறது. நீங்களோ இரும்பு நாற்காலியில் மாட்டப்பட்டு ஸ்மரணை தப்பிக் கிடந்தீர்கள். என்ன விபரீதம் நடந்தது?

பெண்கள் இருவரும் எங்கே போயிருப்பார்கள் என்பதும் தெரியவில்லையே'' என்று பெரிதும் ஆவலோடு வினவினான்.

அதைக்கேட்ட ஜெமீந்தார் வேலைக்காரர்களுக்கு எந்த விஷயமும் தெரியாதென்று உடனே யூகித்தறிந்து கொண்டார். ஷண்முக வடிவின் விஷயத்தில் தாங்கள் செய்த சதியாலோசனையை வெளியிடுவது யுசிதமானதல்லவென்று அவர் தமக்குள் தீர்மானித்துக் கொண்டவராய், ''அப்பா! கோவிந்தசாமீ! நேற்று நடந்த சங்கதியை நான் என்னவென்று வெளியிடுவேன்! கீழே படுத்திருந்த உங்களுக்கெல்லாம் தெரியாமல் இங்கே அவ்வளவு பெரிய காரியம் நடந்திருக்கிறது! நான், லீலாவதி, புதிதாக வந்த பெண் ஆகிய மூவரும் வெல்வெட்டு மாடத்தில் படுத்துத்தூங்கிக்கொண்டிருக்கையில், எப்படியோ திருடர்கள் உள்ளே வந்திருக்கிறார்களே! அயர்ந்து நான் தூங்கிக் கொண்டிருக்கையில் யாரோ ஒரு முரட்டு மனிதன் வந்து என் உடம்பிலிருந்த சட்டைப்பையில் கையைவிட்டு இரும்புப் பெட்டியின் திறவுகோலை எடுக்க முயற்சித்தான். நான் திடுக்கிட்டு விழித்துக்கொண்டு எழுந்து கூச்சலிடவும், அவனை எதிர்க்கவும் ஆரம்பித்தேன். அவன் என்னைப் பலாத்காரமாகப் பிடித்துத் தூக்கிக்கொண்டுபோய் விசைவைத்த நாற்காலியொன்றில் போட்டுவிட்டான்; அதன்பிறகு நான் வெகுநேரம் வரையில் கூச்சலிட்டுப் பார்த்தேன். யாரும் வரவில்லை. அந்த நாற்காலியிலிருந்து நான் வெகுநேரம் தத்தளித்தேன். பிறகு என்னுடைய அறிவுமயங்கி போய் விட்டது. அதன்பிறகு என்ன நடந்ததென்பது எனக்கு ஞாபகமில்லை. இப்போது விழித்தவுடன் உங்களைப் பார்க்கிறேன். நீங்கள் சொல்லும் விவரங்களை பார்த்தால், திருடர்கள் இரும்புப் பெட்டியைத் திறந்து, அதற்குள்ளிருந்த திரவியங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு இரண்டு பெண்களையும் அபகரித்துக்கொண்டு வெளிக்கதவையும் பூட்டி விட்டுப் போயிருக்க வேண்டுமென்பது நிச்சயமாகத் தெரிகிறது.

என்னுடைய ஆஸ்தியெல்லாம் போனதைப் பற்றிக்கூட நான் அதிகமாகக் கவலைப்படவில்லை. பெண்களிருவரையும் அந்த முரட்டுத் திருடர்கள் கொண்டுபோனதுதான் என்னால் சகிக்க முடியாத பரம சங்கடமாக இருக்கிறது. அந்த முரடர்கள் அவர்களை எங்கே கொண்டுபோயிருப்பார்களோ, எவ்விதமான கொடுமைக்கும் மானபங்கத்துக்கும் ஆளாக்குவார்களோ தெரியவில்லை. ஆகையால், நாம் எப்பாடுபட்டாவது அவர்களை முதலில் கண்டுபிடிக்க வேண்டும். நீங்கள் என்னுடைய உயிரைக் காப்பாற்றியதுகூட ஒரு பெரிய காரியமல்ல. அந்தப் பெண்களிரண்டு பேரையும் உங்களில் யார் கண்டுபிடித்துக் கொணர்ந்தாலும் அவனுக்குப் பதினாயிரம் ரூபாய் சன்மானம் செய்கிறேன்'' என்றார்.

அதைக் கேட்ட வேலைக்காரர்கள் எல்லோரும் பதறிப்போய் அவ்விடத்தை விட்டு வெளிப்பட்டு நாலா பக்கங்களிலும் போய்த் தேட ஆரம்பித்தனர். வல்லம், காசாநாடு, உழூர், பொன்னாப்பூர் முதலிய கள்ளர் ஊர்களிலிருந்தே திருடர்கள் வந்து தஞ்சையிலும், அதற்குப் பக்கத்திலுள்ள கிராமங்களிலும் கொள்ளை மாடுபிடி முதலிய களவுகளை நடத்துவது வழக்கம் ஆதலால், சில வேலைக்காரர்கள் அந்த ஊர்களுக்கு அனுப்பப் பட்டனர். கோவிந்தசாமி ஒருவனே மாளிகையில் மிஞ்சி யிருந்தவன்; அவன் ஜெமீந்தாருக்கருகிலேயே இருந்து, அவருடைய தேவைகளையும் சௌக்கியத்தையும் கவனித்துக் கொண்டிருந்தான். ஜெமீந்தார் உயர்வான மருந்துகளையும், ஊக்கத்தையும் தேக புஷ்டியையும் உண்டாக்கக் கூடிய நல்ல ஆகாரங்களையும் உட்கொண்டு ஓய்வடைந்து அன்று பகல் முழுவதும் ஸுகமாகப் படுத்துத் தூங்கி பிற்பகலில் விழித்தார். உடம்பு அப்போது பச்சைப்புண்ணாக நொந்து கொண்டிருந்தது. ஆனாலும், அவர் மிகுந்த தெளிவும், பலமும், ஊக்கமும் அடைந்தவராய்ச் சாய்ந்து கொண்டிருந்தார். அவரது தேகம் தெளிவடைய அடைய, மனவேதனை அதிகரிக்கத்

தொடங்கியது. லீலாவதியையும் ஷண்முகவடிவையும் பற்றிய நினைவும், தாம் அபாரமாய்ச் சேர்த்து வைத்திருந்த திரவியம் அனைத்தும் போய்விட்டதைப் பற்றியும் ஜெமீந்தார் நினைத்து நினைத்து, கட்டுக்கடங்காத துயரமும், ஏக்கமும், கவலையும் அடைந்தவராய்த் துக்கப் பெருக்கினால் வாய் திறந்து பேசவும் மாட்டாதவராய்ப் படுத்திருந்தார். ஷண்முகவடிவும் திருடனிடம் அகப்பட்டுக்கொண்டிருப்பாளோ அல்லது தப்பித்துக்கொண்டு போயிருப்பாளோ என்ற சந்தேகம் தோன்றியது. ஆனாலும் சகலமான நற்குணங்களும் வாய்ந்தவளும் மகா அற்புதமான சிருஷ்டியாக அமைந்திருப்ப வளுமான அந்த அரிய பொற்கொடி தம்மிடம் வந்து அகப்பட்டுக் கொண்டும், கடைசியில் தப்பிப்போய் விட்டாளே என்ற ஏக்கமும் ஏமாற்றமும் அவரால் சிறிதும் சகிக்க இயலாதவனவாக இருந்தன. தாம் அதுவரையில் விரயம் செய்த பொருள்போக, மிகுதியிருந்த சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமான பணம் நகைகள் முதலியவை போனதை விட ஷண்முகவடிவு தமது வசப்படாமல் போனதே அவரது மனதை வாள்கொண்டு அறுப்பதுபோல வதைத்தது. அவ்வாறு போன பொருட்களைத் தவிர பூஸ்திதியாகவும், மாளிகைகளாகவும், மற்ற தட்டுமுட்டு சாமான்களாகவும் அவருக்கு இன்னமும் அளப்பரிய ஐசுவரியம் மிகுதி இருந்தன. ஆதலாலும், அவரது நிலங்களும், தோட்டங்களும் காமதேனுவைப் போலவும், கற்பக தருவைப் போலவும் அவருக்கு எப்போதும் வற்றாத வருவாயைக் கொடுத்துக்கொண்டே இருந்தன. ஆதலாலும் அவர் ஏகாங்கி ஆதலால், அவருக்கு அவசியமான செலவு அதிகமாக இல்லாமையாலும், அவர் தமது திரவியம் போனதைப் பற்றி அவ்வளவு அதிகமாக விசனப்படா விட்டாலும், அப்போதைய அவசரச் செலவுகளுக்கும், டம்பாச்சாரி விரயங்களுக்கும் தம்மிடம் தாராளமாகப் பணம் இல்லாமல் போய்விட்டதே என்ற ஒருவித வருத்தத்தை மாத்திரம் கொண்டார். ஆனால், லீலாவதியைத் திருடன்

அபகரித்துக் கொண்டுபோய் விட்டான் என்பது மாத்திரம் அவரது மனதிற்கு நிச்சயமாகத் தெரிந்தது. ஆகையால், அதுபற்றி அவர் உண்மையாகவே விசனித்துக் கலங்கி உருகிக் கண்ணீர் விடுத்து அழுதார். ஏற்கெனவே எண்ணிறந்த அல்லல்களையும் சங்கடங்களையும் அனுபவித்துக் கடைசியாகத் தமது மாளிகையில் நிம்மதியாக இருக்க ஆரம்பித்த லீலாவதிக்கு அதுவரையில் நேரிட்ட துன்பங்களைக் காட்டிலும் மகா விபரீதமான அபாயம் நேர்ந்துவிட்டதே என்பதும், அந்த முரட்டுத் திருடன் அவளை எவ்விதமான துன்பத்திற்கும் மானபங்கத்திற்கும் ஆளாக்குவானோ என்ற பீதியும் அவரது மனதைக் கலக்கி, சகிக்க இயலாத வேதனைக் கடலில் அவரை ஆழ்த்திக்கொண்டிருந்தன. அவ்வாறு அவர் படுத்திருந்த சமயத்தில் அன்றையதினம் அஸ்தமன சமயத்தில் லீலாவதி திரும்பி வீடுவந்து சேர்ந்தாள்.

அவள் கட்டாரித்தேவனால் சிறை வைக்கப்பட்ட இடத்திலிருந்து தப்பித்து வெளியில் வந்து குதிரை வண்டியில் ஏறிக் கொண்டு நீலமேகம்பிள்ளையின் மாளிகையை அடைந்து, அவ்விடத்திலிருந்து அவரோடு போலீஸ் இன்ஸ்பெக்டருடைய வீட்டிற்குப் போனாள் என்பது முன்னரே சொல்லப் பட்டதல்லவா. தாம் அன்றைய தினம் இரவு வெண்ணாற்றங் கரையிலுள்ள பங்களாவிற்குப் போய், அவ்விடத்தில் புதைக்கப்பட்டுள்ள பிரேதத்தை எடுத்துப் பரிசோதனை செய்வதென்று பேசி முடிவு செய்தபிறகு அவர்கள் லீலாவதியை அவளது மாளிகைக்கு அனுப்பி வைத்தார்கள். அவ்விடத்திலிருந்து அவள் தனது மாளிகைக்குத் திரும்பிவந்தபோது, பொழுது சாயும் வேளையாகி விட்டது. அவள் மாளிகையை அடைந்தவுடனே தனது பெரிய தகப்பனாரினது க்ஷேமத்தைப் பற்றியே முதலில் விசாரித்தாள். அவர் முதல் நாளிரவு முழுதும் நாற்காலியிலேயே இருந்து மறுநாள் பகலில்தான் அப்புறப்படுத்தப் பட்டார் என்றும், இப்போது அவர் திடமாக

இருக்கிறார் என்றும், தன்னைப்பற்றி அவர் நிரம்பவும் துக்கித்துக் கொண்டிருப்பதாகவும், ஷண்முகவடிவு இரவிலேயே எங்கேயோ போய்விட்டாள் என்றும் லீலாவதி தெரிந்து கொண்டாள். அவள் அன்றைய தினம் காலையிலிருந்து தண்ணீர் கூட அருந்தாமல் முற்றிலும் களைத்துச் சோர்வடைந்திருந்தாள். ஆதலால் அவளது கண்கள் இருண்டன. உடம்பு தள்ளாடியது. கால்கள் தடுமாறின. நாவறண்டு போயிருந்தது. பசி அகோரமாகப் பற்றித் தகித்துக் கொண்டிருந்தது. உடம்பின் வேதனை சிறிதும் சகிக்க இயலாததாக இருந்தது. ஆகவே, அவள் தான் க்ஷேமமாகத் திரும்பி வந்து விட்டதாக உடனே தன் பெரிய தந்தைக்குச் செய்தி சொல்லியனுப்பிவிட்டு சமையலறைக்குப் போய் அப்போது கிடைத்த சொற்ப ஆகாரத்தை உண்டபின் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுத் தனது பெரிய தந்தை படுத்திருந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தாள்.

லீலாவதி பத்திரமாகத் திரும்பிவந்து சேர்ந்தாள் என்ற செய்தியைக் கேட்டவுடனே, ஜெமீந்தார் அடைந்த சந்தோஷத்திற்கு அளவில்லை.அவர் தமது தேக அவஸ்தைகளையும் மறந்தார். பெருத்த திரவியம் போய்விட்டதனால் ஏற்பட்ட மனவேதனையும் விலகியது. பழைய மனோதிடமும் உற்சாகமும் உடனே திரும்பின. சந்தோஷம் முகத்தில் ஜ்வலிக்க ஆரம்பித்தது. கால்நாழிகை சாவகாசத்தில் லீலாவதியே நேரில் வந்து அளவற்ற வாத்சல்யத்தோடும் மரியாதையாகவும் அவரிடம் பேசி, அவரது தேகநிலைமையைப் பற்றி விசாரிக்கத் தொடங்கவே, ஜெமீந்தார் ஆனந்தக் கண்ணீர் விடுத்தவராய் நிரம்ப அன்பாக அவளைத் தடவிக்கொடுத்து, அவள் திருடனுடன் போய்த் திரும்பிவந்த வரலாற்றைச் சொல்லும்படி ஆவலோடு கேட்க, அவள் உடனே தனது விருத்தாந்தங்களை எல்லாம் விரிவாக எடுத்துக் கூறியதன்றி, தான் திருடனது வீட்டிலிருந்து தப்பி வந்தபிறகு நேராக நீலமேகம்பிள்ளையின் மாளிகைக்கும் போலீஸ் இன்ஸ்பெக்டரினது ஜாகைக்கும்

போனதையும், தான் அவ்வாறு போகவேண்டிய பிரமேயத்தை யும் எடுத்துக் கூறினாள்.

அந்த வரலாற்றைக் கேட்ட ஜெமீந்தார், லீலாவதி திருடனு டைய வீட்டில் செய்த தந்திரங்களைக் கேட்டு, அவளது திறமைக்கு அவளை நிரம்பவும் மெச்சியதோடு, அந்த முரட்டுத் திருடன் இனி மேல் அவளிடம் வந்து, பவானியம்பாள்புரம் ஜெமீந்தார் வெந்நீர் அண்டாவில் இறந்துபோன முகாந்திரத்தை வைத்துக்கொண்டு அவளைப் பயமுறுத்த முடியாதபடி அவள் முன்யோசனையோடு செய்த காரியங்களையும் ஆமோதித்தார். ஆனால், திருடன் தன்னை மாத்திரமே தூக்கிக்கொண்டு போனான் என்று சொன்னதிலிருந்து, ஷண்முகவடிவு தமது மாளிகையிலிருந்து தப்பி இரவிலேயே எங்கேயோ போய் விட்டாளென்று ஜெமீந்தார் உடனே நிச்சயப்படுத்திக் கொண்டார். உடனே அவர்களிருவருக்கும் அது விஷயத்தில் விசனமும், கவலையும், கலக்கமும் உண்டாயின. தாங்கள் அத்தனை பாடுகள் பட்டும், காரியம் நிறைவேறும் தருணத்தில் அவள் தங்களது வலையிலிருந்து தப்பிப் போனதைப் பற்றி ஜெமீந்தார் மிகுந்த வியாகுலம் அடைந்தார். ஷண்முகவடிவு தமது மாளிகையின் அடையாளத்தைத் தெரிந்துகொண்டு, அண்டை வீட்டாரிடம் கேட்டுத் தாங்கள் இன்னார் என்பதைத் தெரிந்துகொண்டு தாங்கள் செய்த கொடுமைகளை எல்லாம் எப்படியும் வெளியிட்டு விடுவாள் என்ற நிச்சயம் ஏற்பட்டது. ஆகையால், அதைப்பற்றி மாத்திரம் அவர்கள் இருவரும் மிகுந்த கவலையும் கலக்கமும் அடைந்தவராய் இருந்ததன்றி, ஷண்முக வடிவு அந்த ஊரிலேயே எவ்விடத்திலாவது இருப்பாள் ஆதலால், தாம் ஆட்களை விட்டுத் தேடச் செய்து எப்படியாவது அவளை மறுபடி அழைத்துக்கொண்டு வரவேண்டுமென்றும், அவள் ஒருகால் அவ்விடத்தை விட்டுத் திரும்பித் திருவாரூருக்குப் போயிருந்தாலும், அவ்விடத்திற் காகிலும் தமது ஆட்களை அனுப்பி, பலாத்காரம் செய்து

இரவோடு இரவாக அவளை அபகரித்துக்கொண்டு வந்துவிட வேண்டுமென்றும் ஜெமீந்தாரும் லீலாவதியும் நிச்சயித்துக் கொண்டனர். அத்தனை துன்பங்களிலும் கவலைகளிலும் ஜெமீந்தாருக்கு ஷண்முக வடிவின் நினைவே பெருத்த பைத்தியமாகப் பிடித்துக்கொண்டது. அவளது விஷயத்தில் தாம் மறுபடி முயற்சி செய்வதில், தம்மிடம் மிகுதியிருக்கும் நிலங்கள் முதலிய சகலமான செல்வத்தையும் இழப்பதானாலும், தாம் பின்வாங்கக் கூடாது என்ற உறுதியே அப்போதும் அவரது மனதில் உண்டாயிற்று. துன்மார்க்கத்தில் தமது மனதைச் செலுத்திப் பழகிய மனிதர்கள், இடையில் தமக்கு எவ்வித அபாயங்களும் மானஹானியும் நேர்ந்தாலும் அவைகளை வெகு சீக்கிரத்தில் மறந்து, தமது மனப்போக்கின் படியே செல்வர் என்பது பிரத்தியக்ஷமான விஷயமாதலால், அதே இனத்தில் சேர்ந்த மருங்காபுரி ஜெமீந்தார் அவ்வாறு உறுதி செய்துகொண்டது ஆச்சரியகரமான விஷயமல்ல. ஆனால் லீலாவதியோ எனில், ஷண்முகவடிவின் விஷயத்தில் தாம் பெருத்த அக்கிரமம் செய்ததனாலேதான் தங்களுக்குப் பெருத்த அபாயமும் அபாரமான பொருள் நஷ்டமும் ஏற்பட்டன என்பதை பலமாக உணர்ந்தாள். ஆனாலும், தனது பெரிய தந்தைக்குக் கட்டுப்பட்டு அவரது மனப்போக்கின்படி நடந்து கொள்ள வேண்டியவளாக இருந்தாள். ஆகவே, அவள் தன் மனதிற்கு விரோதமாகவே அவரது அநியாயச் செய்கைகளுக்கும், கெடு நினைவுகளுக்கும் ஒருப்பட்டவளானாள்.

லீலாவதியைக் கண்டு அவளது செய்கைகளை எல்லாம் கேட்டு மறுபடி தாம் ஷண்முகவடிவை எப்படி அபகரித்து வருவது என்பதைப்பற்றி முடிவுசெய்த பிறகு ஜெமீந்தார் ஒரு யானையின் பலத்தைக் கொண்டவர் போலானார். அவர் சாதாரணமாக எழுந்து தமது போஜனத்தை முடித்துக் கொண்டார். கோவிந்தசாமியிடம் சில விவரங்களைத் தெரிவித்து, ஷண்முகவடிவைத் தேடும்படி அந்த ஊருக்

குள்ளும், திருவாரூர்ப் பாதையிலும் உடனே ஆள்களை அனுப்பும்படி ஏற்பாடு செய்தார். தாம் இரண்டொரு நாளைக்குள் மறுபடி எப்படியும் ஷண்முகவடிவைக் கண்டு அவளைத் தமது ஆசைநாயகியாகச் செய்து கொள்ளலாம் என்ற நினைவையே அவர் சதாகாலமும் தியானம் செய்தவராய் மறுபடியும் தமது சயனத்தை அடைந்தார். அதன்பிறகு லீலாவதி ஒரு வண்டியில் வெண்ணாற்றங்கரைக்கு அனுப்பப்பட்டாள். அவ்விடத்தில் நிகழ்ந்த விஷயங்கள் முன்னரே விரிவாகக் கூறப்பட்டன. ஆதலால், அவைகளை விடுத்து, அவ்விடத்திலிருந்து இன்ஸ்பெக்டரால் தனது மாளிகைக்கு அனுப்பப்பட்ட லீலாவதியை நாம் பின்தொடர்ந்து செல்வோம். அவள் வெண்ணாற்றங்கரையிலிருந்து தஞ்சைக்கு வந்து தங்களது மாளிகையை அடைய இரவு பதினோருமணி சமயமாயிற்று. வாசலில் இருந்த பாராக்காரன் அவளை உள்ளே அனுப்பி விட்டுக் கதவுகளை மூடிக்கொண்டு படுத்து நித்திரையில் ஆழ்ந்துவிட்டான். ஜெமீந்தார் முதல் நாளிரவிலிருந்து நாற்காலியில் அகப்பட்டுக் கிடந்த மெலிவினாலும், தேக அவஸ்தையினாலும், ஷண்முகவடிவைப் பற்றியும் மற்ற விஷயங்களைப் பற்றியும் கொண்ட மனவேதனைகளினாலும் அலுத்துப்போய்த் தமது ரதிகேளி விலாசத்தில் ஸொகுசான ஒரு பஞ்சணையின் மீது படுத்து ஆனந்த நித்திரையில் ஆழ்ந்திருந்தார். லீலாவதியையும், ஷண்முகவடிவையும் தேடப்போன சிப்பந்திகள் எல்லோரும் மாளிகைக்குத் திரும்பி வராமல் பல இடங்களில் தங்கிவிட்டனர். ஆதலால், சமையல் காரியையும் கோவிந்தசாமியையும் பாராக்காரனையும் தவிர, அந்த மாளிகையில் வேறே வேலைக்காரர் எவரும் படுத்திருக்க வில்லை. சமையல்காரி மடைப்பள்ளிக்குள் ஒரு மூலையில் படுத்துக் குறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தாள். கோவிந்தசாமி அன்று பகல் முழுதும் ஜெமீநாரைப் பிழைக்க வைப்பதற்காக எடுத்துக்கொண்ட அபாரமான பிரயாசையினால் நிரம்பவும் அலுத்துப்போய் அவனுக்காக விடப்பட்டிருந்த ஒரு

தனி விடுதியில் படுத்திருந்தான். லீலாவதி திரும்பி வருவாள் என்ற உத்தேசத்தினால், அவன் வெல்வெட்டு மாடத்தின் வாசல் கதவைத் தாளிடாமல் வெறுமையாக மூடிவைத்து இருந்ததனால், லீலாவதி நேராக மேன்மாடத்திற்குச் சென்று கதவைத் திறந்து கொண்டு வெல்வெட்டு மாடத்திற்குள் போய், அதன் கதவை உள்புறத்தில் தாளிட்டுக்கொண்டு ஒரு மூலையிலிருந்த தனது பஞ்சணையை அடைந்தாள்.

அடைந்தவள் நாற்புறங்களிலும் திரும்பிப் பார்த்துத் தனது பெரிய தந்தை அவ்விடத்தில் இல்லையென்றும், ரதிகேளி விலாசத்தில் சயனித்துக்கொண்டிருக்கிறார் என்றும் நிச்சயித்துக் கொண்டாள். முதல்நாள் இரவிலிருந்து அரும்பாடு பட்டுப் பலவிதமான தேகப் பிரயாசைகளுக்கும், மனவேதனை களுக்கும் இலக்காகி, அன்று முழுவதும் பட்டினி கிடந்து, தனது ஆருயிர்க் காதலரான பவானியம்பாள்புரம் ஜெமீந்தாரினது பயங்கரமான பிரேதத்தைப் பார்த்து, அதனாலும் பழைய நினைவுகளினாலும் சகிக்கவொண்ணாத அபாரமான துயரமும் சஞ்சலமும் அடைந்து அலுத்து முற்றிலும் தளர்ந்து போயிருந்தாள். ஆதலால், அவளது உடம்பு மரணவேதனையை உண்டாக்கிக் கொண்டிருந்தது. அவள் முதல்நாள் உடுத்திய பட்டாடையை அன்றைய தினம் மாற்றாமல் அணிந்திருந்தாள். ஆதலால்,அந்த ஆடை கனமாகவும் அசங்கியமாகவும் இருந்தது. ஆகையால், அவ்வாறு அருவருப்போடு தான் சயனித்துக்கொண்டால்,தனக்குத் தூக்கம் உண்டாகாது என்ற நினைவினால் தூண்டப்பட்ட லீலாவதி, அவ்விடத்தில் தன்னைத்தவிர வேறே மனிதர் யாரும் இல்லாததைக் கருதி சிறிதும் லஜ்ஜைப்படாமல் தனது பட்டாடையைக் களைந்து பக்கத்திலிருந்த ஸோபாவின் மீது வைத்துவிட்டுத் தான் அணிந்து கொள்ளக்கூடிய வேறு ஆடை அவ்விடத்தில் ஏதாவது இருக்கிறதா என்று அவள் சுற்று முற்றும் பார்த்தாள். எவ்விடத்திலும் அவள் அணியக் கூடிய சேலை ஒன்று கூடக்

காணப்படவில்லை. ஆனால், சிறிது தூரத்தில் சுவரில் காணப்பட்ட முளைகளில் கொசு கடிக்காமல் போர்த்துக் கொள்ள ஒரு மஸ்லீன் போர்வையும், குளிருக்காகப் போர்த்துக்கொள்ள ஒரு காஷ்மீர் சால்வையும் கிடந்தன. தான் அந்த மஸ்லின் போர்வையை எடுத்துத் தனது உடம்பை மூடிக் கொண்டு படுக்க வேண்டுமென்ற நினைவோடு அந்த வடிவழகி முளைகளிருந்த இடத்தை நோக்கி இரண்டோரடி எடுத்து வைத்தாள். இடைவழியில் சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு பெரிய நிலைக்கண்ணாடி அண்டை அவள் சென்றபோது, அவளது வடிவம் அந்தக் கண்ணாடிக்குள் தென்பட்டது. அதைக் கண்ட லீலாவதி உடனே திடுக்கிட்டு நடுங்கினாள். அவள் தனது தேகத்தில் எவ்வித ஆடையுமின்றி பிறந்த மேனியாயிருந்த அசந்தர்ப்ப வேளையில் யாரோ அன்னிய மனுஷி அங்கே வந்துவிட்டாள் என்ற நினைவே முதன் முதலாக அவளது மனதில் தோன்றியது ஆகையால், அவள் திடுக்கிட்டாள். அவளது தேகம் தானாகவே கிடுகிடென்று நடுங்கிக் குன்றிப் போயிற்று. மயிர்ச்சிலிர்ப்பும் கூச்சமும் உண்டாயின. ஆனாலும், அடுத்த க்ஷணத்தில் அவள் தனது தவறை உணர்ந்து கொண்டாள். அவ்விடத்தில் அன்னியர் யாருமில்லை என்றும், தனது சாயலே நிலைக் கண்ணாடிக்குள் தெரிகிறதென்றும் அவள் எளிதில் உணர்ந்து கொண்டாள். ஆனால், அவள் மனதில் ஒரு வியப்பு மாத்திரம் உண்டாயிற்று.தான் எத்தனையோ துன்பங் களுக்கும் இழிவுகளுக்கும் ஆளாகிப் பலவிதக் கவலைகளால் வருந்தியவள் ஆதலால், தான் தனது யௌவன பருவத்தின் புதுமையையும் அழகையும் இழந்திருக்க வேண்டுமென்றும், தனது முகம் முற்றிப் போயிருக்க வேண்டுமென்றும், தான் பெரிய பெண்பிள்ளைபோல மாறிப் போயிருக்க வேண்டு மென்றும், அவள் எண்ணி இருந்த எண்ணத்திற்கு மாறாக, அந்தக் கண்ணாடிக்குள் தோன்றிய வடிவம் சிறிதும் மேனி குலையாத ஒரு பருவகாலத்துப் பெண்ணின் இன்ப வடிவமாகத் தோன்றியது. அவ்வாறு காணப்பட்ட அற்புத மனமோகன சுந்தர

வடிவம் தன்னுடையது தானோ என்று அவள் ஒருவித சந்தேகம் கொண்டவளாய்த் தனது வடிவத்தை உற்றுப் பார்த்தாள். சுமார் இருபதிற்கு மேற்படாத யௌவனமும், அழகு ஜ்வலித்த வசீகரமான முகமும், வண்டுகளைப் பழித்த கரிய கண்களும், கருத்தடர்ந்து ஒன்றாகக் கூடிய அற்புதமான புருவ விற்களும், தேவாமிருதம் கசிந்த கனிவான சிவந்த உதடுகளும், முத்துக்கள் போன்ற பற்களும், தந்தத்தில் கடைந்தெடுக்கப் பட்டதுபோன்ற மாசுவறுவற்ற அழகான நாசியும், அடிக்கடி குழிவடைந்த சொகுசான கன்னங்களும் காண்போரது மனதைக் கொள்ளை கொள்ளத் தக்கவையாக இருந்தன. கழுத்திற்குக் கீழிருந்த மற்ற ஒவ்வொரு அங்கமும் அவள் சொர்ண விக்கிரகமோ, அல்லது, தந்தப் பதுமையோ என்று ஐயுறும்படி சிறந்த வனப்பு வாய்ந்து தேஜோமயமாக விளங்கியது. லீலாவதி அபாரமான தனது அழகைக் கண்டு தானே பிரமிப்பு அடைந்தவளாய்த் தன்னை அந்தச் சமயத்தில் யாராவது கண்டால், கண் திருஷ்டி தோஷம் ஏற்படுமோவென்று பயந்தாள். மறுபடியும் அவளது கண்கள் மருண்டு தாமாகவே நாற்புறங்களிலும் திரும்பி அவ்விடத்தில் வேறே யாராவது இருந்து அந்த எழில் வடிவைப் பார்த்துவிடப் போகிறார்களே என்று கவனித்தன. எவ்வித ஆடையுமில்லாது இருந்த நிலைமையில், அவள் தனது நிகரற்ற சுந்தர வடிவத்தைக் காணக் காண அவள் மஸ்லின் எடுக்கப் போனதை மறந்து அந்த வடிவத்தைக் கவனிப்பதிலேயே தனது முழு கவனத்தையும் செலுத்தி சிறிதுநேரம் அப்படியே நின்றுவிட்டாள். ஆனால், அவள் அன்று முழுதும் பல இடங்களுக்குப் போய் அலைந்த தனால் அவளது தலை மயிர் சிற்சில இடங்களில் தூக்கிக் கொண்டிருந்ததை அவள் கண்டாள். ஆதலால், அவள் அதைச் சரிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற நினைவோடு தனது தலைமுடிப்பை அவிழ்த்து விட்டு அபாரமாகப் பரவிக் கணைக்கால் வரையில் மயில் தோகை போலத் தொங்கிய தனது அளக பாரத்தை அவள் தனது கையால் கோதி, தலையின் உச்சியைத் தடவிக் கொடுத்து மறுபடியும் முடிந்து கொண்டாள்.

அப்போது அவளது மனதில் ஒருவித விசனம் தோன்றியது. அவ்வளவு அமோகமான கட்டழகைத் தனக்கு அளித்த ஈசுவரன், அதை அனுபவிப்பதற்குத் தகுந்த யோக்கியதை வாய்ந்தவரும், தன் மனதிற்கு உகந்தவருமான ஒரு பூமானைத் தனக்குச் சாசுவதமாக அளிக்காமல் போனதோடு, தனது இல்லற வாழ்க்கை சீர்குலைந்து போகும்படி செய்துவிட்டானே என்ற துக்கமும் கலக்கமும் எழுந்து அவளது மனதை வதைத்துப் புண்படுத்தத் தொடங்கின. உடனே அவளது அகக்கண்ணில் பவானியம்பாள்புரம் ஜெமீந்தாரினது மனோகர வடிவம் தோன்றி அவளைப் பார்த்து சந்தோஷமாகப் புன்னகை செய்வதுபோல அவள் உணர்ந்தாள். அன்றைய தினம் பகலில் நீலமேகம்பிள்ளையைக்கண்டு பேசப் போயிருந்த காலத்தில் அவரது மாளிகையில் சுவரில் மாட்டப்பட்டிருந்த இராமலிங்கம் பிள்ளையின் படத்தைப் பார்த்த முதல் அந்த இன்ப வடிவம் அப்படியே அவளுக்கு எதிரில் நிற்பதுபோல தோன்றிக் கொண்டிருந்தது. ஆகையால், ஒரே அழகு மயமாகவும் யௌவனம் மாறாமலும் இருந்தாலும், அவரும் நீடித்திருந்த சந்தோஷமடையாமல் கடவுள் சதி செய்துவிட்டானே என்ற பெருந்துக்கம் எழுந்து வதைக்கவே, அவளது கண்களில் கண்ணீர் துளித்து நின்றது. தன் மனதிற்கு உகந்த மகா ரம்மிய புருஷனான தனது உண்மைக் காதலன் அகால மரண மடையவும், சிறிதும் இங்கிதம் அறியாதவனும், ஆண்மைத் தனம் என்பதே அற்றவனுமான ஒருவனைத் தானே கணவனாகத் தேடிப்பிடிக்கவும், அவன் தகாத காரியங்களைச் செய்து சிறைச்சாலை புகவும், அதனால் தான் என்றைக்கும் நீங்காத அவமானமடையவும் நேர்ந்ததை நினைக்க நினைக்க, அவளது உள்ளம் கொதித்தது. அவள் பன்முறை நெடு மூச்செறிந்தாள்; அவளது மனதில் பலவித நினைவுகள் தோன்றின: ''ஐயோ! பாழுந் தெய்வமே! உனக்குக் கண் அவிந்து போய்விட்டதா? அல்லது, நீ மதிமந்தனாய் விட்டாயா? உன்னை ஜனங்கள் சர்வரக்ஷகனென்றும், காருண்ய மூர்த்தியென்றும், பரமதயாளு

வென்றும் சொல்லி நிரம்பவும் புகழுவது மூடத்தனமே அன்றி வேறல்ல. உன்னுடைய சிருஷ்டியில் துக்கம் அனுபவியாத மனிதப் பிறவியே இல்லையே! பிறந்தது முதல் இறப்பது வரையில் துன்பமே கலவாத இன்பம் அனுபவிக்கும் மனிதர் யாராவது ஒருவர் உண்டா? நீ உலகத்தில் எவ்வளவு அபாரமான செல்வங்களையும் அழகான வஸ்துக்களையும் இன்பந் தரக்கூடிய பொருள்களையும் படைத்திருக்கிறாய். சிலருக்கு அபாரமான ஐசுவரியத்தைக் கொடுக்கிறாய். சிலருக்கு அழகான புருஷனையோ, அல்லது பெண்ஜாதிகளையோ அளிக்கிறாய். சிலருக்குப் புத்திர சந்தானத்தைத் தருகிறாய். சிலரை மாடமாளிகையில் சப்பிரமஞ்சத்தின் மேலே வைக்கிறாய். வேறு சிலர் சதாகாலமும் இனிமையான வஸ்துக்களையே அனுபவிக்கும் படி செய்கிறாய். அப்படிஇருந்தும், ஒரு விஷயத்தில் சுகப்பட்டால், இன்னொரு விஷயத்தில் கஷ்டம் அனுபவியாத மனிதன் இந்த உலகத்தில் இருக்கிறானா? இப்படிப்பட்ட செல்வமும் செல்வமாகுமா? சுகமும் சுகமாகுமா? உன்னுடைய சிருஷ்டியும் ஒரு சிருஷ்டியா? இதில் ஏதாவது ஒழுங்கு இருக்கிறதா? ஒரு நிர்ணயம் இருக்கிறதா? ஒரு நீதி இருக்கிறதா? நல்ல மனிதன் கெட்டமனிதன் என்கிற தாட்சணியம் இருக்கிறதா? ஒன்றுமில்லை. துஷ்டனும் ஒன்றுதான், சிஷ்டனும் ஒன்றுதான்; பாவியும் ஒன்றுதான் பரிசுத்தனும் ஒன்றுதான். எல்லோரும் ஏதோ ஒருவிதமான துன்பத்தையும் துயரத்தையும் அனுபவிக்க வேண்டியது அவர்களுடைய தலை விதியாக முடிகிறது. எதற்காக நீ மனிதரை இப்படிப் படைத்து ஒவ்வொருவரும் வேதனையடையும்படி செய்கிறாயோ என்னவோ தெரியவில்லை. முந்தி ஜென்மத்தில் அவரவர்கள் செய்யும் பாவபுண்ணியங்களுக்குத் தகுந்தபடி ஒவ்வொருவரும் கஷ்ட சுகங்களை அனுபவிக்கிறார்களென்று சொல்வதும் மூடத்தனமே அன்றி வேறல்ல. ஒரு தண்டனையை அனுபவிக்கும் ஒருவன், தான் இன்ன குற்றம் செய்ததற்காக அந்தத் தண்டனையை அனுபவிக்கிறோம் என்பதை அறிந்து

கொண்டால், தான் முன் ஜென்மத்தில் ஏதாவது தவறு செய்திருக்க வேண்டுமென்று தனக்குத்தானே அவன் யூகித்துக் கொள்ள வேண்டுமென்றால், அது எப்படி சாத்தியமாகும்? இந்த சிருஷ்டியில் எல்லாம் மூடு மந்திரமாக இருக்கிறதே ஒழிய, வெளிப்படையான நீதியென்பதே காணப்படவில்லையே. எல்லாவற்றையும் படைக்கும் வல்லமை வாய்ந்த கடவுள் எல்லோரும் ஒழுங்காக நடக்க வேண்டுமென்று கட்டளை இட்டிருக்கக் கூடாதா? அல்லது, மனிதன் பிறக்கும்போது முன் ஜென்மத்தில் தான் இன்னின்ன பாவபுண்ணியம் செய்தோம் என்ற ஞாபகமுடையவனாய்ப் பிறக்கக் கூடாதா? கடவுள் இந்த மனித கோடிகளை மேலே சொன்ன இரண்டு விதமாகப் படைத்திருந்தால் உலகத்தில் எவ்வளவு துன்பங்களும், துயரமும் குறைவுபட்டுப் போகும் தெரியுமா? ஆகையால், கடவுளிடத்திலும் குற்றமோ அல்லது சக்திக் குறைவோ இருக்கிறதென்பது நிச்சயமாகத் தெரிகிறது. அவனே அப்படி இருக்கையில், அவனால் படைக்கப்படும் அற்ப அறிவும் சொற்ப சக்தியுமுள்ள நாம் தவறு செய்யாமல் இருப்பதென்றால் அது சாத்தியமான விஷயமா? அப்படி நாம் தவறு செய்வதற்கு நம்மை இவ்வாறு படைத்த கடவுளே உத்தரவாதியாக இருக்க, அதற்காக அவன் நம்மைத் தண்டிப்பது நியாயமாகுமா? என்ன கடவுள்! என்ன உலகம்! என்ன நீதி! எல்லாம் அக்கிரமம். எல்லாம் துன்பம். எல்லாம் துக்கம். இப்படிப்பட்ட பரம சங்கடமான உயிரைச் சுமந்திருப்பதைவிட, இறந்துபோவதே நிரம்பவும் சிலாக்கியமானது. எனக்கு இந்த யெளவன பருவத்தையும், இவ்வளவு சிரேஷ்டமான தேஜஸையும் கொடுத்த கடவுள் இதனால் உண்டாகக் கூடிய சுகத்தையும் ஆனந்தத்தையும் கொடுக்க மறுத்துவிட்டால், இந்த யெளவனத்தையும் அழகையும் கொடுத்தது ஒரு பெருத்த தண்டனையே ஒழிய, இது ஒரு நன்மை செய்தது ஆகாது. இதைப் பற்றி நான் கடவுளுக்கு நன்றியறிதல் செலுத்துகிறதா, அல்லது அவனைத் தூற்றுகிறதா? என் புருஷன் சிறைச்சாலையில்

இருக்கிறார். அவர் திரும்பி வருவதற்குள் நான் கிழவியாகி விடுவேன். அல்லது, அவரே சிறைச்சாலைக்குள் இறந்து போனாலும் போகலாம். அல்லது, அவர் சுகமாகத் திரும்பி வந்தாலும், அப்படிப்பட்ட இழிவை அடைந்த மனிதரோடு நான் இனி மனமொத்து வாழ்ந்து சந்தோஷமடைய முடியுமா? ஒருநாளுமில்லை. இவ்வளவோடு நான் அழிந்து போனவள் தான். இனி நான் இந்த ஜென்மத்தைச் சுமப்பது வியர்த்தமே அன்றி வேறல்ல. இதனால் எனக்குப் பலவிதமான அபாயமும் வியாகுலமும் உண்டாகுமென்பது நிச்சயம். இப்படிப்பட்ட அழகை நான் படைத்திருப்பதால், கேவலம் கொள்ளைக் காரனான முரட்டு மனிதன் கூட என்மேல் துராசை கொள்ள நேர்ந்ததல்லவா? அந்தத் துஷ்டன் இவ்வளவோடு என்னை விட்டுவிடவா போகிறான். அவன் எப்படியும் மறுபடியும் வந்து என்னைப் பலவித இடர்களுக்கு ஆளாக்குவது என்பது நிச்சயம். என் பெரிய தந்தையோ, புனிதவதிகளான பெண்களைக் கொணர்ந்து வைத்துக்கொண்டு பலாத்காரம் செய்கிறார்; அப்படிப்பட்ட அக்கிரமச் செய்கைகளுக்கு நானும் உதவியாக இருக்க வேண்டியிருக்கிறது. இல்லையானால் நான் அவருடைய கோபத்துக்குப் பாத்திரமாக வேண்டும். ஆகா என்னுடைய ஜென்மமும் ஒரு ஜென்மமா? நான் இந்த ஜென்மத்தை எப்படி விட்டு ஒழிக்கப் போகிறேன்! ஐயோ! பாழும் தெய்வமே! உன் கோவில் இடியாதா? என் வயிறெரிகிறது, உனக்குத் தெரியாமல் போக, நீ அந்தகனாய்ப் போனாயா?'' என்று லீலாவதி பித்தம் பிடித்தவள்போலத் தனக்குள் பலவாறு எண்ணமிட்டு ஆத்திரம் அடைந்தவளாய் நிலைக் கண்ணாடியில் தோன்றிய தனது சுந்தர வடிவத்தை அருவருப்போடு பார்க்க, கண்ணாடிக்குள் திடீரென்று இன்னொரு பயங்கரமான ரூபம் தென்பட்டது. பிரம்மாண்டமான உடம்பும், பரம விகாரமான முகமும் உடைய ஓர் ஆண்வடிவம் கண்ணாடிக்குள் காணப்படவே, அது தன் மனதின் பிராந்தியினால் ஏற்பட்ட பொய்த் தோற்றமென்ற எண்ணம் மின்னல் தோன்றி மறைவது போல அவளது மனதில்

தோன்றி க்ஷணத்தில் மறைந்தது. ஆனால், முதலில் சாதாரணமாகத் தோன்றிய அந்த வடிவத்தின் முகம் அடுத்த க்ஷணத்தில் அவளைப் பார்த்துப் புன்னகை செய்ததைக் காணவே, அவள் திடுக்கிட்டுச் சடேரென்று பின் பக்கம் திரும்பிப் பார்த்தாள். பார்க்கவே, அவளை அபகரித்துச் சென்ற கள்வனான கட்டாரித்தேவன் உண்மையிலேயே வந்து அவளுக்குப் பின்னால் சிறிது தூரத்தில் நின்று அவளைப் பார்த்து ஆனந்தமாகப் புன்னகை செய்து கொண்டிருந்ததை லீலாவதி உணர்ந்தாள். உணரவே, அவளது பிராணனில் பெரும்பாகமும் போய்விட்டதென்றே சொல்ல வேண்டும். அவளது வாயிலிருந்து, ''ஐயோ! அப்பா! திருடன்!'' என்று கூச்சல் வெளிப்பட்டது. ஆனாலும், அவளது நாக்கு குழறிப் போயிற்று. பெரும் பீதியினாலும் திகிலினாலும் உரோமம் சிலிர்த்தது. குலை நடுக்கமும், மனக் குழப்பமும், வயிற்றில் சங்கடமும் உண்டாயின. தான் எவ்வித ஆடையுமில்லாமல் இருக்கும் அந்த அசந்தர்ப்ப வேளையில் ஒரு புருஷன் வந்து தனக்கருகில் நிற்கிறானே என்ற எண்ணம் அவளது உடம்பைக் கிடுகிடென்று நடுக்குவித்தது. சகிக்க இயலாத பெருத்த கிலேசமும், நாணமும், சஞ்சலமும் அடைந்தவளாய், அவள் தனக்கு நிரம்பவும் அருகிலிருந்த ஒரு பூத்தொட்டியின் அப்புறத்தில் பாய்ந்து தனது உடம்பை மறைத்துக்கொண்டவளாய், தனது குரல் எட்டிய வரையில் ஓங்கிக் கூச்சலிட ஆரம்பித்தாள். அவளது அற்புதமான எழில் வழிந்த மனமோகன வடிவத்தைக் கண்டு அப்படியே பிரமித்து உணர்வு கலங்கி மதிமயங்கி இன்னது செய்வ தென்பதை அறியாமல் இரண்டொரு நிமிஷம் நின்ற கட்டாரித் தேவன் அவள் பலமாகக் கூச்சலிடுவதைக் கேட்டு, மனிதர் யாராகிலும் உதவிக்கு வந்துவிடப் போகிறார்களே என்று அஞ்சி அவளது கூச்சலை அடக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டவனாய்த் தனது இடுப்பிலிருந்த பீச்சாங்கத்தியை உருவிக் கையில் பிடித்துக்கொண்டு, ''அடி! லீலாவதி, இப்படி நீ கூச்சலிட்டால், உன்னை நான் இலேசில் விட்டுவிட்டுப்

போய்விடுவேனென்று எண்ணிக் கொண்டாயா? அல்லது நூறு மனிதர்கள் உனக்கு உதவி செய்யவந்தால்கூட நான் உன்னை விட்டுப் போவேனென்று நினைக்கிறாயா? அது ஒருநாளும் பலியாது. இனி வாயைத் திறந்து கூச்சலிடுவாயானால், இந்தக் கத்தியை ஒரே பாய்ச்சலாக உன் மார்பில் பாய்ச்சி விடுவேன்; பத்திரம்'' என்று கூறிய வண்ணம் அவள் மறைந்திருந்த பூச் செடியண்டை ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான். அவனது சொற்களைக் கேட்ட லீலாவதி நடுங்கிப் போய்த் தனது கூச்சலை நிறுத்திவிட்டு, ''ஐயா! அப்படியே நில்லும்; அப்படியே நில்லும்; என் பக்கத்தில் வரவேண்டாம். உமக்கு நிரம்பவும் புண்ணியமுண்டு. நான் இனி கத்தவில்லை'' என்று நிரம்பவும் பணிவாகவும் நயமாகவும் கெஞ்சி மன்றாடத் தொடங்கினாள்.

அதைக் கேட்ட கட்டாரித்தேவன் சிறிது சாந்தமடைந்த வனாய்ப் புன்னகை செய்து, ''சரி; அதுதான் புத்திசாலிக்கழகு. ஆனால் நீ உண்மையில் புத்திசாலியா, இல்லையா என்பது மாத்திரந்தான் சந்தேகமாக இருக்கிறது. நான் கத்தியால் குத்தாமல் இருக்க வேண்டுமென்று நீ கத்தாமல் இருப்பதாகச் சொல்வது நியாயமான விஷயமே. நான் உனக்குப் பக்கத்தில் வராமல் தூரத்திலேயே நிற்க வேண்டுமென்று நீ கட்டளையிடு கிறாயே, அது நடக்கக்கூடிய காரியமா? உன்னிடம் நெருங்கக் கூடாதென்று நான் நினைத்தாலும் என் மனம் கட்டுப்படுமா? என் உடம்புதான் நிலையில் நிற்குமா? கொஞ்சநேரம் நீ எனக்குத் தந்த அற்புதக் காட்சியைக் கண்ட பிறகு, இனி மும்மூர்த்திகள் வந்து தடுத்தாலும், இந்த தேகம் அடங்குமா? அது ஒருநாளும் பலியாத காரியம். இப்போது நான் உன்னை அடைய வேண்டும். அல்லது, இன்றோடு என் உயிர் அழிய வேண்டும். இரண்டில் ஒன்றே முடிவான காரியம். இந்த முடிவை ஈசுவரனும் மாற்றமுடியாது. பேசாமல் இப்படி வந்துவிடு. அநாவசியமாக உடம்பை அலட்டிக் கொள்ளாதே'' என்று உறுதியாகவும் அழுத்தமாகவும் கூறினான்.

அதைக்கேட்ட லீலாவதி, முற்றிலும் திகிலும் கலக்கமும் நடுக்கமும் கொண்டவளாய், ''ஐயா! என்னை விட்டுவிடும். உமக்கு நான் அநந்தகோடி நமஸ்காரம் செய்கிறேன். ஸ்திரீ புருஷர் ஆகிய இருவரும் மனமொத்து இணங்கிச் செய்ய வேண்டிய ஒரு விஷயத்தில் விருப்பமில்லாத என்னை இப்படி வற்புறுத்துவது ஒழுங்கல்ல. என் உயிர் போவதானாலும், நான் உம்முடைய பிரியத்திற்கு இணங்கிவர முடியாது. நீர் என்னைக் கொண்டுபோய்ச் சிறைவைத்திருந்த இடத்திலிருந்து நான் வந்ததிலிருந்தே எனக்கு இந்த விஷயம் சம்மதியாக இருக்கவில்லை என்பது தெரியவில்லையா? மறுபடியும் வந்து என்னை ஏன் இப்படி உபத்திரவிக்கிறீர்? தயை செய்து என்னை விட்டுப் போய்ச் சேரும். நீர் எங்களுடைய பெட்டியிலிருந்து ஏராளமான ஐசுவரியத்தை அபகரித்துக்கொண்டு போனதோடு திருப்தி அடையும். உம்முடைய வீட்டின் அடையாளமும், அது இருக்கும் தெருவின் பெயரும் எனக்கு நன்றாகத் தெரியும். போலீசாரை ஏவி உம்மைப் பிடித்துக்கொள்ளுவது சுலபமான காரியமாக இருந்தும், நாம் அப்படிச் செய்யப் பிரியப்படவில்லை, ஏனென்றால் நீர் இதற்குமுன் பல தடவைகளில் என் புருஷருக்கு உதவியாயிருந்தவர் என்பதைக் கருதியே நான் அப்படிச் செய்ய எண்ணவில்லை. ஆகையால், நீரும் பழைய பழக்கத்தையும் மரியாதையையும் கருதி, இவ்வளவோடு என்னை விட்டுவிடும். நீர் கொண்டு போயிருக்கும் பெரும் செல்வத்தைக் கொண்டு நீர் என்னைக் காட்டிலும் சிரேஷ்டமான எத்தனையோ பெண்களை அடையலாம். ஆகையால் தயை செய்யும் , வேண்டாம்; நீர் சகலமும் தெரிந்த பெரிய மனிதர். உமக்கு நான் அதிகமாகச் சொல்லக்கூடியது ஒன்றுமில்லை'' என்று நிரம்பவும் இரக்க மாகவும் இளக்கமாகவும் கூறிக் கெஞ்சி மன்றாடினாள்.

கட்டாரித்தேவன் ஏளனமாக நகைத்து, ''ஆகா! எவ்வளவு சாமர்த்தியசாலியான பெண்ணப்பா இவள்; நேற்று தினம் நீ

சொன்ன வார்த்தைகளை எல்லாம் நீ இவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிட்டாயா? அல்லது, அந்த வார்த்தைகளெல்லாம் என்னை ஏமாற்றுவதற்காகச் சொல்லப்பட்ட வஞ்சக வார்த்தைகளா? இனி நீ என்னோடு கூடவே இருந்துவிட சம்மதிப்பதாகவும், ஆனால் மனம் கூசுவதாலும் உடம்பு அலுத்துப் போயிருப்பதாலும், ஒருநாள் பொறுத்துக்கொள்ளும் படியும் நீ கேட்டுக்கொண்டதை மறந்து போனாயா? இன்று சாயுங்காலம் நான் வண்டி கொண்டுவந்தால், என்னோடு என்னுடைய ஊருக்கு வருவதாகவும், என் பிரியப்படி நடந்து கொள்வதாகவும் நீ சொன்னவளல்லவா? அப்படிச் சொன்னவள் கிழவியை ஏமாற்றிவிட்டு வந்து விட்டாயே! அப்படிப்பட்ட மோசக்காரியான உன்னை நான் எப்படி நடத்தினாலும் அது பாவமாகுமா? நீ வாக்குக் கொடுத்தபடி உன்னை இன்றைய தினம் இரவுக்குள் நான் எப்படியும் என்னுடைய ஊருக்குக் கொண்டு போக வேண்டும். உன்னை என் ஆசைநாயகியாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்றும் உறுதி செய்துகொண்டு நான் வண்டியோடு வந்திருக்கிறேன். வண்டி இதோ பக்கத்து தெருவில் நிற்கிறது. வெகு நேரத்துக்கு முன்னாகவே நான் இங்கே வந்தேன். தெய்வச் செயலாக, இந்த மாடத்தின் வாசல் கதவும் தாளிடப்படாமல் இருந்தது. நான் உள்ளே வந்து ஒளிந்து உன் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருந்தேன்; நீயும் வந்தாய்; வந்தவள் உன் அழகை எல்லாம் நான் கண்ணாரக் கண்டு களிகொண்டு மதிமயங்கும்படியாகக் கண்ணாடிக்கு எதிரில் நின்றாய்; கண்கொள்ளாத அழகோடு கூடிய உன்னுடைய சுய வடிவத்தைக் கண்டே நான் சித்தப்பிரமை கொண்டு நிற்கையில், அந்த வடிவம் இரட்டித்துத் தெரிந்ததால், அந்தச் சுகத்தையும் இன்பத்தையும் நான் என்னவென்று சொல்லுவேன்! எவருக்கும் கிடைக்காத இப்படிப்பட்ட பெருத்த பாக்கியத்தை எனக்கு அளித்த நீ இனி பின்வாங்குவதென்றால், அது நடக்கக்கூடிய விஷயமா? நான் இனி என்னுடைய உயிரை விட்டாலும் விடுவேனே அன்றி, உன்னை மாத்திரம் விட

மாட்டேன். ஆகையால், நீ வீணாக என்னோடு வாக்குவாதம் செய்து பொழுதைப் போக்குவதால், உனக்கு எவ்வித லாபம் ஏற்படப் போகிறது? நீ நேற்றையதினம் வாக்குக் கொடுத்தபடி இப்போது நடந்துகொள்வதைத் தவிர, வேறு எதையும் நீ செய்ய நான் இணங்கமாட்டேன். பதில் பேசாமல் வா இப்படி'' என்றான்.

முற்றிலும் குழம்பிக் கலவரமடைந்த லீலாவதி மறுப்டியும் கெஞ்சத் தொடங்கி, ''ஐயா! வேண்டாம் வேண்டாம். இது அடாது. நான் ஒரு மனிதருடைய சம்சாரமல்லவா? என் புருஷர் சிறைச்சாலைக்குப் போய்விட்டார் என்று நினைத்து, நான் துன்மார்க்கத்தில் இறங்கலாமா? நீர் அவருடைய ஆப்த சிநேகிதர் அல்லவா? என்னிடத்தில் வேறே யாராவது ஒருவன் இப்படித்தவறாக நடந்து கொண்டால்கூட, அவனைத் தண்டித்து என்னைக் காப்பாற்ற நீர் கடமைப்பட்டிருக்க, அதைவிட்டு வேலியே பயிரை அழிப்பதுபோல இப்படிப்பட்ட பாவச் செய்கையில் இறங்கலாமா? வேண்டாம். பெரிய மனசு பண்ணும். நீர் முதலில் கொஞ்சநேரம் அப்பால் போம். நான் என்னுடைய ஆடையை அணிந்துகொள்ளுகிறேன். ஆடையில்லாத இந்த நிலைமையில் உம்மோடு பேசும்போதே என் பிராணன் போவது போலிருக்கிறது'' என்றாள்.

கட்டாரித்தேவன், ''லீலாவதி! நான் உன்னை நன்றாக அறிவேன். யாரிடம் நீ இந்தப் பாசாங்கெல்லாம் செய்து பதிவிரதைத் தனம் கொண்டாடுகிறாய்! நீ உன் புருஷனிடம் எவ்வளவு தூரம் உண்மையாகவும் ஒழுங்காகவும் நடந்து கொண்டவளென்பது எனக்குத் தெரியும். வெந்நீர் அண்டாவை நான் மறந்துவிட்டேனென்று நினைத்துக்கொண்டாயா? ஆனால் அவர் ஜெமீந்தார், அழகான மனிதர், பணக்காரர், உன் மனசுக்குப் பிடித்தவர். அவரிடம் நீ சம்பந்தம் வைத்துக்கொண்டால், அதனால் உன் பதிவிரதைத்தனம் கெடாது போலிருக்கிறது. நான் உன் மனசுக்குப் பிடிக்காத மனிதன். ஆகையால், என்னிடம் நீ

சம்பந்தம் வைத்துக்கொள்வது உன் கற்புக்குக் களங்கம்போல் இருக்கிறது. நீ சொல்லும் ஒழுங்கு நன்றாக இருக்கிறது. பதிவிரதைத் தனமென்பது, புருஷன் ஒருவனிடத்திலேயே உண்மையான பிரியத்தோடு நடந்துகொண்டு மற்ற எப்படிப்பட்ட மனிதனுக்கும் இடங்கொடுக்காமல் இருக்கிறது என்று ஜனங்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். நீ சொல்வதைப் பார்த்தால், பெண்கள் தங்கள் மனசுக்குப் பிடித்த மனிதன்மேல் ஆசைப்படுவது பதிவிரதைத் தனமென்றும், தங்களுக்கும் பிரியமில்லாத மனிதனிடம் சேர்க்கை வைத்துக் கொள்வது பாவமென்றும் சொல்வதுபோல இருக்கிறது. உன் மனசுக்குப் பிடிக்கிறதோ, பிடிக்கவில்லையோ அது ஒரு பொருட்டல்ல, எப்போது ஒரு மனிதனால் உன் தேகம் களங்கப்பட்டு, உன் கற்பும் அழிந்து போனதோ, அதன்பிறகு, நீ பதிவிரதைத்தனம் கொண்டாட உனக்கு யோக்கியதையே இல்லை. ஆகையால், உன்னை நான் இனி கெடுத்தாலும், அது பாவமாகமாட்டாது. அதனால் உன்னுடைய கெட்டுப் போன கற்பு இன்னமும் அதிகமாகக் கெட்டுப்போகப் போகிற தில்லை. நல்ல உடம்பில் ஒரு திவலை விஷம் கலந்தாலும், அல்லது, ஒரு பிடி விஷம் கலந்தாலும், இரண்டும் ஒன்றுதான்; கொஞ்சமும் பேதமில்லை. ஆகையால், நீ அந்த விஷயத்தில் என்னிடம் நியாயம் பேசுவதில் உபயோகமே இல்லை. அதைக்கேட்டு நான் உன்னை விட்டுப் போய்விடுவேன் என்றாவது, நான் உன் விஷயத்தில் இரக்கங்கொள்வேன் என்றாவது நீ நினைக்கவே வேண்டாம். ஏன் அநாவசியமாகக் காலதாமதம் செய்கிறாய்? நேற்று முதல் உன் விஷயத்தில் என் மனசில் உண்டாகியிருக்கும் காமத்தீ என் உடம்பைத் தகித்து என் மனசைக் கருக்குகிறது; உன்னால் ஏற்பட்ட நரகவேதனை என்னை உயிரோடு கொன்றுகொண்டிருக்கிறது. இப்போது நீ தாமசப்படுத்தும் ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு எமனாக என்னை வதைக்கிறது. ஆகையால், நீயே மரியாதையாக என்னிடம் வருகிறாயா? அல்லது நானே அங்கே வந்து உன்னைப் பிடித்துக் கொள்ளலாமா?'' என்றான்.

அதைக்கேட்ட லீலாவதி குலை நடுக்கமும் பீதியும் அடைந்தவளாய், "ஐயா! ஏற்கெனவே பலவகையான துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் ஆளாகியிருப்பவளான என் விஷயத்தில் நீரும், இப்படிப்பட்ட கொடுமை செய்ய வேண்டுமா? நேற்று வரையில் என்னிடத்தில் எவ்வளவோ அன்பும் மரியாதையும் பாராட்டிய மனிதராகிய நீர் திடீரென்று மாறுபட்டு என்மேல் இப்படிப்பட்ட எண்ணம் கொள்வது கொஞ்சமும் அடுக்குமா? நான் நேற்று உம்மிடம் சொன்ன வார்த்தைகளையே முக்கியமாக எடுத்துக்கொண்டு நீர் என்னை வற்புறுத்துவது சரியல்ல. நான் நேற்று அநாதையாக உம்முடைய வீட்டில் தனியாக வந்து அகப்பட்டுக்கொண்டிருந்தேன். ஆகையால், நீர் என்ன செய்வீரோ என்று பயந்து, நான் ஏதோ வாயில் வந்ததை உளறி வைத்தேன். அவ்வளவே தவிர, உண்மையில் நான் அப்படிப் பேசினவளல்ல. அதுவுமன்றி, நான் பதிவிரதைத் தனம் கொண்டாடுவதாக நீர் சொல்லி, என்னை இழிவு படுத்துகிறீர். நான் அப்படிப் பதிவிரதைத்தனம் கொண்டாடவில்லை. பவானியம்பாள்புரம் ஜெமீந்தாருடைய விஷயத்தில் நான் தவறாக நடந்து கொண்டது உண்மைதான். எங்கள் இருவருக்கும் அப்படிப்பட்ட சம்பந்தம் ஏற்பட வேண்டுமென்று ஏதோ தலைவிதி இருந்ததனால், நாங்கள் ஒருவர் மேல் ஒருவர் பரஸ்பரம் பிரியம்கொண்டு விட்டோம். அதனாலேயே நான் அடியோடு கெட்டுப்போய் விடவேண்டுமென்று சொல்லுவது ஒழுங்காகுமா? நான் ஒருவர் விஷயத்தில் தவறிப் போனதனால், என்னைக் கண்டு என்மேல் ஆசைப்படவும், என்னைப் பலாத்காரம் செய்யவும் சகலமான மனிதருக்கும் அதிகாரம் உண்டாகிவிட்டதென்று சொல்ல முடியுமா? கேவலம் பரத்தைத் தொழிலை அனுஷ்டிக்கும் தாசியைக்கூட அவளுடைய விருப்பத்துக்கு மாறாகக் கட்டாயப்படுத்த யாருக்கும் அதிகாரமில்லையே. அப்படியிருக்க, நான் ஒருவர் விஷயத்தில் என்னுடைய கற்பை இழந்துவிட்டேன் என்ற ஆதாரத்தையே முக்கியமானதாக வைத்துக்கொண்டு நீர் பேசுவது நியாயமல்ல.

நான் நேற்றுமுதல் பட்ட பாடினால் இப்போது என்னுடைய உடம்பின் ஸ்திதி நிரம்பவும் கேவலமாக இருக்கிறது. எப்போது இந்த உடம்பைக் கீழே போடுவோமென்று இருக்கிறது. அதுவுமன்றி, இன்றைய தினம் போலீஸ் இன்ஸ்பெக்டர் முதலியோர் வெண்ணாற்றங்கரைக்குப் போய் அங்கே புதைக்கப்பட்டிருந்த ஜெமீந்தாருடைய பிரேதத்தை எடுத்துப் பரிசோதனை செய்துவிட்டு, அதை இப்போதுதான் நீலமேகம் பிள்ளையின் ஜாகைக்குக் கொண்டு போகிறார்கள். நான் குற்றவாளியல்லவென்று அவர்கள் தீர்மானித்து என்னை அனுப்பி விட்டார்கள். இப்போதுதான் நான் அங்கே யிருந்து வந்து படுத்துக் கொள்ளப் போனேன். அந்த ஜெமீந்தாருடைய பிரேதத்தைப் பார்த்ததனால் என்னுடைய மனசு பைத்தியங் கொண்டதுபோல இருக்கிறது. என்னுடைய உடம்பு சோர்ந்து தள்ளாடுகிறது. உயிர் தத்தளிக்கிறது. நான் உடனே படுத்துப் பொழுது விடியும் வரையில் தூங்கி எழுந்தால்தான், என் உயிர் உடம்பில் நிலைக்கும் போலிருக்கிறது; அதுவுமன்றி, நான் ஆடையில்லாமல் இருக்கும் இந்த அசந்தர்ப்ப வேளையில், அன்னிய புருஷராகிய நீர் வந்ததால், என் உடம்பில் ஒருவித நடுக்கமும் உதறலும் உண்டாகிவிட்டன. மனசிலும் பெருத்த திகில் பிடித்துக்கொண்டது. அதனாலும், எனக்கு நாவறண்டு போய், ஒருவித மயக்கமும் கிருகிருப்பும் உண்டாவதாலும், தயை செய்து நீர் என்னைவிட்டு வெளியில் போவீரானால் உமக்கு நிரம்பவும் புண்ணியமுண்டு. உம்மை நான் என்னுடைய சொந்தத் தமையனாகப் பாவிக்கிறேன். ஆகையால், நான் உம்முடைய காலில் விழுந்துகூடக் கும்பிடத் தடையில்லை. என்னை மேலும் வதைக்காமல் போவீரானால், நீர் நன்றாக இருப்பீர்; உம்முடைய பெண்டு பிள்ளைகளெல்லாம் அமோகமாக வாழும்'' என்று முற்றிலும் உருக்கமாகக் கூறி நிரம்பவும் பணிவாகக் கேட்டுக்கொண்டாள். அவள் எடுத்துக்கூறிய நியாயங்கள் முரட்டு மனிதனான கட்டாரித் தேவனது மனதில் சிறிதும் பட்டதாகத் தோன்றவில்லை.

அவளிடம் தான் மேன்மேலும் பேசிக்கொண்டே போனால், அந்த சம்பாஷணை முடிவுபெறாமல் வளர்ந்துகொண்டே போகுமென்று நினைத்தவனாய், ''சரி; உன்னோடு வாக்குவாதம் செய்து கொண்டிருப்பதற்காக நான் இங்கே வரவில்லை. அப்படி வாக்கு வாதம் செய்து பொழுதை வளர்க்கவும் என் மனநிலைமை இடங் கொடுக்கவில்லை. மயிலே மயிலே என்றால் அது இறகு போடாது. பலாத்காரத்துக்கு மிஞ்சின மருந்தே கிடையாது. ஆகையால் நான் அதைத்தான் இனி பிரயோகிக்க வேண்டும்'' என்று கூறிய வண்ணம், அவள் மறைந்திருந்த பூத்தொட்டியை நோக்கி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, அவளைத் தாவிப் பிடிக்க எத்தனித்தான்.

அவனது மூர்க்கமான வார்த்தையையும், பிடிவாதமான தீர்மானத்தையும் உணர்ந்த லீலாவதி இன்னது செய்வதென்பதை அறியாமல் பதறிப்போய், ''ஐயோ! அப்பா!'' என்று ஓங்கிக் கூச்சலிட்டுக்கொண்டு அவ்விடத்தைவிட்டு ஆணிகளின் போர்வைகள் மாட்டப்பட்டிருந்த இடத்திற்கு ஓடி, காஷ்மீர் சால்வையை இழுத்துத் தன் மேல் போட்டு ஒருவாறு மறைத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு அப்பால் ஓடத் தலைப்பட்டாள். இடையிடையில் நாற்காலிகளும், சோபாக்களும், மேஜைகளும், பூத்தொட்டிகளும் இருந்த மையால், அவற்றின் மறைவுகளில் போனபடி, கட்டாரித் தேவனது கையில் பிடிபடாமல் அங்குமிங்கும் பாய்ந்து, மான்போலத் துள்ளிக் குதித்துப் பெருங்கூக்குரல் செய்யலானாள். கட்டாரித்தேவன் அவ்விடத்திற்கு வந்தபோது மாளிகையில் அதிக ஆட்கள் இல்லை என்று உணர்ந்துகொண்டு தைரியமடைந்து அன்றையதினம் எப்படியும் அவளைக் கற்பழிக்க வேண்டுமென்று உறுதிசெய்து கொண்டிருந்தவன் ஆதலால், அவள் செய்த பேரிரைச்சலைக்கண்டு சிறிதும் அஞ்சாமல் பாய்ந்து பாய்ந்து அவளைத் துரத்தத் தொடங்கினான். அவ்விடத்தில் மேலே கூறப்பட்ட சாமான்கள் குறுக்கிடாது

இருப்பின், அவன் ஒரு க்ஷணநேரத்தில் அவளைப் பிடித்திருப்பான். மேற்படி சாமான்கள் குறுக்கிட்டமையாலும், அவள் அவற்றிற்கப்பால் போய் மறைந்து மறைந்து ஓடினாள் ஆதலால், அவன் அவளிடம் நெருங்க சாத்தியமில்லாமல் இருந்தது. ஆகவே, சிறிது நேரத்தில் அவனது உக்கிரமும் ஆவேசமும் பன்மடங்கு அதிகரித்தன. அவன் மேஜைகளின் மேலும், பூத்தொட்டிகளின் மேலும் தலைகால் தெரியாமல் பாய்ந்து அவைகளைப் புரட்டிக் கவிழ்த்து அவளிடம் நேராகப் போய்ச்சேர எத்தனிக்க, அவள் முன்னிலும் பதினாயிர மடங்கு அதிக விசையோடு அம்பு பாய்வதுபோல அங்குமிங்கும் பாய்ந்து, ரதிகேளிவிலாஸம் இருந்த பக்கமாகப் போய், அவ்விடத்திலிருந்த கண்ணாடிக் கதவைத் திறந்துகொண்டு அதற்குள் புகுந்து கதவை மூடி அப்புறம் தாளிட்டுக்கொள்ள அதைக் கண்ட கட்டாரித்தேவன் கடுங்கோபமடைந்து, அந்தக் கதவண்டை போய் தனது கையை முஷ்டியாகச் செய்து கொண்டு ஓங்கி அந்தக் கதவில் ஒரு குத்துக் குத்தவே, அது சுக்கல் சுக்கலாக உடைந்து கலகலவென்று கீழே கொட்டிப் போய்விட்டது. அவன் அதைக் கடந்து ரதிகேளி விலாஸத்திற்குள்ளும் லீலாவதியைத் தொடர்ந்து ஓட, அவள், "அப்பா! அப்பா! நேற்று வந்து என்னைத் தூக்கிக் கொண்டு போன திருடன் மறுபடி வந்திருக்கிறான்! அப்பா! எழுந்திருங்கள்" என்று கூச்சலிட்டுக் கொண்டு முன்னால் ஓட, அந்தக் கூக்குரலைக் கேட்டு திடுக்கிட்டு விழித்துக்கொண்ட மருங்காபுரி ஜெமீந்தார் உண்மையை ஒரு க்ஷணத்தில் யூகித்துக்கொண்டு, "யாரடா அது? யாரடா அது? நில் நில்; அந்தக் குழந்தையை ஒன்றும் செய்யாதே" என்று அதட்டிக்கொண்டு சடேரென்று கட்டிலை விட்டுக் கீழே குதித்துக் கட்டாரித்தேவனிடம் வந்து அவனது கையைப் பிடித்துக் கொண்டார். இரண்டொரு கஜதூரத்திற்கு அப்பால் ஓடிய லீலாவதி சகிக்க இயலாத அபாரமான கிலியினாலும் நடுக்கத்தினாலும் மேற்கொள்ளப் பட்டவளாய் மூர்ச்சித்து வேரற்ற மரம்போல அப்படியே தரையில்

படேரென்று வீழ்ந்து விட்டாள். அதைக் கண்ட ஜெமீந்தார் பதறிப்போய், "அடே கொலைபாதகா! அநியாயமாக என்னுடைய பெண்ணைக் கொன்றுவிட்டாயடா படுபாவி! நேற்றையதினம் வந்து நீ செய்த அட்டூழியம் போதாதென்று இன்றைய தினமும் திரும்பி இங்கே வந்தாயா?" என்றார்.

அவரது வார்த்தைகளைக் கேட்ட கட்டாரித்தேவன் ஏளனமாகப் புன்னகை செய்து, "ஆமையா! நீரும் நானும் பழைய சிநேகிதர்களல்லவா? உம்முடைய வீட்டுக்கு நான் எத்தனை தரம் வந்தாலும் அது குற்றமாகுமா?" என்றான்.

அதைக்கேட்ட ஜெமீந்தார் அளவற்ற கோபம்கொண்டவராய், "அடே திருட்டுநாயே! யாரைப்பார்த்து இப்படிப்பட்ட வார்த்தைகள் சொல்லுகிறாய்! நீ கேவலம் வழிப்பறி நடத்தும் திருடன். நீயும் நானும் சிநேகமாவதாடா?" என்றார்.

உடனே கட்டாரித்தேவன் முன்னிலும் அதிக ஏளனமாக நகைத்து, "எஜமானருக்கு ஏழைமேல் இவ்வளவு கோபம் உண்டாகக் காரணமென்ன? உங்களுடைய ரகசியங்களெல்லாம் அடங்கிய நோட்டுப் புஸ்தகத்தை இழந்து நீங்கள் தவித்தபோது, உங்களுக்கு உதவி செய்தது, இந்தத் திருட்டு நாயல்லவா? நீங்களும் இளவரசரும் அம்மன்பேட்டைக்குப் போய்த் திரும்பி வந்த காலத்தில் உங்களை வழிமறித்துக் கொண்டுபோனது நாங்கள்தான். ஆனாலும், உங்களை அப்படிக் கொண்டுவரச் சொன்னது உங்களுடைய மருமகப் பிள்ளையும் மகளுமேயன்றி, அதை நாங்களே செய்யவில்லை. அதன்பிறகு நோட்டுப் புஸ்தகத்தை இவ்விடத்தில் கொண்டுவந்து சேர்த்ததும் உங்கள் மகளே. அப்படியிருக்க வழிப்பறி செய்த திருட்டு நாய் இன்னார் என்பதை நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள். அதைத்தவிர இன்னும் எத்தனையோ விஷயங்களில் உங்கள் மருமகப் பிள்ளைக்கும், மகளுக்கும் நான் உதவி செய்திருக்கிறேன். அவர்கள் செய்த ஒரு பெருத்த கொலையை மறைத்து பிணத்தைப் புதைக்கும் விஷயத்தில் நான் எவ்வளவோ

பாடுபட்டிருக்கிறேன். உமக்கு வயசு தொண்ணூறுக்குமேல் ஆகிவிட்டது. பல்லும்போய் பவிஷுºம் போய்விட்டது. தட்டிவிட்டால் எட்டிடத்தில் குட்டிக்கரணம் போடக்கூடிய நிலைமையிலுள்ள குடுகுடு கிழவரான நீர் யௌவனக் குமரிகளாகப் பார்த்துப் பிடித்து இந்த இடத்தில் கொண்டு வந்து வைத்து விசைவைத்த நாற்காலியில் மாட்டி பலாத்காரம் செய்கிறீர்; யோசித்துப் பார்த்தால், நீங்கள் செய்யாத அக்கிரமம் ஒன்று கூட பாக்கியில்லை என்றே சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட துன்மார்க்கரான நீங்கள் என்னைப் பார்த்துத் திருடனென்றும் நாயென்றும் சொல்ல, உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?'' என்றான்.

அதைக்கேட்ட ஜெமீந்தார் வெட்கிப்போய் உடனே தணிவடைந்து நயமாகப் பேசத்தொடங்கி, ''அப்பா! கோபித்துக் கொள்ளாதே; தூக்கக் கலக்கத்தில் நீ இன்னான் என்பதை அறியாமல் பேசிவிட்டேன். நீ என் மருமகன் விஷயத்தில் எத்தனையோ உதவிகள் செய்தவன் என்று என் மகள் சொல்ல நான் கேள்வியுற்றிருக்கிறேன். நேற்றைய தினம் காலையில் நீ இங்கே வந்து என் மகளிடம் பேசிய விவரத்தையும் அவள் என்னிடம் இன்று சாயுங்காலந்தான் வெளியிட்டாள். நேற்று ராத்திரி இங்கே வந்து என்னுடைய திரவியங்களையும் இந்தப்பெண்ணையும் எடுத்துப்போனதும் நீதான் என்பதையும் நான் தெரிந்து கொண்டேன். இதுவரையில் எங்களுக்கு எத்தனையோ உதவிகள் செய்த மனிதனான நீயே கடைசியில் எங்கள் விஷயத்தில் இப்படிப்பட்ட கொடுமைகள் செய்வது கொஞ்சமும் நியாயமா என்பதை நீயே எண்ணிப் பார். என்னைக் கேட்டால், நான் உனக்குத் தேவையான எவ்வளவோ பொருள் கொடுத்திருப்பேன். இப்போதும் ஒன்றும் முழுகிப் போய்விடவில்லை. நடந்தது நடந்துவிட்டது. உன்னிடத்தில் நான் வர்மம் பாராட்டமாட்டேன். இந்த ஊர் இளவரசருக்கும் எனக்கும் அந்தரங்கமான சிநேகிதமுண்டு. நான் எந்த விஷயம்

கேட்டுக் கொண்டாலும், அவர் அதை மறுக்கவே மாட்டார். அவரிடத்திலும், அந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டரிடத்திலும் உனக்கு எப்படிப்பட்ட முக்கியமான காரியம் ஆக வேண்டு மானாலும், அதை நான் முடித்துத் தருகிறேன். நீ கவலைப்பட வேண்டாம். வா, நாம் அந்தப் பக்கத்திலுள்ள என்னுடைய வெல்வெட்டு மாடத்துக்குப் போவோம். அங்கே போனவுடன் நீ எனக்கு ஆகவேண்டிய சங்கதிகளைச் சொன்னால், அதை நானே நிறைவேற்றிக் கொடுக்கிறேன்'' என்று நயமாகக் கூறினார்.

அதைக் கேட்ட கட்டாரித்தேவன், ''ஐயா! உங்களுடைய மகள் அதோ விழுந்து கிடக்கிறாள். அவளை விட்டுப் பிரிந்துவர என் மனம் இணங்கவில்லை. ஆகையால், அவளிடம் போய்ப் பார்த்து அவளை எழுந்திருக்கச் செய்தபின் நாம் தனிமையாய்ப் பேசலாம்'' என்றான்.

ஜெமீந்தார், ''அப்பா! அவள் உன்னைக் கண்டு பயந்து கொண்டு படுத்திருக்கிறாள். அதுவுமன்றி, அவளுடைய உடம்பிலும் ஆடையில்லாமல், அலங்கோலமாக இருக்கிறது. இந்த நிலைமையில் நாம் அவளுக்குச் சமீபத்தில் போவது ஒழுங்கல்ல. தவிர நீ அவளிடம் மறுபடி போனால் அவளுடைய பயம் அதிகரிக்கும். ஆகையால் நாம் அடுத்த அறைக்குப் போவோம். அவ்விடத்திலிருந்து யாரையாவது வேலைக் காரியை வரவழைத்து இங்கே அனுப்பலாம்'' என்று நயமாக வற்புறுத்திக் கூறினார்.

அதைக்கேட்ட கட்டாரித்தேவன் அதற்குமேல் ஒன்றும் சொல்லமாட்டாதவனாய், அவரது விருப்பத்திற்கு இணங்கி னான். இருவரும் அவ்விடத்தை விட்டு வெல்வெட்டு மாடத்திற்குப் போய்ச் சேர்ந்தனர்.

அவ்வாறு அவர்கள் சென்ற காலத்திற்குள் ஜெமீந்தார் தமக்குள் சிந்தனை செய்து, 'இந்த ராக்ஷசன் எப்போது ஒரு

தடவை துணிவு கொண்டுவிட்டானோ, இனி இவன் சும்மா இருக்கமாட்டான். இவன் அடிக்கடி வந்து கொண்டுதான் இருப்பான். இவன் நம்முடைய சொத்துக்களைக் கொண்டு போவதோடு நின்றிருந்தால் பாதகமில்லை. இவன் லீலாவதியின்மேல் துர் எண்ணங் கொண்டிருப்பது நிச்சயமாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட துர்மோகம் கொண்டுள்ள இவன் இனி ஒருநாளும் அடங்கிப் போகமாட்டான். இவனுடைய மனம் பலவிதமான துஷ்கிருத்தியங்கள் செய்யும்படி இவனைத் தூண்டிக் கொண்டுதான் இருக்கும். இவன் மகா துஷ்டன் ஆகையால், இவன் லீலாவதியை எப்படியும் மறுபடி அபகரித்துக் கொண்டு போய்க் கெடுத்து அழித்து விடுவது நிச்சயம். ஆகையால், அதற்கெல்லாம் இடங்கொடுக்காமல், இவனை எப்படியாவது நான் இன்றோடு ஒழித்து விடுவதே நல்லது. இவனை இனி உயிரோடு விட்டால், நானும் லீலாவதியும் இனி கவலையின்றி இருக்கவே முடியாது. இவனை நான் கொன்றால் அதைப்பற்றி என்மேல் எவ்விதத் தவறும் ஏற்படப் போகிறதில்லை. நடு ராத்திரியில் வீட்டுக்குள் வந்திருக்கும் திருடனை நாம் நம்முடைய பாதுகாப்பைக் கருதி கொல்வது சட்டப்படி குற்றமாகாது. ஆகையால், நான் ஒரு தந்திரம் செய்கிறேன்' என்று தமக்குள் யோசித்து ஒருவித முடிவிற்கு வந்தவராய், அவனோடு வெல்வெட்டு மாடத்திற்கு வந்து சேர்ந்தார். சேர்ந்தவர் அவனை நோக்கி, ''அப்பா! நீ இவ்விடத்திலேயே கொஞ்ச நேரம் உட்கார்ந்திரு. நான் கீழே போய் வேலைக்காரியை அழைத்துக்கொண்டு வருகிறேன். மூர்ச்சித்துக் கிடக்கும் என் மகளை யாராவது பெண்பிள்ளை முதலில் கவனித்து அவளுக்குரிய சிகிச்சை செய்து அவளைத் தெளியவைப்பது அவசரமான விஷயம். அதன்பிறகு நாம் மற்ற விஷயங்களை எல்லாம் பேசி முடிவு செய்வோம்'' என்றார்.

உடனே கட்டாரித்தேவன், ''ஐயா! நீர் கீழே போய், போலீஸ் ஸ்டேஷனுக்கு ஆளை அனுப்பி, ஜெவான்களை வரவழைத்தால்

நான் என்ன செய்கிறது? ஆகையால் என்னை இங்கே விட்டு விட்டு நீர் மாத்திரம் கீழே போக நான் இணங்கமாட்டேன்'' என்றான்.

ஜெமீந்தார், ''நிரம்பவும் அபாயகரமான இந்தச் சமயத்தில் நீ இப்படி இடைஞ்சல் செய்வது நியாயமல்ல. என் மகள் திடீரென்று கீழே விழுந்து கிடக்கிறாள். அவளுக்கு உயிர் இருக்கிறதோ போய் விட்டதோ என்பதுகூட சந்தேகமாக இருக்கிறது. இந்த அவசர வேளையில், நான் உடனே யாரையாவது உதவிக்கு அழைக்க வேண்டுமென்பது உமக்குத் தெரியாத விஷயமல்ல. வேலைக்காரர்களை அழைக்கும் மணியை அசைப்பதற்கு அதோ என் மேஜையண்டை ஒரு விசை இருக்கிறது. அதை நான் அழுத்தினால், கீழே வேலைக்காரர்கள் படுத்திருக்கும் அறையிலுள்ள மணி கிணுகிணென்று அடித்துக்கொள்ளும்! ஆனால் இப்போது நடு ராத்திரி வேளை. ஆகையால் அவர்கள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பார்கள். இந்த மணியோசையைக் கேட்டு அவர்கள் விழித்துக் கொள்வார்களோ என்னவோ தெரியவில்லை. அதை உத்தேசித்துத்தான் நான் நேரிலேயே கீழே போகலாமென்று நினைத்ததே தவிர, நீ எண்ணுகிறபடி போலீஸாரை வரவழைப்பதற்கு அல்ல. இருந்தாலும் பாதகமில்லை. நீ சந்தேகப்படுகிறபடியால், நான் கீழே போகவில்லை. இங்கிருந்தபடி இந்த விசையை அழுத்துகிறேன்'' என்று கூறிய வண்ணம் மேஜையண்டை போனார்.

கட்டாரித்தேவன், ''ஆம், அதுதான் நல்ல யோசனை. ஆனால், நீர் இந்த நடுராத்திரியில் மணியை அசைக்கிறதி லிருந்து, இங்கே ஏதோ விபரீதம் நேர்ந்திருப்பதாக எண்ணிக் கொண்டு, வேலைக்காரர் பலர் ஒன்றுகூடி இங்கே வந்தாலும் வரலாம். என்னைப் பார்க்கும் போதே அவர்களுக்குச் சந்தேகம் உண்டாகிவிடும். நான் இந்த அகால வேளையில் இங்கே இருப்பதிலிருந்து என்னால் உங்களுக்கு ஏதாவது அபாயம்

நேர்ந்திருப்பதாக எண்ணிக்கொண்டு என்னைப் பிடித்துக் கொள்ளவும், என்னை உபத்திரவிக்கவும் முயலுவார்கள். ஆனால், அவர்கள் எத்தனைபேர் வந்தாலும், நான் அவர்களை எல்லாம் ஒரு நொடியில் தவிடுபொடி ஆக்கிவிடுவேன். அதற்காக நான் பயப்படவில்லை; இப்போது நிரம்பவும் அவசரமாக வேலைக்காரிகள் லீலாவதியைக் கவனித்து அவளுக்கு ஆகவேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டிய இந்த அவசர வேளையில் அவர்கள் இவ்விடத்தில் வீண் கலகம் விளைத்துக்கொண்டிருக்கப் போகிறார்களே என்று நினைக்கிறேன். வேறொன்றுமில்லை'' என்றான்.

ஜெமீந்தார் சிறிது நேரம் சிந்தனை செய்தபின், ''சரி, நீ சொல்வதும் சரியான சங்கதிதான். நீ ஒரு காரியம் செய், அதோ பக்கத்தில் தெரிகிறதே கட்டில், அவ்விடத்தில் போய் நீ மறைந்து கொண்டிரு; நான் விசையை அழுத்தி மணியை அடித்து வேலைக்காரியை அழைத்து, என் மகளிடம் அனுப்பிய பிறகு, நீ அவ்விடத்தை விட்டு இங்கே வரலாம்'' என்றார்.

அதைக் கேட்ட கட்டாரித்தேவன் அந்த ஏற்பாட்டை ஒப்புக்கொண்டு அவ்விடத்தை விட்டுப்போய், அவரால் காட்டப்பட்ட கட்டிலிற்கு அப்பால் மறைந்து கொண்டான்.

ஜெமீந்தார் தனது எண்ணம் எப்படியும் பலிதமடையும் என்று நினைத்து அப்போதே ஆனந்தமும் குதூகலமும் அடைந்தவராய்த் தமது மேஜையண்டை போய், அவ்விடத்திலிருந்த விசையை அழுத்துவதுபோலப் பாசாங்கு செய்து அதன் சொருகு பெட்டியை வெளியில் இழுத்து அதற்குள் இருந்த பிஸ்டல் என்ற பெயருடைய இரண்டு கைத் துப்பாக்கிகளை எடுத்து அதற்குள் தோட்டாக்கள் போடப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்துத் திருப்தி செய்து கொண்டவராய் வெளியில் தெரியாத படி, அவைகளைத் தமது மடியில் சொருகிக் கொண்டு, கால் நாழிகை சாவகாசம் அவ்விடத்திலேயே உட்கார்ந்திருந்தார்.

அவர் விசையை அழுத்திவிட்டு வேலைக்காரியின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று கட்டாரித் தேவன் எண்ணிக்கொண்டு மறைவில் இருந்தான். கால் நாழிகை நேரம் கழிந்தவுடனே, அவர் அவ்விடத்தை விட்டெழுந்து திருடன் ஒளிந்திருந்த கட்டிலை நோக்கி நடந்து, ''மணியை அசைத்தும், வேலைக்காரர்கள் யாரும் வரவில்லை. எல்லோரும் பலமாகத் தூங்குகிறார்கள் போலிருக்கிறது'' என்று கூறிக் கொண்டே திருடன் மறைந்திருந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார். கட்டாரித்தேவன் அவ்விடத்தில் கிடந்த வெல்வெட்டு ஸோபா ஒன்றின்மேல் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவனுக்கு எதிரில் போய்ச் சேர்ந்த மருங்காபுரி ஜெமீந்தார் அவனை நோக்கி, ''என்ன அப்பா! நாம் இவ்விடத்தில் காத்திருப்பதில் உபயோகமில்லை. வேலைக்காரர்கள் யாரும் வரவில்லை. என் மகள் இப்போது எப்படி இருக்கிறாளோ தெரியவில்லை. உன்னை நான் வெளியில் அனுப்பிவிட்டு பிறகு வேலைக்காரியிடம் நேரில் போய் தட்டி எழுப்பி அழைத்து வர வேண்டும். நான் அவசரமாகப் போக வேண்டும். உன்னுடைய சங்கதியை நீ சொல், உனக்கு என்னால் என்ன காரியம் ஆகவேண்டும்? சீக்கிரமாகச் சொல், பார்க்கலாம்'' என்று கூறிய வண்ணம் அவனுக்கு முன்னால் இரண்டு கஜ தூரத்தில் நின்றார். தாம் கைத்துப்பாக்கியை எடுத்து உபயோகித்தால் அந்தக் குறி தவறாமல் அவன்மேல் படக்கூடியதும், அவன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, அதை தட்டிவிடாமல் இருக்கக் கூடியதுமான சரியான இடத்தில் அவர் நின்று கொண்டு அவ்வாறு அவனிடம் பேச்சுக் கொடுத்தார்.

அவன் அவரை ஒரு திரணமாக மதித்து அலட்சியமாகப் பேசத் தொடங்கி, ''ஏன், நான் எல்லாச் சங்கதியையும் மறுபடி உம்மிடம் சொல்லவேண்டுமா? உம்முடைய பெண் எல்லாச் சங்கதியையும் இதுவரையிலும் உம்மிடம் சொல்லாமலா இருப்பாள்'' என்றான்.

ஜெமீந்தார், ''நானும் அவளும் இதுவரையில் அதிகமாய்ப் பேச சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. ஆகையால், அவள் எல்லா விஷயங்களையும் என்னிடம் வெளியிடவில்லை. உனக்கு என்னென்ன காரியங்கள் என்னால் ஆகவேண்டும் என்பதை நீயே சொல்லிவிடு. அதை நான் உடனே முடித்துத் தருகிறேன். நீ யோசிக்காமல் வெளியிடலாம்'' என்றார்.

ஜெமீந்தார், ''ஐயா! என்பேரில் பல வாரண்டுகள் பிறந்திருக்கின்றன. போலீசார் என்னைப் பிடிப்பதற்காக பற்பல இடங்களில் கண்ணி வைத்து பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறார்கள். என்றைக்காவது ஒருநாள் அவர்கள் என்னை எப்படியும் பிடித்துக்கொள்வது நிச்சயம். ஆகையால், நீ இளவரசரிடம் சிபாரிசு செய்து போலீசார் இனி என்னைத் தொடராமல் இருக்கும்படி செய்ய வேண்டும். அவர் பிறப்பிக்கும் உத்தரவில் ஒரு பிரதி எனக்கு ஆதரவாக என்னிடத்திலும் இருக்க வேண்டும்; இந்த விஷயத்தை நேற்றைய தினமே நான் உம்முடைய மகளிடம் கேட்டுக் கொண்டேன். அவள் அதற்குச் சரியான வாக்குறுதி செய்து கொடுக்கவில்லை. நீர் இளவரசரிடம் மன்னிப்பு வாங்கி நாளைய தினம் சாயுங்காலத்துக்குள் என்னிடம் சேர்ப்பிக்க வேண்டும்'' என்றான்.

ஜெமீந்தார் நிரம்பவும் வியப்படைந்தவர் போல நடித்து, ''ஓகோ! அப்படியா! இந்தச் சங்கதியை என் மகள் இதுவரையில் என்னிடம் தெரிவிக்கவே இல்லை. அது போகட்டும். உன் பெயரென்ன? நீ எங்கே இருப்பவன்? அந்த விவரமெல்லாம் நான் இளவரசரிடம் சொல்லி, இன்னானுக்கு மன்னிப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்கவேண்டுமல்லவா?'' என்றார்.

கட்டாரித்தேவன், ''வாஸ்தவந்தான். என் பெயர் கட்டாரித் தேவன் என்பது. என் ஊர் காசாநாடு. என்னுடைய புகழைப் பற்றி அறியாத மனிதரே இல்லை'' என்றான்.

ஜெமீந்தார் முன்னிலும் பன்மடங்கு அதிக பிரமிப்பும் ஆச்சரியமும் அடைந்தவராய், ''ஒகோ! நீதான் கட்டாரித் தேவனோ? உன்னைப்பற்றி நான் வெகுவாகக் கேள்வியுற்றி ருக்கிறேன். இப்பேர்ப்பட்ட செல்வாக்கும் திறமையும் வாய்ந்த மனிதனாகிய உன்னை நான் பகைத்துக் கொள்வது உசிதமல்ல. உன்னுடைய பிரியப்படியே நான் இளவரசரிடம் கேட்டு மன்னிப்பு வாங்கித் தருகிறேன். ஆனால் இன்னொரு விஷயம்! நீ இதுவரையில் எத்தனையோ கொள்ளைகளையும் கொலை களையும் நடத்தி இருக்கிறாயென்று ஜனங்களும் போலீசாரும் சொல்ல நான் கேள்வியுற்றிருக்கிறேன். அப்படியிருக்க, உன்னை இப்போது மன்னித்துவிட்டால் நீ மறுபடியும் உன் வேலையைச் செய்துகொண்டுதானே இருப்பாய். மறுபடியும் உன்மேல் வாரண்டு பிறந்து கொண்டுதானே இருக்கும். அடிக்கடி நான் உனக்காக மன்னிப்புக் கேட்பதென்றால்; இளவரசர் என் வார்த்தையை மதிப்பாரா?'' என்றார்.

கட்டாரித்தேவன், ''நான் இனி என் பழைய தொழிலை விட்டு விடுகிறதென்று தீர்மானித்துவிட்டேன். நேற்றைய தினம் இரவில் நீர் எனக்குச் சன்மானம் செய்த பெருத்த திரவியமே என் தலைமுறை தலைமுறைக்கும் போதுமானது. ஆகையால், இனி நான் திருட்டு முதலிய எதிலும் இறங்காமல் யோக்கியனாக நடந்துகொள்ளப் போகிறேன். இனி மறுபடியும் வந்து நான் உமக்கு எவ்விதத் தொந்தரவும் கொடுக்கமாட்டேன். என் வார்த்தையை நீர் உறுதியாக நம்பலாம்'' என்றான்.

ஜெமீந்தார், ''இவ்வளவுதானே உனக்கு ஆகவேண்டும். சரி; நான் இதை நாளைய தினமே முடித்துக்கொடுக்கிறேன். இவ்வளவோடு நீ இனி எங்கள் ஜோலிக்கே வராமலி ருப்பாயா?''

கட்டாரித்தேவன், ''இந்த ஒரு விஷயம் மாத்திரமல்ல. இன்னொரு விஷயமும் இருக்கிறது. அதையும் நீர் நிறைவேற்றி வைத்து விட்டால், நான் இனி உங்களுடைய ஜோலிக்கே

வருவதில்லை. நான் மகாராஜனைப் போல ஆனந்தமாக என் வாழ்நாளைக் கழிப்பதற்கு எனக்கு நீர் அபாரமான பொருளைக் கொடுத்தீர். நான் இதுவரையில் செய்த குற்றங்கள் என்னைத் தொடராமல், நான் நிம்மதியாய் இருக்க, நீர் மன்னிப்பும் வாங்கிக்கொடுக்கிறீர். இவைகள் மாத்திரம் இருந்தால், அது போதுமா? என்னோடுகூட இருந்து இந்தப்பொருளை எல்லாம் அனுபவிக்க அழகான ஒரு பெண்ஜாதியையும் நான் சம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்பது என்னுடைய அவா. நேற்று நான் உம்முடைய மகளை என் வீட்டுக்குக் கொண்டு போயிருந்த காலத்தில், அவள் இனி எப்போதும் என்னோடு கூடவே எனக்குப் பெண் ஜாதியாக இருக்கப் பிரியப்படுவதாகச் சொல்லி வாக்குக் கொடுத்தாள். அதைக் கேட்டபிறகு என் மனசில் அடக்கமுடியாத ஒருவித ஆசை உண்டாக்கிய அந்தப் பெண் திருட்டுத்தனமாக வீட்டைவிட்டு ஓடி வந்துவிட்டாள். இவளை எப்படியாவது அழைத்துக்கொண்டு போய், இவள் சொன்ன வாக்குறுதிப்படி நடந்துகொள்ளச் செய்ய வேண்டுமென்பது என்னுடைய தீர்மானம். அதற்காகவே நான் இப்போது இங்கே வந்தேன். வந்து கூப்பிட்டால், இவள் இல்லாத ஆட்சேபனைகளை எல்லாம் சொல்லி மறுக்கிறாள். தான் என்னிடமிருப்பதாக இவள் வாக்குறுதி செய்து கொடுத்த பிறகு, அந்த மாதிரி நடக்கத் தவறலாமா? அப்படித் தவறினால் நான் விட்டுவிட முடியுமா? ஆகையால் நீர் இவளுக்குப் புத்திமதி சொல்லி, இவளையும் என்னோடுகூட அனுப்பிவிடவேண்டும். இதுதான் இரண்டாவது காரியம். இவ்வளவுதான் நீர் செய்ய வேண்டியது. இதற்குமேல் வேறே எதுவும் தேவையில்லை. ஒழுங்காக நீரே இந்தப் பெண்ணை என்னோடு அனுப்பிவைக்கா விட்டால், அவள் என் வலையிலிருந்து ஒருநாளும் தப்ப முடியாது. நான் எப்படியும் அவளை அபகரித்துக்கொண்டு போவது நிச்சயம். ஆகையால் அவள் தடியடி பெறாமல், தானாகவே கனிந்து வரும்படி செய்வீரென்று நம்புகிறேன்'' என்றான்.

அவனது அயோக்யமான சொற்களைக் கேட்டவுடனே ஜெமீந்தாரின் மனதில் அபாரமான கோபம் பொங்கி எழுந்தது. அவரது முகம் விகாரத்தோற்றம் அடைந்தது. அவர் நிரம்பவும் மூர்க்கமாகவும் குரூரமாகவும் அவனைப் பார்த்து, "அடே அயோக்கிய நாயே! என்னுடைய காலில் மிதிப்பதற்கும் அருகமற்ற கேவலமான ஒரு புழுவுக்குச் சமானமான நீ என்னைப் பார்த்து என்ன வார்த்தை சொல்லுகிறாய்? உனக்கு அவ்வளவு திமிரா? உன்னிடம் முரட்டு பலம் அதிகமாக இருக்கிறதென்கிற தைரியத்தினால், நீ எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்றும், எதை வேண்டுமானாலும் சொல்லலாம் என்றும் நினைத்துக் கொண்டாயா? நேற்றைய தினம் வந்தால் உனக்குச் சம்பந்தமில்லாத விஷயத்தில் தலையிட்டு என்னைத் தூக்கி நாற்காலியில் மாட்டி, நான் நேற்றுமுதல் இன்று பகல் வரையில் அதிலிருந்து நரகவேதனை அடையும்படி செய்தாய். எத்தனையோ வருஷகாலமாக நான் சேர்த்துவைத்திருந்த கோடிக் கணக்கான என்னுடைய திரவியத்தை எல்லாம் கொஞ்சமும் மனம் கூசாமல் இலேசாக எடுத்துக்கொண்டு போனாய். அதோடு ஒழியாமல், என்னுடைய மகளையும் கட்டி பலவந்த மாகத் தூக்கிக்கொண்டு போய், அவளிடம் தகாத சொற்களை எல்லாம் உபயோகித்து அவளைத் துராகிருதம் செய்ய எத்தனித்தாய். அவள் ஏதோ தெய்வச்செயலால் தப்பித்துக் கொண்டு வந்தால், நீ மறுபடியும் திரும்பி வந்து, அவளை ஏதோ உபத்திரவித்திருப்பதாகத் தெரிகிறது. இப்போது நீ கொஞ்சமும் அச்சமில்லாமல் என்னிடத்திலேயே இப்படிப் பட்ட துணிச்ச லான பிரஸ்தாபத்தைச் செய்கிறாயா? அடே! துஷ்டப் பதரே! உன் யோக்கியதை என்ன! நீ பேசும் வார்த்தை என்ன! இதோடு ஒழிந்து போ நாயே!" என்று ஆத்திரத்தோடு கூறியவண்ணம் தமது இடையில் சொருகப்பட்டிருந்த கைத்துப்பாக்கிகள் இரண்டையும் சடக்கென்று வெளியில் இழுத்து வலக்கரத்தில் ஒன்றையும் இடக்கரத்தில் ஒன்றையும் பிடித்துக்கொண்டு கட்டாரித்தேவனுடைய மார்பிற்கு இலக்குப்

பார்த்து வலது கையிலிருந்த துப்பாக்கியின் விசையை அழுத்திச் சுட்டு விட்டார். கட்டாரித்தேவன் அதை வெகு சீக்கிரத்தில் உணர்ந்து சடேரென்று உட்கார்ந்து கொண்டான். ஆதலால், அந்தத் துப்பாக்கியிலிருந்து வெளிப்பட்ட தோட்டா அவனது தலையின் உச்சியை வருடிக்கொண்டுபோய் பக்கத்திலிருந்த சுவரில் பட்டது. ஜெமீந்தார் இன்னொரு துப்பாக்கியை உபயோகிப்ப தற்குமுன், கட்டாரித்தேவன் மின்னல் தோன்றி மறையும் நேரத்தில் புலிபோல ஒரே பாய்ச்சலாகக் கிழவர் மீது பாய்ந்து அவரது இடதுகையிலிருந்த பிஸ்டலைப் பிடுங்கித் தனது கையில் வைத்துக்கொண்டு அவரது காலை எற்றிவிட, அவர் வேரற்ற மரம்போலப் படேரென்று தரையில் விழுந்தார். உடனே கட்டாரித்தேவன் அவர் கூச்சலிடாமலிருக்கும்படி கையை வைத்து அவரது வாயைப்பிடித்து கெட்டியாக அழுத்திக் கொண்டு, அவரிடமிருந்த இன்னொரு பிஸ்டலையும் பிடுங்கிக் கொண்டான். அவர் சுட்டது, அவனது தலையில் உராய்ந்து கொண்டு போனதனால், காயம் ஏற்பட்டு அதிலிருந்து ரத்தம் பொங்கி அவனது முகத்தில் வழிந்தது. அதனால் உண்டான எரிச்சலும் வேதனையும் அவனது கோபத்தையும் மூர்க்கத்தை யும் பன்மடங்கு அதிகரிக்கச் செய்தன. அவன் கோபங்கொண்ட சிங்கம்போல மாறி அவரை நோக்கி, ''கிழட்டுப் பிணமே! மணியை அடிக்கிறதாகச் சொல்லிவிட்டு, துப்பாக்கிகளையா எடுத்துக்கொண்டு வந்தாய்! ஓகோ! என்னைச் சுட்டு கொன்றுவிடவா நினைத்து இங்கே வந்தாய், நல்ல காரியம் செய்தாய்; என்னை யாரென்று நினைத்துக் கொண்டாய்! எப்பேர்ப்பட்ட திடசாலிகளெல்லாம் என்னை எதிர்த்து நிற்க மாட்டாமல் பயந்து ஓடுவார்களே! அப்படியிருக்க, ஒரு சுண்டு சுண்டினால் ஒன்பதுகாத தூரத்தில் போய் விழக்கூடிய பதரிலும் கேவலம் பதரான நீயா என்னைக் கொல்ல எத்தனிப்பது? இதோ ஒரு நொடியில் நான் உன்னைக்கொன்று போட்டுவிடுகிறேன். உன்னால் என்ன ஆகுமென்று பார்த்துக்கொண்டாய்? இருக்கட்டும். உனக்கு நான் சரியான வழி சொல்லுகிறேன்.

உன்னை இப்படி தண்டிக்கக் கூடாது. வேறே விதமாக நான் உனக்குத் தக்க தண்டனை நடத்தி வைக்கிறேன். என்னை யல்லவா நீ கொல்லப் பார்த்தாய். உன்னை நான் இன்றோடு ஒழித்து விடுகிறேன். நம்ப வைத்துக் கழுத்தை அறுக்கும் இப்படிப்பட்ட வஞ்சகனாகிய உன்னை நான் உயிரோடு வைத்தால் நீ எப்படியும் எனக்கு உலை வைத்துவிடுவாய்'' என்று கூறியவண்ணம், ஜெமீந்தாரின் மேலிருந்த ஒரு வஸ்திரத்தை எடுத்து அவரது கழுத்தில் போட்டு இறுகக்கட்டி அதைப் பிடித்து அவரைப் பரபரவென்று தரையில் போட்டுத் தாறுமாறாக இழுத்துக் கொண்டு பக்கத்திலிருந்த ரதிகேளி விலாஸத்திற்குள் சென்றான்; சென்றவன் சிறிது தூரத்தில் கிடந்த லீலாவதியை உற்று நோக்கினான். முதலில் தலையைத் தூக்கிப் பார்த்த லீலாவதி, அவன் கிழவரை இழுத்துக்கொண்டு வந்ததைக் கண்டு மறுபடி தலையைக் கீழே போட்டுக்கொண்டு பிணம் போலக் கிடந்ததை அவன் கவனித்தான்.

அவ்வாறு அவ்விடம் சென்றவன் ஜெமீந்தாரைத் தூக்கி பக்கத்திலிருந்த விசைவைத்த நாற்காலியில் எறிய, எதைக் கொண்டு அவர் எண்ணிறந்த மனிதர்களைச் சித்திரவதைக்கு ஆளாக்கினாரோ, அதே துஷ்ட நாற்காலி அவரை மறுபடியும் இறுகப் பிடித்துக்கொண்டது.

தாம் அவனை எப்படியும் சுட்டுக்கொன்று விடலாம் என்று ஜெமீந்தார் நினைத்த எண்ணம் நிறைவேறாமல் போனதன்றி, தான் அந்த முரடனுடைய பெரும் பகைக்கும் கோபத்திற்கும் இலக்காகிப் போனதைக் கண்டு அவன் தமக்கு எப்படிப்பட்ட தீங்கிழைப்பானோ, அல்லது தம்மைக் கொன்றுவிடுவானோ என்று நினைத்த ஜெமீந்தார் பெருந்திகிலும், பிரமிப்பும், கலக்கமும் அடைந்து தாம் என்னசெய்வது என்பதையாவது என்ன பேசுவது என்பதையாவது உணர்ந்துகொள்ள மாட்டாதவராய்க் குன்றி அப்படியே உட்கார்ந்து போனார். தாம் அவனைச் சுட்டதும், அவன் தப்பித்துக் கொண்டு மீது

பாய்ந்து தம்மைத் தூக்கிக்கொண்டு வந்து விசை வைத்த நாற்காலியில் போட்டு மாட்டியதும் சொப்பனக் காட்சிபோல வெகு துரிதத்தில் நிகழ்ந்தன. ஆதலால், அதுவரையில் மௌனம் சாதித்த ஜெமீன்தார் அவன் தம்மை நாற்காலியில் மாட்டியதி லிருந்து, அவன் தம்மை உடனே கொல்ல உத்தேசிக்க வில்லை யென்று யூகித்துக் கொண்டார். ஆனாலும், தாம் அந்த நாற்காலி யில் இருக்கையில் தமக்கு அவன் ஏதேனும் தீங்கு இழைப்பானோ என்றும், அநாதையாகக் கிடக்கும் லீலாவதியை அவன் எவ்விதமான கொடுமைக்கு உள்படுத்துவானோ என்றும் சந்தேகித்துப் பெரிதும் அச்சம்கொண்டு, நிரம்பவும் இறைஞ்சிய பார்வையாக அவனது முகத்தை உற்று நோக்கினார். அந்த இடத்தில் அற்பபிரகாசமுடைய ஒருவிளக்கு மாத்திரம் எரிந்து கொண்டிருந்தது. அதன் மங்கலான வெளிச்சத்தில், கட்டாரித் தேவனுடைய முகத்தின் விகாரத்தோற்றம் பன்மடங்கு அதிகரித்துப் பரம விகாரமாகத் தோன்றியது. தான், அவரது சதியாலோசனை பலிதமடையாமல் செய்துவிட்டதைப் பற்றி அபாரமான களிப்பும், தான் எப்படியும் பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்ற ஆக்ரோஷமும் அவன் கொண்டிருந்ததை அவனது முகம் நன்றாகக் காண்பித்தது. தாம் இறைஞ்சிய பார்வையாக அவனைப் பார்க்கப் பார்க்க அவனது ஆத்திரம் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்துத்தோன்றியதே அன்றி, அவன் தமது விஷயத்தில் சிறிதும் இரக்கம் காட்டுவான் என்ற குறிப்பே தோன்றவில்லை. இருந்தாலும், தாம் அவனை எப்படியாவது சமாதானப்படுத்தி, அந்தப்பெரிய அபாயத்தி லிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டவராய் நயமாகவும் பணிவாகவும் பேசத் தொடங்கி, ‘‘அப்பா! கட்டாரீ! நான் உன் விஷயத்தில் பெரிய தவறு செய்துவிட்டேன். கோபித்துக்கொள்ளாதே. இந்த விஷயத்தில் நீ எவ்விதமான அபராதம் விதித்தாலும் நான் அதைக் கொடுத்து உன் மனம் சந்தோஷம் அடையும்படி செய்கிறேன். நீ முதலில் சொன்னபடி நாமிருவரும் இனி சிநேகிதர்கள் ஆகிவிடுவோம்.

உன் விஷயத்தில் இனி நான் யாதொரு தீங்கும் நினைப்பதில்லை என்று நான் பிரமாணிக்கம் செய்து கொடுக்கிறேன்; அதுவுமன்றி, நீ கேட்டுக்கொண்டபடி இளவரசருடைய மன்னிப்பையும் பெற்றுத் தருகிறேன். அதோடு உனக்கு இன்னமும் பணத்தின் மேல் ஆசையிருந்தால் கூட, அதையும் வெளிப்படுத்து. பதினாயிரமல்ல, லக்ஷமல்ல நீ எவ்வளவு பெரிய தொகை கேட்பதனாலும், அதை நான் கூடிய சீக்கிரம் சேகரம் செய்து கொடுக்கத் தடையில்லை'' என்றார்.

அதைக் கேட்ட கட்டாரித்தேவன் நிரம்பவும் பயங்கரமாகக் கோப நகை நகைத்து, ''ஆஹா! கிழவா! நீ மகா கெட்டிக்காரன்! செத்தால் பிழைக்கமாட்டாய். கொஞ்ச நேரத்துக்குமுன் இதுமாதிரியே ஆசை வார்த்தை சொல்லி, என்னை அழைத்துக்கொண்டு போய்த் துப்பாக்கியால் சுட்டு என்னைக் கொல்ல நினைத்த மோசக்கார நாயாகிய உன்னை, இனிநான் மறுபடியும் நம்புவேனென்று எண்ணிக்கொண்டாயா? அது ஒருநாளும் பலியாது தாத்தா! நீ இவ்விடத்திலேயே இருந்து உன்னுடைய உயிரை விட வேண்டியவனே. உன்னை நான் இனி உயிரோடிருக்கவிட்டால், நீ எப்படியும் என் தலைக்குப் பாக்கு பிடித்துவிடுவாய் என்பதை நான் நிச்சயமாக அறிவேன். ஆகையால் இனி நான் உன்னிடமிருந்து எவ்விதத் தயவையும் நாடவில்லை. நீ உன்னுடைய உயிரை விடுவதற்கு ஆயத்தம் ஆக வேண்டியதைத் தவிர நீ செய்யக்கூடியது வேறே எதுவுமில்லை'' என்று உறுதியாகக் கூறினான்.

அதைக்கேட்ட ஜெமீந்தார் மறுபடியும் மனத்தளர்வும் பெரும் பீதியும் அடைந்தவராய் முன்னிலும் பன்மடங்கு அதிக நைவாகவும் பரிதாபகரமாகவும் கெஞ்சத் தொடங்கி, ''அப்பா! கட்டாரீ! கொஞ்ச நேரத்துக்குமுன் நான் ஆசை வார்த்தை சொல்லி மோசம் செய்துவிட்டேனென்று நினைப்பது சரியல்ல. நான் முதலில் சொன்ன வார்த்தை மனப்பூர்வமாகச் சொல்லப் பட்ட வார்த்தையே. ஆனால் நீ கடைசியில் என் மகளைப் பற்றித்

தகாத பிரஸ்தாபம் செய்வதைக் கேட்டவுடனே, என்னை மீறிக் கோபம் பிறந்தது. உடனே நான் துப்பாக்கியால் சுட்டுவிட்டேன். நான் உன்னைச் சுட்டுவிட வேண்டுமென்ற கருத்தோடு வந்திருந் தால், கட்டிலண்டை வந்தவுடனேயே நான் சுட்டுவிடலாம் அல்லவா. நான் கடைசிவரையில் பொறுத்திருந்து நீ அந்த ஆட்சேபகரமான வார்த்தையைச் சொன்னபிறகு தானே சுட்டேன்'' என்றார்.

கட்டாரித்தேவன், ''அப்படியானால் நீ துப்பாக்கியை எடுத்து வரவேண்டிய அவசியமே இல்லையே'' என்றான்.

ஜெமீந்தார், ''இல்லை இல்லை. நீ எனக்கு ஏதாவது கெடுதல் செய்வாயோ என்ற பயம் என் மனசில் இருந்துவந்தது. ஆகையால், தற்காப்பின் பொருட்டு நான் துப்பாக்கிகளை எடுத்து வந்தேனே அன்றி, உன்னைச் சுடவேண்டுமென்று எடுத்துவரவில்லை. நான் சொல்வது பிரமாணமான வார்த்தை. நீ அதை உண்மையென்று நம்பலாம். அதுவுமன்றி, இனி நான் என் ஆயிசுகால பரியந்தம் உன் ஜோலிக்கே வருவதில்லை என்று பிரமாணிக்கம் செய்து கொடுக்கிறேன். ஆகையால் நீ என்னைக் கொல்லாமல் விட்டுவிடு. அதுவுமன்றி, நான் சொன்ன வாக்குறுதிகளையும் தவறாமல் நிறைவேற்றி வைக்கிறேன்'' என்றார்.

கட்டாரித்தேவன், ''உன்னுடைய பிரமாணிக்கத்தைக் கொண்டு போய்க் குப்பையில் போடு. அது யாருக்கு வேண்டும். எனக்கு உன்னுடைய பொருளும் இனி தேவையில்லை. இளவரசருடைய மன்னிப்பும் தேவையில்லை. என்னிடம் இப்போதிருக்கும் பொருளே எனக்கு ஏழேழு தலை முறைக்கும் போதுமானது. நான் அதை எடுத்துக்கொண்டு இந்த ராஜ்ஜியத்தை விட்டு மைசூர் முதலிய வேறு தேசங்களுக்குப் போய்விடுகிறேன். எனக்கு இப்போது முக்கியமாக லீலாவதியே தேவை. அவளை நான் விடப் போகிறதே இல்லை. உன்னை உயிரோடுவிட்டால், நீ அவளை

என்னிடத்திலிருந்து அபகரித்துக்கொண்டு போவதற்கும், எனக்குக் கெடுதல் செய்வதற்கும் முயற்சிப்பாய். ஆகையால், உன்னை இன்றோடு தொலைத்துவிட்டால், அவள் நாதியற்றவளாய் இனி ஒருநாளும் என்னைவிட்டு எங்கேயும் போகமாட்டாள். ஆகையால் நீ இவ்விடத்திலேயே இரு. நீயும் உன்னுடைய மாளிகையும் இதிலுள்ள அற்புதமான அலங்காரப் பொருள்களும் அடியோடு சாம்பலாகப் போகக்கூடிய வழியை நான் வெகு சீக்கிரம் தேடுகிறேன். நீ இதுவரையில் செய்த அக்கிரமங்களும், பாபங்களும் இன்றோடு தொலையட்டும்'' என்று கூறிய வண்ணம் அவ்விடத்தைவிட்டு, சிறிது தூரத்தில் லீலாவதி மயங்கிக் கிடந்த இடத்திற்குப்போய், துணிகளால் அவளது கைகால்களைக் கட்டி, வாயில் துணியை வைத்து அடைத்து அவளைத் தூக்கித் தோளில் சார்த்திக்கொண்டு, அருகில் இருந்த விளக்கைக் கையிலெடுத்து அதன் கண்ணாடியை விலக்கி விட்டு, நாற்புறங்களிலிருந்த கட்டில்களி லிருந்த மெத்தைகள் தலையணைகள் முதலியவற்றில் பல இடங்களில் பற்ற வைத்துவிட்டு, அந்த விளக்கையும் லீலாவதியையும் எடுத்துக் கொண்டுபோய், வெல்வெட்டு மாடத்தில்,பல இடங்களில் நெருப்பைக் கொளுத்திவிட்டுக் கீழே இறங்கிப் போய், அடிக்கட்டிலும் பல இடங்களில் நெருப்பை வைத்துக் கொளுத்திவிட்டு விரைவாக வெளியில் போய்விட்டான்.

தாம் அருமையாகச் சேர்த்துவைத்திருந்த கொக்கோ லீலை மஞ்சங்களில் எல்லாம் அவன் நெருப்பு வைத்ததைக் கண்ட ஜெமீந்தார் சகிக்கவொண்ணாத பெருத்த திகிலும் கலக்கமும் அடைந்து பலவாறு கூச்சலிட்டுக் கதறிப் புலம்பிப் பரிதவித்து நிரம்பவும் நயமாகவும், பணிவாகவும் கட்டாரித்தேவனிடம் மன்றாடிப் பார்த்தார். அவன் அதைச் சிறிதும் காதில் வாங்காமல் மேலே குறித்தபடி தனது வேலையைச் செய்துவிட்டு வெளியில்போய்விட்டான். அவன் அந்த வீதியின் கடைசிக்குப்

போகுமுன் ஜெமீந்தாரினது மாளிகை முழுதும் ஒரே நெருப்புப் படலமாக நிறைந்து ஆகாயத்தை அளாவி எரித்தது. எங்கும் நெருப்பும், புகையுமே மயமாக மூடிக்கொண்டன. அண்டை வீட்டுக்காரர் எல்லோரும், ''நெருப்பு நெருப்பு'' என்று சமுத்திர கோஷம்போலப் பெருத்த ஆரவாரம் செய்துகொண்டு வெளிக் கிளம்பினர்.

## 42 - வது அதிகாரம்

## ரகஸியமான நண்பர்

கோலாப்பூர் சிறைச்சாலையில் அடைபட்டிருந்த நமது கலியாணசுந்தரத்தை ஒரு நாளிரவில் அவ்விடத்திலிருந்து வைத்தியசாலைக்கு அழைத்துக்கொண்டு போன காலத்தில், இடையிலிருந்த ஒரு பனந்தோப்பில் சில முரட்டு மனிதர்கள் திடீரென்று தோன்றி அந்த வண்டியை வளைத்துக் கொண்டு காசாரிகளையும், போலீஸ் சிப்பந்திகளையும் அடித்து வீழ்த்தியது முதலிய விவரம் முன்னரே சொல்லப்பட்டது அல்லவா?

அவ்வாறு திடீரென்று தோன்றிக் கலியாணசுந்தரத்தை விடுவித்தவர்களுள் மற்ற எல்லோரிலும் பொதியனாகவும் முக்கியஸ்தனாகவும் காணப்பட்ட மனிதன், ''ஐயா! நாம் இவ்விடத்தில் இனி ஒரு க்ஷண நேரங்கூடத் தாமதம் செய்யக் கூடாது. இதோ பக்கத்தில் ஒரு பெட்டி வண்டி ஆயத்தமாக நிற்கிறது. நாமெல்லோரும் போய் அதில் ஏறிக்கொண்டு சீக்கிரமாகப் போய்விட வேண்டும். பின்னால் யாராவது வந்து வழியில் கிடக்கும் போலீஸாரிடம் கேட்டு விஷயங்களைத் தெரிந்துகொண்டு நம்மைத் தொடர்ந்து வந்தாலும் வருவர். அல்லது மேற்படியார் கோலாப்பூரிலுள்ள கமிஷனருக்குச் செய்தி சொல்லி அனுப்பினால், அவர் வேறு பல போலீஸ்

படைகளைவிட்டு நம்மைப் பின்தொடரச் செய்தாலும் செய்வார். இந்த இரவு கழிவதற்குள் நாம் எப்படியாவது விசையாக போய் இந்த ராஜ்ஜியத்தின் எல்லையைக் கடந்து வேறு ராஜ்ஜியம் போய்விடவேண்டும். அதன்பிறகு நம்மை இந்த ராஜ்ஜியத்துப் போலீஸார் பிடித்துக் கைது செய்ய அதிகாரமில்லை'' என்று கூறி துரிதப்படுத்தினார்.

கலியாணசுந்தரம் அவரது சொல்லிற்கிணங்கி அவரோடு விரைவாக நடக்கலானான். அவர்கள் எல்லோரும் அவ்விடத்தை விட்டு சுமார் நூறுகஜ தூரம் அப்பால் சென்றனர். அவ்விடத்தில் ஒரு பெரிய பெட்டி வண்டி நின்று கொண்டிருந்தது. உன்னதத் தோற்றமும் உறுதியான தேகமும் வாய்ந்த இரண்டு குதிரைகள் அவ்விடத்தில் நின்றுகொண்டிருந்தன. சிறிது நேரத்திற்குமுன் தான் போலீசாரோடு வண்டியில் வந்துகொண்டிருந்த காலத்தில் யாரோ இரண்டு மனிதர்கள் ஒருவர்பின் ஒருவராக ஏறி தலைகால் தெரியாது அதிவேகமாய்ச்சவாரி செய்துகொண்டு வந்த இரண்டு குதிரைகளே அவ்விடத்தில் நின்றவை என்பதைக் கலியாண சுந்தரம் எளிதில் கண்டுகொண்டான். அந்த முரட்டு மனிதர்களில் முக்கியஸ்தனாக இருந்த தடித்த மனிதனும் இன்னொருவனுமே அந்தக் குதிரைகளின் மேல் ஏறிக்கொண்டு வந்தவர்கள் என்பதையும் அவன் ஒருவாறு தெரிந்துகொண்டான். அந்தக் குதிரைகளிரண்டும் அங்கிருந்த பெட்டி வண்டியில் உடனே பூட்டப்பட்டன. கலியாணசுந்தரமும், அவர்களினது தலைவனும் வண்டிக்குள் உட்கார்ந்து கொண்டனர். மற்ற நாலைந்து ஆட்களும் வண்டியின் பின்னும் முன்னுமாக உட்கார்ந்து கொண்டனர். வண்டி உடனே புறப்பட்டது. காசாரி சிறிதும் தாட்சணியம் பாராமல் சவுக்கினால் குதிரைகளை அடிக்கவே, அதுவரையில் அடியென்பதை பெற்றறியாத அந்த உன்னத ஜாதிக் குதிரைகள் சகிக்க இயலாத ஆக்குரோஷமும் துடிப்பும் கொண்டு மாயமாய்ப் பறக்கத் தொடங்கின. குதிரைகள் ஓடிய ஓட்டத்தில் பாதையிலிருந்த தூசியெல்லாம் பிரமாதமாகக்

கிளம்பி அதன் பின்புறமெல்லாம் கப்பிக் கொண்டு வெகுதூரம் வரையில் மேல் பக்கத்திலும் பின் பக்கத்திலும் நிறைந்து விட்டது. அந்த வண்டியே ஒருகால் சுக்கல் சுக்கலாக உடைந்து அலக்காக நாற்புறங்களிலும் சிதறிப் போய் விடுமோ என்ற அச்சம் எல்லோரது மனதிலும் உண்டாகும்படி அவ்வளவு மிதமிஞ்சிய விசையோடு வண்டி செல்லத் தொடங்கியது. ஆனாலும், பின்னால் போலீசார் தம்மைத் தொடர்ந்து வந்து பிடித்துக் கொள்வார்களே என்ற பயம் எல்லோரது மனதிலும் இருந்தது. ஆகையால், வண்டி அதைவிட இன்னமும் அதிக விசையாய்ப் போக அந்தக் குதிரைகளால் இயலவில்லையே என்று அவர்கள் ஒரு வித ஆத்திரமும் பதைப்பும் அடைந்தனரே அன்றி, அதை மெதுவாக ஒட்ட வேண்டுமென்று யாரும் நினைக்கவில்லை.

தன்னை விடுவிப்பதாக அவர்களிடத்திலிருந்து கடிதம் வந்த முதல் கடைசிவரையில் கலியாண சுந்தரம் அதில் அதிக நம்பிக்கை வைக்காமல், அதுவும் அம்மன்பேட்டைத் தாதிப் பெண்களாலோ அல்லது கோலாப்பூர் போலீஸ் கமிஷனராலோ செய்யப்பட்ட ஏதேனும் ஒரு புதிய சூழ்ச்சியாக இருக்குமென்று சந்தேகித்திருந்தான். ஆனால், தன்னை ஏற்றிவந்த வண்டியி லிருந்த மனிதரை அவர்கள் சிறிதும் தாட்சணியம் பாராது அடித்து வீழ்த்தித் தன்னை விடுவித்து வந்ததைக் கண்டபிறகு, அவனது சந்தேகம் விலகிவிட்டது. அவர்கள் உண்மையிலேயே தனக்கு அனுகூலமாக இருப்பார்கள் என்றும், அவர்கள் தன்னை நிஜமாகவே விடுவித்தார்களென்றும் அவன் உறுதியாக நம்பினான். ஆனால், அவனது மனத்தில் எழுந்த பலவகையான சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்ற ஓர் ஆவல் அவனது மனதைத் தூண்டத் தொடங்கியது. அவ்வளவு சீக்கிரத்தில் தான் அதைப்பற்றிக் கேட்பது சரியல்ல என்று நினைத்து அவன் சிறிது நேரம் வரையில் மௌனமாகவே இருந்தான்.

வண்டி பனந்தோப்பிற்கு இப்பால் சுமார் பத்துமைல் தூரம் வந்துவிட்டது. அதற்குள்ளிருந்த தடித்த மனிதனுடைய பதைப்பும் ஒருவாறு தணிவடைந்தது. இனி தமக்குப் பயமில்லை என்ற நினைவும் அமைதியும் அவனது மனதில் உண்டானது என்பதை அவனது முகம் தெளிவாகக் காண்பித்தது. அது வரையில் தனது முகத்தை வண்டிக்கு வெளியில் நீட்டிப் பின் புறத்தில் பார்த்தபடி இருந்த அந்த முக்கியஸ்தன் தனது தலையை உள்ளே இழுத்துக் கொண்டவனாய், தனக்கெதிரில் உட்கார்ந்திருந்த கலியாணசுந்தரத்தைப் பார்த்துப் புன்னகை செய்து, ''ஐயா! இனி பயமில்லை. நாம் வெகுதூரம் வந்து விட்டோம். உம்மை அழைத்து வந்தவர்கள் கோலாப்பூருக்குச் செய்தி சொல்லி அனுப்பியோ, அல்லது நேரில் போயோ, ஆள்களை அழைத்துக்கொண்டு வருவதற்குள் நாம் வெகுதூரம் போய்விடலாம். அவர்கள் இனி நம்மைப் பிடிக்க முடியாது. நம்முடைய குதிரைகள் மூன்று நாள் ஆனாலும் இதே விசையில் போகும். இன்று பொழுது விடிவதற்குள் நாம் இந்தக் கோலாப்பூர் எல்லையைத் தாண்டி செஞ்சி சமஸ்தானத்தின் எல்லைக்குள் போய்விடலாமென்று நான் நம்புகிறேன். உமக்கு அலுப்பாக இருக்கலாம். இது அகாலம் ஆகையால், தூக்கமும் உண்டாகலாம். ஆகையால், நீர் உம்முடைய பக்கத்துப் பலகையில் அப்படியே படுத்துத் தூங்கும், நான் பாதுகாப்பாக விழித்துக்கொண்டு வருகிறேன்'' என்றான்.

அதைக்கேட்ட கலியாணசுந்தரம், ''ஐயா! எனக்கு இப்போது தூக்கம் வரவில்லை. இன்னும் கொஞ்சநேரம் போகப்போக, தூக்கம் தானாக வரும்போது, நீர் சொன்னபடி நான் இப்படியே படுத்துக்கொண்டு தூங்குகிறேன். என் மனசு பலவிதமாக உபத்திரவப்பட்டுக் கொண்டிருப்பதால், நான் படுத்துக் கொண்டால் கூட, இப்போது தூக்கம் வராது போலிருக்கிறது. நான் தூங்குவது இருக்கட்டும். வேறொரு முக்கிய விஷயத்தை உம்மிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டுமென்று என் மனம்

ஆவல் படுகிறது. அந்த ஆவலை நீர் முதலில் தீர்க்க வேண்டு கிறேன். நான் உம்மை இதற்கு முன் எங்கே பார்த்தேன் என்பதே எனக்கு ஞாபகமில்லை. அப்படியிருக்க, என் விஷயத்தில் இவ்வளவு அதிகமாகப் பிரயாசைப்பட்டு, இந்தத் தூரதேசத்துக்கு வந்து, நிரம்பவும் துணிகரமான இந்தக் காரியத்தைச் செய்து என்னை மீட்டுக்கொண்டு போகிறதைக் காண, எனக்கு இப்படிப்பட்ட அரிய உதவி செய்தவராகிய நீர் யாரென்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டுமென்று என் மனம் அவாக் கொள்ளுகிறது'' என்றான்.

அந்த மனிதன், ''ஐயா! நான் இருப்பது தஞ்சாவூர், என்னைப் பஞ்சண்ணா ராவென்று சொல்லுவார்கள். நீர் எப்போதாவது தஞ்சாவூருக்கு வந்திருந்தால், என்னைப்பற்றி அவசியம் கேள்வியுற்றிருக்கலாம்'' என்றான்.

*கலியாணசுந்தரம்:-* (மிகுந்த வியப்படைந்து) ஓகோ! நீர் தான் பஞ்சண்ணா ராவா? நான் உம்மைப்பற்றி இதற்குமுன் பல தடவைகளில் கேள்வியுற்றிருக்கிறேன். ஆனால், நான் உம்மை நேரில் பார்த்ததில்லை. நல்லது, சந்தோஷம்; என் மனசிலிருந்த முக்கியமான ஒரு சந்தேகம் விலகியது.

*பஞ்சண்ணாராவ்:-* அது என்ன சந்தேகம்?

*கலியாண:-* வேறொன்றுமில்லை. இந்தக் கோலாப்பூருக்கு நான் வந்தபோது என்னோடு சில பெண்கள் தஞ்சாவூரி லிருந்து வந்தார்கள். அவர்கள் பூனா தேசத்துக்குப் போகிறவர்கள். அவர்கள் என் விஷயத்தில் கெட்ட எண்ணம் கொண்டு இந்த ஊர்ப் போலீஸ் கமிஷனருடைய தயவை எப்படியோ சம்பாதித்துக்கொண்டு அவர் என்னை இந்த ஊர்ச் சிறைச்சாலையில் அக்கிரமமாக அடைக்கும்படி செய்ததன்றி, சிறைச்சாலைக்குள் வந்தும் பற்பல தந்திரங்கள் செய்தார்கள். நான் அவர்களுடைய துர் நினைவுக்கு இணங்கவே இல்லை ஆகையால், அவர்கள் வேறு ஏதேனும் சூழ்ச்சி செய்து

என்னைப் போலீஸாரிடத்திலிருந்து விடுவிப்பதுபோலப் பாசாங்கு செய்து, வேறே எங்கேயாவது என்னைக் கொண்டு போய் வைத்துகொண்டு பலாத்காரம் செய்ய உத்தேசிக்கிறார்களோ என்று நான் சந்தேகித்தேன். நீங்கள் உண்மையிலேயே போலீஸ்காரரையும் காசாரிகளையும் அடித்து என்னைத் தப்பவைத்ததைக் கண்டபோதே, என் சந்தேகம் அநேகமாக விலகிவிட்டது. இப்போது நீங்கள் தஞ்சாவூரிலிருந்து வந்தீர்களென்பதைக் கேட்க என் சந்தேகம் முழுதும் விலகிவிட்டது. அந்தப் பெண்களுக்கும் உங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்பது தெரிகிறது. ஆனால் தஞ்சாவூரில் எனக்குத் தெரிந்தவர்களும் என் விஷயத்தில் இவ்வளவு தூரம் ஒத்தாசை செய்யக்கூடியவர்களும் யாரும் இல்லையே. என் விஷயத்தில் உண்மையான இரக்கமும், அனுதாபமும், விசனமும் கொண்டு, தன் உயிரையும் எனக்காகக் கொடுக்கக் கூடியவள் திருவாரூரில் இருக்கிறாள். அவளையும் இவர்கள் ஏமாற்றி வஞ்சித்து, அவள் என்மேல் கெட்ட அபிப்பிராயம் கொள்ளும்படி மித்திரபேதம் செய்திருக்கிறார்கள். அவள் என் விஷயத்தில் உதவி செய்ய உங்களை அனுப்பி இருப்பாளோவென்பதும், அவள் இப்போது கோலாப்பூரி லேயே இருக்கிறாளா, அல்லது திருவாரூர், தஞ்சாவூர் ஆகிய இரண்டிலொன்றில் இருக்கிறாளா வென்பதும் சந்தேகமாக இருக்கிறது. ஆகையால், உங்களை யார் இவ்விடத்திற்கு அனுப்பியது என்பதையும், நான் இவ்விடத்தில் இப்படிப்பட்ட நிலைமையில் இருப்பது அவர்களுக்கு எப்படித் தெரிந்தது என்பதையும் நீர் எனக்கு முதலில் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்'' என்றான்.

அதைக்கேட்ட பஞ்சண்ணா ராவ் கபடமாகப் புன்னகை செய்து, ''ஐயா! நான் கூலிக்காரன். எனக்கு இந்த விஷயத்தில் அதிக விவரமெதுவும் தெரியாது. தஞ்சாவூரிலுள்ள ஒரு மனிதர் எங்களை இங்கே அனுப்பிவைத்தார். அவர் உம்முடைய

பெயரையும் அடையாளங்களையும் நீர் இந்த ஊர் சிறைச் சாலையில் அடைபட்டிருக்கும் விவரத்தையும் சொல்லி, நான் எப்படியாவது உம்மை விடுவித்து அழைத்துக்கொண்டு வரவேண்டுமென்று என்னிடம் கேட்டுக் கொண்டார். அவர் தக்க பெரிய மனிதர். ஆகையால் அவருடைய வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நான் என்னுடைய ஆட்களில் சிலரை அழைத்துக் கொண்டு இங்கே வந்தேன். வந்து பல மனிதர்களிடம் தந்திரமாக விசாரணை செய்து, நீர் சிறைச்சாலையில் அடைபட்டிருக்கிறது உண்மைதான் என்று தெரிந்துகொண்டு உம்மிடம் வரும் தாதியைப் பிடித்து அவளுக்கு ஏராளமான பணம் கொடுத்து அவளுடைய சிநேகத்தைச் சம்பாதித்துக் கொண்டேன். பிறகு அவள் மூலமாக நான் செய்த காரியங்களெல்லாம் உனக்குத் தெரிந்தவைகளே. இவ்வளவுதான் என்னுடைய வரலாறு'' என்றான்.

கலியாண:- உம்மை அனுப்பிய மனிதருடைய பெயர் என்ன?

பஞ்சண்ணா:- அவர் யார் என்பதை நான் உம்மிடம் வெளியிடக் கூடாதென்று அவர் கண்டித்துச் சொல்லியிருக் கிறார்; ஆகையால், அதை மாத்திரம் நான் சொல்வதற்கில்லை.

கலியாண:- ஐயா! நீர் சொல்வது நிரம்பவும் விநோதமாக இருக்கிறதே! என் விஷயத்தில் இவ்வளவு பிரயாசை எடுத்துக் கொண்டு நிரம்பவும் அக்கறையாக உம்மை இங்கே அனுப்பி வைத்த மனிதர் தம்முடைய பெயரை எனக்குத் தெரியாமல் மறைத்துக்கொள்ள வேண்டிய காரணம் என்ன என்பது தெரியவில்லையே! நீர் சொல்வதைப் பார்த்தால், இந்தக் காரியம் என்னிடமுள்ள பிரியத்தினால், எனக்கு அனுகூலம் செய்ய வேண்டுமென்று செய்யப்பட்டதாகத் தோன்றவில்லையே! உம்மை இங்கே அனுப்பிய மனிதர்களும், ஒருவேளை, இந்தப் பெண்களோடு சம்பந்தப்பட்டவராக இருக்கலாமோ? இங்கே இவர்களால் என் மனதை மாற்ற முடியவில்லையென்று கண்டு,

அங்கேயுள்ள மனிதருக்குத் தெரிவித்ததன் மேல், அவர் உம்மை அனுப்பி இருப்பாரோ? ஐயா! நீர் உண்மையை மறைக்காமல் சொல்லும்; உம்மை அனுப்பியது யார்? அவர் என்ன கருத்தோடு என்னை விடுவிக்கிறார். உமக்குத் தெரிந்ததை வெளிப்படையாகச் சொல்லும், பரவாயில்லை.

பஞ்சண்ணா:- ஐயா! நான்தான் ஏற்கெனவேயே சொல்லி விட்டேனே! அந்த மனிதர் யாரென்பதை நான் வெளியிடுகிற தில்லை என்று நான் பிரமாணிக்கம் செய்து கொடுத்தி ருக்கிறேன். ஆகையால் நான் அதைச் சொல்லக் கூடவில்லை. மற்ற விவரமெதுவும் எனக்குத் தெரியாது. அவர் என்ன கருத்தோடு உம்மை விடுவிக்கிறார் என்பதும் அவர் உமக்கு அனுகூலமானவரா அல்லது பிரதிகூலமானவரா என்பதும் எனக்குச் சுத்தமாய்த் தெரியாது. நான் வேண்டுமென்று உண்மையை மறைக்கிறவனல்ல. நீர் என்மேல் வருத்தப் பட்டுக்கொள்வதில் உபயோகமில்லை.

கலியாண:- (அதிக வியப்பும் பிரமிப்பும் அடைந்து) சரி; உம்மைப் பார்த்தால் கபடமற்ற மனிதராகத்தான் தோன்றுகிறது. நீர் சொல்வதை நான் நம்புகிறேன். நீர்அந்த மனிதருடைய பெயர் முதலிய விவரம் எதையும் சொல்லவேண்டாம். அவர் ஆணா பெண்ணா என்பதையாவது சொல்லலாமா?

பஞ்சண்ணா:- அதையும் நான் சொல்லக்கூடாது.

கலியாண:- (நிரம்பவும் கலக்கமடைந்து சிறிது யோசனை செய்து) சரி; அது போகட்டும். இன்னும் ஒரே ஒரு விஷயம் கேட்கிறேன்; அதையாவது சொல்லமுடியுமா?

பஞ்சண்ணா:- என்ன விஷயம்? நான் சொல்லக் கூடியதாக இருந்தால், சொல்லத் தடையில்லை.

கலியாண:- உம்மை இங்கே அனுப்பிய மனிதருடைய வீட்டில் ஷண்முகவடிவு என்ற பெண் யாராவது வந்திருக்கி றாளா? அல்லது அந்தப் பெண்ணைப் பற்றி அந்த மனிதர்

உம்மிடத்திலாவது, வேறே மனிதரிடத்திலாவது பிரஸ்தாபம் செய்ததுண்டா? அந்தப்பெண் இப்போது எங்கே இருக்கிறாள் என்ற சங்கதியாவது உமக்குத் தெரியுமா?

*பஞ்சண்ணா:-* அந்த விவரம் எதுவும் எனக்குத் தெரியவே தெரியாது.

*கலியாண:-* சரி; அது போகட்டும். என்னை விடுவிக்கும்படி உம்மை அனுப்பிய மனிதர் எனக்கு ஏதாவது சங்கதி சொல்லச் சொன்னாரா?

*பஞ்சண்ணா:-* எந்தச் சங்கதியும் சொல்லவில்லை. ஆனால், அவர் ஒரு கடிதம் எழுதி அதை நன்றாக ஒட்டி என்னிடம் கொடுத்திருக்கிறார். அதை நான் முடிவில் உம்மிடம் கொடுக்கும்படி அவர் என்னிடம் கொடுத்திருக்கிறார். அதில் எழுதப்பட்டுள்ள சங்கதி இன்னதென்பதும் எனக்குத் தெரியாது.

*கலியாண:-* (ஆவலும் வியப்பும் அடைந்து) ஓகோ அப்படியா!அந்தக் கடிதம் இப்போது உம்மிடத்திலிருக்கிறது அல்லவா? அதையாவது நீர் உடனே என்னிடம் கொடுத்தால், நான் படித்துப் பார்த்து என் சந்தேகங்களை உடனே நிவர்த்தி செய்து கொள்ளுகிறேன்.

*பஞ்சண்ணா:-* அந்தக் கடிதம் இப்போது என் கையில் இல்லை. அதை நான் ஓரிடத்தில் பத்திரமாக வைத்திருக்கிறேன். நாம் தஞ்சாவூருக்குப் போனவுடனே அதை நான் எடுத்து உம்மிடம் கொடுத்து விடுகிறேன். இப்போது அதை நான் கொடுப்பதற்கில்லை.

*கலியாண:-* (நிரம்பவும் கலக்கமும் கவலையும் அடைந்து நயமாகப் பேசத் தொடங்கி) ஐயா! நீர் எந்த வழியிலும் எனக்குப் பிடி கொடுக்காமல் பேசினால், நான் என்ன செய்கிறது. உம்மை இந்த வேலைக்கு அனுப்பிய மனிதருடைய பெயர் முதலிய விவரங்களைத் தான் நீர்வெளியிடக் கூடாதென்று பிரமாணிக்கம் செய்திருக்கிறீர். என்னிடம் கொடுக்கும்படியாக அவர் கொடுத்த

கடிதத்தையாவது உடனே என்னிடம் கொடுக்கக் கூடாதா? நான் என் மனசிலுள்ள சந்தேகங்களையும் ஆவலையும் நிவர்த்தி செய்து கொள்வதோடு, முக்கியமாக நான் போக வேண்டிய இடத்துக்கு இங்கிருந்தே போகலாமல்லவா? அந்தக் கடிதத்தை நீர் என்னிடம் எப்போதுதான் கொடுப்பீர்?

பஞ்சண்ணா:- ஐயா! நீர் என்மேல் அநாவசியமாகக் கோபிப்பதில் என்ன உபயோகம்! என்னை அனுப்பிய மனிதர் உம்மைத் தஞ்சாவூருக்கு அழைத்து வரும்படியாகவும், வண்டி அந்த ஊருக்குள் நுழையுமிடத்தில் அந்தக் கடிதத்தை உம்மிடம் கொடுத்து, உம்மைக் கீழே இறக்கிவிட்டு வரும்படி உத்தரவு செய்திருக்கிறார். ஆகையால் தஞ்சாவூர் போய்த்தான், நான் கடிதத்தை உம்மிடம் கொடுக்க வேண்டும். தயவு செய்து அதுவரையில் கொஞ்சம் பொறுத்துக் கொண்டிரும். அங்கே போனவுடன், கடிதத்தைக் கொடுக்கிறேன். உடனே எல்லாச் சங்கதியையும் தெரிந்துகொள்ளுமேன்.

கலியாண:- (முற்றிலும் வியப்பும், குழப்பமும், கவலையும் அடைந்து) என்ன ஆச்சரியம் இது? எனக்குக் கடிதம் அனுப்புகிறவர் அதை உடனே என்னிடம் கொடுக்கச் சொல்லாமல், என்னைத் தஞ்சாவூருக்கு அழைத்து வந்து அவ்விடத்தில் கொடுக்கச் சொல்லியிருப்பது வேடிக்கையாக இருக்கிறதே! நீர் சொல்வதைப் பார்த்தால், என் மனசில் பலவிதமான சந்தேகங்கள் உண்டாகின்றன. அந்த மனிதர் எனக்கு அனுகூலமானவரல்ல என்பதும் ஒருவாறாக விளங்குகிறது. நான் ஓர் அவசர காரியமாக பூனா தேசத்துக்குப் போக வேண்டும். நான் போகும் உத்தேசம் நான் முன்னே குறித்த அந்தப் பெண்களுடைய சதியாலோசனைக்கு விரோதமாக இருந்தது. ஆகையால், போகாதபடி என்னைச் சிறைச்சாலையில் அடைத்து வைத்தார்கள். இப்போது இந்த மனிதர் என்னைத் தஞ்சாவூருக்கு அழைத்துவந்து கடிதம் கொடுக்கச் சொல்லி இருப்பதைப் பார்த்தால், நான் பூனாவுக்குப் போகாமல்

செய்துவிட வேண்டுமென்ற கருத்தோடு இந்த ஏற்பாடு செய்யப் பட்டிருப்பது என்பதும், இந்த மனிதரும், அந்தப் பெண்களைச் சேர்ந்தவரென்பதும் எளிதில் விளங்குகின்றன. ஆகையால், நான் அந்தக் கடிதத்தை வாங்கிப் பார்ப்பதற்காகத் தஞ்சாவூருக்கு வருவது அநாவசியமென்று நினைக்கிறேன். நான் தஞ்சாவூருக்கு வந்து மறுபடி இவ்வளவுதூரம் திரும்பி வந்து மேலும் பூனாவுக்குப் போவதென்றால், அதிகமான பிரயாசையும் காலதாமசமும் ஏற்படும். ஏற்கெனவேயே அதிக காலதாமசம் ஏற்பட்டுவிட்டது. இனியும் நான் சும்மா இருப்பது சரியல்ல. ஆகையால், நீர் தயை செய்து என்னை இவ்விடத்திலேயே இறக்கிவிட்டு விடும். எனக்கு அந்தக் கடிதம் வேண்டாம். நான் இங்கிருந்தபடி நேராகப் பூனாவுக்குப் போகிறேன்.

*பஞ்சண்ணா:-* (ஏளனமாகப் புன்னகை செய்து) ஐயா! நீர் பேசுவது நிரம்பவும் ஒழுங்காக இருக்கிறது. உம்முடைய விஷயத்தில் இவ்வளவு சிரத்தையும் பிரயாசையும் எடுத்துக் கொண்டு, உம்மைச் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கும் பெரிய உபகாரியான அந்த மனிதர் உமக்கு என்னவிதமான செய்தி எழுப்பி அனுப்பி இருக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ளாமல், நீர் உம்முடைய காரியம் தீர்ந்து விட்டதென்று நீர் இப்படியே போவதாகச் சொல்வது முதலில் மரியாதை யாகுமா? அல்லது, நன்றி அறிதலுள்ள மனிதர் செய்யத்தக்க காரியமா? இதுவரையில் நீர் சிறைச்சாலையில் இருந்ததனால், ஏற்கெனவேயே காலதாமசம் ஏற்பட்டுப் போனதாக நீரே சொல்லுகிறீர். இப்போது நாங்கள் உம்மை விடுவிக்கா விட்டால், நீர் இன்னம் எவ்வளவு காலம் பைத்தியக் காரிகளுடைய வைத்தியசாலையில் இருந்து கஷ்டப்பட நேருமோ? இப்போது தஞ்சாவூருக்குப் போய் நீர் திரும்பி வருவதாக வைத்துக்கொண்டாலும், அதற்குச் சுமார் ஐந்தாறு நாட்கள்தான் ஆகும். அதுவரையில் நீர் சிறைச்சாலை யிலேயே இருந்ததாக எண்ணிக் கொள்ளுமேன்.

*கலியாண:-* (நிரம்பவும் கிலேசமடைந்து) நீர் சொல்லுவது நியாயமான சங்கதிதான். நான் அந்தக் கடிதத்தைப் படித்து அதன் சங்கதி இன்னதென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமான காரியந்தான். ஆனால், அதற்காக வெகு தூரத்திலுள்ள தஞ்சாவூருக்கு வரவேண்டுமென்பது தான் எனக்கு சங்கடமாக இருக்கிறது. நீர் எனக்கு ஓர் உதவி செய்யக்கூடாதா? நீர் என்னை இங்கேயே இறக்கி விட்டுவிடும். நான் பூனாதேசத்துக்குப் போகிறேன். அவ்விடத்திற்கு நீங்கள் தபால் மூலமாக அந்தக் கடிதத்தை அனுப்பிவையுங்கள். தபால் கச்சேரித் தலைவர் மேல் விலாசம் பார்த்து கலியாண சுந்தரத்துக்குக் கொடுப்பது என்று எழுதி அதை அனுப்பி விடுங்கள். நான் அங்கே போய் வாங்கிப் பார்த்துக் கொள்ளுகிறேன்.

*பஞ்சண்ணா:-* அப்படிச் செய்ய எனக்கு அதிகாரமில்லை. அவர் சொன்னபடி நான் செய்ய வேண்டுமேயன்றி, சுதாவாக நானே எதையும் செய்ய எனக்கு என்ன யோக்கியதை இருக்கிறது. ஆகையால், நீர் தஞ்சாவூருக்கு வந்தே கடிதத்தை வாங்கிக்கொள்ளும்; உம்மை நான் இவ்விடத்தில் இறக்கி விடவும் எனக்கு அதிகாரமில்லை.

*கலியாண:-* அப்படியானால், நான் உங்களோடு வர மாட்டேன் என்றால்கூட நீங்கள் என்னை விடாமல் பலாத்காரமாகக் கொண்டு போவீர்கள் போலிருக்கிறது. இப்போதும் என்னுடைய சிறை நீங்கவில்லை போலிருக்கிறது. ஒரே இடத்தில் இருக்கும்படியான சிறையானது பிரயாணம் போகும்படியான சிறையாய் மாறியிருக்கிறது போலும்; அவ்வளவுதான் வித்தியாசம் போலிருக்கிறது.

*பஞ்சண்ணா:-* நீர் அப்படி நினைக்கக்கூடாது. உம்மை நாங்கள் இந்தச் சிறைச்சாலையிலிருந்து விடுவித்து தஞ்சாவூருக்கு அழைத்து வரவேண்டியது. அவ்விடத்தில் கடிதத்தைக் கொடுக்க வேண்டியது. அதுதான் நாங்கள் செய்ய வேண்டியது.

இதை நீர் சிறையாக மதித்தாலும் சரி; வேறு எப்படி மதித்தாலும் சரி; அதைப்பற்றி நாங்கள் ஒன்றும் சொல்வதற்கில்லை.

**கலியாண:-** சரி; அப்படியே ஆகட்டும். நீங்கள் தஞ்சாவூரில் என்னிடம் கடிதம் கொடுத்தபிறகாவது என்னைச் சுயேச்சையாக விட்டு விடுவீர்களோ, அல்லது அதற்குமேலும் ஏதாவது நிர்பந்தம் செய்வீர்களோ?

**பஞ்சண்ணா:-** வண்டி அந்த ஊருக்குள் நுழையும் இடத்தில் உம்மிடம் கடிதத்தைக் கொடுத்து உம்மைக் கீழே இறக்கிவிட்டு நாங்கள் அவரிடம் போய் அதை அறிவித்து விடவேண்டும். அவ்வளவே நாங்கள் செய்யவேண்டியது. அதன்பிறகு நீர் உம்முடைய பிரியப்படி செய்யலாம் என்பது சுலபமாக விளங்கவில்லையா?.

அவனது அழுத்தமான சொற்களைக் கேட்ட கலியாண சுந்தரம் அதற்குமேல் தான் அந்த மனிதனிடம் அநாவசியமாக வார்த்தையாடிக் கேட்டுக்கொள்வதில் எவ்விதப் பலனும் ஏற்படாதென்று நிச்சயித்துக் கொண்டவனாய், அவ்வளவோடு ஓய்ந்து மௌனம் சாதித்தான். வண்டி முன்போல வாயுவேக மனோவேகமாகப் பறந்து சென்று கொண்டிருந்தது. குதிரைகள் சிறிதும் சோர்வடையாமல் ஒரே மாதிரியான விசையோடு சென்று கொண்டிருந்தன. பொழுதும் கழிந்துகொண்டே இருந்தது. ஆகையால், இரவு ஒரு மணி, இரண்டு மணி, மூன்று மணி ஆகிவிட்டது. அப்போதும் பஞ்சண்ண ராவும் தூங்கவில்லை; கலியாண சுந்தரமும் தூங்கிவில்லை. அவனது மனதில் பலவிதமான புதிய எண்ணங்களும் சந்தேகங்களும் தோன்றி அவனை வதைக்கத் தொடங்கின. ஆகையால், அவன் தூக்கம் பிடியாமல் அப்படியே சாய்ந்தபடி கண்களை மூடிக்கொண்டு சிந்தனைக் கடலில் மூழ்கியிருந்தான். அவ்வாறு மூடு மந்திரமாகத் தன்னை விடுவிக்கும் மனிதர் யாராக இருக்கலாமென்ற சந்தேகமே எழுந்தெழுந்து அவனது மனதை உலப்பிக் கொண்டிருந்தது. ஷண்முகவடிவு அப்போது எங்கே

இருக்கிறாளோ வென்றும், அவள் தன்னைப்பற்றி அப்போது எவ்விதமான அபிப்பிராயம் வைத்திருக்கிறாளோ என்றும் அவன் நினைந்து நினைந்து உருகினான். தன்னைவிடுவிக்கும் மனிதர் எழுதிக்கொடுத்துள்ள கடிதத்தில் என்ன விஷயம் எழுதப்பட்டிருக்குமோ என்றும், அவர் அதைத் தஞ்சையில்தான் கொடுக்கவேண்டுமென்று ஏன் தன்னைக் கட்டாயப்படுத்த வேண்டுமென்றும் அவன் வெகுநேரம் வரையில் எண்ணி எண்ணிப் பார்த்தும், மர்மம் இன்னதென விளங்காமலேயே இருந்தது. அந்த மனிதன் தஞ்சாவூருக்குப் போனவுடன் கடிதத்தைக் கொடுத்துத் தன்னைச் சுயேச்சையாக அனுப்பு வானோ, அல்லது அப்படிச் செய்யாமல் தன்னை அந்த மனிதரி டமோ வேறு எவ்விடத்திலோ கொண்டு போய்விடுவானோ என்ற சந்தேகமும் உண்டாயிற்று. பழைய சிறைச்சாலையைக் காட்டிலும்,அதிக கொடுமையும் பந்தோ பஸ்துமான வேறு புதிய சிறைச்சாலையில் தான் வாசம் செய்ய நேருமோ என்றும் ஐயமுற்றவனாய், முடிவில் தான் அவர்களிடம் எவ்வித சச்சரவும் செய்யாமல் தஞ்சை வரையில் போய் அவர்கள் கொடுப்பதாகச் சொன்ன கடிதத்தை வாங்கிப் பார்த்து அதன் பிறகு சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி நடந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு சாந்தமாகவே உட்கார்ந்திருந்தான்.

அதன்பிறகு அந்தப் பிரயாணத்தில் நடந்த வரலாறு களெல்லாம் அவ்வளவு விசேஷமான சங்கதிகளல்ல. ஆதலால், அவற்றை விவரிக்காமல் விடுத்து முடிவான செய்தியை நாம் வெளியிடுவோம். பஞ்சண்ணா ராவ் நடுவழியில் போகும் போது இரண்டிடங்களில் குதிரைகளை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்து வைத்திருந்தான். ஆதலால், அவ்விடங்களில் பழைய குதிரைகள் விலக்கப்பட்டுப் புதியவை பூட்டப்பட்டன. ஆனால், பஞ்சண்ணா ராவ் தன்னுடன் கூடவே சாப்பாட்டு சாமான்களும் கொண்டு வந்திருந்தான். ஆகையால், ஊர்கள் இல்லாத காட்டு இடங்களில் வண்டியை அவிழ்த்துப் போட்டுக்

குதிரைகளை மேயவிட்டுத் தண்ணீர் குடிக்கச் செய்ததோடு தங்களுக்கும் ஆங்காங்கு சமையல் செய்து, கலியாணசுந்தரம் முதலிய எல்லோருக்கும் சாப்பாடு போட்டு அதிக காலதாமதம் செய்யாமல் புறப்பட்டு மேன்மேலும் பிரயாணம் போக ஏற்பாடு செய்தான். இடையில் காணப்பட்ட ஊர்களில் வண்டியை நிறுத்தினால், ஒருகால் கலியாண சுந்தரம் அங்குக் காணப்படும் மனிதரிடம் தன் வரலாற்றை வெளியிட்டுத் தன்னை விடுவிக்க அவர்களது உதவியை நாடுவானோ என்ற முன் யோசனையினால், பஞ்சண்ணா வண்டியை ஊர் இருக்கும் இடங்களில் நிறுத்தாமல், நிர்மானுஷ்யமான இடங்களில் நிறுத்தி தங்களது காரியங்களை முடித்துக்கொள்ளச் செய்து சில தினங்களில் தஞ்சையை அடைந்தான்.

தஞ்சை சமீபத்தில் வந்துவிட்டது என்பதை உணர்ந்தவுடன் கலியாண சுந்தரத்தின் மனம் தவித்தது. அவர்கள் கடிதத்தைக் கொடுத்துத் தன்னை அனுப்பி விடுவார்களோ, அல்லது தன்னை வஞ்சித்து எங்கேயாவது கொண்டுபோய் அடைத்து விடுவார்களோ என்ற அச்சம் பெருகி வதைத்துக்கொண்டிருந்தது. கடைசியில் வண்டி தஞ்சைப் பட்டணத்தின் ஆரம்பத்தை அடைந்தபோது, சடேரென்று நிறுத்தப்பட்டது. பஞ்சண்ணாராவ், "ஐயா! ஊர் வந்துவிட்டது; கீழே இறங்கும்" என்றான். உடனே கலியாணசுந்தரம் அளவற்ற மகிழ்ச்சியும் குதூகலமும் அடைந்தவனாய்க் கீழே இறங்கினான். அடுத்த நிமிஷத்தில் ஒரு கடிதம் வண்டிக்குள்ளிருந்து கீழே எறியப் பட்டது. பஞ்சண்ணாராவ், "கடிதம் இதோ இருக்கிறது. எடுத்துக் கொள்ளும்" என்றான்.

அடுத்த க்ஷணத்தில் அந்த வண்டி விசையாக அப்பால் சென்றுவிட்டது. கலியாணசுந்தரம் ஆவலோடு கீழே குனிந்து கடிதத்தை எடுத்து அதன்மேல் விலாசத்தை பார்த்துவிட்டுத் திரும்பி வண்டியைப் பார்ப்பதற்குள் அது பக்கத்திலிருந்த ஒரு

சந்தில் நுழைந்து மறைந்துபோய்விட்டது. கலியாணசுந்தரம் தனது கையிலிருந்த கடிதத்தை அளவற்ற ஆவலோடும் பதைப்போடும் பிரித்துப் படிக்கலானான்.

## 43 -வது அதிகாரம்

## சூழ்வினை நிகழுமோ ஊழ்வினை நிகழுமோ

தஞ்சையில் ஷண்முகவடிவு மருங்காபுரி ஜெமீந்தாரினது மாளிகையிலிருந்து தப்பித்து வெளிப்பட்ட இரவில் அந்த அருங்குண மடந்தைக்கு நேரிட்ட இடுக்கண்களெல்லாம் முன் ஓர் அதிகாரத்தில் விரித்துக் கூறப்பட்டனவல்லவா? முடிவில் அவள் ஒரு மடத்தில் ஓர் அறைக்குள் சயனித்திருந்த காலத்தில், அவளுக்கருகில் படுத்திருந்த பாட்டி பழைய பண்டாரமாக மாறிப் போனாள் அல்லவா? அந்த எதிர்பாராத விபரீத மாறு பாட்டைக் கண்ட இளந்தோகையான ஷண்முகவடிவினது தேகம் கிடுகிடென்று நடுங்கியது. தன்மீது துர்மோகம் கொண்டி ருந்த வஞ்சக மனிதனான அந்தப் பண்டாரத்தினிடம் தான் மறுபடியும் தனிமையில் அகப்பட்டுக்கொண்டதையும், தாம் இருந்த அறையின் கதவு வெளிப்புறத்தில் தாளிடப்பட்டுப் போனதையும் காண, அந்த மெல்லிய நங்கையின் மனம் பெருத்த திகில்கொண்டு தத்தளித்தது. அது அதிக விஸ்தாரமான மடமாதலாலும், அந்த அறை அதன் மத்தியில் இருந்தமை யாலும், அவ்விடத்திலிருந்து தான் கூச்சலிடுவதில் தனக்கு யாதொரு பலனும் ஏற்படாது என்பது அவளுக்கு நன்றாகத் தெரிந்தது. ஆகையால், அந்த நினைவு திகிலைப் பன்மடங்கு பெருக்கியதன்றி, தான் அன்றையதினம் தப்ப முடியாதென்ற ஒருவித அவ நம்பிக்கையும் உண்டாக்கியது. அதற்குமுன் பல தடவைகளில், தான் அதைவிடப் பெரிய இடர்களில் அகப்பட்டு அநாதரவாக இருந்த தருணங்களில் கடவுள் தோன்றாத் துணைவராக இருந்து தனது மானத்தையும் உயிரையும்

காப்பாற்றியதுபோல அப்போதும் ஏதாகிலுமொரு சூழ்ச்சி செய்வார்; அல்லது, யாராகிலும் ஒரு மனிதரைக் கொணர்ந்து விடுவார் என்ற நம்பிக்கை அவளது மனதில் உறுதியாக வேரூன்றி இருந்தது. ஆனாலும், உட்புறம் தாளிடப்பட்டுள்ள அந்த ஒதுக்குப்புறமான இடத்தில் அந்த நடு இரவில் யார் வரப் போகிறார்கள் என்ற மலைப்பும் கவலையும் தோன்றி அவளை உலுப்பின. தனது மதியை இழந்து அத்தகைய தீய வழியில் செல்லும் அந்த மனிதருக்குத் தான் எவ்விதமான நியாயம் எடுத்துக் கூறினாலும், அது அவரது மனதில் உறைக்காது என்ற எண்ணம் தோன்றியது. ஆனாலும், தான் தப்பிப்போக வேறு வகையில்லை ஆதலால், தான் தன்னாலியன்ற வரையில் அவரை நயந்து வேண்டிப்பார்க்க வேண்டுமென்று அவள் முடிவு செய்து கொண்டு நிரம்பவும் பணிவாகவும் உருக்கமாகவும் இறைஞ்சியும் பேசத் தொடங்கி, "சுவாமிகளே! என்ன விபரீதம் இது? பேரின்பத்தை நாடி உலகைத் துறந்து காஷாயங்கொண்டவர்களாகிய தாங்கள் தங்களுடைய மனசு இம்மாதிரி சலிக்க இடங் கொடுக்கலாமா? உலக தத்துவங்களை எல்லாம் உள்ளபடி அறிந்த ஞானியாகிய தாங்கள் மனசாலும் எண்ணக் கூடிய காரியமா இது? வேண்டாம். இவ்வளவோடு தங்களுடைய மனசை அடக்கிக் கொள்ளுங்கள். முன் தடவையில் தாங்கள் செய்ய நினைத்த பெரிய பாவத்தை ஈசுவரனே தடுத்து தங்களுக்கு நல்லவழிகாட்டி இருக்க, அதைத் தாங்கள் இவ்வளவு சீக்கிரத்தில் மறந்து, மறுபடியும் இப்படிப்பட்ட துன்மார்க்கத்தில் தங்கள் மனம் செல்லும்படி விடலாமா? தாங்கள் நடத்தும் தர்மமாகிய துறவறத்தின் பெருமை என்ன? தங்கள் மீதிருக்கும் காஷாய வஸ்திரத்தின் மகிமை என்ன? அவைகளுக்கெல்லாம் பெருத்த களங்கம் ஏற்படத்தக்க நினைவைத் தாங்கள் கொள்ளலாமா? தாங்கள் இதுவரையில் எத்தனையோ புண்ணிய கருமங்களைச் செய்திருப்பீர்கள்; தாங்கள் சதாகாலமும் ஈசுவரனைத் தொழுது பூஜை செய்து அவனுடைய பக்தியையே பெருந் துணையாகக்

கொண்டு ஒழுகி வருகிறவர்கள். ஒரு கிணறு நிறைய நிரப்பப் பட்டிருக்கும் பாலில் ஒரு துளி விஷத்தைக் கலந்தாலும், அந்தப் பால் முழுதும் விஷமாக மாறி விடுவதுபோல, தாங்கள் செய்ய நினைக்கும் இந்தக்கொடிய பாவமானது தாங்கள் இதுவரையில் செய்துள்ள நற்காரியங்களையும் புண்ணிய கருமங்களையும் ஈசுவர பக்தியையும் நிஷ்பிரயோசன மாக்கிவிடுமே? ஆகையால் தாங்கள் இந்த அற்ப ஆசையை அடக்கிக் கொள்ளுங்கள். நீங்கள் இதுவரையில் அரும்பாடுபட்டுத் தேடியுள்ள புண்ணியத்தை எல்லாம் இழந்து கொடிய நரகத்துக்கு ஆளாகும்படியான இந்த துர்நினைவை விட்டுவிடுங்கள். சிற்றின்பமானது மனப்பிராந்தி யினால் உண்டாகும் பொய்த் தோற்றமே அன்றி, உண்மையில் இன்பமேயல்ல என்பதையும், அது நிரம்பவும் அற்பமானது என்பதையும், நிலைத்ததல்ல என்பதையும் தாங்கள் புஸ்தகங்களில் படித்தறியவில்லையா? தாங்கள் இந்த உலகைத் துறந்து காஷாயம் வாங்கிக்கொண்டிருப்பதிலிருந்து, மேற்படி தத்துவங்களைஎல்லாம் தாங்கள் நன்றாக உணர்ந்தவர்கள் என்பது நன்றாகத் தெரிகிறது. ஆகையால், தங்களுக்கு நான் இந்த விஷயத்தில் அதிகமாக எடுத்துச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. தயை செய்து தங்களுடைய மனசை அடக்கிக் கொண்டு இப்படிப்பட்ட பாவ நினைவைக் கொண்டதைப் பற்றிக் கழிவிரக்கம் கொண்டு ஈசுவரனுடைய மன்னிப்பை நாடுங்கள்'' என்று நிரம்பவும் பணிவாகக் கூறினாள். அவள் கூறிய நற்புத்தி பண்டாரத்தின் மனதில் சிறிதும் பதிந்ததாகத் தோன்றவில்லை. அவர் அவளது விஷயத்தில் இரக்கமென்பதே கொள்ளவில்லை. ஆனால், முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த மோகாவேசங் கொண்டவராய் அவளை நோக்கி உருக்கமாகப் பேசத் தொடங்கி, ''பெண்ணே! ஷண்முகவடிவு! நீ சொல்லும் வேதாந்த தத்துவங்களை எல்லாம் நானும் புஸ்தகங்களில் படித்திருக்கிறேன். ஒருவன் விஷயங்களைத் தெரிந்து கொண்டு விட்டால் அதன்படியே நடக்கிறான் என்று சொல்ல முடியுமா? மனிதனால் இயலாத விஷயங்களை எல்லாம் புஸ்தகங்களில்

எழுதி வைத்திருக்கிறார்கள். அதன்படி நடப்பது சாத்திய மாகுமா? உலகத்தைத் துறந்து காஷாயம் வாங்கிக் கொள்ளு கிறவர்கள், சிற்றின்பம் எதையும் மனசாலும் நினைக்கக் கூடாதென்று முன்னோர் விதித்திருப்பது நிஜந்தான். அதன்படி, நடப்பதல்லவா பிரயாசை. மனிதனுடைய மனசும் பஞ்சேந்திரியங்களும் மனிதனுக்கு அடங்காத பைத்தியங் கொண்ட கொடும்புலிகள் போன்றவை. ஆகையால், அவன் அவைகளை முற்றிலும் அடக்கி சிறிதும் குற்றமற்ற பரிசுத்த மூர்த்தியாக நடந்துகொள்வது அசாத்தியமான காரியம். முன் காலத்தில் தமது தபோபலத்தினால் மகா அரிய காரியங்களைச் செய்த விசுவாமித்திரர் முதலியோர் எல்லாம் ஸ்திரீகளுடைய அழகினால் மதிமயங்கிப் போய், தமது ஆயுளில் சொற்பகாலம் சிற்றின்பத்தில் லயித்திருக்க வில்லையா? அப்படிச் செய்த தனால் அவர்களுடைய மகிமை குறைந்து போய்விட்டதா? மகா அற்புதமான அழகு வாய்ந்த யௌவனப் பெண்மணியான உன்னை அந்த விசுவாமித்திரர் முதலிய தபோதனர்கள் காண்பார்களானால், அவர்கள் முன் செய்ததுபோல, மறுபடியும் மதிமயங்கி உன்னுடைய சிநேகத்தை நாடுவார்கள் என்பது முக்காலும் திண்ணம். அப்படியிருக்க, என்னைப் போன்ற அற்ப மானிடர்கள் உன்னைக் கண்டு மயங்குவது ஒரு பெரிய காரியமா? நான் இதுவரையில் நிரம்பவும் பரிசுத்தமான நடத்தை உள்ளவனாகவே நடந்துவந்தேன். நான் சகலமான சிற்றின்ப சுகத்தையும் விலக்கி என் மனசை அடக்கியே ஒழுகி வந்தேன். உன்னைக் கண்ட பிறகே, என் மனசின் உறுதி தளர்ந்து, இப்படிப்பட்ட விகாரம் ஏற்பட்டது. அது என் மனசின் குற்றமல்ல. மகா அற்புதமான சக்திவாய்ந்த உன்னுடைய வடிவழகே அதற்கு உத்தரவாதி. எப்போது என் மனம் பேரின்ப நாட்டத்தை விட்டு உன் அழகைக் கண்டு சலித்ததோ, அப்படிப்பட்ட களங்க மனதோடு நான் துறவறத்தை நடத்துவது மகா பாவமான செய்கை. எந்த ஆசையினால் என் மனம் சலித்ததோ, அந்த ஆசையைப் பூர்த்தி செய்துகொண்டு, சே!

இவ்வளவுதானா இந்த இன்பம்! என்று உணர்ந்து மறுபடியும் நான் என் மனதைத் திடப்படுத்திக்கொண்டு அதன் பிறகு ஒரே உறுதியாக நான் துறவற தருமத்தை நடத்தினால், நான் எடுத்துக்கொண்ட காரியம் கெடாமல் முடிவுறும். நான் செய்துள்ள புண்ணிய கருமங்கள் அபாரமானவை. ஆகையால், இந்த அற்ப குற்றத்தினால், அது கெட்டுப் போகாது. என்னுடைய ஆயுசு காலத்தில், நான் இப்படி உன்னுடைய சிற்றின்ப சுகத்தை நாடும் காலம் அணுவிலும் பரம அணு வானதால், இதற்குத் தக்கபடி பிராயச்சித்தம் செய்துகொள்ள எனக்கு ஏராளமான அவகாசம் இருக்கிறது. ஆகையால், நீ எண்ணுகிறபடி இதனால் நான் நரகத்துக்குப் போவேன் என்று நான் நினைக்கவில்லை. இப்போது என் மனதைக் கவர்ந்து சஞ்சலப்படுத்தும் இந்த ஆசையை உன் உதவியால் நான் விலக்கிக் கொள்வேனாகில், இனி என்னுடைய துறவற தருமம் சரிவர நடைபெறும். நான் முன்னிலும் பன்மடங்கு அதிகக் கடுமையான நியம நிஷ்டைகளால் ஒரு நொடியில் இந்தப் பாவத்தைப் போக்கிக்கொள்வதோடு முடிவில் பேரின்ப சுகத்தை அடைவேன். எனக்கு அப்பேர்ப்பட்ட பேரின்பம் வாய்ப்பதற்கு நீ உதவியாக இருப்பதனால், உனக்கும் பெருத்த புண்ணியம் லயிக்கும். ஆகையால், நீ உன் பிடிவாத குணத்தை யும் நாணத்தையும் விலக்கி, என்னிடம் சந்தோஷமாக இரு. பொழுது விடிந்தவுடன் நான் உன்னை உன்னுடைய ஊரில் கொண்டு போய்ப் பத்திரமாகச் சேர்க்கும்படி மனிதரை அனுப்பி வைக்கிறேன். இன்றைய இரவில் நீ இவ்விடத்தில் இன்னது செய்கிறாயென்பது ஒருவருக்கும் தெரியப் போகிறதில்லை. இதை நான் என் உயிருள்ள வரையில் ரகசியமாக வைத்துக் கொள்ளுவதாக உனக்குப் பிரமாணம் செய்து கொடுக்கிறேன்'' என்றார்.

தனது சொற்களைக் கேட்டு அவர் தமது துர் எண்ணத்தை விலக்கிவிடுவாரென்று ஷண்முகவடிவு நினைத்ததற்கு மாறாக, அவர் தனக்கு நீதிபோதனை செய்ததையும், அவர் தன்மீது

கொண்டிருந்த துர் நினைவின் உறுதியையும் கண்ட நமது பெண்மணி தான் அதற்குமேல் என்ன செய்வதென்பதை அறியாமல் சிறிதுநேரம் தயங்கியபின், ''சுவாமிகளே! தாங்கள் சொல்லுவது தாங்கள் சம்பந்தப்படுகிறவரையில், ஒருவிதத்தில் நியாயமான விஷயமாக இருக்கலாம். உலகைத் துறந்து காஷாய மணிந்து மடத்தில் சுவாமி பூஜை செய்துகொண்டிருக்கும் தங்களைப்போன்ற மகான்கள் அற்பமாவது தவறு செய்யாமல் கடைசிவரையில் ஒழுங்கான வழியில் நடந்துகொள்வதே உத்தமமானது. அப்படிச் செய்ய இயலாமல் இடை நடுவில், தாங்கள் மனம் சலிக்குமானால், தாங்கள் துறுவறத்துக்கு இன்னும் பக்குவ நிலைமை அடையவில்லையென்று நினைத்து, இந்த நிலைமையை விடுத்து, இல்லறத்தை ஏற்று யாரையேனும் ஒரு ஸ்திரீயைக் கிரமப்படி கலியாணம் செய்து கொண்டு வாழ்வது ஒழுங்கான காரியமன்றி, அதைவிட்டு தங்களுடைய கண்ணில் படுகிறவள் எவளாக இருந்தாலும் அவள் மேல் துர்மோகம் கொள்வது நியாயமாகுமா? அப்படி தங்கள் கண்களில் படும் ஸ்திரீகளெல்லாம் தாசிகளென்று தாங்கள் கருதலாமா? அவர்களுக்குக் கற்பென்பது இல்லையா? தாங்கள் பேரின்ப வீட்டை அடையவேண்டுமென்று மான முள்ள குடும்ப ஸ்திரீகள் அவர்களுடைய கற்பை இழக்கச் சம்மதிப்பார்களா? தாங்கள் துறவற தருமத்தைக் காப்பது தங்களுக்கு எவ்வளவு முக்கியமானதோ, அதுபோல அவர்களுக்கு இல்லற தருமத்தைக் காப்பது அத்யாவசிய மல்லவா? அவர்கள் தங்கள் தேக பரிசுத்தத்தைக் காப்பாற்றிக் கொள்ளத் தங்கள் புருஷர்களுக்கு உத்தரவாதம் உடையவர் களல்லவா? அப்படியிருக்க, தாங்கள் இடமறிந் தல்லவா இப்படிப்பட்ட பிரஸ்தாபத்தைச் செய்ய வேண்டும். தங்களுடைய விருப்பத்துக்கு இணங்கி நடக்கிறவளைத் தேடிப் பிடித்து தாங்கள் தங்களுடைய பிரியப்படி செய்யலாமே அன்றி, மனிதருடைய யோக்கியதையை அறிந்துகொள்ளாமல் எல்லோரிடத்திலும் தாங்கள் தாறுமாறாக நடந்துகொள்வது

ஒழுங்கல்ல. நான் ஒரு குடும்ப ஸ்திரீ. இப்படிப்பட்ட துர் நடத்தையை மனசால் நினைக்கும் போதே, என் உடம்பு குன்றிப் போகிறது. என் உயிர் போனால்கூட, நான் என் கற்பை மாத்திரம் இழக்க மாட்டேன். ஆகையால், தாங்கள் தயை செய்து என்னை விட்டு அப்பால் போங்கள். நான் தங்களுடைய கண்ணில் படாமல் இப்போதே இந்த மடத்தை விட்டுப் புறப்பட்டு வேறு எங்கேயாவது போய்விடுகிறேன். தங்கள் மனசின் சலனமும் உடனே விலகிப்போம்'' என்றாள்.

அதைக் கேட்ட பண்டாரம் முன்னிலும் அதிக உறுதியாகவும் தீர்மானமாகவும் பேசத்தொடங்கி, ''பெண்ணே! நீ சொல்லுகிற படி செய்வதற்கு நான் தயாராக இல்லை. நான் சொல்கிறபடி நீ செய்வதைத் தவிர வேறே எந்த யோசனையும் இப்போது என் காதில் ஏறாது. என் மனசில் உண்டாகி என் உயிரைக் குடிக்கும் இந்தக் காமவேட்கை உன்னால் ஏற்பட்டது. ஆகையால், உன்னைக் கொண்டு தான் இதை நான் தணித்துக் கொள்ள வேண்டுமே அன்றி, இதற்காக நான் வேறே ஒருத்தியைத் தேடிப் போவது சாத்தியமான காரியமல்ல. யாராவது கையிலுள்ள கனியைவிட்டு மரக்கொம்பிலுள்ள பிஞ்சு பழுக்குமென்று எதிர்பார்த்திருப்பார்களா? முன்னொரு தரம் நீ என் கண்ணில் பட்டு என் மனசை மயக்கிப் புண்படுத்தி பலவிதமான விகாரங்களைக் கிளப்பிவிட்டு, முடிவில் என்னை ஏமாற்றிப் போய்விட்டாய். உன்னால் நான் என் பழைய ஸ்தானத்தை இழந்து நிரம்பவும் அவமானமடைந்து இங்கே வந்து சேர்ந்தேன். உன்னை நான் மறக்க முயன்றும், அது சாத்தியமில்லாதபடி நான் தத்தளித்திருக்கும் நிலைமையில் நீ மறுபடி இங்கே ஏன் வந்தாய்? அது உன்னுடைய குற்றமே ஒழிய என்னுடையதல்ல. ஏற்கெனவே புண்பட்டு உழலும் என் மனசை நீ மறுபடியும் மீளாதபடி துன்பசாகரத்தில் ஆழ்த்திவிட்டுப் போக வந்தாயா? அப்படி நீ செய்ய உனக்கு எங்கிருந்து உரிமை உண்டாயிற்று? உன்னால் என் மனம் புண்படும்போது,

என்னால் உன் தேகம் களங்கப்படுவது மாத்திரம் தகாததாகுமா? பல நாளைய வியாதிக்கு ஒரே மருந்தாக, நான் உன்னை இன்று என்னுடைய மனைவியாக்கியே விடத் தீர்மானித்து விட்டேன். நீ எப்படிப்பட்ட நியாயத்தை எடுத்துச் சொன்னாலும், அது என் காதில் படப்போகிறதேயில்லை. ஏன் நீ வீணில் பிரயாசைப் படுகிறாய். அவசியம் நீ செய்யப்போகும் காரியத்தைக் கசந்து கொண்டு செய்வதிலும், சந்தோஷமாகச் செய்வது இரு திறத்தாருக்கும் சிலாக்கியமானது. ஆகையால், பதில் பேசாமல், நான் சொல்லுகிறதுபோல நடந்துகொள். இந்த அறையின் கதவு வெளியில் தாளிடப்பட்டிருக்கிறது. ஆகையால், நீ இதைத் திறந்துகொண்டு வெளியில் போகமுடியாது. இது இந்த மடத்தின் நடுப்பாகத்திலுள்ள அறை. ஆகையால் நீ எவ்வளவு தான் கூச்சலிட்டாலும் அந்த ஓசை வெளியில் கேட்காது. ஆகையால், இன்று நீ தப்பிப்போவது சாத்தியமில்லை. பேசாமல் பக்கத்தில் வந்துவிடு'' என்று நயமாகவும் அன்பாகவும் கூறினார்.

அதைக்கேட்ட ஷண்முகவடிவு மறுபடியும் பேசத் தொடங்கி, ''ஐயா! இது கொஞ்சமும் அடாது. நான் தனியா இங்கு வந்து அகப்பட்டுக்கொண்டிருக்கிறேன் என்றும், நான் கத்தினால் கூட எனக்கு உதவிக்கு யாரும் வரமாட்டார்கள் என்றும் தாங்கள் நினைத்து இப்படிப்பட்ட அக்கிரமத்தில் இறங்குவது பிசகு. தாங்கள் எவ்வளவோ படித்துத் துறவறம் பூண்டிருந்தும், முக்கியமான ஒரு சங்கதியை மறந்துவிட்டீர்கள். அணுமுதல் அண்டாண்ட பிரமாண்டம் வரையிலுள்ள எண்ணிலடங்காத கோடானுகோடி வஸ்துக்களையும் படைத்து, ஒவ்வொன்றின் காரியங்களையும் தேவைகளையும் க்ஷேமத்தையும் கவனித்துக் காத்து முடிவில் அழித்து வருகிறவரும், சகல வஸ்துக்களிலும் அந்தர்யாமியாய் நிறைந்து உயிருக்குயிராய் நிற்பவருமான கடவுள் இப்போது இவ்விடத்தில் மாத்திரம் இல்லையென்று நீங்கள் எண்ணுகிறீர்கள் போலிருக்கிறது. கடவுளால் நமக்கு ஏதேனும் காரியம் ஆகவேண்டியிருந்தால், நாம் அவரை

நம்மனதால் நினைத்துத் துதிக்கிறோமல்லவா. நம்முடைய மனசு இன்ன இடத்திலிருக்கிறதென்பது நமக்கே தெரிய வில்லை. அது இன்ன இடத்திலிருக்கிறது என்பதையும் அது என்ன எண்ணுகிறது என்பதையும் கடவுள் அறிந்து சதாகாலமும் கவனித்துக் கொண்டிராவிட்டால், நாம் அவரை நினைத்துத் துதிக்கிறோம் என்பது அவருக்குத் தெரியாது அல்லவா? தாங்கள் இந்த மடத்திலிருந்து சுவாமிக்குப் பூஜை நடத்து கிறீர்களே. அதை மாத்திரம் அவர் கவனித்து தங்களுடைய கெட்ட காரியங்களையும் நினைவுகளையும் மாத்திரம் கவனிக்காமல் இருப்பாரென்று நினைக்கலாமா? நாம் செய்யும் நல்ல காரியத்தைக் கடவுள் கவனித்து அதற்காக நமக்கு நல்ல கதி அளிப்பாரென்றும் நாம் எண்ணுவதுபோல அவர் நம்முடைய கெட்ட காரியத்தையும் கவனிப்பாரல்லவா? நமது மனதில் நாம் கடவுளை நினைப்பதை அவர் எப்படி உடனுக்குடன் அறிந்து கொள்கிறாரோ அதுபோல் நாம் நினைக்கும் தீய நினைவு களையும் அவர் அறிந்துகொண்டுதான் இருக்கிறார். கடவுளாகிய சகல வல்லமையுள்ள ஒரு சாட்சி நம்முடைய தூக்கத்திலும் விழிப்பிலும் நம்மோடு கூடவே இருக்கிறார் என்ற எண்ணம் நமக்கு எப்போதும் இருக்க வேண்டாமா? எவ்வளவோ படித்தவர்களாகிய தாங்கள் பூஜை செய்யும் போது கடவுள் இங்கே இருப்பதாகவும் இவ்விதமான தீமைகள் செய்யும்போது அவருக்குக் கண் இல்லாமல் போகிறதென்றும் நினைப்பது ஆச்சரியமாக இருக்கிறது. அப்படி நினைத்து இறுமாப்படைந்து கெட்ட வழியில் பிரவேசித்தால் அது ஒருநாளும் பலித மடையாது. ஆகையால், நான் இங்கே தனியாக அகப்பட்டுக் கொண்டிருக்கிறேன் என்று, தாங்கள் என்னைப் பலாத்காரம் செய்யலாமென்ற எண்ணத்தை மாத்திரம் விட்டு விடுங்கள்'' என்றாள்.

பண்டாரம் அவளது சொல்லைச் சிறிதும் செவியில் கொள்ளாமல் ஏளனமாகப் புன்னகை செய்து, ''பெண்ணே! இந்த வேதாந்தத்தை எல்லாம் நான் உன்னிலும் அதிகமாக அறிவேன்.

அதெல்லாம் புஸ்தக பாடமே ஒழிய, அதன்படி யார் நடந்து கொள்ளுகிறார்கள்? ஒருவரும் நடக்கிறதில்லை. இந்தக் கலிகாலத்தில் சாமியாவது பூதமாவது; அது மனிதருக்குப் பிரத்தியக்ஷ மாகிறதாவது; அவர் தூணிலும் இருக்கிறார். துரும்பிலும் இருக்கிறார் என்று சொல்வதெல்லாம் பாமர ஜனங்களை வெருட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டுக் கதையே அன்றி வேறல்ல. கடவுள் சகலமான வஸ்துக்களையும் படைத்து, அது என்ன செய்கிறதென்று பார்த்துக் கொண்டிருக்கிறார் என்றால் அதைவிடப் பைத்தியக்காரத்தனம் வேறொன்றுமில்லை. இதைவிட கண்ணியமானதும் உபயோக முள்ளதுமான வேறே அலுவல் எதுவும் கடவுளுக்குக் கிடையாதா? எல்லா ஜெந்துக்களையும் படைக்கும் வல்லமை அந்த ஒரு மனிதருக்கே இருக்குமானால், எல்லா ஜெந்துக்களும் நல்ல வழியிலேயே நடக்க வேண்டுமென்று சிருஷ்டிக்க மாத்திரம் அவருக்கு வல்லமை இல்லாமல் போய்விட்டதா? அப்படி நினைப்பது தவறு. எல்லா ஜெந்துக்களையும் படைக்கும் வல்லமை அவருக்கிருந்து, அவைகள் நல்ல வழியிலேயே நடப்பதே அவருக்குப் பிடித்தமாக இருந்தால், எல்லா ஜந்துக்களும் அப்படி நடக்கக்கூடியதாய் சிருஷ்டிக்கப் பட்டிருக்கும். அப்படி இல்லாமல், ஒவ்வொரு ஜந்துவும் அதனதன் பிரியப்படி தனது ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ள எண்ணுகிறது. ஆகையால், அப்படி ஒவ்வொன்றும் தன் தன் விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டுமென்பதே கடவுளின் நோக்கமென்பது நன்றாகத் தெரிகிறது. அதற்கிணங்க, அவர் இந்த உலகத்தில் எத்தனையோ இன்பங்களையும் சுகங்களையும் படைத்து வைத்திருக்கிறார். ஒரு ஸ்திரீயைப் பார்த்து ஒரு புருஷன்தான் ஆசைப்படலாம் என்பது மனிதருடைய கட்டுப்பாடே ஒழிய, கடவுளின் நிர்ணயமல்ல. அது கடவுளின் நிர்ணயமாக இருந்தால் ஒரு மனிதனுக்கு ஒரே ஒரு ஸ்திரீயினிடத்தில்தான் பிரியம் உண்டாகுமன்றி, மற்றவளைக் கண்டால் பிரியம் உண்டாகாது. எப்போது ஒரு

மனிதனுக்குப் பல ஸ்திரீகளிடத்தில் ஆசை உதிக்கும்படி கடவுள் சிருஷ்டித் திருக்கிறாரோ, அது கடவுளுக்குச் சம்மதமான காரியமென்றே எண்ண வேண்டும். உலகத்தில் மனிதரால் ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாடு என்பதொன்று; கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட அமைப்பு வேறு. நான் கடவுளுடைய சட்டங்களுக்குக் கட்டப்படுவேனே அன்றி மனிதனால் ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டுக்கு உட்படக் கூடியவனல்ல. நான் உன்னைக் கண்டவுடன் என் மனசில் உன்மேல் காதல் உண்டாகும்படி கடவுள் சிருஷ்டித்திருப்பதால், அந்த ஆசையை நான் பூர்த்தி செய்து கொள்ளாமல் தடுப்பது கடவுளின் சிருஷ்டிக்கு மாறாக நடந்த குற்றமாகிறது. மனிதனால் ஏற்படுத்தப்பட்ட நிர்ணயப்படி பார்த்தால் நான் உன்னை அடையக் கூடாது என்று நீ சொல்லுகிறாய். அது அக்கிரமமான ஒரு விதியாகையால் அதன்படி நடக்க நான் பிரியப்பட வில்லை. நீ சொல்லுகிறதுபோல கடவுள் எல்லா இடத்திலும் இருப்பதாகவே வைத்துக்கொண்டாலும் அவர் மனிதனால் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தத் தவறுகளை எல்லாம் ஒருநாளும் கவனிக்கவே மாட்டார். ஏனென்றால், இந்த ஏற்பாடுகள் அவருடைய சிருஷ்டி நோக்கத்துக்கு மாறாகச் செய்யப்பட்ட ஏற்பாடுகள். ஆகையால், இந்தக் குற்றமெல்லாம் அவருக்கு ஒரு பொருட்டல்ல, முக்கியமாக அவருடைய கருத்து பெண்ணும் ஆணும் காதல்கொண்டு தங்களுடைய இனம் அழிந்துபோகாத படி செய்து எப்போதும் உலகியல் நடைபெறும்படி செய்ய வேண்டியது. அதுவொன்றே அவருடைய நோக்கம். அதற்காகவே அவர் ஸ்திரீ புருஷர்களையும், ஒருவர் மேல் ஒருவருக்கு வேட்கையும் படைத்திருக்கிறார். மற்றப்படி இன்னின்னார் இன்னின்னாரை அடையவேண்டுமென்ற உள் வயணங்களை எல்லாம் அவர் ஏன் கவனிக்கிறார்? ஆகையால், நீ எண்ணி அஞ்சிறபடி இது ஒரு பெரிய பாவமாகாது. இதற்காக உன்னையாவது என்னையாவது கடவுள் நரகத்திற்குக் கொண்டுபோகப் போகிறதில்லை. நீ நிச்சயமாக நம்பலாம். பிற

மனிதர் இதை அறிந்தால் வயிற்றெரிச்சலினால் தூஷிக்கத் தொடங்குவார்கள். அதற்கு மாத்திரம் இடம் கொடுக்காமல் ரகசியமாக நாம் நமது பிரியப்படி நமது காதலைப் பூர்த்தி செய்து கொள்வதைப்பற்றி யாதொரு ஆட்சேபமும் இல்லை. ஆகையால், கடவுள் நம்மைப் பார்த்துக்கொண்டிருப்பார் என்று லஜ்ஜைப்படவே தேவையில்ல. ஒரு தகப்பன் தன்னுடைய பெண்ணை வேறொரு புருஷனுக்குக் கலியாணம் செய்துகொடுத்து அவர்கள் இருவரும் சேர்ந்து களிக்கும்படி சோபனச் சடங்குகளை நடத்தி யாவற்றையும் சந்தோஷமாக கவனித்துக்கொண்டிருப்பதில்லையா?

அதுபோலவே, சர்வ பிதாவாகிய கடவுளும் அவருடைய குழந்தைகளாகிய நாம் அவரால் படைக்கப்பட்ட இன்பங்களை அனுபவித்து சுகப்படுவதைக் கண்டு சந்தோஷப் படுவாரே அன்றி இதைப் பற்றி கோபமே கொள்ளமாட்டார். ஆனால், இந்த விஷயம் உனக்குப் புதியதாக இருப்பதனால், நீ ஒருவிதமான நாணம் கொள்வது இயற்கைதான். ஆகையால், நீயாகப் பிரியப்பட்டு என்னிடம் வருவாய் என்று நான் எதிர்பார்க்க முடியாது. நான் இந்த விஷயத்தில் உன்னை வற்புறுத்திக் கொஞ்சம் பலாத்காரமாக நடந்துகொள்வது அவசியம்தான். ஆகையால் அப்படியே செய்கிறேன்'' என்று கூறி அவளண்டையில் நெருங்கி வந்தார். உடனே ஷண்முக வடிவு முற்றிலும் பதறிப்போய், ''ஐயா! நீங்கள் சொல்லும் நியாயமும், செய்யும் காரியமும் கொஞ்சமும் ஒழுங்காக இல்லை. இதற்கும் கடவுளுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்று நீங்கள் நினைப்பது விந்தையாக இருக்கிறது. அதுவே உண்மையாக வைத்துக்கொண்டாலும், நாம் இந்த உலகத்திலிருக்கும் வரையில் ஜன சமூகத்துக்குக் கட்டுப்பட்டு அவர்களால் ஏற்படுத்தப்பட்ட நிர்ணயங்களின் படி நடந்து கொள்ளவேண்டாமா? நீங்கள் உலகைத் துறந்த சன்னியாசியாக இருப்பதால், ஜனங்களுடைய ஏற்பாடு உங்களைக் கட்டுப்படுத்தாது என்று நினைக்கலாம். நீங்கள் பரிசுத்தமான

துறவியாக இருந்தால் அது பொருந்தும். நீங்கள் எப்போது ஒரு ஸ்திரீயைக் கண்டு ஆசை கொள்ளுகிறீர்களோ, அப்போது நீங்கள் துறவி என்ற பெயரை இழந்து சாதாரண மனிதனென்ற நிலைமைக்கு வந்துவிடுகிறீர்கள். ஜனசமூகத்திலுள்ள ஒருவித மான பொருளின்மேல் நீங்கள் ஆசைப்படும்போது அவர்க ளுடைய கட்டுப்பாட்டின்படி நடக்க நீங்கள் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். அதுவுமன்றி, அவரவர்கள் இயற்கையாக உண்டாகும் தமது ஆசைகளை அப்படியப்படியே நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று நீங்கள் நினைக்கிறீர்களே! அதன்படி செய்ய இருதிறத்தாருடைய சம்மதமும் அவசியமல்லவா? நீங்கள் நாடும் ஒரு விஷயத்தை நான் முற்றிலும் வெறுக்கிறேன். ஆகையால், நீங்கள் அந்த இடையூறையாவது மதித்து என்னை விட வேண்டும்'' என்றாள்.

அதைக்கேட்ட பண்டாரம் மோகாவேசங் கொண்டவராய், ''அடி பெண்ணே! முதலில் நீ பல பல ஆட்சேபணைகளைச் சொன்னாய். இப்போது அவைகளை எல்லாம் விட்டுவிட்டு உனக்கு என் மேல் பிரியமில்லையென்ற ஆட்சேபணையைச் சொல்லுகிறாய். முதலில் கடவுள் தண்டிப்பார் என்றாய்; பிறகு ஜனங்கள் கோபிப்பார்கள் என்றாய்; இப்போது உன் மனசு பிரியப்படவில்லை என்கிறாய். இப்போது பிரியமில்லா விட்டால், அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. உன்னைப் பலாத்காரம் செய்து வற்புறுத்தினால் உன் மனசு தானாகவே இணங்கிவிடுகிறது. அதைப்பற்றி நீ கொஞ்சமும் கவலைப்பட வேண்டியதில்லை'' என்று கூறிய வண்ணம் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவளைக் கட்டிப்பிடிக்க முயன்றார்.

அந்த மகா அபாயகரமான வேளையில் தான் என்ன செய்து அந்த மகத்தான விபத்தைத் தடுப்பதென்பதை அறியாது கதி கலங்கி திகில் கொண்டுநின்ற பெண்மணி திடீரென்று ஏதோ யோசனை செய்து ஒருவிதமான தீர்மானம் செய்துகொண்டு, ''ஐயா! நான் அநாதையாக இவ்விடத்தில் அகப்பட்டுக்

கொண்டேன் என்று நீர் இப்படிச் செய்து உம்முடைய துராசையை நிறைவேற்ற எண்ணினால் அது உடனே நிறைவேறி விடுமென்ற எண்ணம் போலிருக்கிறது. இந்த உயிர் உள்ள வரையில் இந்த உடம்பு களங்கப்படும்படி நான் விடப் போகிறதில்லை. இதோ என் உயிரை ஒரு க்ஷணத்தில் மாய்த்துக் கொள்ளுகிறேன். இந்தப் பழியையும் பாவத்தையும் நீரே கட்டிக் கொள்ளும்'' என்று கூறியவண்ணம் சடக்கென்று வாயால் ஊதித் தனது கையிலிருந்த விளக்கை அணைத்துவிட்டு ஒரே பாய்ச்சலாக ஒரு மூலைக்குள் பாய்ந்து, அவரது பிடியினின்று விலகிநின்று, அந்த விளக்கின் மேல் மூடியைத் திறந்து, அதற்குள் இருந்த சீமை எண்ணெய் முழுதையும் கவிழ்த்துத் தனது புடவையில் கொட்டிக்கொண்டு நெருப்புப்பெட்டியைத் திறந்து ஒரு குச்சியை எடுத்துக் கிழித்துத் தனது புடவையில் பிடிக்க உடனே குபீரென்று புடவையில் நெருப்புப் பற்றி எரியத் தொடங்கியது.

அவள் விளக்கை அணைத்தவுடனே, அவ்விடத்தில் இருள் சூழ்ந்துகொண்டது ஆகையால், பண்டாரம் அந்தப் பெண்ணரசி இன்னது செய்கிறாள் என்பதை உணராது, அவள் இருந்த இடத்தை அறியாது இருளில் தடவிப் பார்த்துக் கொண்டபோன சமயத்தில் அவர் எதிர்பார்க்காதபடி குபீரென்று ஒரு பெரிய பிரகாசம் உண்டானதைக் கண்டு திடுக்கிட்டு அந்த மடந்தையைப் பார்க்க, அவளது புடவை முழுதும் நெருப்புப் பற்றி ஒரே ஜ்வாலையாகக் கிளம்பி எரிவதைக் கண்டார். காணவே, அவரது மனதில் பெருத்த கிலியும் குழப்பமும் கவலையும் உண்டாகிவிட்டன. அவரது உடம்பு வெடவெட வென்று நடுங்கிப் பதறியது. அவளிடத்தில் விளக்கும் நெருப்புப் பெட்டியும் இருந்ததையும், அவற்றால் அவள் தனது உயிருக்கு ஹானி தேடிக்கொள்வாள் என்பதையும் தாம் சிறிதும் எண்ணாமல் மோசம் போய்விட்டதைப் பற்றியும், தமது கருத்து எப்படியும் நிறைவேறிப் போகுமென்று தாம் உறுதியாக

நம்பியதற்கு மாறாக தாம் ஏமாற்றப்பட்டுப் போனதையும் கண்டு அவர் பெரிதும் ஏக்கமடைந்தார். அந்த வடிவழகின் மகா நுட்பமான உடம்பு தீய்க்கு இரையாவதைக் கண்டு சிறிதும் பொறாத பண்டாரம் உடனே துடிதுடித்து, ''பெண்ணே! வேண்டாம். நான் உன்னை இனி ஒன்றும் செய்வதில்லை. உன் சமீபத்திலும் வருகிறதில்லை. நெருப்பு உடம்பில் உறைக்கு முன் நீ அந்தப் புடவையை அவிழ்த்துப் போட்டுவிடு. நான் இதோ வெளியில் போய்விடுகிறேன். நீ வேண்டுமானால் உள் பக்கத்தில் தாழ்ப்பாள் போட்டுக்கொள்'' என்று கூறிக் கொண்டே, கதவைத் தட்டி வெளியிலிருந்த கிழவியைக் கூப்பிட்டு இரண்டொரு வார்த்தையில் விஷயத்தை அவளுக்கு அறிவுறுத்தினார்.

உடனே வெளித் தாழ்ப்பாள் விலக்கப்பட்டது. பண்டாரம் ஒரே ஓட்டமாகப் பாய்ந்து அங்குமிங்கும் ஓடி பக்கத்தில் தண்ணீர் இருக்கிறதாவென்று தேடிப் பார்த்தபடி கிழவியை நோக்கி, ''அவளுடைய புடவையை அவிழ்த்துவிடச் சொல்; அல்லது அவள் கீழே கிடந்து புரண்டால் நெருப்பு அவிந்து போகும். நீ உள்ளே போய் அவளுக்குத் தைரியம் சொல்லி, நெருப்பை விலக்கிக் கொள்ளச் செய்'' என்று கூறியவண்ணம் தலைதெறிக்க இரண்டாம் கட்டிற்கு ஓடினார்.

கிழவி உள்ளே வருவதற்குள் ஷண்முகவடிவின் முன் பக்கத்துப் புடவை முழுதும் பற்றி எரிந்துபோய்ப் பின் பக்கத்திலும் இரவிக்கையிலும், தலைமயிரிலும் பிடித்துக் கொள்ளத் தொடங்கியது. அந்த உத்தமி அந்தக் கொடிய அக்னியைச் சிறிதும் பொருட்படுத்தாமல் தத்தளித்து நின்றாள். அவள் தனது உயிரைவிடத் தனது கற்பே பெரிதென நினைத்து அபாரமான வீரத்தனத்தோடு திடமனம் கொண்டு உறுதியாக நின்றாள். ஆனாலும், அவளது புடவையிலிருந்த நெருப்பு உடம்பை ஆங்காங்கு சுட்டு எரிக்கத் தொடங்கவே, அதனால் உண்டான எரிச்சலும் நோவும் சகிக்கவொண்ணாத நரக

வேதனையைக் கொடுத்தன. ஆதலால், அவள் தனது பற்களைக் கடித்துக்கொண்டு அந்த மரண வேதனையைச் சகித்துக் கொண்டிருந்தாள். மேலும் அரைக்கால் நாழிகை செல்ல, அவளது பிரக்ஞை முழுதும் அடியோடு தவறிப் போய்விடவே, அவள் வேரற்ற மரம்போலப் படேரென்று தலையில் வீழ்ந்து விட்டாள். அதன் பிறகு அவளது உடம்பில் சுடுவதனால் ஏற்பட்ட எவ்விதப் பாதையையும் அவள் உணரவே இல்லை.

அந்தச் சமயத்தில் பண்டாரம் இரண்டாங் கட்டிலிருந்து தண்ணீர் நிறைய இருந்த ஒரு குடத்தைத் தூக்கிக் கொண்டு ஓடோடியும் வந்து ஷண்முகவடிவின் மீது வார்த்து அவளது ஆடைகளையும் உடம்பையும் நனைத்து நெருப்பை அவித்தார். கிழவி என்ன செய்வதென்பதை அறியாமல் அங்குமிங்கும் ஓடித் தாண்டவமாடுகிறாள்.

பண்டாரம் கொணர்ந்த குடத்தின் தண்ணீரினால், நெருப்பு முழுதும் அடியோடு அணைந்து போய்விட்டதானாலும், ஷண்முகவடிவு அசைவு, பேச்சு முதலிய உயிர்ச் சின்னங் களின்றித் தனது கண்களை மூடியபடி அலங்கோலமாகத் தரையில் கிடந்தாள். அவளது முகத்தில் பிரேதக்களை காணப் பட்டது. பண்டாரம் அவளுக்கருகில் நெருங்கி அவளது கையைப் பிடித்து நாடி அடித்துக் கொள்ளுகிறதா என்று பார்த்தார். நாடி அடித்துக்கொண்டதே தெரியவில்லை. அவள் இறந்து போய்விட்டாள் என்ற எண்ணம் பண்டாரத்தின் மனதில் தோன்றியது. அவர் தமக்கருகிலிருந்த கிழவியை ஏவி ஷண்முக வடிவிற்கு உயிர் இருக்கிறதோவென்று பார்க்கச் செய்ய அவள் அவ்வாறே அந்த மடந்தையின் மார்பு முதலிய இடங்களில் கையை வைத்துப் பார்த்து, ''உயிர் இருப்பது சந்தேகமாகத்தான் இருக்கிறது. ஒருவேளை இவள் மூர்ச்சித்து வீழ்ந்திருந்தாலும் இருக்கலாம். ஆகையால் நாம் ஏதாவது சிகிச்சை செய்து முயற்சி செய்து பார்க்கலாம்'' என்றாள்.

பண்டாரம் அபாரமான திகிலும் கலவரமும் அடைந்து தமது கைகளைப் பிசைந்துகொண்டு தத்தளித்தவராய்க் கிழவியை நோக்கி, ''இது தருமசங்கடமாகவல்லவா முடிந்துவிட்டது. இப்போது நாம் என்ன செய்கிறதென்பது தெரியவில்லையே. இவள் இறந்துபோயிருந்தாலும், அதனால் நமக்குப் பெரிய தீங்கு சம்பவிக்கும். அல்லது, இவள் மூர்ச்சித்திருந்து தெளிந்து எழுந்தாலும், இவள் என்னுடைய உத்தேசத்துக்கு இனி கொஞ்சமும் பயன்படாமல் போவதோடு, இங்கே நடந்த விஷயங்களையெல்லாம் பகிரங்கப்படுத்துவாள். அதன்பிறகு நாம் இந்த மடத்தில் இருக்கமுடியாது. முன்னே இருந்த இடத்தைவிட்டு நான் ஓடிவந்ததற்கு இவளே ஆதாரபூதமாக இருந்தாள். அதுபோல, இப்போதும் நான் இவளால் இந்த இடத்தைவிட்டு ஓடிப்போக நேரும். இந்த இடத்தில் நமக்குச் சகலமான சௌகரியங்களும் வசதிகளும் இருக்கின்றன. இதைவிட்டு நாம் போனால், இவ்வளவு சுகமான இடம் இனி நமக்குக் கிடைக்குமென்பது நிச்சயமில்லை. இந்தத் தரும சங்கடத்தில் நாம் என்ன செய்கிறதென்பது தெரியவில்லையே'' என்று கூறித் தவிக்கலானார்.

அதைக்கேட்ட கிழவி, ''நீங்கள் சொல்வது உண்மைதான். இவளுக்கு நாம் சிகிச்சை செய்து தெளிவிப்பது, நாமே நம்முடைய துன்பத்திற்கு விதை போடுவதுபோல ஆகும். ஆகையால், நாம் இவளுக்கு உயிருண்டாக்க முயற்சிப்பது சரியல்ல. இவளை நாம் இப்படியே விட்டுவிடுவோம். இனி இவள் பிழைக்கமாட்டாள். நாளைய தினம் நாம் ஏதாவது ஒரு கட்டுக்கதை சொல்லி இவளுடைய பிணத்தைக் கொளுத்திவிட ஏற்பாடுசெய்வோம்'' என்றாள்.

பண்டாரம் சிறிது யோசனை செய்து, ''நீ சொல்வது யுக்தமான காரியமாகத் தோன்றவில்லை. இன்னும் இரண்டொரு நாழிகை நேரத்தில் இவள் ஒருவேளை மூர்ச்சை தெளிந்து எழுந்தாலும் எழுந்திருக்கலாம். அதன்பிறகு இவளை நாம் என்ன

செய்கிறது? இவளுடைய உடம்பில் நெருப்புச் சுட்ட தழும்புகளிருக்கும். அதற்கிணங்க, இவள் இங்கே நடந்ததையும் வெளியில் சொல்லுவாள். எல்லோருக்கும் இவளுடைய சொல் உண்மையாகவே படும். அது நமக்கு நிரம்பவும் கெடுதலாய் முடியும். ஆகையால், இவளை நாம் இப்படியே விட்டிருப்பது நல்லதல்ல'' என்றார்.

கிழவி, ''அப்படியானால், இவளுக்கு நாம் இப்போது சிகிச்சை செய்து இவளுடைய உயிரைத் திருப்புவதும் உசிதமல்ல. பிறகு நாம் வேறு எதைத்தான் செய்கிறது? ஏன்? நாம் இன்னொரு காரியம் செய்யக்கூடாதா? இவளைத் தூக்கிக் கொண்டு போய்க் கொல்லையிலிருக்கும் கிணற்றில் போட்டு விடுவோமே'' என்றாள்.

பண்டாரம், ''அதுவும் பலவகையில் கெடுதலாக முடியும். முதலில் நாம் குடிக்கிற தண்ணீர் கெட்டுப்போகும். அதுவுமன்றி இவள் கால்தவறிக் கிணற்றில் விழுந்துவிட்டதாக நாம் சொன்னாலும், இவளுடைய உடம்பிலிருக்கும் நெருப்புத் தழும்புகள் சந்தேகத்தை உண்டாக்கும். போலீசாருக்கும் ஜனங்களுக்கும் திருப்திகரமான சமாதானம் சொல்லி நாம் தப்பித்துக்கொள்வது நிரம்பவும் பிரயாசையாக முடியும். ஆகையால், அப்படிச் செய்யக்கூடாது'' என்றார்.

கிழவி, ''பிறகு நாம் என்னதான் செய்கிறது? இது எந்த வழியிலும் போகமுடியாத பெரிய இக்கட்டாக இருக்கிறதே!'' என்று கூறித் தவித்தாள்.

உடனே பண்டாரம் மேலும் கால்நாழிகை வரையில் ஆழ்ந்து யோசனை செய்து, ''சரி, எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அதன்படி செய்துவிடுவோம். இவளை நாம் உயிரோடாவது இறந்த நிலைமையிலாவது இவ்விடத்தில் வைத்துக் கொள்வதே பிசகு. இவள் நெருப்புச்சுட்டுப் புண்பட்டு உணர்வில்லாமல் விழுந்துகிடக்கும் இந்த நிலைமையில் இவளை மேலும்

அடித்தோ, அல்லது வேறு ஏதாவது செய்தோ வதைக்கவும் என் மனம் இடம் தரவில்லை. ஆகையால், இவளை இப்படியே இந்தப்பாயில் வைத்துச் சுற்றி கயிறுகளைப் போட்டு மூட்டையாகக் கட்டித் தூக்கிக்கொண்டு வெகு தூரத்துக்கு அப்பால் போய், எங்கேயாவது போட்டுவிட்டு வந்து விடுகிறேன். இவள் அநேகமாய் உயிர் பிழைத்து எழுந்திருக்க மாட்டாள். யாராவது அந்த மூட்டையைப் பார்த்து ஆச்சரிய மடைந்து அதற்குள் என்ன இருக்கிறதென்று பார்க்க ஆவல் கொண்டு அதைப் பிரித்துப் பார்ப்பார்கள். அதற்குள் ஒரு பிணம் இருப்பதைக்கண்டு அவர்கள் பயந்து உடனே போலீசாரிடம் போய் விஷயத்தைத் தெரிவிப்பார்கள். போலீசார் வந்து இவளை எடுத்துப் போய் அநாதைக் கொள்ளிப் போட்டுக் கொளுத்தி விடுவார்கள்'' என்றார்.

கிழவி, ''இவள் சாகாமல் பிழைத்திருந்தால், என்ன செய்கிறது? அப்போது இவள் உண்மையைச் சொல்லிவிடுவா ளல்லவா?'' என்றாள்.

பண்டாரம், ''இவள் இனி பிழைப்பதே சந்தேகம். ஒருவேளை இவள் பிழைத்துக் கொள்வாளானால், இவள் தனக்கு நேர்ந்த விபத்தை அப்படியே வெளியிட அநேகமாய் வெட்கப்பட்டு மறைத்து விடுவாள். அல்லது, இவள் உண்மையே தெரிவித்தாலும், அதனால் நமக்கு யாதொரு கெடுதலும் உண்டாகாது. முதலில் நம்முடைய இந்த மடம் எங்கே இருக்கிறதென்பதே இவளுக்குத் தெரியாது. இது ஊருக்குக் கிழக்கிலிருக்கிறது; இவளை நான் ஊருக்கு மேற்கில் வெகுதூரத்துக்கப்பால் கொண்டுபோய்ப் போட்டுவிட்டு வந்துவிடப் போகிறேன். ஆகையால், இவள் தனக்கு ஏதோ ஒரு மடத்தில் விபத்து நேர்ந்ததாகச் சொல்வாளே அன்றி, இந்த இடத்தைக் காட்ட இவளுக்கு அடையாளம் தெரியாது. அதற்குள் நாம் இந்தப் புடவை எரிந்து விழுந்திருக்கும் கரியையெல்லாம் சுத்தமாக எடுத்துப் பெருக்கி இந்த அறையில் சந்தேகாஸ்

பதமான குறி எதுவுமில்லாமல் செய்துவிடுவோம். நாளைய தினம் காலையில் யாராவது நம்மிடம் வந்து இதைப்பற்றிக் கேட்டால்கூட, நமக்கொன்றும் தெரியாதென்று பிரமாணிக்கம் செய்துவிடுவோம். அவள் நம்மேல் குற்றம் சுமத்தினால் அதற்கு வேறே சாட்சி ஒருவருமில்லை. ஆகையால், போலீசார் நம்மேல் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள முடியாது'' என்றார்.

கிழவி அவர் கூறிய யோசனையை ஆமோதித்தாள். உடனே சாமியார் அவளை இரண்டாங்கட்டிற்கு அனுப்பி கெட்டியான தாம்புக் கயிறொன்று எடுத்து வரும்படி செய்தார். அவள் மீது பாதி எரிந்தும், பாதி எரியாமலும் இருந்த புடவை, இரவிக்கை முதலியவற்றை விலக்கிவிடுவதா, அல்லது அப்படியே வைத்திருப்பதா என்று பண்டாரமும் கிழவியும் சிறிதுநேரம் யோசனை செய்து முடிவில் அவைகளை நீக்கிவிடுவதே நல்லதென்று தீர்மானித்தனர். தன்னை அவள் கொளுத்திக் கொண்டாள் என்பதை அந்த ஆடைகள் உடனே உறுதிப் படுத்தும் ஆதலால், அவைகள் இல்லாவிடில், அவளது வார்த்தையை ஜனங்கள் உடனே நம்பிவிட மாட்டார்கள் என்ற நினைவினால் அவர்கள் அவளது ஆடைகளை விலக்கி கிழவியின் கிழிந்த சேலையொன்றை அவள் மீது சுற்றினார்கள். அதன்பிறகு ஷண்முகவடிவு அவ்விடத்தில் பிரிக்கப்பட்டிருந்த பெரிய பாயில் வைத்துச் சுற்றப்பட்டாள். உடனே பண்டாரம் தாம்புக்கயிற்றைக் கொண்டு அந்தப் பாய் மூட்டையை நன்றாக வரிந்துகட்டி, அதுகெட்டியாக இருக்கிறதா என்று இரண்டு மூன்று தரம் அப்புறம் இப்புறம் புரட்டிப் பார்த்தபின்னர், அதைத்தூக்கித் தமது மார்பின்மீதும் இடது தோளின் மீதுமாகச் சார்த்திக்கொண்டு மடத்தைவிட்டு வெளிப்பட்டார். கிழவி உடனே வெளிக்கதவைத் தாளிடாமல் மூடி வைத்து பண்டாரம் திரும்பிவரும் வரையில் தான் காத்திருக்க வேண்டு மென்ற எண்ணத்தோடு நடைத்திண்ணையில் உட்கார்ந்து கொண்டாள்.

பாய் மூட்டையை எடுத்துக்கொண்டு புறப்பட்ட பண்டாரம் நாற்புறங்களிலும் திரும்பித் தமது பார்வையைச் செலுத்தி மனிதர் யாரும் வரவில்லை என்பதை நிச்சயித்துக்கொண்டு கீழக்கோட்டை வாசலை நோக்கிச் செல்லலானார். சென்றவர் மூட்டையைக் கிழக்கு திக்கில் மாரியம்மன் கோவிலுக்குப் போகும் பாதையோடு சென்றால் அருகிலுள்ள போலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்த ஜெவான்கள் யாராகிலும் கண்டுகொள் வார்கள் என்று அஞ்சி, அந்த வழியே செல்லக் கூடாதென்று தீர்மானித்துக்கொண்டு கீழ் அலங்கத்தைக் கடந்து ஊருக்குள் புகுந்து கிழக்கு ராஜவீதியின் வழியாக அரண்மனை வாயிலுக்குள் நுழைந்து அதன் வடக்கு ஆஜாரத்தின் வழியாக வெளிப்பட்டு வடக்கு ராஜவீதியை நோக்கிச் சென்றார். அவரது கருத்து பெரிய ராஜவீதிகளின் வழியாக ரோந்துக்காரர்கள் வந்து கொண்டிருப்பார்கள். ஆதலால், தாம் அவைகளை விலக்கி, சிறிய தெருக்களின் வழியாகவும், சந்துகளின் வழியாகவும் போக உத்தேசித்தே அவ்வாறு சென்றார். முடிவில் அந்த மூட்டையை சிவகங்கைக் குளத்திற்கு அப்பாலுள்ள சேப்பணாவாரி என்னும் பயங்கரமான காட்டிற்குள் போட்டுவிட வேண்டுமென்ற கருத்தோடு அவர் மேற்குத் திக்கில் சென்றார். ஆனால், அவரது எண்ணம் முடிவுபெறாமல் போய்விட்டது. அரண்மனையின் வடக்கு ஆஜாரத்தின் வழியாக வெளிப்பட்டு வடக்கு ராஜவீதியை நோக்கி நடந்து அந்த வீதிக்கருகில் நெருங்கிய காலத்தில் அவ்விடத்தில் ரோந்துக்காரர்களின் குரல் கேட்டது. ஆகவே அவர் அஞ்சி நடுநடுங்கி அந்த ராஜவீதிக்குப் போகாமல், அதற்குப் பக்கத்தில் இருந்த ராணிவாய்க்கால் சந்திற்குள் புகுந்து, அதன் வழியாக மேற்குத் திக்கில் செல்லத் தொடங்கினார். சந்தில் இருள் அடர்ந்திருந்ததன்றி, வீட்டின் கதவுகளெல்லாம் மூடி உட்புறத்தில் தாளிடப் பெற்றிருந்தன. ஆதலால், அந்த இடம் நிர்மானுஷ்யமாகவும் பயங்கரமாகவும் இருந்தது. ஷண்முக வடிவு சுமார் பதினாறு வயதடைந்த பக்குவ காலப் பெண்ணாதலால், நிரம்பவும் கனமாக இருந்த அந்த

மூட்டையைத் தூக்கிக்கொண்டு அவ்வளவு தூரம் வந்ததே, பண்டாரத்துக்கு நிரம்பவும் பிரயாசையாகிவிட்டது. அவருக்கு இரைப்பும் களைப்பும் உண்டாகிவிட்டன. அவரது கைகளும் நடுங்கித் தத்தளித்தன. அந்த நிலைமையில் தாம் வெகு தூரத்திற்கு அப்பால் மனிதரது பேச்சுக் குரலும் கேட்டது. யாரோ மனிதர் எதிரில் வந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை உடனே உணர்ந்து கொண்ட பண்டாரம் பெருத்த கிலியும் நடுக்கமும் அடைந்தார். தாம் திரும்பி வந்த வழியாகவே மறுபடி போனால், ஒரு வேளை ரோந்துக்காரர்களுடைய கண்ணில்பட நேர்ந்தாலும் நேரலாமென்ற எண்ணம் ஒரு புறத்தில் வதைத்தது. ஆகையால், அவர் இருதலைக் கொள்ளி எறும்புபோல எந்தத் திக்கிலும் செல்லமாட்டாதவராய்ச் சிறிதுநேரம் தவித்துத் தயங்கி நின்றார். எதிரில் உண்டான மனிதரது பேச்சுக்குரல் நிரம்பவும் சமீபத்தில் நெருங்கி வந்து கொண்டிருந்தது. பக்கத்தில் எவ்விடத்திலாவது தாம் மறைந்து கொள்ளலாமென்ற நினைவோடு அவர் அப்புறம் இப்புறம் திரும்பி ஆராய்ச்சி செய்து பார்த்தார். இரண்டு பக்கங்களிலும் வீடுகள் வரிசையாக இருந்தனவே அன்றி மறைவான இடம் எதுவும் காணப்படவில்லை. ஆகையால், அவர் அந்த மூட்டையை அதற்குமேல் தாம் எடுத்துப் போவது உசிதமல்லவென்றும், பக்கத்தில் காணப்பட்ட ஒரு பெருத்த மாளிகையின் வாசற்படியில் அதை வைத்துவிட்டுத் தாம் வந்த வழியே திரும்பிப் போய்விட வேண்டுமென்றும் தீர்மானித்துக் கொண்டு விரைவாக நடந்து அந்த மாளிகையின் வாசற் கதவண்டை போய் நீளமாக இருந்தபாய் மூட்டையைக் கதவின் மேல் சார்த்திவைத்தபின் அவ்விடத்தை விட்டு ஓட்டமும் நடையுமாக நடந்து கிழக்கு திக்கில் போய்விட்டார். சிறிது நேரத்தில் மேற்குத் திக்கிலிருந்து வந்த சில மனிதர்கள் கதவில் சார்த்தப்பட்டிருந்த மூட்டையைக் கவனிக்காமல் அப்பால் போய்விட்டனர்.

அந்த இரவு முழுதும் பாய் மூட்டை கதவில் சார்த்தப்பட்டபடியே இருந்தது. பொழுது விடிந்தது. அந்த மாளிகையின் எஜமானியான ஹேமாபாயி என்ற பெயர் கொண்ட ஸ்திரீ தனது படுக்கையை விட்டெழுந்து கண்களைத் துடைத்துக்கொண்டு வெளிக்கதவைத் திறந்து வைக்கும் பொருட்டு வாசலுக்கு வந்து வழக்கப்படி கதவைத் திறந்தாள். திறக்கவே, வெளிப்பக்கத்தில் கதவில் சார்த்தப்பட்டிருந்த பாய்மூட்டை சரசரவென்று நழுவி உட்புறத்தில் சாய்ந்து அவளது காலில் வந்து மோதியது. அவ்வாறு எதிர்பார்க்காத விதமாய் ஒரு பாய் மூட்டை வந்து தன்மீது வீழ்ந்ததைக் கண்ட ஹேமாபாயி திடுக்கிட்டு நடுங்கி வாய்விட்டு, ''ஐயோ! அப்பா! என்ன மூட்டை இது?'' என்று அலறிக் கொண்டு சிறிது தூரம் அப்பால் துள்ளிக் குதித்தாள். அந்தச் சமயத்தில் அந்த வீட்டின் வேலைக்காரி வெளியிலிருந்து அவ்விடத்திற்கு வந்து சேர்ந்து, ஹேமாபாயியின் கூக்குரலைக் கேட்டு வியப்படைந்து, ''என்ன விசேஷம்?'' என்று கேட்க, அவள் நிகழ்ந்ததை இரண்டொரு வார்த்தையில் கூறினாள். அதைக்கேட்டுப் பெரிதும் ஆச்சரியமும் ஆவலும்கொண்ட வேலைக்காரி கீழே குனிந்து பாய் மூட்டையின் இரண்டு பக்கங்களாலும் உள்புறத்தி தனது பார்வையைச் செலுத்தி அதற்குள்ளிருப்பது யாதென்று உற்று நோக்கினாள். ஒரு பக்கத்தில் தலையும், இன்னொரு பக்கத்தில் கால்களும் தெரிந்தன. அதைக்கண்ட வேலைக்காரி மிகுந்த கலக்கமும் திகிலும் அடைந்து, ''ஐயோ! மூட்டைக்குள் ஒரு பிணமல்லவா இருக்கிறது. யாரையோ கொன்று பாயில் வைத்துக் கட்டியல்லவா போட்டிருக்கிறார்கள். எந்தப் பாவி இதை இங்கே கொண்டுவந்து போட்டானோ தெரியவில்லையே! நாம் இதை வைத்துக்கொண்டிருந்தால், பழி நமக்கல்லவா வந்து சேரும். நாம் இதை என்ன செய்கிறது?'' என்று ஆச்சரியத்தோடு மொழிந்தாள்.

அதைக்கேட்ட ஹேமாபாயியும் சகிக்கவொண்ணாத கிலியும் கலவரமும் அடைந்து தனது கைகளைப் பிசைந்துகொண்டு கீழே

குனிந்து மாறி மாறி இரண்டு பக்கங்களாலும் பாய் மூட்டையின் உட்புறத்தைப் பார்த்தாள்.

அப்போது ஷண்முகவடிவின் கால் விரல் அசைந்ததாகத் தோன்றியது. ''ஹா!'' என்று அவள் வாயால் மூச்சுவிட்ட ஓசையும் கேட்டது. அந்த ஓசை வேலைக்காரி, ஹேமாபாயி ஆகிய இருவரது செவியிலும் நன்றாகப் பட்டது. உடனே ஹேமாபாயி, ''அடி! கண்ணம்மா! இதில் இருப்பவருக்கு இன்னும் உயிர் இருக்கிறமாதிரி தோன்றுகிறதே! இது ஆணோ பெண்ணோ என்பதுகூடத் தெரியவில்லையே! என்ன வந்தாலும் வரட்டும். நாம் இனி சும்மா பார்த்துக் கொண்டிருப்பது சரியல்ல. இந்தக் கட்டுகளை அவிழ்த்துவிடு. உள்ளே இருப்பவர் ஒருவேளை பிழைத்துக் கொள்ளக்கூடும்'' என்றாள்.

உடனே வேலைக்காரி அந்த மூட்டையைத் தூக்கி நடைத் திண்ணையில் மறைவாக வைத்துக்கொண்டு அதன்மேல் கட்டப்பட்டிருந்த கட்டுகளை அவிழ்த்தாள். உள்ளே யிருந்த மனிதரது காலின் நிலைமையிலிருந்து அவரது முதுகுப் பக்கம் கீழே இருக்கும்படி மூட்டையை வைத்து அதை மெதுவாகத் தூக்கிக் கொடுத்தபடி, பாயை விலக்கினாள். அப்போது ஹேமாபாயி, வேலைக்காரி ஆகிய இருவரது மனமும் விவரிக்க அரிய அபாரமான ஆவலும் கிலியும் கொண்டு தடதடவென்று நின்றது. அவர்களது கைகால்களெல்லாம் வெட வெட வென்று ஆடின. உடம்பு முழுதும் வியர்த்து நீர் வெள்ளமாக ஓடியது. பாய் முழுதும் விலக்கப்பட்டவுடனே உட்புறத்தில் கண் கொள்ளா அழகோடு திவ்ய தேஜோமயமாக விளங்கிய ஒரு யௌவனப் பெண் இருந்ததைக்கண்ட அந்தப் பெண்டீர் இருவரும் திக்பிரமை கொண்டு திகைத்து ஸ்தம்பித்து நின்றுவிட்டனர். சொகுசானகளை தவழ்ந்த முகத்தோடு இருந்த நமது ஷண்முகவடிவைப் பார்த்த ஹேமாபாயி, ''ஆகா! நான் இதுவரையில் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிறேன். இவ்வளவு அபாரமான அழகு வாய்ந்தவளை நான் பார்த்ததே

இல்லை. இப்படிப்பட்ட சிலாக்கியமான அழகுடைய பெண்ணுக்கு எதனால் இந்தக் கதி வந்ததோ தெரியவில்லையே! இவள் எங்கே இருப்பவளோ என்னவோ ஒன்றும் தெரிய வில்லையே! இவள் ஒருவேளை தன் புருஷனுக்குத் தெரியாமல் ஏதாவது துரோகம் செய்ததைப் புருஷன் கண்டு அடித்து இவள் இறந்துபோய் விட்டாள் என்று நினைத்துப் பாயோடு வைத்துக்கட்டி இப்படிக் கொண்டுவந்து போட்டிருப்பான் போலிருக்கிறது. இமைகள் அசைகின்றனவே! மூச்சும் வருகிறது. இவள் மூர்ச்சித்துக் கிடக்கிறாள் போலிருக்கிறது'' என்ற கூறிய சமயத்தில் ஷண்முகவடிவு மெதுவாகத் தனது கண்களைத் திறந்து பார்த்துத் தனது பார்வையை நாற்புறங் களிலும் திருப்பி மருளமருள விழித்த பிறகு மறுபடி இமைகளை மூடிக்கொண்டாள். அவள் உயிரோடிருக்கிறாள் என்பதைக் கண்ட ஹேமாபாயி அவளைப் பிழைக்கச் செய்ய வேண்டு மென்ற உறுதி செய்துகொண்டு, உடனே திருப்பி வாசற்கதவை மூடி உட்புறத்தில் தாளிட்டுக் கொண்டாள்.

கால் நாழிகை சாவகாசம் கழிந்தது. ஷண்முகவடிவின் முகத்தின் வெளிறு சிறுகச் சிறுக விலகியது. இரத்த ஓட்டமும் ஜீவகளையும் திரும்ப ஆரம்பித்தன. கைகால்களெல்லாம் அசைவு கொடுத்தன. பக்கத்தில் இருந்தவர்கள், மடத்திலிருந்த வர்களா அல்லரா என்பதை ஆராய்பவள்போல, அவள் தனது திருஷ்டியை நாற்புறங்களிலும் செலுத்தி ஆராய்ந்தவுடன் மெதுவாகத் தனது அதரத்தைத் திறந்து, ''குடிக்க ஜலம்'' என்று கூறிவிட்டுத் தனது இமைகளை மறுபடியும் மூடிக் கொண்டாள்.

உடனே வேலைக்காரி ஓடோடியும் உட்புறம் சென்று ஒரு பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து வந்து ஷண்முகவடிவின் வாய்க்கருகில் பிடித்து, ''அம்மா! இதோ ஜலம் கொண்டு வந்திருக்கிறோம். வாயைத் திற'' என்றாள்.

உடனே ஷண்முகவடிவு தனது வாயைக் கொஞ்சமாகத் திறக்க, வேலைக்காரி தண்ணீரை சிறுகச் சிறுக வாய்க்குள்

விடுத்துப் பருகுவித்தாள். அவ்வாறு தண்ணீரைப் பருகியவுடன் களைப்படைந்த ஷண்முகவடிவு தனது கண்களை மூடிச் சிறிது நேரம் உறங்கியபின் களை தெளிந்தவளாய்த் தனது கண்களை நன்றாகத் திறந்துகொண்டாள். அதுவரையில் மெளனமாகவும் வியப்பே வடிவாகவும் உட்கார்ந்து அவளது முகமாறுபாட்டை கவனித்துக் கொண்டிருந்த ஹேமாபாயி, அதற்குமேல் ஷண்முக வடிவு பிழைத்துக் கொள்வாள் என்ற ஒருவித நம்பிக்கையும் மனவெழுச்சியும் கொண்டவளாய் வேலைக்காரியை நோக்கி, ''அடி! இந்தப்பெண் யாரோ, இவளுக்கு யாரால் இப்படிப்பட்ட துன்பம் சம்பவித்ததோ, இவள் இப்படி ஸ்மரணை தப்பிக் கிடக்கும்படி இவளை என்ன செய்தார்களோ என்ற விவரத்தை எல்லாம் நாம் இவளிடத்திலிருந்து தெரிந்துகொள்ள வேண்டும். நாம் தெருவுக்குப் பக்கத்தில் இருந்து இவளோடு பேசிக் கொண்டிருந்தால் ஜனங்கள் கூடிவிடுவார்கள். அதுவுமன்றி இப்போது பால்காரன் வருகிற நேரமாய் விட்டது. அவன் வந்து, கதவைத் தட்டினால் நாம் அதைத் திறந்துவிட வேண்டி யிருக்கும். அவன் உள்ளே வந்து பார்த்து விஷயத்தைத் தெரிந்து கொண்டு அவன் போகுமிடத்தில் எல்லாம் இதைச் சொல்லுவான். இந்தப் பெண் யார்வீட்டுப் பெண் என்பதும், இவளுடைய நிலைமை எப்படிப்பட்டது என்பதும் நமக்குத் தெரிகிறவரையில், இவள் இங்கே வந்த வரலாற்றை நாம் ரகசியமாக வைத்திருக்க வேண்டும். ஆகையால், நாம் முதலில் இவளை மெதுவாகத் தூக்கி எடுத்து மேல் மெத்தைக்குக் கொண்டுபோய் அவ்விடத்தில் படுக்கவைத்து இவளுக்கு ஆகவேண்டியதைக் கவனிப்போம்'' என்றாள்.

வேலைக்காரி, ''ஆம்; அதுதான் நல்ல யோசனை; அப்படியே செய்வோம். நீங்கள் இப்படித் தலைப்பக்கமாய் பிடித்துத் தூக்குங்கள். நான் கால்பக்கத்தில் பிடித்துத் தூக்குகிறேன்'' என்று கூறிய வண்ணம் ஷண்முகவடிவின் பக்கத்தில் நெருங்கி அவளது கால்களை ஒன்றாகத்.சேர்த்துப் பிடித்து எத்தனித்தாள். அவளது கை கால்களில் பட்டவுடனே ஷண்முகவடிவின் உடம்பு துள்ளிக்

குதித்தது. அவள், ''ஐயோ! அம்மா! என் உடம்பு முழுதும் நெருப்பினால் வெந்து போய்ப் பச்சைப் புண்ணாக இருக்கிறது. என் பிராணன் வெகுசீக்கிரத்தில் போய்விடும்போல இருக்கிறது. நீங்கள் என்னுடைய உடம்பைத் தொட்டால், கொஞ்ச நேரத்துக்குப் பிறகு போகும் பிராணன் இப்போதே போய் விடும்'' என்று நிரம்பவும் பரிதாபகரமான மெல்லிய குரலில் கூறினாள். அவள் பேசிய குரலோசை கிணற்றுக்குள்ளிருந்து பேசும் குரலொலிபோல் நிரம்பவும் தணிவாகவும் பலஹீனமாகவும் இருந்தது.

அவளது சொற்களைக்கேட்ட ஹேமாபாயியும் வேலைக்காரியும் ஷண்முகவடிவின் கால் கைகள் உடம்பு முதலியவற்றை நன்றாக உற்று நோக்கினார்கள். நெருப்புச் சுட்டதனால், ஆங்காங்கு கொப்புளங்கள் கிளம்பியும் தோல் வழுவுண்டும் இருந்தது நன்றாகத் தெரிந்தது. அவ்வாறு நெருப்பினால் சுடப்பட்டிருந்த அந்த யௌவன ஸ்திரீயைப் பாய்க்குள் வைத்துக் கட்டி யார் போட்டிருப்பார்கள் என்பதையும் அவர்கள் அவ்வாறு கட்டிப் போட வேண்டிய காரணமென்ன என்பதையும், அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் அவர்களது மனதில் எழுந்து வதைத்தது. ஆனாலும் அவளை அவ்விடத்தில் வைத்துக் கொண்டு பேசுவது உசிதமல்லவென்று நினைத்த ஹேமாபாயி, ''அடீ! இந்தப் பெண்ணின் உடம்பு முழுதும் கொப்புளித்தும் வழுவுண்டும் இருக்கிறதைப் பார்த்தாயா? இவளைப் பாயில் வைத்துக் கட்டி இங்கே கொண்டுவந்து போட்ட மனிதர்களே இவளை நெருப்பினால் சுட்டிருக்க வேண்டுமென்று நினைக்கி றேன். தற்செயலாக இவளுக்கு நெருப்பினால் அபாயம் நேர்ந்திருந்தால், இப்படிப்பட்ட பரிதாபகரமான நிலைமையில் இவளை வைத்துக் காப்பாற்றியிருப்பார்கள். அப்படிச் செய்யாமல் இவளைப் பாயில் வைத்துக் கட்டிக் கொண்டு வந்து போட்டதை கவத்தால், அவர்களே நெருப்பினால் சுட்டிருக்கிறார்கள்

என்று நினைக்கிறேன். இவளுடைய முகத்தைப் பார்த்தால், நிஷ்களங்கமாகவும், மகா பரிசுத்தமான தாகவும் இருக்கிறது. இவள் துர்நடத்தையில் சென்றிருக்கக் கூடியவளாகவே தோன்றவில்லை. அப்படி இருக்க, இவளுக்கு இப்படிப்பட்ட கதி நேர்ந்தது நிரம்பவும் ஆச்சரியகரமாக இருக்கிறது. நாம் இவளை இவ்விடத்தில் வைத்திருக்கக் கூடாது. இவளை நாம் தொட்டு எடுத்துக்கொண்டு போக வேண்டாம். கூடத்தில் தொங்கிக் கொண்டிருக்கம் ஊஞ்சல் பலகை வழுவழுப்பாக இருக்கிறது. அதைக் கழற்றி எடுத்துக் கொண்டு சீக்கிரம் ஓடிவா; இந்தப் பாயோடு மெதுவாகத் தூக்கி ஊஞ்சல் பலகையில் விட்டு பிறகு பலகையைப் பிடித்து மேலே தூக்கிக் கொண்டு போவோம்'' என்றாள்.

வேலைக்காரி அது நல்லயோசனை என்று ஆமோதித்து உடனே அவ்விடத்தைவிட்டு ஓட்டமாகக் கூடத்திற்கு ஓடி அவ்விடத்தில் தொங்கிக்கொண்டிருந்த ஊஞ்சல் பலகையைக் கழற்றி எடுத்துக்கொண்டு விசையாக வந்து சேர்ந்து பலகையை நடையில் வைத்தாள். உடனே அவர்கள் இருவரும் கால்பக்கத்திலும் தலைப்பக்கத்திலுமாக நின்று பாயைப் பிடித்து அசையாமல் ஷண்முகவடிவைத் தூக்கிப் பலகையின் மீது வைத்தனர். அவர்கள் நிரம்பவும் ஜாக்கிரதையாக அவளைத் தூக்கி எடுத்தனர். ஆனாலும் அவளது உடம்பு அசைந்தது. ஆகையால் அது அவளுக்கு மரணவேதனையாக இருந்தது. அவள் வாய்விட்டுப் பரிதாபகரமாக, ''ஐயோ! அப்பா! அம்மா! இன்னமும் உயிர் போகமாட்டேன் என்கிறதே!'' என்று வீறிட்டுக் கதறினாள். அவ்வாறு அவள் தனது தேக பாதையைப் பொறுக்கமாட்டாமல் கத்திய குரலொலி அவர்களது மனதில் ஈட்டியால் குத்துவது போலப் பாய்ந்தது. அவர்களது உடம்பு நடுங்கியது; மயிர் சிலிர்த்தது. அவளது உடம்பு முழுதும் ஒரே புண்ணாக இருந்ததென்பதை அவர்கள் பிரத்தியக்ஷமாக உணர்ந்து கொண்டவர்களாய் நிரம்பவும் ஜாக்கிரதையாகப் பலகையைப் பிடித்துத் தூக்கி அவளது உடம்பு சிறிதும்

அசையாமல் அவளை மேன்மாடத்திற்குக் கொண்டு போய் மறைவான ஓர் அறைக்குள் பலகையோடு கீழே வைத்தனர். உடனே ஹேமாபாயி ஷண்முகவடிவின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு நிரம்பவும் அன்பாகவும் பட்சமாகவும் பேசத்தொடங்கி, ''அம்மா! உன் உடம்பில் நெருப்புச் சுட்ட வரலாற்றைச் சொன்னால், அதற்குத் தகுந்தபடி நாங்கள் மருந்துகள் பூசி தக்க சிகிச்சைகளைச் செய்கிறோம்'' என்றாள்.

உடனே ஷண்முகவடிவு தனது கண்களைத் திறந்துகொண்டு பலஹீனமான குரலோடு பேசத்தொடங்கி, ''அம்மா! நான் இப்போது எங்கே இருக்கிறேன்? இவ்விடத்துக்கு நான் எப்படி வந்து சேர்ந்தேன்?'' என்றாள்.

ஹேமாபாயி:- பெண்ணே! இந்த வீடு ராணிவாய்க்கால் சந்துக்குள் இருக்கும் வீடு. உன்னை யாரோ இந்தப் பாய்க்குள் வைத்துச் சுற்றி ஒரு தாம்புக் கயிற்றினால் இறுகக்கட்டிக் கொண்டு வந்து என்னுடைய வீட்டு வாசல் கதவில் சார்த்தி வைத்திருக்கிறார்கள். அவர்கள் எப்போது கொண்டுவந்து வைத்தார்கள் என்பது தெரியவில்லை. நேற்று ராத்திரிதான் அவர்கள் கொண்டுவந்து வைத்திருக்க வேண்டும். நான் பொழுது விடிந்தவுடன் வழக்கம்போல எழுந்துபோய் வாசற் கதவைத் திறந்தேன். பாய்மூட்டை திடீரென்று உள்ளே சாய்ந்தது. நான் திடுக்கிட்டு பயந்து கொண்டிருந்த சமயத்தில் வேலைக்காரி வந்தாள். அவள் இரண்டு பக்கங்களிலும் குனிந்து பார்த்து யாரோ மனிதர் கொல்லப்பட்டு மூட்டைக்குள் வைத்துக் கட்டப்பட்டிருப்பதாகச் சொன்னாள். உடனே நாங்கள் மூட்டையை அவிழ்த்துப் பார்த்து நீ உயிரோடு இருப்பதைக் கண்டு உன்னை உள்ளே எடுத்து வந்தோம்.

ஷண்முகவடிவு:- ஓகோ! அப்படியா செய்தார்கள்! அவர்கள் எப்பேர்ப்பட்ட கொலை பாதகர்களாக இருக்கிறார்கள்! பார்வைக்குப் பசுக்கள்போல இருக்கிறார்கள். எதற்கும் துணிந்த கொடும்பாவிகளாக இருக்கிறார்களே அம்மா! என்னுடைய

சொந்தஊர் திருவாரூர். இந்த ஊரில் எங்களுடைய மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வீட்டுக்கு என் தமக்கை வந்திருக்கிறாள். அவளைப் பார்க்க வேண்டுமென்று நான் இந்த ஊருக்கு வந்தேன். வந்த இடத்தில் எனக்குப் பலவிதமான அபாயங்கள் நேரிட்டன. தெய்வானுகூலத்தால், நான் அவைகளிலிருந்து தப்பிக் கடைசியில் ஒரு மடத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கே ஒரு கிழவி இருந்தாள். நான் அவளோடு பேசி இரவு முழுதும் அந்த மடத்தில் நான் படுத்துக் கொண்டிருக்க அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அவள் பார்வைக்கு நிரம்பவும் நல்லவளாகக் காணப்பட்டதோடு என்னை அவள் அன்பாக உபசரித்து உள்ளே அழைத்துக் கொண்டு போனாள். முதல் கட்டில் தனியான ஓர் அறையில் பாய்களை விரித்து அவள் என்னையும் படுக்கச் செய்து தானும் படுத்துக் கொண்டாள். அவளுடைய சகோதரர் ஒருவரும் தானும் அந்த மடத்தில் இருந்து வருவதாகவும், அவர் காஷாயம் வாங்கிக் கொண்ட சாமியார் என்றும், அவர் இரண்டாவது கட்டில் படுத்திருப்பதாகவும் அவள் தெரிவித்தாள். கொஞ்சநேரம் படுத்திருந்த பிறகு அவள் தூங்குவதுபோலக் காணப்பட்டாள். எனக்குத் தூக்கம் பிடிக்க வில்லை. அப்படியே உறங்கிக் கொண்டிருந்தேன். கொஞ்ச நேரத்தில் கிழவி எழுந்து ஒன்றுக்குப் போவதாகச் சொல்லி விட்டு மெதுவாக வெளியில் போய்விட்டாள். பிறகு அவளுக்குப் பதிலாக அந்தப் பண்டாரம் வந்து என் பக்கத்தில் படுத்து காலைத்தூக்கி என்மேல் போட்டு கைகளால் என்னைப் பிடித்துக்கட்ட எத்தனித்தார். நான் உடனே சந்தேகித்து சடக்கென்று எழுந்தேன். நல்ல வேளையாக நான் ஒரு நெருப்புப் பெட்டியை எடுத்து வைத்திருந்தேன். கிழவி கொண்டுவந்து வைத்திருந்த விளக்கும் எனக்குப் பக்கத்தில் இருந்தது. ஆகையால், நான் உடனே ஒரு நெருப்புக் குச்சியை எடுத்துக் கிழித்து விளக்கைப் பற்ற வைத்தேன். எனக்கெதிரில் சாமியார் நிற்கிறார். அந்தச் சாமியார் அதற்குமுன் திருவாரூருக்குப்

பக்கத்தில் ஓர் ஊரிலுள்ள மடத்தில் இருந்தவர். அவர் என்னைத் திருவாரூரில் கண்டு என்மேல் துராசைகொண்டு என்னை வஞ்சித்துத் தம்முடைய மடத்துக்கு அழைத்துக்கொண்டு போனார். அப்போதும் தெய்வச் செயலாக ஒரு மனிதர் வந்து என்னை அங்கே இருந்து தப்பவைத்து அழைத்து வந்தார். அந்தச் சாமியாரை அந்த மடத்தின் சொந்தக்காரர் அவமானப்படுத்தி அவ்விடத்திலிருந்து துரத்திவிட்டார். அவர் இந்த ஊருக்கு வந்து ஒரு மடத்தில் இருந்து வந்தார் போலிருக்கிறது. என்னுடைய பொல்லாத கிரகம் என்னை மறுபடியும் அவரிடத்திலேயே கொண்டுபோய் விட்டது. அவரே நான் முன்னே சொன்னபடி என் பக்கத்தில் படுத்து என்மேல் கை கால்களைப் போட்டவர். நான் எழுந்து விளக்கைப் பொருத்திய பிறகும், அவர் என்னை விடாமல் பலாத்காரம் செய்யத் தொடங்கினார். நான் என்னாலான வரையில் அவருக்கு நியாயம் எடுத்துச் சொல்லிப் பார்த்தேன். அவர் ஒரே பிடிவாதமாகவும் மூர்க்கமாகவும் நடந்து என்னைப் பலாத்காரம் செய்ய ஆரம்பித்தார். அவரிடத்திலிருந்து தப்ப வேறு வழியில்லாதிருந்தது. ஆகையால், நான் என் கையிலிருந்த விளக்கை அணைத்து, சீமை எண்ணெயைப் புடவையில் கொட்டி, நெருப்பை வைத்துக் கொளுத்திக் கொண்டேன். புடவைபற்றி எரிந்தது; கொஞ்ச நேரத்தில் என்னுடைய அறிவு மயங்கி இருளடைந்து போய்விட்டது. அதன்பிறகு என்ன நடந்ததென்பது எனக்குத் தெரியாது. உங்களுடைய நடையில் படுத்திருந்தபோதுதான் எனக்குப் பிரக்ஞை உண்டாயிற்று. இப்போது என் உடம்பு முழுதும் ஒரே புண்ணாக இருப்பதோடு, எரிச்சலும் சகிக்க முடியாததாக இருக்கிறது. என்னுடைய உயிரும் போய்க் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. என் விஷயத்தில் நீங்கள் அநாவசியமாகப் பிரயாசை எடுத்துக்கொள்ள வேண்டாம். இனி எப்படிப்பட்ட மருந்தினாலும் என் உயிர் மீளுமென்று நான் நினைக்கவில்லை. தயைசெய்து என்னை நீங்கள் இப்படியே விட்டுவிடுங்கள்- என்றாள்.

அவள் சொன்ன வரலாற்றைக் கேட்ட ஹேமாபாயி நிரம்பவும் துக்கித்தவள்போலத் தோன்றி, ''அம்மா! இந்த ஊர் நிரம்பவும் கெட்ட ஊர். எங்குபார்த்தாலும் துஷ்டர்களும் துன்மார்க்கர்களும் நிறைந்திருக்கிறார்கள். நீயோ மகா சிரேஷ்டமான அழகோடு கூடிய யௌவனப் பெண்ணாக இருக்கிறாய். நீ தனிமையில் இராக் காலத்தில் வெளிப்பட்டதே தவறு. நீ அசலூர் மனுஷி. இந்த ஊரின் யோக்கியதையைத் தெரிந்துகொள்ளாமல் இரவில் தனியாக வெளிப்பட்டு இப்படிப் பட்ட பெருத்த அபாயத்தில் மாட்டிக் கொண்டு விட்டாய். போனதைப் பற்றி இனி கவலைப்படுவதில் உபயோகமில்லை. நீ பேசாமல் படுத்துக்கொண்டிரு. நீ இறந்து போக மாட்டா யென்று நான் எண்ணுகிறேன். இதோ பக்கத்தில் ஒரு வைத்தியர் இருக்கிறார். அவர் நிரம்பவும் திறமை வாய்ந்தவர். அவரை வரவழைத்து உனக்குத் தகுந்த வைத்தியம் செய்விக்கிறேன். நீ உடம்பை அலட்டிக்கொள்ளாமல் படுத்திரு'' என்று கூறியபின் வேலைக்காரியை நோக்கி, ''வைத்தியரை உடனே அழைத்து வா'' என்றாள்.

அவள் உறுதியாகக் கூறிய சொற்களைக்கேட்ட ஷண்முகவடிவு அதற்குமேல் தான் பேசுவதில் உபயோக மில்லை என்று நினைத்து மௌனமாக இருந்துவிட்டாள். அதுவுமன்றி, அவள் முதல் நாளிரவு மடத்தில் தனக்கு நேர்ந்த விபத்தை விவரித்துச் சொன்ன பிரயாசையினால், நிரம்பும் தளர்ந்து சோர்வடைந்து உறக்கத்தில் ஆழ்ந்தாள். வேலைக்காரி வைத்தியரை அழைத்து வருவதற்காக வெளியில் போய் விட்டாள். ஹேமாபாயும் அவ்விடத்தைவிட்டுக் கீழே இறங்கி தான் கவனிக்க வேண்டிய அவசரமான சில காரியங்களை முடித்துக்கொண்டு மறுபடியும் திரும்பி வந்தாள். சிறிது நேரத்தில் வேலைக்காரி ஒரு வைத்தியரை அழைத்துக்கொண்டு ஷண்முகவடிவு இருந்த அறைக்கு வந்து சேர்ந்தாள். வேலைக்காரி ஷண்முகவடிவின் வரலாற்றை எல்லாம்

வைத்தியரிடம் வரும்போதே தெரிவித்துவிட்டாள். ஆதலால், அவர் எவரிடத்திலும் எவ்விதத் தகவலும் கேளாமல் நேராகப் போய் ஷண்முகவடிவின் கை நாடியையும் உடம்பின் இரணங்களையும் சோதனை செய்து பார்த்தபின் ஹேமாபாயியை நோக்கி, "அம்மா! இந்தப் பெண் பிழைப்பது சந்தேகம். இன்னம் மூன்று தினம் வரையில் இவள் உயிரோடிருந்தால் அதற்குமேல் இவள் பிழைத்துக்கொள்வாள். அதற்குமுன் எதையும் நான் நிச்சயமாகச் சொல்வதற்கில்லை" என்றார்.

அதைக்கேட்ட ஹேமாபாயினது முகம் வாட்டமடைந்தது. அவள் மிகுந்த கவலையும் சஞ்சலமும் அடைந்தவளாய், "அப்படியா! இவள் பேசியதையும் முகத்தின் களையையும் பார்த்து இவள் பிழைத்துக்கொள்வாள் என்றல்லவா நான் தைரியமாக நினைத்தேன். இவள் பிழைத்துக் கொண்டால் எல்லாம் நன்மையாக முடியும். இவள் நம்முடைய வீட்டிலிருந்தபடி இறந்துபோனால் நம்முடைய விரோதிகள் இதைப் போலீசாருக்குத் தெரிவித்து நம்மைத் துன்பத்தில் மாட்டி விடுவார்கள். இப்படிப்பட்ட அபாயமான நிலைமையில் இருக்கும் இந்தப் பெண்ணை ஜீவகாருண்யம் இல்லாமல் போலீசாரிடம் ஒப்புவித்து விடவும் எனக்கு மனமில்லை. இவளை வைத்துக்கொண்டிருந்தாலும் எனக்கு ஏதாவது துன்பம் உண்டாகும் போலிருக்கிறது. என்ன செய்வதென்பது தெரியவில்லை. ஆனால் நீங்கள் இவளுக்கு யாதொரு மருந்தும் போடாமல் மூன்றுநாள் வரையில் இப்படியே விட்டுவிடவா சொல்லுகிறீர்?" என்றாள்.

வைத்தியர், "அப்படி அல்ல. நாம் செய்ய வேண்டிய சிகிச்சைகளைச் செய்துகொண்டே போவோம். அநேகமாய் இவள் பிழைத்துக்கொள்ளலாம். ஒருவேளை இவளுடைய ஆயுசு முடிந்து இறந்துபோனால் பிறகு நாமென்ன செய்யலாம்! போலீசாருக்காக இந்த அபாய வேளையில் நீங்கள் பயப்படுவது சரியல்ல. உங்களுக்கு அனுகூலமாக சாட்சி சொல்ல நான்

இருக்கையில் நீங்கள் ஏன் பயப்படவேண்டும்? உங்களுக்கு இதனால் யாதொரு கெடுதலும் ஏற்படாமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்'' என்று உறுதி கூறினார். உடனே ஹேமாபாயி துணிவும் திருப்தியும் அடைந்தாள். வைத்தியர் உடனே வேலைக்காரியை அனுப்பி வாழைக் குருத்துக்களை ஏராளமாக வரவழைத்து அவற்றை மிருதுவான ஒரு மெத்தையின் மீது பரப்பி ஷண்முகவடிவை ஊஞ்சல் பலகையோடு தூக்கி, மெதுவாக அவள் தானாகவே கொஞ்சம் கொஞ்சமாக அந்தப் பலகையிலிருந்து நகர்ந்து அந்த மெத்தையில் படுக்கும்படி செய்தார். தாம் கொணர்ந்திருந்த சீதனமான ரண மருந்துகளை அவளது உடம்பு முழுதும் அப்பும்படி செய்ததன்றி, உள்ளுக்கும் ஹிதமான சில ஔஷதங்களைப் பிரயோகித்துவிட்டு அன்று முழுதும் அவளுக்கு நீராகாரமாகக் கொடுத்துவரும்படி ஹேமாபாயினிடம் சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டுப் போய்விட்டார்.

அந்த மூன்று நாட்கள் ஷண்முகவடிவிற்கு நிரம்பவும் விபரீத மான நாட்களாக இருந்தன. அவளது உயிர் உடம்பில் இருந்ததாகவே தோன்றவில்லை. முதல்நாளில் இருந்ததைவிட, மறுநாள் மூன்றாம் நாள்களில் அவளது புண்கள் அவளை நரகவேதனைக்கு ஆளாக்கி ஆயிரம் ஊசிகள் கொண்டு குத்துவது போல வதைக்கத் தொடங்கின. சிறிதளவு கஞ்சி உட்செல்வது கூட அரிதாகிவிட்டது. அவள் வாய் ஓயாமல் அடிக்கடி அப்பா! அம்மா! வென்று முக்கி முனகிக்கொண்டே படுத்திருந்தாள். ஹேமாபாயியும் வேலைக்காரியும் இரவில் ஓய்வின்றிக் கட்டிக் காத்திருந்து அவளுக்கு அடிக்கடி மருந்துகள் பூசி, ஆகாரம் கொடுத்து, புதிய வாழைக் குருத்துகள் போட்டு விசிறிப் பலவகையில் உபசரித்து வந்தனர். அந்த மூன்று நாட்களிலும் ஷண்முகவடிவு நெருப்பின் மேல் வீழ்ந்த புழுவைப் போலத் துடிதுடித்து உயிர்க்கழுவில் நின்றாள்.

நான்காம் நாள் பொழுது விடிந்தது. அவளது நிலைமையில் நற்குறிகள் காணப்பட்டன. அன்றைய தினம் காலையில் வந்து அவளது நிலைமையை ஆராய்ந்து பார்த்த வைத்தியர் திருப்தியும் சந்தோஷமும் அடைந்தவராய் ஹேமாபாயியை நோக்கி, ''அம்மா! இனி நான் தைரியமாகச் சொல்லலாம். இந்தப் பெண் இனி பிழைத்துக் கொள்வாள். இந்த மூன்று நாளும்தான் பெருத்த கண்டம். முதல் நாள் நான் பார்த்த காலத்தில் இந்தப் பெண்ணின் உள் கருவிகளெல்லாம் வெந்து கொத கொதவென்று போயிருந்தன. அப்போது அவைகள் அப்படியே ஓய்ந்து தத்தம் வேலையைச் செய்யாமல் நின்று போய்விடக்கூடிய நிலைமையில் இருந்தன. அவைகள் ஆறி சொஸ்தப் படக்கூடிய நிலைமையிலேயே அவைகள் இருக்க வில்லை. ஆனால், அதே நிலைமையில் அவைகள் இருந்து இந்த மூன்று தினங்களும் தத்தளித்துச் சமாளித்துக்கொண்டு ஆறத் தொடங்கி இருக்கின்றன. இனி அவைகள் அபாயத்தில் திரும்புமென்ற பயமே இல்லை. இனிமேல் அவைகள் படிப்படி யாக ஆறிக்கொண்டே வரும். ஆனால், நீங்கள் இனிமேல்தான் நிரம்பவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அந்தக் கருவிகளுக்கு அதிக உழைப்பு இல்லாதிருக்கும்பொருட்டு இந்த அம்மாள் தன் மனசையாவது உடம்பையாவது அலட்டிக் கொள்ளாமல் எப்போதும் ஓய்வாகப் படுத்து சந்தோஷமான மனதோடு இருக்கவேண்டும். மோர் பச்சைத் தண்ணீர் முதலியவற்றைச் சேர்த்தால் ஒருவேளை உட்புறக் கருவிகளில் நீர்க்கோவை ஏற்பட்டு புண்களில் சீழ் உண்டாகும். ஆகையால், அவைகளை விலக்கி பத்தியமான சாத்விக ஆகாரம் கொடுத்து வரவேண்டும். இதுவரையில் பிரயோகிக்கப்பட்ட மருந்து களையும் காலம் தவறாமல் பிரயோகித்து வரவேண்டும்'' என்று கூறினார்.

ஷண்முகவடிவு பிழைத்துக்கொள்வாளென்ற நல்ல செய்தியைக் கேட்டவுடனே, ஹேமாபாயியின் மனதில் மிகுந்த

மகிழ்ச்சியும் குதூகலமும் உண்டாயின. அவள் தன் வீட்டில் இறந்துபோனால், அதனால் தனக்குப் போலீசாருடைய நிர்ப்பந்தமும் ஏராளமான பொருட் செலவும் உண்டாகும் என்ற பயம் ஒரு பக்கத்தில் இருந்து வந்தது. அதுவுமன்றி, அவளது மனதில் இன்னொரு ஆவலும் இருந்தது. ஷண்முகவடிவு அதுவரையில் தான் கண்ட பெண்களை எல்லாம் விடப் பதினாயிர மடங்கு அதிகரித்த மனமோகன சுந்தர ரூபமும், முக ஜிலுஜிலுப்பும் மிருதுவான கலியாண குணங்களும் நிறைந்த வளாய் இருந்தமையாலும், அவள் அநாதையாக இருந்தமை யாலும், தான் எப்படியாவது அவளைத் தனது மாளிகையிலேயே இருக்கச் செய்து அவளைக் கொண்டு தான் லக்ஷக்கணக்கில் பணம் சம்பாதித்துக்கொண்டு பெரிய பணக்காரியாகிவிடலாம் என்ற துராசையும் அவளது மனதில் அப்போதே உண்டாகி விட்டது. ஆகையால், அவள் இறந்து போகாமல் பிழைத்துக் கொண்டது அவளுக்கு ஒரு பெருத்த புதையல் அகப்பட்டது போல் இருந்தது. ஆனால் அவள் தன் மனதிற்குள்ளிருந்த அந்தக் கபட நினைவை வெளியில் காட்டிக் கொள்ளாமல், தான் யாதொரு பிரதி பலனையும் கருதாமல் ஜீவகாருண்யம் ஒன்றையே கருதி ஷண்முகவடிவினிடம் பிரியமாக இருந்து அவளுக்குரிய சகலமான உதவிகளையும் பணிவிடைகளையும் செய்து வருவதாகக் காட்டிக் கொண்டாள். அந்த வீடு முன்னரே கூறப்பட்டுள்ளபடி மூன்று மாடங்களைக் கொண்ட பெருத்த மாளிகையாக இருந்ததையும், அதன் உட்புற மெல்லாம் விலையுயர்ந்த பொருட்களால் கொலுமண்டபம் போல வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்ததையும் கண்ட ஷண்முகவடிவு அந்த மாளிகையின் சொந்தக்காரியான ஹேமாபாயி நிரம்பவும் கண்ணியமும் மேம்பாடும் வாய்ந்த பெரிய மனுஷி என்று நினைத்துக்கொண்டதன்றி, அவள் தன் விஷயத்தில் அபாரமான வாஞ்சையும் உருக்கமும் காட்டி இரவு பகல் அரும்பாடுபட்டு ஏராளமான பொருட் செலவு செய்து தன்னைக் காப்பாற்று வதைக் கண்டு அவளைத் தனது சொந்தத் தாயினும்

சிரேஷ்டமானதாகவும் அதிக மரியாதை வணக்கம் பயபக்தி முதலியவற்றோடும் பாராட்டத் தொடங்கினாள்.

முன் கூறப்பட்டபடி நான்காம் நாள் காலையில் வைத்தியர் அவளுக்குரிய பத்தியம் முதலிய நிர்ணயங்களைச் சொல்லி அவள் தனது உடம்பையும் மனதையும் அலட்டிக்கொள்ளாமல் இருக்கவேண்டுமென்று சொன்னபோது ஷண்முகவடிவு தனது வாயைத் திறந்து மெதுவாகப் பேசத் தொடங்கி, "இந்தப் புண்களெல்லாம் ஆறி நான் பழைய நிலைமைக்கு வர இன்னும் எத்தனை நாள் பிடிக்கும்?" என்றாள்.

உடனே வைத்தியர், "ஏன் கேட்கிறாய்? உனக்கு நிரம்பவும் அவரசம்போலிருக்கிறது. குயவனுக்குப் பலநாளைய வேலை; தடியடிகாரனுக்கு ஒருக்ஷணவேலை. அதுபோல நன்றாக இருந்த உடம்பில் நெருப்பை வைத்து ஒரு க்ஷணத்தில் கொளுத்திக் கொண்டாய். ரணங்களை ஆற்றி உடம்பைப் பழைய நிலைமைக்குக் கொண்டு வருவதென்றால், அது லேசான காரியமா? உன்னுடைய அவசரத்துக்காக அது பயப்படுமா? எவ்வளவு காலம் ஆனாலும் அதுவரையில் நீ பொறுத்துக் கொண்டுதான் இருக்க வேண்டும். நான் சொன்னபடி எல்லா விஷயத்திலும் நீ நிரம்பவும் ஜாக்கிரதையாக இருந்தால் சீக்கிரத்தில் சௌக்கியம் ஏற்பட்டுவிடும்" என்றார். அதைக் கேட்ட ஷண்முகவடிவு நிரம்பவும் வெட்கமடைந்தவளாய்த் தனது கண்களை மூடிக்கொண்டு மௌனம் சாதித்தாள்.

அதன்பிறகு வைத்தியர் ஹேமாபாயினிடம் செலவு பெற்றுக் கொண்டு வீட்டிற்குப் போய்விட்டார். அவர்கூறிய கூர்மையான சொற்கள் ஷண்முகவடிவின் மனதில் பசுமரத்தாணிபோல நன்றாகப் பதிந்துவிட்டன. ஆதலால், அவள் எடுப்பார் கைக் குழந்தைபோல மாறிப்போய், ஆகாரம் சாப்பிடுதல், மருந்து உண்ணுதல், ஓய்வு எடுத்துக்கொள்ளுதல் முதலிய சகலமான விஷயங்களிலும் ஹேமாபாயின் சொல்லை மீறாமல் ஜாக்கிரதையாக நடந்து வந்தாள். நாட்கள் கழிந்து கொண்டே

இருந்தன. அவளது இரணங்களெல்லாம் ஆறிக்கொண்டே வந்தன. பழைய தேகபலமும் மன உற்சாகமும் நல்ல நிலைமையும் பெருகத் தொடங்கின. அவளிடம் மற்றவர் அதிகமாய்ப் பேச்சுக் கொடுக்கக் கூடாதென்றும், அவளும் அதிகமாகப் பேச இடங்கொடுக்கக் கூடாதென்றும் வைத்தியர் கண்டித்துக் கூறி இருந்தார். ஆதலால், ஹேமாபாயி அவளிடம் அதிக நேரம் கலந்து பேசாமல், வருவதும் அவளுக்குச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்துவிட்டு இரண்டொரு வார்த்தைகள் பேசிவிட்டுப் போவதுமாக இருந்தாள். தன்னிடத்தில் ஹேமாபாயி ஒரு நாள் போல, சலிப்பாவது கடுகடுப்பாவது இல்லாத மலர்ந்த இனிய முகத்தோடு பேசி, வாஞ்சையாகிய அமிர்த சஞ்சீவியால் தன் மனதைக் குளிரச் செய்து, தன் பொருட்டு எத்தகைய பாட்டையும் பணச் செலவையும் பொருட்படுத்தாமல் ஒழுகி வந்ததைக் காணக் காண, ஷண்முக வடிவின் மனதில் நன்றியறிவும், வாத்சல்யமும், பாசமும் சுரந்து மலைபோல வளர்ந்து கொண்டு போயின. அவள் ஹேமாபாயியைக் காணும்போது ஒரு தெய்வத்தைக் காண்பதுபோலவே மதித்து ஆனந்த பரவசமடைவாள். அவள் கூறிய ஹிதமான மொழிகளைக் கேட்பது புண்பட்ட தனது மனதில் தேவாமிர்தம் சொரியப் படுவதுபோல உணர்ந்து பூரித்துப் புளகாங்கித மடைவாள். தான் கடவுளையே நம்பி இருந்ததற்கு, தனது முன் வினையின் பயனாகத் தனக்குப் பல இன்னல்கள் தோன்றினாலும் கடவுள் இடையிடையே பற்பல மனிதரது மனதில் தோன்றித் தனக்கு நன்மை புரிந்து வருகிறார் என்ற உறுதியான நம்பிக்கையை அவள் கொண்டு சதாகாலமும் கடவுளை நினைத்து நினைத்து ஸ்தோத்திரம் செய்துகொண்டே இருந்தாள். அவளது தேகமும் மனமும் பலப்படப்பட, அவள் தனது அத்தையைப்பற்றியும், கலியாண சுந்தரத்தைப் பற்றியும் நினைத்துக் கவலையுற ஆரம்பித்தாள்.

அவள் படுக்கையைவிட்டு எழுந்து நடந்து தனது காரியங்களைத் தானே கவனித்துக் கொள்ளத் தக்க நிலைமையை அடைய, சுமார் பதினைந்து நாட்களாயின. அதற்குமேல் அவளுக்கு வைத்திய சிகிச்சை தேவையில்லை என்று வைத்தியர் முடிவு கூறிய தினத்தன்று ஹேமாபாயி நூறு ரூபாய் பணமும், விலையுயர்ந்த ஒரு ஜரிகைச் சால்வையும் வைத்தியருக்கு சன்மானம் அளித்தாள். தன் பொருட்டு அவள் அவ்வாறு பணச் செலவு செய்வதைக்கண்ட ஷண்முகவடிவு எவ்விதமான கைம்மாறும் கருதாமல் அவள் தன்மீது வைத்துள்ள அபாரமான வாத்சல்யத்திற்கு ஈடாகத் தான் செய்யக்கூடியது என்ன இருக்கிறதென்று நினைத்து சகிக்கவொண்ணாத மன இளக்கமும் சஞ்சலமும் அடைந்தவளாய் அவளை நோக்கி, "அம்மா! என்னைப் பெற்ற தாயை நான் என் கண்ணால் பார்க்கவே இல்லை. அந்த மனக்குறையை நீங்கள் அடியோடு நிவர்த்தி செய்து விட்டீர்கள். என் சொந்தத் தாய் இருந்தால் கூட, அவள் என் விஷயத்தில் இப்படி நடந்து கொள்வாளோ என்ற சந்தேகம் என் மனசில் உண்டாகிறது. முன்பின் பழக்கமென்பதே இல்லாத என் விஷயத்தில் நீங்கள் இந்தப் பதினைந்து தினங்களாகச் செய்த செலவுகளும், பட்ட பாடுகளும், கொண்ட கவலைகளும் கணக்கிலடங்குமா? இவைகளுக்கெல்லாம் நான் உங்களுக்கு என்ன பதில் உதவி செய்யப் போகிறேன்! நானோ பரம ஏழை; மனிதர் அற்ற அநாதை; பிறந்த முதல் துன்பங்களையும் துயரத்தையும் அனுபவிப்பதற்கென்றே உடம்பு எடுத்த மகா பாவி. நீங்கள் என்னுடைய சொந்தத் தாயை விடப் பன்மடங்கு மேலானவர்களென்று சதா காலமும் எண்ணிக் கொண்டிருப்பதோடு, பிறரிடம் எவ்வித உதவியும் வேண்டாத அமோகமான நிலைமையில் நீங்கள் இப்போது இருப்பதுபோல எப்போதும் உங்களை வைக்கும்படி கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருப்பதே நான் என்னுடைய நன்றியறிதலைக் காட்டுவதற்குச் சமானம்" என்று மேலும்

ஏதோ வார்த்தைகள் கூற ஆரம்பித்தாள். அப்போது அவளது கண்களில் கண்ணீர்த் துளிகள் ததும்பி நின்றன. அவளது முகம் கலங்கியது.

அதைக் கண்ட ஹேமாபாயி நிரம்பவும் வாஞ்சையாகவும் குழைவாகவும் பேசத்தொடங்கி, "ஏனம்மா! நீ இப்படி விசனப்படுகிறாய்? இந்த உலகத்தில் நீ ஒருத்திதானா துன்பமும் துயரமும் அனுபவிக்கிறவள். இந்த ராஜ்யத்தைப் பரிபாலிக்கும் மகாராஜன் முதல் சந்திசந்தியாய்த் திரியும் கேவலம் பிச்சைக் காரன் வரையிலுள்ள சகலமான மனிதரும் ஏதோ ஒரு விதமான துயரமும் கவலையும் கொண்டு சதாகாலமும் சஞ்சலப் பட்டுக்கொண்டே இருக்கிறார்கள். துன்பங்கள் ஒருவர் பாக்கி யில்லாமல் எல்லோருக்கும் நேருகின்றன. ஒவ்வொரு வீட்டிலும் போய் ஒவ்வொரு மனிதரிடமும் பேசிப் பார்த்தால் அவரவர்கள் சொல்லும் வரலாறு பாரத கதை போல இருக்கும். இன்று சந்தோஷமாக இருக்கிறவர்கள் நாளைய தினம் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக மாறுகிறார்கள். இன்று அழுது ஏங்கி இருப்பவர்கள் நாளைய தினம் குதூகலமாக இருக்கிறார்கள். மனிதருடைய நிலைமை ஒரு கட்டுப்பாட்டில் அடங்கியதே அல்ல. மனிதன் இன்று செயலற்ற கைக்குழந்தை, கொஞ்சகாலத்தில் ஓடுகிற பாலகன், மேலும் சொற்ப காலத்தில் உற்சாகமும் குதூகலமும் நிறைந்த யௌவனப் புருஷன், பிறகு சொற்ப காலத்தில் கவலைகளும் உழைப்பும் சகலமான குடும்பப் பொறுப்பும் நிறைந்த திட புருஷன், பிறகு சில ஆண்டுகளில் சகலமும் தளர்ந்த உபயோக மற்ற கிழவன், பிறகு கொஞ்ச காலத்தில் அவன் கேவலம் ஒரு பிடி சாம்பலாக மாறி மண்ணோடு மண்ணாக மறைந்து போகிறான் அல்லவா. ஒருவர் போல எல்லோரும் இவ்விதமான பரிதாபகரமான ஒரேவித முடிவை அடையக் கூடியவர்களாய் இருக்க, ஒருவர் உயர்வு மற்றவர் தாழ்வு என்ற பேச்சே இல்லை. மனிதனுக்கு இந்த உடம்பு இருக்கிறவரையில் அதனால் ஏற்படக்கூடிய

பிணிகளும், அபாயங்களும் இருந்து கொண்டுதான் இருக்கும். அவனுக்கு மனசு என்கிற ஒரு வஸ்து இருக்கிற வரையில், ஆசாபாசங்களும், ஏமாற்றங்களும், துயரங்களும் இருந்து கொண்டுதானிருக்கும். இதனால்தான் துறவிகள் பஞ்சேந்திரியங் களையும் உடம்பையும் அடக்கி, அவற்றின் பலத்தை ஒடுக்கி, மனசு ஈசுவர தியானம் ஒன்றையே நாடும்படி செய்கிறார்கள். அப்படிப்பட்ட தபசிகளுக்கே துன்பமும் துயரமும் அவ்வளவாக இராவென்று நாம் நினைக்கலாம். மற்ற எவர்களையும் துன்பம் விடாது. எனக்கு இப்போது சுமார் 45 வயசாகிறது. அதாவது, நான் உன்னைப் போல மூன்று மடங்கு அதிக காலம் இந்த உலகத்திலிருந்து பார்த்தாய்விட்டது. இதுவரையில் நான் அனுபவித்துள்ள சங்கடங்களையும் எனக்கு நேர்ந்துள்ள அபாயங்களையும் நான் எடுத்துச் சொல்லப் போனால், நீ மூக்கின்மேல் விரலை வைத்து ஆச்சரியப் படுவதோடு, நான் சொல்வதையே நம்பமாட்டாய். இதுபோல் ஒவ்வொருவர் விஷயமும், உள்ளே புகுந்து பார்த்தால், பரிதாபகரமாகத்தான் இருக்கும். நான் இப்போது பேசுகிற மாதிரியிலிருந்து நான் உன் விஷயத்தில் இரக்கம் கொள்ள வில்லை என்றாவது, அனு தாபப்படவில்லை என்றாவது நீ எண்ணிவிடக்கூடாது. எதற்காக நான் மற்றவருடைய துன்பங் களையும் துயரங்களையும் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் காட்டுகிறேன் என்றால், இந்த உலகத்தில் மனிதராகப் பிறந்தால் அவர்கள் தண்ணீர் குடித்து, ஆகாரமுண்டு, தூங்குவது எப்படி சர்வ சாதாரணமான காரியமோ அதுபோல, அவர்கள் துயரப்படுவதும் துன்பம் அனுபவிப்பதும் சர்வ சாதாரணமான காரியம் என்பதை நாம் நம்முடைய மனசில் உறுதியாகப் பதிய வைத்துக் கொண்டால், நமக்கு எப்படிப்பட்ட அபாயம் நேர்ந்தாலும் விசனம் உண்டானாலும், அவைகள் அவ்வளவாக நம்முடைய மனசை பாதிக்கமாட்டா. மூட்டைப்பூச்சி, கொசு, ஈ, எறும்பு முதலியவை நிறைந்த வீட்டில் இருப்போர், அவைகள் கடித்துக் கொண்டே இருந்தாலும், கவலையற்று பிரம்மாநந்தமாகத்

தூங்குகிறதை நாம் பார்த்ததில்லையா? அதுபோல, நம்முடைய உடம்பு துன்பம் துயரம் என்னும் பூச்சிகள் சதாகாலம் நிறைந்து கடித்துக்கொண்டிருக்கும் ஒரு வீடு. இதற்குள்ளிருந்து அந்தக் கடிகளை இலட்சியம் செய்யாமல் நம்முடைய ஜீவன் இருந்தாலன்றி, மனிதர் கடைத்தேறுவது கடினம். துக்கமும், துன்பமும், அபாயங்களும் நிறைந்த இந்த உலகில் நாம் கடைசி வரையில் சந்தோஷமாக இருந்துதான் நம்முடைய வாழ்நாளைக் கடத்தவேண்டுமே அன்றி, அவைகளை விலக்கிவிட்டு நாம் நிம்மதியாக இருக்கவேண்டும் என்று எண்ணுவது கொஞ்சமும் சாத்தியமில்லாத காரியம். ஆகையால், நீ எதைப் பற்றியும் கவலை என்பதே கொள்ளாமல் எப்போதும் சந்தோஷமாக இருக்க முயற்சி செய். உன்னைப் பற்றியாவது, மற்றவரைப் பற்றியாவது நீ கவலைப்படுவதில் யாதொரு பலனும் உண்டாகப் போகிறதில்லை. நம்மை யெல்லாம் படைத்த கடவுள் நம்மைப் பற்றிய கவலைகளை ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டவராய் இருக்க, அதைப் பற்றி நாம் கவலைப்பட்டு நம்மால் ஆவது ஒன்றுமில்லை. வருவது வந்தே தீரும்'' என்றாள்.

அதைக் கேட்ட ஷண்முகவடிவு ஒருவிதமான மனோதிடமும் உற்சாகமும் கொண்டவளாய், ''அம்மா! நான்தான் இந்த உலகில் நிரம்பவும் கஷ்டப்பட்டவளென்று நினைத்திருந்தேன். நீங்கள் எனக்குமேல் எவ்வளவோ அதிகமாகப் பட்டுத் தேறிய பழம் புண்ணாளியாக இருக்கிறீர்கள். நீங்கள் சொல்வதுபோல இந்த உலகில் அநேகமாய் எல்லோரும் இப்படித்தான் சஞ்சலப் பட்டுக்கொண்டிருப்பார்கள் போலிருக்கிறது. நீங்கள் சொல்லும் புத்திமதி என் மனசுக்கு ஒருவித ஆறுதலை உண்டாக்குகிறது. ஆனாலும், எனக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் நீங்குகிற வரையில் அவற்றைக் குறித்து மனம் கவலைப்படாமல் எப்படி இருக்குமென்பதுதான் தெரியவில்லை'' என்றாள்.

உடனே ஹேமாபாயி, ''அம்மா! நீயோ அறியாத சிறிய பெண்ணாக இருக்கிறாய்; உன்னைப் பார்த்தால், தக்க பெரிய இடத்துப் பெண் என்ற நினைவு உண்டாகிறது. நீ உன்னை அநாதை என்று சொல்லிக் கொள்ளுகிறாய். உன்னுடைய முழு வரலாற்றையும் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசையும் ஆவலும் பல நாளாக என் மனசிலிருந்து வருத்தி வந்தன. ஆனாலும், வைத்தியருடைய சொல்லை மீறி நடந்தால் அதனால் உன்னுடைய தேக நிலைமையில் கெடுதல் ஏற்படுமென்று பயந்து நான் இதுவரையில் பொறுத்துக் கொண்டிருந்தேன். நீ மேன் மேலும் உன் விஷயங்களைக் குறித்துக் குறித்துப் பேசுவதைக்கேட்க, இனி உன் வரலாற்றை அறிந்து கொள்ளலாமென்ற எண்ணமும் ஆசையும் உண்டாகின்றன. ஆகையால், நீ உன் விருத்தாந்தங்களை என்னிடம் சொல்லலாம். ஆனால் அதை நான்கேட்டு, உனக்கு என்னால் ஏதாவது உதவி தேவையானால் அதைச் செய்து உன் துயரத்தை விலக்கத் தடையில்லை. நான் ஏகாங்கி; எனக்கு ஆண் பெண் முதலிய சந்ததி எதுவும் இல்லை. என் புருஷர் ஏராளமான சொத்துக் களைத் தேடி வைத்துவிட்டு இறந்துபோய்விட்டார். இந்த மாளிகைக்கும் பெருத்த செல்வத்துக்கும் நானே எஜமானியாக இருந்து வருகிறேன். உனக்கு எவ்வளவு பெரிய உதவி தேவையானாலும், நான் சுயேச்சையாக அதைச் செய்யலாம். நான் யாருடைய அனுமதியையாவது ஆட்சேபனையையாவது எதிர்பார்க்க வேண்டியதில்லை. நீ இனி எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை. உன் முகத்தோற்றமும், உன் வார்த்தைகளும் உன்னுடைய சிரேஷ்டமான குணங்களை நன்றாக எடுத்துக் காட்டுகின்றன. உன்னைப் பார்க்கும்போதே என் மனசில் என்னை அறியாமல் ஒருவித வாத்சல்யமும் பாசமும் பெருகி என் மனசைக் கவருகின்றன. நீ எப்படி என்னைப் பார்த்து, உன் தாயைவிடப் பதின் மடங்கு அதிகமாக மதிக்கிறாயோ, அதுபோல, நான் உன்னை என் வயிற்றில் பிறந்த பெண்ணை விடப் பதினாயிரமடங்கு விசேஷமாக மதிக்கிறேன் என்பதை நீ

என்னுடைய நடத்தையிலிருந்தே கண்டு கொண்டிருப்பாய். இப்போது இந்த இரண்டு மூன்று தினங்களாக என்னுடைய மனசில் இன்னொரு புதிய எண்ணம் உண்டாகிக் கொண்டிருக்கிறது. எனக்கோ வயசு ஆகிவிட்டது. வர வரத் தள்ளாமையும் அதிகரித்து வருகிறது. நீயோ அநாதை என்கிறாய்; நீ சகலமான நற்குணங்களும் பொருந்தியவளாக இருக்கிறாய்; என்னுடைய சலகமான சொத்துக்களையும் உன் பேரிலேயே எழுதி வைத்துவிட்டு, நீ எனக்கு வார்க்கும் கஞ்சியையோ கூழையோ குடித்துவிட்டு நான் நிம்மதியாக இருந்துவிடலாம் என்ற ஒரு நினைவு என் மனசில் உண்டாகிக் கொண்டே இருக்கிறது. எல்லாவற்றிற்கும் நீ உன்னுடைய விருத்தாந் தங்களை எல்லாம் சொல். மற்ற விஷயங்களைப் பிற்பாடு முடித்துக்கொள்ளலாம்'' என்றாள்.

அதைக்கேட்ட ஷண்முகவடிவின் மனதில் பலவிதமான உணர்ச்சிகள் உண்டாயின. தன்மீது ஹேமாபாயி கொண்டுள்ள அளவற்ற பிரியத்தைக் காண அவளது மனம் அபாரமான பூரிப்படைந்து பொங்கியது. நிரம்பவும் அபாரமாக இருந்த அவளது சொத்துக்கள் முழுதையும் அவள் தன் பேரில் எழுதிவைத்துவிட எண்ணுவதாகச் சொன்னதைக் கேட்க, ஹேமாபாயி நிரம்பவும் இளக்கமான மனதையுடைய நற்குணவதி என்ற அபிப்பிராயம் ஷண்முகவடிவின் மனதில் உண்டாயிற்று. தனது வரலாறு முழுவதையும் அவளிடம் வெளியிடலாமா, அல்லது பூனாவிலுள்ள பட்டமகிஷியின் மீது செய்யப்பட்டுள்ள சதியாலோசனை சம்பந்தமாக நடந்துள்ள விஷயங்களை மாத்திரம் விலக்கி, மற்றவைகளை வெளியிட லாமா என்று அந்த மடந்தை சிறிதுநேரம் சிந்தனை செய்தாள். நிரம்பவும் உத்தம குணம் வாய்ந்தவளாகத் தோன்றிய ஹேமா பாயிடம் தான் எந்த ரகசியத்தையும் கூசாமல் வெளியிடலாம் என்ற ஓர் எண்ணம் அவளது மனதில் எழுந்து தூண்டியது. ஆகையால், அவள் தனது குடும்ப வரலாறு முழுதையும்

ஆதியோடு அந்தமாக ஹேமாபாயிடம் தெரிவித்தாள். தனது அத்தை நோயாக வீழ்ந்தபிறகு கமலம் தஞ்சைக்கு வந்தது, தான் உண்டியல் மாற்றத் திருவாரூர் போன காலத்தில், பண்டாரத்தினால் தனக்கு அபாயம் நேர்ந்தது, அதன் மூலமாகத் தனக்குக் கலியாண சுந்தரத்தின் நட்பு ஏற்பட்டது, அவனுக்கும் தனக்கும் கலியாணம் நடத்த முடிவு செய்தது, பிறகு அவன் பட்டமகிஷியின் அபாயத்தை விலக்குவதற்காகப் பூனாவிற்குச் சென்றது, கோலாப்பூரிலிருந்து தனக்குக் கடிதம் வந்தது, தான் உடனே புறப்பட்டு அந்த ஊருக்குப் போனது, அவ்விடத்தில் தனக்கும் ஒரு ஸ்திரீக்கும் நட்பு ஏற்பட்டது,அந்த ஊர்ச் சிறைச்சாலையில் தான் தெரிந்துகொண்ட விஷயங்கள், பிறகு தான் தஞ்சைக்கு வந்தது, மருங்காபுரி ஜெமீந்தாரினது மாளிகையில் தனக்கு அபாயம் நேர்ந்தது, அவ்விடத்திலிருந்து தான் தப்பித்து வந்த பிறகு வழியில் போலீஸ் ஜெவான்கள் தன்னைப் பிடித்துப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போனது, அவ்விடத்திலிருந்த இன்ஸ்பெக்டர் தனக்கு உதவி செய்து, தன்னைத் தனது அக்காள் கொடுத்திருந்த விலாசமுள்ள வீட்டிற்கு அழைத்துப் போனது, அவ்விடத்தில் நடந்த சம்பாஷணை, அதன் பிறகு தான் இன்ஸ்பெக்டரை விட்டுப் பிரிந்து மடத்திற்குப் போனது முதலிய சகலமான விவரங் களையும் ஒன்றுவிடாமல் தெரிவித்தாள். அதைக்கேட்ட ஹேமா பாயி அப்படியே ஸ்தம்பித்துப் போனாள். பட்டமகிஷி, அம்மணிபாயி, மருங்காபுரி ஜெமீந்தார் முதலியோரது விஷயத்தில் ஷண்முகவடிவு வெளியிட்ட விஷயங்கள் ஹேமா பாயின் மனதில் எண்ணிறந்த யூகங்களையும், பலவிதமான யோசனைகளையும் அளவற்ற வியப்பையும் பிரமிப்பையும் உண்டாக்கின. அவளுக்குத் தான் என்னவிதமான சமாதானம் சொல்வதென்பதை அறியாதவளாய்ச் சிறிது நேரம் தத்தளித்தபின் ஹேமாபாயி, "அம்மா! ஷண்முகவடிவு! உன் விருத்தாந்தம் நிரம்பவும் பரிதாபகரமாக இருக்கிறது. முன் காலத்தில் சீதாதேவி, பாஞ்சாலி, தமயந்தி முதலியோருக்குத்

தான் பெருத்த அபாயங்கள் நேர்ந்தனவென்றும், அவர்கள் அனுபவித்த துன்பங்களைப்போல் வேறே யாரும் அனுபவிக்கவில்லை என்றும் புராணங்களில் படித்திருக்கிறேன். உனக்கு நேர்ந்திருக்கும் சங்கடங்களையும், ராமாயணம் பாரதம் முதலிய புஸ்தகங்களைவிடப் பத்துமடங்கு பெரிய புராணம் எழுதலாம் போலிருக்கிறது. உனக்கு இத்தனை துன்பங்கள் நேர்ந்ததற்கும் நீ பெரியவர்களுடைய துணை இன்றித் தனிமையில் இருந்ததே காரணமென்று நினைக்கிறேன். யௌவன பருவமும் அழகும் வாய்ந்த ஸ்திரீகள், நீ இருந்தது போலத் தனிமையில் இருப்பது சுத்தத் தவறு. தாய் தகப்பன் முதலிய பல பெரிய மனிதர்களின் கட்டுக் காவலில் நீ இருந்தால், உனக்கு எவ்வித அபாயமும் நேர்ந்திருக்காது. ஆனால், உன்னுடைய பரிசுத்தமான குணத்தையும், கற்பின் உறுதியையும் கண்டு நான் உன்னை நிரம்பவும் மெச்சுகிறேன். இவ்வளவு சுத்தமான மனிதர் இந்த உலகத்தில் இருப்பது அரிது. உண்மையில் உன்னை ஒரு தெய்வமென்றுதான் கொண்டாட வேண்டும். என்னவோ கடவுள் செயலால்தான் நீ இத்தனை இடர்களிலிருந்தும் நிஷ்களங்கமாகத் தப்பித்து வந்தாய். நீ இவ்வளவு துன்பங்களை அனுபவித்து விட்டாயே என்று கடவுளே உன்மேல் இரக்கம்கொண்டு முடிவில் உன்னை என்னிடத்தில் கொண்டுவந்து சேர்த்துவிட்டதுபோலிருக்கிறது. என்னுடைய அபாரமான சொத்துக்களெல்லாம் வீணாய்ப் போகாமல், அவைகளை அடைவதற்குச் சகலமான யோக்கியதைகளும் வாய்ந்த உன்னை இங்கே கொண்டுவந்து சேர்த்துவிட்டது. இனி உனக்கு எந்த விஷயத்திலும் கொஞ்சமாவது கவலை என்பதே தேவையில்லை. உனக்கு இனி எவ்வித அபாயமும் நேராமல் பார்த்துக் கொள்ள நான் இருக்கிறேன். உன்னுடைய ஏழ்மைத்தனத்தை விலக்கி, உன்னை உயர்வான பதவியில் வைக்க என்னுடைய ஐசுவரியம் முழுதும் இனி உன்னுடைய அக்காள் இருக்குமிடத்தை நான் வெகுசீக்கிரத்தில் கண்டுபிடித்து நீ அவளைப் பார்க்கும்படி

செய்கிறேன். உன்னுடைய ஊருக்கும் நீ உடனே ஒரு கடிதம் எழுது; அதில் அவர்களுடைய செலவுக்காக கொஞ்சமும் பணமும் வைத்து அனுப்புவோம். அங்கேயிருக்கும் வேலைக்காரியும் அம்மன்பேட்டையிலிருந்து வந்த பெண்ணும் உன்னுடைய அத்தையை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படி நீ எழுது. அதை இன்றைய தபாலிலேயே நான் அனுப்பி வைக்கிறேன். உன் அக்காளைக் கண்டுபிடித்த வுடனே, அவளுடைய யோசனையைக் கேட்டுக்கொண்டு உங்கள் அத்தையையும் இங்கேயே வரவழைத்து வைத்துக் கொள்ளலாம். அதன்பிறகு எல்லோருமாக இங்கேயே இருந்து விடலாம். அல்லது உங்களுக்கு இங்கே இருக்க இஷ்டமில்லா விட்டால் நான் என் சொத்துக்களை எல்லாம் எடுத்துக்கொண்டு இந்த வீட்டையும் விற்றுவிட்டு உங்களுடைய ஊருக்கே வந்து விடுகிறேன்'' என்றாள்.

அதைக்கேட்ட ஷண்முகவடிவு மிகுந்த மனயெழுச்சி அடைந்தவளாய் அவளை நோக்கி, ''ஏன் அம்மா! என் அக்காளைக் கண்டுபிடித்து விடலாமென்கிற நம்பிக்கை உங்கள் மனசில் உண்டாகிறதா? சுமார் எத்தனை நாளில் தகவல் தெரியும்? நான் என்னுடைய சொந்த ஊருக்கு உடனே போய் என்னுடைய அத்தையைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் என் மனசில் ஒரு பக்கத்தில் வதைக்கிறது. ஆனாலும் நான் இவ்வளவு தூரம் வந்தபின், என் அக்காளைக் கண்டுபிடிக்காமல் போவதற்கும் மனம் இசையவில்லை. அன்றைய தினம் இரவில் எனக்கு உதவி செய்த போலீஸ் இன்ஸ்பெக்டரையும் நான் மறுபடி பார்க்க வேண்டும். அவரும் என் அக்காள் இருக்குமிடத்தைக் கண்டுபிடிப்பதாக உறுதி சொல்லியி ருக்கிறார். அதோடு நீங்களும் பிரயாசைப்பட்டு, சீக்கிரத்தில் அவளுடைய இருப்பிடத்தைக் கண்டுபிடித்து நான் அவளைப் பார்க்கும்படி செய்தால், அதுவே எனக்குக் கோடி ரூபாய் சன்மானம் செய்ததுபோல இருக்கும். நான் அதிகமான

சொத்துக்களின் மேல் ஆசைப்படவே இல்லை. உங்களுடைய சொத்துகளெல்லாம் இப்போது உங்கள் பேரிலேயே இருக்கட்டும். அதைப்பற்றி பின்னால் யோசித்துக் கொள்ளலாம்'' என்றாள்.

உடனே ஹேமாபாயி, ''அம்மா! ஷண்முகவடிவு! நீ இனி உன் அக்காளைப் பற்றிய கவலையே கொள்ள வேண்டாம். அவள் இருக்குமிடத்தை நான் கண்டுபிடித்து விட்டதாகவே நீ எண்ணிக் கொள்ளலாம். இன்னும் நாலைந்து தினங்களுக்குள், அவளை நீ பார்க்கும்படி நான் செய்கிறேன். அப்படி செய்ய ஒருவேளை என்னால் ஆகாமல் போகுமானால், அதன்பிறகு வேண்டு மானால், நாம் அந்த இன்ஸ்பெக்டரைப் பார்த்து அவர் மூலமாக ஏற்பாடு செய்துகொள்வோம்'' என்றாள்.

அவள் கூறிய உறுதிமொழியைக் கேட்ட ஷண்முகவடிவு மிகுந்த உற்சாகமும் சந்தோஷமும் அடைந்தவளாய், எப்படியும் வெகு சீக்கிரத்தில் தான் தனது அக்காளைப் பார்க்கலாம் என்ற நம்பிக்கையைக் கொள்ளலானாள்.

அவர்கள் இருவருக்கும் நேர்ந்த அன்றைய சம்பாஷணை அவ்வளவோடு முடிந்தது. அன்று முதல் ஹேமாபாயி கலமத்தின் இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பதற்குப் போவதாகச் சொல்லிவிட்டு அடிக்கடி வீட்டைவிட்டு எங்கேயோ போய் வந்து கொண்டிருந்தாள். ஷண்முகவடிவின் பலஹீனத்தைப் போக்குவதற்காக அவளுக்கு உயர்வான தாது புஷ்டி மருந்து களும் கொழுமையான ஆகாராதிகளும் கொடுக்கப்பட்டு வந்தன. அதனால் அவளது உடம்பு மூன்று நான்கு தினங்களில் பழைய அழகையும் தளதளப்பையும் அடைந்துவிட்டது. அவர் சேலை கட்டியிருந்த இடத்தில் இரண்டோர் இடங்களில் மாத்திரம் நெருப்புச் சுட்ட தழும்புகள் ஏற்பட்டிருந்தனவே அன்றி, முகம் முதலிய முக்கியமான இடங்களில் எவ்விதமான தழும்பும் ஏற்படவில்லை. ஆதலால், அவளது வசீகரமான தோற்றத்திற்குச் சிறிதும் களங்கம் ஏற்படவில்லை.

இடையிலிருந்த தழும்புகளை அவளது சேலை மறைத்துக் கொண்டிருந்தது. வெளிப்பார்வைக்கு அவள் நெருப்பினால் அபாயம் அடைந்தவள் என்ற குறிப்பே தென்படவில்லை. நாளுக்கு நாள் அமோகமாகப் பெருகி வந்த அவளது அழகு அவள் ஹேமாபாயின் வீட்டிலிருந்த சுமார் இருபது தினங்களுக்குள் அதியற்புதமாக அபிவிரித்தி அடைந்தது. ஹேமாபாயி தன் விஷயத்தில் கபடமான கருத்தோடு நடந்து வருகிறாள் என்பதை ஷண்முகவடிவு சிறிதும் சந்தேகிக்காமல், அவள் நற்குணம் உடையவள் என்ற எண்ணத்தைக் கொண்டு அவளது சொற்படியே நடந்து வந்தாள். ஆதலால், ஹேமாபாயி அவளது பலஹீனத்திற்கு வைத்தியம் செய்வதாகச் சொல்லிக் கொண்டே அவளுக்கு அதிக ரத்த புஷ்டியையும் அழகையும் உண்டாக்கக்கூடிய ஒளஷதங்களைக் கொடுத்து அவளை அந்தச் சொற்ப காலத்திற்குள் புது மனுஷி யாக்கிவிட்டாள்.

ஷண்முகவடிவு அந்த மாளிகைக்கு வந்தபிறகு இருபது நாட்கள் கழிந்தன. தான் தனது ஊருக்குப் போகவேண்டுமென்ற ஆவலும் ஏக்கமும் அவளது மனதில் க்ஷணத்திற்கு க்ஷணம் பெருகி வளர்ந்து வதைத்துவந்தன. ஆனாலும், ஹேமாபாயி தான் கமலத்தின் இருப்பிடத்தை அதிசீக்கிரத்தில் கண்டுபிடித்து விட இயலும் என்று அவளிடம் சொல்லி, அவளது நம்பிக்கையைப் பெருக்கிக்கொண்டே வந்தாள். ஆதலால், அவ்வளவு தூரம் வந்து அத்தனை நாளிருந்து தனது அக்காளைப் பார்க்காமல் போவதே தவறென்ற எண்ணத்தினால் அந்த நற்குண மடந்தை அவ்விடத்தில் இருந்துவந்தாள். ஹேமாபாயின் சொற்படி அவள் தனது அத்தை இருந்த இடத்திற்கு ஒரு கடிதமும் பணமும் அனுப்பி வைத்தாள். ஒவ்வொரு நாளும் ஹேமாபாயி வெளியில் போய்விட்டு வந்தாள். ஷண்முகவடிவு தனது அக்காளைப் பற்றி நிரம்பவும் கவலையோடு வினவுவாள். அவள் பற்பல இடங்களைக் குறித்து தான் அந்த இடங்களிலெல்லாம் விசாரித்ததில் சில தகவல்கள் கிடைத்திருப்பதாகவும், எப்படியும் சில தினங்களில்

அவளைக்கண்டுபிடித்து விடலாம் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாகவும் கூறிக்கொண்டே வந்தாள். ஹேமாபாயி தன் மனசில் ஒரு கருத்தை வைத்துக்கொண்டே அவ்வாறு காலஹரணம் செய்துவந்தாள். நிரம்பவும் இளைத்து பலஹீனமான நிலைமையிலிருந்த ஷண்முகவடிவின் உடம்பைத் தேற்றி அவளது தோற்றத்தை நிரம்பவும் வசீகரமானதாகச் செய்தபிறகு தான் தனது கபட ஏற்பாட்டை நிறைவேற்றவேண்டுமென்ற நினைவினாலேயே அவள் அவ்வாறு போக்குக்காட்டி அவளை ஏமாற்றிக் கொண்டு வந்தாள். அந்த யௌவனப் பெண்மணியின் வனப்பு நிரம்பவும் அற்புதமாகத் திரும்பும்படி ஹேமாபாயி செய்ததன்றி, அவள் கடைசியாக நெருப்பினால் தன்னைச் சுட்டுக்கொண்ட அன்றைய தினம் மடத்திலிருந்த கிழவியின் கந்தைப் புடவையால் போர்த்தப்பட்டு வந்தவள் ஆதலால், அவள் ஹேமாபாயியினால் கொடுக்கப்பட்ட ஆடைகளை அணிந்து கொள்ள வேண்டியது அவசியமாய் விட்டது. ஹேமாபாயி எப்போதும் பகட்டான பட்டாடைகளும், வைர ஆபரணங்களும் அணிந்துகொள்ளும் வழக்கமும் உடையவள். ஆதலால், அவள் ஷண்முகவடிவிற்கு விலையுயர்ந்த பட்டாடை களையே கொடுத்து அணியச் செய்தாள். அந்த மடந்தை எப்போதும் சர்வ சாதாரணமான எளிய உடைகளையே அணிந்து பழகியவள். ஆனாலும், அவ்விடத்தில் ஏராளமாகக் கிடைத்த உயர்தரப் பட்டாடைகளை ஹேமாபாயியின் தாட்சண்யத் திற்காக அணிய நேர்ந்தது. அந்த மாளிகையில் அவள் எளிய உடைகளை நாடினால் கூட, அவைகள் கிடைப்பது அரிதாக இருந்தது. ஆகவே, அவள் நிரம்பவும் பகட்டான ஆடைகளை அணிவது அத்யாவசியமாக இருந்தது. அவள் அவ்வாறு டாம்பீகமான ஆடைகளை அணிந்திருந்த காலத்தில் அவளைக் காணும் ஹேமாபாயி ஒரு தாய் தனது மகளின் அழகைக் கண்டு எவ்வாறு ஆனந்தபரவசம் அடைவாளோ அவ்வாறு நடித்து, “குழந்தாய்! இந்த ஊர் அரண்மனைக்குள் நான் எத்தனையோ

தடவைபோய், அங்கே இருக்கும் ராஜ ஸ்திரீகளைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் பெயருக்கு மாத்திரம் ராஜ ஸ்தீரீகளே அன்றி, உண்மையில் பார்த்தால் உன்னுடைய கால் நகத்தின் அழகுகூட அவர்களுடைய முகத்தில் இல்லை. இவ்வளவு அற்புதமான அழகோடு உன்னைப் படைத்த ஈசுவரன் உன்னை தக்க ஸ்தானத்தில் வைக்காமல், அநாதையாகவும் ஏழ்மை நிலைமையிலும் வைத்து எத்தனையோ அபாயங் களுக்கும் துயரத்துக்கும் உன்னை ஆளாக்குகிறான் பார்த்தாயா? ஆழ்ந்து யோசித்துப் பார்த்தால், கடவுளைப் போல ஈவிரக்கமற்ற கொடியவன் எவனும் இருக்க மாட்டான் என்றே நான் நினைக்க வேண்டியிருக்கிறது. உன்னைப் பெற்ற தாய் இப்போது உயிரோடிருந்து உன்னைப் பார்த்தால், அவளுடைய மனம் எப்படிக் குளிர்ந்து பரவசமடையும் தெரியுமா? இத்தனைக்கும் உன் உடம்பில் நல்லதாக யாதொரு நகையுமில்லை. நீ ஒரே ஒரு பட்டுச் சேலை கட்டியிருக்கிறாய். அது ஒன்றே இவ்வளவு அழகு கொடுக்கிறதே. இன்னும் நீ வைரக் கம்மல், வைர மூக்குப் பொட்டு, வைர மாட்டல், வைர அட்டிகை முதலியவற்றை அணிந்துகொண்டால், அது எப்படியிருக்குமோ? அப்போது உன்னை யாராவது பார்த்தால், உடனே கண் திருஷ்டி தோஷம் அவசியம் உணடாகிவிடும். அந்த நகைகளெல்லாம் என்னிடம் இருக்கின்றன. நான் குமரியாயிருந்த காலத்தில், நான் அவைகளைப் போட்டுக் கொண்டிருந்தேன். இப்போது கிழவியாய்விட்டேன். அதுவுமன்றி, என் புருஷரும் இறந்து போய்விட்டார். அந்த நகைகளை நான் போட்டுக்கொள்ள சந்தர்ப்பம் இல்லா மையால், எல்லாவற்றையும் பெட்டியில் வைத்துப் பூட்டி யிருக்கிறேன். அவைகளையெல்லாம் உனக்குப் போட்டுப் பார்க்கவேண்டுமென்ற ஓர் அவா சில நாட்களாக என் மனசில் இருந்து வருகிறது. அவைகளை எல்லாம் உனக்கே கொடுத்து விடவேண்டுமென்ற நினைவும் உண்டாகிறது. ஆனால், நீ அவைகளை ஏற்றுக்கொள்ள ஒருவேளை ஏதாவது ஆட்சேபனை சொல்வாயென்ற பயமும் இருந்து வருகிறது. நீ

இங்கே இருக்கிற வரையிலாவது நீ அவைகளை அணிந்து கொண்டிருந்தால், அந்த நகைகளை நான் போட்டுக் கொண்டிருந்தால் என் மனம் எவ்வளவு அதிகமாக சந்தோஷம் அடையுமோ, அதைவிடப் பன்மடங்கு அதிகமான ஆனந்தத்தை நான் அடைவேன். நீ இங்கே வீட்டுக்குள்ளேயே இருக்கிறாய். இங்கே அன்னிய மனிதர் யாரும் வரமாட்டார்களென்பது உனக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. ஆகையால், என்னுடைய ஆத்ம திருப்தியைக் கருதி நீ அந்த நகைகளைப் போட்டுக் கொள்ள வேண்டும். நீ அப்படிச் செய்தால்தான் என்னிடம் நீ உண்மையான பிரியமும் நன்றி விசுவாசமும் வைத்திருக்கிறாய் என்பது வெளிப்படையாகத் தெரியும்'' என்றாள்.

அதைக்கேட்ட ஷண்முகவடிவு அவளது வேண்டுகோளை மறுக்க மாட்டாதவளாய், அதற்கு இணங்கினாள். ஹேமாபாயி கபடநினைவோடு அவ்வாறு சூழ்ச்சி செய்கிறாள் என்று சிறிதும் சந்தேகியாத அந்த அணங்கு அவளால் கொடுக்கப்பட்ட வைர ஆபரணங்களை வாங்கி அணிந்துகொண்டாள். அந்த வடிவழகி தலைமுதல் கால்வரையில் அத்தகைய உயர்தர ஆபரணங்களை அணிந்து பனாரீஸ் பட்டாடைகளைத் தரித்து தத்ரூபம் அப்ஸர ஸ்திரீபோல மாறிப் போனதைக் கண்ட ஹேமாபாயி, ''குழந்தாய்! இப்போது உன்னைப் பார்ப்பதற்கு ஒரு கண் போதாது. பதினாயிரம் கண்கள் வேண்டும். இப்படிப்பட்ட நிதிக்குவியலாகிய உன்னை எப்போதும் சாஸ்வதமாக அடைய எந்தப் புண்ணியவான் காத்திருக்கிறானோ! அது ஈசுவரனுக்குத் தான் தெரியவேண்டும். உன் மனம் இன்னும் அந்தக் கலியாண சுந்தரத்தினிடமே உறுதியாக இருக்கிறது. தெய்வம் அந்த மனிதனுக்கே நல்ல புத்தி கொடுத்து அவனை நல்ல மார்க்கத்தில் திருப்பி வெகு சீக்கிரம் அவனை உன்னிடம் கொணர்ந்து சேர்க்கும்; நீ கவலைப்படாதே'' என்று கூறினாள். ஒருநாள் முழுதும் ஷண்முகவடிவு அந்த ஆபரணங்களை அணிந்திருந்து இரவில் கழற்றிவைக்கத் தொடங்கினாள். ஹேமாபாயி

அன்பாகக் கடிந்து, "அம்மா! ஏன் நீ இப்படி ஆத்திரப்படுகிறாய்? இந்த நகைகளெல்லாம் பெட்டியிலிருந்து அழுக்கடைவதை விட உன் உடம்பிலேயே இருக்கட்டுமே. நீ ஊருக்குப் போகையில் வேண்டுமானால் கழற்றிவிடலாம். அதுவரையில் நீயே போட்டிரு" என்றாள். அதைத் தடுக்க மாட்டாமல் ஷண்முகவடிவு அதற்கும் இணங்கினாள். அடுத்த தினங்களில் அது ஷண்முகவடிவிற்குச் சர்வசாதாரணமாகிவிட்டது. அவள் படாடோபமான பட்டாடைகளையும் வைர ஆபரணங்களையும் அணிந்துகொண்டே இருந்ததன்றி, அவைகளைப் பற்றி மனக் கிலேசமடையவுமில்லை; ஹேமாபாயிடம் எவ்வித ஆட்சேபமும் சொல்லவுமில்லை.

மேலும் இரண்டு நாட்கள் கழிந்தன. ஷண்முகவடிவு எப்போதும்போல இயற்கையழகும் செயற்கைஅழகும் வாய்ந்து ஜெகஜ்ஜோதியாக விளங்கிக் கொண்டிருந்தாள். தான் அவ்வாறு ஒரே அழகுத் திரளாகவும், மனமோகன சுந்தர ரூபிணியாகவும் இருந்ததை அவள் சிறிதும் உணராமல், ஹேமாபாயின் தாட்சண்யத்திற்காக தான் அவ்வாறு செய்ய வேண்டியது தனது கடனென அவள் நினைத்திருந்தாள். அன்றையதினம் பகற் போஜனம் முடிவடைந்தபிறகு வீட்டைவிட்டு வெளியில் போயிருந்த ஹேமாபாயி மாலை 7 மணி சுமாருக்கு வீட்டுக்குத் திரும்பிவந்து மிகுந்த ஆவலோடும், படபடப்போடும் மேன் மாடத்திலேறி, "ஷண்முகவடிவூ! ஷண்முகவடிவூ! உனக்கு நல்ல செய்தி கொண்டு வந்திருக்கிறேன். உன் அக்காள் கமலம் அகப்பட்டுவிட்டாள். மருங்காபுரி ஜெமீந்தார் அவளுக்கு ஏதாவது கெடுதல் செய்யாதிருப்பாரோ வென்று நீ சந்தேகித்தாயே! அப்படி எதுவும் நடக்கவில்லை. அவள் பத்திரமாகவே இருக்கிறாள்" என்றாள்.

அந்த எதிர்பாராத நல்ல சங்கதியைக் கேட்ட ஷண்முகவடிவு ஆனந்தப் பெருக்கினால் தன்னை மறந்து துள்ளிக் குதித்து ஹேமாபாயிடம் ஓடிவந்து, "ஆ! அப்படியா! என் அக்காள்

அகப்பட்டு விட்டாளா! அவள் எங்கே இருக்கிறாள்? இப்போது உங்களோடு வந்திருக்கிறாளா? நீங்கள் அவளைப் பார்த்தீர்களா? நான் இங்கே வந்திருப்பது அவளுக்குத் தெரியுமா?'' என்று பல கேள்விகளைக் கேட்கத் தொடங்கினாள்.

அதைக்கேட்ட ஹேமாபாயி அவளைக் காட்டிலும் அதிக ஆவேசம் கொண்டவளாய், ''அவள் இதோ இந்த ஊர் அரண்மனையில் இருக்கிறாள். நான் போய் நேரில் அவளைக் கண்டு உன்னுடைய சங்கதிகளையும் நீ இங்கே வந்திருப்ப தையும் தெரிவித்தேன். உனக்கு நேர்ந்த அபாயங்களைக் கேட்டு அவள் அடைந்த விசனம் சொல்ல முடியாது. அவள் உன்னைப் பார்க்க வேண்டுமென்று நிரம்பவும் ஆவல்கொண்டு துடி துடித்துக்கொண்டிருக்கிறாள்; உன்னை உடனே அழைத்துக் கொண்டு வரும்படி என்னை அனுப்பினாள்'' என்றாள். அதைக் கேட்ட ஷண்முகவடிவு கட்டிலடங்கா மனவெழுச்சியும் ஆவலும் அடைந்தவளாய், ''அவள் சக்கா நாயக்கர் தெருவிலி ருப்பதாக அல்லவா எனக்கு எழுதி இருந்தாள்; அவள் இந்த ஊர் அரண்மனையில் இருக்க வேண்டிய காரணமென்ன?'' என்றாள்.

ஹேமாபாயி, ''நான் அவளைக் கண்டவுடனே, அந்த சந்தோஷத்தில் அவள் எனக்கு எழுதிய விலாசத்தைப் பற்றிய தகவலைக் கேட்க மறந்துவிட்டேன். நான் இந்த ஊர் அரண்மனையிலுள்ள என்னுடைய சிநேகிதை ஒருத்தியைப் பார்த்துவிட்டு வரவேண்டுமென்று அங்கே போய் அவளோடு பேசிக்கொண்டிருந்தேன். அவள் சக்கா நாயக்கர் தெருவில் குடியிருப்பவள்; பகலெல்லாம் அவள் அரண்மனையில் வேலை செய்துவிட்டு இரவில் அவள் தன்னுடைய வீட்டுக்குப் போய்விடுவாள். அவளோடு நான் என்னுடைய சொந்த விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது அவள் இருந்த தெருவின் நினைவு வந்தது. அவளிடம் கேட்டுப் பார்த்தால் ஏதாவது தகவல் தெரியுமென்ற எண்ணம் உண்டானது. சோமசுந்தரம்பிள்ளை என்று யாராவது பெரிய

மனிதர் அந்தத் தெருவில் இருக்கிறாரா என்று நான் அவளிடம் கேட்டேன். அவள், "ஆஹா! இருக்கிறார். அவர் இந்த ஊர் இளவரசருக்கு நிரம்பவும் அந்தரங்கமான சிநேகிதர். இந்த அரண்மனையில் தார்வார் தேசத்திலிருந்து பூர்ணசந்திரோதயம் என்று பெயர்கொண்ட ஒரு பெண் வந்திருக்கிறாள். இளவ்ரசருடைய பட்டமகிஷி விபசார தோஷம் செய்து விட்டாள். ஆகையால், இளவரசர் நேரிலேயே பூனாதேசம் போய், அந்தச் சங்கதியை நேரிலே பார்த்துவிட்டு வந்திருக் கிறார். அவர் அந்தப் பட்டமகிஷியைத் தள்ளிவிட்டு மேற்படி பூர்ணசந்திரோதயத்தைக் கலியாணம் செய்து கொண்டு அவளையே பட்டமகிஷியாக்கப் போகிறார். அதற்காக முகூர்த்த நாள் குறிப்பிட்டாய் விட்டது. இன்னும் 3 தினங்களில் கலியாணம் நடக்கப் போகிறது. அதற்காக சகலமான ஏற்பாடு களும் நடந்து வருகின்றன. அரண்மனை முழுதும் அற்புதமாக அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. இளவரசருடைய ஆப்த சிநேகிதர்கள் எல்லோரும் குடும்ப சகிதமாக உடனே வரும்படி அவர் முகூர்த்தப் பத்திரிகை அனுப்பிவிட்டார். அநேக ஜெமீன்தார்களும் பெரிய மனிதர்களும் வந்து அரண்மனையில் அவரவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட விடுதிகளில் இறங்கி இருக்கிறார்கள். அதுபோல, அந்த சோமசுந்தரம் பிள்ளையும் குடும்ப சமேதராய் வந்திருக்கிறார் என்றாள். நான் அதைக்கேட்ட உடனே மிகுந்த சந்தோஷமடைந்து, "அவரோடு இன்னும் யார் யார் வந்திருக்கிறார்கள்?" என்று நான் கேட்டேன். அவள் அவரோடு அவருடைய சம்சாரமும் ஒரு பெண்ணும் வந்திருக்கிறார்கள் என்றாள். அந்தப்பெண் உன்னுடைய அக்காளான கமலமாகத்தான் இருக்க வேண்டுமென்று நான் உடனே நிச்சயித்துக் கொண்டு அவர்கள் இறங்கியிருக்கும் விடுதிக்கு என்னை உடனே அழைத்துக்கொண்டு போகும்படி நான் என் சிநேகிதையிடம் கேட்டுக்கொள்ள, அவள் அப்படியே என்னை அழைத்துக்கொண்டு போனதன்றி, சோமசுந்தரம் பிள்ளையின் சம்சாரமும் உன் அக்காளும் இருந்த விடுதிக்குள்

என்னை அழைத்துக் கொண்டுபோய், நான் அவர்களோடு பேசப் பிரியப்படுவதாகச் சொன்னாள். அங்கே இருந்த உன் அக்காளை நான் பார்த்தேன். அவள் உன்னைப் போலவே இருக்கிறாள். அவளைப் பார்த்தவுடனே என் சந்தேகமெல்லாம் நீங்கிவிட்டது. அவள் உன்னுடைய அக்காள்தான் என்ற நிச்சயம் ஏற்பட்டுவிட்டது. நான் உடனே அவர்களோடு பேசி உன் விஷயத்தையும் நீ என் வீட்டிலிருப்பதையும் தெரிவித்தேன். விஷயத்தைக் கேட்டவுடனே அவர்கள் பதறிப் போய் உன்னை உடனே அழைத்துக்கொண்டு வரும்படி என்னை அனுப்பியதோடு ஒரு பெட்டி வண்டியில் உன்னை வைத்து அழைத்து வரும்படி ஒரு வண்டியும் அனுப்பியிருக்கிறார்கள். வண்டி வாசலில் நிற்கிறது'' என்றாள்.

அந்த வரலாற்றைக் கேட்ட ஷண்முகவடிவு அதை உண்மை என்றே நம்பி, ''நாம் உடனே புறப்பட்டுப் போகலாம்'' என்று உடனே மறுமொழி கூறினாள். ஹேமாபாயி அதற்கு யாதொரு ஆக்ஷேபனையும் சொல்லாமல் அவளை அழைத்துக்கொண்டு மேன்மாடத்தை விட்டுக் கீழே இறங்கி வந்தாள். வந்தவள் தனது வேலைக்காரியை அழைத்து, ''ஷண்முகவடிவின் அக்காள் அகப்பட்டுவிட்டாள். அவள் இந்த ஊர் அரண்மனையில் இருக்கிறாள். நான் உடனே இவளை அங்கே அழைத்துக் கொண்டு போக வேண்டும். நீ வீட்டை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொண்டிரு'' என்று கூறினாள். வேலைக்காரி ஒன்றையும் அறியாதவள்போல நடித்து, ''சமையல் ஆய்விட்டது. ஷண்முகவடிவுக்கு சாப்பாடு போட்டு அழைத்துக் கொண்டு போகிறதுதானே'' என்றாள்.

உடனே ஹேமாபாயி, ''அவள் இப்போது எங்கே சாப்பிடப் போகிறாள். தன்னுடைய அக்காளைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலில் அவளுக்குச் சாப்பாடு பிடிக்காது; அங்கே போனால் இவளுக்குச் சாப்பாடு இல்லாமலா போகிறது'' என்றாள். ஷண்முகவடிவும் அதை ஆமோதித்தவளாய், ''ஆம் எனக்கு

வயிற்றில் பசியே இல்லை. எப்படியாவது நான் என் அக்காளைப் பார்த்தால், அதுவே போதும். நான் சாப்பிட்டதை விட அதிக திருப்தி ஏற்படும்'' என்றாள்.

உடனே ஹேமாபாயி இரண்டு போர்வைகள் வருவித்துத் தான் ஒன்றைப் போர்த்திக் கொண்டாள்; ஷண்முகவடிவினிடம் மற்றொன்றைக் கொடுத்து அவளும் அதனால் தனது தலைமுதல் கால் வரையில் போர்த்துக்கொள்ளச் செய்தாள். அப்போது ஷண்முகவடிவு நிரம்பவும் விலையுயர்ந்த பட்டாடைகளையும் வைர ஆபரணங்களையும் ஏராளமாக அணிந்து ஜெகஜ்ஜோதி யாக இருந்தாள். ஆனாலும், தனது அக்காளைக் காண வேண்டு மென்ற ஆவலில் அவள் தனது அலங்காரத்தின் மேல் தனது கவனத்தைச் செலுத்தவேயில்லை. தன்மீது தகத் தகாயமான ஆபரணங்கள் இருக்கின்றனவே என்ற நினைவே அவள் கொள்ளவேயில்லை. அடுத்த நிமிஷம் அவர்கள் இருவரும் வெளியில் போய் அவ்விடத்தில் ஆயத்தமாக நின்ற பெட்டி வண்டியில் ஏறிக்கொண்டனர். அதன் கதவுகள் நன்றாக மறைக்கப்பட்டன. உடனே வண்டி புறப்பட்டு அரண்மனை யிருந்த திக்கில் செல்ல ஆரம்பித்தது.

வண்டிக்குள் இருந்த இருவரும் சிறிது நேரம் வரையில் மௌனமாக இருந்தனர். ஆனாலும், இருவரது மனமும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட வெவ்வேறுவிதமான எண்ணங் களையும் ஆசைகளையும் கொண்டு கொந்தளித்து, சகிக்க இயலாதபடி துடிதுடித்துக்கொண்டிருந்தது. ஹேமாபாயி தனது சதியாலோசனையைக் கடைசிவரையில் யாதொரு இடையூறு மின்றி நிர்விக்னமாய் முடிவுறவேண்டுமே என்றும், ஷண்முக வடிவு இன்னும் அரைநாழிகை நேரம் தனது சொற்படி நடப்பாளாளால், தான் பெரிய பணக்காரி ஆகிவிடலாம் என்றும் எண்ணி மனக்கோட்டை கட்டி ஆவலே வடிவாக உட்கார்ந்திருந்தாள். ஆனால் இருபது நாட்களாக ஷண்முக வடிவு தன்னைப்பற்றி சிறிதும் சந்தேகிக்காதபடி நிரம்பவும்

திறமையாகவும் நிஷ் கபட்மாகவும் ஹேமாபாயி நடந்து வந்தாள். ஆதலால், ஷண்முகவடிவு அவளைப் பற்றி எள்ளளவும் சம்சயமே கொள்ளாமல், அவள் சொன்னதை உண்மையென்று எண்ணிவிட்டாள். ஆகையால், தான் இன்னும் அரைநாழிகையில் தன் அக்காளைப் பார்த்து ஆனந்தமடைய லாம் என்று அந்த மடந்தை நினைத்து மிகுந்த மனவெழுச்சி கொண்டு துடிதுடித்திருந்தாள்.

வண்டி சிறிது தூரம் சென்றது. அதுவரையில் மௌனமாக இருந்த ஹேமாபாயி தான் நெடுக அவ்வாறு வாய் திறவாமல் இருந்தால், அது சந்தேகம் உண்டுபண்ணுமென்று நினைத்து, ''அம்மா! ஷண்முகவடிவு! தெய்வத்தின் திருவிளையாட்டு எவ்வளவு விநோதமாக இருக்கிறது பார்த்தாயா? நீ இதுவரையில் உன் அக்காளைத் தேடினாயே; அவள் உன் கண்ணில் பட்டாளா? அவள் இருந்த இடம் இன்று எனக்கு வெகு சுலபத்தில் தெரிந்து போயிற்று பார்த்தாயா? நீ என் வீட்டிற்கு வரவும், நான் உனக்கு உதவி செய்யவும், அதனால் நமக்குள் பிரியமும் சிநேகமும் ஏற்படவும், உன் அக்காளைக் கண்டுபிடிக்கும் சந்தோஷம் என்னால் ஏற்படவும் கடவுள் சூழ்ச்சி செய்திருக்கிறார் பார்த்தாயா? இப்படி யெல்லாம் விஷயம் நேராவிட்டால் உனக்கும் எனக்கும் எப்படி சந்திப்பு ஏற்படப் போகிறது? அப்படியே சந்திப்பு ஏற்பட்டாலும் உனக்கு என்னிடத்தில் அந்தரங்கமான பிரியமும் உண்மையான விசுவாசமும் ஏற்படுமா? கடவுள் இப்படித்தான் ஏதாவது ஓர் அபாயத்தைக் காட்டி, புதிய மனிதர்களை ஒருவருக்கொருவர் சிநேகம் பண்ணி வைக்கிறார். ஆனால் என் மனசில் இப்போதே ஒருவிதமான கவலையும் விசனமும் உண்டாகின்றன'' என்றாள்.

ஷண்முகவடிவு, ''உங்கள் மனசில் எதைப்பற்றிக் கவலையும் விசனமும் உண்டாகின்றன?'' என்றாள்.

ஹேமாபாயி, ''வேறொன்றுமில்லை. இந்த இருபது தினங்களாக நீ என்னோடுகூடவே இருந்தாய். நான் உன்னை என்

சொந்த மகளைவிட அதிக விசேஷமானவளாக நினைத்து நீ இனி எப்போதும் என்னை விட்டுப் பிரியமாட்டாய் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அந்த உறுதி இப்போது இந்த எதிர்பாராத சம்பவத்தால் கலகலத்துத் தளர்ந்து போய்விட்டது. நீ உன் அக்காளைக் கண்டால், அவள் என்ன சொல்லுவாளோ? நீ இந்த இருபது நாட்களாய் என்னோடுகூட இருந்து என்னுடைய குணத்தையும் நான் உன்மேல் வைத்திருக்கும் ஆசை எவ்வளவென்பதையும் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறாய். அவளுக்கு நான் புது மனிஷிதானே. நீ என்னிடம் வைத்திருக்கும் விசுவாசத்தைப் போல அவளும் வைப்பாள் என்று நான் எதிர்பார்க்க முடியாதல்லவா. அவள் லக்ஷப் பிரபுவான சோமசுந்தரம்பிள்ளையின் சுவிகாரப் பெண். அவளுக்கு அபாரமான செல்வம் கிடைத்திருக்கிறது. அப்படிப் பட்ட மகோன்னத பதவியில் உள்ளவள் என்னைப் போன்றவர்களையும் என்னுடைய அற்ப சொத்துக்களையும் ஒரு பொருட்டாக மதிக்கப் போகிறாளா? நீயும் அத்தையும் என்னோடு இருக்கக்கூடாதென்றாவது, அல்லது நான் உங்களோடு இருக்கக் கூடாது என்றாவது அவள் சொல்லி விடுவாளானால், அதன்பிறகு என்னுடைய மனசை நான் எப்படி சமாதானம் செய்துகொள்ளப் போகிறேன்?'' என்று நிரம்பவும் உருக்கமாகக் கூறினாள்.

அதைக்கேட்ட ஷண்முகவடிவின் மனதும் கண்களும் கலங்கின. ஹேமாபாயி தனது விஷயத்தில் உண்மையிலேயே அபாரமான வாஞ்சை வைத்திருக்கிறாள் என்ற நினைவினால் ஷண்முகவடிவு நிரம்பவும் இளகிப் போனவளாய் அவளை நோக்கி, ''அம்மா! என்னுடைய அக்காள் நிரம்பவும் பெருந்தன்மையும் சுலபத்தில் இளகும் மனமும் உடையவள். நடந்த விஷயங்களை எல்லாம் அவள் அறிவாளானால், நான் உங்கள் விஷயத்தில் எப்படிப்பட்ட மதிப்பும் உணர்ச்சிகளும் கொண்டிருக்கிறேனோ அதுபோலவே அவளும் கொண்டு

என்னை விடப் பத்து மடங்கு விசேஷமான பிரியத்தோடு நடந்து கொள்வாள் என்பதை நீங்கள் நிச்சயமாக நம்பலாம்'' என்றாள்.

ஹேமாபாயி நிரம்பவும் மகிழ்ச்சி அடைந்தவள் போலப் புன்னகை செய்து, ''ஆம், ஆம் கொஞ்ச நேரத்துக்குமுன் நான் அவளைக் கண்டு அவளிடம் பேசிய சொற்ப அவகாசத்தில் அவள் நிரம்பவும் மேலான மனப்போக்குடையவள் என்பது எளிதில் தெரிந்தது. அவளுடைய முகத்தைப் பார்த்தால், அவள் நிஷ்களங்கமான மனசுடையவள் என்பது நன்றாக விளங்கியது. ஆனாலும், எந்த விஷயமும் முடிவடைகிற வரையில் சந்தேகப்படுவதே மனித சுபாவமல்லவா? அதனால் என் மனம் என்னையும் மீறி ஒருவிதமான சஞ்சலமடைகிறது'' என்றாள். அவ்வாறு அவர்கள் இருவரும் சம்பாஷித்துக் கொண்டிருக்க, வண்டி அந்த ஊர் அரண்மனைக்குள் புகுந்து இருண்டிருந்த பல சந்து பொந்துகளின் வழியாகச் சென்று பல மாடங்களையும் கூடங்களையும் மகால்களையும் கடந்து முடிவில் ஒரு வாசலண்டை போய் நின்றது. வண்டிக்காரன் கீழே இறங்கி வந்து கதவைத் திறந்துவிட்டான். ஹேமாபாயியும் ஷண்முகவடிவும் உடனே கீழே இறங்கி அருகிலிருந்த வாசலுக்குள் நுழைந்தனர்.

அந்த வாசலை அடுத்தாற்போல உட்புறத்தில் மேன்மாடப் படிக்கட்டு ஒன்று தென்பட்டது. ஹேமாபாயி ஷண்முகவடிவை அழைத்துக்கொண்டு அதன் வழியாக ஏறி மேலே சென்று முதல் மாடத்தை அடைந்தாள். அந்த இடத்தில் ஒன்றன் மேல் ஒன்றாக ஏழு உப்பரிகைகள் இருந்தன. முதலிரண்டு உப்பரிகைகள் தவிர மற்ற மேல் உப்பரிகைகளில் எல்லாம் மகாராஜாவின் பத்னிமார் வசித்து வந்தனர். அந்த மாடங்களில் ஒன்றிலேயே பூர்ணசந்திரோதயத்தின் வாசஸ்தலமும் இருந்தது. ஹேமாபாயி ஷண்முகவடிவை அவ்விடத்திற்கெல்லாம் அழைத்துப் போகாமல் முதல் உப்பரிகையைக் கடந்து மறுபடியும் படிகட்டின் வழியாக மேலே ஏறி இரண்டாவது உப்பரிகையை

அடைந்தான். அவள் சென்ற இடங்களெல்லாம் அலங்காரமே மயமாக நிறைந்து கந்தர்வலோகம் போலக் காணப்பட்டது. பூர்ணசந்திரோதயத்தின் கலியாணத்தை உத்தேசித்து அவ்வித அலங்காரங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்று ஹேமாபாயி ஷண்முகவடிவினிடம் கூறியவண்ணம் அவளை அழைத்துக் கொண்டு இரண்டாவது உப்பரிகையிலிருந்த ஒரு விடுதிக்குள் நுழைந்தாள்.

அந்த விடுதி ஒரு பிரத்தியேகமான பங்களாவைப் போல அலங்காரமான புஷ்பத் தொட்டிகளும், நிலைக் கண்ணாடிகளும், ஸோபாக்களும், தந்தக் கட்டில்களும், பஞ்சணைகளும், சலவைக்கல் நாற்காலிகளும், அற்புதமான அழகிய படங்களும் நிறைந்த ரமணீயமான ஸ்தலமாக இருந்தது. அந்த விடுதியை அடுத்தாற்போல நாலைந்து சயன அறைகள் இருந்தன. மேற்படி அறைகள் மேற்படி விடுதியை விட ஆயிரம் மடங்கு சிறப்பாகவும் வசீகரமாகவும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

அவ்விடத்தை அடைந்த ஹேமாபாயி பக்கத்திலிருந்த ஒரு வாசற்படியைக் காட்டி, ''அதோ பார்த்தாயா வாசற்படி; அதற்குள்ளேதான் சோமசுந்தரம் பிள்ளையின் சம்சாரமும் உன் அக்காளும் இருக்கிறார்கள்'' என்றாள்!

அப்போது ஷண்முகவடிவின் ஆவல் உச்ச நிலையை அடைந்திருந்தது என்றே சொல்லவேண்டும். அவள் வீட்டை விட்டுக் கிளம்பியது முதல் அவளது மனதில் கமலத்தின் நினைவே நினைவாக இருந்து வதைத்துக் கொண்டிருந்தது. ஆகையால், அவளது உண்மையான வடிவத்தைக் காண்பதற்காக அவளது கண்கள் ஆவலோடு அங்குமிங்கும் பார்த்துப் பார்த்துப் பூத்துப் போய்விட்டன. அவளது கைகால்களெல்லாம் பதறின. ஹேமாபாயி ஓர் அறையைச் சுட்டிக் காட்டியவுடனே, அந்த மடந்தை தனது ஆவலில் தன்னை மறந்து ஆவேசங் கொண்டவள் போல விரைவாக அந்த அறையின் வாசற் படியை

அடைந்து, "அக்கா! கமலம்!" என்று நிரம்பவும் ஆவலோடு கூப்பிட்டுக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.

உட்புறத்தில் ஒரு ஸோபாவின் மீது உட்கார்ந்திருந்த நாற்பது வயதுள்ள ஒரு ஸ்திரீ சரேலென்று எழுந்து ஆசையோடு எதிர் கொண்டுவந்து, "ஆகா! ஷண்முவடிவா! வா வா வா! எங்கே ஹேமாபாயியம்மாள்?" என்று கூறிய வண்ணம் வாசற்படியை நோக்க, அவ்விடத்தில் நின்ற ஹேமாபாயி, "இதோ இருக்கிறேனே! இந்தப் பெண்தான் ஷண்முகவடிவு. எங்கே கமலம்? அம்மா! ஷண்முகவடிவு! இந்த அம்மாள்தான் சோமசுந்தரம் பிள்ளையினுடைய சம்சாரம்" என்றாள். அதைக் கேட்ட ஷண்முகவடிவு தன்னை எதிர் கொண்டு வரவேற்ற ஸ்திரீயைப் பார்த்து, "ஓகோ! அப்படியா! இவர்கள் தானா எங்களுடைய குடும்ப ரக்ஷகருடைய பாரியாள். சந்தோஷ மாயிற்று. என் அக்காள் கமலம் இவர்களைப் பற்றி எனக்கு எத்தனையோ கடிதங்கள் எழுதியிருக்கிறாள். அப்பேர்ப்பட்ட சிரேஷ்டமான புண்ணியாத்மாக்களை எப்போது பார்க்கக் கிடைக்குமோ என்று நான் எதிர்பார்த்தது இன்றுதான் லயிக்கிறதுபோலிருக்கிறது. எங்கே கமலத்தைக் காணோமே?" என்றாள்.

அந்த ஸ்திரீ ஷண்முகவடிவை ஒரு ஸோபாவின் மேல் உட்காரச் செய்து, "ஆம் அம்மா! கமலம் உன்னைப் பற்றியும் உன்னுடைய நல்ல குணங்களைப் பற்றியும் தான் சதாகாலமும் எங்களிடம் பேசிக்கொண்டிருப்பாள். எங்களுக்கும் உன்னைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் கொஞ்சமாக இல்லை. எங்களுடைய ஜோலிகளைவிட்டு அங்கே வரமுடியவில்லை. நீ உன் அத்தையைக் கவனித்துக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாய்ப் போனதால் உன்னையும் வரவழைக்க இயலாமல் போய்விட்டது. நல்லவேளையாக யாரோ வேறு சில மனிதரை உனக்குப் பதிலாக அங்கே வைத்துவிட்டு வந்தாயே. நல்லதாயிற்று. உன் அக்காள் கமலம் உன்னை வாசற்

படியிலிருந்தே அழைத்துக்கொண்டு வரவேண்டுமென்று இப்போதுதான் இந்தப் பக்கத்து வாசல் வழியாகக் கீழே போனாள். நீங்கள் பின் பக்கத்து வழியாக உள்ளே வந்துவிட்டீர்கள்'' என்றாள்.

அதைக்கேட்ட ஹேமாபாயி, ''ஓகோ! அப்படியா! நன்றாகப் பழகினவர்களுக்கே இந்த அரண்மனைக்குள் ஒரு குறித்த இடத்துக்கு வந்து திரும்பிப்போவது நிரம்பவும் துர்லபமான காரியம். என்னைப் போன்ற புதியவர்களைப்பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. ஏதோ ஒரு வழியாக வந்து நான் உங்களிடம் சேர்ந்து விட்டேனே! அதுவே ஒரு பெரிய காரியமல்லவா? அதிருக்கட்டும். கமலம் எந்த வழியாகப் போனாள்? அதைக் காட்டுங்கள். நான் போய் அவளை அழைத்துக்கொண்டு வருகிறேன். இல்லாவிட்டால் நாங்கள் வருவோம் வருவோமென்று வழிபார்த்து அவள் அவ்விடத்திலேயே காத்திருப்பாள்'' என்றாள்.

உடனே அந்த ஸ்திரீ, ''ஆம், ஆம்; அப்படித்தான் செய்ய வேண்டும். நீங்கள் இங்கே வந்துவிட்டீர்கள் என்பது அவளுக்குத் தெரியாதல்லவா. நீங்கள் வருவீர்கள் வருவீர்கள் என்று எதிர்பார்த்து அவ்விடத்திலேயே இருப்பாள். தன்னுடைய தங்கையைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலில் அவளுக்குச் சாப்பாட்டில் கூட மனம் செல்லவில்லை. அவள் இதோ இந்த வாசலின் வழியாகப் போனாள்'' என்று பக்கத்திலிருந்த ஒரு வாசலைச் சுட்டிக் காட்டினாள்.

உடனே ஹேமாபாயி, ''சரி; நான் போய் உடனே அவளை அழைத்து வருகிறேன். அவளிருக்கும் இடத்தை நாடி இவள் வந்தும் அவள் கீழே போய்விட்டாள் பாருங்கள். இன்னும் காலம் வரவில்லை. எதற்கும் காலமென்பது ஒன்று உண்டல்லவா. அது நேர்ந்தால்தான் எதுவும் கைகூடும்'' என்று கூறியவண்ணம் தனக்குக் காட்டப்பட்ட வாசலின் அப்பால் போய் மறைந்து போய் விட்டாள்.

பிறகு அந்த ஸ்திரீ ஷண்முகவடிவினிடம் பேச்சுக்கொடுத்து நிரம்பவும் அன்பாகவும் வாஞ்சையாகவும் அவளது குடும்ப யோக க்ஷேமங்களைப் பற்றியும், அவளுக்கு நேர்ந்த பல துன்பங்களைப் பற்றியும் வினாவிய வண்ணமிருக்க, சுமார் அரைநாழிகை சாவகாசம் கழிந்தது. அதற்குள் அவர்களிருந்த அறையைச் சுற்றிலும் திறக்கப்பட்டிருந்த கதவுகள் ஒவ்வொன்றாய் மெதுவாகச் சாத்தி மூடப்பட்டன. அதை ஷண்முகவடிவு கவனிக்காதபடி நிரம்பவும் தந்திரமாக யாரோ மனிதர் வெளியில் நின்று அவ்வாறு ஒவ்வொரு கதவையும் சாத்தியதாகத் தோன்றியது. ஷண்முகவடிவு தனது அக்காளைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலிலும், மன வெழுச்சியிலும் கதவுகள் மூடப்பட்டதைக் கவனிக்கவேயில்லை. அவளோடு இருந்த ஸ்திரீ அவளோடு பேசியவண்ணம் தனது கடைக் கண்ணால் கதவுகள் மூடப்பட்டதைப் பார்த்துக் கொண்டே இருந்து கடைசியில் எழுந்து, "அம்மா! ஷண்முகவடிவூ! இந்த ஹேமாபாயி போய் அரைநாழிகை இருக்கலாம்; இன்னும் திரும்பி வராததைப் பார்த்தால் வழி தவறி எங்கேயோ போய்த் தடுமாறுகிறாள் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. அந்த அம்மாள் கமலத்தைக் காணவில்லை போலிருக்கிறது. நீ இங்கேயே இரு. நான் போய்க் கமலத்தை அழைத்துக்கொண்டு வருகிறேன்" என்று கூறியவண்ணம் ஷண்முகவடிவின் மறுமொழியை எதிர்பாராமல் அவ்விடத்தை விட்டு விசையாக நடந்து, திறந்து விடப்பட்டிருந்த வாசற்படியை நோக்கிச் சென்றாள். அவள் அவ்வாறு சென்ற காலத்தில் அவளது மடியிலிருந்து ஒரு கடிதம் நழுவிக் கீழே வீழ்ந்தது. அதை அவள் கவனிக்காதவள் போல் அப்பால் நடந்தாள். அதைக் கவனித்த ஷண்முகவடிவு, "அம்மா! உங்கள் மடியிலிருந்து ஏதோ ஒரு கடிதம் கீழே விழுந்துவிட்டது; அதை எடுத்துக் கொள்ளுங்கள்" என்றாள்.

அதற்குள் வாசற் கதவண்டை போய்விட்ட அந்த ஸ்திரீ திரும்பி நின்று, "அந்தக் கடிதத்தை எடுத்துப் படித்துவிட்டு நீ

வைத்துக்கொண்டிரு; நான் போய்விட்டு வந்து விடுகிறேன்'' என்று கூறிவிட்டுக் கதவை மூடி வெளியில் தாளிட்டுக் கொண்டாள்.

உடனே ஷண்முகவடிவு எழுந்து கடிதம் விழுந்து கிடந்த இடத்தை அடைந்து கீழே குனிந்து அதை எடுத்துக் கொண்டு நிமிர்ந்தாள். அதுவரையில் அவள் எவ்விதச் சந்தேகமும் கொள்ளாதிருந்தாள். ஆனாலும், வெளியில் சென்ற ஸ்திரீ கதவை மூடி வெளியில் சாத்திக்கொண்டது அவளது மனதில் ஒருவித வியப்பை உண்டாக்கியது. மற்ற வாசற்படிகள் திறந்திருக்கின்றனவா என்ற சந்தேகம் அவளது மனதில் தோன்றியது ஆகையால், அவள் உடனே நாற்புறங்களிலும் திரும்பிப் பார்த்தாள். தான் வந்தபோது திறக்கப்பட்டிருந்த நாலைந்து கதவுகளும் நன்றாக மூடப்பட்டுப் போயிருந்ததைக் கண்டாள். அவளது மனம் இன்னதென்று விவரிக்க இயலாத ஒரு வித சஞ்சலத்தை அடையத் தொடங்கியது. தனது கையிலிருந்த கடிதம் யாருக்கு எழுதப்பட்டது என்பதை அறிய வேண்டு மென்ற நினைவு அவளது மனத்தில் தோன்றியது ஆகையால், அவள் தனது கையிலிருந்த கடிதத்தை விளக்கு வெளிச்சத்தில் பிடித்து அதன் மேல் விலாசத்தைப் பார்த்தாள். பார்க்கவே அவளது மனம் திடுக்கிட்டு பெருத்த திகிலும் கலவரமும் கொண்டது. அந்தக் கடிதத்தின்மேல், **சௌபாக்கியவதி ஷண்முகவடிவிற்கு** என்ற எழுத்துக்கள் காணப்பட்டன. தான் வருமுன்பே தனக்கு ஒரு கடிதம் எழுதி வைக்கப்பட்டிருப்பதின் காரணம் என்னவாக இருக்கலாமென்று அவள் யோசித்தாள். அவளது மனதில் நூற்றுக் கணக்கான சந்தேகங்களும் எண்ணங்களும் உதித்தன. அவள் உடனே அதைத் பிரித்துப் படிக்கலானாள். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:-

பெண்ணே! **ஷண்முகவடிவூ!** நீ உன் அக்காளை இனி காணமுடியாது. அவளைச் சந்திப்பதற்காக நீ இங்கே வரவழைக்கப்படவில்லை. வேறே யாருக்கும் கிடைக்காத

பெருத்த பாக்கியத்தை அடைவதற்கே நீ இங்கே வந்திருக்கிறாய். இந்தத் தேசத்தின் அதிபதியான இளவரசருடைய ஆசை நாயகி யாகும் பெரும் பேறு உனக்குச் சித்திக்கப் போகிறது. அவர் பூர்ணசந்திரோதயம் என்ற ஒப்பற்ற வடிவழகியைக் கலியாணம் செய்துகொள்ள முடிவாகி இருக்கிறது. நீயும் அவளும் ஒரே அச்சில் கடைந்தெடுக்கப்பட்ட ஒரே மாதிரியான பதுமைகள் போல இருப்பதால் உங்கள் இருவரையும் தமது இரு பக்கங்களிலும் வைத்து உங்கள் இருவருக்கும் தாலி கட்டி சதா காலமும் உங்கள் இருவரோடும் ரமித்திருக்க வேண்டுமென்பது இளவரசருடைய தீர்மானம். ஆகையால், அதற்காகவே நீ இங்கே வரவழைக்கப்பட்டிருக்கிறாய். இவ்வாறு நீ எதிர்பார்க்காமல் உனக்கு வந்து குறுக்கிட்டிருக்கும் அதிர்ஷ்டத்தைப் பற்றி நீ பெரிதும் சந்தோஷமடைவாய் என்பது நிச்சயம். இன்னும் அரைமணி நேரத்தில் இளவரசர் இங்கே வருவார். அவருடைய பிரியப்படி நீ இப்போதே நடந்து அவருடைய பிரியத்துக்கும் தயைக்கும் அருகமானவளாக வேண்டியது உன் கடமை. இதையும் மற்ற இடங்களைப் போல நினைத்து நீ தாறுமாறாக நடந்துகொண்டால், அதனால் உனக்குத்தான் பெருந் தீங்கு நேரும். உன்னை அடையாமல் இளவரசர் விடுவார் என்ற எண்ணமே உனக்கு வேண்டாம். புத்தியோடு பிழைத்துக் கொள்.

இப்படிக்கு
உன்னை அழைத்துவந்த

சிநேகிதை.

என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படித்து முடித்த ஷண்முகவடிவின் மனம் எவ்விதமான பாடுபட்டிருக்கும் என்பதை யூகித்துக்கொள்ள வேண்டுமேயன்றி சொல்வது சாத்தியமான காரியமல்ல.

44- வது அதிகாரம்

## நீலமேகம்பிள்ளையின் கலவரம்

ஷண்முகவடிவு திருவாரூரிலிருந்து கோலாப்பூருக்குச் சென்ற போது அவளுக்குத் துணையாக கலியாண சுந்தரத்தின் வேலைக்காரியும் கூடவே தொடர்ந்து சென்றாள் என்பது முன்னரே சொல்லப்பட்டது அல்லவா. அவள் கோலாப்பூரில் நோய்கொண்டு சத்திரத்தில் படுத்திருந்த காலத்தில், ஷண்முகவடிவு அம்மணிபாயியின் வஞ்சக வலையில் பட்டு போலீஸ் கமிஷனரது ஜாகைக்கும் சிறைச்சாலைக்கும்போய், கலியாண சுந்தரத்தைப் பற்றிய விபரீதமான செய்திகளை அறிந்து கொண்டு திரும்பி வந்தவள், அந்த வேலைக்காரி தனது எஜமானனான கலியாணசுந்தரத்தின் இடத்தில் ஆழ்ந்த அன்பும் அபிமானமும் கொண்டவள் ஆதலால், அவனைப் பற்றிய விபரீத விஷயங்களை அவளிடம் சொல்வது சரியல்லவென்று நினைத்து, அவளிடம் உண்மையை வெளியிடாமல் மறைத்து, தாம் கோரி வந்த காரியம் நிறைவேறிவிட்டது என்றும், தாம் திரும்பி ஊருக்குப் போக வேண்டுமென்றும் கூறினாள். ஆதலால், வேலைக்காரி கலியாண சுந்தரத்தைப் பற்றி சிறிதும் சந்தேகம் கொள்ளாதிருந்தாள். அம்மணிபாயி அவர்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு தஞ்சைக்கு வந்தபிறகு, ஷண்முகவடிவை மருங்காபுரி ஜெமீந்தாரது மாளிகையில் கொண்டுபோய் விட்ட காலத்தில், அந்த வேலைக்காரி தேக அசௌக்கியத்தோடு அம்மணிபாயியின் வீட்டில் படுத்திருந்தாள். அவ்வாறு படுத்திருந்தவள் ஐந்தாறு தினங்களில் சௌக்கியம் அடைந்து, தன்னையும் ஷண்முக வடிவினிடம் கொண்டு போய்ச் சேர்க்கும்படி அம்மணி பாயிடம் கேட்டுக்கொள்ள அம்மணிபாயி, ஷண்முகவடிவு சோமசுந்தரம்பிள்ளையின் வீட்டிலுள்ள தனது அக்காளிடம்

இருப்பதாகவும், அவள் தஞ்சையில் ஒருமாத காலம் இருந்து விட்டு வர உத்தேசித்திருப்பதால், வேலைக்காரி முன்னால் திருவாரூருக்குப் போய்விடும்படி தன்னிடம் செய்தி சொன்னதாகவும் வேலைக்காரியிடம் தெரிவித்தாள். ஆதலால், அவள் அதை உண்மையென்று நம்பி மறுநாளே தஞ்சையை விட்டுப் பிரயாணமாகி திருவாரூர் போய்ச் சேர்ந்துவிட்டாள்.

ஆகவே, நீலமேகம்பிள்ளை திருவாரூருக்குப் போய், நீலலோசனி அம்மாளின் பங்களாவை அடைந்து விசாரித்த காலத்தில், கமலம், ஷண்முகவடிவு ஆகிய இருவரும் தஞ்சையில் சோமசுந்தரம் பிள்ளையென்ற ஒரு தனிகரது மாளிகையில் இருப்பதாகவும், அந்த மாளிகை சக்கா நாயக்கர் தெருவில் 13வது இலக்கமுள்ளதென்றும், கமலம் தஞ்சைக்குச் சென்று பல மாதங்களாயிற்று என்றும், சோமசுந்தரம் பிள்ளை என்ற சீமான் அவளைத் தமது அபிமான புத்திரியாக பாவித்து அவ்விடத்திலேயே வைத்துக் கொண்டிருக்கிறார் என்றும் வேலைக்காரிகள் நீலமேகம் பிள்ளையிடம் தெரிவித்தனர்.

அந்த வரலாற்றைக் கேட்டவுடனே நீலமேகம்பிள்ளை அளவற்ற வியப்பும் பிரமிப்பும் கவலையும் அடைந்து சஞ்சலமுற்று வருந்தலானார். தமது தந்தை எழுதி வைத்திருந்த உயிலிலிருந்து அவர் சோமசுந்தரம் பிள்ளையென்ற பொய்யான ஒரு பெயரால், அவர்களுக்குப் பணம் அனுப்பி உதவி செய்து வந்தார் என்பதை நீலமேகம் பிள்ளை அறிந்தவர். ஆதலால், கமலம் முதலியோர் சோமசுந்தரம் பிள்ளையின் மாளிகையில் இருக்கிறார்கள் என்ற செய்தி முற்றிலும் அசம்பாவிதமாக இருந்தது. அதுவுமன்றி, சில மாத காலத்திற்கு முன் தாம் தமது தந்தையைக் காணாது துயருற்றிருந்த காலத்தில் ஒரு யௌவன ஸ்திரீ மேல ராஜவீதியிலுள்ள தமது மாளிகைக்கு வந்து சோமசுந்தரம்பிள்ளை என்பவரைப் பற்றி விசாரித்தது அப்போது அவருக்கு நினைவு உண்டாயிற்று. ஆதலால் அவளே கமலமாக இருக்கவேண்டுமென்று அவர் நிச்சயித்துக் கொண்டார்.

அவ்வாறு வந்தவள் வேறே பல இடங்களுக்குப் போய் சோமசுந்தரம் பிள்ளையைப் பற்றி விசாரித்திருக்க வேண்டுமென்றும் அப்போது யாராகிலும் அவளை வஞ்சித்து, தாமே சோமசுந்தரம் பிள்ளையென்று பொய் சொல்லி ஏதோ துர்நினைவோடு அவளை ஏமாற்றி இருக்க வேண்டுமென்றும், ஷண்முகவடிவும் அவ்விடத்திற்கே போய்ச் சேர்ந்திருக்க வேண்டுமென்றும் நீலமேகம்பிள்ளை ஒருவாறு நிச்சயித்துக் கொண்டார். அவரது மனதில் கோடானு கோடி எண்ணங்களும் சந்தேகங்களும் தோன்றின. பெண்கள் இருவரும் உயிருடன் இருக்கிறார்களோ என்றும் அப்படி இருந்தாலும் துன் மார்க்கத்தில் செலுத்தப்படாமல் பரிசுத்தமாக இருக்கி றார்களோ என்றும் அவர் நினைத்துப் பெரிதும் கவலை கொண்டு, தாம் உடனே தஞ்சைக்கு வந்து அவர்கள் இருக்கும் இடத்திற்குப் போய் அவர்களைப் பார்த்து அவர்களது பிறப்பின் ரகசியத்தை வெளியிட்டுத் தமது மாளிகைக்கு அழைத்துக் கொள்ள வேண்டுமென்ற ஆவலும் உறுதியும் கொண்டவராய் உடனே திருவாரூரை விட்டுப் புறப்பட்டார். அவர் ஷண்முக வடிவைப் பற்றி அதிக விவரம் எதுவும் தெரிந்து கொள்ளா விட்டாலும், அவள் கலியாணசுந்தரம் என்ற ஒரு யௌவனப் புருஷனைக் கலியாணம் செய்துகொள்ளத் தீர்மானம் ஆகி இருக்கிற தென்பதையும், அவன் ஏதோ அவசர காரியமாகப் பூனாவுக்குப் போயிருக்கிறான் என்பதையும், அவனுக்குக் கோலாப்பூரில் நேர்ந்த ஏதோ அபாயத்தைக் கருதி அவள் அவனது வேலைக்காரியோடு அந்த ஊருக்குப் போய் சமீப காலத்திலேதான் தஞ்சைக்குத் திரும்பிவந்து தனது அக்காளிருந்த இடத்தை அடைந்தாள் என்பதையும் அறிந்துகொண்டார். ஆகவே கலியாணசுந்தரத்தின் வேலைக்காரி தம்மோடு தஞ்சைக்கு வந்தால் அவர்கள் இறங்கியிருந்த இடம் முதலிய வற்றைக் காட்ட அவள் உதவியாய் இருப்பாளென்று நினைத்தவராய், நீலமேகம்பிள்ளை அவளையும் தம்மோடு அழைத்துக் கொண்டு, சிவபாக்கியம் முத்தம்மாள் ஆகிய

இருவரிடத்திலும் பெருத்த பணத்தொகை கொடுத்து, நீலலோசனி அம்மாளை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படியும் தாம் அந்தப் பெண்களின் சகோதரர் ஆதலால் அவர்களெல்லோரையும் தாம் அதிசீக்கிரத்தில் தஞ்சைக்கே அழைத்துக் கொள்வதாகவும் சொல்லியபின் அவ்விடத்தை விட்டுத் தஞ்சைக்கு வந்துசேர்ந்தார். வந்தவர் வேலைக்காரி யோடு நேராகத் தமது மாளிகையை அடைந்து, அவ்விடத்தில் தங்களது ஸ்நானம் போஜனம் முதலியவை முடிந்தவுடன் அவளை நோக்கி, ''என்ன கருப்பாயி! நாம் இப்போது எங்கே போகலாம்? நேராக சக்கா நாயக்கர் தெரு 13வது இலக்கமுள்ள வீட்டுக்குப் போகலாமா? இல்லாவிட்டால், உங்களை கோலாப் பூரிலிருந்து அழைத்து வந்த பெண்பிள்ளையின் வீட்டுக்குப் போய், அவளிடம் சரியான விலாசம் இன்னதென்பதை நிச்சயமாகத் தெரிந்து கொண்டு போவோமா?'' என்றார்.

கருப்பாயி, ''எங்களை அழைத்து வந்த அம்மாள் இருக்கும் தெருவின் பெயர் வீட்டுக் கதவிலக்கம் முதலிய விவரங்களை நான் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை. அந்த வீடு எங்கே இருக்கிறதென்ற அடையாளம் எனக்குத் தெரியாது. ஆகையால், நாம் நேராக சக்கா நாயக்கர் தெரு 13வது இலக்கமுள்ள வீட்டுக்கே போய்விடுவோம். அந்த விலாசத்தில்தான் சோமசுந்தரம்பிள்ளை கமலத்தம்மாள் முதலியோர் இருப்பதாக அவர்கள் பேசிக்கொண்டது நன்றாக நினைவிருக்கிறது. நாம் இன்னொருதரம் அந்த அம்மாளிடம் போய்க் கேட்க வேண்டிய அவசியமில்லை'' என்றாள்.

உடனே நீலமேகம்பிள்ளை தமது ஸாரட்டில் அந்த வேலைக் காரியை உட்கார வைத்துக்கொண்டு தமது மாளிகையை விட்டுப் புறப்பட்டு சக்கா நாயக்கர் தெருவை அடைந்து கதவிலக்கங் களைப் பார்த்துக்கொண்டே போய் 13வது இலக்கமுள்ள வீட்டை அடைந்தார். அந்த மாளிகை பெருத்த சீமானது இருப்பிடம்போல பிரம்மாண்டமாகவும் நேர்த்தியாகவும்

கட்டப்பட்ட உன்னதமான கட்டிடமாக இருந்தது. அதைப் பார்த்த நீலமேகம் பிள்ளையின் மனதில் பல விதமான சந்தேகங்களும் கவலைகளும் எண்ணங்களும் உண்டாயின. அவ்வளவு சிறப்பான பெரிய மாளிகையில் உள்ளோர் கமலத்தை ஏமாற்றி இருப்பார்களா என்ற ஐயமே முக்கியமாக அவரது மனதில் குடிகொண்டது. வண்டி அந்த மாளிகையின் வாசலில் நின்றவுடனே நீலமேகம் பிள்ளை, ''கருப்பாயி! இதுதான் 13வது இலக்கமுள்ள வீடு; கீழே இறங்கு; உள்ளே போய் விசாரிப்போம்'' என்றார். அதைக்கேட்ட கருப்பாயி வண்டியை விட்டுக் கீழே இறங்கி அந்த மாளிகையின் பக்கம் திரும்பி அதைப் பார்த்தவுடனே திடுக்கிட்டு ஆச்சரியமுற்றவளாய், ''ஐயா! இதற்கு முன்பு நான் பார்த்த வீடு மாதிரி இருக்கிறதே. ஆம், ஆம். நான் இந்த வீட்டில்தான் நோயாகப் படுத்திருந்தேன். கோலாப்பூரிலிருந்து எங்களை அழைத்து வந்த அம்மாளுடைய வீடு இதுதான். எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது'' என்றாள்.

அதைக்கேட்ட நீலமேகம்பிள்ளை மிகுந்த கலக்கமும் குழப்பமும் அடைந்து, ''நீ சொல்வதைப் பார்த்தால், சோமசுந்தரம் பிள்ளை என்பவரின் வீடு இதுவல்ல என்று ஆகிறதே. கமலத்தம்மாள் வேறே இடத்தில் இருப்பதாகவும், அங்கே கொண்டுபோய் விடுவதாகவும் சொல்லித் தானே இந்த வீட்டு அம்மாள் ஷண்முகவடிவை அழைத்துக்கொண்டு போவதாகச் சொன்னாய்?'' என்றார்.

கருப்பாயி, ''ஆம் அப்படித்தான் சொல்லிஅழைத்துக் கொண்டு போனார்கள்'' என்றாள்.

நீலமேகம்பிள்ளை, ''அப்படியானால் நீ வீட்டு இலக்கத்தை ஒன்றுக்கொன்று மாறாட்டமாகச் சொல்லுகிறாய்? சக்கா நாயக்கர் தெரு 13வது வீடு உங்களை அழைத்துவந்த அம்மாளுடைய விலாசமாயிருக்க, அதை நீ கமலம் இருக்கும் வீட்டின் விலாசம் என்று தவறுதலாக அர்த்தம் செய்து கொண்டிருக்கிறாய் போலிருக்கிறது'' என்றார்.

கருப்பாயி, "இல்லை, இல்லை. கமலத்தம்மாள் சக்கா நாயக்கர் தெரு 13வது வீட்டில் இருப்பதாக நாங்கள் திருவாரூரிலிருந்து கோலாப்பூருக்குப் புறப்பட்டுப் போவதற்கு முன்னிருந்தே ஷண்முகவடிவம்மாள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதுவுமன்றி, நாங்கள் மூன்று பேரும் இந்த ஊருக்கு வந்தவுடனே, எங்களை அழைத்து வந்த அம்மாள் கமலத்தம்மாள் இருக்கும் இடம் எதுவென்று கேட்டதற்கும் ஷண்முகவடிவம்மாள் அந்த விலாசத்தைச் சொன்னார்கள். சரியென்று அந்த அம்மாள் அழைத்துக்கொண்டு போனார்கள். எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. அதைப்பற்றி கொஞ்சமும் சந்தேகிக்கவே இடமில்லை" என்று அழுத்தமாகவும் உறுதியாகவும் கூறினாள்.

அதைக்கேட்ட நீலமேகம்பிள்ளை, "அப்படியானால் நீங்கள் இந்த வீட்டில் வந்து தங்கியிருந்தீர்கள் என்பதாவது தப்பாக இருக்க வேண்டும். இந்த ஊரில் இதைப் போல எத்தனையோ வீடுகள் இருக்கின்றன. அதனால் நீ இந்த வீட்டில் இருந்ததாகச் சொல்வது பிசகாயிருக்க வேண்டும்" என்றார்.

கருப்பாயி முற்றிலும் கலக்கமடைந்து, "இல்லை, இல்லை, எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. இதே வீட்டில் தான் நாங்கள் வந்து தங்கினோம்; நான் வண்டியிலிருந்து கீழே இறங்கும் போது, கீழே கூராக நீட்டிக்கொண்டிருந்த கப்பிக்கல் என் காலில் குத்தியது. அந்தக் கல் கூட இதோ இருக்கிறதைப் பாருங்கள்" என்றாள்.

அதைக்கேட்ட நீலமேகம்பிள்ளை அதற்குமேல் எவ்வித ஆட்சேபனையும் சொல்லமாட்டாமல் தயங்கி முற்றிலும் குழப்பமும் கலக்கமும் அடைந்தவராய், "இது பெருத்த குளறலாக இருக்கிறது. சரி; எல்லாவற்றிற்கும் விசாரித்துப் பார்ப்போம். கதவு மூடி உள் பக்கத்தில் தாளிடப்பட்டிருக்கிறது போலிருக்கிறது. கதவைத் தட்டு, பார்க்கலாம்" என்றார். உடனே வேலைக்காரி கதவண்டை போய் நின்று, "அம்மா!

அம்மா!'' என்று கூப்பிட்டுக்கொண்டே அதை இரண்டு மூன்று தடவை மெதுவாகத் தட்ட, ''யார் அங்கே?'' என்ற குரல் உண்டாயிற்று. அடுத்த க்ஷணத்தில் கதவும் திறக்கப்பட்டது. உட்புறத்தில் அம்மணிபாயி நின்று கொண்டிருந்தாள். அவள் கருப்பாயி வருவாளென்று கனவிலும் நினைக்காதவள். ஆதலால், வேறே யாரோ கூப்பிடுவதாக எண்ணிக் கதவைத் திறந்துவிட்டாள். திறந்தவுடன் கருப்பாயி நின்றதைக் கண்டவுடனே அம்மணிபாயி திடுக்கிட்டு மிகுந்த வியப்படைந்தவள் ஆனாள். அவளது முகம் சடேரென்று மாறு பட்டது. கருப்பாயி இன்னொரு மனிதரோடு வந்திருப்பதை ஒரு க்ஷண நேரத்தில் அறிந்துகொண்ட அம்மணிபாயி, அவர்கள் ஷண்முகவடிவைப் பற்றி விசாரிக்கவே வந்திருக்க வேண்டு மென்று ஒரு நொடியில் யூகித்துக்கொண்டு சிறிதும் முகமறி யாதவள் போல நிற்க, அவளைக் கண்ட கருப்பாயி திடீரென்று உற்சாகமும் மகிழ்ச்சியும் தோற்றுவித்தவளாய் நீலமேகம் பிள்ளையை நோக்கி, ''பார்த்தீர்களா? நான் சொன்னதுதான் நிஜம். இதோ இந்த அம்மாள்தான் எங்களைக் கோலாப் பூரிலிருந்து அழைத்து வந்தவர்கள். ஷண்முகவடிவம்மாளை இவர்கள்தான் சோமசுந்தரம்பிள்ளை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனார்கள். அதன்பிறகு ஐந்தாறு நாள்கள் வரையில் இவர்கள் எவ்வளவோ உபசரணைகள் செய்து என்னை ஊருக்கு அனுப்பி வைத்தார்கள்?'' என்றாள்.

அதைக்கேட்ட அம்மணிபாயி ஒன்றையும் அறியாதவள் போல மிகுந்த பிரமிப்பும் குழப்பமும் அடைந்து நிதானமாகப் பேசத் தொடங்கி, ''யாரம்மா நீ! நீ இப்போது சொன்ன சங்கதியில் எதுவும் எனக்கு விளங்கவில்லையே? நீங்கள் யாரைத் தேடுகிறீர்கள் என்பதும் தெரியவில்லையே. எத்தனாவது இலக்கமுள்ள வீட்டில், நீங்கள் காண வந்திருக்கும் மனிதர் இருக்கிறார்கள்?'' என்றாள்.

அவள் சொன்ன சொற்களைக்கேட்ட, கருப்பாயியும் நீல மேகம் பிள்ளையும் அப்படியே ஸ்தம்பித்துப் போயினர்.

உடனே கருப்பாயி, ''அம்மா! என்னுடைய அடையாளம் உங்களுக்குத் தெரியவில்லையா? சுமார் 25 தினங்களுக்கு முன் நானும் நீங்களும் ஷண்முகவடிவென்ற இன்னொரு அம்மாளும் கோலாப்பூரிலிருந்து இங்கே வரவில்லையா? அந்த அம்மாளை நீங்கள் கமலத்தம்மாளுடைய ஜாகைக்கு அழைத்துக்கொண்டு போகவில்லையா? அப்போது நான் நோயாக இருந்தேன். ஆகையால் என்னை நீங்கள் ஐந்தாறு தினம் வரையில் இங்கே வைத்திருந்து சவரக்ஷணை செய்து அனுப்பவில்லையா?'' என்றாள்.

உடனே அம்மணிபாயி, ''என்ன ஆச்சரியம் இது? உனக்கு பைத்தியம் கியித்தியம் ஏதாவது உண்டா? நானாவது உங்களோடு கோலாப்பூரிலிருந்து வருகிறதாவது? உங்களை எங்கள் வீட்டில் வைத்து சவரக்ஷிக்கிறதாவது? நான் இந்த ஊர் அரண்மனையில் பெரிய மகாராணியின் அந்தப்புரத்தில் உத்தியோகம் பார்க்கிறவள் அல்லவா? அவர்களைவிட்டு ஒரு க்ஷணநேரம் கூட நான் எங்கேயும்போகமுடியாதே. என் மகன் இந்த வீட்டில் இருக்கிறான். அவனைப் பார்த்துவிட்டுப் போகவேண்டுமென்று நான் மகாராணியிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு இன்று காலையிலேதான் இங்கே வந்தேன். கோலாப்பூர் எந்தத் திக்கில் இருக்கிறதென்பதே எனக்குத் தெரியாது. உன்னையும் நான் இப்போதுதான் முதன் முதலாகப் பார்க்கிறேன். வேறே யாராவது என்னைப் போலவே இருக்கிறாளோ என்னவோ; நீ ஆள் மாறாட்டமாகப் பேசுகிறாய் போலிருக்கிறது'' என்று அழுத்தமாகவும் ஒன்றையும் அறியாத பரிசுத்தமான மனுஷி போலவும் பேசினாள்.

அதைக்கேட்ட கருப்பாயி முற்றிலும் கலக்கமும் திகைப்பும் அடைந்து தான் காண்பது கனவோ என்று சந்தேகித்து சிறிது நேரம் தயங்கி நின்றபின், ''அம்மா! உங்களைப் போல வேறே

எத்தனையோ பேர் இருப்பார்கள் என்று நீங்கள் சொல்லுகிறீர்களே; அது நிஜமே. ஆனால், இதே வீட்டுக்கு நாங்கள் வந்ததாக நன்றாய் ஞாபகம் இருக்கிறதே'' என்றாள்.

அம்மணிபாயி, ''ஒரு மனிதரைப் போல பல மனிதர் இருக்கையில் ஒரு வீட்டைப் போல வேறே பல வீடுகள் இருப்பது ஆச்சரியமாகுமா?'' என்றாள்.

கருப்பாயி, ''இந்த வீட்டைப்போல வேறே வீடுகள் இருக்கலாம் என்பதும் நிஜமானாலும் வீடும் மனிதரும் ஒரே சந்தர்ப்பத்தில் ஒத்துக்கொள்வதென்றால், அது சாத்தியமான விஷயமா?'' என்றாள்.

அதைக்கேட்ட அம்மணிபாயி நிரம்பவும் கோபம் கொண்டவளாய்க் கடுகடுத்த முகத்தோடு ஆத்திரமாகப் பேசத் தொடங்கி, ''அப்படியானால், உனக்குப் பைத்தியம் பிடித்திருக்க வேண்டுமென்பதே உறுதிப்படுகிறது. நீ குறிக்கும் மனுஷி நானல்ல என்று நான் தக்க காரணத்தோடு சொல்லுகிறேன். அதை நீ கவனிக்காமல் நீ சொல்வதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டே போகிறாயே! வீடும் மனிதரும், ஒற்றுமையாக இருக்கிறதென்று நீ பிடிவாதமாகச் சொல்வதைப் பார்த்தால் உன் கண்பார்வையில் ஏதோ களங்கம் ஏற்பட்டிருக்க வேண்டுமேயன்றி வேறல்ல. அரைகுறையான திருஷ்டிக்கு எல்லாவீடும் ஒன்றுபோலவே இருக்கும். எல்லா மனிதரும் ஒரே மாதிரியே காணப்படுவார்கள். ஒரு வீட்டுக்கும் இன்னொன்றுக்கும், ஒரு மனிதருக்கும் இன்னொருவருக்கும் உள்ள வித்தியாசம் சொற்பமாக இருந்து, கண் திருஷ்டியும் கொஞ்சம் மங்கலாக இருந்தால், வேறுபாடு எப்படித் தெரியப் போகிறது. ஆகையால், இதற்கு உன் கண்களே ஜெவாப்தாரி யென்று நினைக்கிறேன். இன்னமும் உனக்குச் சந்தேகம் தீராமலிருந்தால் நான் நாளையதினம் காலையில் இங்கேயிருந்து புறப்பட்டு அரண்மனைக்குப் போகும்போது என்னோடு கூடவே வந்தால், நான் கோலாப்பூருக்கு எப்போதாவது

போனதுண்டா என்பதை பெரிய மகாராணியின் வாய்மூல மாகவே நீ அறிந்து கொள்ளும்படி செய்கிறேன்'' என்றாள்.

அதற்குமேல் என்ன சொல்வதென்பதை அறியாமல் கருப்பாயி அசைவற்று நின்றுவிட்டாள்.

உடனே, நீலமேகம்பிள்ளை பேசத் தொடங்கி, ''அம்மா! நீங்கள் இவ்வளவு தூரம் உறுதியாகச் சொல்லும்போது, இதற்கு மேல் நாங்கள் சந்தேகிப்பது நியாயமல்ல. அதிருக்கட்டும்; இந்த வீட்டின் இலக்கம் 13 தானே?''என்றார்.

அம்மணிபாயி, ''ஆம்; 13-தான்'' என்றார்.

நீலமேகம்பிள்ளை ''இங்கே சோமசுந்தரம்பிள்ளை என்று யாராவது இருந்ததுண்டா?'' என்றார்.

அம்மணிபாயி, ''இந்த வீடு தலைமுறை தலைமுறையாக எங்களுக்கே சொந்தமானது. நாங்கள் மகாராஷ்டிர ஜாதியைச் சேர்ந்தவர்கள்; இங்கே சோமசுந்தரம் பிள்ளையென்று யாரும் இருந்ததில்லை'' என்றாள்.

அதைக்கேட்ட நீலமேகம்பிள்ளை, ''சரி; அப்படியானால் நாங்கள் போகிறோம். நீங்கள் இனி கதவை மூடிக்கொண்டு உள்ளே போகலாம். உள்ளே ஏதோ அலுவலாக இருந்த உங்களுக்கு அநாவசியமான தொந்தரவு கொடுத்து விட்டோம்'' என்று கூற, அம்மாணிபாயி உடனே கதவை மூடித் தாளிட்டுக் கொண்டு உள்ளே போய்விட்டாள்.

நீலமேகம்பிள்ளை, கருப்பாயியை அழைத்துக்கொண்டு ஸாரட்டிற்குப் போய், அதில் ஏறி உட்கார்ந்து வண்டியைத் திருப்பி விடுத்துக்கொண்டு மறுபடியும் தமது ஜாகைக்குப் போய்ச்சேர்ந்தார். வரும்போது, பக்கத்திலிருந்த சில மனிதரிடம் விசாரித்து அந்த வீடு அம்மணிபாயி என்பவளுடைய வீடு என்பதை அறிந்துகொண்டார். அவரது மனதில் குழப்பமும் பிரமையுமே குடிகொண்டிருந்தன. எது உண்மை என்பதை

நிச்சயிக்க மாட்டாமல் அவரது மனம் பலவகையில் சந்தேகப்பட்டது. ஆனாலும், கருப்பாயி சொல்வது முற்றிலும் தவறாக இராதென்ற ஓர் உறுதிமாத்திரம் புலப்பட்டுக் கொண்டு வந்தது. தாம் திருவாரூருக்குப் போயிருந்த காலத்திலேயே, ஷண்முகவடிவின் வேலைக்காரி, கருப்பாயி, சிவபாக்கியம் ஆகிய மூவரும் கமலம் சக்க்ாநாயக்கர் தெரு 13வது இலக்கமுள்ள வீட்டிலிருக்கிறாள் என்றும், ஷண்முகவடிவு அந்த விலாசத்திற்குப் பல தடவைகளில் கடிதம் அனுப்பி மறுமொழி பெற்றாள் என்றும் சொன்னது நன்றாக நினைவிருந்தது. தாம் போய்ப் பார்த்தது 13வது இலக்கமுள்ள வீடே என்பதும், அந்த வீட்டின் சொந்தக்காரி அம்மணிபாயி என்பதும் அவருக்குச் சந்தேகமறத் தெரிந்தன. ஆனால், இன்னொரு விஷயம் மாத்திரம் அவரது மனதைப் பெரிதும் கலவரத்திற்கு உள்ளாக்கியது. ஷண்முகவடிவும், கருப்பாயியும் அம்மணிபாயியின் வீட்டிற்கு வந்திருந்த காலத்தில், அம்மணிபாயி சக்காநாயக்கர் தெரு 13வது இலக்கமுள்ள சோமசுந்தரம்பிள்ளையின் வீட்டிலிருக்கும் கமலத்தினிடம் அழைத்துக்கொண்டு போவதாகச் சொல்லி ஷண்முகவடிவை எங்கே அழைத்துக் கொண்டு போயிருப்பாள் என்ற சந்தேகமே பலமாக எழுந்து அவரது மனதை சஞ்சலப் படுத்தியது. முடிவில், கமலமும், ஷண்முகவடிவும் ஏதோ ஒரு வஞ்சகச் சூழ்ச்சியில் அகப்பட்டிருக்க வேண்டுமென்றும், அதில் அம்மணிபாயி சம்பந்தப்பட்டிருக்க வேண்டுமென்றும் ஓர் எண்ணம் அவரது மனதில் உதித்தது. தாம் எப்பாடுபட்டாவது அதன் உண்மையை அறிந்துகொண்டு தமது தங்கைமார்களைத் தமது வசப்படுத்தி கண்ணியமான நல்ல நிலைமையில் வைக்க வேண்டுமென்று அவர் உறுதியான தீர்மானம் செய்து கொண்டார். அந்தச் சமயத்தில் அந்த ஊர் போலீஸ் இன்ஸ்பெக்டரைப் பற்றிய நினைவு அவருக்கு உண்டாயிற்று. தமது தந்தையின் பிரேதத்திலிருந்து உயிலை எடுத்துக் கொடுத்தவர் போலீஸ் இன்ஸ்பெக்டரே ஆதலால், அந்த உயிலில் முக்கியமான பல விஷயங்களைப் படித்த காலத்தில்,

அந்த தஸ்தாவேஜியை இன்ஸ்பெக்டரிடம் காட்ட வேண்டுமென்ற ஆசை நீலமேகம் பிள்ளைக்கு உண்டாயிற்று. ஆனால், தாம் தமது சகோதரிகளையும் பார்க்க வேண்டுமென்ற ஆவல் மும்முரமாக எழுந்து அவரை வதைத்தது. ஆகையால், தாம் முதலில் திருவாரூர் போய் அவர்களைப் பார்த்து, அவர்க ளெல்லோரையும் தஞ்சைக்கு அழைத்துக்கொண்டு வந்தபிறகு தாம் போலீஸ் இன்ஸ்பெக்டரைப் பார்க்க வேண்டுமென்றும், உடனே லீலாவதியையும் கண்டு பேசி, அவளைப் பற்றி தமது தந்தை எழுதியுள்ள விஷயங்களை அவளுக்குத் தெரிவித்து, தம்மால் அவளுக்கு எவ்வித உதவி தேவையானாலும் அதை உடனே செய்ய வேண்டுமென்றும் அவர் முடிவு செய்திருந்தார். அந்த நினைவே இப்போது அவரது மனதில் உண்டாயிற்று. தாம் இன்ஸ்பெக்டரிடம் போய் உயிலின் விவரத்தை வெளியிட்டு தாம் திருவாரூருக்குப் போய் வந்த வரலாற்றையும் தமது தங்கைகள் ஆச்சரியகரமாக வஞ்சிக்கப்பட்டிருக்கும் விஷயத்தை யும் தெரிவித்து அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்கும்படி அவரிடம் கேட்டுக்கொள்ள வேண்டு மென்ற எண்ணம் உண்டாயிற்று. ஆகவே, அவர் கருப்பாயியைத் தமது மாளிகையில் விட்டுவிட்டுத் தனிமையில் புறப்பட்டுப் போலீஸ் இன்ஸ்பெக்டரது ஜாகைக்குப் போய்ச் சேர்ந்தார்.

நீலமேகம்பிள்ளை உண்மையில் பெருந்தன்மையும் கண்ணியபுத்தியும் நன்னடத்தையும் வாய்ந்த உத்தம புருஷர் என்பதை போலீஸ் இன்ஸ்பெக்டர் நன்றாக அறிந்தவர். ஆதலால், அவர் நீலமேகம்பிள்ளையினிடம் அளவற்ற அன்பும் மதிப்பும் வைத்திருந்தார். அவர் திடீரென்று தமது இருப்பிடத் திற்கு வந்ததைக் கண்ட இன்ஸ்பெக்டர் மிகுந்த மகிழ்ச்சியும் உற்சாகமும் கொண்டு நிரம்பவும் உவப்போடு அவரை வரவேற்று மரியாதை செய்து ஆசனமளித்து உட்காரச் செய்து, "உங்களைப் பார்த்து சுமார் இருபத்தைந்து நாட்களிருக்கும் என்று நினைக்கிறேன். உங்களுடைய ஞாபகம் என் மனசில்

இருந்து கொண்டுதான் இருக்கிறது. மறுபடியும் ஒரு தடவை வந்து நான் உங்களைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் பல தடவைகளில் எனக்கு உண்டாயிற்று. ஆனால், ஒரு பிரமாதமான வழக்கில் முக்கியமான சில குற்றவாளிகளைக் கண்டுபிடிப்ப தற்காக நான் இரவு பகல் ஓய்வின்றி அலைந்து கொண்டி ருக்கிறேன். வேளா வேளைக்கு நான் போஜனம் சாப்பிடு வதற்குக் கூட எனக்கு அவகாசம் கிடைப்பது அருமையாய்ப் போய்விட்டது. இந்த வழக்கு ஒருவிதமாக முடிந்தவுடன் வந்து உங்களைப் பார்க்கவேண்டுமென்று நினைக்கிறேன். இதற்குள் நீங்களே வந்து, நான் எதிர்பார்த்த சந்தோஷத்தை உண்டாக்கி விட்டீர்கள்'' என்று புன்னகை தவழ்ந்த முகத்தோடு கூறினார். அவர் தமக்குக் காட்டிய அந்தரங்க அன்பையும், மரியாதையையும் உணர்ந்து பெரிதும் மகிழ்ச்சியடைந்த நீலமேகம்பிள்ளை, ''நீங்கள் சொல்வதைப் பார்த்தால், உங்களுக்கு அவகாசக் குறைவு ஏற்பட்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வராமல் இன்னம் சொற்ப காலம் கழித்து வந்திருக்கலாம் என்ற எண்ணம் உண்டாகிறது. ஏற்கெனவே உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அசந்தர்ப்பத்தை நான் வந்து இன்னமும் அதிகப்படுத்துகிறேன் போலிருக்கிறது; அதோடு கூட நான் உங்களிடம் சொல்லிக்கொள்ள வந்திருக்கும் தகவல்களை நீங்கள் தெரிந்துகொண்டால், உங்களுடைய கவலைகளும், கலவரமும் அதிகரிக்குமென்று நினைக்கிறேன். ஆகையால், இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களை வருத்தாமல் உத்தரவு பெற்றுக்கொண்டு வீட்டுக்குப் போய், சில தினங்களுக்குப் பிறகு வரலாம் என்று நினைக்கிறேன்'' என்று மனப்பூர்வமான அன்போடு கூறினார்.

அதைக்கேட்ட இன்ஸ்பெக்டர் முன்னிலும் அதிகரித்த அன்பும் மகிழ்ச்சியும் தோற்றுவித்து, ''இல்லை இல்லை. இப்போது எனக்கு அவ்வளவு அதிக தொந்தரவு இல்லை.

இதுவரையில் அப்படி இருந்ததென்று சொன்னேன். நான் எடுத்துக்கொள்ளவேண்டிய பிரயாசைகளெல்லாம் அநேகமாய்த் தீர்ந்துவிட்டன. இனி எனக்கு ஓய்வுதான். வேறொன்றுமில்லை. இந்த வழக்கைப்பற்றி ஒருவேளை நீங்கள் கேள்வியுற்றிருப்பீர்கள். இது ஒரு பெண்ணைப்பற்றியது. அந்தப்பெண் இருப்பது கருந்தட்டாங்குடியில். அந்தப் பெண்ணை அதன் தாய் தகப்பனார்மார் மகரநோம்புச் சாவடியிலுள்ள ஒருவருக்குக் கட்டிக்கொடுப்பதாகத் தீர்மானித்து, கல்யாணத்திற்காகப் பெண்ணை அலங்காரம் செய்து கொட்டு முழக்கோடு அழைத்துக் கொண்டு வந்தார்கள். அந்தப் பெண்ணைக் கட்டுவதற்கு பாத்தியஸ்தனான வேறொருவன் அந்தப் பெண்ணைத் தனக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டதற்கு ஏதோ சில காரணங்களை முன்னிட்டு பெண் வீட்டார் இணங்கவில்லை. அந்தப் பாத்தியஸ்தன் அந்தப் பெண்ணை எப்படியாவது பலவந்த மாகத் தூக்கிக்கொண்டு போய்த் தாலி கட்டிவிட வேண்டு மென்று, அதற்காக நூற்றுக் கணக்கில் ஆள்களைத் தயாரித்துக் கொண்டிருந்த சங்கதி பெண் வீட்டாருக்குத் தெரிந்தது. அவர்கள் எங்களுடைய உதவியை நாடி எங்களுக்கு ஒரு மனு அனுப்பிக்கொண்டார்கள். நாங்கள் அதை அற்பமாக மதித்து சில ஜெவான்களையே அனுப்பி வைத்தோம். எதிர்க்கட்சிக்காரன் சுமார் இருநூறு ஆள்களோடு வந்து தடிகளையும் கத்திகளையும் உபயோகப்படுத்தி பெருத்த கலகம் விளைவித்து, பெண்ணை அபகரித்துக் கொண்டு போய்விட்டான். பெண்வீட்டாருள் சிலரும், போலீஸ் ஜெவான்கள் சிலரும் அடிபட்டு வீழ்ந்துவிட்டனர். அவர்களுள் பலர் பலத்த காயம்பட்டும் பலர் மாண்டும் போயினர். அந்தச் சங்கதியை அறிந்த நான் ஏராள மான ஜெவான்களை அழைத்துக் கொண்டு எதிரிகளிருந்த இடத்திற்குப்போய்; அவர்களுள் பலரைக் கைதி செய்து, பெண்ணையும் மீட்டுக்கொண்டு வந்து சேர்ந்தேன்.

பெண்ணைக் கொண்டுபோவதற்குக் காரணபூதர்களாயிருந்த முக்கியமான ஐந்தாறு மனிதர்கள் ஓடி ஒளிந்து கொண்டனர். ஆதலால், அவர்களைப் பிடிப்பதற்காக நான் இத்தனை நாட்கள் பிரயாசைப்பட்டேன். எல்லோரும் அகப்பட்டுவிட்டார்கள். பெண்ணை அபகரித்துக்கொண்டு போய்க் கட்டிக்கொள்ள இருந்த அந்தப் பாத்தியஸ்தன் கடைசியாக நேற்று தினந்தான் அகப்பட்டான். இனி எனக்கு யாதொரு பிரயாசையுமில்லை. ஆகையால், இப்போது நீங்கள் வந்ததனால் எனக்குக் கொஞ்சமும் ஆதங்கமாவது இடைஞ்சலாவது கிடையாது. உங்களுக்கு என்ன காரியம் ஆக வேண்டுமோ அதை நீங்கள் தெரிவிக்கலாம். என்னால் இயன்ற உதவியை நான் செய்யத் தடையில்லை. நான் பொது ஜனங்களுடைய சேவகன். அவர்களுக்கு நேரும் இடர்களை என்னால் ஆன வரையில் விலக்கவேண்டியது என்னுடைய கடமை. என்னால் ஒழிவு ஏற்படுகிறவரையில் நீங்கள் காத்திருப்பது என்பது ஒருநாளும் முடியாத காரியம். சமுத்திரத்தில் அலைகள் ஓய்ந்தாலும் ஓயலாம். போலீசாருடைய மனக்கவலை ஒரு க்ஷணநேரங்கூட ஓயாது'' என்று ஹாஸியமாக மறுமொழி கூறினார்.

அதைக்கேட்ட நீலமேகம்பிள்ளை ஒருவாறு துணிவும் மகிழ்ச்சியும் அடைந்தவராய்த் தமது மடியிலிருந்த ஒரு காகிதச் சுருளை எடுத்துப் பிரித்து அதற்குள்ளிருந்த ஒரு தஸ்தாவேஜியை எடுத்து இன்ஸ்பெக்டரிடம் நீட்டி, ''இந்தக் காகிதத்தைப் பாருங்கள். இது இன்னதென்ற அடையாளம் உங்களுக்குத் தெரிகிறதா?''என்றார்.

உடனே இன்ஸ்பெக்டர் அந்தக் காகிதத்தை உற்றுப் பார்த்து குழப்பமடைந்த முகத்தோடு, ''இது இன்னதென்பது தெரிய வில்லையே! இதற்குமுன் இதை நான் பார்த்திருக்கிறேனா?'' என்றார்.

நீலமேகம்பிள்ளை, ''அன்றையதினம் இரவில் என் தகப்பனாருடைய உடம்பிலிருந்து நீங்கள் எடுத்து என்னிடம் கொடுத்தீர்களே. அதுவல்லவா? இது எவ்வளவு முக்கியமான தஸ்தாவேஜி என்பதைப் படித்துப் பாருங்கள்'' என்றார்.

அதைக்கேட்ட இன்ஸ்பெக்டர் மிகுந்த மனவெழுச்சியும் ஆவலும் அடைந்து, ''ஓகோ! அப்படியா! அன்றைய தினம் மங்கலான வெளிச்சத்தில் நான் இதைப் பார்த்ததனால், எனக்கு உடனே அடையாளம் தெரியவில்லை. இது ஏதாவது சாதாரணமான கடிதமாக இருக்குமென்று நான் அப்போதே எண்ணிக்கொண்டேன். ஆகையால், அதன்பிறகு இதைப்பற்றிய நினைவே எனக்கு உண்டாகவில்லை'' என்று கூறியவண்ணம் அதை வாங்கிப் பிரித்தார். நீலமேகம்பிள்ளை, ''நானும் இதை முதலில் அலட்சியமாக மதித்து, சுமார் இருபது நாள்கள் வரையில் இதைப் படிக்காமல் இருந்துவிட்டேன். இப்போது தான் நாலைந்து தினங்களுக்குமுன் இதைப்பற்றிய நினைவு உண்டாயிற்று. உடனே எடுத்துப் படித்தேன். இதிலிருந்து மகா முக்கியமான சில விஷயங்கள் வெளியாயின. உடனே இதைக் கொண்டுவந்து உங்களுக்குக் காட்ட வேண்டுமென்ற ஆவல் என் மனதில் உண்டானது. ஆனாலும் நான் முதலில் வேறே ஓரிடத்திற்கு அவசரமாய்ப் போக வேண்டியிருந்ததால், நான் உடனே இங்கே வரவில்லை'' என்றார்.

அவர் பேசியதைக் கேட்டுக்கொண்டே இன்ஸ்பெக்டர் உயிலைப் பிரித்து, அதைத் தமக்குள்ளாகப் படித்து முடித்தார். படிக்கவே அவர் மிகுந்த வியப்படைந்து, ''ஆம். இதிருக்கட்டும். நீங்கள் இந்த உயிலைப் படித்தவுடன் எங்கேயோ ஓரிடத்துக்கு அவசரமாய்ப் போனதாகச் சொன்னீர்களே! திருவாரூருக்குத் தானே போயிருந்தீர்கள்? முதன் முதலாக உங்களுடைய தங்கை மாரைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை உண்டாவது சகஜமே. ஆம், அங்கே போனீர்களே; அந்தப் பெண்களுள் மூத்தவளை நீங்கள் அங்கே

கண்டிருக்க மாட்டீர்கள். சிறிய பெண் அங்கே இருக்கிறாள் அல்லவா?'' என்றார்.

அந்த வார்த்தையைக்கேட்ட நீலமேகம்பிள்ளை அளவற்ற வியப்பும் பிரமிப்பும் அடைந்து, ''என்ன ஆச்சரியம்! உங்களுக்குத் தெரியாத விஷயம் இந்த உலகத்தில் ஒன்றும் இருக்காது போலிருக்கிறதே. நீங்கள் தஞ்சாவூரில் இருக்கிறீர்கள்; திருவாரூரில் உள்ளவர்களுடைய சங்கதிகூட உங்களுக்குத் தெரிந்திருக்கிறதே! உண்மையில் உங்களிடம் தெய்வீகமான ஞானதிருஷ்டி இருக்கவேண்டும் என்றே நினைக்கிறேன்'' என்றார்.

இன்ஸ்பெக்டர் சந்தோஷமாகப் புன்னகை செய்து, ''நீங்கள் நினைக்கிறபடி என்னிடத்தில் தெய்வீகமான சக்தி எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை. இந்த உலகத்திலுள்ள சகலமான விஷயங்களும் எனக்குத் தெரியுமென்று சொல்வதும் சரியல்ல. அந்தப் பெண்களின் விஷயம் தற்செயலாக எனக்குத் தெரிந்தது. இந்த உயிலில் குறிக்கப்பட்டிருக்கும் கமலம், ஷண்முகவடிவு என்ற பெயர்களையும் அவர்கள் இருக்கும் இடம், அநாதரவான நிலைமை முதலிய விவரங்களை உணரவே, இதற்குமுன் தற்செயலாக நான் தெரிந்துகொண்ட பெண்களே இவர்களென்று உறுதி ஏற்பட்டது. அவ்வளவே விஷயம். இதைத்தவிர, நான் ஞானதிருஷ்டியால் இதையெல்லாம் தெரிந்து கொண்டேன் என்று சொல்வது சரியல்ல'' என்றார்.

நீலமேகம்பிள்ளை, ''இந்தப் பெண்களைப்பற்றிய வரலாறு உங்களுக்கு எப்படித் தெரிந்தது? எப்போது தெரிந்தது? நீங்கள் யூகிக்கிறபடி நான் இந்த உயிலைப் படித்தவுடன் அந்த ஊருக்குத்தான் போனேன். இரண்டு பெண்களும் அங்கே யில்லை. அவர்கள் இந்த ஊரிலேயே இருப்பதாகத் தெரிந்தது. ஆகையால், நான் உடனே புறப்பட்டு இன்றைய தினம் காலையில்தான் இங்கே வந்தேன்'' என்றார்.

இன்ஸ்பெக்டர், "ஓகோ! அப்படியா! ஆனால், ஷண்முகவடிவு என்ற சின்னப்பெண் இன்னம் ஊருக்குத் திரும்பி வரவில்லையா? என்ன ஆச்சரியம்! அவள் எங்கே போயிருப்பாள் என்பது தெரியவில்லையே! அவள் ஊருக்குத் திரும்பிப் போயிருப்பாள் என்றல்லவா நினைத்து நான் சும்மா இருந்துவிட்டேன்" என்றார்.

நீலமேகம்பிள்ளை, "அவளையும் ஒரு வேலைக்காரியையும் அம்மணிபாயி என்ற ஒரு ஸ்திரீ கோலாப்பூரிலிருந்து அழைத்து வந்தாளாம். வேலைக்காரி அசெளக்கியமாய் அம்மணிபாயியின் வீட்டில் படுத்திருந்தாளாம். அந்த அம்மணிபாயி, சக்கா நாயக்கர் தெரு 13வது இலக்கமுள்ள வீட்டிலிருக்கும் சோமசுந்தரம் பிள்ளையோடிருக்கும் கமலத்தினிடம் ஷண்முகவடிவை அழைத்துக்கொண்டு போவதாகச் சொல்லி அவளை எங்கேயோ அழைத்துக்கொண்டு போனாளாம். அதன்பிறகு வேலைக்காரி ஐந்தாறு நாட்களில் செளக்கியமடைந்தாளாம். அவள் முன்னால் ஊருக்குப் போகட்டும் என்றும் தான் கமலத்தினிடம் கொஞ்ச காலம் இருந்து பின்னால் வருதாகவும், ஷண்முகவடிவு செய்தி சொல்லி அனுப்பியதாக அம்மணிபாயி வேலைக்காரியிடம் சொன்னாளாம். வேலைக்காரி அதை உண்மையென்று நம்பி ஊருக்குப் போய்விட்டாள். இந்த வரலாற்றை நான் தெரிந்து கொண்டவுடனே என் மனதில் ஒரு பெரிய சந்தேகம் உதித்தது. என் தகப்பனார் சோமசுந்தரம் பிள்ளையென்ற பொய்யான ஒரு பெயரை வைத்துக்கொண்டு அவர்களுக்குப் பணவுதவி செய்து வந்ததாக இந்த உயிலில் எழுதியிருக்கிறார் அல்லவா. அப்படியிருக்க, உண்மையில் சோமசுந்தரம் பிள்ளையென்று எவரும் இல்லையே; கமலமும், ஷண்முகவடிவும் எந்த சோமசுந்தரம்பிள்ளை வீட்டில் இருக்கிறார்கள் என்ற சந்தேகம் பெரிதாக உண்டாகிவிட்டது. நான் உடனே அந்த வேலைக்காரி யையும் அழைத்துக்கொண்டு இந்த ஊருக்கு வந்து உடனே சக்கா நாயக்கர் தெரு 13வது இலக்கமுள்ள வீட்டுக்குப் போனேன்.

போய்ப் பார்த்ததில் என்னுடைய மனக்குழப்பம் அதிகமாகி விட்டது. ஷண்முகவடிவும் வேலைக்காரியும் அதே வீட்டில் தான் வந்து இறங்கினார்களாம். அவர்களை அழைத்து வந்த அம்மணிபாயி அதே வீட்டில் இருக்கிறாள். அவள் சக்கா நாயக்கர் தெரு 13வது இலக்கமுள்ள வீட்டிலிருக்கும் கமலத்தினிடம் அழைத்துக்கொண்டு போனாளென்று வேலைக்காரி உறுதியாகச் சொல்லுகிறாள். ஆனால், அந்த அம்மணிபாயி என்பவள் தனக்கு யாதொன்றும் தெரியாதென்றும், தான் கோலாப்பூருக்கே போனதில்லை என்றும், இவர்கள் தன் வீட்டுக்கு வரவில்லை என்றும், தான் அரண்மனையில் பெரிய ராணியிடம் வேலை பார்ப்பவள் என்றும் சொல்லி, அந்த வேலைக்காரியைத் தனக்குத் தெரியவே தெரியாதென்று ஒரே உறுதியாகச் சொல்லி மறுத்துவிட்டாள். விஷயம் நடந்திருப்பதைப் பார்த்தால், எனக்கு அந்த அம்மணிபாயியின் மேல் பூராவும் சந்தேகம் உண்டாகிறது. ஷண்முகவடிவு இன்னமும் அவளுடைய வசத்திலேதான் எங்கேயாவது இருப்பாளென்று நினைக்கிறேன்'' என்றார்.

அதைக்கேட்ட இன்ஸ்பெக்டர், ''ஓகோ! நீங்கள் வேலைக்காரியை அழைத்துக்கொண்டு அவளிடம் போயிருந்தீர்களா! அப்படியா சங்கதி! அந்த அம்மணிபாயி சாதாரண மனுஷியா! அவள் பெரிய மலைமுழுங்கி ஆசாமியாயிற்றே. அவள் உங்களிடமெல்லாம் பேச்சில் அகப்பட்டுக் கொள்வாளா? ஷண்முகவடிவும் நானும் நேரில் போய் அவளிடம் பேசிய காலத்திலேயே அவள் எங்களையெல்லாம் பேச்சில் தூக்கி எறிந்துவிட்டாளே. அவளுக்கு இந்த வேலைக்காரி ஒரு பொருட்டா!'' என்றார்.

நீலமேகம்பிள்ளை, ''ஆனால், நீங்கள் சொல்வதைப் பார்த்தால் ஷண்முகவடிவை நீங்கள் நேரில் பார்த்துப் பழகி இருக்கிறீர்கள்போல் இருக்கிறீர்கள்! நீங்கள் எப்போது பார்த்தீர்கள்? அதன்பிறகு அவள் எங்கே போனாள்? எல்லா

விவரத்தையும் சொல்லுங்கள்'' என்று நிரம்பவும் ஆவலோடு கூறினார்.

அதைக்கேட்ட இன்ஸ்பெக்டர், ''ஆம். நான் ஷண்முக வடிவை நேரில் கண்டு பேசிப் பழகி இருக்கிறேன். பரிசுத்த ஸ்வரூபிணி என்றால் அவளுக்கே தகும். அப்படிப்பட்ட குணத்தழகும், நடத்தை அழகும் வாய்ந்த உத்தமஜாதி ஸ்திரீயை நான் வேறே எங்கும் பார்த்ததே இல்லை. அதோடு அவளுடைய அழகோ கண்கொள்ளாத காட்சியாக இருந்தது. அவள் யாரோ ராஜஸ்திரீ என்று நான் முதலில் சந்தேகித்தேன். அது உண்மை யாகவே முடிந்துவிட்டது. அந்தப்பெண் மகாராஜனுக்கு ஜனித்தவள். ஆகையால் அப்ஸர ஸ்திரீ போன்ற அபாரமான தேஜஸ் அவளிடம் ஜ்வலிக்கிறது. ஆனால், அவ்வளவு அபரிமிதமான சிறப்புகள் அவளிடத்தில் இருப்பதால், அந்தப் பெண்ணுக்குப் போகுமிடத்தில் எல்லாம் அபாயம் நேரக் கூடியதாக இருக்கிறது. இருந்தாலும், அந்த உத்தமி எப்பேர்ப்பட்ட பயங்கரமான அசந்தர்ப்பத்தில் அகப்பட்டுக் கொண்டாலும், தன்னுடைய கற்பிற்கு அற்பமான களங்கமும் இல்லாமலே தப்பி வந்துவிடக் கூடியவள். அதைப் பற்றிச் சந்தேகமே இல்லை. கமலமும் தன்னைப் போலவே இருப்பாளென்று அவள் தன்னிடம் தெரிவித்தாள்; அதைக் கேட்டவுடனே அப்பேர்ப்பட்ட இரண்டு பெண்களும் என்னுடைய தங்கைகளாக இருக்கக் கூடாதா என்ற ஒரு பைத்தியக்கார நினைவு என் மனதில் உண்டாயிற்று. உங்களைப் போன்ற பாக்கியவான் யாருமில்லை என்று நான் இப்போது உறுதியாகச் சொல்லுவேன். சரஸ்வதி, மகாலக்ஷ்மி போன்ற நிகரற்ற உத்தமியான அந்த இரண்டு பெண்மணிகளும் உங்களுடைய தங்கைகள் ஆனது, நான் ஏதோ ஒரு பெருத்த குபேர சம்பத்தை அடைந்தது போன்ற ஒரு குதூகலத்தையும் பூரிப்பையும் உண்டாக்கி நான் பரவசம் அடையும்படி செய்கிறது'' என்றார்.

அதைக்கேட்ட நீலமேகம்பிள்ளையின் துயரம் ஆயிரம் மடங்கு பெருகியது. அவர் இன்ஸ்பெக்டரை நோக்கி, ''ஐயா! நீங்கள் சொல்வதைக்கேட்க, என் மனம் முன்னிலும் அதிகமாய்ப் பதறித்துடிக்கிறது. அவர்கள் இருவரும் இப்போது எங்கே இருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள வேண்டு மென்ற ஆவல் என்னைக் கொன்றுவிடும் போலிருக்கிறது. இந்த விஷயத்தில் நீங்கள்தான் எனக்கு உதவி செய்ய வேண்டும்'' என்று நயந்து நிரம்பவும் உருக்கமாகக் கூறினார்.

இன்ஸ்பெக்டர், ''ஐயா! அம்மணிபாயி என்ற அந்தப்பெண் பிள்ளை பெருத்த சூதுகாரி. அவள் சக்காநாயக்கர் தெருவில் 13வது இலக்கமுள்ள வீட்டிலே இருக்கிறாள். ஷண்முகவடிவு இந்த ஊருக்குப் புதியவள். ஆகையால், அவளை ஏமாற்றி அந்த விலாசமுள்ள வீடு வேறே இடத்தில் இருக்கிறதென்று சொல்லி அழைத்துக் கொண்டுபோய் மருங்காபுரி ஜெமீந்தார் மாளிகை யில் விட்டுவிட்டாள். அந்த ஜெமீந்தார் வயசில் கிழவரானாலும் ஸ்திரீசபலம் அதிகமாக உடையவர். ஷண்முக வடிவின் வாயிலிருந்தே அவளது வரலாற்றைக் கேட்டுக்கொண்டு, மருங்காபுரி ஜெமீந்தார்தான் சோமசுந்தரம் பிள்ளையென்று சொல்லி ஷண்முகவடிவை ஏமாற்றி துன்மார்க்கமான நோக்கத்தோடு அவரிடம் கொண்டுபோய் விட்டு வந்து விட்டாளாம். அவள் பேசிய பேச்சுகளிலிருந்து, கமலத்திட மிருந்து அவர்களுடைய குடும்ப விஷயங்களை ஏற்கெனவே அவள் தெரிந்துகொண்டிருக்கிறாள் என்பது நன்றாகத் தெரிந்தது. அந்த அம்மணிபாயி இவர்களுடைய குடும்ப வரலாறு முழுவதையும் மருங்காபுரி ஜெமீந்தாரிடத் திலும் வெளியிட்டி ருக்கிறாள் என்பது நன்றாகத் தெரிகிறது. அவர் அந்த வரலாறுகளை உபயோகப்படுத்தி தாமே சோமசுந்தரம்பிள்ளை என்று நடித்தாராம். இவைகளை எல்லாம் கவனித்தால், கமலம் என்னும் மூத்த பெண்ணும் இந்த அம்மணிபாயின் இடத்திலேயே அகப்பட்டுக்கொண்டு எங்கேயோ வைக்கப்

பட்டிருப்பதாகத் தெரிகிறது. நான் கடைசியாக ஷண்முக வடிவைக்கண்ட தினத்தில், நான் எப்படியும் கமலத்தைக் கண்டு பிடிப்பதாக அந்தப் பெண்ணுக்கு உறுதிமொழி சொன்னேன். ஆனால், அதற்குள் இந்தப் பெரிய கலக வழக்கு ஏற்பட்டு விட்டது. ஆகையால், அதை நான் கவனிக்க முடியாமல் போய்விட்டது. அதுவுமன்றி, நான் சொல்லியிருந்தபடி மறுநாள் ஷண்முகவடிவு போலீஸ் ஸ்டேஷனுக்கு வரவே இல்லை. அவள் ஊருக்குப் போயிருக்கலாமென்று நினைத்துக் கொண்டிருந்தேன். இப்போது நீங்கள் சொல்வதைப் பார்த்தால், ஷண்முகவடிவுக்கு மறுபடியும் ஏதோ அபாயம் நேர்ந்திருக்க வேண்டுமென்றே நினைக்கிறேன்'' என்று கூறி, தாம் ஷண்முக வடிவைச் சந்தித்த வரலாறு, அவள் கூறிய விருத்தாந்தங்கள், அதன்பிறகு தாமும் அவளும் அம்மணி பாயின் வீட்டிற்குப் போனகாலத்தில் நடந்த சம்பாஷணையின் விவரம், முடிவில் தாம் அவளை அவசரமாக விட்டுப் பிரிந்து போக நேர்ந்த சந்தர்ப்பம் முதலிய சகலமான விஷயங்களையும் விரிவாக எடுத்துரைத்தார்.

அதைக்கேட்ட நீலமேகம்பிள்ளை சகிக்க வொண்ணாத மனவேதனை அடைந்து சிறிதுநேரம் பிரமித்திருந்து, ''நீங்கள் சொல்வதைப் பார்த்தால், கமலத்தின் நிலைமையைவிட ஷண்முகவடிவின் நிலைமையே நிரம்பவும் கவலைக்கிடமாக இருக்கிறதே. மூத்தவள் அம்மணிபாயியின் வசத்திலேயே இருக்கிறாள் என்றும் நாம் எண்ண இடமிருக்கிறது. அவளைக் கொண்டு, நாம் கமலத்தைக் காண்பது ஒருவேளை சாத்திய மாகலாம். ஆனால், இப்போது ஷண்முகவடிவு எங்கே போயிருப்பாள் என்பது தெரியவில்லையே! அவள் மறுபடியும் அம்மணிபாயியின் வசத்தில் அகப்பட்டுக் கொண்டிருப்பாள் என்று நினைக்க எவ்வித ஏதுவுமில்லையே'' என்றார்.

இன்ஸ்பெக்டர், ''ஆம். அந்த விஷயந்தான் என் மனசிலும் பட்டது. அன்றையதினம் இரவில் நாங்கள் கீழக்கோட்டை

வாசலண்டை வந்த காலத்தில் இந்தக் கலகம் நடந்ததையும் எதிராளிகள் போலீஸ் ஜெவான்களை அடித்துக் கொன்றதையும் கண்டு இன்னும் பல ஜெவான்களை அழைத்துவர வேண்டு மென்ற பதைப்பிலும் ஆத்திரத்திலும் மெய்மறந்து நான் அந்தப் பெண்ணைவிட்டுப் பிரிந்து போய்விட்டேன். அந்த இடத்திற்குப் பக்கத்தில் ஒரு சந்து இருந்தது. அங்கேபோய் ஏதாவது ஒரு வீட்டில் தங்கியிருந்து காலையில் வரும்படி சொல்லிவிட்டுப் போய்விட்டேன். இப்போது யோசித்துப் பார்த்தால், நான் அப்படிச் செய்தது தவறெனத் தோன்றுகிறது. கொஞ்ச நேரம் பிடித்தாலும் பிடிக்கட்டுமென்று அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு ஸ்டேஷனுக்குப் போய் அவ்விடத்தில் அவளை இருக்கச் செய்துவிட்டு வந்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். இப்போது இவ்வளவு பெரிய ஊரில் நாம் எங்கே போய்த் தேடுகிறது. அந்தப்பெண் சுயேச்சையாக நடமாடக் கூடிய நிலைமையிலிருந்தால், இத்தனை நாள் என்னிடம் வராமல் இருக்கவே மாட்டாள்; அல்லது அவள் திருவாரூருக்காவது போயிருப்பாள். இரண்டும் இல்லாதிருப்பதைப் பார்த்தால், அந்தப் பெண்ணை யாரோ எவ்விடத்திலோ கொண்டுபோய்ச் சிறை வைத்திருக்க வேண்டுமென்பதே நிச்சயம். கொஞ்சமும் சந்தேகமே இல்லை. நாம் முதலில் அந்தப்பெண்ணைத்தான் தேடிப் பார்க்க வேண்டும்'' என்றார்.

நீலமேகம்பிள்ளை மிகுந்த கலக்கமடைந்து, ''இவ்வளவு பெரிய ஊரில், நாம் எங்கேபோய் அவளைத் தேடுகிறது? அவள் காணாமல் போய்ச் சுமார் 25 தினங்கள் ஆகியிருக்கலாம் போலிருக்கிறது. அவளைச் சிறைப்படுத்தியிருக்கிறவர்கள் இந்நேரம் அவளைக் கொன்றாலும் கொன்றிருக்கலாமே'' என்றார்.

இன்ஸ்பெக்டர் சிறிது சிந்தனைசெய்து, ''என்னவோ பார்க்கலாம். நாம் நம்முடைய புத்தியை உபயோகப்படுத்தி

முயற்சித்துப் பார்ப்போம். முடிவில் காப்பாற்றுவதற்குத் தெய்வம் இருக்கிறது. அந்தப்பெண்ணைக் கடைசியாக நான் விட்டுப் பிரிந்துவந்த இடத்திற்குப் பக்கத்தில் ஒரு சந்து இருந்ததென்று சொன்னேன் அல்லவா? அநேகமாய் அவள் அந்தச் சந்திற்குள்போய் எங்கேயாவது ஒரு வீட்டில் தான் இருக்க வேண்டும். சந்தைத் தவிர பக்கத்தில் வேறே வீடு இல்லை. அந்தச் சந்தின் முனையில் அன்றையதினம் ஜனங்கள் நின்று கொண்டிருந்ததாக எனக்கு நினைவுண்டாகிறது. நான் அங்கே போய் ஒவ்வொரு வீட்டிலுமுள்ள மனிதரிடமும் பேசி, கலகம் நடந்த அந்த இரவில் யாராவது பெண் அங்கே வந்தாளாவென்று தந்திரமாக விசாரித்துப் பார்க்கிறேன். அவ்விடத்தில் கிடைக்கும் செய்தியைக்கொண்டு அதற்குத் தக்கபடி நடந்து கொள்வோம். அதுவுமன்றி, இந்த ஊரில் தாசிகள், வேசிகள், தரகு காரிகள் முதலியோர் இருக்குமிடம் எல்லாம் எங்கள் ஜவான்களுக்கு நன்றாகத் தெரியும். ஓரிடம் விடாமல், அந்த வீடுகளுக்கெல்லாம் போய், யாராவது வஞ்சகமாக இந்தப் பெண்ணை எவ்விடத்திலாவது கொண்டுபோய் விட்டிருக்கிறார்களா என்று பார்க்கச் செய்கிறேன். அப்படிச் செய்வதில், எவ்விதத் தகவலும் கிடைக்காவிட்டால் முடிவில் இன்னொரு காரியம் செய்து பார்க்கலாம். இந்த ஊரில் சுமார் நூறு தெருக்களும் சந்துகளும் இருக்கலாம். இந்த ஊரில் இருநூறு ஜெவான்கள் இருக்கிறார்கள் தெருவுக்கு இரண்டு பேராக அனுப்பி, ஒவ்வொரு வீட்டிலும் அவர்கள் போய்த் தந்திரமாகப் பார்த்து விசாரித்துவிட்டு வரச் செய்கிறேன். இதற்கென்று நாம் ஒரு விஷயத்தைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தால், நாம் எதிர்பார்க்காத அநேக புதிய தகவல்களும் சூசனைகளும் கிடைக்கும். அவைகளை வைத்துக்கொண்டு நாம் மேல் காரியத்தை நடத்தலாம். நாம் இன்னின்ன காரியங்கள் செய்து இன்னின்ன துறையில் வேலை செய்யவேண்டியது என்பதை இப்போதே நிச்சயிப்பது சாத்தியமான காரியமல்ல. ஓர் அற்ப விஷயத்தை வைத்துக் கொண்டு சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி நடந்து நாம் எவ்வளவோ

அருமையான காரியங்களையும் சாதித்துவிடலாம். இனி இது என்னைச் சேர்ந்த பொறுப்பு. இதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். இந்தக்ஷணம் முதல் நான் என் முழு கவனத்தையும் இந்த விஷயத்திலேயே செலுத்தி என்னாலான வரையில் முயற்சி செய்து பார்த்துவிடுகிறேன். அந்தப் பெண் என்னுடைய சொந்தத் தங்கையென்றே நான் மதிக்கிறேன் என்பதை நீங்கள் உறுதியாக எண்ணிக்கொள்ளலாம். முதலில் நாம் ஷண்முக வடிவைக் கண்டுபிடித்துக்கொண்டு பிறகு கமலத்தைத் தேடலாம். அவள் ஊருக்குக் கடிதங்கள் எழுதியதிலிருந்து, அவள் உயிரோடு க்ஷேமமாக இருப்பதாகவும், அவளை வஞ்சித்தோருடைய கருத்துக்கு இசைந்து அதற்குத் தகுந்தபடி நடந்துகொண்டிருப்பதாகவும் நாம் யூகிக்கவேண்டியிருக்கிறது. அந்தப் பெண்ணின் கற்பு இதுவரையில் சுத்தமாக இருக்குமோ என்னவோ? அதுதான் கவலைக்கு இடம் கொடுக்கிறது. ஷண்முகவடிவின் பரிசுத்தத்தைப் பற்றி நீங்கள் கனவிலும் சந்தேகிக்க வேண்டியதில்லை. ஆனால் இந்த இருபத்தைந்து தினங்களில் அவளுக்கு எப்படிப்பட்ட அபாயம் நேரிட்டதோ என்பதுதான் பெருத்த கவலையாக இருக்கிறது'' என்றார்.

நீலமேகம்பிள்ளை மிகுந்த கவலையும், கலக்கமும், குழப்பமும் தோற்றுவித்தவராய், ''ஆகா! இந்த ஊர் கெட்ட கேட்டைப் பார்த்தீர்களா? அதுவும் முக்கியமாகப் பெரிய மனிதர்களென்று பெயர் வைத்துக்கொண்டிருப்போர் எப்படிப்பட்ட காரியங்கள் செய்கிறார்கள் பார்த்தீர்களா? அந்த மருங்காபுரிக் கிழவருக்கு வயது எவ்வளவாயிற்று. அவர் இன்னமும் தெய்வம் ஒன்றிருக்கிறது என்பதையாவது, தாம் இனியாவது அடுத்த உலகக் காரியத்தைக் கவனிக்க வேண்டும் என்பதையாவது கொஞ்சமும் எண்ணாமல் எவ்விதமான அட்டூழியம் செய்கிறார் பார்த்தீர்களா?'' என்றார்.

இன்ஸ்பெக்டர் இனிமையாகப் புன்னகை செய்தவராய், ''ஆம். அவரைப்பற்றி நாம் பேசுவதேன்? இதோ இந்த உயிலில்

சொல்லப்பட்டிருப்பதைப் பாருங்கள். சகலமான தர்மமும் அறியாமல் பாதுகாக்கக் கடமைப்பட்டவரான இந்த ஊர் இளவரசர் எவ்விதமாக நடந்துகொண்டிருக்கிறார் என்பதைப் பாருங்கள். அவரே அப்படி இருக்கையில் அவருக்குத் தோழர்களாய் இருப்பவர்கள் என்னதான் செய்யமாட்டார்கள்'' என்றார்.

நீலமேகம்பிள்ளை, ''ஆனால் இதில் நான் உங்களிடம் ஒரு விஷயம் கேட்டுக் கொள்கிறேன். இந்த உயிலில் எழுதப்பட்டிருக்கும் விஷயங்களை எல்லாம் நான் யாரிடமும் வெளியிடவில்லை. அப்படி வெளியிடுவதும் உசிதமானதல்ல. உங்களை நான் ஆப்த சிநேகிராக மதித்து உங்களுக்கு மாத்திரம் இதை நான் காட்டினேன். ஆகையால், நீங்கள் இதிலிருந்து தெரிந்துகொண்ட விஷயங்களை யாரிடமும் வெளியிட வேண்டாம். என் தாயார், இளவரசர், என் தங்கைகள் முதலிய எல்லோருக்கும் பெருத்த இழிவும் பழிப்பும் உண்டாகும். இனி அந்தப் பெண்களிருவரும் அகப்பட்டால்கூட அவர்கள் என்னுடைய சொந்தத் தங்கைகளென்றே நான் சொல்லிக் கொள்ளப்போகிறேன்'' என்றார்.

இன்ஸ்பெக்டர், ''உங்களிஷ்டம் போலவே நடந்து கொள்ளுகிறேன். இவ்வளவு அந்தரங்கமான விஷயத்தை நான் வெளியிடுவேனா? இது தெரியாவிட்டால், நான் எவ்வளவோ பரம ரகசியமான விஷயங்கள் அடங்கிய இந்தப் போலீஸ் இலாகாவில் உத்தியோகம் பார்த்துப் பெயர் வாங்கி இவ்வளவு காலம் நிலைத்திருக்க முடியுமா? அதைப்பற்றி நீங்கள் சந்தேகப்படவே வேண்டாம்'' என்றார்.

நீலமேகம்பிள்ளை, ''சரி; சந்தோஷம். நீங்கள் ஷண்முக வடிவைத் தேடும் காரியத்தை எப்போது முதல் தொடங்கப் போகிறீர்கள்? நானும் உங்களோடுகூட வரலாமா? அப்படி வருவது ஒருவேளை உங்களுக்கு இடைஞ்சலாக இருக்குமோ?'' என்றார்.

இன்ஸ்பெக்டர், ''இன்றுமுதலே நான் அந்த வேலையைச் செய்யத் தொடங்குகிறேன். நீங்கள் என்னோடுகூட வரவேண்டு மென்ற அவசியமில்லை. போலீஸ் துப்பு விசாரிப்பதென்றால் தந்திரமாகவும், பிறர் சந்தேகப்படாதபடியும் நடந்து கொள்ள வேண்டும். உங்களை நான் கூடவே அழைத்துக்கொண்டு போனால், ஜனங்கள் பீதி கொண்டு விஷயத்தை வெளியிடாமல் மறைத்துவிடுவார்கள். ஆகையால், நான் தனியாகவே போகிறேன். நீங்கள் வேறே ஏதாவது காரியம் இருந்தால், அதைப் பாருங்கள்'' என்றார்.

நீலமேகம்பிள்ளை, ''சரி; உங்களிஷ்டப்படியே செய்யுங்கள். நான் வீட்டுக்குப் போகிறேன். நான் முதலில் ஜாகையைவிட்டுப் புறப்பட்டு வந்தது, உங்களைப் பார்த்தபிறகு மருங்காபுரி ஜெமீந்தாருடைய மாளிகைக்குப் போய் லீலாவதியைக் கண்டு அவளைப் பற்றி தன் தகப்பனார் இந்த உயிலில் எழுதியிருக்கும் விஷயத்தை அவளிடம் தெரிவித்து அவளுக்கு என்னால் ஆகவேண்டிய சகலமான உதவிகளையும் செய்வதாகச் சொல்லி விட்டு வீட்டுக்குப் போகலாமென்று எண்ணிக்கொண்டு வந்தேன். ஷண்முகவடிவின் விஷயத்தில் அந்தக் கிழவர் நடந்து கொண்டதைக் கேட்ட பிறகு அந்த மனிதருடைய ஜாகைக்குப் போக எனக்கு மனமில்லை. நான் நேராக வீட்டுக்கே போகிறேன். அங்கிருந்தபடி கடிதம் எழுதி லீலாவதியை என் ஜாகைக்கு வரவழைத்து அவளிடம் சங்கதியைச் சொல்லிக் கொள்ளுகிறேன்'' என்றார்.

அதைக்கேட்ட இன்ஸ்பெக்டர் பெரிதும் வியப்படைந்து, ''நீங்கள் பேசுவதைப் பார்த்தால் சங்கதி உங்களுக்குத் தெரியாது போலிருக்கிறதே!'' என்றார்.

நீலமேகம்பிள்ளை திடுக்கிட்டுத் திகைப்படைந்து, ''என்ன சங்கதியை நீங்கள் குறிக்கிறீர்கள்?'' என்றார்.

இன்ஸ்பெக்டர், "மருங்காபுரி ஜெமீந்தாருடைய மாளிகையில் நெருப்புப் பிடித்துக்கொண்ட சங்கதி உங்களுக்குத் தெரியுமல்லவா?" என்றார்.

நீலமேகம்பிள்ளை மிகுந்த ஆச்சரியமும் கலக்கமும் அடைந்து, "எப்போது நெருப்புப் பிடித்துக் கொண்டது? அது எனக்குத் தெரியவே தெரியாது!" என்றார்.

இன்ஸ்பெக்டர், "நீங்கள் சொல்வது விநோதமாக இருக்கிறதே! இந்தத் தேசம் முழுதும் பரவியிருக்கும் அந்த முக்கியமான சங்கதியை உங்களிடம் யாரும் சொல்ல வில்லையா? அந்த ஷண்முகவடிவை அவர் என்றையதினம் பலாத்காரம் செய்தாரோ அதற்கு மறுநாள் இரவில் தான் நெருப்புப் பிடித்துக்கொண்டது. அதாவது லீலாவதி நம்மிடம் வந்து உங்கள் தகப்பனாருடைய ரகசியத்தை வெளியிட, நாம் வெண்ணாற்றங்கரைக்குப் போய் உங்கள் தகப்பனாருடைய பிரேதத்தை எடுத்து வந்தோமல்லவா; அதே இரவில் தான் அந்த மாளிகையில் நெருப்புப் பற்றிக்கொண்டது. நீங்கள் அதன்பிறகு உங்கள் தகப்பனாருடைய கிர்த்தியங்களைச் செய்வதிலும், அவர் இறந்து போனதைப் பற்றி விசனிப்பதிலுமே உங்கள் மனதைச் செலுத்தி இருந்தமையால், யாரும் இந்த விஷயத்தை உங்களிடம் சொல்லி இருக்கமாட்டார்களென்று நினைக்கிறேன்" என்றார்.

நீலமேகம்பிள்ளை, "ஆம். அன்றையதினம் முதல் நான் திருவாரூருக்குப் போகும் வரையில் எவரிடத்திலும் வாய்திறந்து பேசவே இல்லை. என் தகப்பனாரைப் பற்றிய விசனத்திலும் இருந்தேனல்லவா. அப்போது யாரும் என்னிடம் நெருங்க வில்லை. அதனால் எனக்கு இந்தச் சங்கதி எட்டாமல் போய் விட்டது. அந்த மாளிகையில் நெருப்பு எப்படிப் பிடித்துக் கொண்டது? அதனால் பொருள் நஷ்டம் அதிகம் ஏற்பட்டதோ? மனிதர் யாருக்கும் அபாயம் ஏற்படவில்லையே?" என்றார்.

இன்ஸ்பெக்டர், ‘‘இன்ன காரணத்தினால் நெருப்புப் பிடித்துக் கொண்டதென்பது தெரியவில்லை. மேன் மாடத்தின் ஒரு பாகம் பற்றி எரிந்து நாசமடைந்துவிட்டது. முன் பாகமும், அதாவது அவரது வெல்வெட்டு மாடமும், கீழ்ப்பாகமும் தப்பித்துக்கொண்டன. நடு இரவில் மேன்மாடத்தில் திடீரென்று நெருப்புப் பிடித்துக் கொண்டதாம். அப்போது லீலாவதியும், ஜெமீந்தாரும் மேன்மாடத்தில் இருந்தார்களாம். அன்றைய தினம் கீழே வேலைக்காரர்கள் அதிகமாக இல்லையாம். அவருக்கு முக்கியமான காரியஸ்தன் கோவிந்தசாமி என்று ஒருவன் இருக்கிறான். அவன் ஓர் அறையில் படுத்திருந்தானாம். பக்கத்து வீட்டு ஜனங்கள் மேன்மாடத்தில் உண்டான நெருப்பின் வெளிச்சம் தங்கள் வீட்டுமுற்றத்திலும் தாழ்வாரத்திலும் உண்டானதைக் கண்டு சந்தேகித்து எழுந்துவந்து பார்த்து, மேன்மாடத்தில் நெருப்புப் பிடித்துக்கொண்ட சங்கதியைத் தெரிந்து கொண்டு கோவென்று அலறிப் பெருங்கூச்சல் செய்து கொண்டு வெளியில் ஓடிவந்து அவருடைய மாளிகையின் வாசலில் நின்று கூச்சலிட்டனராம். உடனே கோவிந்தசாமி விழித்துக்கொண்டு வெளிக்கதவைத் திறந்துவிட்டவுடன் ஓட்டமாக மேன்மாடத்துக்கு ஓடிப் பார்த்தானாம். கிழவர் விசை வைத்த நாற்காலியொன்றில் அகப்பட்டு மூர்ச்சித்துக் கிடந்தாராம். லீலாவதி காணப்படவில்லையாம். கிழவர் இருந்த இடத்தைச்சுற்றி நாற்புறங்களிலும் நெருப்பு பிரமாதமாக எரிந்து கொண்டிருந்ததாம்; அவன் இன்னம் கொஞ்சநேரம் போகாமலிருந்தால் ஜெமீந்தார் நெருப்பில் ஆழ்ந்து கருகிப் போயிருப்பாராம். அவன் துணிந்து நெருப்பிற்குள் புகுந்து நாற்காலியின் விசையை விலக்கிவிட்டு அவரைத் தூக்கிக் கொண்டு கீழே வந்து விட்டான். அதற்குள் அண்டை வீடுகளிலிருந்த ஜனங்கள் தத்தம் வீட்டில் ஜலத்தோடிருந்த குடங்களை எடுத்துக்கொண்டு ஆயிரக்கணக்கில் வந்துகூடி ஏணிகளை வைத்துக்கொண்டு ஏறியும், வாசல்களின் வழியாக நுழைந்தும் தண்ணீரைக் கொட்டி ஒரு நாழிகை நேரத்தில்

நெருப்பை அணைத்துவிட்டனர். அந்த ஜெமீந்தார் ரதிகேளி விலாசம் என்று பெயர் கொடுத்து ஏற்படுத்தியிருந்த இடம் முழுதும் நாசமாகிவிட்டது. அதற்குள்ளிருந்த விசை வைத்த நாற்காலிகளும் இன்னும் அவருடைய மஞ்சங்கள் முதலிய ஏராளமான சாமான்களும் எரிந்து இருந்த இடந்தெரியாமல் கரியாய்ப் போய்விட்டன. ஜனங்களுடைய கடுமுயற்சியால் அந்த மாளிகையின் பெரும்பாகமும், அதிலுள்ள அபாரமான பொருள்களும் மிஞ்சின. ஆனால் அந்த ஜெமீந்தார் உயிரோடு இருக்கிறார். ஆனாலும், அவர் இனி பிழைப்பது கடினமென்று வைத்தியர்கள் சொல்லுகிறார்கள். அவரது உடம்பில் பல இடங்களில் நெருப்பு சுட்டுவிட்டது. உதடுகளில் பெரும்பாகம் நெருப்பில் வெந்துபோய் விட்டது. ஆகையால் அந்தப் புண்ணின் உபத்திரவத்தால் அவர் பேசவும் முடியவில்லை. ஆகாரம் மருந்து முதலியவை சாப்பிடவும் முடியவில்லை. அதுபோல அவருடைய இரண்டு கைகளிலும் நெருப்புப் புண்ணிருப்பதால், அவர் எழுதவும் முடியவில்லை. ஆகையால், எப்படி நெருப்புப் பிடித்துக்கொண்டது, லீலாவதி எங்கே போனாள் என்ற விவரங்களை அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியவில்லை. புண்கள் ஆறிக்கொண்டு வருவதாக வைத்தியர்கள் சொன்னார்கள். அவர் இப்போது என்ன நிலைமையில் இருக்கிறார் என்பது எனக்கு அவ்வளவு நிச்சயமாகத் தெரியாது. அவருக்கு நேர்ந்த இந்தப்பெரிய அபாயத்தைப் பற்றி நான் அவர் விஷயத்தில் நிரம்பவும் இரங்குகிறேன். ஆனாலும், அவர் ஷண்முகவடிவு முதலிய பதிவிரதா சிரோன்மணிகள் வயிறெரியச் செய்த பாவம் உடனே கைமேல் பலித்துவிட்டதே அன்றி வேறல்ல என்ற எண்ணமும் ஒரு பக்கத்தில் உண்டாகிறது. அநேகமாய் லீலாவதி நெருப்பில் எரிந்து போயிருக்க வேண்டுமென்று எல்லோரும் சொல்லு கிறார்கள்'' என்றார்.

நீலமேகம்பிள்ளை, ''அன்றையதினம் இரவில் வெகுநேரம் வரையில் நம்மோடுகூட இருந்துவிட்டு வந்த லீலாவதிக்கு

எப்படிப்பட்ட அபாயம் நேரிட்டது பார்த்தீர்களா! அடுத்த க்ஷணத்தில் நமக்கு என்ன ஆபத்து வருமென்று தெரியாதபடி அல்லவா, சம்பவங்கள் திடீர் திடீரென்று நேருகின்றன. ஓர் அடி தூரத்தில் இவ்வளவு பெருத்த பயங்கரமான காரியம் நடந்திருக் கிறது. அதை நான் தெரிந்து கொள்ளாமல் இருந்திருக்கிறேனே! அடாடா! கடைசியில் லீலாவதியின் கதி இப்படியா முடிந்தது! ஐயோ! என்ன கொடுமை இது! அவள் யௌவனப்பருவத்தின் அறியாமையினால் ஏதோ சில தவறுகள் செய்துவிட்டாள். ஆனாலும், அவளிடம் அருமையான பல நற்குணங்கள் இருந்ததை நான் உணர்ந்தேன். அவளுக்கு நான் உதவி செய்ய வேண்டுமென்ற என் தகப்பனாருடைய இச்சை கடைசியில் பூர்த்தியாகாமலா போய்விட்டது. எல்லாவற்றிற்கும் நான் மருங்காபுரி ஜெமீந்தாருடைய மாளிகைக்குப் போய், கிழவரை யாவது பார்த்து, லீலாவதி உண்மையிலேயே இறந்துபோய் விட்டாளா என்பதை நிச்சயித்துக் கொண்டால்தான் என் மனம் சமாதானப்படும் போலிருக்கிறது. ஆகையால், இப்போது அங்கே போய்விட்டு பிறகு என் ஜாகைக்குப் போகலாமென்று நினைக்கிறேன்'' என்றார்.

அதைக்கேட்ட இன்ஸ்பெக்டர், ''அப்படியானால் நானும் உங்களோடு வருகிறேன். ஜெமீந்தாருடைய தேகஸ்திதி எப்படி இருக்கிறதென்பதைப் பார்த்துவிட்டு வரவேண்டுமென்ற ஆசை எனக்கும் உண்டாகிறது. அவர் எனக்கு நிரம்பவும் பழக்க மானவர். அதுவுமன்றி உத்தியோக தோரணையிலும் நான் அவரைப் பார்த்து, அவர் ஏதாவது சங்கதி வெளியிடக்கூடிய நிலைமையிலிருந்தால் அவரோடு பேசி, வீட்டில் நெருப்புப் பிடித்துக்கொண்ட வரலாற்றை அறிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால், வீடு நெருப்புப் பிடித்து எரிந்த காலத்தில், அவர் விசைவைத்த நாற்காலியில் அகப்பட்டுக்கொண்டிருந்ததாக வேலைக்காரன் சொல்லுகிறான். ஆகையால், வேறே யாராவது மனிதர் வந்து அவரை நாற்காலியில் மாட்டிவிட்டு வீட்டில் நெருப்பு வைத்திருப்பாரென்று நினைக்க இடம் கொடுக்கிறது.

அவர் என்ன தகவல் தெரிவிக்கிறார் என்பதைக் கேட்க வேண்டுமென்ற எண்ணம் சில தினங்களாக என் மனசிலிருந்து வருகிறது. ஆகையால் நானும், உங்களோடு கூட வருகிறேன் நீங்கள் சொந்த வண்டியில் தானே வந்திருக்கிறீர்கள்?'' என்றார்.

நீலமேகம்பிள்ளை, ''ஆம்; என்னுடைய ஸாரட்டில் வந்திருக்கிறேன். நீங்களும் வாருங்கள். இரண்டு பேருமாய்ப் போய்ப் பார்ப்போம். எனக்கு அது புது இடமாயிற்றே என்ற கிலேசம் கொஞ்சமிருந்தது. நீங்கள் வருவது நல்லதாயிற்று'' என்றார்.

அதன்பிறகு இன்ஸ்பெக்டர் உயிலை நீலமேகம் பிள்ளையிடம் கொடுக்க, அவர் அதை வாங்கிப் பத்திரப் படுத்திக் கொண்டார். உடனே இன்ஸ்பெக்டரும் நீலமேகம் பிள்ளையும் அவ்விடத்தைவிட்டு வெளியில்போய் ஸாரட்டில் ஏறிக் கொண்டு வடக்கு ராஜவீதியிலிருந்த மருங்காபுரி ஜெமீந்தாரினது மாளிகையை அடைந்தனர். ஜெமீந்தாரது முக்கிய காரியஸ்தனான கோவிந்தசாமி என்பவனே சகலமான பொறுப்பையும் ஏற்று அந்த மாளிகையை ஜாக்கிரதையாகக் காவல் காத்து வந்ததன்றி, நோயாகப் படுத்திருந்த ஜெமீந்தாருக் குரிய சிகிச்சைகளையும் பணிவிடைகளையும் கவனித்து வந்தான். அவன் போலீஸ் இன்ஸ்பெக்டரோடு நன்றாகப் பழகியவன். ஆதலால், அவரைக் கண்டவுடன் நிரம்பவும் பணிவாகவும் மரியாதையாகவும் அவரையும் நீலமேகம் பிள்ளையையும் உபசரித்து மருங்காபுரி ஜெமீந்தார் படுத்திருந்த அறைக்கு அழைத்துக்கொண்டு போனான்.

ஜெமீந்தார் வசதியான ஒரு மஞ்சத்தில் சுகமாகப் படுக்க வைக்கப்பட்டிருந்தார். அவரது உடம்பு முழுதும் நெருப்புச் சுட்டதனால் உண்டான ரணங்களில் மருந்துகள் பூசப்பட்டும், துணிகள் கட்டப்பட்டும் இருந்தன. அவர் நிரம்பவும் தளர்ந்து துரும்புபோல மெலிந்து, முற்றிலும் உருமாறிப் போய் அசைவற்று ஓய்ந்து கிடந்தார். அவரது உதட்டிலிருந்த புண்கள்

அப்போதும் ஆறாமல் இருந்தமையால் முகம் வீங்கி இருந்தது. வாயில் துணிக்கட்டு போடப்பட்டிருந்தது. ஆகையால், உண்ணவாவது, பேசவாவது சிறிதும் சாத்தியமில்லாது இருந்தது. ஆனால், அவரது வலது கையில் பட்டிருந்த ரணம் சொற்பமாக இருந்தது. ஆகையால், அது சிறிதளவு ஆறிப் போயிருந்தது. அந்த நிலைமையில் படுத்திருந்த ஜெமீந்தாருடன் கோவிந்தசாமி போய், "எஜமானே! போலீஸ் இன்ஸ்பெக்டர் ஐயா வந்திருக்கிறார்கள்" என்று பணிவாகவும் மெதுவாகவும் கூறினான்.

அதைக்கேட்டவுடனே கிழவர் தமது கண்களைத் திறந்து கொண்டு பக்கத்தில் நின்றுகொண்டிருந்த இன்ஸ்பெக்டரைப் பார்த்தார். அவரும் சிறிது தூரத்திற்கு அப்பால் நின்ற நீலமேகம்பிள்ளையும் அவருக்கு நமஸ்காரம் செய்தனர். உடனே இன்ஸ்பெக்டர், "உடம்பு ரணங்கள் இன்னும் ஆறவில்லை என்று கோவிந்தசாமி சொன்னான். உதட்டிலிருக்கும் புண்ணினால் ஆகாரத்தை உள்ளே செலுத்த இடைஞ்சல் ஏற்பட்டிருக்கிறதென்று சொன்னான். நான் முன்னே இரண்டு தடவை வந்திருந்த காலத்தில் தாங்கள் பிரக்ஞை தவறி இருந்தீர்கள். ஜாக்கிரதையாகப் பார்த்துச் சௌக்கியப்படுத்தும் படி நான் வைத்தியர்களிடம் சொல்லிவிட்டுப் போனேன். இப்போது உடம்பு குணப்பட்டிருக்கிறதா என்று விசாரித்து விட்டுப் போகவேண்டுமென்று வந்தேன். இதோ நிற்பது பவானியம்மாள்புரம் ஜெமீந்தாருடைய குமாரர். தங்களுக்கு நேர்ந்த பொல்லாங்கைக் கேட்டு விசனப்பட்டு நேரில் வந்து பார்த்துவிட்டுப் போவதற்காக இவர்களும் என்னோடு வந்தார்கள். தாங்கள் வாயைத் திறந்து எங்களோடு பேச முடியாதென்பது தெரிகிறது. உங்களுடைய கை சரியாக இருந்தால், எழுத்து மூலமாக தாங்கள் சுருக்கமாய் எங்களுக்கு மறுமொழி சொல்லலாம். முக்கியமாக ஒரு விஷயம் உங்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பது ஒரு கருத்து. இந்த

மாளிகையில் நெருப்புப் பிடித்த காலத்தில் தாங்கள் ஏதோ ஒரு நாற்காலியில் மாட்டிக்கொண்டிருந்ததாக கோவிந்த சாமி தெரிவித்தான். அதிலிருந்து எனக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று. நெருப்பு தற்செயலாகப் பிடித்திருக்காதென்றும், யாரோ அன்னிய மனிதனே தங்களை அப்படி நாற்காலியில் மாட்டிவிட்டு நெருப்பு வைத்திருக்க வேண்டுமென்றும் ஒரு சம்சயம் என் மனசில் உதிக்கிறது. அது விஷயமாக ஏதாவது சொல்லிக் கொள்ள வேண்டுமானால், தாங்கள் அதை ஒரு கடிதத்தில் எழுதிக்கொடுங்கள். லீலாவதியம்மாள் காணப்பட வில்லை. ஆகையால், அந்த அம்மாளைப் பற்றிய விவரங் களையும் கேட்டுத் தெரிந்துகொள்ளப் பிரியப்படுகிறேன்'' என்றார்.

அவர் கூறிய சொற்களைக்கேட்ட கிழவரது முகம் ஒருவித பிரகாசமடைந்தது. இன்ஸ்பெக்டரது வருகையை எதிர்பார்த்தவர் போலவும், அவர் வந்ததனால் சந்தோஷம் அடைந்தவர் போலவும் ஜெமீந்தாரது முகத்தோற்றம் காண்பித்தது. அவர் உடனே தமது வலது கையை உயர்த்தி அருகில் நின்ற கோவிந்தசாமியை நோக்கி காகிதமும் எழுது கருவிகளும் எடுத்துவரும்படி சைகை காட்ட, அவன் உடனே அவைகளை எடுத்துவந்து, பக்கத்திலிருந்த ஒரு திண்டை அவருக்கு முன்னால் வைத்து, அதன்மேல் காகிதத்தை வைத்தான். உடனே மருங்காபுரி ஜெமீந்தார் நிரம்பவும் பாடுபட்டு தமது உடம்பைத் திருப்பி வலது கையை மெதுவாக உயர்த்தி கோவிந்தசாமி நீட்டிய இறகை வாங்கி காகிதத்தில் எழுதத் தொடங்கினார். அவரது கை நிரம்பவும் மெலிந்து பலஹீனம் அடைந்திருந்தது. ஆகையால் அது தடதட வென்று நடுங்கியது. எழுத்துக்கள் தாறுமாறாகப் போயின. ஆனாலும், அவர் விடாமுயற்சி செய்து தமது முழு வல்லமையையும் வெளியிட்டுத்தமது கையைத் திடப்படுத்திக் கொண்டு விஷயங்களை அடியில் வருமாறு சுருக்கமாக எழுதினார்:-

காசா நாட்டிலிருக்கும் கட்டாரித்தேவன் என்ற திருடனுடைய உதவியைக்கொண்டே, லீலாவதியின் புருஷன் நீலமேகம் பிள்ளையின் தகப்பனாருடைய பிரேதத்தை வெந்நீர் அண்டாவிலிருந்து எடுத்துப் புதைத்தானாம். அவன் தண்டனை அடைந்து போனபிறகு அந்தத்திருடன் லீலாவதியின் மேல் துராசை கொண்டு இந்த மாளிகைக்குள் நுழைந்து ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள ஆபரணங்களையும் நோட்டுகளையும் மூட்டை கட்டி எடுத்துக்கொண்டு லீலாவதியையும் அபகரித்துக் கொண்டு ஆட்டுமந்தைத் தெருவிலுள்ள ஒரு சந்திற்குள் கொண்டுபோய் அவ்விடத்தில் மதில்கள் உள்ள ஒரு தோட்டத்துக்கு எதிரில் இருக்கும் ஒரு பெரிய ஓட்டு வீட்டுக்குள் கொண்டுபோய் வைத்துக்கொண்டு பலாத்காரம் செய்தானாம். அவ்விடத்தில் ஒரே ஒரு கிழவி இருக்கிறாளாம். லீலாவதி மறுநாள் தான் இணங்குவதாகச் சொல்ல, அவன் அவளை அவ்விடத்திலேயே கிழவியிடம் ஒப்புவித்து திரவிய மூட்டையை எடுத்துக்கொண்டு அவனுடைய சொந்த ஊருக்குப் போய்விட்டானாம். பிறகு அவன் மறுநாள் வருவதற்குள் அவள் தந்திரம் செய்து கிழவியை வெளியில் அனுப்பிவிட்டு ஓட்டின் மேலேறி முன் பக்கத்தில் குதித்து ஓடிவந்துவிட்டாள். அப்படி வந்தவள் தான் நேராக நீலமேகம்பிள்ளையிடம் வந்து அவளது தகப்பனாரின் விஷயங்களைத் தெரிவித்தாள். மறுபடி அவள் உங்களோடு வெண்ணாற்றங்கரைக்கு வந்துவிட்டுத் திரும்பி அகாலத்தில் இந்த மாளிகைக்கு வந்தாள் போலிருக் கிறது. நான் தூங்கிக் கொண்டிருந்தேன். அந்தத் திருடன் லீலாவதி தப்பி ஓடி வந்துவிட்டதை உணர்ந்து மறுபடியும் வந்து எப்படியோ இந்த மாளிகைக்குள் நுழைந்து லீலாவதியைப் பிடித்துத் தூக்கிக்கொண்டு போக எத்தனித்தான். நான் விழித்துக்கொண்டு அவனுக்கு நல்ல வார்த்தை சொல்லிப் பார்த்தேன். அவன் கேட்காமல் முரட்டுத்தனம் செய்தான். அவனை நயவஞ்சகமாக வெல்ல வேண்டுமென்று நினைத்து அவனுடைய பிரியப்படி செய்வதாகச் சொல்லி தந்திரமாக

என் கைத்துப்பாக்கிகளை எடுத்துச் சுட எத்தனித்தேன். அவன் என்மேல் பாய்ந்து துப்பாக்கிகளைப் பிடுங்கிக் கொண்டு நான் வேடிக்கையாகத் தயாரித்து வைத்திருந்த விசை வைத்த நாற்காலியில் என்னை மாட்டிவிட்டு, லீலாவதியையும் கட்டித் தூக்கிக்கொண்டு நானிருந்த இடத்திலும் நெருப்பை வைத்துப் போய்விட்டான். கொஞ்ச நேரத்தில் நெருப்பு நான்கு பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டு என் உடம்பை எரிக்கத் தொடங்கியது. அதனால், எனக்குப் பிரக்ஞை தவறிப் போய் விட்டது. பிறகு நடந்ததென்ன என்பது எனக்குத் தெரியவில்லை. இன்றைய தினந்தான் கொஞ்சம் பிரக்ஞை வந்தது. கோவிந்தசாமி எல்லா விஷயங்களையும் சொல்லத் தெரிந்து கொண்டேன். உங்களை வரவழைக்க வேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்தேன். நல்லவேளையாக நீங்களும் வந்தீர்கள். நீலமேகம்பிள்ளைக்கும் எனக்கும் அதிகப் பழக்கம் இல்லாவிட்டாலும், அவருடைய நற்குணத்தைப் பற்றி நான் பல தடவைகளில் கேள்விப்பட்டிருக்கிறேன். லீலாவதி சம்பந்தமாக அவருடைய தகப்பனாருக்கு நேர்ந்த முடிவைப் பற்றி நான் நிரம்பவும் வருந்துகிறேன். நான் இந்த நோயிலிருந்து பிழைப்பேன் என்று நினைக்கவில்லை. என்னுடைய பிராணன் அநேகமாய்ப் போய்விட்டது. இன்னம் சில தினங்களில் நான் இறந்துபோய்விடுவேன் என்ற ஒரு நிச்சயம் என் மனசில் ஏற்பட்டுப் போய்விட்டது. திருடன் அபகரித்துக் கொண்டு போன திரவியத்தைத் தவிர பூஸ்திதியாகவும், மாளிகை யாகவும், சாமான்களாகவும், தானியமாகவும் எனக்கு இன்னம் ஐந்துகோடி ரூபாய் பெறுமான சொத்துகள் இருக்கின்றன. என்னிடமிருக்கும் ஐவேஜியத்தனை இந்த ஊர் மகாராஜா விடம் கூட இராதென்றே நினைக்கிறேன். அப்படியிருந்தும் எனக்குச் சொந்தக் குழந்தைகள் இல்லை. என் தம்பியின் மகளான லீலாவதியும் இன்னொரு பையனுமே எனக்கு நெருங்கிய பந்துக்கள், அந்தப் பையனுடைய பெயர் **கலியாணராமன்**. அவனுக்கும் எனக்கும் ஒத்துக்கொள்ளவில்லை. ஆகையால்,

அவன் என்னைவிட்டுப் பிரிந்து போய் எவ்விடத்திலோ இருந்து வருகிறான். என்னுடைய சலகமான சொத்துகளும் அவனையே சேர வேண்டும். அவன் தன்னுடைய தங்கையான லீலாவதியை வைத்து சவரக்ஷிக்க வேண்டும். நான் இனி எழுந்து நடமாட இயலாத செயலற்ற நிலைமையில் இருக்கிறேன் ஆகையால், நீங்கள் இருவரும் தயைசெய்து லீலாவதியையும் திருடன் கொண்டு போன பொருளையும் எப்படியாவது மீட்டுக் கொணர்ந்து இவ்விடம் சேர்க்க வேண்டும். அந்தக் கலியாண ராமன் எங்கேயிருக்கிறான் என்பதை விசாரித்து அவனுக்குச் செய்தி சொல்லி அனுப்பி, அவனை உடனே வரவழைத்து, என்னையும் என்னுடைய சகலமான ஐசுவரியங்களையும் அவனிடம் ஒப்புவித்து விடவேண்டும். இதுதான் உங்களிடம் செய்துகொள்ளும் வேண்டுகோள். அதுவரையில் என் சொத்துக்களை நீங்களும் பார்த்துக்கொள்ள வேண்டும். என் உயிர் போகுமுன் லீலாவதியையும், கலியாண ராமனையும் நான் ஒருதரம் பார்த்துவிட வேண்டும். அப்போதுதான் என் ஜீவன் சாந்தமடையும். என் கை நடுங்குகிறது. மயக்கம் வருகிறது. மேலே எழுத முடியவில்லை. இவ்வளவே சங்கதி- என்று கிழவர் எழுதி முடித்தார். உடனே அவருக்கு மயக்கம் உண்டாகி விட்டது. அவர் தமது கண்களை மூடி அப்படியே சாய்ந்து விட்டார். அவரால் எழுதப்பட்ட காகிதத்தை இன்ஸ்பெக்டர் எடுத்துப் படித்துவிட்டு அதை நீலமேகம் பிள்ளையிடம் கொடுக்க, அவரும் அதைப் படித்துப் பார்த்தார். கட்டாரித்தேவன் லீலாவதியைத் தூக்கிப் போயிருக்கிறான் என்பதை உணர அவர்களது தேகம் பதறியது. மனம் கொதித்தது. நீலமேகம்பிள்ளை இன்ஸ்பெக்டரை நோக்கி, ''இது கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையாக இருக்கிறதே. என்ன கஷ்டம் இது? மகா முரட்டுத் திருடனான கட்டாரித்தேவன் இடத்திலா லீலாவதி போய் அகப்பட்டுக் கொண்டாள். என்ன அவளுடைய பொல்லாத வேளை பார்த்தீர்களா?'' என்றார்.

இன்ஸ்பெக்டர், ''இந்தக் காகிதத்தைப் பார்த்து நீங்கள் விசனப்படுகிறீர்கள். நான் சந்தோஷமடைகிறேன். அந்தப் பெண் நெருப்பில் அகப்பட்டு இறந்துபோயிருப்பாள் என்று நினைத்ததற்கு, அவள் உயிரோடிருக்கிறாள் என்பது எப்பேர்ப் பட்ட சந்தோஷ சங்கதி. இனி அவளை நாம் மீட்பது கடினமல்ல. இவர் கொடுத்திருக்கும் இட விவரங்களைக் கொண்டு நான் ஒரு நொடியில் அந்தத் திருடனைப் பிடித்துச் சொத்தையும், லீலாவதியையும் மீட்டுக்கொண்டு வருகிறேன். இனி காரியம் சுலபந்தான்'' என்றார்.

நீலமேகம்பிள்ளை, ''அந்தத் திருடன் லீலாவதியைத் தூக்கிக் கொண்டுபோய் சுமார் இருபத்தைந்து தினங்கள் கழிந்து விட்டனவே. இதற்குள் அங்கே என்ன நடந்திருக்குமோ? அந்த முரட்டுத் திருடன் அவளை எப்படிப்பட்ட துன்பத்திற்கு ஆளாக்கி இருப்பானோ தெரியவில்லையே. அதுதான் எனக்கு நிரம்பவும் கவலையாக இருக்கிறது. நான்கு பக்கங்களிலும் நமக்கு இக்கட்டாக இருக்கிறதே. இங்கே நாம் ஷண்முக வடிவைத் தேடுகிறதா? கமலத்தைத் தேடுகிறதா? அல்லது இவருடைய தம்பி மகளைத் தேடுகிறதா? எல்லாம் அவசரம். எதை நாம் முதலில் கவனிக்கிறது என்பதுதான் தெரியவில்லை'' என்றார்.

இன்ஸ்பெக்டர் சிறிதுநேரம் யோசனை செய்து, ''நீங்கள் எதற்கும் கவலைப்படவேண்டாம். எல்லாவற்றையும் நாம் கவனிக்கத்தான் வேண்டும். என்னிடம் ஏராளமான ஜெவான்களும், தலைமை ஜெவான்களும் இருக்கிறார்கள். அவர்களையும் உபயோகப்படுத்தி நான் முயற்சி செய்கிறேன். நீங்கள் ஜாகைக்குப் போய்க் கவலைப்படாமல் இருங்கள். அடிக்கடி கிடைக்கும் தகவலை நான் உங்களுக்குத் தெரிவிக்கிறேன். அந்த வேலைக்காரியை ஊருக்கு அனுப்ப வேண்டாம். திருவாரூரில் இருப்போரையும் இந்த ஊருக்கு வரவழைத்து விடுங்கள். அந்தப் பங்களாவையும் வேறே

யாருக்காவது கொடுத்து விடுங்கள். பெண்பிள்ளைகள் மாத்திரம் தனியாக அங்கேயிருப்பது பிசகு'' என்றார்.

நீலமேகம்பிள்ளை அப்படியே செய்வதாக ஒப்புக் கொண்டார். உடனே இன்ஸ்பெக்டர் கோவிந்தசாமியைப் பார்த்துக் கிழவரையும் சொத்துக்களையும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளும்படி சொல்லிய பின் நீலமேகம்பிள்ளையை அழைத்துக்கொண்டு வெளியில் சென்றார்.

## 45- வது அதிகாரம்

## கலக்கத்தின் மேல் கலக்கம்

கோலாப்பூரிலிருந்து பலவந்தமாகத் தஞ்சைக்குக் கொணர்ந்து சேர்க்கப்பட்ட கலியாணசுந்தரம் பஞ்சண்ணா ராவால் போடப்பட்ட கடிதத்தைப் பிரித்துப் படித்தான். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:-

நான் தஞ்சையில் இருப்பவன்; உம்முடைய வரலாறுகளும் குண விசேஷங்களும் எனக்கு நன்றாகத் தெரியும். உம்மிடம் நான் நிரம்பவும் அன்பு வைத்தவன். உமது க்ஷேமத்தில் நான் எப்போதும் கண்ணும் கருத்துமாயிருப்பவன்.

நீர் கோலாப்பூரில் சிறைப்பட்டிருக்கும் செய்தி எனக்கு எட்டியது. அதன்காரணம் இன்னதென்பதையும் நான் தெரிந்து கொண்டேன். நீர் சிறைச்சாலையில் இருக்கையில் அவ்விடத்தில் நடந்த விஷயங்களையும் நான் அறிந்து கொண்டேன். நீர் மகா பரிசுத்தமான நடத்தையும் மேன்மையான குணமும் வாய்ந்தவர் என்பதும் எனக்குத் தெரியும். நீர் சுயநலமெண்ணாத ஜீவகாருண்யத்தைக் கருதி பூனாவிற்குப் போய் அவ்விடத்திலுள்ள பட்டமகிஷிக்கு நேரப் போகிற

பெரீல்லாங்கை விலக்க முயல்வதைப் பற்றி நான் உம்மை நிரம்பவும் மெச்சுகிறேன். ஆனாலும், நீர் எடுத்துக்கொண்டிருக்கும் வேலை நிரம்பவும் அபாயகரமானது. ஆகையால், நீர் அந்த விஷயத்தில் தலையிட்டு அநாவசியமான துன்பங்களுக்கு ஆளாவது என் மனதிற்குப் பிடிக்கவில்லை. நீர் கோலாப்பூர் போவதற்குள்ளாகவே உமக்கு எத்தனையோ இடர்கள் நேர்ந்துவிட்டன. இன்னமும் நீர் பூனாதேசம் போய் பட்டமகிஷியைக் காணுவதற்குள் இன்னமும் பெருத்த மகா பயங்கரமான துன்பங்களும் அபாயங்களும் உமக்கு நேரும். ஆகையால் நீர் அந்த விஷயத்தில் தலையிட வேண்டாம். இப்படி நான் சொல்வதிலிருந்து, நான் உமது எதிரிகளின் கட்சியைச் சேர்ந்தவனோ என்ற சந்தேகம் உமக்கு உண்டாகலாம். அவ்வாறு நீர் சந்தேப்படுவது சரியல்ல. கோலாப்பூர் சிறைச்சாலையில் உம்மை எவ்வளவு நீண்ட காலத்திற்கு வேண்டுமானாலும், அந்தப் போலீஸ் கமிஷனர் அடைத்து வைத்திருப்பார். அவ்விடத்திலிருந்து நான் உம்மை விடுவித்து இங்கே அழைத்து வந்ததிலிருந்து நான் எதிரிகளைச் சேர்ந்தவன் அல்லவென்பதும் உமது நன்மையைக் கருதியே இப்படிச் செய்தேன் என்பதும் சந்தேகமற விளங்கும். உம்மை நான் கட்டாயப்படுத்தி இங்கே அழைத்து வந்ததற்கு இன்னொரு முக்கியமான காரணம் இருக்கிறது. நீர் செய்ய எத்தனிக்கும் பரோபகாரச் செய்கையைத் தடுப்பதற்காக எதிர்கட்சிக்காரர் உமக்குப் பல வகையான தீங்குகள் இயற்றி உம்மைச் சிறைப்படுத்தியதோடு நிற்காமல், உம்மை மணக்கப் போகிறவளும், மகா நற்குணவதியுமான ஷண்முகவடிவென்னும் பெண்ணை வஞ்சித்து அவள் கோலாப்பூருக்கு வந்தலைந்து பலவகைப்பட்ட துன்பங்களை அனுபவிக்கச் செய்து, அவள் உம்மைப் பற்றி சந்தேகம் கொள்ளும்படியான சந்தர்ப்பத்தை உண்டாக்கியதோடு நிற்காமல், அவளைத் தஞ்சையிலிருக்கும் அவளுடைய அக்காளிடம் அழைத்துக்கொண்டு வருவதாகச் சொல்லி ரகசியமாக இந்த ஊர் வடக்கு இராஜவீதியிலுள்ள மருங்காபுரி

ஜெமீந்தாருடைய மாளிகையில் கொண்டுபோய் விட்டு விட்டார்கள். அவர் வயதில் கிழவராக இருந்தாலும் துன்மார்க்கத்தில் பாலியப்பருவத்தினரை விட ஆயிர மடங்கு அதிக மூர்க்கமுடையவராக இருக்கிறார்! இதுவரையில் அவர் அழித்த குலஸ்திரீகள் கணக்கில் அடங்கார். இன்னமும் அவர் அதே குணமுடையவராக இருக்கிறார். அவருடைய துர் எண்ணம் நிறைவேறுவதற்கு அவர் எவ்வளவு பெருத்த திரவியம் விரயமாவதையும் மதிப்பதில்லை. எப்படிப்பட்ட குரூரச் செய்கைகளையும் நடத்தப் பின்வாங்குகிறதில்லை. அவருடைய மாளிகையில் வெல்வெட்டு மாடமென்று ஓர் இடமிருக்கிறது. அதன் பின்பக்கத்தில் அவருடைய ரதிகேளி விலாசமிருக்கிறது. அவ்விடத்தில் விகாரமான பொருட்களே நிறைந்திருக்கின்றன. அங்கே விசைவைத்த நாற்காலிகள் நாலைந்து இருக்கின்றன. தமது இச்சைக்கு இணங்கிவராத ஸ்திரீகளைஅவர் மேற்படி நாற்காலியொன்றில் மாட்டிவைத்து அவர்களை வற்புறுத்துவதை வழக்கமாக வைத்துக் கொண்டிருக்கிறார். அத்தகைய கொடிய காமாந்தகார மனிதனிடத்தில் உமது பகைவர்கள் ஷண்முகவடிவைக் கொண்டுபோய் விட்டுவிட்டதாகத் தெரிகிறது. அருந்ததி என்றாலும், அந்தப் பெண்ணுக்கே தகும். அவள் உலகத்தின் சூதையே அறியாத நிஷ்களங்கமான மனதை உடையவள். அவளை அந்தக் காமாதுரன் என்னவிதமான கெடுதலுக்கு ஆளாக்கினான் என்பதை அறிந்து கொள்ள இயலாமலிருக்கிறது. நீர் பரோபகாரம் செய்யப் போனதன் பலன் உமக்கே கைமேல் பலித்துவிட்டது. நீர் செய்த காரியத்தில் உமக்கும் பலவிதமான தீங்குகளை வருவித்துக்கொண்டதோடு, ஒரு பாவத்தையும் அறியாத பரமார்த்தியான ஷண்முகவடிவுக்கும் அழிவைத் தேடி வைத்துவிட்டீர். இனியும் நீர் பிடிவாதமாக அந்தக் காரியத்தில் பிரவேசித்தால் இப்போது நேர்ந்ததைவிட நூறுமடங்கு கொடிய பங்கரமானதுன்பங்கள் உமக்கும் உம்மைச் சேர்ந்தவர்களுக்கும் நேருவது முக்காலும் திண்ணம். ஆகையால், நீர் அந்தப்

பரோபகாரச் சிந்தையை இவ்வளவோடு அடக்கிக்கொண்டு உமது சொந்தக் காரியத்தை கவனிப்பீரென்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. நீர் வேறே எந்த விஷயத்திலும் உமது கவனத்தைச் செலுத்தாமல், இந்தக் கடிதம் கிடைத்த க்ஷணம் முதலில் பிரயாசைப்பட்டு ஷண்முகவடிவைத் தேடிப்பிடித்து அவளை அழைத்துக் கொண்டு திருவாரூர் போய்ச் சேர்ந்து அவளை மணந்து சுகமாகக் காலங்கழித்திரும். அப்படி செய்வது தான் நீர் புத்திசாலி என்பதை நிரூபிக்கும்.

இன்னொரு விஷயம்; உமது பகைவர்கள் ஷண்முகவடிவை மருங்காபுரி ஜெமீந்தாருடைய மாளிகையில் கொண்டுபோய் விட்டபிறகு அந்த ஜெமீந்தாருடைய மாளிகையில் நெருப்புப் பிடித்துக்கொண்டு ரதிகேளி விலாசமென்ற அவருடைய அக்கிரம ஸ்தானத்தை அழித்துவிட்டதாகவும், ஜெமீந்தார் நெருப்பில் எரிந்து போகும் தருணத்தில் வேலைக்காரனால் மீட்கப்பட்டு நோயாகப் படுத்திருப்பதாகவும் தெரிகிறது. உத்தமியான ஷண்முகவடிவின் வயிற்றெரிச்சலே அவ்வாறு பெரு நெருப்பாக மூண்டு அந்த அசங்கியமான இடத்தையும் அந்தத் துன்மார்க்கங்களையும் சுட்டெரித்துவிட்டது என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆனால், ஷண்முகவடிவு அவ்விடத்திலிருந்து தப்பிப் போனாளோ, அல்லது நெருப்பில் எரிந்துபோய் விட்டாளோ என்பதுதான் சந்தேகமாக இருக்கிறது. அந்த விஷயத்தை நீர் அவசரமாகக் கவனித்து, அவள் உயிரோடு இருக்கிறாளா அல்லது இறந்து போனாளா என்பதை முதலில் அறிந்துகொண்டு உயிரோடிருந்தால், எங்கே இருக்கிறாள் என்பதையும் கண்டுபிடிக்க வேண்டியது. இந்த விஷயமே உமக்கு மிதமிஞ்சிய பிரயாசையைத் தரும். ஆதலால், நீர் உம்முடைய முழுக்கவனத்தையும் காலத்தையும் இதிலேயே செலவழிக்க வேண்டியது. இதைவிட்டு நீர் இனி பூனாவிலிருப்போர் விஷயத்தில் உம்முடைய கவனத்தைச் செலுத்தினால், இரண்டு காரியங்களில் எதையும் நீர் சாதிக்க

முடியாமல் போகும். பதிவிரதா சிரோன்மணியான ஷண்முக வடிவின் வதைக்கு நீரே உத்தரவாதி ஆவீரென்பதைப் பற்றி கொஞ்சமும் ஐயமில்லை. ஷண்முகவடிவின் விஷயம் நிரம்பவும் அவசரமானது. தலைபோகக் கூடியது. ஆகையால், அது விஷயத்தில் நீர் கொஞ்சமும் அசட்டையாக இருந்தால், இனி நீர் அவளைக் காண்பது அரிது. அவள் உமது விஷயத்தில் கொண்டிருக்கும் சந்தேகத்தை எப்படி நீக்குகிறதென்று கவலை உமக்கிருக்கலாம். கோலாப்பூரிலிருந்து ஷண்முகவடிவை அழைத்துவந்து ஸ்திரீ யோக்கியமானவளென்று அவள் கடைசி வரையில் நம்பி இருந்திருக்கலாம். ஆனால், மருங்காபுரி ஜெமீந்தாரிடம் அவள் கொண்டுபோய் விடப்பட்டபிறகு, அவர் தமது துராக்கிருதத்தை நடத்த முயன்று இருப்பார். ஆதலால், அப்போது அவளுக்கு உண்மை விளங்கிப் போயிருக்கும். தன்னை கோலாப்பூரிலிருந்து அழைத்து வந்தவள் நிரம்பவும் மோசக்காரி என்பதையும் ஷண்முகவடிவு உணர்ந்து கொண்டிருப்பாள். அவள் சம்பந்தப்பட்டிருந்த வரையில் கோலாப்பூரில் நடந்த விஷயங்களும் பொய்யாகத் தான் இருக்க வேண்டும் என்று அவள் சந்தேகப்பட்டுக் கொண்டுதான் இருப்பாள். ஆகையால், நீர் அவளைக் கண்டுபிடித்து உண்மையில் நடந்த விருத்தாந்தங்களை எல்லாம் தெரிவித்தால், அவள் அதை அவசியம் நம்புவாள் என்றே நினைக்கிறேன். ஆகையால், அது விஷயத்தில் உமக்கு யாதொரு யோசனையும் வேண்டியதில்லை. நீர் தனம், அம்மாளு முதலியவர்களோடு பிரயாணம் செய்தகாலத்தில் பெட்டி வண்டிக்குள் ரகசியமாக நடந்த காரியங்களெல்லாம் எனக்குத் தெரியும்.அதன்பிறகு அந்தப்பெண்கள் மூவரும் தனித்தனியே வந்து உம்மிடம் செய்த ஸாகசங்களெல்லாம் எனக்குத் தெரியும். இவைகளை எல்லாம் நான் தெரிந்துகொண்டு எழுதுவதிலிருந்து நான் எதிரிகளின் கட்சியைச் சேர்ந்தவனென்று நீர் நினைத்துவிடக் கூடாது. எதிர் கட்சிக்காரர்களைச் சேர்ந்த முக்கியமான இருவர் ரகசியமாக இந்த விஷயங்களைப் பேசிக்

கொண்டிருந்த காலத்தில் அவர்களுக்குத் தெரியாமல் நான் பக்கத்து அறையில் இருந்தேன். ஆகையால், இந்த விஷயங்களெல்லாம் என் காதில் பட்டன. கோலாப்பூரில் மூத்தவள் உம்மிடம் வாய்தா கேட்டு அதற்கு நீர் இணங்கியிருந்த காலத்தில், அவர்கள் அஞ்சல் மூலமாக ஓர் ஆளைத் தஞ்சைக்கு அனுப்பி அதுவரையில் நடந்த விஷயங்களைத் தெரிவித்தார்கள். ஷண்முகவடிவை ஏமாற்றி அழைத்து வந்த ஸ்திரீ இந்த ஊர் அரண்மனையில் நிரம்பவும் செல்வாக்கு வாய்ந்தவள். ஆகையால், அந்த ஸ்திரீ எப்படியோ தந்திரம் செய்து இந்த ஊர்ப் பெரிய ராணியிடத்திலிருந்து கோலாப்பூர் போலீஸ் கமிஷனருக்கு ஒரு கடிதம் வாங்கிக்கொண்டு உடனே புறப்பட்டு அங்கே வந்தாள். அதன் பிறகுதான் நீர் சிறைப்படுத்தப்பட்டீர். ஷண்முகவடிவும் மோசடியாக அவ்விடத்துக்கு வரவழைக்கப் பட்டாள். சிறைச் சாலையில் நடந்த காரியங்களெல்லாம் எதிரிகளின் தூண்டுதலின் மேலேயே நடத்தப்பட்டன. இரண்டு முக்கியமான கருத்தோடு அவள் சிறைச்சாலையில் அந்த நாடகத்தை நடத்தி வைத்தாள். அபிராமியிடம் உம்மை வலுக்கட்டாயமாகச் சேர்த்து வைத்துவிட்டால் அவள் எப்போதும் உம்மோடு கூடவே இருந்து உம்முடைய புத்தியை மயக்கி, நீர் பூனாவுக்குப் போகாமல் செய்யவேண்டுமென்பது அவர்களது முக்கியமான எண்ணம். இன்னொன்று ஷண்முக வடிவு ராஜஸ்திரீ போல இருக்கிறாள் என்பது அவளுக்குத் தெரியுமாதலால், உமது விஷயத்தில் அவளுடைய மனம் முறிந்து மாறிப்போகும்படி செய்து அவளை வஞ்சித்துக் கொணர்ந்து, அவள் மூலமாக பெருத்த ஐசுவரியத்தைத் தான் சம்பாதித்துக் கொள்ளலாம் என்பது. அந்த எண்ணத்துடனேயே அவள் ஷண்முக வடிவை அழைத்து வந்து மருங்காபுரி ஜெமீந்தாருடைய மாளிகையில் கொண்டுபோய் விட்டு விட்டாள். இந்த விஷயங்களை எல்லாம் அவள் தனது மகனிடம் ரகசியமாகச் சொல்லிக் கொண்டிருந்த காலத்தில், நான் பக்கத்து

அறையில் இருந்தேன். ஆகையால், எல்லா விவரமும் என் காதில் பட்டது. ஆகையால், உமது விஷயத்திலும் ஷண்முகவடிவின் விஷயத்திலும் இரக்கங் கொண்டு நான் ஆட்கள் மூலமாய் உம்மை விடுவித்துவர ஏற்பாடு செய்தேன். இனி ஷண்முகவடிவைத் தேடிப்பிடிக்க வேண்டியது உம்மைச் சேர்ந்த பொறுப்பு. அசட்டை வேண்டாம்.

நான் கடவுளைப் போல சர்வ வல்லமையும், சர்வக்ஞமும் வாய்ந்தவன். நீர் மறுபடி பூனாவுக்குப் போகவோ, அல்லது அவ்விடத்திற்கு ஆள் மூலமாகவாவது தபால் மூலமாகவாவது செய்தி அனுப்பிப் பட்டமகிஷியை எச்சரிக்கவோ முயன்றால், அது எப்படியும் எனக்கு உடனே தெரிந்துபோகும். நீர் செய்யும் முயற்சி எதுவும் பலிக்காமல் செய்துவிடக் கூடிய சக்தி எனக்கு உண்டு என்பதை நீர் நிச்சயமாக நம்பலாம். நீர் திரும்பி இனி பூனாவுக்குப் போகமுடியாமல் தடுக்கவும் எனக்கு வல்லமை யுண்டு. ஆகையால், நீர் அந்த விஷயத்தை அடியோடு விடுத்து, ஷண்முகவடிவைத் தேடுவதிலேயே உமது முழுக் கவனத்தை யும் செலுத்த வேண்டும்.

இவ்வளவுதூரம் நான் எழுதியிருப்பதிலிருந்து, நான் உம்முடைய விஷயத்தில் உண்மையான அபிமானம் உள்ளவன் என்பதையும், ஆனால், நான் இன்னான் என்பது வெளியாகாத படி மறைவிலிருந்து உமக்கு உதவி செய்ய விரும்பு கிறேன் என்பதையும் நீர் எளிதில் யூகித்துக்கொள்ளலாம்; ஆகையால், கோலாப்பூர் சிறைச்சாலையிலிருந்து உம்மை விடுவித்துக் கொண்டுவரும் மனிதருடைய பெயர் அடையாளம் முதலியவை உமக்கு ஏற்கெனவே தெரிந்திருந்தாலும், அவர்களை வற்புறுத்தி அவர்களிடத்திலிருந்து என்னைப் பற்றிய விவரம் எதையும் தெரிந்துகொள்ள நீர் விரும்பக் கூடாது. நீர் நாணயமும் யோக்கியதா பக்ஷமும் பரிபூர்ணமாக நிறைந்த சுத்தமான மனிதர். ஆகையால், நீர் இந்த நிர்ணயத்தை மீறி நடக்க மாட்டீரென்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இங்ஙனம்,

உம்மிடம் சமர்த்தியான பட்சமுள்ள

**ஓர் ஆப்தன்.**

என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படித்த கலியாண சுந்தரம் அப்படியே திடுக்கிட்டு ஸ்தம்பித்து என்ன செய்வ தென்பதை அறியாமல் குழம்பி நின்றுவிட்டான். கடிதத்தில் எழுதப்பட்டுள்ள விஷயங்களெல்லாம் உண்மையானவை என்ற எண்ணம் தானாகவே அவனது மனதில் உண்டாகிவிட்டது. ஷண்முகவடிவு மருங்காபுரி ஜெமீந்தாரது மாளிகையில் கொண்டுபோய் விடப்பட்டாள் என்ற விஷயமும், அதில் ஒரு பாகம் தீக்கிரையாயிற்று என்பதும், ஷண்முகவடிவு அதனால் இறந்து போயிருப்பாளோ என்ற சந்தேகமும் பேரிடிகள் திடீரென்று வீழ்வதுபோல அவனது மனதில் போய்த்தாக்கின. ஆதலால், அவனது உயிர் போவது போன்ற மகா விபரீதமான உணர்ச்சியை அவன் அடைந்து நெருப்புத் தணல்களுக்குள் புதைக்கப்பட்டவன் போலத் துடி துடிக்கலானான். அவனது அங்கமெல்லாம் கட்டுக்கடங்காமல் பதறித் தவித்தது. மனம் வேதனை என்ற பெருத்த கொடிய கூர்மையான நேரடி ரம்பங்களால் அறுபட்டு நரகபாதை யுற்றது. ஷண்முகவடிவு உயிரோடு இருக்கிறாளோ, தீக்கிரையாய் விட்டாளோ, அல்லது ஜெமீந்தாருடைய மாளிகையில் விசை வைத்த நாற்காலியில் அகப்பட்டுக்கொண்டு பலாத்காரமாகக் கற்பழிக்கப்பட்டிருப்பாளோ என்ற எண்ணங்களே முக்கியமாக எழுந்து, அவனது இரத்தம் கொதித்துக் கொந்தளித்துப் பொங்கும் படி செய்தன. தாம் அவளை எவ்விடத்தில் போய்த் தேடுவது என்ற கேள்வியே முக்கியமாக எழுந்து துரிதப் படுத்தியது. ஆகையால் தான் பூனாவுக்குப் போக வேண்டு மென்ற நினைவாவது, பட்டமகிஷிக்கு அந்தச் சதியாலோசனையைத் தெரிவித்து அவளை எச்சரிக்க வேண்டுமென்ற எண்ணமாவது உண்டாகவே

இல்லை. தான் உடனே மருங்காபுரி ஜெமீந்தாருடைய மாளிகைக்குப் போய் அதற்குள் ஷண்முகவடிவு எங்கேயாவது சிறை வைக்கப்பட்டு வேலைக்காரரால் காவல் காக்கப்பட்டிருக்கிறாளா என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. ஆனால், ஜெமீந்தார் நோயாகக் கிடக்கும் நிலைமையில் வேலைக்காரர்கள் அவளை மாளிகைக்குள் வைத்திருக்க மாட்டார்களென்ற நினைவு உண்டானதோடு, அவள் எவ்விடத்திலும் காணப்படவில்லை என்று கடிதத்தில் எழுதப்பட்டிருப்பதிலிருந்து, அந்தக் கடிதத்தை எழுதியவர் அவள் மருங்காபுரி ஜெமீந்தாருடைய மாளிகையில் இல்லையென்பதை நிச்சயித்துக் கொண்டே தன்னை வரவழைத்து இருக்கிறார். ஆதலால், தான் அவ்விடத்தில் போய்ப் பார்ப்பது பலன் தராதென்றும், தான் நேரில் அந்த மாளிகைக்குப் போனால் ஜெமீந்தாரைக் காணும்போது தனக்குத் தன்னை மீறி ஆத்திரம் உண்டாகும் என்றும், ஜெமீந்தார் நோயாகப் படுத்திருக்கையில், தான் அவரிடம் பகைமை பாராட்டுவதைக் கண்டு மற்றவர் சந்தேகம் கொள்வரென்றும் நினைத்த கலியாணசுந்தரம் பரமசங்கடமான அந்த நிலைமையில் தான் என்ன செய்வதென்பதைப் பற்றிக் கால்நாழிகை சாவகாசம் வரையில் ஆழ்ந்த சிந்தனை செய்தான்; அப்போதும் அவனது குழப்பமும் சந்தேகமும் மாறாமலேயே இருந்தன. ஒருகால் ஷண்முகவடிவு மருங்காபுரி ஜெமீந்தாருடைய மாளிகையிலிருந்து தப்பித்து, திருவாரூருக்குப் போயிருப்பாளோ என்ற சந்தேகம் உண்டாயிற்று. ஆகையால், தான் உடனே அந்த ஊரைவிட்டுப் புறப்பட்டுத் திருவாரூருக்குப் போய் அவ்விடத்தில் அவள் இல்லையா என்பதையும் அவ்விடத்திலுள்ளோர் சொல்லக்கூடிய விஷயங்களையும் தெரிந்துகொண்டு உடனே திரும்பி வந்து தேவையானால் அதற்குமேல் தான் அந்த மாளிகைக்குள் புகுந்து எல்லா இடங்களையும் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று தீர்மானம் செய்து கொண்டவனாய்க் கலியாணசுந்தரம் அவ்விடத்தை

விட்டு அந்த ஊர்த் தெற்கு ராஜவீதியிலிருந்த தனது ஆப்த நண்பனொருவனைக் கண்டு தனது வழிச் செலவுக்குத் தேவையான பணம் சிறிதளவு பெற்றுக்கொண்டு வண்டிப் பேட்டையை அடைந்து, திருவாரூருக்குப் பிரத்தியேகமான ஒரு குதிரை வண்டி அமர்த்திக்கொண்டு அதில் உட்கார்ந்து உடனே பிரயாணம் புறப்பட்டான். வண்டியை விரைவாக ஓட்டும்படி அவன் அடிக்கடி வண்டிக்காரனைத் தூண்டியபடி பதறிய தேகமும், கலங்கிய மனதுமாய் வண்டியில் உட்கார்ந்திருந்தான். அவன் வேறு எந்த விஷயத்திலும் தனது கவனத்தையாவது பார்வையையாவது செலுத்தாமல் சித்தப் பிரமை கொண்டவன் போலக் காணப்பட்டான். ஷண்முகவடிவு இறந்து போயிருப்பாளோ என்ற ஏக்கமே ஆறாத்துயரமாகப் பெருகி அவனது உயிரைக் குடித்துக் கொண்டிருந்தது. தான் அவளை மறுபடியும் உயிரோடும் கற்போடும் காணக் கிடைக்குமோ என்ற நினைவே ஓயாமல் எப்போதும் அவனது மனதில் எழுந்து சகிக்க இயலாதபடி வதைத்துப் புண்படுத்திக் கொண்டிருந்தது. மிருதுத்தன்மையும், கலியாண குணங்களும் நிறைந்த நிஷ்கபடியான ஷண்முகவடிவினிடம் கிழஜெமீந்தார் துர்மோகம் கொண்டதனால் சகிக்கக்கூடாத பிரமாதமான ஆத்திரத்தை உண்டாக்கியது. அந்த உத்தமியின் விஷயத்தில் தீங்கு நினைத்ததற்கு உடனே தண்டனை கிடைத்ததுபோல, அவர் நெருப்பினால் தகிக்கப்பட்டு நோயாகக் கிடக்கிறார் என்ற செய்தி அவர் மீது அவன் கொண்ட கடுங்கோபத்தை ஒருவாறு தணித்தது. ஆனாலும், அவரது விஷயத்தில் அவன் கொண்ட அருவருப்பும், சீற்றமும் அளவிட இயலாதபடி பெருகிக் கொண்டிருந்தன. அத்தகைய கொடிய துன்மார்க்கரது முகத்தில் தான் விழிப்பதே பாவமென்ற ஓர் எண்ணம் அவனது மனதில் உதித்தது. அது நிற்க. தனது விஷயத்தில் அவ்வளவு தூரம் அக்கறை பாராட்டித் தன்னைச் சிறைச்சாலையிலிருந்து தப்ப வைத்துக் கொணர்ந்து எதிரிகளின் ரகசியங்களையும் ஷண்முக வடிவின் விஷயங்களையும் தனக்குக் கடிதத்தின் மூலமாக

எழுதித் தெரிவித்துள்ள மனிதர் யாராக இருக்கலாம் என்று அவன் ஒரு நொடிக்கு ஆயிரம் முறை சிந்தித்துப் பார்த்தான். அது அவனால் சிறிதும் யூகித்தறிய இயலாத பரம ரகசியமாகத் தோன்றியது. அவ்வாறு அவன் பலவிதத்தில் அல்லலுற்றுக் கலவரமடைந்த நிலைமையில் திருவாரூர் போய்ச் சேர்ந்தான்.

சேர்ந்தவன் நேராக ஷண்முகவடிவு முதலியோரிருந்த பங்களாவிற்குச் சென்றான். அந்தப் பங்களா நெருங்க நெருங்க தனது ஆருயிர்க் காதலியைக் காணவேண்டுமென்ற ஆவலினாலும், அவள் அவ்விடத்திலிருந்தால், தன்னிடம் பேசுவாளோ மாட்டாளோ என்ற கவலையினாலும் தன்மீது அவள் கொண்டுள்ள சம்சயத்தைத் தான் எவ்வாறு நிவர்த்திக்கிறது என்ற மலைப்பினாலும் அவனது மனம் பெரும்புயலில் கொந்தளித்துத் தத்தளிக்கும் கடல்போல அல்லோல கல்லோலப் படத் தொடங்கியது. அத்தகைய பரமவேதனையான நிலைமையில் அவன் அந்தப் பங்களாவின் வாசலை அடைந்தான். ஆனால், அவ்விடத்தில் அவனது ஏமாற்றமும் ஏக்கமும் அதிகரித்தனவே அன்றிக் குறையவில்லை. அந்தப் பங்களாவின் வெளிக்கதவு பூட்டப்பட்டிருந்ததைக் காண, அவனது மனம் இன்னதென்று விவரிக்க இயலாத பெருத்த வேதனை அடைந்து தவிக்கத் தொடங்கியது. ஒருகால் ஷண்முகவடிவு தஞ்சையிலிருந்து வந்திராவிட்டாலும், அந்தப் பங்களாவில் பக்ஷவாத நோய் கொண்டு படுத்திருந்த நீலலோசனி அம்மாள், வேலைக்காரி முதலியோர் எங்கே போயிருப்பார்கள் என்ற யோசனையும் திகைப்பும் திகிலும் தோன்றி சகிக்கவொண்ணாதபடி வருத்த ஆரம்பித்தன. முக்கியமாக ஒரே ஒரு எண்ணமே உறுதியாகத் தோன்றியது. தன்னைச் சிறைச்சாலையிலிருந்து விடுவித்துத் தஞ்சைக்கு வரவழைத்துக் கடிதத்தின் மூலமாக எல்லா விஷயங்களையும் தெரிவித்த அந்த மனிதரே பங்களாவில் இருந்தோருக்கும் கடிதம் எழுதி, ஷண்முகவடிவுக்கு நேர்ந்த விபத்தைத்

தெரிவித்ததன்மேல், சிவபாக்கியமும் வேலைக் காரியும் அவளைத் தேடுவதற்காகப் புறப்பட்டுத் தஞ்சைக்குப் போயிருப்பார்களோ என்ற யோசனையே ஊர்ஜிதமாகப் பட்டது. அவ்வாறு அவர்கள் போகும்போது, கிழவியைத் தனிமையில் விட்டுப்போக மாட்டாமல் அவளையும் கூடவே வண்டியில் வைத்துக் கொண்டுபோய், தஞ்சையில் எவ்விடத்தி லாவது ஜாகை ஏற்பாடு செய்து அவ்விடத்தில் நோயாளியை இருக்கச் செய்து அவர்கள் வெளியில்போய், ஷண்முகவடிவைத் தேடுவார்களோ என்ற யோசனை தோன்றியது. ஆனால், அந்த விஷயமே நிச்சயமான தென்ற உணர்ச்சி ஏற்படவில்லை. ஆகையால், தான் அந்தப் பங்களாவின் அண்டையில் ஏதாவது வீடுகள் இருக்கின்றனவா என்று பார்த்து, அங்கிருப்போரிடம் விசாரித்துப் பார்க்க வேண்டுமென்ற ஒரு யோசனை தோன்றியது. ஆகவே, அவன் அவ்விடத்தை விட்டு அந்தப் பங்களாவின் சுற்றுப் பக்கங்களில் போய்ப் பார்த்தான். பக்கத்தில் அதை அடுத்தாற் போல் வீடுகள் காணப்படவில்லை. சிறிது தூரத்திற்கு அப்பால் ஆங்காங்கு இரண்டொரு வீடுகள் காணப்பட்டன. அவன் அவ்விடங்களில் போய் அவற்றில் வசித்தோரைச் சந்தித்து அந்தப் பங்களாவில் இருந்தோர் எங்கு போயினர் என்ற செய்தி ஏதாவது தெரியுமா என்று விசாரிக்க, சிலர் தமக்கு யாதொரு தகவலும் தெரியாதென்றும், வேறு சிலர், அந்தப் பங்களா ஏலத்தில் விடப்படுமென்று திருவாரூரிலும் அவ்விடத்திலும் தண்டோரா மூலமாக யாரோ விளம்பரப் படுத்தியது தங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமென்றும் கூறினர். அதைக்கேட்க, கலியாணசுந்தரத்தின் குழப்பமும் கலவரமும் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்தன. பங்களாவின் சொந்தக்காரர் மூவருடைய அனுமதியுமின்றி எவர்கள் விற்கப் போகிறார்கள் என்று ஐயம் தோன்றியது. ''நீலலோசனி யம்மாள் பேசமாட்டாமலும் உடம்பை அசைக்க மாட்டாமலும் பக்ஷவாத நோய் கொண்டு படுத்திருந்தாள். கமலம் தஞ்சையில் இருக்கிறாள். ஷண்முகவடிவு காணாமல் போயிருக்கிறாள்.

அப்படியிருக்க, இந்தப் பங்களாவை விற்பது யார்?'' என்று கலியாணசுந்தரம் தனக்குள் பலவாறு எண்ணமிட்டுக் கலங்கியவனாய் அவ்விடத்தைவிட்டுத் திருவாரூரை அடைந்து, தனது சொந்த வீட்டிற்குப்போய்ப் பார்த்தான். அதன் வெளிக்கதவும் பூட்டப்பட்டிருந்தது. பக்கத்திலிருந்த வீட்டுக்காரர்களைக் கண்டுகேட்க, அவர்கள் அவனது வேலைக்காரியும், அவளோடு தஞ்சையிலிருந்து வந்த ஒரு சிறிய பெண்ணும், வந்தவுடனே நீலலோசனியம்மாளுடைய பங்காளவிற்கே போய்விட்ட தாகவும், அதன்பிறகு அங்கே திரும்பி வரவே இல்லை என்றும் கூறினர். உடனே கலியாணசுந்தரம் நீலலோசனி அம்மாளுடைய பங்களா ஏலத்தில் விடப்படும் விஷயமாக ஏதாவது தகவல் அவர்களுக்குத் தெரியுமாவென்று விசாரிக்க, அவர்கள் அதைப்பற்றித் தமக்கு அதிக விவரமொன்றும் தெரியாதென்றும், தஞ்சையிலுள்ள யாரோ ஒரு ஜெமீந்தார் அதை ஏதோ ஒரு தேதியில் ஏலத்தில் விடப்போவதாக தண்டோரா போடப்பட்டதென்று ஜனங்கள் சொல்லிக் கொண்டனரென்றும் தெரிவித்தார்கள். அந்தச் செய்தியைக் கேட்டுக்கொண்ட கலியாணசுந்தரம் திருவாரூரை விட்டு மறுபடி தஞ்சைக்குப் பிரயாணமானான். அவனது மனக் குழப்பம் வரவர அதிகரித்ததே அன்றிக் குறைவதற்கு ஏதுவில்லாமல் இருந்தது. தான் ஷண்முகவடிவினிடம் பேசிக்கொண்டிருந்த காலத்தில், அவள் தங்கள் மூவரையும் தவிர வேறே உறவினர் யாரும் தங்களுக்கு இல்லையென்று சொன்னது நன்றாக நினைவிருந்தது. ஆகையால், அப்போது யாரோ ஒரு ஜெமீந்தார் அந்தப் பங்களாவை விற்கப் போகிறார் என்ற செய்தியானது நிரம்பவும் விந்தையாக இருந்தது. மறுபடியும் குதிரை வண்டி நிரம்பவும் துரிதமாகவே ஓடி சீக்கிரத்தில் தஞ்சையை அடைந்தது. அதற்குமேல் தான் என்ன செய்வதென்பதைப் பற்றி கலியாணசுந்தரம் வெகு நேரம் வரையில் ஆழ்ந்து சிந்தனை செய்தான். அந்த நிலைமையில்,

அவனுக்குக் கமலத்தைப் பற்றிய நினைவு உண்டாயிற்று. அவன் பூனாவுக்குப் போவதற்குள் அவளை ஒரு தரம் நேரில் பார்த்தவன். ஆதலால், அவள் சோமசுந்தரம் பிள்ளையென்ற ஒரு தனிகரிடம் அபிமான புத்திரியாக இருக்கிறாளென்ற விவரத்தை நன்றாக அறிந்தவன் ஆதலாலும், அவளே ஒரு கால் தனது அத்தை முதலியோரைத் திருவாரூரிலிருந்து தஞ்சைக்கு அழைத்துக்கொண்டாளோ என்றும், அவளது விருப்பத்திற்கு இணங்க சோமசுந்தரம் பிள்ளை என்பவர் அந்தப் பங்களாவை விற்கிறாரோ என்றும் ஓர் எண்ணம் உண்டாயிற்று. அதுவுமன்றி, தனக்குக் கடிதமெழுதி அனுப்பிய ரகசியமான மனிதர் ஷண்முக வடிவு காணாமல் போன விஷயத்தைக் கமலத்துக்கும் அறிவித்து இருப்பாரோ என்ற நினைவும், அதை அறிந்த பிறகே கமலம் தனது அத்தை முதலியோரை வரவழைத்துக் கொண்டிருப்பாளோ என்ற நினைவும் உண்டாயிற்று. தனக்கு எழுதப்பட்ட கடிதம் பல நாட்களுக்கு முன்னர் எழுதப்பட்டது ஆகையால் அதன்பிறகு கமலத்தின் முயற்சியால் ஒருவேளை ஷண்முகவடிவு அகப்பட்டு, அவளும் அக்காளிடமே போய்ச் சேர்ந்திருப்பாளோ என்ற யோசனையும் தோன்றியது. தெய்வச் செயலாக ஷண்முகவடிவு தனது அக்காளிடம் போய்ச் சேர்ந்திருக்கக் கூடாதா என்ற விருப்பமும், ஐயமும் எழுந்து அவனது மனதைத் தூண்டின. ஆதலால், தான் உடனே கமலத்தின் ஜாகையை அடைந்து அவளைக் காண வேண்டுமென்று அவன் தீர்மானித்துக் கொண்டான். ஷண்முகவடிவு அவளிடம் போயிராவிட்டாலும் தான் சகலமான வரலாறுகளையும் அவளிடம் வெளியிட்டு, அவளது அபிப்பிராயத்தையும் கலந்து அதற்கு மேல் தான் ஷண்முக வடிவைத் தேடலாமென்று தீர்மானித்துக்கொண்ட நமது யௌவனப் புருஷன் உடனே புறப்பட்டு அதற்கு முன் தான் கமலத்தைச் சந்தித்த மாளிகையை அடைந்தான்.

ஆனால், அவன் போன இடத்திலெல்லாம் ஏமாற்றமும் சஞ்சலமுமே எதிர்கொண்டு நின்றது. அந்த மாளிகையின்

வெளிக்கதவும் பூட்டப்பட்டிருந்தது. தான் எப்படியும் கமலத்தைக் கண்டு ஏதாவது உபயோகமுள்ள செய்திகளைத் தெரிந்துகொள்ளலாம் என்பதையே அவன் கடைசி நம்பிக்கை யாக வைத்திருந்தான். ஆகையால், அவ்விடத்திலும் தனது எண்ணம் பலியாமல் தடைப்பட்டுப்போனதைக் காண, தான் பெருத்த துரதிருஷ்டசாலியென்ற எண்ணம் உண்டானது. ஆகையால், தான் பிறந்த வேளையை நிரம்பவும் நொந்து கொண்டான். தான் செய்யும் முயற்சிக்கெல்லாம் எதிர்பாராத ஏதோ ஓர் இடைஞ்சல் குறுக்கிடுவதையும் தனது எண்ணம் நிறைவேறாமல் போவதையும் நினைக்க நினைக்க, அவன் முற்றிலும் தளர்வடைந்து சகிக்கவொண்ணாத ஏக்கமும் துயரமும் அடைந்து, அப்படிப்பட்ட துர்ப்பாக்கியவானாகிய தான் உலகத்தில் ஏன் ஜென்மமெடுக்க வேண்டுமென்று தன்னைத் தானே வைது அருவருத்து அந்த நிலைமையில் தான் இருப்பதைவிட இறப்பதே உசிதமானதென்று நினைத்துப் பெரிதும் கலங்கி, தான் அதற்குமேல் என்ன செய்வது எங்கே போவது என்பதை நிச்சயிக்கமாட்டாதவனாய்த் தயங்கி அந்த மாளிகையின் வாசலிலேயே சிறிதுநேரம் நிற்க அவனது மனதில் ஒரு யோசனை தோன்றியது. அந்த வீட்டின் சொந்தக்காரரான சோமசுந்தரம் பிள்ளை கமலத்தை அழைத்துக்கொண்டு எங்கேயாவது காரியார்த்தமாகப் போயிருப்பாரோ என்றும், அவர்கள் ஒருவேளை சீக்கிரமாகத் திரும்பிவந்து விடுவார்களோ என்றும் ஒரு யோசனை தோன்றியது. பக்கத்திலிருந்த வீட்டு மனிதரிடம் விசாரித்துப் பார்த்தால், திருவாரூரில் கிடைத்த மாதிரி ஏதாவது செய்தி கிடைக்காதா என்ற எண்ணத்தினால் தூண்டப்பட்டவனாய், கலியாணசுந்தரம் அவ்விடத்தை விட்டுப் பக்கத்து வீட்டை அடைந்து, அதன் சொந்தக்காரரைக் கண்டு, ''ஐயா! அடுத்த வீட்டு மனிதர் எங்கே போயிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?'' என்று பணிவாகவும் நயமாகவும் வினாவினான்.

அந்த மனிதன் "யார்? அடுத்த வீட்டுக் காரரையா கேட்கிறீர்கள்? அவர்கள் இந்த ஊர் அரண்மனைக்குப் போனார்கள் போலிருக்கிறது. நான் கவனித்துப் பார்க்க வில்லை" என்றான். கலியாணசுந்தரம், "ஓகோ! அப்படியா சங்கதி! ஆனால், அவர்கள் எப்போது வீட்டுக்குத் திரும்பி வருவார்கள் என்ற சங்கதியெல்லாம் உங்களுக்குத் தெரியாது போலிருக்கிறது. யாரிடம் கேட்டால், அந்தத் தகவல் கிடைக்கும்? நான் ஒரு காரியமாக அவர்களைப் பார்க்க வேண்டும்" என்று நிரம்பவும் விநயமாகக் கூறினான்.

அந்த மனிதன், "ஐயா! அந்த வீட்டுச் சங்கதிகளை நான் அவ்வளவாகக் கவனிக்கிறதே இல்லை. அவர்கள் எப்போது திரும்பி வருவார்களென்பது வேறே யாருக்குத் தெரியும் என்பதை நான் எப்படிச் சொல்லுகிறது? அவர்கள் சாதாரண மான மனிதர்களாக இருந்தால், அவர்களோடு நாங்கள் பழகுவோம். அவர்களுடைய சங்கதியெல்லாம் எங்களுக்குத் தெரியும். அவர்களுடைய மாதிரி வேறாக இருப்பதால், அவர்களோடு நாங்கள் சகவாசம் வைத்துக்கொள்ளுகிறதும் அவர்களுடைய போக்குவரத்துகளைக் கவனிக்கிறதும் இல்லை" என்றான்.

அந்த மனிதன் கூறிய வார்த்தைகளின் உள் கருத்து கலியாண சுந்தரத்திற்கு நன்றாக விளங்கவில்லை. தான் தேடிவந்த சோமசுந்தரம் பிள்ளையின் குடும்பத்தார் சகவாசத்திற்கு அருகமற்றவரென்று அந்த மனிதன் அவர்களை இழிவாகப் பேசியதுபோல அவனது மனதில் ஒருவித எண்ணம் உண்டாயிற்று. ஆகையால், கலியாணசுந்தரம் மறுபடியும் பேசத்தொடங்கி, "ஐயா! நீங்கள் சொல்லும் வார்த்தை சிலேடையாக இருக்கிறது; பக்கத்து வீட்டில் இருப்பவர்கள் சகவாசத்துக்கு அருகமற்றவர்கள் என்ற கருத்தோடு நீங்கள் பேசுகிறீர்களா? அல்லது, அவர்கள் உங்களை அப்படி எண்ணி அலட்சியம் செய்கிறார்கள் என்ற கருத்தோடு சொல்லு

கிறீர்களா? இதிலிருந்து நான் அவர்களுக்குப் பரிந்து பேசுகிறேன் என்று நீங்கள் எண்ணிவிடவேண்டாம். அவர்களுடைய உண்மையான குணம் எப்படிப்பட்டது என்பதைத் தெரிந்து கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு நான் இப்படிக் கேட்கி றேன்'' என்றான். அந்த வீட்டுக்காரன், ''நீங்கள் பேசுவதைப் பார்த்தால் அவர்களை நீங்கள் நன்றாக அறிந்து கொள்ளாத வர்கள் போலிருக்கிறதே. ஒருவேளை புதிதாக நீங்கள் அவர்களிடம் சிநேகம் செய்துகொள்ள வந்தவர்கள் போலிருக் கிறது. நீங்கள் நேரில் பழகி அவர்களுடைய குணம் எப்படிப் பட்டது என்பதை நீங்களே தெரிந்து கொள்ளுங்களேன். அவர்களோடு முதலில் நாங்கள் பழகியிருந்தால் அல்லவா, அவர்களுடைய குணம் இப்படிப்பட்டது என்பது எங்களுக்குத் தெரியப் போகிறது. அவர்களுடைய குணம் எப்படிப்பட்டது என்பது, அவர்களுடைய சிநேகத்தை நாடுவோருக்கே அவசியம் தெரியவேண்டும். எங்களைப் போன்ற குடும்பஸ்தர் களுக்கு அது தெரியவேண்டிய அவசியமே இல்லை'' என்றான்.

கலியாணசுந்தரம், முன்னிலும் அதிக கலக்கமும் ஆச்சரியமும் அடைந்து, ''நீங்கள் குடும்பஸ்தர் என்று சொல்வதைப் பார்த்தால் அவர்கள் குடும்பஸ்தர் அல்லவென்று சொல்வதுபோல இருக்கிறதே'' என்றான். வீட்டுக்காரன் புரளியாகப் பேசத் தொடங்கி, ''ஆம் எல்லோரும் குடும்பஸ்தர் கள்தான். ஒருவீடு வைத்துத் தனியாக காலக்ஷேபம் செய்பவர்கள் எல்லோரும் குடும்பஸ்தர்கள்தான். இருந்தாலும் புருஷன் பெண் ஜாதியென்று ஒரு நிர்ணயமாக இருக்கிறவர்களுக்கும் தாசிகளுக்கும் வித்தியாசமில்லையா?'' என்றான்.

கலியாணசுந்தரம் முன்னிலும் அதிக பிரமிப்பும் குழப்பமும் அடைந்து, ''என்ன நீங்கள் இப்படிப் பேசுகிறீர்களே! அப்படி யானால், பக்கத்து வீட்டிலிருப்பவர்கள் தாசிகளென்று நீங்கள் சொல்வதுபோல இருக்கிறதே!'' என்றான்.

வீட்டுக்காரன் ஒருவாறு ஆத்திரமடைந்து, ''அவர்கள் தாசிகளென்று நானாகச் சொல்லவில்லை; இந்த ஊர் முழுதும் சொல்லும் சங்கதியை நான் சொல்லுகிறேன். அதுவுமன்றி, அவர்களுடைய நடத்தையே அப்படிச் சொல்லுகிறது. அதை நான் சொல்லவேண்டியதில்லையே! ஆனால், இதில் ஒரு வித்தியாசம் இருக்கிறது. மற்றவர்கள் சாதாரண மனிதரிடம் பழக்கம் வைத்துக்கொள்ளும் சாதாரண தாசிகள். இவர்கள் அரண்மனையைச் சேர்ந்த பெரிய மனிதர்களை அடுத்துள்ள தாசிகள். அதுவொன்றுதான் வித்தியாசம். ஆனாலும் தொழில் மாத்திரம் ஒரே விதமானதுதான்'' என்றான்.

அதைக்கேட்ட கலியாணசுந்தரத்தின் தேகம் பதறியது. மனம் கொதித்தது. கண்கள் கோபத்தினால் சிவந்தன. தான் உடனே அவ்விடத்தை விட்டுப் போய்விடலாமாவென்று அவன் நினைத்தான். ஆனாலும், அவனை மீறி வார்த்தைகள் அவனது வாயிலிருந்து வெளிப்பட்டன. அவன், ''ஐயா! நீர் பேசுவது கொஞ்சமும் சரியாக இல்லை. பக்கத்து வீட்டிலிருக்கும் மனிதர் நிரம்பவும் கண்ணியம் வாய்ந்த பெரிய மனிதர். நான் அவரைப் பற்றி நன்றாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவரைச் சேர்ந்த மனிதர்களைத் தாசிகளென்று நீர் சொல்லுகிறீரே!'' என்றான்.

வீட்டுக்காரன் வியப்புற்று, ''அந்த வீட்டில் எனக்குத் தெரியாமல் எந்தப் பெரிய மனிதர் ஐயா இருக்கிறார்? அரண்மனையைச் சேர்ந்த சில தாசிகளல்லவா அதில் இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்துக் கண்ணியம் வாய்ந்த பெரிய மனிதரென்று உம்மைத் தவிர வேறே யாரும் சொல்ல நான் கேட்டதில்லை'' என்றான்.

கலியாணசுந்தரம் திடுக்கிட்டு முற்றிலும் பிரமிப்பு அடைந்து, ''யார் யார்! அரண்மனையைச் சேர்ந்த தாசிகளா பக்கத்து வீட்டில் இருக்கிறார்கள்! எப்போது முதல் அவர்கள் இருக்கிறார்கள்?'' என்றான்.

வீட்டுக்காரன், ''அவர்கள் தலைமுறை தலைமுறையாக இங்கேதான் இருக்கிறார்கள்'' என்றான்.

கலியாணசுந்தரம், ''என்ன ஆச்சரியம்! சுமார் இரண்டுமாத காலத்துக்கு முன்னேதான் நான் அந்த வீட்டுக்கு வந்துவிட்டுப் போனேன். அப்போது யாரும் தாசி அந்த வீட்டில் இல்லையே!'' என்றான்.

வீட்டுக்காரன், ''அப்போது வேறே யார் இருந்தது? அவருடைய பெயரைத்தான் சொல்லுமேன்?'' என்றான்.

கலியாணசுந்தரம், ''அந்த வீடு சோமசுந்தரம் பிள்ளையென்ற ஒரு பெரிய தனிகருடைய வீடல்லவா?'' என்றான்.

வீட்டுக்காரன், ''அப்படி யார் உமக்குச் சொன்னது? சோமசுந்தரம் பிள்ளை என்பவர் யார்? நானும் இந்த வீட்டில் நாற்பது வருஷகாலமாக இருந்து வருகிறேன். பக்கத்து வீட்டில் சோமசுந்தரம்பிள்ளை என்ற தனிகர் இருப்பதாக நான் கேள்வியுற்றதே இல்லையே!'' என்றான்.

கலியாணசுந்தரம் குழப்பமே வடிவாக மாறி, ''என்ன வேடிக்கை இது! இந்த மாளிகையிலுள்ள சோமசுந்தரம் பிள்ளை என்ற ஒரு தனிகர் எங்களைச் சேர்ந்த ஒரு குடும்பத்தாருக்கு வெகுகாலமாக பணம் அனுப்பி வந்திருக்கிறார். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருத்தி அவரைத் தேடிக்கொண்டு இங்கே வந்தாள். அவர் அந்தப்பெண்ணை அபிமான புத்திரியாக வைத்துக்கொண்டிருப்பதால் அந்தப்பெண் இங்கேயே இருக்கிறாள். அவள் இவ்விடத்திலிருந்து பல தடவைகளில் கடிதமும் பணமும் அனுப்பியிருக்கிறாள். நானே நேரில் வந்து சுமார் இரண்டு மாசத்துக்குமுன் அந்தப் பெண்ணை இதே வீட்டில் பார்த்திருக்கிறேன். அப்போது அந்த சோம சுந்தரம் பிள்ளை நோயாயிருப்பதாக அந்தப்பெண் சொன்னாள். அவள் ஒரு நாளும் பொய் சொல்லக் கூடியவளே அல்லவே!'' என்றான்.

வீட்டுக்காரன் ஆச்சரியத்தினால் புன்னகை செய்த முகத்தினனாய், ''நீர் சொல்வது விநோதமாக இருக்கிறதே! சோமசுந்தரம் பிள்ளை என்பவர் எந்தத் தெருவில் எந்த இலக்கமுள்ள வீட்டில் இருப்பதாக அந்தப் பெண் உங்களுக்கு எழுதினாள்?'' என்றான்.

கலியாணசுந்தரம், ''சக்காநாயக்கர் தெரு 13வது இலக்கமுள்ள வீட்டில் இருப்பதாக அந்தப் பெண் எழுதினாள். அது பக்கத்து வீடுதானே? அதைப்பற்றி சந்தேகமில்லையே?'' என்றான்.

வீட்டுக்காரன், ''ஆம்; அது பக்கத்து வீடுதான். நீர் நேரில் வந்து பார்த்தது ஒருவேளை வேறே வீடாக இருக்குமோ என்னவோ?'' என்றான்.

கலியாணசுந்தரம், ''இல்லையே! இதே வீட்டுக்குத்தானே நான் வந்தது. நன்றாக நினைவிருக்கிறதே. அந்தப்பெண்ணை யும் நான் இதில்தானே கண்டேன்'' என்றான்.

வீட்டுக்காரன் ''நீர் அப்போது அந்த சோமசுந்தரம் பிள்ளை என்ற மனிதரை நேரில் கண்டீரா?'' என்றான்.

கலியாணசுந்தரம், ''இல்லை. அவர் உள்பக்கத்தில் கடுமையான நோயாய்ப் படுத்திருப்பதாக அந்தப்பெண் சொன்னாள்'' என்றான்.

வீட்டுக்காரன், ''சரி, இதில் ஏதோ சூதிருக்கிறது. அந்த வீட்டைப் பற்றிய விவரமெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். அதில் அம்மணிபாயி என்ற மகாராஷ்டிர ஸ்திரீ நெடுங்காலமாக வசித்து வருகிறாள். அவள் நிரம்பவும் டீக்காக இருப்பாள். அரண்மனையைச் சேர்ந்த இளவரசர் முதலிய பெரிய மனிதர்கள் எல்லோரும் அவளுக்குக் குலாமாக இருக்கிறார்கள். அவளிடம் உங்கள் பெண் வந்து ஒரு வேளை சிக்கிக் கொண்டிருக்கலாம். சோமசுந்தரம் பிள்ளையிடம் இருப்பதாக எழுதி இருப்ப தெல்லாம் பொய்யாகத்தான் இருக்க வேண்டும். அந்தப்

பெண்ணையும் அவள் தன்னுடைய துறையில் திருப்பிக் கெடுத்திருப்பாள். இனி அந்தப்பெண் நல்ல மாதரியாக உங்களிடம் வந்து சேருவாளென்று நான் நினைக்கவில்லை'' என்றான்.

கலியாணசுந்தரம், ''ஐயா! நீங்கள் சொல்வதைக்கேட்க, எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறது. நீங்கள் சொல்வது உண்மைதானா! சோமசுந்தரம் பிள்ளையென்று யாரும் இல்லையா? இதில் இருப்பது தாசிதானா? இவர்கள் என்ன காரணத்தினால் இப்போது அரண்மனைக்குப் போயிருக் கிறார்கள் என்பதும், எப்போது திரும்பி வரக் கூடுமென்பதும் உங்களுக்குத் தெரிந்தால், தயை செய்து சொல்லுங்கள்'' என்று நிரம்பவும் உருக்கமாகவும் குழப்பத்தோடும் கூறினான். வீட்டுக்காரன், ''நான் சொல்வது பிரமாணமான விஷயம். இதில் அம்மணிபாயி என்ற மகாராஷ்டிர ஸ்திரீதான் இருக்கிறாள். அரண்மனையில் இளவரசருக்கு இன்றையதினம் கலியாண மாம். அதற்காக இவர்கள் எல்லோரும் போயிருக்கலாம். எப்போது வருவார்கள் என்பதை நான் நிச்சயமாகச் சொல்லமுடியாது'' என்றான்.

அதைக்கேட்ட கலியாணசுந்தரம் திடுக்கிட்டு, ''என்ன! என்ன! இளவரசருக்குக் கலியாணமா? அவருக்கு இதற்குமுன் கலியாணம் ஆகவில்லையா?'' என்றான்.

வீட்டுக்காரன், ''ஆம்; இந்த ஊர் இளவரசருக்குத்தான் மறுபடியும் கலியாணம் ஆகிறது. அது ஒரு பெரிய கதை. அதையும் நீர் தெரிந்துகொள்ள வேண்டுமானால் சொல்லு கிறேன்'' என்றான்.

கலியாணசுந்தரம், ''சொல்லுங்கள்; தெரிந்து கொள்ளலாம்'' என்றான்.

வீட்டுக்காரன், ''இந்த ஊர் இளவரசர் பூனா தேசத்து மகாராஜனுடைய மகளை சாஸ்திரப்படி கலியாணம் செய்து

கொண்டிருக்கிறார். இவர் இந்த ஊர் மகாராஜனுடைய பட்டத்துக்கு வருங்காலத்தில், அந்த இளவரசிதான் பட்டமகிஷியின் ஸ்தானத்துக்கு வரவேண்டும். அந்த இளவரசியின் பெயர் லலிதகுமாரி தேவி என்பது. பூனாவில் நோயாக இருக்கும் தன்னுடைய தகப்பனாரைப் பார்ப்பதற்கு, லலிதகுமாரிதேவி அந்த ஊருக்குப்போய்ச் சுமார் ஐந்தாறு மாதகாலமாயிருக்கும் என்று நினைக்கிறேன். அவள் சிரேஷ்டமான அழகும், உத்தம லக்ஷணங்களும் வாய்ந்தவள்; மகாராஜனுடைய பட்டமகிஷியாவதற்கு வேண்டிய சகலமான சிறப்புகளும் நிறைந்தவள். ஆனால், இந்த ஊர் இளவரசரோ சதா காலமும் உல்லாச புருஷராயிருக்கும் ஸ்திரீலோலர். அவர் பட்டமகிஷியைத் தவிர இதர ஸ்திரீகளிடத்திலும் நாட்டமாயிருப்பது லலிதகுமாரிக்குத் தெரிந்து, அவள் அது விஷயமாக அவர்மேல் அருவருப்படைந்து அவரை மிருதுவாகக் கண்டிக்க அதிலிருந்து அவர் அவள் மேல் பகைமை பாராட்டி அவளுடைய அந்தப்புரத்துக்குப் போவதையும், அவளுடன் பேசுவதையும் நிறுத்திவிட்டார். சுமார் இரண்டு வருஷ காலமாக அவர்களுக்குள் மனஸ்தாபம் இருந்து வந்தது. அவருடைய கோபத்தைத் தணித்து, பிரியத்தை மறுபடி சம்பாதித்துக் கொள்ள வேண்டுமென்று அந்த இளவரசி பலவகையில் பிரயத்தனப்பட்டதாகத் தெரிகிறது. அந்த முயற்சி எல்லாம் பயன்படவில்லை. அதன்பிறகு அவள் தன் தகப்பனாருடைய நோய் காரணமாக ஊருக்குப் போனாள். இப்போது திடீரென்று அந்த இளவரசியைப் பற்றி ஒரு பெருத்த அவதூறு ஏற்பட்டு எங்கும் பரவியிருக்கிறது. அந்த இளவரசியின் சிப்பந்திகளுள் மோகனராவ் என்று ஒரு மணியக்காரன் இருக்கிறான். அவன் நல்ல அழகும் யௌவனப் பருவமும் உடையவன். அவனிடத்தில் அந்த இளவரசி மோகங் கொண்டு அவனைத் தன் ஆசைநாயகனாக வைத்துக்கொண்டு விட்டதாகவும், அதனால் அவள் இப்போது ஒன்பது மாதம் கர்ப்பணியாகி இருப்பதாகவும் இளவரசருக்கு எப்படியோ சங்கதி தெரிந்தது. அவர் வேறு சிலரை அழைத்துக் கொண்டு உடனே பூனாவுக்குப்

போய் அந்த வதந்தி உண்மையானதுதானா என்பதைச் சந்தேகமற நிச்சயித்துக் கொண்டு வந்தாராம். இந்தச் சமயத்தில் தார்வார் தேசத்திலிருந்து இந்த இளவரசருக்குச் சொந்தமான ஒரு பெண் விருந்தாளியாக இந்த ஊர் அரண்மனையில் வந்திருந் தாளாம். அவள் அற்புதமான சுந்தரமும், ஆச்சரியகரமான கல்வியறிவும், நுட்பமான புத்தியும், அருமையான குணங்களும் வாய்ந்தவளாக இருப்பதைக் கண்டு இளவரசர் அந்தப் பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டு பட்டமகிஷியை விலக்கி, அந்த ஸ்தானத்தில் புதிய ராணியை வைத்து விடுவதென்று தீர்மானித்திருக்கிறாராம். அந்தக் கலியாணம் இன்றைய தினம் நடக்கிறதென்று ஜனங்கள் சொல்லிக் கொண்டு, வேடிக்கை பார்க்கவும் பந்தி போஜனத்துக்காகவும் எல்லோரும் கும்பல் கும்பலாகப் போகிறார்கள். இந்நேரம் அந்தக் கலியாணம் நடந்து கொண்டிருக்குமென்று நினைக் கிறேன்; அதற்காகவே பக்கத்து வீட்டுக்காரியும் போயிருப்பாள். இவர்களுக்கெல்லாம் ஏழெட்டு தினங்களுக்குப் பலத்த வேட்டைதான். அநேகமாய் இவள் அரண்மனையிலிருந்து திரும்பி வீட்டுக்கு வர, இன்னம் ஒரு வாரமாவது செல்லு மென்று நினைக்கிறேன்'' என்றான்.

அந்த வரலாற்றைக் கேட்ட கலியாணசுந்தரம் அளவற்ற கலக்கமும் பதைப்பும் அடைந்தான். கமலத்தைப்பற்றிய நினைவெல்லாம் அவனது கவனத்தைவிட்டுச் சிறிது அப்பால் விலகியது. இளவரசரது கலியாணத்தைப் பற்றிய எண்ணமே அவனது முழு மனதையும் கவர்ந்துகொண்டது. தான் இனி அந்த மனிதரிடம் அதிகமாகப் பேச்சு வளர்ப்பது அவருக்குத் துன்பமாக இருக்குமென்று நினைத்த கலியாணசுந்தரம் தான் போவதாகச் சொல்லி அனுமதி பெற்றுக் கொண்டு அவ்விடத்தைவிட்டு வெளிப்பட்டான்.

வெளிப்பட்டு வீதியை அடைந்தவன் தான் அப்போது என்ன செய்வது என்பதையாவது, எங்கே செல்வது என்பதையாவது

அறியாதவனாய்க் குழம்பிய மனதுடன் சிறிது தூரம் சென்றான். இருவித துன்பங்களும் சஞ்சலங்களும் மாறிமாறி எழுந்து அவனது மனதை ஒறுக்கத் தொடங்கின. கமலத்தின் வரலாறு முற்றிலும் அடியோடு பொய்யாப் போயின. ஆதலால், அவள் அந்தத் தாசி வீட்டில் சேர்ந்து தானும் துர்நடத்தையில் இறங்கி இருப்பாளோ என்ற எண்ணமே மேலாடி நின்றது. தனது தங்கையின் கலியாணத்திற்குக் கூட அவள் வர விரும்பாதது, சோமசுந்தரம் பிள்ளையைத் தனக்குக் காட்ட மறுத்தது முதலிய பல விஷயங்களை அவன் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தான். அவள் தஞ்சைக்கு வந்தவுடன் சோமசுந்தரம் பிள்ளை என்பவரைத் தேடிக் காணவில்லை என்றும், முடிவில் வேறோரிடத்தில் அவரைக் கண்டதாகவும் அவள் கடிதத்தில் எழுதியிருந்ததும் அவனது நினைவிற்கு வந்தது. ஆகவே கமலம் உண்மையில் சோமசுந்தரம் பிள்ளையைக் காணவே இல்லையென்ற நினைவும், அவள் அவரைத் தேடி அலைந்த காலத்தில் தற்செயலாக அந்தத் தாசியைக் கண்டு அவளுடைய மோச வலையில் சிக்கி, துன்மார்க்கத்தில் செலுத்தப்பட்டிருக்க வேண்டுமென்ற நினைவும் உண்டாயின. ஷண்முகவடிவும் உள்ளூற அதற்கு உடந்தையானவளாக இருப்பாளோ என்ற சந்தேகம் ஒரு க்ஷணநேரம் அவனது மனதில் தோன்றியது. ஆனாலும், அவளிடமிருந்த கடிதங்களை அவன் நேரில் படித்துப் பார்த்தவன். ஆதலால், இளையவள்மேல் தான் சந்தேகங் கொள்வது நியாயமல்லவென்ற நினைவு உண்டாயிற்று. ஷண்முக வடிவு மகா பரிசுத்தமான நடத்தையும், அருமையான குணங்களும் வாய்ந்த உத்தமி என்ற அபிப்பிராயம் அவனது மனதில் உறுதியாகப் பதிந்துபோயிருந்தது. ஆகையால், அவளது அக்காளின் துர்நடத்தையைக் கருதி அவளை அருவருக்கவாவது, பழிக்கவாவது, சம்சயிக்கவாவது அவனது மனம் கொஞ்சமும் இடந்தரவில்லை; தனது அக்காள் அவ்விதத் துன்மார்க்கத்தில் இறங்கி இருக்கிறாள் என்பதைக் கேட்டால், ஷண்முகவடிவு அந்த அவமானத்தைப் பொறுக்காமல் தனது

பிராணனை விட்டாலும் விடுவாள் என்ற அச்சமும் எழுந்தது. அதுவுமன்றி, தான் ஷண்முகவடிவை மணந்தபிறகு அவளது அக்காள் தாசித் தொழில் செய்கிறவள் என்பதை உலகத்தோர் அறிந்தால், அதனால், தனக்கும் ஷண்முகவடிவிற்கும் பெருத்த மானக்கேடும் தலைகுனிவும் ஏற்படுமே என்ற கவலையும் எழுந்து அவனது மனதைப் புண்படுத்திப் பெரிதும் உலப்பத் தொடங்கியது. ஒருகால் கமலம் அதுவரையில் பரிசுத்தமாக இருக்கக்கூடாதாவென்றும், தான் அவளுக்கு நற்புத்தி புகட்டி அவளை அழைத்துக்கொண்டு போய் திருவாரூரில் வைத்து அவளைத் தக்க ஒரு மனிதருக்குக் கலியாணம் செய்து சன்மார்க்கத்தில் திருப்பிவிடும்படி கடவுள் செய்யமாட்டாரா என்றும் அவன் எண்ணிக் கலங்கியுருகினான். ஆகவே, தான் அவளைத் தேடுவதை அவ்வளவோடு நிறுத்தக்கூடாதென்றும், தான் அந்த ஊர் அரண்மனைக்குப் போய் சக்கா நாயக்கர் தெரு 13வது இலக்கமுள்ள வீட்டின் சொந்தக்காரியான அம்மணிபாயி எங்கே இருக்கிறாள் என்று விசாரித்து, அவளைச் சந்தித்து, அவளிடம் நயந்து வேண்டி கமலத்தை விடுவித்துக்கொண்டு போகவேண்டுமென்ற தீர்மானத்தை அவன் செய்து கொண்டான். தனது உயிர் நிலையான ஷண்முகவடிவு எங்கே போயிருப்பாள் என்ற கவலையும் அபாரமாக இன்னொரு புறத்தில் வருத்தியது. ஆனால், கமலம் அவளையும் வரவழைத்துத் தனது துறையில் செலுத்தவில்லை என்பது நிச்சயமாக விளங்கியது. எப்படியெனில் அவளது அத்தை திருவாரூரிலிருந்து எடுத்துக்கொண்டு வரப்பட்டவள், அந்த 13வது இலக்கமுள்ள வீட்டில் இல்லை. ஆதலால், அது ஷண்முகவடிவு கமலத்தினிடம் வந்து சேரவில்லை என்ற நினைவு உண்டாக்கியது. எனவே ஷண்முகவடிவு முதலியோர் காணாமல் போனவகை என்ன? அவர்கள் எங்கே போயிருப்பார் கள் என்ற ஐயங்கள் எழுந்து ஓயாமல் வதைத்துக் கொண்டி ருந்தன.

அந்த இரண்டு பெண்களைப் பற்றிய நினைவுகளையும் கவலைகளையும் விடப் பன்மடங்கு அதிக உரமாக, பூனாவிலுள்ள லலிதகுமாரிதேவியைப் பற்றிய கவலையும் இரக்கமும் எழுந்து அவனது மனதை இளக்கி உருகச் செய்தன. அம்மன்பேட்டைக் கூத்தாடிப் பெண்கள் பூனாதேசத்திற்குப் போய்த் தமது சதியாலோசனையை முடிவுவரையில் நிறை வேற்றி பட்டமகிஷி விபசாரி என்று இளவரசர் நம்பும்படி சூழ்ச்சிகள் செய்துவிட்டனர் என்றும், பட்டமகிஷி உண்மை யிலேயே அவ்வாறு நடந்திருக்க மாட்டாளென்றும், அவள் கர்ப்பிணியாக இருக்கமாட்டாளென்றும், அவன் உறுதியாக நினைத்தான். சில வஞ்சகரின் சூழ்ச்சியினால் இளவரசர் ஏமாறிப்போய், லலிதகுமாரிதேவி துன்மார்க்கி யென்று நம்பி அவளை விலக்கி வேறு கலியாணம் செய்து கொள்ளுகிறார் என்று கலியாணசுந்தரம் எண்ணினான். ஆகவே, தான் அந்த அபாய சந்தர்ப்பத்தில் என்ன செய்வது என்று ஆழ்ந்து சிந்திக்க லானான். அந்தச் சதியாலோசனையைத் தடுக்க வேண்டு மென்றும் இளவரசியை எச்சரிக்க வேண்டுமென்றும், தான் முயற்சித்ததும் தானும் ஷண்முகவடிவும் பட்டபாடுகளும் பலன்தராமல் போயினவே என்றும் அவன் எண்ணி ஏங்கினான். தான் உடனே பூனாவிற்கு ஆளையனுப்பியோ, நேரில் சென்றோ அப்போதாவது பட்டமகிஷியை எச்சரித்து நேரில் அழைத்து வரலாமென்பதற்கும், பூனா தேசம் தொலை தூரத்தில் இருந்தது. ஆகையால், கலியாணம் அன்றைய தினம் நடக்க ஏற்பாடு ஆகி இருந்ததாலும் அந்த யோசனை சாத்தியமானதாகத் தோன்றவில்லை. தான் நேரில் போய் இளவரசரைக் கண்டு லலிதகுமாரி தேவியின்மேல் சொல்லப்படும் அவதூறு பொய்யானதென்றும், அந்த ராணி பரிசுத்தமானவளென்றும் சொன்னால், அதை அவர் உடனே ஏற்றுக்கொள்வதற்கு தன்னிடம் தக்க சாட்சியம் எதுவும் இல்லையே என்ற கவலை உடனே எழுந்து அவனது மனதை உலப்பத் தொடங்கியது. அந்தச் சந்தர்ப்பத்தில் சிவபாக்கியம் என்ற கூத்தாடிப்

பெண்ணாவது தன்னோடு இருந்தால், தான் சொல்வதை உறுதிப்படுத்த அவள் ஒருத்தியாவது உபயோகப்படுவாளே என்றும், அவளும் எங்கேயோ போய்விட்டாளே என்றும் கலியாணசுந்தரம் நினைத்துப் பெரிதும் சஞ்சலமுற்றான்; தான் அந்த மகா தர்மசங்கடமான வேளையில் செயலற்றவனாய் இருக்க நேர்ந்திருப்பதைச் சிறிதும் சகியாதவனாய்ப் பெரிதும் தத்தளித்தான். தான் உடனே போய் அந்தக் கலியாணம் நடவாமல் தடுத்துவிட வேண்டுமென்ற எண்ணத்தினால், அவனது மனம் பதறித் துடித்தது. தேகம் கட்டிலடங்காமல் பறந்தது. மங்களகரமாகக் கலியாணம் நடக்கையில் அபசகுனமாகத் தான் போய் அதற்கு இடைஞ்சல் செய்தால், இளவரசர் முதலியோர் தன்மீது கோபம்கொண்டு தன்னைக் கடிந்து தூஷித்து ஏதேனும் துன்பத்திற்கு ஆளாக்குவாரோ என்ற எண்ணம் உண்டானது. ஆனாலும் தான் அந்தச் சந்தர்ப்பத்தில் சும்மா இருப்பது பெரும் பாவகரமான செய்கை என்ற நினைவு அவனைத் தூண்டிக் கொண்டே இருந்தது. ஆகவே, தனது உயிர் போவதானாலும், அதை இலட்சியம் செய்யாமல், எல்லாவற்றிற்கும் துணிந்து தான் உடனே அரண்மனைக்குப் போய், இளவரசரைக் கண்டு சிவபாக்கியத்தின் மூலமாகத் தனக்குக் கிடைத்த செய்தியையும் தான் செய்த முயற்சிகளையும், அனுபவித்த இடர்களையும் தெரிவித்து, லலிதகுமாரி தேவி சுத்தமான மனிஷியென்பதை ருஜுப்படுத்தும் பொறுப்பைத் தான் ஏற்றுக்கொண்டு, அதன் முடிவு தெரிகிறவரையிலாகிலும் கலியாணத்தை நிறுத்திவைக்குமாறு கேட்டுக் கொள்ள வேண்டுமென்று நமது கலியாணசுந்தரம் உறுதி செய்துகொண்டு அரண்மனை இருந்த திக்கை நோக்கி நடக்கலானான். ஒருகால் அதற்குள் கலியாணம் முடிந்து போயிருக்குமோ என்ற கவலை அவனைத் துன்புறுத்தத் தொடங்கியது. ஆகையால், தான் ஓட்டமாக ஓடி நிரபராதியான லலிதகுமாரி தேவிக்கு நேரவிருக்கும் பெருத்த பொல்லாங்கை விலக்க வேண்டுமென்ற ஆவலினால் தூண்டப்பட்டு நிரம்பவும்

துரிதமாகச் செல்லத் தொடங்கினான். அவ்வளவு பிரமாதமான கலியாண வைபவத்தில் தனக்கு இளவரசரது பேட்டி கிடைக்குமோ கிடைக்காதோ என்றும் கலியாண மண்டபத் தண்டை தான் நெருங்க பாராக்காரர்கள் விடுவார்களோ மாட்டார்களோ என்றும் வேறு பலவாறாகவும் எண்ணமிட்ட கலியாணசுந்தரம், தான் இளவரசரைப் பார்க்க இயலாவிட்டால் அம்மணிபாயியின் உதவியைக் கொண்டாகிலும், தான் தன்னால் இயன்றவரை முயற்சி செய்து பார்க்க வேண்டுமென்று பலவகைப்பட்ட தீர்மானங்கள் செய்து கொண்டவனாய்த் தலைகால் தெரியாது அரண்மனையை நோக்கி ஓடலானான். அம்மணிபாயி என்ற பெயரைத் தான் அதற்குமுன் எவ்விடத்திலோ கேள்வியுற்றிருப்பதாக அவனுக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று. ஆனால், அவனது மலக்கலவரத்தில் அந்தப் பெயரைச் சிவபாக்கியத்தினிடம் கேள்வியுற்ற ஞாபகம் உண்டாகவில்லை. ஆகவே, அவன் அம்மணிபாயி தனக்கு உதவியாய் இருப்பாளென்று நினைத்துக் கொண்டு கடுகிச் சென்றான்.

## 46- வது அதிகாரம்

## கற்புடையோர்க்கு மன்னனும் ஓர் அற்ப மசகமே

தூதுக்கிழவியான ஹேமாபாயியினால் வஞ்சிக்கப்பட்டு அரண்மனையின் மேல்மாடத்தில் ஓர் அறைக்குள் விடப்பட்ட ஷண்முகவடிவு சோமசுந்தரம்பிள்ளையின் மனைவியாக நடித்த ஸ்திரீயினால் போடப்பட்ட கடிதத்தை எடுத்துப் பிரித்துப் படித்தாள் என்பதும், அந்தக் கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பதும் முன் ஓர் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. தனது அக்காளைக் காணலாமென்ற ஆசையோடும் ஆவலோடும் வந்த அந்தப் பெண்மணி மகா விபரீதமான செய்தியைக் கொண்டிருந்த அந்தக் கடிதத்தைப் படிக்கவே,

அவளது மன ஊக்கமும் மகிழ்ச்சியும் சடேரென்று தணிந்து போயின. முன் பலதடவைகளில் தனக்கு நேர்ந்த அபாயங்களை எல்லாம் விடப் பன்மடங்கு பெரிதான அவகேட்டில் அகப்பட்டுக் கொண்டதாக அவள் உணர்ந்தாள். அவளது மனதில் பெருத்த திகிலும் கலக்கமும் குபீரென்று கிளம்பின. கை கால்களெல்லாம் வெடவெடவென்று நடுங்க ஆரம்பித்தன. தேகம் கட்டிலடங்காமல் பதறிப்பறந்தது. அடிவயிற்றில் இன்னதென்று விவரிக்க இயலாத ஒருவித சஞ்சலமும் சங்கடமும் பெருகி நிறைந்து வதைக்கத் தொடங்கின; அவள் என்ன செய்வதென்பதை அறியாமல் வேடரது வலைக்குள் சிக்கிய மான் கன்றுபோல மருண்டு மருண்டு நாற்புறங்களிலும் தனது பார்வையைச் செலுத்தியவளாய்த் தனது கைகளைப் பிசைந்துகொண்டு நின்று தத்தளிக்கலானாள். நெருப்பினால் தான் தன்னைச் சுட்டுக்கொண்டதனால் ஏற்பட்ட பெருத்த அபாயத்திலிருந்து தன்னை மீட்டு, தனது உயிரைக் காப்பாற்றி முற்றிலும் வாஞ்சையாகத் தன்னை நடத்தி அத்தனை நாட்கள் வைத்திருந்த ஹேமாபாயி அப்படியும் தன் விஷயத்தில் சதி செய்வாளோ என்ற சந்தேகமே அவளுக்குப் பெரிதாக இருந்தது. ஆகையால், தான் காண்பது கனவாக இருக்குமோ என்ற எண்ணமும் தோன்றியது. தன் விஷயத்தில் அத்தகைய கபட நினைவைக் கொண்டிருந்த ஹேமாபாயி அத்தனை நாட்கள் வரையில் தான் சிறிதும் சந்தேகங்கொள்ளாதபடி நிரம்பவும் திறமையாக நடந்துகொண்டது அவளால் தாங்க இயலாத அதியாச்சரியகரமான செய்தியாக இருந்தது. முடிவு வரையில் விஷயத்தை வெளிப்படுத்தாமல் இருந்தே அவள் நிரம்பவும் தந்திரமாகத் தன்னை ஏமாற்றிவிட்டாளே என்ற மலைப்பும், ஹேமாபாயி கபடமே வடிவாக வந்த மகா கொடிய வஞ்சகி என்ற நினைவும் நமது பெண்ணரசியின் மனதில் தோன்றின. கமலத்தைப் பற்றித் தான் சொன்ன வரலாறுகளை வைத்துக் கொண்டே அவர் தன்னை ஏமாற்றியிருக்கிறாள் என்பதும் சுலபத்தில் விளங்கியது. ஆகவே, கமலம் போன வகையென்ன

என்ற கவலையும் யோசனையும் ஒரு புறத்தில் எழுந்து கலக்க, தனது அப்போதைய நிலைமை எப்படி முடியுமோ என்ற சிந்தனையும் மேலோங்கி நிற்க, அந்த அருங்குண நங்கை பிரமைகொண்டு சுவரில் தீட்டப்பட்ட சித்திரப்பாவை போல அசைவற்று நின்ற தருணத்தில், அவளுக்குப் பின்புறத்தில் சடேரென்று ஒரு கதவு திறந்துகொண்டது. அதனால் உண்டான ஓசையைக் கேட்டு அந்த மடமங்கை திடுக்கிட்டு நடுநடுங்கித் திரும்பி பார்த்தாள். ஜரிகை வேலைப்பாடுகள் நிறைந்த வெல்வெட்டு ஆடைகளும், நவரத்னப் பாவையும், வைர ஆபரணங்களும் தரித்து தகத்தகாயமான தோற்றத்தோடும் புன்னகை அரும்பிய இனியமுகத்தோடும் இளவரசர் அடுத்த க்ஷணத்தில் அவளை நோக்கி உள்ளே நுழைந்தார். இருவரும் ஒருவரையொருவர் நன்றாகப் பார்த்துக்கொண்டனர். அப்போது வந்தவரே அந்த நாட்டு இளவரசர் என்பதை நமது இளந்தோகை உடனே எளிதில் உணர்ந்துகொண்டாள். நாணம், மடம், அச்சம் முதலிய உணர்ச்சிகள் அபாரமாக எழுந்து அவளை நிலை கலங்கச் செய்தன. அவளது கைகால்களெல்லாம் வெடவெட வென்று நடுங்கிப் பின்னுகின்றன. மேனி வியர்த்துக் கட்டிலடங்காமல் தள்ளாடுகிறது. மனதில் திகிலே மயமாக நிறைந்து குடிகொண்டது. அவள் உடனே ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அங்கிருந்த ஒரு கம்பத்தின் மறைவை அடைந்தாள். அவளது சிரம் காம்பொடிபட்ட தாமரை மலர்போல வாடிக் கீழே சாய்ந்தது. அவ்வாறு அந்த மடவன்னம் எதிர்ப்பட்டுப் போய்க் கம்பத்திற்கப்பால் மறைவதற்குள் அவளை நகம் முதல் சிகைவரையில் பன்முறை ஏறிட்டுப் பார்த்த இளவரசர் அப்படியே பிரமித்து முற்றிலும் திகைத்து இரண்டொரு நிமிஷ நேரம் வரையில் என்ன பேசுவதென்பதை அறியாமல் மௌனமாக நின்றுவிட்டார். ஷண்முகவடிவு இயற்கை யிலேயே அழகுத்திரளாயிருந்தது அன்றி, ஹேமாபாயியினால் செய்யப்பட்ட அற்புதமான அலங்காரத்தினாலும், வைர ஆபரணங்களினாலும் பட்டாடைகளினாலும் ஒப்புயர்வற்ற

ஜெகஜ்ஜோதியாகவும் கண்கொள்ளாத ஒரே எழில் நிறைவாகவும் நின்றாள். ஆதலால், இளவரசரது ஐம்புலன்களும் அறிவும் நிலைகலங்கி வெறிகொண்டு பரவசமடைந்து தாங்கவொண்ணா இன்பதுன்பங்களை அடைந்துநின்றன. அவளிடம் என்ன பேசுவதென்பதை அறியாமல் இரண்டொரு விநாடி நேரம் பிரமித்து மௌனமாக நின்ற இளவரசர், "பெண்ணே! ஏன் அங்கே போய்க் கம்பத்தில் மறைந்து கொள்ளுகிறாய்? இப்படி வா; உன்னுடைய பெயரென்ன?'' என்று உருக்கமாகவும் வாஞ்சையாகவும் மொழிந்தார்.

அதைக்கேட்ட ஷண்முகவடிவின் உயிர் தள்ளாடியது. தேகம் தத்தளித்தது. அவருக்கு எவ்விதமான மறுமொழி கொடுப்பது என்பதை அறியாமலும், நாணம் மேலீட்டினால் வாயைத் திறக்கமாட்டாமலும் குன்றிக்குறுகி நின்றாள்.

இளவரசர் தமது முகத்தில் முன்னிலும் அதிகரித்த மகிழ்ச்சியும், புன்முறுவலும் வருவித்துக்கொண்டு மேலும் பேசத் தொடங்கி, "பெண்ணே! ஏன் இப்படி நாணுகிறாய்? பயப்படாதே! வா இப்படி; உன் முகத்தழகை நான் நன்றாகப் பார்க்கக்கூடாதென்று கீழே குனிந்து கொள்கிறாயா? ஆகா! நான் பிறந்ததற்கு இதுதான் சுபதினமென்று நினைக்கிறேன். இன்றைய தினந்தான் நான் பிறந்த பயனைப் பூர்த்தியாக அடைகிறேன். நானும் இதுவரையில் கோடானு கோடி யௌவன ஸ்திரீகளைப் பார்த்திருக்கிறேன். கடைசியாக இதோ மேன்மாடத்தில் பூர்ணசந்திரோதயமென்ற ஒரு ராஜகுமாரியும் இருக்கிறாள். இந்த உலகத்தில் அந்தப் பூர்ணசந்திரோதயந்தான் சகலமான அம்சங்களிலும் சிரேஷ்டமான பெண் சிருஷ்டி என்று நினைத்திருந்தேன். இப்போது உன்னைப் பார்த்தபிறகு அந்த அபிப்பிராயம் தானாகவே பறந்து போய்விட்டது. அவளைவிட நீ இன்னம் பதினாயிரம் மடங்கு சிரேஷ்டமானவளாக இருக்கிறாய் என்பது நீ குனிந்து நிற்கும் அந்தப் பணிவிலேயே தெரிகிறது. ஆகா! பெண்களுக்கு எவ்வளவு சிரேஷ்டமான

அழகிருந்தென்ன! எவ்வளவு அருமையான விவேகமிருந்தென்ன! சகலமான யோக்கியதைகளும் இருந்தும் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்ற குணங்கள் இல்லாவிட்டால், அவர்களை மணமில்லாத ரோஜா புஷ்பத்திற்கு சமமென்று சொல்லலாம். அழகு முதலிய வேறு எந்த யோக்கியதையும் அடையாதவள் கூட, நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்ற பெண் தன்மை நிறைந்தவளாக இருப்பாளானால், அது ஒரு தனியான வசீகரமாகத் தான் இருக்கிறது. அப்படியிருக்க, நீயோ அழகு, குணம் முதலிய எல்லா அம்சங்களிலும் சர்வ சிலாக்கியமான சிருஷ்டியாக இருப்பதோடு மேலே சொல்லப்பட்ட குணங்களும் சமர்த்தியாய் நிறைந்தவளாக இருக்கிறாய்; ஆகையால், உனக்கு நிகரான ஸ்திரீ இந்த மண்ணுலகிலும் இல்லை; விண்ணுலகிலும் இருக்கமாட்டாள் என்றே நான் நினைக்கிறேன். இப்படிப்பட்ட பரிபூர்ணமான கலியாண குணங்கள் நிறைந்தபெண்கள் நாயகமான உன்னை என்னிடம் கொண்டுவந்து சேர்த்த மனிதர்கள் இப்போது இங்கேயிருந்தால், அவர்களுக்கு நான் கனகாபிஷேகம் செய்வேன்'' என்று மெய் மறந்து அபாரமாக அந்த மடக்கொடியைத் துதிக்கத் தொடங்கியபடி அவளிருந்த இடத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

அவரது சொற்களைக்கேட்ட ஷண்முகவடிவின் நிலைமை முன்னிலும் பன்மடங்கு அதிக சஞ்சலமுடையதாயிற்று. ஆனால், இளவரசர் தன்னை நோக்கி நடந்துவந்ததை அவள் கவனித்தாள். ஆதலால், அவர் தன்னிடம் வந்து பலாத்காரத்தில் இறங்கு வாரோ என்ற பீதி தோன்றியது. ஆகையால், அவள் தனது மனதைத் திடப்படுத்திக் கொண்டு ஒருவாறு துணிவடைந்து, ''கொஞ்ச நேரத்துக்குமுன் எனக்குக் கிடைத்த ஒரு கடிதத்தில் எழுதப்பட்டிருக்கும் சங்கதியைக் கொண்டும், தங்களுடைய திரு உருவத்திலிருந்தும், தாங்கள்தான் இந்தத் தேசத்து இளவரசர் என்று நினைக்கிறேன்'' என்றாள்.

இளவரசர் இனிமையாகப் புன்னகை செய்து, ''ஆம். நான்

தான் இளவரசன். இன்னம் சொற்பகாலத்தில் நான் இந்தத் தேசத்து மகாராஜனாகக் கூடியவன். இப்போதும் பெயருக்கு மாத்திரம் என் தகப்பனார் மகாராஜனே அன்றி, அவருடைய செல்வாக்கு அதிகாரம் முதலிய எல்லாம் எனக்கே வந்து விட்டன'' என்றார்.

ஷண்முகவடிவு நிரம்பவும் பணிவாகவும் மிருதுவாகவும் பேசத்தொடங்கி, ''மகாராஜா! என் மேலிருக்கும் வைர ஆபரணங்கள் பட்டாடைகள் முதலியவைகளைக்கொண்டு தாங்கள் என்னை மதிக்கக் கூடாது; நான் பரம ஏழை, பதிவிரதா தர்மப்படி நடக்கும் குணமுடைய குடும்ப ஸ்திரீ. நான் இருப்பது திருவாரூர். ஒரு காரியமாக இந்த ஊருக்கு வந்த இடத்தில், எனக்குப் பல அபாயங்கள் நேர்ந்தன. முடிவில் நான் நெருப்பினால் சுடப்பட்டு அபாயகரமான நிலைமையில் இருந்த காலத்தில் ஹேமாபாயி அம்மாள் என்னை எடுத்துக் காப்பாற்றினார்கள். ஆனால், அவர்கள் கடைசிவரையில் கபடமற்றவர்கள் போலவே இருந்து இந்த ஆடை ஆபரணங்களை அணிவித்து என்னை மோசடியாக இங்கே கொண்டுவந்து விட்டுப் போயிருக்கிறார்கள். நான் இன்னொருவரைக் கல்யாணம் செய்துகொள்வதென்று ஏற்கெனவே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த நிர்ணயத்திலிருந்து நான் தவறி நடக்கக் கூடியவளல்ல. தாங்கள் என் விஷயத்தில் ஏதோ வித்தியாசமான எண்ணம் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. நான் ஒழுங்கான மார்க்கத்தில் நடக்கக்கூடிய குலஸ்திரீ. ஆகையாலும், எனக்குத் தெரியாமல் வஞ்சகமாக இவர்கள் என்னை இங்கே கொண்டு வந்து விட்டிருக்கிறார்கள். ஆகையாலும், தாங்கள் என் மேல் கொண்டுள்ள எண்ணத்தைமாற்றி என்மேல் கிருபை பாலித்து, என்னை அரண்மனைக்கு வெளியில் கொண்டுபோய் விட்டு விடச் செய்யவேண்டுமென நான் தங்களிடம் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்'' என்று நிரம்பவும் வணக்க ஒடுக்கத்தோடு கூறினாள்.

அதைக்கேட்ட இளவரசர் வேடிக்கையாக நகைத்து, ''நீ பேசுவது நிரம்பவும் வேடிக்கையாக இருக்கிறதே! உன்னிடம் இந்த விஷயத்தைத் தெரிவிக்காமல் இவர்கள் உன்னை இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் என்ன? இப்போது நீ விஷயத்தைத் தெரிந்து கொண்டாயல்லவா! உனக்கு இன்னம் கலியாணம் ஆகவில்லை யென்று நீயே ஒப்புக்கொள்ளுகிறாய். வேறொருவரைக் கலியாணம் செய்துகொண்டிருப்பவள் அவரைவிட்டு இன்னொருவரை நாடுவது பிசகுதான். கன்னிகைப் பெண்ணா யிருக்கும் நீ என்னைக் கலியாணம் செய்து கொள்ளுவதில் என்ன அநீதி இருக்கிறது? ஒன்றுமில்லை. இதோ இன்னம் இரண்டு தினங்களில் நான் பூர்ணசந்திரோதயம் என்ற தார்வார் ராஜகுமாரியைக் கலியாணம் செய்துகொள்ளப் போகிறேன். அதே முகூர்த்தத்தில் உன்னையும் நான் பாணிக்கிரகணம் செய்துகொள்ளுகிறேன். நீ உத்தம குணங்களும், தர்ம நியாயப்படி நடக்கவேண்டுமென்ற மனவுறுதியும் உடைய வளாக இருக்கிறாய். ஆகையால், தாசி வேசிகளை நடத்துவது போல, உன்னை நடத்த நான் பிரியப்படவில்லை. உன்னை நான் சாஸ்திரப்படி மணந்து பட்டமகிஷி ஆக்குகிறேன். வேண்டு மானால், நான் உனக்குப் பிரமாணம் செய்து கொடுக்கிறேன்'' என்றார்.

ஷண்முகவடிவு சிறிதுநேரம் தயங்கியபின், ''மகாராஜாவே! எல்லா நியாயமும் அறிந்த தங்களிடம் நான் அதிகமாக நியாயம் எடுத்துச் சொல்வது சரியல்ல. எனக்குக் கல்யாணம் ஆகாவிட்டாலும், இன்னார்தான் எனக்குப் புருஷர் என்ற தீர்மானம் ஏற்கெனவே ஏற்பட்டுப் போயிருக்கிறது. நாம் கடையில் வாங்கும் கேவலம் உயிரற்ற சாமானைக் கூட, ஒருவரிடம் விலைபேசி அவருக்குக் கொடுப்பதாகச் சொல்லி விட்டால், இன்னொருவர் வந்து, அதை விட ஆயிரம் பதினாயிரம் அதிகமாகக் கொடுப்பதாகச் சொன்னாலும் அந்த

சாமானைப் பின்னவருக்குக் கொடுக்க முடியாதல்லவா? வாக்குறுதி பெரிதே அன்றி, பணம் பெரிதல்ல அல்லவா? அதுபோல, எந்த விஷயத்திலும் மனிதர் ஒரு நிர்ணயத்திற்குக் கட்டுப்பட வேண்டுமல்லவா? ஒருவருக்கு என்னைக் கட்டிக் கொடுப்பதாகத் தீர்மானம் ஆனபிறகு, இன்னொருவர் லட்சம் கோடிபணம் கொடுக்கிறாரென்றாவது, அல்லது, அவர் இந்தத் தேசத்தையே ஆளும் மகாராஜனாய் இருக்கிறார் என்றாவது, வேறு பலவகைப்பட்ட மேலான யோக்கியதைகள் உடைய வராய் இருக்கிறார் என்றாவது நினைத்து, முதல் ஏற்பாட்டை மாற்றுவது நியாயமாகுமா? அப்படி நடப்பதென்றால், உலகம் ஒரு கட்டுப்பாட்டில் நிற்குமா? ஒவ்வொரு ஸ்திரீயும் தனக்குக் கிடைத்ததோடு திருப்தியடைந்து நிறையில் நிற்க வேண்டாமா? நீங்கள் இப்போது சொன்னீர்களே. பூர்ணசந்திரோதயம் என்ற ஒரு ராஜகுமாரியைத் தாங்கள் சில தினங்களில் மணக்கப் போவதாகச் சொன்னீர்கள் அல்லவா? உங்களைக் காட்டிலும் பன்மடங்கு பெரிய சக்கரவர்த்தியின் குமாரர் ஒருவர் நாளைய தினம் வந்து தம்மை மணந்து கொள்ளும்படி அந்த ராஜ குமாரியிடம் பிரஸ்தாபிப்பது நியாயமாகுமா? அது தங்கள் மனசுக்கு எப்படி இருக்கும்? அந்த ராஜகுமாரி தங்களிடம் ஒரே உறுதியாக இருப்பவளாக இருந்தால் அவளுடைய மனசுக்குத் தான் அந்தப் புதிய பிரஸ்தாபம் எப்படி இருக்கும்? அவளுக்கும் உங்களுக்கும் தான் கலியாணம் இன்னம் முடிவடைய வில்லையே என்று நியாயத்தை அந்தச் சக்கரவர்த்தி குமாரர் எடுத்துச் சொன்னால் அதை நீங்கள் இருவரும் ஏற்றுக் கொள்ள மாட்டீர்களல்லவா? அதுபோல பணக்காரராக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும், மகாராஜனாக இருந்தாலும், கேவலம் தோட்டியாக இருந்தாலும், நியாயம் ஒன்றுதானே. எனக்கு ஏற்படுத்தப்பட்ட கணவர் சாதாரண மனிதர், தாங்கள் மகாராஜா என்கிற காரணத்தை ஓர் ஆதாரமாகக் கொண்டு எங்களுடைய ஏற்பாட்டை மாற்றும்படி தாங்கள் சொல்வது நியாயமாகாது'' என்றாள்.

அந்த மடந்தை அவ்வாறு பேசுவாள் என்பதை இளவரசர் சிறிதும் எதிர்பார்க்காதவர் ஆதலால், அவர் ஒருவாறு திடுக்கிட்டுத் திகைப்படைந்தார். ஆனாலும், அவள் ஒருகால் வேண்டுமென்றே பதிவிரதைபோல நடிக்கிறாளா என்ற நினைவைக் கொண்டவராய், "நீ சொல்வதெல்லாம் புஸ்தக நீதியே ஒழிய, அதன்படி உலகத்தில் எல்லாரும் நடக்கிறார்களா என்று நாம் கவனிக்க வேண்டாமா? ஒருவேளை உனக்கு இன்னொரு யோசனை இருக்குமோ? நான் பூர்ண சந்திரோதயம் என்ற பெண்ணையும் கட்டிக்கொள்வது உன் மனசுக்குப் பிடிக்கவில்லையா? அப்படியானால் உண்மையைத் திறந்து சொல். நான் அவளைவிட்டு உன்னை மாத்திரம் கலியாணம் செய்துகொண்டு உன்னையே பட்டமகிஷி ஆக்குகிறேன். இந்த வார்த்தை ஸத்யமான வார்த்தை. நீ இதை நம்பலாம். அந்த மாதிரி எழுத்து மூலமாக எழுதிக் கொடுக்கச் சொன்னாலும், நான் அப்படியே செய்கிறேன். அதற்காக நீ கொஞ்சமும் யோசனை செய்ய வேண்டியதில்லை" என்றார்.

அதைக்கேட்ட பெண்ணரசியான ஷண்முகவடிவு, "நான் இவ்வளவு தூரம் சொன்ன பிறகும் மகாராஜா இப்படிப் பேசுவது ஆச்சரியமாக இருக்கிறது. நான் சொன்ன நியாயம் ஏட்டுச் சுரக்காய் என்று தாங்கள் அவமதித்துப் பேசுவது சரியல்ல. ஏழ்மை நிலைமையிலுள்ள சாதாரண ஜனங்கள் தமது தினப்படி நடவடிக்கைகளில் நான் சொல்லுகிறது போலவே உறுதி தவறாமல் நிர்ணயமாக நடந்து கொண்டு வருகிறார்கள். அவர்கள் உறுதி தவறி நடந்தாலும், ஜனங்களுக்கெல்லாம் கடவுள் போன்ற தாங்கள் அவர்களுக்கு நல்ல வழி காட்டி அவர்கள் நியாயப்படி நடக்கச் செய்ய வேண்டும். அப்படியிருக்க, தாங்களே இப்படிப்பட்ட காரியங்களை அனுமதித்தால், உலகம் எப்படிக் கட்டுப்பாட்டில் நிற்கும்? என்னைக் கண்டவுடன், பூர்ணசந்திரோதயத்துக்குத் தாங்கள் செய்துள்ள உறுதியை ஒரு நொடியில் மாற்ற யத்தனிக்கிறீர்கள்.

நாளைக்கு என்னைவிட மேலானவள் வந்தால், இப்போது சொல்லும் உறுதி பறந்துபோய்விடும் போலிருக்கிறது. தாங்கள் வசிக்கும் ஸ்தானத்துக்கு இது கொஞ்சமும் பொருந்தாத காரியம். தங்களுக்கு அபாரமான செல்வமும் செல்வாக்கும் இருப்பதால், அமிதமான தேகக் கொழுமையினால், பல ஸ்திரீகளின் மேல் துர்மோகம் ஏற்படுவது சகஜமே. அதையெல்லாம் அடக்கி ஒரு நிறையில் நிற்பதுதான் மேன்மையான குணம். அதுதான் ஏழைகளுக்கும் தனிகர்களுக்கும் உள்ள வித்தியாசம். சாதாரண மனிதர்கள் நிறைகள் நிற்பதற்கு, ஏழ்மைத் தனமும், இல்லாமை யுமே ஒரு முக்கியமான தூண்டுகோலாக இருக்கின்றன. பெரிய மனிதர்களிடமுள்ள அமிதமான செல்வாக்கும், செல்வமும், மனத்துணிவும் அவர்கள் பல விஷயங்களில் துராசை கொண்டு மீறி நடப்பதற்குத் தூண்டுகோலாக இருக்கின்றன. ஏழைகள் இல்லாக் கொடுமையினால் எவ்வளவு பாடுபட்டுத் தமது உடம்பை அடக்குகிறார்களோ, அதுபோலத் தங்களைப் போன்றவர்கள் வரம்பு மீறி அக்கிரமமான வழிகளில் செல்லாமல் தங்களுடைய மனதை அடக்க வேண்டும். இது சாதாரண மனிதருள் பெரும்பாலோர் பின்பற்றும் ஒழுங்கே அன்றி ஏட்டுச் சுரைக்காய் அல்ல. நான் எவ்வித கபடமான எண்ணத்தையும் மனசில் வைத்துக்கொண்டு தங்களிடம் வஞ்சகமாகப் பேசுவதாக எண்ண வேண்டாம். நான் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் நான் மனப்பூர்வமாகச் சொல்லுகிறேனே ஒழிய வேறல்ல. தாங்கள் பூர்ணசந்தி ரோதயத்தை வேண்டுமென்று தள்ளினாலும் சரி, அல்லது, இந்த ராஜ்யத்தை எனக்கே தானம் செய்தாலும் சரி, அல்லது குபேரனுடைய சம்பத்தைக் கொணர்ந்து எனக்குக் கொடுத்தாலும் சரி, அவைகளைக் கருதி நான் என்னுடைய வாக்குறுதியை மீறவும் மாட்டேன்; எனக்கு ஏற்படுத்தப்பட்ட புருஷரைவிட்டு அன்னியரை நாடவும் மாட்டேன். இதைத் தாங்கள் பிரமாணமாக எண்ணிக் கொள்ளலாம். நான் பரம ஏழை. தங்களுக்கு நான் ஒரு பொருட்டல்ல. என்மேல் தாங்கள்

கோபம் பாராட்டாமல், இரக்கங் கொண்டு என்னை வெளியில் அனுப்பிவிட வேண்டுகிறேன்'' என்று நிரம்பவும் பணிவாகக் கூறினாள்.

அதைக்கேட்ட இளவரசர் மிகுந்த ஏமாற்றமும், அவமானமும் ஒருவித ஆத்திரமும் பதைபதைப்பும் அடைந்து, அதற்கு மேல் தாம் என்ன சொல்வது என்பதை அறியாமல் சிறிது நேரம் மௌனமாக நின்ற தத்தளித்தார். அவளது அதிமாதுரிய மான சொற்களும், அவள் நின்ற நாணிய நிலையும், பாதாதி கேசம் வரையில் வழிந்து மனதைக் கொள்ளை கொண்ட அவளது தெய்வீகமான எழிலும், ஒன்றுகூடி இளவரசரது மதியை மயக்கி மனதைப் பரவசப்படுத்தி உயிரைக் குடித்தன ஆதலால், எவருக்கும் கிட்டாத அந்த அதிசுந்தர ரூபிணியைத் தாம் நியாயமான வழியில் அடைய இயலாவிட்டால், பலவந்தமாகவாவது எப்படியும் அனுபவித்தே தீரவேண்டு மென்ற ஓர் உறுதி அவரது மனதில் உண்டாயிற்று. அவர் முடிவாக அவளை நோக்கி, ''பெண்ணே! நீ சொல்லுகிற நியாயங்களை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனாலும், இப்போது மேன்மேலும் உன்னோடு வற்புறுத்திப் பேசி உன் மனசைப் புண்படுத்த நான் பிரியப்படவில்லை. இதோடு உன்னைவிட்டு நான் போகிறேன். ஆனாலும், நான் உன்மேல் கொண்ட காதலை மாத்திரம் விலக்க என்னால் முடியவே முடியாது. இன்றிரவு முழுதும் நாளைய பகல் முழுதும் நீ யோசனை செய்து உன் மனசை சமாதானப்படுத்திக்கொள். நாளையதினம் இரவில் நான் மறுபடி உன்னைப் பார்க்கிறேன். எப்படியும் நான் உன்னை அடைந்தே தீருவேன். நீ இனி இவ்விடத்தைவிட்டுப் போகமுடியாது. கிரமப்படி நீ என்னைக் கலியாணம் செய்துகொள்ள இணங்காவிட்டால், நான் உன்னைப் பலாத்காரம் செய்வதுதான் கடைசியான மருந்து. அதற்கு நான் பின்வாங்குவேன் என்று நீ நினைக்க வேண்டாம். இனி நீ தப்பமுடியாதென்பது உன் மனதில் உறுதியாக இருக்கட்டும்'' என்று கூறியபின் மெதுவாக அவ்விடத்தை

விட்டு நடந்து அந்த அறையைவிட்டு வெளியில் போய்விட்டார். அவர் எந்த வாசலின் வழியாகச் சென்றாரோ அதன் கதவு உடனே மூடி வெளியில் தாளிடப்பட்டது.

அப்போதே ஷண்முவடிவிற்கு நல்ல மூச்சாக வந்தது. அவளது உயிரும் திரும்பியது. அவளது உடம்பையும் மனதையும் இறுகப் பிடித்துக்கொண்டிருந்த நாணம் ஒருவாறு விலகியது. அவள் மறைந்துகொண்டிருந்த கம்பத்தைவிட்டு இப்பால் வந்து மறுபடியும் யாராவது வருகிறார்களோ என்று நாற் புறங்களிலும் திரும்பிப் பார்த்தாள். அதன்பிறகு அரை நாழிகை நேரம் வரையில் அந்த மின்னற்கொடியாள் ஆழ்ந்து யோசனை செய்தாள். அதுவரையில்,நிரம்பவும் கொடிய பயங்கரமான எத்தனையோ இடர்களிலிருந்து தன்னைக் காப்பாற்றிய கடவுள் அப்போதும் தோன்றாத் துணைவராக இருந்து தன்னைக் காப்பாற்றுவார் என்ற ஓர் உறுதி அவளது மனதைவிட்டு அகலாதிருந்தது. ஆனாலும் அந்த இளவரசர், பேசிய உறுதியிலிருந்து அவர் தன்னை எளிதில் விடமாட்டார் என்பதும் தெரிந்தது. தான் அந்த இடத்திலிருந்து எப்படித் தப்பிப் போகிறதென்று அவள் யோசனை செய்தாள். யாதொரு மார்க்கமும் தோன்றவில்லை. நாற்புறங்களிலும் கதவுகள் மூடி வெளியில் தாளிடப்பட்டிருந்தன. ஆனால், முன்பக்கத்திலிருந்து உள்பக்கத்தில் காற்று வீசியதை அவள் உணர்ந்து அங்கே போய்ப் பார்த்தாள். அவ்விடத்தில் கம்பியில்லாத பலகணி போன்ற திறப்பு ஒன்று காணப்பட்டது. அதன் வழியாக அவள் வெளியில் பார்க்க அந்த நகரத்தின் கிழக்கு ராஜவீதி அந்த மாளிகைக்கு அடுத்தாற்போல இருந்தது தென்பட்டது. அவள் கீழே குனிந்து பார்த்தாள். தரை சுமார் ஒரு பனைமர ஆழம் இருந்ததாகத் தெரிந்தது. மேன்மாடம் செங்குத்தாக இருந்தது. அங்கிருந்து கீழே பார்க்கும்போதே, குலைநடுக்கம் எடுத்தது. தான் தவறிக் கீழே விழுந்தால், எலும்புகள் கூட மிஞ்சுவது அரிதென்பது எளிதில் தெரிந்தது. அவள் தனது பார்வையை வெளியில்

செலுத்தி முன்பக்கத்தால் கீழே இறங்குவதற்கு ஏதாவது வழி இருக்கிறதாவென்று பார்த்தாள். அந்த இடத்தில் ஏழு உப்பரிகைகள் ஒன்றன்மேல் ஒன்று அமைக்கப்பட்டிருந்தன என்பது முன்னரே சொல்லப்பட்டதல்லவா? ஒவ்வொன்றிலிருந்தும் சாக்கடைத்தண்ணீர் கீழே போவதற்காக துடைப்பருமனுள்ள தகரக் குழாய்கள் உச்சிமுதல் தரைவரையில் பதிக்கப் பெற்றிருந்தன. சுவரில் பொருத்தப் பெற்றிருந்த இரும்பு வளையங்களுக்குள் அந்தக் குழாய்கள் சொருகப் பெற்றிருந்தன. அதைக் கவனித்தவுடன் ஷண்முகவடிவின் மனதில் ஒரு யோசனை தோன்றியது. அவள் நின்ற இடத்திற்கு அருகிலிருந்து ஒரு குழாய் கீழே இறங்கியது. அந்தக் குழாயைப் பிடித்துக் கொண்டு தான் மெதுவாகக் கீழே இறங்கிப் போய்விட வேண்டுமென்ற தீர்மானத்தை அவள் செய்துகொண்டாள். ஒருகால் கைவழுக்கித் தான் விழுந்தாலும், அப்படியே மாண்டுபோவதே நல்லதென்று அவள் முடிவு செய்து கொண்டாள்.

சிறிதுநேரத்தில் அவளுக்குத் தேவையான போஜனம் வந்தது. அதை உண்பவள்போல நடித்து அந்த வேலைக்காரியை அனுப்பி விட்டு அந்த அறையின் கதவுகளை எல்லாம் உட்புறத்தில் தாளிட்டுக்கொண்டு முன்பக்கத்திலிருந்த திறப்பை அடைந்து தனது ஆடைகளை வரிந்து கட்டிக்கொண்டு, ''சுவாமி! தெய்வமே! நீதான் துணை! இதோடு என்னை உன் பாதாரவிந்தத்தில் சேர்த்துக்கொண்டாலும் சரி, காப்பாற்றினாலும் சரி'' என்று ஈசுவரனைத் தியானம் செய்து கொண்டவளாய் கீழே சென்ற தகரக்குழாயைப் பிடித்துக்கொண்டு கீழே இறங்கத் தொடங்கினாள். அவளது கைகால்களெல்லாம் வெடவெடவென்று ஆடத் தொடங்கின. உடம்பிலிருந்து வியர்வை ஆறாகப் பெருகி வழிகிறது. கை வழுக்குகிறது. தகரக் குழாய் வெகு காலத்திற்கு முன் பொருத்தப்பட்டது. ஆகையால் கடகடவென்று ஆடத் தொடங்கியது. அவ்வாறு அவள் காற்பங்கு தூரம் இறங்கியிருப்பாள். அதற்குள் அந்தக் குழாயைப் பிடித்துக்

கொண்டிருந்த இரும்பு வளையங்கள், இலேசாக சுவரில் பொருந்தி இருந்தனவாதலால் அவளது பாரத்தைத் தாங்க மாட்டாமல் ஒரே காலத்தில் எல்லாம் அடியோடு பிடுங்கிக் கொள்ள, குழாய் சுவரை விட்டு விலகி மரம் சாய்வது போல செங்குத்தாக ராஜபாட்டைப் பக்கம் சாய்ந்தது. அதைவிடாமல் இறுகப் பிடித்துக்கொண்டிருந்த ஷண்முகவடிவும் அதோடு சாய்ந்தாள்.

## 47- வது அதிகாரம்

## நவநீதம்

சாமளராவோடு பூனா நகரத்திற்குச் சென்ற இளவரசர் அரண்மனைப் பூங்காவில் ஒளிந்திருந்து, அங்குவந்த காதலர் சம்பாஷணையை உற்றுக் கேட்டபிறகு, தமது பட்டமகிஷி தனது கற்பை இழந்துவிட்டாள் என்பதற்கு அதுவே போதுமான சாட்சியென்று தீர்மானித்தார். அவரிடம் நிரம்பவும் பயபக்தி விசுவாசமுடையவர்களான கூத்தாடி அன்னத்தம்மாளின் பெண்கள் அந்த விஷயத்தில் பட்டமகிஷிக்கு அநுசரணையாக இருப்பவர்கள் ஆதலால், அவர்களுள் ஒருத்தியை ரகசியமாக வரவழைத்து உண்மையை இன்னமும் நன்றாகத் தெரிந்து கொண்டு ஊருக்குத் திரும்பலாம் என்று சாமளராவ் கூற, இளவரசர் அதை ஒப்புக் கொண்டார். மறுநாள் சாமளராவ் அரண்மனைக்குப் போய் தனம் என்னும் தாதிப்பெண்ணை அழைத்துக் கொணர்ந்து இளவரசரிடம் விடுத்தான். அவள் முதலில் பட்டமகிஷியைப் பற்றிய ரகசியம் எதுவும் தனக்குத் தெரியாதென்று உறுதியாக மறுத்தாள்; இளவரசர் நிரம்பவும் தந்திரமாகப் பேசி, தாம் முதல்நாள் மாலையில் பூங்காவில் மறைந்திருந்து உற்றுக்கேட்டு எல்லா விஷயங்களையும் தெரிந்து கொண்டதாகச் சொல்ல, உடனே தனம் பெரிதும் பயந்து நடுநடுங்கி நிரம்பவும் யோக்கியமான மனுஷிபோல நடித்து,

இளவரசரது காலில் வீழ்ந்து, பட்டமகிஷி உண்மையிலேயே குற்றவாளிதான் என்றும், அவள் கர்ப்பிணியாக இருப்பது உண்மைதான் என்றும் தாங்கள் கேவலம் வேலைக்காரிகள் ஆதலால், மகாராணியின் சொற்படி நடக்க நேர்ந்ததென்றும் கூறி, தாங்களும் அதில் சம்பந்தப்பட்டதைப்பற்றி இளவரசர் தங்களை மன்னிக்க வேண்டுமென்று நிரம்பவும் பணிவாகவும் உருக்கமாகவும் இறைஞ்சி வேண்டிக்கொண்டாள். அதைக் கேட்கவே, இளவரசர் தமது பட்டமகிஷியின் மீது கொண்ட துர்அபிப்பிராயம் சந்தேகமற ஊர்ஜிதப்பட்டது. அவர் தனத்தை அரண்மனைக்கு அனுப்பிய பிறகு சாமளராவோடு அந்த நகரை விட்டுப் புறப்பட்டுத் தஞ்சைக்குப் பிரயாணமாய், சில தினங்களில் தமது அரண்மனையை அடைந்தார்.

அடைந்தவர் சாமளராவைப் பூர்ணசந்திரோதயத்தினிடம் அனுப்பி, பூனாவில் தாம் அறிந்த விருத்தாந்தங்களை அவளுக்குத் தெரிவிக்கவும், தமது கலியாணத்தை உடனே நிறைவேற்ற அவள் இசைய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளவும் செய்ய, சாமளராவ் அவ்வாறே பூரண்சந்திரோ தயத்தினிடம் போய்விட்டுத் திரும்பி வந்து, அவள் கலியாணத்திற்கு இணங்கி விட்டாள் என்றும், ஆனால் கலியாணச் சடங்கு முடியும் முன் இளவரசர் தனது அந்தப்புரத்திற்கு வந்தால் ஜனங்கள் தன்னைப்பற்றி ஏதேனும் அவதூறு சொல்வார்கள் என்று தான் நினைப்பதால் அதன் பின்னரே அவர் தன்னிடம் வருவது உசிதமானதென்று அவள் விக்ஞாபனம் செய்துகொண்டதாகவும் கூறினான். இளவரசர் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டதன்றி, உடனே தமது மந்திரி முதலிய பிரதான உத்தியோகஸ்தர்களை வருவித்து, பூனாவிலிருந்த இராஜகுமாரி மீது ஏற்பட்ட தோஷத்தின் விவரத்தை எடுத்துக்கூறி, அவளைத் தாம் விலக்கி விட்டதாகவும், பூர்ணசந்திரோதயம் என்ற தார்வார் தேசத்து ராஜகுமாரியை மணந்து பட்டமகிஷியாக்கப் போவதாகவும்

தெரிவித்துக் கலியாணத்திற்குரிய சகலமான ஏற்பாடுகளையும் உடனே நிறைவேற்றி வைக்கும்படி ஆக்ஞாபத்து அனுப்பினார். அந்தச் செய்தி பெரிய உத்தியோகஸ்தர்கள் மூலமாய்ச் சிறிய உத்தியோகஸ்தர்கள், சிப்பந்திகள் முதலியோருக்குத் தெரிய, அது அவர்கள் மூலமாய் நகரத்திலுள்ள சகலமான ஜனங்களுக்கும் அதி சீக்கிரத்தில் எட்டியது. நகர முழுதும் ஜனங்கள் ஓயாமல் அதே பிரஸ்தாபமாகப் பேசத் தலைப்பட்டனர். உடனே அரண்மனைப் புரோகிதர் பிரசன்னமாகி முகூர்த்த நாளொன்று ஏற்பாடு செய்தார். விவாக முகூர்த்தப் பத்திரிகைகளும் தயாரிக்கப்பட்டு, அந்தத் தேசத்திலுள்ள சகலமான ஜெமீந்தார்களுக்கும், பெரிய மனிதர்களுக்கும் அனுப்பப் பட்டன. தஞ்சைப் பட்டணத்திலுள்ள எல்லா ஜனங்களும் தத்தம் விடுதிகளையும் வீடுகளையும் அலங்கரிக்க வேண்டுமென்றும், முகூர்த்த காலத்தில் அரண்மனையில் விஜயம் செய்திருந்து கலியாணத்தைச் சிறப்பித்து அரண்மனையில் விருந்துண்ண வேண்டுமென்றும் நகரமெங்கும் யானைமீது பறை அறைவிக்கப்பட்டது.

இளவரசராலும், பூர்ணசந்திரோதயத்தினாலும், மற்ற எல்லா ஜனங்களாலும் நிரம்பவும் ஆவலோடு எதிர்பார்க்கப்பட்ட கலியாண தினம் வந்து சேர்ந்தது. நகர முழுதும் ஒரே கலியாண மண்டபம் போல அலங்காரமே மயமாக நிறைந்து விளங்கியது. வீதிகள் தோறும் ஆகாயத்தை அளாவிய கொட்டகைப் பந்தல்களும், தேர்ச்சீலைகளும், வாழை மரங்களும், தோரணங்களும், ஸரவிளக்குகளும் வால்ஷேட் குளோப்களும் புஷ்ப ஸரங்களுமே மயமாக நிறைந்து போயின. தரை முழுவதையும் கோலங்களும், நடை பாவாடைகளுமே மூடிக் கொண்டன. அதுபோலவே வீடுகள் யாவும் நிரம்பவும் மங்களகரமாக அலங்கரிக்கப்பட்டதன்றி, ஜனங்கள் எல்லோரும் உயர்ந்த ஆடையாபரணங்களால் தங்களை நிரம்பவும் நேர்த்தியாகச் சிங்காரித்துக் கொண்டு இளவரசரது கலியாணத்

திருக்கோலம் காணவும், விருந்துண்ணவும் கும்பல் கும்பலாக அரண்மனையை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

அரண்மனையில் தோற்றமோ சொல்லி அடங்காத மகா புதுமையான அலங்காரமாக இருந்தது. தங்கப் பட்டைகளால் அழகு படுத்தப்பட்ட கம்பங்களும், கோடிக்கணக்கில் தொங்கிய ரஸமணிகளும், பெரிய பெரிய ரஸகுண்டுகளும், கண்ணாடி ரதவிளக்குகளும், படங்களும், நிலைக் கண்ணாடி களும், புஷ்பக் குடலைகளை ஏந்திய கந்தருவப் பதுமைகளும், பூமாலைகளை பலவகையான அழகிய பின்னல்களாகப் பிடித்த அப்ஸர ஸ்திரீகளைப் போன்ற பதுமைகளும் சித்திரப் பந்தல்களில் அற்புதமாகத் தொங்கவிடப்பட்டிருந்தன. தரை முழுதும் காஷ்மீரத்து ரத்தின கம்பளங்களே மயமாக நிறைந்து அவற்றின் மீது நடப்போரை இன்பசாகரத்தில் ஆழ்த்தின. எங்கு பார்த்தாலும் மேள வாத்தியங்களும் பேரிகைகளும் ஜாம் ஜாமென்று முழங்கிக்கொண்டிருந்தன. அவ்வாறு கண்கொள்ளா வனப்போடு பொலிந்த அரண்மனையின் இடையிலிருந்த கொலு மண்டபமே கலியாண மண்டபமாக மாற்றப்பட்டு நவரத்ன சகிதமாக விளங்கியது. வதூவரர்கள் உட்கார்ந்து கலியாணச் சடங்கை நிறைவேற்றுவதற்காக பவழக் கால்களின் மேல் முத்து மாலைகளால் அதிவிநோதமான பந்தல் அமைக்கப் பெற்றிருந்தது. ரோஜா, ஜாதிமல்லிகை முதலிய நறுமணப் புஷ்ப ஜாதிகளாலேயே கொலு மண்டபத்தின் மேல் கூரை அமைக்கப் பெற்றிருந்தது. தம்பதிகளின் முத்துப் பந்தலுக்கு எதிரில் தந்த நாற்காலிகள் ஆயிரக்கணக்கில் வரிசை வரிசையாகப் போடப்பட்டிருந்தன. தரை முழுதும் வெல்வெட்டினாலான தடித்த பீதாம்பரம் பரப்பப் பெற்றிருந்து. ஆகையால், அதன்மேல் நடப்போர் சுவர்க்கலோகம் அதுதானோவென்று சந்தேகித்துப் புளகாங்கிதம் எய்தினர். கொலு மண்டபத்தின் எதிரில் அமைக்கப்பட்டிருந்த ஆகாயத்தை அளாவிய கொட்டகைப் பந்தல் ஒரு பெரிய பட்டணம் போலக் காணப்பட்டது. அங்கு யானைகள், குதிரைகள், காலாட்

படைகள் முதலியவை காண்போர் பிரமிக்கத் தக்கபடி, அணி வகுக்கப்பட்டு நின்றன. அவற்றின் பின் பாகங்களிலும், எதிர்ப் பக்கத்திலும் அவ்வூர் ஜனங்கள் லக்ஷக்கணக்கில் விஜயம் செய்து குதூகல புருஷராக வீற்றிருந்தனர். கொலு மண்டபத்தில் வரிசை வரிசையாக இருந்த தந்த நாற்காலிகளில், அந்தத் தேசத்தைச் சார்ந்த நூற்றுக்கணக்கான ஜெமீந்தார்களும், மிட்டாதார்களும், பாளையக்காரர்களும், தனிகர்களும், மந்திரி, பிரதானி, சேனாதிபதி முதலிய பிரபல உத்தியோகஸ்தர்களும் ஜெகஜ் ஜோதியான ஆடையாபரணங்கள் அணிந்தவர்களாய் வீற்றிருந்தனர். முத்துப் பந்தலின் கீழ் தங்கமணையின் மீது அரண்மனைப் புரோகிதரும் ஏராளமான வேறு பல வேதியர்களும் அமர்ந்து ஹோமம் வளர்த்து மந்திர முழக்கம் செய்துகொண்டிருந்தனர். நூற்றுக்கணக்கான மேள வாத்தியங் களும், பாண்டுகளும் தெய்வ துந்துபியோவென அண்டம் செவிடுபடப் பெரு முழக்கம் செய்தன. ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை போன்ற தாசிகள் ஒரு புறத்தில் பரத நாட்டியமாடினர். வீணை, புல்லாங்குழல் முதலிய வாத்தியங் களின் தெய்வ கீதம் பற்பல இடங்களி லிருந்து இனிதொலித்தது. அந்தத் தேசத்திலிருந்த பாடகர்களும், வித்வான்களும் விகட கவிகளும், மல்லக ஜெட்டிகளும் ஆங்காங்கு தத்தம் திறமையைக் காட்டி ஜனங்களின் மனதை ரஞ்சிக்கச் செய்து கொண்டிருந்தனர்.

அத்தகைய அபார வைபவங்கள் நடைபெற, முத்துப் பந்தலின் கீழ் ஜாஜ்வல்லியமாக விளங்கிய இரண்டு நவரத்ன சிங்காசனங்களின் மீது இளவரசரும், பூர்ணசந்திரோதயமும் கோடி சூரியப் பிரகாசமாய் இனிது வீற்றிருந்தனர். அவர்களின் பின்புறத்தில் வெள்ளைப் புகைபோல நிரம்பவும் மெல்லியதாக இருந்த பட்டினாலான படுதாவின் மறைவில் ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் வீற்றிருந்தனர். அவர்களுள் இளவரசரது உறவினரும், ஜெமீந்தார்களது மனையாட்டிகளும், தாதிமார்களுமே பெரும்பாலாராக இருந்தனர். அப்போது அந்தக் கலியாண

மண்டபத்தில் கூடியிருந்த சகலமான ஜனங்களது மனதும் சகிக்க இயலாத அபாரமான மனவெழுச்சி கொண்டு பிரமாதமான ஆவலினால் வதைக்கப்பட்டு இன்பமோ துன்பமோ என்பது தெரியாத பலவகைப்பட்ட உணர்ச்சிகளால் அல்லல் பட்டுக் கொண்டிருந்தது. பூர்ணசந்திரோதயம் அழகு, குணம், திறமை முதலிய சர்வ அம்சங்களிலும் ஒரு சட்டகம்போல தெய்வீக சிருஷ்டியாக வந்துள்ளவள் என்ற வதந்தி பன்னாட்களாய் அந்த நகர முழுவதும் பரவி இருந்தது ஆகையால், ஜனங்கள் இமை கொட்டாமல் அவளது அதிலாவண்ய மனமோகன சுந்தர வடிவத்தைப் பார்த்துப் பார்த்துப் பிரமிப்படைந்து பரவசமுற்று நெடுமூச்செறிந்தனர். பூனா தேசத்திலிருக்கும் பட்டமகிஷி ஒருகால் அந்தக் கலியாணச் செய்தியைக் கேட்டு, அதைத் தடுப்பதற்கான ஏதேனும் ஏற்பாடு செய்திருக்கலாம் என்ற ஐயம் சிலரது மனதில் தோன்றியது. ஆகையால் அந்தக் கலியாணம் எவ்வித இடையூறும் இன்றி இனிது நிறைவேற வேண்டுமே என்று நினைத்து ஆவலே வடிவாக இருந்தனர். லலிதகுமாரி தேவி தவறு செய்துவிட்டது உண்மைதான் என்று ஜனங்களெல்லோரும் மனப்பூர்வமாக நம்பி விட்டனர். ஆதலால், அவர்கள் லலிதகுமாரி தேவியின் மீது ஒருவித வெறுப்பும் குரோதமும் கொண்டதன்றி, பூர்ணசந்திரோதயத் தினிடம் அபாரமான வாஞ்சையும் பிரேமையும் வைத்து, அவளை இளவரசர் பட்டமகிஷி ஆக்குவதே உரிய காரியமென்ற உறுதியான விருப்பமும் கொண்டவராய்த் திருமாங்கல்ய தாரணத்தை ஆவலோடு எதிர்பார்த்தனர். இளவரசர் தமது கடைக்கண்களால் அடிக்கடி பூர்ணசந்திரோதயம் என்ற மின்னல் கொடியாளைக் கடாக்ஷித்து திவ்ய தேஜோமயமாகவும், சுவர்க்க லோகத்தின் பிரதிபிம்பம்போல ஒரே பேரின்ப நிறைவாகவும், குளிர்ச்சியும் ஸுகமும் நிறைந்த பூர்ணசந்திரனே உண்மையில் அங்குவந்து வீற்றிருக்கிறானோ என்று ஐயுறத்தக்க வண்ணமும், பளிச்சென்று ஒரே ஜோதிகளாகவும், வீற்றிருந்த இன்ப வல்லியான அந்த மடவன்னத்தின் கண்கொள்ளா வனப்பில்

தமது மனத்தை லயிக்க விடுத்து மதிமயக்கம் அடைந்து அத்தகைய ஏந்தெழில் மயிலைத் தாம் அடையக் கொடுத்து வைத்ததை எண்ணி எண்ணிப் பூரிப்படைந்து எவ்விதத்திலும் அவள் தமக்குச் சக்கரவர்த்தினியாய் இருக்கத் தக்கவள் என்று எண்ணமிட்டவராய்ப் புரோகிதர் சொற்படி கலியாணச் சடங்குகளை நிறைவேற்றிக் கொண்டிருந்தார். பூர்ணசந்திரோதயத்தின் மனநிலைமையோ இன்னதென்று விவரித்துக் கூற இயலாத அசாத்திய நிலைமையாக இருந்தது. அம்மணிபாயி, சாமளராவ் முதலியோரது சூழ்ச்சியின் பலனாகத் தான் மற்ற எவருக்கும் கிட்டாத பட்டமகிஷி நிலைமையை அடையப் போவதைப் பற்றியும், அத்தனை வைபவங்களின் இடையில் தான் அரசருக்குச் சமமாக சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பதைக் குறித்தும் அவள் அளவற்ற ஆனந்தமும், மனவெழுச்சியும் கொண்டு மெய்மறந்து பூத உடம்போடு சுவர்க்க லோகம் அடைந்தவள் போலப் பேரின்பசாகரத்தில் கிடந்து மிதந்தாள். ஆனாலும், இடையிடையில் அவளது மனம் பூனாவிலிருந்த லலிதகுமாரி தேவியின் விஷயத்தில் செய்யப்பட்ட பெருத்த சதியைப்பற்றி நினைத்து நினைத்து இரக்கம்கொண்டு வருந்தித் தவித்து, பிறருக்கு எவ்வித தீங்குமின்றித் தனக்கு அத்தகைய பெருத்த பாக்கியம் கிடைக்கும்படி சர்வேஸ்வரன் செய்திருக்கக் கூடாதாவென்று எண்ணமிட்டு உருகியது. ஆனால், அவளால் விலக்க இயலாத பெருத்த ஆசையான சண்டமாருதம் அவளை ஒரு சருகுபோலத் தள்ளிக்கொண்டு போனது. ஆகையால், அந்த வஞ்சக வலையிலிருந்து தன்னை மீட்டுக்கொண்டு வெளிவர மாட்டாதவளாய் அந்தப் பெண்மணி அதற்கு உடந்தையாய் இருந்து, எப்போது இளவரசர் தனது கழுத்தில் பொட்டுக் கட்டுவார் என்று எதிர்பார்த்து ஆவலாகிய பெருத்த அக்கினியால் தகிக்கப்பட்டவளாய் இருந்தாள். அந்த நிலைமையில் இளவரசர் பூர்வாங்கமான சகல சடங்குகளையும் நிறைவேற்றித் திருமாங்கல்யதாரணம் செய்வதற்காக நவரத்னமாய் விளங்கிய பொட்டைக் கையிலெடுத்துக் கொண்டு

எழுந்துபோய்ப் பூர்ணசந்திரோதயத்தின் முன்னால் நின்றார். அப்சரஸ்திரீகள் போன்ற ஏராளமான தாதிமார்களும் அவளைச் சூழ்ந்து, இளவரசர் திருமாங்கல்ய தாரணம் செய்தவற்கு உதவி செய்ய ஆயத்தமாக நின்றனர்; புரோகிதர் முதலியோர் ஒன்று கூடி மாங்கல்யதாரண மந்திரத்தை வாய்விட்டுப் பலமாகக் கூறி கோஷிக்கத் தொடங்கினர். வாத்தியங்களெல்லாம் மங்கள முழக்கம் செய்யத் தொடங்கின.

அந்தச் சமயத்தில் கொலுமண்டபத்தின் அருகில் ஒரு பெருத்த கூக்குரல் உண்டாயிற்று. யாரோ ஒரு மனிதர், ''மகாராஜாவே! மகாராஜாவே! நிறுத்துங்கள்!நிறுத்துங்கள்'' என்று ஓங்கிக் கூச்சலிட்டது, மற்ற சகலமான சப்தங்களைக் காட்டிலும் அதிகமாக உயர்ந்து இளவரசரது காதில் பட்டது. அந்த விபரீதக் கூச்சலைக் கேட்ட இளவரசர் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார். அதேகாலத்தில் பூர்ணசந்திரோதயமும் திடுக்கிட்டுப் பிரமிப் படைந்து தனது சிரத்தை நிமிர்த்திப் பார்க்க, தலைவரிகோலமாக ஓடிவந்த ஒரு மனிதர் அவளது திருஷ்டியில் படவே, அவள் அவரது அடையாளத்தைக் கண்டு கொண்டாள். அவளது மனதில் அபாரமான திகிலும் குழப்பமும் குடிகொண்டன; அவளது உடம்பு கிடுகிடென்று நடுங்கத் தலைப்பட்டது. அவளது வசீகரமான முகம் தாமரை மலர் வாட்டமடைவது போல வாடிக் கீழே கவிழ்ந்தது. அவள் உணர்வு கலங்கி மயக்கமடைந்து தான் இருந்த ஆசனத்தில் அப்படியே சாய்ந்துவிட்டாள். அங்கே கூடியிருந்த எண்ணிறந்த ஸ்திரீகள், ஜெமீந்தார்கள், பெரிய மனிதர்கள் உத்தியோகஸ்தர்கள் முதலிய எல்லோரும் இளவரசரைப் போலவே திடுக்கிட்டுப் பிரமிப்படைந்து கூக்குரலுண்டான திக்கில் தமது திருஷ்டியைத் திருப்பி உற்றுப் பார்த்தனர். ஆதலால், பூர்ணசந்திரோதயத்தின் நிலைமையை எவரும் கவனிக்கவில்லை. முகூர்த்தகாலம் தவறிப்போகுமென்று, புரோகிதர் துரிதமாகச் சடங்குகள் நடத்திவந்ததை இளவரசர் உணர்ந்திருந்தவர். ஆதலால், நல்ல

தருணத்தல் தடுத்துக் காலஹறரணம் செய்யும் அவ்வளவு துணிவு வாய்ந்த மனிதன் யாராயிருப்பான் என்ற வியப்பும், பெருங் கோபமும் அவரது மனதில் பொங்கி எழுந்தன. தாம் நிரம்பவும் மங்களகரமாக நடத்த யத்தனித்த மகா முக்கியமான மாங்கலியதாரணச் சடங்கு நடைபெறாமல் யாரோ ஒரு மனிதன் அபசகுனம் போலக் குறுக்கிட்டுத் தடுத்ததைக் காண அவரது இரத்தம் கொதித்தது. கைகால்களெல்லாம் துடிதுடித்தன. கண்களில் தீப்பொறி பறந்தன. மீசைகள் துடித்தன; அந்தத் தேசத்திலுள்ள சர்வ ஜனங்களும் கீழ்ப்படிந்து வணங்கிப் போற்றத்தக்க மண்டலேசுவரரான தாம் மங்களகரமான ஒரு காரியம் செய்கையில் அதற்கு இடையூறு செய்யத் துணிந்தவன் உண்மையில் பைத்தியம் கொண்டவனாகத் தான் இருக்க வேண்டுமென்ற நினைவும், அவனைப் பாராக்காரர்கள் ஏன் உள்ளே விட்டார்கள் என்ற ஆத்திரமும், அவன் யாராக இருந்தாலும் அவனைத் தாம் தக்கபடி தண்டிக்க வேண்டு மென்ற மனக்கொதிப்பும் எழுந்து இளவரசரை நிலைகுலையச் செய்தன.

அவ்வாறு கூக்குரலிட்டு எல்லோரது கவனத்தையும் ஒரு நொடியில் கவர்ந்த மனிதன் நமது கலியாணசுந்தரம் என்பதை வாசகர்கள் எளிதில் யூகித்துக்கொண்டிருப்பார்கள். ஆதலால், அதை நாம் சொல்வது மிகையாகும். அவன் அம்மணிபாயியின் வீட்டை அடைந்து பார்த்து, அதன் கதவு பூட்டப்பட்டிருந்ததைக் கண்டு அண்டை வீட்டுக்காரனோடு பேசி முக்கியமான சில விஷயங்களைத் தெரிந்து கொண்டு அரண்மனைக்கு ஓடி வந்தான் என்பது முன்னரே சொல்லப்பட்டதல்லவா; அவ்வாறு ஓடிவந்தவன் கும்பலோடு கும்பலாக உள்ளே நுழைந்து ஜனங்களிருந்த இடத்தை அடைந்த காலத்தில் இளவரசர் திருமாங்கலியத்தைக் கையில் எடுத்தார். ஆதலால், அவன் சடேரென்று படைகளின் அணிவகுப்பிற்குள் நுழைந்து கொலு மண்டபத்தில் ஏறி முன் கூறப்பட்டபடி கூக்குரலிட்டான்.

அவனிருந்து கூச்சலிட்ட இடத்திற்கு அருகில் ஆயுதபாணிகளாக நின்ற சில சேவகர்கள் அவன் யாரோ பைத்தியக்காரன் என்று நினைத்து அவனது கைகளை இறுகப்பிடித்து, அப்புறம் இப்புறம் தாறுமாறாக இழுத்து வருத்த, அவன் எதற்கும் அஞ்சாமல் இளவரசரை நோக்கி முன்னிலும் அதிக பலமான குரலில் ஓங்கிப் பேசத் தொடங்கி, ''மகாராஜாவே! கொஞ்சம் பொறுங்கள். ஒரு முக்கியமான ரகசியம் எனக்குத் தெரியும். அது பூனாவிலுள்ள தங்கள் பட்டமகிஷி சம்பந்தமான ரகசியம். அதைத் தாங்கள் அவசியம் கேட்க வேண்டும். அந்த ராஜாத்தியின் விஷயத்தில் ஒரு பெருத்த சதியாலோசனை நடந்திருக்கிறது. அவர்கள் குற்றமற்றவர்கள். அவர்களின் மேல் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தோஷம் அபாண்டமானது. அதன் ரகசியம் எனக்கு நன்றாகத் தெரியும்'' என்று கூறினான்.

அவனது சொற்களைக்கேட்ட இளவரசர் அளவற்ற வியப்பும் பிரமிப்பும் அடைந்து சிறிதுநேரம் மலைத்து நின்றுவிட்டார். அவன் பைத்தியக்காரனாக இருக்கமாட்டானென்ற ஓர் எண்ணம் அவரது மனதில் பட்டது. பூனாவிலுள்ள லலிதகுமாரி தேவியின் விஷயத்தைத் தாமே நேரில் சந்தேகமறக் கண்டு நிச்சயித்துக் கொண்டு வந்திருக்க, அவன் அதற்கு மாறாகப் பேசத் துணிந்தது அதியாச்சரியமாக இருந்தது. ஆனாலும், அத்தனை ஜனங்களின் முன்னிலையில், அவன் சொல்வதைக் கேட்டு தாம் கண்டதையும் ஒருவாறு வெளியிட்டுவிட்டால், தாம் செய்யும் காரியத்தை எல்லோரும் திருப்திகரமாக அங்கீகரிப்பார்கள் என்ற நினைவினால் தூண்டப்பட்ட இளவரசர் பாராக்காரர்களை நோக்கி, ''பாராக்காரர்களே! அவனை உபத்திரவிக்க வேண்டாம். அவனை இப்படி நமக்கு முன் கொண்டு வாருங்கள். அவன் சொல்வதைக் கேட்போம். இதனால் முகூர்த்த காலம் கொஞ்சம் தவறிப்போனாலும் பாதகமில்லை. இந்த விஷயத்தின் உண்மை சகலமான ஜனங்களின் முன்னிலையில் நன்றாக வெளியாவதே உசிதமான காரியம்'' என்றார்.

கலியாண சுந்தரத்தைப் பிடித்துக்கொண்டிருந்த இரண்டு பாராக்காரர்கள், அவனுக்கு இரண்டு பக்கங்களிலும் நின்றபடி, அவனை நடாத்தி அழைத்துக்கொண்டு இளவரசர் மாங்கலியமும் கையுமாக நின்ற இடத்திற்கு அருகில் நிறுத்தினார்கள். எதிர்பாரா வகையில் திடீரென்று தோன்றிய அந்த சம்பவம் எப்படி முடியுமோ என்ற ஆவலினால் தூண்டப்பட்டவராய் சகல ஜனங்களும் வியப்பே வடிவாகவும் சித்திரப்பாவைகள் போல அசைவற்றம் இருந்தபடி கலியாண சுந்தரத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

மங்களகரமான சுபகாரியம் நிறைவேறும் சரியான தருணத்தில் அவ்வாறு அநாகரிகமாகக் கூச்சலிட்டுக் கொண்டு வந்து அந்தக் காரியத்திற்குத் தடை செய்யக் கூடியவன் யாராவது பைத்தியக்காரனாகத் தான் இருக்க வேண்டுமென்று முதலில் இளவரசர் முதலிய சகல ஜனங்களும் எண்ணி நிரம்பவும் ஏளனமாகக் கலியாணசுந்தரத்தைப் பார்த்தனர். ஆனாலும், அடுத்த க்ஷணத்தில் அந்த எண்ணம் மாறிப் போய்விட்டது. கலியாணசுந்தரம் யெளவன பருவமும், மன்மதனைப் பழித்த உயர்தர அழகும், கம்பீரத்தோற்றமும், பெருந் தகைமையும், நற்குணங்களும், ஜ்வலித்த முகவிலாஸமும் நிரம்பியவனாய் இருந்ததைக் காணவே, அவனைப் பற்றிய இளக்கரமான அபிப்பிராயம் மாறியது. அவன் யாராக இருப்பான் என்ற சிந்தனை எழுந்தது. அவன் ஒருகால் லலிதகுமாரி தேவிக்கு வேண்டிய மனிதனாக இருப்பானோ என்ற நினைவுண்டாயிற்று.

திருமாங்கல்யதாரணத்திற்காக பூர்ணசந்திரோதயத்திற்கு எதிரில் போய் நின்ற இளவரசர், கலியாணசுந்தரம் தமக்கருகில் அழைத்து வந்து நிறுத்தப்பட்டவுடனே அவ்விடத்தைவிட்டு வந்து தமது சிம்மாசனத்திற்குப் போய் அதன்மீது கம்பீரமாக உட்கார்ந்து கொண்டு நிரம்பவும் கோபமான பார்வையாகக் கலியாணசுந்தரத்தைப் பார்த்துப் பேச ஆரம்பித்தார்.

ஆரம்பத்தில் இளவரசருடைய தேகத்தினால் மறைக்கப் பட்டிருந்த பூர்ணசந்திரோதயம் அவர் அப்பால் போனவுடன் நன்றாக எல்லோரது திருஷ்டியிலும் பட்டாள். ஆரம்பத்தில் கலியாணசுந்தரத்தைப் பார்த்துத் திகில் கொண்டு மயங்கிச் சாய்ந்த பூர்ணசந்திரோதயம், தான் அவ்வாறு இருப்பது சந்தேகத்திற்கு இடங் கொடுக்குமென்று நிரம்பவும் துணிவு கொண்டு தனது தேகத்தையும் மனதையும் நிதானப்படுத்திக் கொண்டு தனது இயற்கைத் தோற்றத்தை அடைந்தவளாய் நாணிக் குனிந்த வண்ணமிருந்தாள். அவள் இளவரசருக்கு அருகில் நிரம்பவும் நெருங்கி பக்கத்தில் இன்னொரு சிம்மாசனத்தில் உட்கார்ந்திருந்தாள் ஆதலால், இளவரசரோடு பேசும் கருத்தோடு அவரது முகத்தைப் பார்த்த கலியாண சுந்தரத்தின் பார்வை தற்செயலாக பூர்ணசந்திரோதயம் இருந்த பக்கத்தில் சென்றது. எப்படி எனில், யாரோ ஒரு பெண்ணைப் பட்டமகிஷியாக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு அம்மன் பேட்டைக் கூத்தாடிச்சி தனது பெண்களைப் பூனாவிற்கு அனுப்பி லலிதகுமாரி மீது பொய்யான அவதூறு சுமத்த முயன்றாள் என்பதை அவன் அறிந்தவன். ஆதலால், அந்தப் பெண்ணைப் பார்க்க வேண்டுமென்ற ஒரு விருப்பம் அவனை மிஞ்சி எழுந்தது. ஆகையால், அவன் தனது கடைக்கண்ணால் பூர்ணசந்திரோ தயத்தைப் பார்த்தான். பார்க்கவே, அவன் திடீரென்று பாம்பின் மேல் காலை வைத்துவிட்டவன் எவ்வாறு துள்ளிக் குதிப்பானோ அவ்வாறு திடுக்கிட்டுத் துள்ளிக் குதித்தான். ''ஆகா! கமலமல்லவா உட்கார்ந்து கொண்டி ருக்கிறாள்!'' என்று தனக்குத்தானே மெதுவாகக் கூறிக் கொண்டான். தனது சந்தேகம் பொய்யானதோ மெய்யானதோ என்பதை நிச்சயிக்கும் பொருட்டு அவன் அவளை இன்னொரு முறை நன்றாகப் பார்த்தான். கமலமே ராஜஸ்திரீபோல அலங்கரித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாள் என்ற நிச்சயம் ஏற்பட்டது. உடனே அவன் சித்தப்பிரமை கொண்டவன் போலானான். வந்தபோது அவனிடம் காணப்பட்ட பலத்த

உற்சாகமும் பதைப்பும் சரேலென்று தணிந்து போயின. முகம் விகாரமாக மாறியது. பெருத்த விசனமும் அவமானமும் எழுந்து அவனது மனதைக் குடிகொண்டன. சகிக்க வொண்ணாத லஜ்ஜையும் சஞ்சலமும் கிளம்பி அவனது மனதை வதைத்துத் தேகத்தைக் குன்றச் செய்தன. அந்த ஒரு நொடியில் அவனது மனம் எண்ணிறந்த எண்ணங்களையும் யூகங்களையும் கொண்டது. பழைய நினைவுகளும் விஷயங்களும் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றி மறைந்தன. கூத்தாடி அன்னத்தம்மாளின் மகள் கூறிய வரலாறு முழுதும் ஞாபகத்திற்கு வந்தது. அம்மணிபாயி என்ற பெயரைத் தான் சிவபாக்கியம் சொல்லத் தெரிந்துகொண்டதாக அவன் உணர்ந்தான். அதுவரையில் ஒன்றுக்கொன்று சம்பந்த மில்லாமல் தாறுமாறாகத்தோன்றிய சங்கதிகளெல்லாம் அப்போது நன்றாகத் தெளிவுபட்டன. அம்மணிபாயி இருந்த வீட்டின் பக்கத்து வீட்டுக்காரன் கூறிய வரலாறெல்லாம் உண்மையானது என்பதும் உடனே தெரிந்தது. தான் அதற்கு முன் கமலத்தைக் கண்டது அம்மணிபாயி யின் வீட்டிலேதான் என்ற நிச்சயமும், அவள் சோமசுந்தரம் பிள்ளையைக் காணாமல் தவித்த காலத்தில் அம்மணிபாயியைக் கண்டு அவளது வஞ்சக வலையில் வீழ்ந்து, கடைசி வரையில் தனது தங்கைக்குப் பொய்யான விவரங்களை எல்லாம் கடிதங்களில் எழுதி வந்திருக்கிறாள் என்ற நிச்சயமும், கமலத்தை இளவரசருக்கு மணம்புரிவித்து அவரது பட்டமகிஷி ஆக்குவதற்காகவே, அவர்கள் கூத்தாடிப் பெண்களைப் பூனாவிற்கு அனுப்பினார்கள் என்ற உறுதியும் ஏற்பட்டன. ஆனால், அவர்கள் பூனாவில் இன்னவிதமான தந்திரம் செய்யப் போகிறார்கள் என்பது சிவபாக்கியத்தினிடம் சொல்லவில்லை. ஆதலால், அது கலியாணசுந்தரத்திற்கும் தெரியாமலிருந்தது. சகலமான நற்குணங்களும் நிறைந்த உத்தமியும், தனது ஆருயிர்க் காதலியுமான ஷண்முகவடிவின் சகோதரி அந்த மகா இழிவான மோசடியில் சம்பந்தப்பட்டிருப்பதும், தானும் ஷண்முகவடிவும் கமலத்தின் கருத்திற்கு விரோதமாக எதிர்த்து வேலை செய்ய

நேர்ந்ததையும் நினைத்து நினைத்து அவன் சகிக்க வொண்ணாத பேராச்சரியத்தினால் மேற்கொள்ளப்பட்டு கலக்கமே வடிவாக மாறிப் போனான். தான் கண்டு பேசிய காலத்தில் மகா பரிசுத்தமான நடத்தையுடையவள் போலவும், அடக்கமான மனுஷிபோலவும் காணப்பட்ட கமலம் அப்படியும் செய்தாளா என்ற சந்தேகமே எழுந்து தான் காண்பது மெய்யோ பொய்யோ என்ற பிரமையை உண்டாக்கியது. யாதொரு குற்றமும் புரியாத நிரபராதியான லலிதகுமாரி தேவியின்மீது அபாண்டமான பொய்த்தோஷம் கற்பித்து, அவள் வாழ்நாள் முழுதும் இல்லற சுகத்தை இழந்து துயரக் கடலில் மூழ்கிக்கிடக்கத்தக்க வழியைத் தேடிய மனிதர்கள் தமது சொந்தத் தாய் தகப்பன்மாராக இருந்தாலும், அவர்களைக் காட்டிக்கொடுத்து, தண்டனை நடத்தி வைக்க வேண்டுமென்று எண்ணத்தக்க நடுநிலை தவறாத குணமுடையவன். ஆதலால், கமலத்தைத் தான் உடனே காட்டிக் கொடுத்து அவளைப் பற்றி எல்லா ரகசியங்களையும் அந்த பிரம்மாண்டான ஸதசில் வெளியிட்டு அவள் பெருத்த மானபங்கமும் கொடிய தண்டனையும் அடையச் செய்ய வேண்டுமென்ற ஆத்திரமான ஓர் நினைவு அவனது மனதில் தோன்றியது. ஆனாலும், அடுத்த க்ஷணத்தில் அந்த உறுதி தளர்வடைந்தது. ''இவள் கமலம் என்ற பெண்; தார்வார் தேசத்து ராஜகுமாரியல்ல'' என்று சொல்ல வாயெடுத்ததை அவன் உடனே அடக்கிக்கொண்டான். எப்படியெனில், அவனது மனதில் புகைப்படம் போலப் பதிந்து சதாகாலமும் மாறாமல் நின்று ஸான்னித்யம் செய்துகொண்டிருந்த ஷண்முகவடிவின் இன்பகரமான குளிர்ந்தமுகம் அப்போது அவனிடம் கெஞ்சி மன்றாடித் தனது அக்காளை மன்னிக்க வேண்டுமென்று இறைஞ்சிக் கேட்டுக் கொள்வது போன்ற ஓர் உணர்ச்சி அவனது மனதில் தோன்றியது. அதுவுமன்றி, கமலத்தின் சாயல் தத்ரூபம் ஷண்முகவடிவின் சாயலைப் போலவே இருந்தது ஆகையால், கலியாண குணங்கள் நிறைந்த அவளது முகத்தைப் பார்க்கப் பார்க்க கலியாணசுந்தரத்தின் மனம் இளகிப் பெரிதும்

இரக்கம்கொண்டு நெகிழ்ந்து போயிற்று. ஆனால், அந்தத் தர்ம சங்கடத்தில் தான் என்ன செய்வது என்பதை நிச்சயிக்க மாட்டாமல், அவன் நிரம்பவும் தத்தளித்தான். கமலம் உண்மையிலேயே தனது தங்கையைப் போன்ற சிரேஷ்டமான குணமுடைய பெண்ணே என்ற நினைவும் அவள் பிறரது வஞ்சகச் சூழ்ச்சியில் அகப்பட்டு அந்த நிலைமைக்கு வந்திருக்கிறாள் ஆதலால், அவளிடம் தான் அதிக கொடுமை காட்டுவது ஒழுங்கல்ல என்ற நினைவும் எழுந்து அவளது விஷயத்தில் பெருத்த அனுதாபத்தை உண்டாக்கியது. அதோடு, இன்னொரு முக்கியமான விஷயம் அவனுக்கு நிரம்பவும் திருப்திகரமாகவும் ஆறுதலாகவும் இருந்தது. கமலம் அம்மணிபாயி என்னும் வேசையின் வசத்தில் சிக்கியும், மற்ற சாதாரண தாசிப் பெண்களைப் போல துன்மார்க்கத்தில் இறங்காமலும், தனது தேக பரிசுத்தத்தை இழக்காமலும், ராஜஸ்திரீ ஆகவேண்டுமென்ற அபாரமான மேம்பட்ட நோக்கம் கொண்டு, தன்னைக்கண்டு இளவரசர் காதலித்து, தமது பட்டமகிஷியாக்கிக் கொள்ள வேண்டுமென்று விரும்பத்தக்க வாறு ஒழுங்காகவும் சம்சயிக்க இடங்கொடாமல் உத்கிருஷ்ட மாகவும் நடந்துகொண்டிருக்கிறாள் என்ற எண்ணம் உதித்தது. ஆகையால், அவளுக்கு நேரிட்ட பெரிய விபத்தில் அது ஒரு பெருத்த அதிர்ஷ்டமான அம்சமாகத் தோன்றியது. ஆகவே, தான் அந்த நிலைமையில் எவ்விதம் நடந்து கொள்வதென்பதை நிச்சயிக்க மாட்டாதவனாய் நமது கலியாண சுந்தரம் இரண்டொரு விநாடி நேரம் கலங்கி நின்றான். அவள் தனக்கு உயிருக்குயிரான கமலமாக இருந்தாலும், அந்தக் கலியாணம் நிறைவேறாதபடி தடுக்க வேண்டியதும், அதனால் லலிதகுமாரி தேவிக்கு ஏற்பட இருக்கும் விபரீதமான அவகேட்டை விலக்குவதும் தனது கடமையென்பதை அவன் உறுதியாகக் கொண்டான். ஆனால், தன்னால் இயன்ற வரையில் தான் கமலத்தைக் காட்டிக்கொடுக்காமல் அந்தக் கடமையை எப்படியும் நிறைவேற்றியே தீரவேண்டுமென்று அவன் உடனே

தீர்மானித்துக் கொண்டான். லலிதகுமாரிக்கு இடர் செய்ய மனங் கொள்ளாமல், ஒரு கூத்தாடிப் பெண் தனது வீட்டையும் தாயையும் உடன் பிறந்தோரையும் விலக்கி வந்திருக்கத் தான் அந்தச் சந்தர்ப்பத்தில் கமலத்தைக் கருதி லலிதகுமாரி தேவியைக் காப்பாற்றாமல் பின்வாங்க நினைப்பது கேவலம் அதமச் செய்கை என்று நினைத்துத் தான் இருவரையும் காப்பாற்ற முயல வேண்டுமென்றும் முடிவில் ஒருகால் அதனால் கமலத்திற்கு ஏதேனும் துன்பம் நேருமானாலும், அதைக் கருதித் தான் பின் வாங்கக் கூடாதென்றும், அவன் உறுதிசெய்து கொண்டவனாய், அதன் பிறகு கமலத்தைப் பார்க்காமலும், அவளை அதற்கு முன் அறியாதவன் போலவும் இளவரசரைப் பார்த்தபடி பேசத் தொடங்கினான். இத்தனை எண்ணங்களும் மின்னல் தோன்றி மறையும் நேரத்தில், கலியாணசுந்தரத்தின் மனத்தில் தோன்றி மறைந்தன. ஆதலால், அவனது நிலைமையில் திடீரென்று ஏற்பட்ட மாறுபாட்டை இளவரசராவது, மற்ற ஜனங்களாவது சிறிதும் கவனியாதிருந்தனர். ஆனால், பூர்ணசந்திரோதயத்தின் நிலைமையோ சொல்லில் அடங்காத பரம சங்கட நிலைமையாக இருந்தது. அடுத்த க்ஷணத்தில் தன்னைப் பற்றிய எல்லா ரகசியங்களையும் கலியாணசுந்தரம் வெளியிட்டு விடுவான் என்றும், தான் ஒரு நொடியில் தனது மகோன்னத பதவியை இழந்து பாதாளத்தில் வீழ்ந்து மானபங்கமும் கொடிய தண்டனையும் அடைய நேருமே என்றும் நினைத்து அவள் பெருந்திகிலும் குலைநடுக்கமும் அடைந்து குன்றிப் போய் நெருப்பின் மேல் இருப்பவள் போலத் தத்தளித்திருந்தாள். அவளது உயிர் அநேகமாய்ப் போய் விட்டதென்று சொல்வதே பொருத்தமாக இருக்கும். இன்னம் எத்தனை விநாடிநேரம் தான் அந்தச் சிம்மாசனத்திலிருக்க நேருமோ என்றும், எந்த நொடியில் தான் கீழே இறங்கவும் அவமானமடையவும் நேருமோ என்றும் நினைத்து அந்த மடந்தை ஆவலே வடிவாக மாறி நரகவேதனை அடைந்தவளாய் அப்படியே பிரமித்து உட்கார்ந்திருந்தாள். அவள் எதிரிலிருப்போரைப் பார்ப்பவள் போல நடித்தாள்.

ஆனாலும், அவளது கண் பார்வையை இழந்து குருட்டுக் கண்ணாகவே இருந்தது. ஏனெனில், அவளது முழுமனமும், கவனமும் தனக்கு நேரப் போகும் பங்கத்தை எதிர்பார்ப்ப திலேயே சென்று கலங்கிக் கலவரமுற்றிருந்தன. ஆதலால், அவள் தன்னையும் உலகையும் மறந்து தேவத்யானமாக உட்கார்ந்திருந்தாள்.

அப்போது இளவரசர் கலியாணசுந்தரத்தை நோக்கி, ''யாரப்பா நீ? இந்த முகூர்த்தம் சரியான வேளையில் நடக்க வேண்டுமென்று நாங்கள் நிரம்பவும் பிரயாசைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். மங்களகரமான காரியம் நடக்கும் சமயத்தில் 'நிறுத்து, நிறுத்து' என்று சொல்லிக் கொண்டு நீ ஓடி வந்து தடுக்கிறாயே! எதற்காக நீ இப்படிச் செய்தாய்? உன்னை யார் இப்படிச் செய்யும்படி இங்கே அனுப்பியது? சங்கதியைச் சீக்கிரம் சொல்; நேரமாகிறது. முகூர்த்தம் தவறிப்போய் விடும்போலிருக்கிறது'' என்று அதட்டி வினவினார்.

அதைக்கேட்ட கலியாணசுந்தரம் நிரம்பவும் மரியாதை யாகவும் விநயமாகவும் பேசத் தொடங்கி, ''மகாராஜாவே! தங்களிடத்திலாவது வேறே யாரிடத்திலாவது நான் விரோதமான எண்ணங் கொண்டு அபசகுனமாகத் தடை செய்ய வேண்டு மென்ற எண்ணத்தோடு நான் இங்கே வரவில்லை. இவ்வளவு முக்கியமான சடங்கு நடக்குங் காலையில் வந்து அதற்கு இடையூறு செய்யவேண்டியிருப்பதைப் பற்றி என் மனம் படும்பாடு கொஞ்ச நஞ்சமல்ல. ஆனாலும், யாதொரு குற்றத்தையும் செய்யாத நிரபராதியான ஒரு மனிதருக்கு நேரப் போகும் பெருத்த அவகேட்டை விலக்க வேண்டும் என்ற ஜீவகாருண்யத்தினால் தூண்டப்பட்டே நான் இந்தச் சந்தர்ப்பத்தில் இங்கே ஓடி வந்தேன். மகாராஜாவை நான் இத்தனை ஜனங்களுக்கு முன் அவமானப்படுத்த எண்ணி வந்ததாக எண்ணக்கூடாது'' என்று வணக்கமாகக் கூறினான்.

அதைக்கேட்ட இளவரசர், "ஆம்! ஐயா! நிரபராதியென்று நீர் குறிக்கும் மனிதர் யார்? அவர் நிரபராதி என்பது உமக்கு எப்படித் தெரிந்தது? நீர் தக்க ஆதாரமில்லாமல் ஒருவருக்குப் பரிந்து பேச வந்து இந்த முக்கியமான சடங்குக்கு விக்கினம் செய்ய வந்திருக்கும் பக்ஷத்தில் உமக்குக் கடுமையான சிக்ஷை கிடைக்குமென்பதை நீர் தெரிந்து கொண்டீரா?" என்றார்.

கலியாணசுந்தரம் பதற்றமில்லாமல் நிரம்பவும் சாந்தமாகப் பேசத்தொடங்கி, "மகாராஜாவே! நான் யாருக்காகப் பரிந்து பேச வந்திருக்கிறேனோ, அந்த மனிதரை நான் நேரில் பார்த்தவனல்ல. அவர்களைப் பற்றிய வேறே வரலாறு எதுவும் எனக்குத் தெரியாது. அவர்களுக்காகப் பரிந்துபேசி அவர்களிடம் ஏதாவது பிரதி பிரயோசனம் அடையலாம் என்ற கருத்தோடவாவது வேறு எவ்விதமான கெட்ட கருத்தோடவாவது நான் இப்படிச் செய்ய முன்வரவில்லை. எனக்குக் கிடைத்த முக்கியமான ஒரு தகவலைக்கொண்டு, அநியாயமாக ஒரு மனிதருக்கு அவகேடு நேரப்போகிறதே என்று இரங்கி, அதைத் தடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு நான் வந்திருக்கிறேன். இப்படிப்பட்ட பரோபகாரச் செய்கையை மேற் கொண்டபிறகு நான் பலவித துன்பங்களை அனுபவித்து விட்டேன்; இனியும் எனக்கு எவ்விதமான பெருந்தீங்கு நேர்ந்தாலும் அதை நிரம்பவும் சந்தோஷமாக நான் அனுபவிக்கத் தயாராக இருக்கிறேன்" என்றான்.

இளவரசர், "ஓகோ அப்படியா சங்கதி! ஏற்கெனவேயே நீர் இதனால் துன்பங்களை அனுபவித்திருக்கிறீரா? நீர் சொல்வது நிரம்பவும் விந்தையாக இருப்பதோடு, அது எனக்குக் கொஞ்சமும் விளங்கவுமில்லை. வளைத்து வளைத்துப் பேசாமல் விஷயத்தைச் சுருக்கமாகச் சீக்கிரம் சொல்லும்; நேரமாகிறது" என்று அதட்டிக் கூறினார்.

கலியாணசுந்தரம், "மகாராஜாவே! விஷயத்தை எடுத்துச் சொல்ல என் மனம் கூசுகிறது; ஆனாலும், அதைச்

சொல்லாமலும் இருக்க முடியவில்லை. பூனா நகரத்திலுள்ள தங்கள் பட்டமகிஷியாருடைய விஷயத்தில் ஒரு பெருத்த அபவாதம் ஏற்பட்டு அது இந்த ஊர் முழுதும் பரவியிருக்கிற தாகத் தெரிகிறது. அதே முகாந்திரத்தை வைத்துக்கொண்டு தாங்கள் இந்தத் திருமணத்தை நடத்துகிறதாகவும் நான் கேள்வியுற்றேன். சில மனிதர்கள் கூடி ரகசியத்தில் சதியாலோசனை செய்து தங்களுடைய பட்டமகிஷியாரின் மேல் தாங்கள் சம்சயம் கொள்ளும்படியான நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்று முயற்சி செய்கிறார்கள் என்பது எனக்குத் தற்செயலாகத் தெரிந்தது. அந்தக் கருத்தோடு இந்த ஊரிலிருந்து பூனா நகரத்துக்கு நான்கு தாதிகள் அனுப்பப்பட்டார்கள். அவர்கள் அப்படிச் செய்யாமல் அந்த துன்மார்க்கத்திலிருந்து விலகிக் கொள்ளும்படி அவர்களுக்கு நல்ல புத்தி சொல்வதற்காக நான் அவர்களோடு கோலாப்பூர் வரையில் போனேன். அவர்கள் என்னுடைய விருப்பத்துக்கு இணங்கி வரவில்லை. அவர்கள் நல்ல அழகுடைய யௌவன ஸ்திரீகள். அவர்கள் என் புத்தியை மயக்கவும், அந்த விஷயத்தில் நான் அவர்களுடைய முயற்சிக்கு எவ்வித இடையூறும் செய்யாமல் அவர்களுக்கு வசப்பட்டிருக்கவும் முயன்று, பலவகையில் தந்திரம் செய்து பார்த்தார்கள். நான் அவர்களுடைய துர்ச் செய்கைகளுக்கு இணங்கவில்லை. ஆகையால், அவர்கள் எப்படியோ கோலாப்பூர் போலீஸ் கமிஷனருடைய தயவைச் சம்பாதித்துக் கொண்டு அவர் என்னை அக்கிரமமாகப் பிடித்துச் சிறைப்படுத்தி வைக்கும்படி செய்துவிட்டுப் பூனா நகரத்துக்குப் போய் விட்டனர். அதன்பிறகு சுமார் ஒன்றரை மாசகாலம் வரையில் நான் சிறைச்சாலையிலிருந்து ஒரு நண்பருடைய உதவியினால் தப்பித்துச் சமீபகாலத்தில்தான் இந்த ஊருக்கு வந்தேன். வந்த இடத்தில் கொஞ்சநேரத்துக்கு முன்னேதான் இந்தக் கலியாணச் செய்தியைக் கேள்வியுற்றேன். பட்டமகிஷி யாரின் எதிராளிகள் செய்த சூழ்ச்சி பலித்துவிட்டதென்ற எண்ணம் எனக்கு உண்டாயிற்று. எனக்குத் தெரிந்த

ரகசியங்களைத் தங்களிடம் தெரிவித்து அந்த மகாராணியாருக்கு அநியாயமாக ஏற்படப் போகும் பெருந்துன்பத்தை விலக்க வேண்டுமென்ற நினைவோடு நான் உடனே ஓடிவந்தேன். அவ்வளவுதான் என் வரலாறு, அதிகமொன்றுமில்லை'' என்றான்.

அதைக்கேட்ட இளவரசர் மிகுந்த வியப்பும் கலக்கமும் அடைந்து, ''என்ன ஆச்சரியம் இது! நான் நேரில் பார்த்துத் திருப்தி செய்து கொண்டு வந்திருக்கிறேன். நீர் பேசுவது வேடிக்கையாக இருக்கிறதே! அப்படி யாரையா சதியாலோசனை செய்து இங்கே இருந்து மனிதரை அனுப்பியது? அப்படி அனுப்பப்பட்ட மனிதர்கள் யார்? அந்த விஷயம் உமக்கு எப்படித் தெரிந்தது? சங்கதிகளை மூடாமல் நன்றாகத் திறந்து சொல்லுமேன்?'' என்றார்.

கலியாணசுந்தரம், ''இந்த ஊரில் அம்மணிபாயி என்று ஒரு ஸ்திரீ இருக்கிறாளாம். அவளும் அம்மன் பேட்டையிலுள்ள அன்னத்தம்மாள் என்ற ஒரு கூத்தாடிச்சியும் தங்கள் பட்டமகிஷியின் மேல் ஏதோ காரணமாகப் பகைமை கொண்டு அவர்களுக்குக் கெடுதல் செய்ய நினைத்து இப்படிப்பட்ட சதியாலோசனையை நிறைவேற்றி இருக்கிறார்கள், பூனாவிலுள்ள பட்டமகிஷியார் நான்கு தாதிமார்கள் அனுப்ப வேண்டுமென்று தங்கள் தாயாருக்குக் கடிதம் எழுதிக் கேட்டுக் கொண்டார்களாம். அவர்கள் விஷயத்தை அம்மணிபாயியிடம் தெரிவித்து, நல்லவர்களாகப் பார்த்து நான்கு தாதிகளை அழைத்து வரும்படி சொன்னார்களாம். தங்கள் பகையைத் தீர்த்துக் கொள்வதற்கு அதுவே சரியான சந்தர்ப்பமென்று நினைத்த அம்மணிபாயியும் அன்னத்தம்மாளும் யோசனை செய்து அன்னத்தம்மாளுடைய பெண்களை பூனாவுக்கு அனுப்பி, அவர்களைக் கொண்டு பட்டமகிஷியின் மேல் சந்தேகம் ஏற்படும்படியான சில காரியங்களைச் செய்ய வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார்கள். அன்னத்தம்

மாளின் பெண்களுள் சிவபாக்கியம் என்ற ஒருத்தி நிரம்பவும் நல்ல குணம் வாய்ந்தவள். ஆகையால், அவள் இதற்கு இணங்காமல் வீட்டைவிட்டு ஓடி வந்துவிட்டாள். பிறகு அன்னத்தம்மாளின் பெண்கள் மூவரும், அவளுடைய தங்கை ஒருத்தியும் அனுப்பப்பட்டாள். சிவபாக்கியம் என்பவள் இரண்டு தினங்கள் பட்டினி கிடந்து வழியறியாமல், காடு மேடுகளில் எல்லாம் அலைந்து கருந்தட்டாங் குடிக்குப் பக்கத்திலுள்ள பாதையில் மூர்ச்சித்துக் கிடந்தாள். நான் அவளைக் கண்டு எடுத்து வந்து மூர்ச்சை தெளிவித்து அவளுடைய வரலாற்றைத் தெரிந்துகொண்டு, அந்தப் பெண்களை நல்ல வழிக்குத் திருப்ப வேண்டுமென்ற கருத்தோடு புறப்பட்டுப்போய் செஞ்சிக்கோட்டையில் அவர்களைச் சந்தித்து அவர்களோடு கோலாப்பூர் வரையில் போனேன். அந்தப் பெண்கள் என்மேல் துர் ஆசை கொண்டு, என் மனதை மயக்க எவ்வளவோ பாடுபட்டார்கள். நான் அதற்கெல்லாம் இசைந்து வராமல், அவர்களுடைய சதி ஆலோசனையை நான் அறிந்துகொண்டிருப்பதாக வெளியிட்டு அவர்கள் அப்படிப்பட்ட அக்கிரமச் சதியாலோசனையில் இருந்து விலகிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அவர்கள் அதற்கு இணங்கிவராமல் தஞ்சையிலுள்ள தங்களுடைய தாயாருக்கு எழுதி அவளுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு முடிவு சொல்வதாகத் தெரிவித்து சில தினங்கள் வரையில் வாய்தா கேட்டுக் கொண்டார்கள். நான் அதற்கு இணங்கி இருந்தேன். சில தினங்களுக்குப்பிறகு அந்த ஊர் போலீசார் யாதொரு முகாந்திரமும் இன்றி என்னைப் பிடித்துச் சிறைப்படுத்தி விட்டார்கள். நான் சுமார் ஒன்றரை மாசகாலம் சிறைப்பட்டிருந்து ஒரு நண்பருடைய உதவியால் அவ்விடத்தி லிருந்து தப்பித்து நேற்றைய தினந்தான் இந்த ஊருக்கு வந்தேன். வந்து ஓர் அவசர காரியமாகத் திருவாரூருக்குப் போய் விட்டு இங்கே வந்த இடத்தில் இந்தக் கலியாணம் நடப்பதாகத்

தெரிந்தது. எனக்குத் தெரிந்த ரகசியத்தைத் தங்களிடம் தெரிவித்துப் போக வேண்டுமென்று இங்கே வந்தேன். என்னைச் சிறைப்படுத்திய பிறகு அந்தப் பெண்கள் பூனாவுக்குப் போய் ஏதோ சூது செய்து பட்டமகிஷியாரின் மேல் பொய்யான ஓர் அவதூறை உண்டாக்கி யிருக்க வேண்டுமென்றே தோன்றுகிறது. ஆகையால், தாங்கள் அந்த விஷயத்தை ஆய்ந்தோய்ந்து விசாரித்து உண்மையை நிச்சயமாகத் தெரிந்து கொள்வது அத்யாவசியமான காரியம். அதுவரையில் இந்தக் கலியாணத்தை நிறுத்தி வைப்பதே ஒழுங்கென நினைக்கிறேன்'' என்றான்.

அதைக்கேட்ட இளவரசரும், மற்ற ஜனங்களும் பெரிதும் கலக்கமும் குழப்பமும் அடைந்தனர். கலியாணசுந்தரம் கூறிய வரலாறு உண்மைபோலத் தோன்றியது. பட்டமகிஷி ஒருகால் குற்றமற்றவளாக இருப்பாளோ என்ற சந்தேகம் ஜனங்களது மனதில் உதித்தது. ஆகையால், அதற்குமேல் என்ன நடக்கும் என்பதை அறிய ஆவல்கொண்டவராய் சந்தடி செய்யாது நிசப்தமாயிருந்தனர். கலியாணசுந்தரம் தன்னைக் காட்டிக் கொடுக்காமல் தான் சம்பந்தப்பட்டிருப்பதை மறைத்து அம்மணிபாயி முதலியோரது பெயர்களை மாத்திரம் வெளியிட்டுப் பேசியதைக் கேட்ட பிறகே, பூர்ணசந்தி ரோதயத்தின் உயிர் திரும்பியது. அவளது திகில் ஒருவாறு விலக, துணிவும் உற்சாகமும் தோன்றின. ஆனாலும், முடிவு வரையில் தன் பெயர் வெளியில் வராமல் இருக்க வேண்டுமே என்ற கவலை மாத்திரம் நீங்காமல் இருந்தது. இளவரசர் தன்மீது கொண்டுள்ள அபாரமான மையலில் தன்னை வெறுத்து விலக்கவும் மாட்டார் என்றும், கலியாணத்தை நிறுத்தவும் மாட்டார் என்றும் ஒரு நிச்சயம் அப்போது அவளது மனதில் எழுந்து தைரியப்படுத்திக் கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் இளவரசர் பின்புறம் திரும்பித் திரைக்கு மறைவில் இருந்த அம்மணிபாயியை அழைக்க அவள் யாதொரு பிழையும் புரியாத

சுத்தமான மனுஷிபோலத் தோன்றி அடங்கி ஒடுங்கி வணக்கமாக இளவரசருக்கு எதிரில் வந்து நின்றாள்.

உடனே இளவரசர், ''என்ன அம்மணிபாயி! உன்னைப்பற்றி இந்த மனிதர் சொன்னதை எல்லாம் கேட்டாயா? என்ன சமாதானம் சொல்லுகிறாய்?'' என்றார்.

உடனே அம்மணிபாயி நிரம்பவும் துணிவாகக் கணீரென்று பேசத்தொடங்கி, ''மகாராஜாவே! இந்த மனிதர் என்னைப் பற்றிச் சொல்வது முழுதும் அபாண்டமான பொய். நான் ஒரு பாவத்தையும் அறியேன். பட்டமகிஷியாருக்கும் எனக்கும் எந்த விஷயத்திலும் பகைமையே இல்லை. அதுவுமன்றி, மகாராஜாவே நேரில் போய் விஷயங்களைக் கண்ணாரக்கண்டு முடிவு செய்துகொண்டு வந்திருக்கையில், என்னுடைய சதியாலோசனையில் கட்டுப்பாடாக இந்த விஷயம் கற்பனை செய்யப்பட்டது என்பது தங்களுக்கு எப்படியும் தெரியாமல் போயிருக்காது. சிலமாத காலத்துக்குமுன் பூனாவுக்கு அனுப்ப நான்கு தாதிப்பெண்கள் தேவையென்று பெரிய ராணியார் என்னிடம் தெரிவித்தது நிஜமே. எனக்குப் பழக்கமான அன்னத்தம்மாள் தன் பெண்களை அனுப்ப ஒப்புக் கொண்டாள். பெரியராணியார் அவர்களை அனுப்பினார்கள். ஆனால், அந்தப் பெண்களுள் சிவபாக்கியம் என்ற ஒருத்தி ஊருக்குப் புறப்படும் சமயத்தில் யாருக்கும் தெரியாமல் ஊரைவிட்டு ஓடிப்போய் விட்டாளாம். ஏனென்றால், அவள் யாரோ ஒரு யௌவன புருஷன்மேல் பிரியம்கொண்டு அவனைவிட்டுப் பிரிய இஷ்டப்படாமல் வீட்டைவிட்டே அந்த மனிதரிடம் ஓடிப் போய் விட்டதாகவும் பிறகு நான்காவது தாதியாகத் தன் தங்கையை அனுப்பியதாகவும் அன்னத்தம்மாள் என்னிடம் சொன்னாள். அந்த சிவபாக்கியம் இந்த மனிதரிடம் இருப்பதாக இவரே ஒப்புக்கொள்ளுவதிலிருந்து, அவள் மோகங்கொண்ட மனிதர் இவரே என்பது நன்றாகத் தெரிகிறது. அவள் தன்னுடைய தாயின்மேல் பகைமை கொண்டு இந்த மனிதரிடம்

பொய்யான தகவல்களைச் சொல்லி இருக்கலாம் என்று நினைக்கிறேன். அந்தப் பெண்களிடத்திலிருந்து அன்னத்தம் மாளுக்கு வந்த கடிதங்கள் இப்போதும் அம்மன் பேட்டையில் இருக்கலாம். அவர்கள் சாவதானமாகப் பூனாதேசம் போய் வேலையை ஒப்புக்கொண்டதாக எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதங்களை மகாராஜா வரவழைத்துப் பார்த்தால், உண்மை நன்றாக விளங்கிப்போம். அந்த மனிதரை அவர்கள் சிறைப்படுத்தி வைத்தார் என்பதும் கட்டுக்கதையாகத் தான் இருக்க வேண்டும். அதைப்பற்றியும், மகாராஜா கோலாப்பூரி லுள்ள போலீஸ் கமிஷனரை விசாரித்தால், இவர் சொல்வ தெல்லாம் பொய்யென்பது உடனே தெரிந்து போகு மென்று நினைக்கிறேன். இவர் இவ்வளவு தூரம் சொன்னாரே; முக்கியமான ஒரு விஷயத்தை இவர் விரிவாகச் சொல்ல வில்லையே. அந்தப்பெண்கள் பூனாவுக்குப் போய் அவ் விடத்தில் எவ்விதமான ஏற்பாடுகள் செய்ய உத்தேசித்தார்கள் என்ற விவரத்தை இவர் சொல்லவில்லையே. அவ்வளவு தூரத்திலுள்ள பூனாதேசத்தில் அரண்மனையிலுள்ள பட்ட மகிஷியார் துர்மார்க்கமாக நடந்து கொள்ளுகிறார்கள் என்பதை இந்த ஊரிலுள்ள மகாராஜா தெரிந்து கொள்ளும்படி அந்த அற்பத் தாதிப்பெண்கள் என்ன செய்ய முடியும்? இது யாராலாவது சாத்தியமான விஷயமா? இது கேழ்வரகில் நெய் ஒழுகுகிறது என்கிற கதைபோல இருக்கிறதே அன்றி வேறல்ல'' என்றாள்.

அதைக்கேட்ட இளவரசர் அவள் சொன்னதை உண்மையென்று நம்பி கலியாணசுந்தரத்தை நோக்கி, ''ஐயா! கேட்டீரா இந்த அம்மாள் சொன்னது? அந்தத் தாதிப்பெண்கள் பூனாவில் எவ்விதமான சூழ்ச்சிகள் செய்தார்கள்? அந்த விவரத்தைச் சொல்லும் பார்க்கலாம்'' என்றார்.

கலியாணசுந்தரம் கலக்கமும் லஜ்ஜையும் அடைந்தவனாய், ''மகாராஜாவே! அந்த விவரம் எதுவும் அவர்கள் அந்தப் பெண்ணினிடம் சொல்லவில்லை. ஆகையால் அது எனக்குத்

தெரியாது. ஆனால், அந்த சிவபாக்கியத்தைப் பற்றி இந்த அம்மாள் சொல்லும் அவதூறு முற்றிலும் பொய்யானது. அந்தச் சதியாலோசனைக்கு இணங்காமலேயே அவள் வீட்டை விட்டு வந்தாள். எனக்கும் அவளுக்கும் துன்மார்க்கமான சம்பந்தமே கிடையாதென்பதும், நான் கோலாப்பூரில் சிறையில் வைக்கப்பட்டதும் பிரமாணமான விஷயங்கள். எல்லா வற்றிற்கும் மகாராஜா இந்தக் கலியாண முகூர்த்தத்தை இப்போது நடத்தாமல் கொஞ்சகாலம் நிறுத்தி வைத்தால், நான் சொல்வதெல்லாம் உண்மையான வரலாறு என்று திருப்தி கரமாக ருஜுப்படுத்துகிறேன்'' என்று அழுத்தமாகவும் உறுதி யாகவும் கூறினான்.

அதைக்கேட்ட இளவரசர் ஏளனமாகப் புன்னகை செய்து, ''நீர் சொன்னதெல்லாம் தவறென்பதும் அந்த சிவபாக்கியத்தின் தூண்டுதலின் மேல் நீர் இப்படிச் செய்கிறீர் என்பதும் பரிஷ்காரமாகத் தெரிகிறது. இதில் முக்கியமான ஒரு விஷயம் இருக்கிறது. இந்த அம்மணிபாயியை நான் சிறு வயதிலிருந்து நன்றாக அறிவேன். இவளுக்குப் பட்டமகிஷியிடத்தில் பகை இருந்ததாகத் தெரியவே இல்லை. அப்படி இருந்தாலும், அவளை நான் விலக்கி வேறு கலியாணம் செய்து கொள்ளும் இந்தப் பெருத்த காரியத்தை நடத்தி வைக்கும்படியான சூழ்ச்சியை இந்த அம்மணிபாயி செய்ய அவ்வளவு கொடிய பகைமை உண்டாக யாதொரு முகாந்திரமும் இல்லை. அந்தப் பட்டமகிஷியை விலக்குவதால் இவளுக்கு யாதொரு லாபமும் இல்லை. ஆகையால், இவள் அவ்வளவு பிரமாதமான காரியம் செய்ய சிறிதும் ஏதுவில்லை. அதுவுமன்றி, நானே நேரில் பூனாவுக்குப் போய் அந்த பட்டமகிஷியின் தேக நிலைமையைப் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். வேறு எவ்விதமாகவும் நினைக்கக் கூடாதபடி அவ்வளவு தீர்மானமான ருஜுவை நான் என் கண்ணால் கண்டுவிட்டு வந்திருக்கிறேன். அந்த விஷயத்தில் கொஞ்சமும் சந்தேகத்திற்கு இடமே இல்லை.

ஆனாலும், நீர் என்ன சொல்லுகிறீர் என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தினால் நான் இவ்வளவு தூரம் பொறுத்தேன். நீர் சொல்வதில் ருஜுவான விஷயம் எதுவுமில்லை. உம்முடைய சொல்லை மதித்து இந்தக் கலியாணத்தை நிறுத்திவைப்பது அநாவசியமான காரியம். நீர் இனி போகலாம். அடே சேவகர்களே! இந்த மனிதரை அழைத்துக்கொண்டு போய் அரண்மனைக்கு வெளியில் விட்டு வாருங்கள்'' என்று கூறிக் கண்டிப்பாக உத்தரவு பிறப்பித்தார்.

உடனே பாராக்காரர்கள் இருவரும் இரண்டு பக்கங்களிலும் நெருங்கிவந்து கலியாணசுந்தரத்தின் இரண்டு கைகளையும் பிடித்து இழுக்க ஆரம்பித்தனர்.

அப்போது பக்கத்தில் நின்ற அம்மணிபாயி, ''மகாராஜாவே! இந்த நகரத்து மகா ஜனங்களெல்லோரும் கூடியிருக்கும் இந்த அபாரமான ஸதசின் முன்னிலையில் இந்த மனிதர் என்னைப் பற்றி நிரம்பவும் அவதூறான வார்த்தைகள் சொல்லியி ருக்கிறார். இதனால் என்னுடைய யோக்கியதையைப் பற்றி எல்லோரும் இழிவாக மதிக்க இடம் ஏற்படுகிறது. பெரிய இடத்து விஷயத்தில் நான் இப்படிப்பட்ட சதியாலோசனை செய்ததாகச் சொல்வது சாதாரணமான சங்கதியல்ல; இது நிரம்பவும் விபரீதமான விஷயம். ஆகையால், மகாராஜா இந்த மனிதரைச் சுலபத்தில் விடுவது நியாயமல்ல. இந்தக் கலியாணம் நிறைவேறி, மகாராஜாவுக்கு அவகாசம் கிடைக்கிற வரையில் இந்த மனிதர் எங்கேயும் தப்பிப்போய் விடாமல் காவல் போட்டு இவரைப் பந்தோபஸ்தாக வைக்க உத்தரவாக வேண்டும். இந்த விஷயத்தைத் தக்க சாட்சியங்களைக்கொண்டு விசாரித்து நான் சொல்வது சரியா, இவர் சொன்னது சரியா என்பதை நிச்சயித்து குற்றவாளிக்குத் தக்க தண்டனை விதிக்க வேண்டும்'' என்று பணிவாகக் கேட்டுக் கொண்டாள்.

அதைக்கேட்ட இளவரசர், ''சரி; அது நியாயமான வேண்டுகோள்தான். பாராக்காரர்களே! இந்த மனிதரைக்

கொண்டுபோய் பந்தோபஸ்தான ஓரிடத்தில் வைத்துக் காவல் போடுங்கள். இவர்களுடைய வழக்கை நாம் பிந்தி விசாரிப்போம்'' என்று கூறிவிட்டு மறுபடியும் திருமாங்கலியத்தைக் கையிலெடுத்துக்கொண்டு கீழே இறங்கினார். அம்மணிபாயி தனது மோசம் வெற்றியடைந்து விட்டதாக எண்ணி ஆனந்தபரவசம் அடைந்தவளாய் அவ்விடத்தை விட்டுச் சிறிது பின்னால் விலகி நின்றாள். இளவரசர் செய்த தீர்மானம் சரியானதென்று எல்லா ஜனங்களும் எண்ணியதன்றி திருமாங்கலிய தாரணம் அநாவசியமாக அவ்வளவு நேரம் தாமதப்பட்டுப் போகும்படி செய்ததைப் பற்றிக் கலியாண சுந்தரத்தின் மீது வெறுப்பும், ஆத்திரமும் அடைந்தவராய், திருமாங்கலிய தாரணத்தை ஆவலோடு எதிர்பார்த்தனர். பூர்ணசந்திரோதயம் மாறி மாறி இன்பமும் துன்பமும் கவலையும் சந்தோஷமும் அடைந்தவளாய்த் தத்தளித்திருந்தாள். தன்னைக் காட்டிக்கொடுக்காமல் கலியாணசுந்தரம் நிரம்பவும் பெருந்தன்மையாக நடந்து கொண்டதைப் பற்றியும் யாதொரு இடையூறுமின்றித் தனது கலியாணம் நிறைவேறப் போவதைப் பற்றியும் அவள்மிகுந்த மகிழ்ச்சி அடைந்தாள். ஆனாலும் கலியாணசுந்தரம் அம்மணிபாயியினால் இழிவுபடுத்தப்படுவதைக்காண, அவளது மனம் புண்பட்டு மாழ்கியது. ஆனால், தான் அந்தச் சந்தர்ப்பத்தில் எதையும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் மௌனமாக இருப்பதே உசிதமானதென்று சாந்தமாக வீற்றிருந்தாள்.

பாராக்காரர்களால் பலவந்தமாக இழுக்கப்பட்ட கலியாண சுந்தரம் அதற்குமேல் தான் என்ன செய்வதென்பதை அறியாமல் முற்றிலும் கலவரமும் சங்கடமும் அடைந்தவனாய் முடிவாக இளவரசரைப் பார்த்தான். அந்தச் சமயத்தில் அவர் திருமாங்கலிய தாரணத்தை நிறைவேற்றும் பொருட்டு பூர்ணசந்திரோதயத்திற்கு முன்னால் போய்விட்டார். அதைக் கண்ட கலியாணசுந்தரம் அதற்கு மேலும் தான் சும்மா இருந்து,

அந்த அக்கிரமம் நடைபெறும்படி பார்த்திருப்பது கொடிய பாவமென்றும், இனி தான் எப்படியும் கமலத்தைக் காட்டிக் கொடுத்தாவது அதைத் தடுக்க வேண்டுமென்றும் தீர்மானித்துக் கொண்டவனாய், "ஏ கமலம்! கமலம்! அநியாயமாக ஒருவருடைய வயிறு எரியச் செய்து நீ பெரிய பதவியை அடைந்தால், அந்த வதை உன்னை ஒருநாளும் விடாது. நீ அடையும் பதவியும் நீடித்து நிற்காது. ஆகையால், இந்த அக்கிரமத்தில் இறங்காதே; இவ்வளவோடு விலகிக்கொள். நீ இந்தப் பட்டமகிஷியின் ஸ்தானத்தை அடைந்து மற்ற சாதாரண ஸ்திரீகள் அனுபவிக்காத எந்த அபாரமான புதிய சுகத்தை அனுபவிக்கப் போகிறாய்? ஒன்றுமில்லை. ஆறு நிறையத் தண்ணீர் போனாலும், நாய் நக்கியே குடிக்க வேண்டுமென்று ஜனங்கள் சொல்வதுண்டு. அதுபோல, இந்தப் பூலோகத்தில் ஒருவனிடம் அபாரமான செல்வமும், இன்பங்களும் சுகங்களும் கணக்கிலடங்காமல் நிறைந்து கிடந்தாலும் அவனுடைய பஞ்சேந்திரியங்களின் சக்தி அற்ப மானதே. ஆகையால், அவன் எல்லாவற்றையும் அனுபவிக்க முடியாது. அவன் அனுபவிக்கக் கூடியது அற்பத்திலும் அற்பமானதே. நீ பட்டமகிஷி பதவியிலிருந்தாலும், வேறு சாதாரணமான இடத்திலிருந் தாலும், உனக்குத் தேவையானவைகளும் நீ அனுபவிக்கக்கூடிய சுகங்களும் எப்படியும் உனக்குக் கிடைக்கும். ஆகையால், பேராசை என்ற பேயினால் மதியை இழந்து அக்கிரமத்தில் இறங்கிப் பெரிய பாவ மூட்டையைச் சம்பாதித்துக் கொள்ளாதே, வேண்டாம். இவ்வளவோடு நின்றுவிடு. உன் தங்கை ஷண்முகவடிவின் குணத்தைப் பின்பற்றி நடந்துகொள். உன் தங்கை எவ்விடத்திலும் காணப்படாமல் எங்கேயோ அபாயத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாள். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் நீ அவளைப் பற்றி வருந்தி, அவளைத் தேடவேண்டிய முயற்சிகளைச் செய்ய வேண்டும். அதைவிட்டு இப்படிப்பட்ட கலியாணச் சடங்கில் உடன்பட்டிருப்பது அனுசிதமான காரியம். நன்றாக யோசனை செய்துபார்; அவசரப்படாதே" என்று வாய்விட்டுப் பலமாகக் கூவினான்.

அந்தச் சமயத்தில் மேளவாத்தியங்கள் மறுபடியும் பிரமாதமாக கோஷிக்கத் தொடங்கின ஆதலால், கலியாண சுந்தரம் கூறிய வார்த்தைகள் அவனுக்குப் பக்கத்திலிருந்த சிலரைத் தவிர, இளவரசர் பூர்ணசந்திரோதயம் முதலிய மற்ற எவர் செவிக்கும் எட்டவில்லை. பாராக்காரர்கள் கலியாண சுந்தரத்தின் வாயை அடக்கி முன்னிலும் பலமாக அவனை இழுத்துக் கொண்டு சென்றனர். ஆனால், அந்தச் சந்தர்ப்பத்தில் அவ்விடத்தில் இன்னொரு புதிய சம்பவம் நேர்ந்தது. கலியாண சுந்தரம் கடைசியாகக் கமலத்தை விளித்துப் பேசிய இடம் ஜெமீந்தார்கள் உட்கார்ந்திருந்த நாற்காலிகளுக்கு நிரம்பவும் சமீபமாக இருந்தது ஆகையால், அவ்விடத்தில் ஒரு நாற்காலி யில் உட்கார்ந்திருந்த பவானியம்பாள்புரம் ஜெமீந்தாரான நமது **நீலமேகம்பிள்ளை** யின் செவிகளில் கலியாணசுந்தரம் கூறிய சொற்கள் விழுந்தன.

முன்னோர் அதிகாரத்தில் நீலமேகம் பிள்ளை திருவாரூருக்குப் போய்விட்டுத் திரும்பித் தஞ்சைக்கு வந்து அம்மணிபாயியின் வீட்டிற்கும் போலீஸ் இன்ஸ்பெக்டரது வீட்டிற்கும் மருங்காபுரி ஜெமீந்தாரினது மாளிகைக்கும் சென்றிருந்த வரலாறு விரிவாகக் கூறப்பட்டதல்லவா; அதன்பிறகு இன்ஸ்பெக்டர், லீலாவதி ஷண்முகவடிவு கமலம் ஆகிய மூவரையும் தேடி மீட்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் எல்லாம் தாமே தீவிரமாய்ச் செய்வதாக ஏற்றுக்கொண்டு நீலமேகம்பிள்ளையை அவரது மாளிகைக்கு அனுப்பி வைத்தார். அதற்குமுன் அவர் தமது தந்தை காணாமல் போன காலத்தில் அடைந்த துயரத்தையும், கவலையையும் காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிகமாக விசனித்துக் கவலையுற்றுத் தமது தங்கை மார்களும், லீலாவதியும் காணாமல் போனதைப் பற்றிய ஏக்கத்திலேயே ஆழ்ந்து கிடந்தார். அந்தச் சமயத்தில் இளவரசருக்கும் பூர்ணசந்திரோதயத்திற்கும் திருமணம் நடக்கப் போவதாக எழுதப்பட்டிருந்த கலியாணப் பத்திரிகை எல்லா

ஜெமீந்தார்களுக்கும் அனுப்பப்பட்டதுபோல அவருக்கும் அனுப்பப்பட்டது. ஆகையால், அதைப் பார்த்தவுடன், நீலமேகம் பிள்ளைக்கு இளவரசர் மீது பெருத்த அருவருப்பும் கோபமும் உண்டாயிற்று. அவர் பாலியப் பருவமடைந்தது முதல் இறக்கும் காலம் வரையிலும் புதிய புதிய மனைவிமாரை மணந்துகொண்டுதான் இருப்பாரோ என்று தமக்குத் தாமே ஏளனமாக நினைத்துக் கொண்டார். அவர் தமது தந்தையின் உயிலைப் படித்த காலம் வரையில் இளவரசர் மீது பகைமை கொள்ள எவ்விதமான ஏதுவுமில்லாதிருந்தது. ஆகையால், அவர் இளவரசரிடம் சாதாரணமான நட்பாகவே இருந்து வந்தார். அவர் தமது தாய் இறப்பதற்குக் காரணமாயிருந்த பெருந்துரோகி என்ற செய்தியை உயிலின் மூலமாக அவர் அறிந்த பின்னர், தாம் அவர் முகத்திலும் இனி விழிக்கக் கூடாது என்ற ஓர் உறுதி அவரது மனதில் ஏற்பட்டிருந்தது. ஆனால், திருமணப் பத்திரிகையைப் பார்த்தவுடனே தான் முகூர்த்தத்திற்குப் போவதா இல்லையா என்ற கேள்வி அவரது மனதில் தோன்றி வதைத்தது. அந்தத் தேசத்து மகாராஜனால் கொடுக்கப்பட்ட ஜெமீன் சமஸ்தானத்தின் தலைவராதலால், தாம் அவரிடம் நேருக்கு நேர் பகைமை காட்டினால், அவர் ஒருகால் தமது சமஸ்தானத்தையே அபகரித்துக் கொண்டாலும் கொள்ளலாம் என்ற ஓர் எண்ணமும் உண்டாயிற்று. அதுவுமன்றி, அதுகாறும் தாம் அவரோடு சிநேகப்பான்மையாக இருந்துவிட்டு அப்போது திடீரென்று முக்கியமான சந்தர்ப்பத்தில் போகாமல் இருந்து விட்டால், இளவரசரும் மற்றவரும் அதைப்பற்றிப் பலவகையில் சந்தேகப்பட்டு வம்பு பேசுவார்கள் என்று நினைத்தவராய் ஒப்புக்குச் சிறிதுநேரம் கலியாணத்தில் கும்பலோடு கும்பலாகத் தாம்போய்விட்டு வந்து விடுவதில் யாதொரு கெடுதலும் இல்லையென்று தீர்மானித்துக் கொண்டவராய் அவர் புறப்பட்டுக் கலியாண மண்டபத்திற்கு வந்து ஜெமீந்தார்களுக்குப் போடப்பட்டிருந்த ஆசனங்கள் ஒன்றில் அமர்ந்திருந்தார். ஆனால், அவர் அன்னிய ஸ்திரீகளை

ஏறெடுத்துப் பார்ப்பது பாவச் செய்கை என்ற கொள்கையை உறுதியாகக் கடைப்பிடிப்பவர். அதுவுமன்றி, அப்படித்தாம் பார்ப்பது மாத்திரம் பாவச்செய்கை அல்ல ஆனாலும், அதனால் தமது மனம் கெட்ட எண்ணங்கொண்டு தாம் துன்மார்க்கமான நடத்தையில் இறங்கும்படி தூண்டும் ஆதலால், ஒவ்வொருவரும் அப்படி முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்வது, பின்னால் தாம் செய்யக்கூடிய பாவச் செயல்களையும் தமக்கு நேரக் கூடிய எண்ணிறந்த துன்பங்களையும் தடுத்தமாதிரியாவது இருக்கும் என்பதும் அவரது எண்ணம். ஆகவே, நீலமேகம்பிள்ளை கண் கொள்ளா வனப்போடு தேஜோமயமாக வீற்றிருந்த பூர்ணசந்திரோதயத்தை நிமிர்ந்து பார்க்காமலேயே இருந்தார். ஆனால், திருமாங்கலிய தாரணம் நடக்கப்போன தருணத்தில் கலியாணசுந்தரம் திடீரென்று தோன்றி இளவரசரோடு வாக்குவாதம் செய்த காலத்தில் நீலமேகம்பிள்ளை நிரம்பவும் ஆவலோடும் சிரத்தையோடும் அந்த விஷயத்தைக் கவனித்துக் கேட்கத் தொடங்கினார். முடிவில் அம்மணிபாயி எதிரில் வந்து நின்றபோது, தானும் கருப்பாயியும் அவளது வீட்டிற்குப் போய் அவளைச் சந்தித்துப் பேசிய நினைவு உண்டாயிற்று. அவள் கமலத்தையும் ஷண்முகவடிவையும் வஞ்சித்தவள் என்ற எண்ணம் மாத்திரம் அவரது மனதில் உண்டாயிற்றே அன்றி, அவள் பட்டமகிஷிக்குப் பதிலாக கமலத்தை இளவரசருக்குக் கலியாணம் செய்து வைக்க சூழ்ச்சிகள் செய்து கொண்டிருக்கிறாள் என்ற யோசனை தோன்றவில்லை. அவள் ஷண்முகவடிவை மருங்காபுரி ஜெமீந்தாருடைய மாளிகையில் கொண்டுபோய் விட்டதுபோல, கமலத்தையும் வேறே யாராவது பெரிய மனிதரிடத்தில் கொண்டு போய் விட்டிருப்பாள் என்ற நினைவையே அவர் கொண்டிருந்தார். ஆதலால், கமலமே அப்போது சிம்மாசனத்தில் உட்கார்ந்தி ருப்பவள் என்ற சம்சயம் ஏற்படவில்லை ஆகையால், அவர் கடைசி வரையில் கமலத்தைப் பார்க்காமலேயே இருந்தார்.

ஆனால், முடிவில் பாராக்காரனால் இழுத்துக்கொண்டு போகப்பட்ட கலியாணசுந்தரம் பூர்ணசந்திரோதயத்தைப் பார்த்து கமலமென்று விளித்ததையும், அவளது தங்கையை ஷண்முகவடிவென்ற பெயரால் குறித்ததையும் கேட்கவே, நீலமேகம்பிள்ளை திடுக்கிட்டு நிமிர்ந்து பூர்ணசந்திரோதயத்தின் முகத்தை உற்றுப் பார்த்தார். பார்க்கவே, சில மாதங்களுக்கு முன்னர் சோமசுந்தரம் பிள்ளையைத்தேடிக் கொண்டு தமது மாளிகைக்கு வந்த பெண்ணைப் போலவே அவள் காணப்பட்டாள். அவள் அப்போது ராஜஸ்திரீ போல நேத்திராநந்தமாக அலங்கரித்துக் கொண்டு அடியோடு புது மனுஷியாக மாறிப் போயிருந்தாலும் தாம் அவளை ஏற்கெனவே பார்த்திருந்ததன் அடையாளம் நன்றாகத் தெரிந்தது. அந்த விஷயத்தில் அம்மணிபாயி சம்பந்தப்பட்டிருந்ததாலும், அவளது பெயரும், ஷண்முக வடிவின் பெயரும் ஒத்துப் போயின. ஆதலால் அவளே தமதுமூத்த தங்கையான கமலம் என்பது அவருக்குச் சந்தேகமறத் தெரிந்தது.

ஆகவே, அவர் தூக்கத்திலிருந்து திடுக்கிட்டு விழித்து எழுகிறவர் போலத் தமது ஆசனத்திலிருந்து எழுந்தார். அந்தச் சமயத்தில் இளவரசர் பூர்ணசந்திரோதயத்தின் கழுத்தில் திருமாங்கலியத்தைக் கட்டக் குனிந்தார். ஆகையால், அதைக் காணவே, நீலமேகம் பிள்ளையின் மனம் பதறித் துடித்தது. தேகம் கட்டிலடங்காமல் பறந்தது. தாம் எவ்வளவு அதிக வேகமாய் ஓடினாலும், இளவரசர் திருமாங்கலிய தாரணம் செய்வதற்குள் அவரிடம் போய்ச் சேர முடியாதென்ற எண்ணம் தோன்றியது. ஆனால், தமது தந்தையின் உயிலிலிருந்த ரகசியத்தை அவ்வளவு பெரிய ஸதசில் பகிரங்கப்படுத்தவும் அவரது மனம் இடந்தரவில்லை. ஆகவே, அவர் தம்மை மறந்து இளவரசரிருந்த இடத்தை நோக்கி நடந்தபடி, ''மகாராஜாவே! நிறுத்துங்கள்; நிறுத்துங்கள்; பொட்டைக் கட்ட வேண்டாம்'' என்று ஓங்கிக் கூச்சலிட்டார். அப்போது சங்கீத கோஷம்

பிரமாதமாக இருந்தது. ஆகையால், அவர் தமது முழு வல்லமையையும் உபயோகித்துப் பெரும் கூச்சல் செய்யத் தொடங்கினார். ஆதலால், அவரது குரலோசை அந்தக் கலியாண மண்டபம் முழுதும் நன்றாகக் கேட்டது. இளவரசர் முதலிய எல்லோரும் மறுபடியும் திடுக்கிட்டு ஆச்சரியமடைந்து, அந்தக் குரல் உண்டான திக்கில் சடக்கென்று திரும்பிப் பார்த்தனர். கலியாணசுந்தரமே பாராக்காரர்களின் பிடியிலிருந்து தப்பித்து ஓடிவந்து மறுபடியும் அவ்வாறு கூக்குரலிடுகிறான் என்றே எல்லோரும் முதலில் நினைத்தனர். ஆதலால் அவன்மீது எல்லோரும் பெருத்த சீற்றமும், பதைப்பும் கொண்டவராய்த் தாறுமாறாகப் பேசத் தொடங்கினர். "இந்தப் பைத்தியக்காரனை அடியுங்கள், உதையுங்கள், வெட்டுங்கள், குத்துங்கள், துகையுங்கள், கொல்லுங்கள்" என்று எண்ணிறந்த குரல்கள் உண்டாயின. ஆனால், பாராக்காரர்கள் கலியாணசுந்தரத்தைக் கெட்டியாகப் பிடித்துத் தூரத்தில் கொண்டுபோய் விட்டதையும் ஜெமீந்தார்களின் ஆசனங்களிலிருந்து புதிதாக இன்னொருவர் அவ்வாறு கூச்சலிட்டுக்கொண்டு இளவரசரிடம் சென்றதையும் கண்ட ஜனங்கள் திடுக்கிட்டு சந்தடி செய்யாமல் அடங்கிப் போயினர். மேளவாத்தியங்களின் முழக்கம் முதலிய எல்லா ஓசையும் ஓய்ந்துவிட்டது. ஆகையால், அந்த மண்டபம் முழுதும் நிசப்தமே குடிகொண்டது. பூர்ணசந்திரோதயம் அம்மணிபாயி முதலியோரும் திடுக்கிட்டு மறுபடி கலியாணம் நடைபெறாமல் தடுத்துக்கொண்டு வந்த மனிதர் இன்னார் என்பதையும் என்ன காரணத்தினால் அவரும் அப்படித் தடுக்கிறார் என்பதையும் நன்றாகத் தெரிந்துகொள்ள மாட்டாமல், பெருங் குழப்பமும் கலக்கமும் அடைந்து பிரமித்து ஸ்தம்பித்து நீலமேகம் பிள்ளையை உற்று நோக்கினர். இளவரசரது நிலைமையோ முற்றிலும் கட்டிலடங்காததாக இருந்தது. தாம் அரும்பாடுபட்டு பூர்ணசந்திரோதயத்தின் பிரியத்தையும் சம்மதியையும் பெற்று, வகை வகையான கலியாண ஏற்பாடுகள் செய்து, அந்த சுபகாரியத்தை நடத்த யத்தனிக்கையில், முதலில் ஒரு மனிதன்

தோன்றித் தடுத்து அநாவசியமான காலஹரணம் செய்ததுபோல மறுபடியும் இன்னொருவன் தோன்றுகிறானே என்ற அபாரமான ஆத்திரமும், கொதிப்பும் பிறந்தன. முதலில் வந்தவனிடம் தாம் லலிதமாகப்பேசியதனால், இன்னொருவன் துணிவுகொண்டு, அதே விஷயத்தில் பரிந்து பேசப் போகிறான் என்றும், ஆகையால், இரண்டாவது மனிதன் எவனாக இருந்தாலும் அவனுக்கு முகங்கொடுத்துப் பேசாமல் அவனை உடனே அப்புறப்படுத்த வேண்டுமென்றும் தீர்மானித்துக்கொண்ட இளவரசர், "அடே! பாராக்காரர்களா! இதோ ஓடிவரும் இந்தப் பைத்தியக்காரனையும் பிடித்து உடனே அப்புறப்படுத்துங்கள்" என்றார்.

அவர்பேசி வாய்மூடுமுன் வேறு நாலைந்து பாராக்காரர்கள் குபீரென்று பாய்ந்து நீலமேகம்பிள்ளையைப் பிடித்து அப்பால் இழுக்கத் தொடங்கினர். இளவரசர் மறுபடியும் பூர்ணசந்திரோதயத்தண்டை நெருங்கி மாங்கல்யத்தைக் கழுத்தில் இணைக்க முயன்றார்.

நீலமேகம்பிள்ளை முன்னிலும் அதிக பலமான குரலில் ஓங்கிக் கூச்சலிட்டு, "மகாராஜாவே! கொஞ்சம் பொறுங்கள். நான் தங்களுடைய காதில் ரகசியமாக ஒரே ஒரு வார்த்தை சொல்லுகிறேன். அதைக்கேட்டுக்கொண்டு, அதற்குமேல் யுக்தமானால் நீங்கள் தாலி கட்டலாம்" என்றார்.

அதைக்கேட்ட இளவரசர் மறுபடியும் திரும்பி நின்று அந்த மனிதர் யாரென்று உற்றுப் பார்த்தார். பார்க்கவே அவர் நீலமேகம் பிள்ளையென்று உணர்ந்தார். அவரது தாயை வஞ்சித்த நினைவும், அதே காரணத்தினால் அவள் இறந்து போன நினைவும், எப்போதும் மாறாமல் இளவரசரது மனதில் இருந்து வந்தன ஆதலால், அவர் எப்போதும் நீலமேகம் பிள்ளையிடம் மட்டற்ற வாஞ்சையோடு நடந்து வந்தவர். ஆதலால், அப்போது வந்தவர் நீலமேகம்பிள்ளை என்பதை உணரவே அவரிடம் தாம் அதிகமான கண்டிப்பும்

நிர்த்தாக்ஷிணியமும் காட்டக் கூடாதென்று நினைத்தவராய், ''என்ன நீலமேகம் பிள்ளை! நீர் கூடவா அறியாத குழந்தை மாதிரி இப்படி நடந்து கொள்ளுகிறது. இப்போது வந்துவிட்டுப் போன மனிதன் பைத்தியக்காரன் போல இருக்கிறது. அவன் சொன்னதைக் கேட்டு நீரும் இப்படி நடந்து கொள்ளலாமா? என் காதில் நீர் என்ன ரகசியம் சொல்லப் போகிறீர்? அதை அங்கிருந்தபடியே சொல்லுகிறதுதானே! இதில் ரகசியம் என்ன இருக்கிறது? பூனாதேசத்து சங்கதிதான் ஊர் முழுதும் அடிபட்டுக் கிடக்கிறதே!'' என்றார்.

அதைக்கேட்ட நீலமேகம்பிள்ளை ஒருவாறு கிலேச மடைந்தவராய், ''மகாராஜாவே! இப்போது இங்கே வந்து விட்டுப் போனவருக்காகப் பரிந்துகொண்டு நான் பேசவர வில்லை. பூனா தேசத்திலுள்ள பட்டமகிஷியாருடைய விஷயமும் எனக்கு அவ்வளவாகத் தெரியாது. இப்போது வந்து பேசிய மனிதர் குறித்த விஷயங்களுக்குக் கொஞ்சமும் சம்பந்தமில்லாத இன்னொரு முக்கியமான காரணத்தினால் நான் இந்தக் கலியாணத்தைத் தடுக்கிறேன். நான் சொல்லப் போகும் ரகசியத்தை இத்தனை ஜனங்களுக்கும் எதிரில் சொல்வது தங்களுக்குத்தான் பெருத்த இழிவாக இருக்கும். அதற்காகவே நான் யோகிக்கிறேன். தாங்கள் வருத்தப்படுவதில்லை என்று சொன்னால், நான் விஷயத்தை வெளியிடத் தடையில்லை'' என்றார்.

தமக்கு இழிவு ஏற்படுமென்று நீலமேகம்பிள்ளை சொன்னது இளவரசரது மனதில் சுருக்கென்று தைத்தது. அத்தனை ஜனங்களுக்கும் எதிரில் நீலமேகம்பிள்ளை தம்மிடம் மரியாதைக் குறைவாக நடந்துகொள்ளுகிறார் என்று நினைத்த இளவரசர் நிரம்பவும் ஆத்திரமடைந்து இறுமாப்பாகப் பேசத் தொடங்கி, ''ஓகோ! அப்படியா! இவர்களுக்கு முன்னால் விஷயத்தைச் சொன்னால் எனக்கு இழிவை உண்டாக்கக்கூடிய அப்படிப்பட்ட அபூர்வமான செய்தி என்ன ஐயா! நீர் நம்மோடு

பழகிய மனிதராயிற்றே என்றும், பெரிய மனிதருடைய புத்திரராயிற்றே என்றும், நான் உம்மிடம் பிரியமாக நடந்து கொண்டால், அதற்குப் பிரதியாக நீர் தாறுமாறாகப் பேசுகிறீரே! எனக்கு உம்முடைய ரகசியமும் வேண்டாம். உம்முடைய தயவும் வேண்டாம். நீர் முதலில் இந்த மண்டபத்தைவிட்டு வெளியில் போம். உம்முடைய ரகசியத்தை நான் பிற்பாடு சாவகாசமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்'' என்று முடிவாகவும் கடுகடுத்த முகத்தோடும் கூறிவிட்டு மாங்கல்யமும் கையுமாக மறுபடியும் பூர்ணசந்திரோதயத்தண்டை நெருங்கினார். அவரது சொற்களைக் கேட்ட பாராக்காரர்கள் நீலமேகம்பிள்ளையை முன்னிலும் அதிக வலுவாகப் பிடித்திழுக்கத் தொடங்கி னார்கள். அவர் சிறிது நேரம் பொறுக்கும்படி அவர்களிடம் நயந்து வேண்டிக்கொண்டு திரும்பவும் இளவரசரைக் கூப்பிட்டு, ''மகாராஜாவே! தாலி கட்ட வேண்டாம்; உங்கள் குலகுருவின்மேல் ஆணையிட்டுத் தடுக்கிறேன். அந்தக் காரியம் செய்ய வேண்டாம். செய்தால் நீங்கள் பெருத்த பாவத்துக்கு ஆளாக வேண்டும்'' என்றார்.

நல்ல சுபவேளையில் அவர் ஆணையிட்டுத் தடுத்ததைக் கேட்ட ஜனங்களெல்லோரும் கோபத்தினால் பதறித் துடித்தனர். ஆனாலும், நீலமேகம்பிள்ளை பெருத்த சமஸ்தானாதிபதியின் புத்திரரென்ற மதிப்பினாலும் அச்சத்தினாலும், எல்லோரும் ஒருவாறு தங்களை அடக்கிக்கொண்டு அவர் அகாரணமாக ஏன் அப்படிப்பட்ட பிடிவாதம் செய்கிறார் என்று நினைத்துப் பெரிதும் வியப்புற்று பிரமித்திருந்தனர். நீலமேகம்பிள்ளை ஆணையிட்டுத் தடுத்ததைக் கேட்ட இளவரசர் ரெளத்திரா காரமான கோபம் கொண்டு அடக்கவொண்ணாத ஆத்திரத் தோடு திரும்பி நீலமேகம்பிள்ளையைப் பார்த்து உருட்டி விழித்து, ''ஆகா! உமக்கு உண்மையில் பைத்தியம் பிடித்திருக்க வேண்டுமென்றே நினைக்கிறேன், இல்லா விட்டால், சுய அறிவோடிருக்கும் எந்த மனிதனாவது, இப்படிப்பட்ட

சுபகாரியம் நடக்கும்போது ஆணையிட்டுத் தடுப்பானா? ஓய் நீலமேகம்பிள்ளை! எனக்கு உம்மோடு அதிகமாகப் பேசிக் காலஹரணம் செய்ய நேரமில்லை. விஷயத்தைச் சொல்லப் போகிறீரா? இல்லாவிட்டால், என் னுடைய கோபத்துக்குப் பாத்திரராகப் போகிறீரா? ஒரே வார்த்தையில் பதில் சொல்லும்'' என்றார். உடனே நீலமேகம்பிள்ளை நயமாகப் பேசத் தொடங்கி, ''மகாராஜாவே! அந்த ரகசியத்தை வெளியிடுவது ஒரு பிரயாசையான காரியமல்ல. ஒரு நொடியில் விஷயத்தை வெளியிட்டு விடுவேன். அப்படிச் செய்தால், அதனால் தங்களுக்கு அவமானம் ஏற்படுமென்று நினைத்தே, நிரம்பவும் ஆழ்ந்து யோசனை செய்து நான் மூடி மூடிப் பேசுகிறேன். நான் தங்களுக்குச் சமீபத்தில் வந்து ரகசியமாக ஒரு வார்த்தை தங்களுடைய காதில் சொல்லும்படி தாங்கள் ஆக்ஞாபித்தால் அதுவே போதுமானது. அப்படிச் செய்ய மனமில்லாவிட்டால் இதோ என்னிடமிருக்கும் ஒரு முக்கியமான தஸ்தாவேஜியை அனுப்புகிறேன். அதையாவது படித்துப் பார்த்துவிட்டு அதன் பிறகு தங்கள் இஷ்டப்படி எதையும் செய்யலாம். தாங்கள் இப்போது ஆத்திரமிகுதியினால், அந்த ரகசியத்தை வெளியிடும் படி பிடிவாதமாகப் பேசுகிறீர்கள். அதை நான் வெளியிடும் பட்சத்தில் பிறகு தாங்கள் ''ஏன் இப்படிச் செய்தோம்'' என்று விசனித்து வருந்த நேரும் என்று கூறிய வண்ணம் தமது சட்டைப் பைக்குள் எப்போதும் பத்திரமாக வைத்திருந்த தமது தந்தையின் மரணாந்த உயிலைக் கையில் எடுத்தார்.

அவரது சொல்லைக்கேட்ட இளவரசர் நிரம்பவும் காலஹரணமாவதைக் கண்டு தமது பொறுமையை முற்றிலும் இழந்து பதற்றமாகப் பேசத்தொடங்கி, ''நீர் கையில் வைத்திருப் பதைப் பார்த்தால் அது ஒரு பெரிய புராணமாகத் தோன்றுகிறது. அதையெல்லாம் படித்துக்கொண்டிருக்க யாருக்கு நேரமி ருக்கிறது? அதை நான் இப்போது படித்துப் பார்க்க முடியாது. நீர் என்கிட்டே வந்து தான் அந்த விஷயத்தை வெளியிட

வேண்டுமென்ற அவசியமும் இருப்பதாக எனக்குத் தோன்ற வில்லை. நீர் எனக்கு ஏதோ அவமானம் வருமென்று பயமுறுத்தி நெல்லுக்குள் அரிசியிருக்கிறதென்ற ரகசியத்தை வெளியிடப் போகிறீர் போலிருக்கிறது. அக்கரையில்லை. விஷயம் எதுவாக இருந்தாலும் இருக்கட்டும். இஷ்டமானால் நீர் அவ்விடத்திலிருந்தே சொல்லும்; இல்லையானால், மரியாதையாக வெளியில் போய்விடும். நான் மிகுதிச் சடங்கை யும் நிறைவேற்றுகிறேன். உம்முடைய ஆணை வந்து என்னை விழுங்கிவிடாது. ஆகையால் சொல்லும் சங்கதியை'' என்றார்.

அதைக்கேட்ட நீலமேகம்பிள்ளை தாம் என்ன செய்வதென்பதை அறியாமல் கலங்கித் தயங்கி நின்றார்.

இரண்டொரு விநாடிநேரம் பொறுத்துப் பார்த்த இளவரசர், ''சரி; இந்த மனிதருக்காகக் காத்திருக்க முடியாது. நேரம் ஆகிறது ஐயா! புரோகிதரே! ஆகட்டும், நாம் மேல் காரியத்தை நடத்து வோம்'' என்று கூறி மறுபடியும் பூர்ணசந்திரோதயத்தண்டை நெருங்கினார்.

இளவரசர் பிடிவாதமாக நடந்துகொண்டதையும், அவர் திருமாங்கல்ய தாரணம் செய்ய யத்தனித்ததையும், பாராக் காரர்கள் தம்மைப் பிடித்துப் பலமாக இழுத்ததையும் கண்ட நீலமேகம்பிள்ளை அதற்கு மேலும் தாம் தயங்குவது உசிதமானகாரியமல்லவென்று நினைத்து, ''மகாராஜாவே! நான் எவ்வளவு தூரம் கெஞ்சி மன்றாடியும் கேட்காமல், நான் ஆணையிட்டதையும் மீறி பிடிவாதமாக அந்தக் காரியத்தைச் செய்யப் போகிறீர்கள். அந்தப் பெண்ணை நீங்கள் கலியாணம் செய்துகொள்ள உங்களுக்கு முறை இல்லை. அந்தப் பெண் உங்களுடைய சொந்தப்புத்திரி; எப்படி அவள் புத்திரி என்பதை வெளியிட வேண்டுமானாலும் அதையும் சொல்லத் தடை யில்லை'' என்றார்.

அவ்வாறு அவர் நிரம்பவும் பலமான குரலில் எல்லா ஜனங்களுக்கும் கேட்கும்படி மொழிந்தார் ஆதலால், அந்த விபரீதச் செய்தியைக் கேட்டு அங்கிருந்தோர் அனைவரும் திடுக்கிட்டு பிரமித்து ஆச்சரிய வசத்தராய் அப்படியே அசைவற்று ஸ்தம்பித்துப் போயினர். இளவரசருக்கு அதுவரையில் யாதொரு சந்ததியும் இல்லையென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாதலால், நீலமேகம்பிள்ளை கூறியது சொப்பனம் போலவும், கட்டுக்கதை போலவும் தோன்றியது. மற்றவரைப்போல இளவரசரும் திகைப்பும் ஆச்சரியமும் அடைந்தார். நீலமேகம்பிள்ளையின் தாயைத் தாம் வஞ்சித்ததன் பலனாக அவளது வயிற்றில் இரண்டு பெண் குழந்தைகள் பிறந்ததென்ற ஞாபகம் அப்போது அவருக்கு உண்டாகவில்லை. ஏனெனில், அந்தப் பெண்கள் சிறு குழந்தைகளாக இருக்கையிலேயே ரகசியமாகத் திருவாரூருக்கு அனுப்பப்பட்டுப் போயினர். ஆதலால், நெடுங்காலமாக அவர் இராமலிங்கம் பிள்ளையின் மாளிகைக்குப் போகவில்லை, ஆதலால், அவரது குடும்ப வரலாறு எதுவும் இளவரசருக்குத் தெரியாமலே போனது. ஆகையால், அந்தக் குழந்தைகளைப் பற்றிய நினைப்பே இளவரசர் மறந்துவிட்டார். அவர்களைத் தவிர, எவ்விடத்திலும் அவருக்கு வேறு குழந்தைகளே பிறக்க வில்லை. ஆதலால், நீலமேகம்பிள்ளை கூறியது அவருக்கும் புதுமையாகவும் அசம்பாவிதமாகவும் தோன்றியது.

உடனே இளவரசர் நீலமேகம்பிள்ளையைப் பார்த்து, ''ஐயா! நீலமேகம்பிள்ளை! இப்போது வந்துவிட்டுப் போனவர் சொன்ன விஷயமாவது கொஞ்சம் பொருத்தமும் அர்த்தமும் உடையதாக இருந்தது. நீர் சொல்லும் விஷயம் முற்றிலும் புதுமையாகவும் அசம்பாவிதமாகவும் இருக்கிறது. எனக்குச் சொந்தக் குழந்தைகள் இல்லை என்பது இந்த உலகத்துக்கே தெரிந்த விஷயம். எங்களுக்கெல்லாம் தெரியாதபடி நீர் எனக்கு இவ்வளவு பெரிய மகளைச்சம்பாதித்துக் கொடுக்க முன் வந்தது

முற்றிலும் விநோதமாக இருக்கிறது. இந்தக் கலியாணச் சடங்குகள் ஆரம்பிக்கும்போதிருந்தே நீர் இங்கே வந்து உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறீர்! இவள் என்னுடைய மகள் என்பது உமக்கு அப்போதே தெரியவில்லையா? நீர் இதுவரையில் மௌனமாக இருந்து இப்போதுதான் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டவர் போல எழுந்துவந்து இந்த விபரீதச் செய்தியைத் தெரிவிக்கிறீரே! ஒருகால் இப்போது வந்த மனிதரும் நீரும் ஒன்றாகக் கூடிப் பேசிக்கொண்டு வந்தீர்களா? பூனாவிலுள்ள பட்டமகிஷிக்குப் பரிந்து பேசி இந்தக் கலியாணத்தைத் தடுக்க வேண்டுமென்று நீங்கள் இருவரும் முடிவு கட்டிக்கொண்டு வந்தீர்களா? அவர் வந்து செய்த பிரயத்தனம் பலிக்காமல் போனதைக்கண்டு நீர் இம்மாதிரியான புதிய சங்கதியைச் சொல்லுகிறீரா? பட்ட மகிஷியின் விஷயத்தை நான் என் கண்ணாலேயே கண்டேன். ஆகையால், இப்போது வந்துபோன மனிதர் சொன்னது பொய்யான சங்கதி என்பது எனக்கே எளிதில் தெரிந்து போய்விட்டது. இப்போது நீர் சொல்வதோ காளை மாடு கன்று போட்டதென்று சொல்வதுபோல நிரம்பவும் அற்புதமாக இருக்கிறது. ஆனாலும், இது முக்கியமான ஆட்சேபணை. ஆகையால், நீ சொல்வதை அலட்சியம் செய்துவிட்டு நான் மேல் காரியத்தை நடத்துவது சரியாகாது. அதுவுமன்றி இப்போது வந்து போனவர் இன்னார் என்பது எனக்குத் தெரியாது. ஒருவேளை அவர் துன்மார்க்கராகவோ, அல்லது சித்தக்கிறுக்கு உடையவராகவோ இருக்கலாம். அதனால், அவர் பிறரால் ஏவப்பட்டு வந்து இப்படித் தாறுமாறாக உளறி இருக்கலாம். உம்முடைய விஷயமோ அப்படிப்பட்டதல்ல. நான் இதுவரையில் உம்மோடு பழகி உம்முடைய குணங்களை நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறேன். நீர் இதுவரையில் தப்பான காரியத்தில் இறங்கினதையே நான் பார்த்ததில்லை. அப்படிப்பட்ட நீர் இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில் துணிவாக வந்து இப்படிப்பட்ட விபரீதச்செய்தியைச் சொல்கிறீர்.

ஆகையால், உம்மை நான் அசட்டை செய்தனுப்ப இஷ்டப்பட வில்லை. நீர் இந்தப் பெண் என்னுடைய சொந்த மகளென்று சொன்னீரே. அது உண்மை தான் என்று என் மனம் திருப்தி கரமாக நம்பும்படி உம்மிடம் ஏதாவது தக்க ஆதாரம் இருக்கிறதா? இருந்தால், எடுத்துக் காட்டும்'' என்று நிரம்பவும் கம்பீரமாகக் கூறினார்.

உடனே நீலமேகம்பிள்ளை நயமாகப் பேசத் தொடங்கி, ''மகாராஜாவே! தாங்கள் என் விஷயத்தில் இவ்வளவு மதிப்பு வைத்து நான் சொல்வதைக் கேட்பதற்கு இணங்கினீர்களே. அது விஷயத்தில் நான் தங்களுக்கு நிரம்பவும் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். நான் சொன்ன செய்தி ஆதாரமில்லாமல் சொல்லப்பட்டதல்ல. நான் ஏற்கெனவே சொன்னபடி, இதோ என் வசத்திலிருக்கும் ஒரு தஸ்தாவேஜியை தாங்கள் படிப்பீர்களானால் அதுவே போதுமானது. அதற்குமேல் தாங்கள் என்னிடம் ஆதாரம் எதுவும் கேட்கமாட்டீர்கள். ஆனால், இந்த தஸ்தாவேஜியைத் தாங்கள் இந்த இடத்திலிருந்து படிப்பது உசிதமாகத் தோன்றவில்லை. பக்கத்தில் அந்தரங்கமான அறை ஏதாவது இருக்குமானால், அவ்விடத்திற்குத் தாங்கள் என்னையும் இந்தப் பெண்ணையும் அழைத்துக் கொண்டு போனால், அவ்விடத்தில் நாம் விரிவாகப் பேசிக் கொள்ளலாம்'' என்றார்.

அதைக்கேட்ட இளவரசர் அதிக காலஹரணமாவதை எண்ணி நிரம்பவும் பதறினார். ஆனாலும் நீலமேகம்பிள்ளையின் வேண்டுகோளை மீறி நடக்க மாட்டாதவராய் அவரை நோக்கி, ''ஐயா! நீர் தக்க பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளை என்பதைக் கருதி உம்முடைய வேண்டுகோளின்படி நான் செய்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை ஏற்படுத்துகிறேன். அதற்கு நீர் இணங்க வேண்டும். இவ்வளவு முக்கியமான சடங்கு நடக்கும் சமயத்தில் நீர் அதற்கு விக்கினம் செய்து எங்களை அழைத்துக்கொண்டு போகிறீர். நீர் சொன்ன செய்தி பொய்யாக முடியுமானால்,

உம்மை நான் இலேசில் விடமாட்டேன். லக்ஷக்கணக்கில் கூடியிருக்கும் இந்த மகாஜனங்களுக்குமுன் நீர் பொய் சொல்லி முக்கியமான சடங்கைத் தடுத்து எங்களை அவமானப்படுத்திய பெருங் குற்றத்திற்கு உரிய தண்டனையை நீர் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கவேண்டும். அதற்கு நீர் சம்மதிப்பதானால், நீர் கேட்டுக் கொள்ளுகிறபடி நான் பூர்ணசந்திரோதயத்தை அழைத்துக்கொண்டு உம்மோடு தனியான ஓரிடத்திற்கு வருகிறேன். இது உமக்குச் சம்மதமா?'' என்றார்.

நீலமேகம்பிள்ளை, ''ஆகா! அப்படியே செய்யலாம். சம்மதமே'' என்றார்.

உடனே இளவரசர் மகாஜனங்களைப் பார்த்துத் தாம் கால்நாழிகையில் திரும்பி வந்து விடுவதாகவும், அதுவரையில் எல்லோரும் அமைதியாக இருக்கும்படியாகவும் கூறியபின் பூர்ணசந்திரோதயத்தையும் நீலமேகம் பிள்ளையையும் அழைத்துக் கொண்டு பக்கத்திலிருந்த ஓர் அந்தரங்க விடுதிக்குள் நுழைந்தார். அப்போது பூர்ணசந்திரோதயம் முற்றிலும் குழப்பமும் கலக்கமும் அடைந்து, அது கனவோ நனவோ என்று சந்தேகித்தவளாய் இன்ன இடத்திற்குப் போகிறோம் என்பதை அறியாதவளாய் நடந்தாள். தாங்கள் ஏழ்மை நிலையிலுள்ள ஒருவருடைய பெண்கள் என்பதைத் தவிர, தங்கள் பிறப்பு, வளர்ப்பைப் பற்றிய வரலாறு எதையும் அவள் அறியாதவள். ஆதலால், தான் இளவரசருக்கு எந்த வகையில் மகளாக இருக்கக் கூடும் என்ற எண்ணம் பலமாக எழுந்து அவளை வருத்தத் தொடங்கியது. ஆனாலும், தான் பெருத்த வஞ்சகச் சூழ்ச்சியில் சம்பந்தப்பட்டதைப் பற்றியும் தனது தகப்பனையே மணப்பதற்கு பகீரதப் பிரயத்தனங்கள் செய்ததையும் நினைக்க நினைக்க சகிக்க வொண்ணாத லஜ்ஜையினால், அவளது எண் சாண் உடம்பும் ஒரு சாணாய்க் குன்றியது. ஆனாலும், தான் அவரது சொந்தப் புதல்வி என்பது நிச்சயமானால், தன்னை அவர் தண்டிக்கவும் மாட்டார்; ஜனங்களுக்கு முன் அவமானப்படுத்த

வும் மாட்டார் என்ற நினைவும், தனக்குப் பட்டமகிஷி ஸ்தானம் கிடைக்காமல் போனாலும், ராஜகுமாரியின் பதவியும் செல்வமுமாவது எப்படியும் கிடைக்கும் என்ற நினைவும் தோன்றி அவளது மனதில் ஒருவித ஆறுதலையும் துணிவையும் உண்டாக்கிக் கொண்டிருந்தன. அவள் முதன் முதல் தஞ்சைக்கு வந்த அன்றைய தினம் சோமசுந்தரம் பிள்ளையைத் தேடிக்கொண்டு போன சமயத்தில் நீலமேகம்பிள்ளையைத் ஒருமுறை பார்த்தாள். ஆனாலும், அதன்பிறகு, அவளது வாழ்க்கையில் ஏற்பட்ட பற்பல மாறுபாடுகளில் அவளைப் பற்றிய ஞாபகத்தையே அவள் மறந்துவிட்டாள். அதுவுமன்றி, அவரது பெயரும் அவளுக்கு ஞாபகமில்லாமல் போயிற்று. ஆகவே, நீலமேகம்பிள்ளை இன்னார் என்ற விபரமே அவளுக்குச் சிறிதும் புலப்படாமல் இருந்தது. ஆனாலும், தான் இளவரசரது மகளென்பது சொந்த தகப்பானருக்கே தெரியாமல், யாரோ ஓர் அன்னிய மனிதருக்கு எப்படித் தெரிந்திருக்கக் கூடுமென்றும், அவர் படிக்கச் சொல்லும் தஸ்தாவேஜி என்னவிதமான தஸ்தாவேஜியாக இருக்குமென்றும் பலவாறு சந்தேகித்தவளாய்க் குனிந்த தலையை நிமிர்க்காமல் தோகை விரித்த கலாப மயில் போலத் தனது திருக்கல்யாணக் கோலத்தோடு அவர்களோடு அந்த அந்தரங்க விடுதிக்குள் சென்று நாணமும், கிலேசமும் நிறைந்தவளாய் ஒரு கம்பத்தின் மறைவில் நின்றாள்.

அவ்விடத்தில் காணப்பட ஓர் உன்னத ஆசனத்தின் மீது இளவரசர் அமர்ந்து கம்பீரமாக நிமிர்ந்து, "ஐயா! நீலமேகம் பிள்ளை! எங்கே? அந்த தஸ்தாவேஜியை எடும். அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறேன்" என்று அமர்த்தலாகக் கூறினார்.

உடனே நீலமேகம்பிள்ளை சட்டைப் பையிலிருந்த தமது தந்தையின் உயிலை எடுத்து நிரம்பவும் வணக்கமாக இளவரசரிடம் கொடுத்து, "மகாராஜா! என் தகப்பனார் சமீப

காலத்தில் பரலோகப் பிராப்தியடைந்த செய்தி தங்களுக்கு எட்டியிருக்குமென்று நினைக்கிறேன். இது அவர்களுடைய மரணாந்த சாசனம். இதைத் தாங்கள் படித்தால், தங்கள் மனம் நிரம்பவும் வருந்துமென்பது நிச்சயம். ஆனாலும், இந்தச் சந்தர்ப்பத்தில் நடக்கும் விபரீதமான காரியத்தைக் கருதி இதைப் படித்துத் தங்களுடைய மனம் கஷ்டப்பட்டாலும், பாதகமில்லை என்று நினைத்தே நான் இதைத் தங்களிடம் கொடுக்கிறேன்'' என்று கூறினார்.

அந்தத் தஸ்தாவேஜி இராமலிங்கம் பிள்ளையின் மரணாந்த சாசனம் என்ற செய்தியை அவர் சொப்பனத் திலும் எதிர்பார்த்தவர் அல்ல. ஆதலால் அதைக் கேட்டவுடன் திடுக்கிட்டு பெருத்த கலக்கமும் கலவரமும் அடைந்தார். அவரது முகம் சடக்கென்று மாறுபட்டது. தமது ஆப்த நண்பரான இராமலிங்கம் பிள்ளைக்குத் தாம் பெருத்த துரோகம் செய்து, அவரது மனைவியைக் கெடுத்து அழித்த ஞாபகம் முழுதும் உடனே அவரது நினைவிற்கு வந்தது. முன்னர் நிகழ்ந்த சம்பவங்கள் யாவும் ஒரே காலத்தில் அவரது மனதில் தோன்றி, அப்போது கண்ணிற்கு எதிரில் நடப்பன போலப் புலப்பட்டன. ஆனாலும், பூர்ணசந்திரோதயம் அந்த விஷயத்தில் எப்படி சம்பந்தப்பட்டிருப்பாள் என்ற விஷயம் மாத்திரம் சிறிதும் தெளிவு படாமலிருந்தது. அவர் அந்த உயிலை வாங்கும்போதே அவரது கைகள் நடுங்கின. உதடுகள் துடித்தன. இருதயம் தடதடவென்று அடித்துக்கொண்டது. தமது தாயைக் கெடுத்துக் கொன்ற துரோகி என்ற விஷயத்தை நீலமேகம்பிள்ளை அந்த உயிலிலிருந்து அறிந்து கொண்டிருப்பார் என்ற நினைவினால், இளவரசர் குன்றிப்போய் நீலமேகம்பிள்ளையின் முகத்தை நிமிர்ந்து பார்க்கவும் வெட்கி, குனிந்த தலையை நிமிர்க்காமல் இருந்தபடி அந்த உயிலை வாங்கிப் பிரித்துத் தமக்குள்ளாகவே படிக்கலானார். அவரது கவனம் முழுதும் பழைய விஷயங்க ளிலேயே சென்று லயித்துப் போயிருந்தது. ஆகையால், அதை

அவர் அந்த உயிலிலிருந்து திருப்புவது நிரம்பவும் கடினமாக இருந்தது. தஸ்தாவேஜியின் ஆரம்பத்தில் இராமலிங்கம் பிள்ளை தமது சொத்தின் விவரங்களையும் அவற்றைக் குறித்த விநியோக வகைகளையும் எழுதியிருந்ததை அவர் மேற் போக்காகப் படித்து அதன் முடிவில் தம்மைப்பற்றியும் அவரது மனைவியைப்பற்றியும் எழுதியிருந்த விஷயங்களை ஆழ்ந்து படிக்க ஆரம்பித்தார். படிக்கவே, அவரது கவனம் முழுதையும் அது கவர்ந்து கொண்டது. அபாரமான துக்கமும் வெட்கமும் மனவேதனையும் தோன்றி அவரை வதைக்கத் தொடங்கின. அவரது தேகம் குன்றிப்போயிற்று; இராமலிங்கம் பிள்ளையின் மனைவி முடிவில் இறந்துபோன வரலாற்றைப் படித்தபோது, அவரது கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது. உதடுகள் துடித்தன. தேகம் பதறியது. மனம் பாகாய் உருகியது. அந்த விஷயத்தில் தாம் பெருத்த பாவச் செய்கை புரிந்து விட்டோமென்ற எண்ணமே அவருக்குப் பெருத்த நரகவேதனை யாகத் தோன்றி, அவர் ஒரு குழந்தைபோல மாறித் தேம்பித் தேம்பி அழும்படி செய்துவிட்டது. முடிவில் அவர் தமது பெண்களான கமலம் ஷண்முகவடிவு ஆகிய இருவரும் திருவாரூரில் வளர்க்கப்பட்டு வருவதாக எழுதப்பட்டிருந்த வரலாற்றைப் படிக்க, நெடுங்காலமாகத் தமது குழந்தைகளை விட்டுப் பிரிந்து திடீரென்று கண்ட தாய் தகப்பன்மாரது மனதில் எப்படிப்பட்ட அபாரமான வாஞ்சையும் பெரும்பாசமும் சுரந்து, அவர்கள் உருகிப் பரவசமடைந்து மெய் மறந்து ஆவல்கொள்ளச் செய்யுமோ அப்படிப்பட்ட நிலைமையை அவர் அடைந்தார். அந்த உயில் முடிவடைந்த காலத்தில் அவர் தம்மையும் உலகையும் முற்றிலும் மறந்து, அவமானம், துயரம், கழிவிரக்கம், பிதுர்வாஞ்சை முதலிய உணர்ச்சிகளாகிய பெருத்த காட்டாற்று வெள்ளத்தில் ஆழ்ந்தவராய் அப்படியே ஒரு விநாடி நேரம் ஸ்தம்பித்துப் போயிருந்து சன்னதங்கொண்டவர் போல திடீரென்று எழுந்து ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து நீலமேகம் பிள்ளையின் காலடியில்

போய் மண்டியிட்டு உட்கார்ந்துகொண்டு, ''ஐயா! நீலமேகம் பிள்ளை! உம்முடைய தகப்பனார் என்னை உயிருக்குயிராக மதித்திருந்தார். அப்படியிருந்தும் நான் மதியிழந்து அவருக்குப் பெருத்த துரோகம் செய்து மகா கொடிய அபராதியாகி விட்டேன். உம்முடைய தாயாரைக் கொன்ற பாதகமும் என்னைத்தான் சேருமன்றி வேறு யாரையும் சேராது. அவர் இருந்த காலத்தில் அவருடைய முகத்தில் விழிக்க வெட்கப்பட்டு அவரைப் பார்க்காமலிருந்து விட்டேன். நீர் இந்தக் கடிதத்தைப் படித்தபிறகும், இதை மனதிற்குள் அடக்கிக்கொண்டு இந்தக் கலியாணத்திற்கு வந்திருக்கிறதைப் பார்த்தால், உம்முடைய பெரும்புத்தியும் பொறுமையும் வேறு யாரிடத்திலும் இருக்குமென்றே நான் நினைக்கவில்லை. உங்கள் விஷயத்தில் நான் செய்த மோசத்திற்குப் பதிலாக நீர் என்னை அணுவணுவாக வெட்டி சித்திரவதை செய்தாலும், அது நிரம்பவும் புண்ணியகரமான காரியமாக இருக்கும். அதைவிட்டு பொறுமையே வடிவாக இந்த துரோகியின் இருப்பிடத்திற்கு வந்ததுமன்றி, நான் மறுபடியும் செய்ய யத்தனிக்கும் இன்னொரு பஞ்சமா பாதகத்தையும் தடுக்க யத்தனிக்கிறீர். நான் வயதில் உம்மைவிடப் பெரியவனாக இருந்தாலும், பெருந்தன்மையிலும், பொறுமைக் குணத்திலும் நடத்தைத் தூய்மையிலும் உமக்கு நான் ஓர் எள்ளளவும் ஒப்பாகமாட்டேன். நான் என்னுடைய எந்த மேம்பாட்டையும் கவனிக்காமல் உமது காலைப் பிடித்துக்கொண்டு நான் செய்த பிழைகளை மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதே நான் செய்யத் தக்க காரியமென்று நினைக்கிறேன். உம்முடைய தகப்பனார் விஷயத்தில் நான் செய்த துரோகத்தை க்ஷமிப்பதற்கு நீரே தகுந்த மனிதர். ஆகையால், இன்றோடு நீர் எல்லா விஷயத்தையும் உம்முடைய மனசைவிட்டு விலக்கிவிட வேண்டுமாய் நான் நிரம்பவும் வணக்கமாக இறைஞ்சி வேண்டுகிறேன். நீர் சற்று நேரத்துக்குமுன் சொன்னதிலிருந்து, இந்தப் பெண் திருவாரூரில்

விடப்பட்ட என்னுடைய இரண்டுபெண்களுள் ஒருத்தி என்பது எளிதில் விளங்குகிறது. ஆனால், இவள் மூத்தவளா இளையவளா என்பதும், நீர் இவளுடைய அடையாளத்தை எப்படி கண்டுகொண்டீர் என்பதும் எனக்குத் தெரியவில்லை. அந்த விவரத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன்'' என்று நிரம்பவும் கனிவாக மனம் நைந்து கண்ணீர் விடுத்துக் குழந்தை போல் தேம்பித் தேம்பி அழுதார்.

கல்லும் கரைந்துருகத்தக்கதாக இருந்த அந்தப் பரிதாபகரமான காட்சியைக் கண்ட நீலமேகம்பிள்ளையும் சகிக்க வொண்ணாத பெருத்த சஞ்சலமடைந்தவராய், இளவரசரது விஷயத்தில் உண்மையான இரக்கமும் உருக்கமும் அடைந்து அவரைத் தூக்கி மறுபடியும் ஆசனத்தில் உட்காரச் செய்து, ''மகாராஜா! கேவலம் சிறிய பையனான என்னிடம் தாங்கள் இவ்விதம் பணிவாக நடந்துகொள்வதை நான் சகிக்க முடியவில்லை. பழைய விஷயங்களெல்லாம் ஏதோ அனுபிராப்த சாரத்தினால் நடந்ததென்ற எண்ணத்தினால் நான் எல்லாவற்றையும் மறந்துவிட்டேன். அது சம்பந்தமாக நான் தங்களிடம் பகைமையாவது அருவருப்பாவது பாராட்டுவேன் என்று நினைக்கவே வேண்டாம். எப்படி என்றால், இந்தக் கமலம் ஷண்முகவடிவு ஆகிய இருவரும் புதையல் எடுத்த பெருநிதிக் குவியல் போலவும், என் உயிருக்குயிராகவும் ஆகி விட்டனர். ஆதலால், அதுபோல தாங்களும் இவர்கள் இருவரையும் பெருஞ் செல்வத்துக்குச் சமமாக மதிப்பீர்களென்று நான் நிச்சயமாக நம்புகிறேன். ஆகையாலும், இருவருக்கும் பொதுவில் சொந்தமாகிவிட்ட இந்த இரண்டு பெண்மணிகளை உத்தேசித்து நாம் ஒருவருக் கொருவர் பாந்தவ்வியமும் அன்னியோன்னிய பாவமும் பாராட்டக் கடமைப்பட்டவராகி விட்டோம். ஆகையால், தாங்கள் இனி எதைக் குறித்தும் கவலையுற வேண்டிய அவசியமே இல்லை. நாம் இருவரும் பேசுவது கமலத்துக்குக்

கொஞ்சமும் விளங்காமல் இருப்பதால், அவள் விழித்துக் கொண்டு நிற்கிறாள். அவளிடம் அந்த தஸ்தாவேஜியைக் கொடுங்கள். அவள் அதைப் பார்த்துத் தங்களுடைய வரலாற்றைத் தெரிந்து கொள்ளட்டும்'' என்று கூறினார்.

அதுகாறும் காதலி நிலைமையில் எண்ணப்பட்டிருந்த தனது புதல்வியின் முகத்தைப் பார்ப்பதற்கு இளவரசரது மனம் கூசியது. அவள் அந்த தஸ்தாவேஜியிலுள்ள வரலாற்றைத் தெரிந்து கொண்டால் தங்களது தாயின் விஷயத்தில் தாம் பெருந் துயரம் செய்த செய்தியை அறிந்து தம்மை வெறுப்பாளோ என்ற எண்ணம் இளவரசரது மனதில் உண்டானது. ஆனாலும், எப்படியும் அவள் அந்த தஸ்தாவேஜியைப் பார்க்காமல் தடுப்பது சாத்தியமில்லை என்று கண்ட இளவரசர் என்ன செய்வதென்பதை உணராமல் சிறிதுநேரம் மயங்கித் தயங்கி அப்படியே கண் மூடி ஓய்ந்து போனார். அவரது மன நிலைமையை ஒருவாறு யூகித்தறிந்துகொண்ட நீலமேகம் பிள்ளை இளவரசருக்கு எதிரிலிருந்த உயிலை எடுத்து, ''அம்மா கமலம்! இதைப் படித்து உங்கள் பிறப்பின் வரலாற்றைத் தெரிந்துகொள்'' என்று நிரம்பவும் அன்பாகக் கூறி அதை அவளிடம் கொடுத்தார்.

அவர்கள் இருவருக்கும் நடந்த சம்பாஷணை முழுதும் பூர்ணசந்திரோதயத்திற்குச் சொப்பனத்தில் நடக்கும் நிகழ்ச்சி போலவே தோன்றியது. ஆகையால், அவள் பிரமித்து மதி மயக்கம் கொண்டு ஒன்றையும் அறியாமல் தத்தளித்து நின்று அவரால் கொடுக்கப்பட்ட உயிலை வாங்கி விரைவில் படித்து முடித்தாள். தானும் ஷண்முகவடிவும் பவானியம்பாள் புரம் ஜெமீந்தாரினது மனையாட்டிக்கும், இளவரசருக்கும் பிறந்த இருபிறப்புக் குழந்தைகள் என்ற செய்தி அவளால் சகிக்க கூடாத மகா துன்பகரமான செய்தியாக இருந்தது. அதுவுமன்றி, தான் தனது தகப்பனாராகிய இளவரசரையே மணந்து கொள்ளப் போகும் நிலைமையிலிருந்தது முன்னதைக் காட்டிலும்

பதினாயிர மடங்கு அதிக துன்பகரமாக இருந்தது. இளவரசர் தனது தாயை வஞ்சித்து, அவள் இறந்து போனதற்குக் காரணமாக இருந்தவர் என்ற நினைவு அவரிடத்தில் ஒருவித அருவருப்பையும் அச்சத்தையும் உண்டாக்கியது. ஆனால், அவர் தங்களது சொந்தத் தந்தை என்ற நினைவினால் ஒருவித இளக்கமும் ஒருபுறத்தில் உண்டாயிற்று. அதுவுமன்றி, அந்தச் சமயத்தில் அவ்விடத்திற்கு வந்து பெருத்த பஞ்சமா பாதகத்தைத் தாங்கள் செய்யாமல் தடுத்தவராகிய நீலமேகம்பிள்ளை என்பவர் தங்களது தாயின் வயிற்றில் ஜனித்த சகோதரர் என்பதையும், அவரது தந்தையே சோமசுந்தரம்பிள்ளை என்ற மறுபெயரை வைத்துக்கொண்டு கடைசிவரையில் தங்களுக்குப் பணஉதவி செய்துவந்தவர் என்பதையும், இன்னமும் தங்களைக் கடைசிவரையில் காப்பாற்றும்படி அவர் தமது புத்திரருக்கு ஆக்ஞாபித்து இருந்ததையும் உணர்ந்த பூர்ணசந்திரோதயம் அப்படியே உருகிக் கலங்கி பிரமிப்படைந்து தன்னை மறந்து, 'அண்ணா!' என்ற வாஞ்சையோடு அழைத்து அதற்குமேலும் ஏதோ கூற யத்தனித்தாள். அவளால் தாங்க இயலாதபடி பிரமாதமாகப் பொங்கி எழுந்த ஒருவித ஆவேசத்தினால், வார்த்தைகள் வெளியில் வராதபடி தொண்டை அடைத்துக் கொண்டது. அவள் உடனே பிரக்ஞை தவறிப்போய்ச் சித்திரத் தேர் சாய்வதுபோலப் பக்கத்திலிருந்த ஸோபாவின் மேல் அப்படியே சாய்ந்துவிட்டாள்.

அதைக் கண்ட இளவரசரும் நீலமேகம்பிள்ளையும் பதறிப் போய்த் துடிதுடித்து அவளண்டை ஓடி அவளை எடுத்து ஸோபாவில் நன்றாகப் படுக்க வைத்தனர். உடனே இளவரசர் பக்கத்திலிருந்த வேறோர் அறைக்கு ஓடி அவளது மயக்கத்தைத் தெளிவிப்பதற்குரிய கருவிகளை எடுத்துக்கொண்டு ஓடோடியும் வந்து அவளுக்குச் சைத்தியோபசாரம் செய்து சிறிது நேரத்தில் அவளைத் தெளிவித்தார். தனது கண்களைத் திறந்து விழித்துக்கொண்டு பார்த்த பூர்ணசந்திரோதயம் தனது இரு

பக்கங்களிலும் தனது தந்தையும், தமையனும் அன்பே வடிவாக இருந்து தன்னைத் தேற்றிக் கொண்டிருந்ததை உணர்ந்து, மிகுந்த நாணமும் கிலேசமும் அடைந்தவளாய் மெதுவாக எழுந்து நிற்க முயற்சி செய்தாள்; அதைக் கண்ட இளவரசர், "கமலம் எழுந்திருக்காதே. ஒருவேளை மறுபடியும் மயக்கத்தினால் விழுந்தாலும், விழுந்துவிடுவாய். பயப்படாமல் அப்படியே உட்கார்ந்துகொள். இங்கே வேறே யார் இருக்கிறார்கள்? நான் உன்னைப் பெற்ற தகப்பன். இவர் உன் உடன்பிறந்தார். நீ கிலேசப்படவேண்டிய அவசியமே இல்லை. நீயும் நானும் உண்மையில் இன்னார் என்று தெரிந்துகொள்ளக் கூடாத நிலைமையில் நாம் ஒருவரையொருவர் பார்த்து இந்தக் கலியாண ஏற்பாட்டைச் செய்தோம். ஆகையால், இது வேண்டுமென்று செய்யப்பட்ட குற்றமாகாது. நீ என் மகள் என்பது நமக்குத் தெரிந்திருந்தால், நீயாவது நானாவது இந்த எண்ணத்தைக் கனவிலாவது கொண்டிருப்போமா? ஒரு நாளுமில்லை. ஆனால் தெய்வாதீனமாக நாம் எவ்விதமான பாவச் செய்கையையும் நடத்தாமல், நமது யத்தனம் இவ்வளவோடு தடைபட்டுப் போனது. நீயும் நானும் சந்தித்ததும் ஒருவர் மேல் ஒருவர் பிரியங்கொண்டதும் முடிவில் நமக்கு நன்மையைத் தருவதற்காக ஏற்பட்ட சம்பவங்களென்றே நினைக்கிறேன். இல்லாவிட்டால், நீங்கள் என்னுடைய குழந்தைகள் என்ற விஷயமே எனக்குத் தெரியப் போகிறதில்லை. இந்த உயிலைப் படித்த நீலமேகம் பிள்ளை உங்களை மாத்திரம் கண்டு ரகசியமாக இந்த ரகசியத்தை உங்களிடம் மாத்திரம் சொல்லி இருப்பாரே அன்றி, என் மேல் நியாயமாக அவருக்கு இருக்க வேண்டிய அருவருப்பினால் அவர் இந்த விஷயத்தை என்னிடம் சொல்லி இருக்கவே மாட்டார். ஆகையால், ஈசுவரன் என்மேல் கருணை கூர்ந்து இப்படிப்பட்ட விபரீத நிகழ்ச்சிகளை எல்லாம் காட்டி முடிவில் நன்மையைச் செய்து வைத்தார். இதுவரையில் மறைந்து கிடந்த விலைமதிப்பற்ற இரண்டு பெரிய

நிதிக்குவியல்களாகிய என் பெண்கள் இருவரையும் நான் திரும்பி அடைந்தேன். ஆகையால், இந்த விஷயத்தைப் பற்றி நாம் விசனிக்கவாவது லஜ்ஜையுறவாவது நியாயமில்லை. ஆனால், ஒரு விஷயம் மாத்திரம் நான் கேட்டுக்கொள்ளுகிறேன். உங்கள் தாய் விஷயத்தில் ஆதியில் நான் செய்த பெரிய தவறை மாத்திரம் மனசில் வைக்காமல் நீயும், நீலமேகம்பிள்ளையும் எல்லாவற்றையும் மறந்து, என்னிடம் மாறாத பிரியமுடையவர்களாக இருக்கவேண்டும். உங்கள் இருவரையும் இதுவரையில் காப்பாற்றக் கடமைப்பட்டவனாகிய நான் அதை நிறைவேற்றக் கொடுத்து வைக்காத துர்ப்பாக்கியனானேன். ஆனாலும், அதை நான் வட்டியும் முதலுமாக இப்போது பூர்த்தி செய்யத் தயாராக இருக்கிறேன். உங்கள் தாயாரைப் பற்றிய விவரம் எதையும் வெளியிடாமல் நீங்கள் இருவரும் என் சொந்தக் குமாரிகள் என்ற செய்தியை நான் இப்போதே பகிரங்கப்படுத்தி உங்கள் இருவரையும் ராஜகுமாரத்திகளின் ஸ்தானத்தில் வைக்கிறேன். இனி எந்த விஷயத்தைப் பற்றியும் உங்களுக்கு எள்ளளவும் கவலையே தேவையில்லை. ஆனால், ஒரு சந்தேகம் உன்னிடம் கேட்டுத்தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. திருவாரூரிலிருந்த நீ இந்த ஊருக்கு எப்படி வந்தாய்? வந்த இடத்தில் பூர்ணசந்திரோதயமென்ற பெயரை வைத்துக் கொண்டு இந்த ஊரில் என்ன உத்தேசத்தோடு தங்கினாய்? சில மோசக் காரர்களின் சதியாலோசனையில் அகப்பட்டு ஏமாறிப்போனதாகச் சொன்னாயே. அவர்கள் யார்? அவர்கள் என்ன மோசம் செய்தார்கள்? இந்த விவரங்களைச் சொல்'' என்றார்.

அவரது வாத்சல்யம் ததும்பிய உருக்கமான சொல்லைக் கேட்ட பூர்ணசந்திரோதயம் சிறிதளவு துணிவு அடைந்தவளாய்த் தானும் நீலலோசனி அம்மாளும் ஷண்முகவடிவும் திருவாரூரிலிருந்த விவரத்தையும், ஷண்முகவடிவின் குண விசேஷங்களையும், திடீரென்று நீலலோசனியம்மாள் பக்ஷவாத நோய்

கொண்டு படுத்துவிட்டதையும், சொற்ப காலத்திற்குப் பிறகு சோமசுந்தம்பிள்ளை இடத்திலிருந்து பணம் வராமல் நின்று போனதனால் ஜீவனத்திற்கு வேறு வழியறியாமல் அவரைத் தேடிக்கொண்டு தான் தஞ்சைக்கு வந்ததையும், அவ்விடத்தில் தான் பணப்பையைப் பறிகொடுத்துத் தத்தளித்த சமயத்தில் ஒரு ஸ்திரீ வந்து தனக்குத் தைரிய வசனங்கூறித் தன்னைத் தேற்றியதையும் சவிஸ்தாரமாகக் கூறி அதற்குமேல் நடந்த விருத்தாந்தங்களையும் சுருக்கமாகக் கூறத் தொடங்கி, "அப்படி வந்து எனக்குத் தைரிய வசனம் சொல்லி, சோமசுந்தரம் பிள்ளையைத் தேடி அவரிடம் என்னை அழைத்துக்கொண்டு போவதாக அந்த ஸ்திரீ எனக்கு உறுதி கூறி என்னை அவளுடைய வீட்டிற்கு அழைத்துப் போனாள். அவளே இந்த அம்மணிபாயி. அவளும், சாமளராவும் என்னிடம் மட்டற்ற வாத்சல்யம் பாராட்டி கண்மணியை இமைகள் காப்பதுபோல என்னைக் காப்பாற்றி வைத்துக் கொண்டிருந்த தன்றி பல நாட்கள் வரையில் சோமசுந்தரம் பிள்ளையைத் தேடுவதாகவே நாளைக் கடத்திக் கொண்டு வந்து ஷண்முக வடிவு அதைரியப்படாமல் இருப்பதற்காக, நான் சோமசுந்தரம் பிள்ளையைக் கண்டு விட்டதாகவும், அவர் என்னைத் தம்முடைய அபிமான புத்திரியாக வைத்துக்கொண்டு விட்டதாகவும் எழுதும்படி தூண்டினார்கள். அவர்கள் என்னிடம் காட்டிய அபாரமான பிரியத்தினால் மயங்கி நான் அவர்கள் சொல்வதுபோலவே செய்தேன். அவர்கள் பெரும் பணத் தொகைகளைக் கொடுத்து ஷண்முகவடிவிற்கு அனுப்பச்செய்தார்கள். அப்படியே இருந்திருந்து நாளடைவில் என் புத்தியை மயக்கி, நான் ராஜஸ்திரீபோல இருக்கிறேன் என்றும், இந்த ஊர் இளவரசருக்கு என்னைக் கலியாணம் செய்துவைத்து விடுவதாக வும், முதலில் வேடிக்கை போலப் பிரஸ்தாபித்துப் பிறகு உண்மையில் அப்படியே செய்துவிடுவது என்றும் தீர்மானித்துக் கொண்டு அதற்காக ஜெகன்மோகனவிலாசமென்ற மாளிகை யில் சகலமான அலங்காரங்களுடன் என்னை வைத்தார்கள்.

அவர்களுக்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்று தாங்கள் நினைக்கும்படி அவர்கள் நிரம்பவும் ஜாக்கிரதையாக நடந்துகொண்டார்கள்; தாங்கள் சாதாரணமான மனுஷியை மணக்கமாட்டீர்களென்று நினைத்து மற்ற எப்பேர்ப்பட்டவருக்கும் நான் வசியமாகவில்லை என்பதைத் தாங்கள் நன்றாகத் தெரிந்து கொள்ளும்படி சாமளராவ் தந்திரம்செய்து தாங்களும் வேறு ஐந்து பெரிய மனிதர்களும் என்னைக் குறித்துப் பந்தயம் வைக்கும்படி சூழ்ச்சி செய்தனர். உங்களிடத்திலும், மற்றவர்களிடத்திலும் நான் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்ற விஷயங்களை எல்லாம் அவர்களே எனக்குக் கற்பித்துக் கொடுத்தார்கள். நான் என்னுடைய குடும்பத்தின் இல்லாக் கொடுமையையும், என் அத்தையின் கொடிய நிலைமையையும் கண்டு இனி என்ன செய்யப் போகிறோமென்று திகிலடைந்து கவலை கொண்டு அவர்களுடைய சொற்படி நடந்து ஏமாறிப்போனேன். ஆனால், அவர்கள் என்னை வேறுவிதமான துன்மார்க்கத்தில் உபயோகப் படுத்தவும் முயன்றார்கள். அதற்கு மாத்திரம் நான் இடம் கொடுக்காமல் கண்டிப்பாக மறுத்துவிட்டேன். தங்களைக் கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்று நான் மனசால் நினைத்த ஒரு பாவத்தைத் தவிர, நான் திரிகரணசுத்தியாக யாதொரு பாவத்தையும் செய்தறியேன். எந்த விஷயத்திலும் ஒழுங்கு தவறுதலாக நடந்து கொள்ளக்கூடாது என்ற மனவுறுதி இயற்கையாக என் மனதில் இருந்து வருகிறது. ஆனாலும், தங்கள் ஒருவர் விஷயத்தில் மாத்திரம் என் புத்தி என்னை அறியாமல் மயங்கிப் போய்விட்டது. தாங்கள் நினைக்கிறபடி கடவுளே எங்கள் இருவரையும் எங்கள் தகப்பனாராகிய தங்களிடம் கொண்டுவந்து சேர்ப்பிக்கும்படி செய்திருக்க வேண்டுமென்றே நானும் அபிப்பிராயப்படுகிறேன்'' என்றாள்.

அதைக்கேட்ட இளவரசர் பெரிதும் பிரமிப்பும் வியப்பும் அடைந்து, ''என்ன ஆச்சரியம் இது! அம்மணிபாயியும்

சாமளராவும் சேர்ந்தா இப்படிப்பட்ட தந்திரம் செய்தார்கள்! அவர்களுக்கும் உனக்கும் பழக்கம் உண்டென்பதைக் கொஞ்சமாவது காட்டிக் கொள்ளாமல் அவர்கள் எவ்வளவு சாமர்த்தியமாக நடித்திருக்கிறார்கள். ஆகா! அவர்களுடைய சூதா இது? அப்படியானால் இப்போது கொஞ்ச நேரத்துக்கு முன் ஒரு மனிதர் வந்து அம்மணிபாயியின் மேல் சொன்ன விஷயங்கள் கூட ஒருவேளை உண்மையாயிருக்கும் போலிருக்கிறதே! ஆனால், அதில் முக்கியமான ஓர் அம்ஸம் இருக்கிறது. அதாவது, லலிதகுமாரி தேவியின் உடம்பை நான் என் கண்ணால் பார்த்தேன். ஆகையால், அவள் குற்றவாளிதான் என்பது நிச்சயமாகிறது'' என்றார்.

பூர்ணசந்திரோதயம் ஒருவித முகமாறுதல் அடைந்தவளாய், ''மகாராஜாவே! அந்த விஷயமும் இவர்களுடைய சூழ்ச்சியினால் நடந்ததுதான். அதை நான் என் வாயில் வைத்துச் சொல்லவே கூசுகிறது. அந்த விஷயத்தில் இவர்கள் எல்லா ஏற்பாடுகளையும் செய்த பிறகே, எனக்கு அதைத் தெரிவித்தார்கள். என்மேல் தாங்கள் பிரியப்படுவதைக் கண்ட பிறகு, என்னைத் தங்களுடைய பட்டமகிஷியாக்கி, என்னால் அவர்கள் ஒரு ஜெமீன் சமஸ்தானத்தைச் சன்மானமாகப் பெற வேண்டுமென்பது அவர்களுடைய கருத்து; இப்போது பேசிவிட்டுப்போன மனிதர் இவர்களைப்பற்றிச் சொன்னதெல்லாம் உண்மையான செய்தியே. கொஞ்சமும் தவறு இல்லை. தங்கள் பட்டமகிஷி தேவியார் யாதொரு தோஷமுமில்லாத மகா புனிதவதி என்பதைப்பற்றிக் கொஞ்சமும் சந்தேகமில்லை. அவர்களின் மேல் இப்படிப்பட்ட சதியாலோசனையும் அவதூறும் ஏற்பட்டிருக்கின்றன என்பது அவர்களுக்கு இன்னமும் தெரிந்திருக்காது என்று நினைக்கிறேன். எல்லாம் அம்மணிபாயியின் வஞ்சகச் சூழ்ச்சியே'' என்றாள்.

இளவரசர் திடுக்கிட்டு, ''என்ன ஆச்சரியம்! நீ சொல்வது எனக்கு நன்றாக விளங்கவில்லையே! நீ சொல்வது

உண்மையானால் பட்டமகிஷி எப்படி கர்ப்பிணியானாள்?'' என்றான்.

பூர்ணசந்திரோதயம், ''அன்றையதினம் தாங்கள் பூனா நகரத்துப் பூங்காவில் பார்த்தது தங்களுடைய பட்டமகிஷியாரே அல்ல. கூத்தாடி அன்னத்தம்மாளுடைய மூத்த மகளாகிய அம்மாளு நிஜமாகவே கர்ப்பிணியாக இருக்கிறாள். பட்ட மகிஷியார் அவர்களுடைய தகப்பனாரிடம் இருக்கும் சமயம் பார்த்து அதே காலத்தில் நீங்கள் தோட்டத்திற்கு வர ஏற்பாடு செய்தார்கள்; பட்டமகிஷியின் உடைகள், மூடி, ஆபரணங்கள் முதலியவற்றை அம்மாளு அணிந்து தன்னை பனாரீஸ் அங்கியால் மறைத்துக் கொண்டுவந்து குரலை மாற்றிப்பேசி விட்டுப்போனாள். அன்னத்தம்மாளின் தங்கையே மோகன ராவைப்போல ஆண்வேஷம் தரித்துவந்தது. இரண்டு பேரும், அதற்குமுன் ஏற்பாடு செய்திருந்தபடி நாடகத்தில் நடிப்பதுபோல, ஒருவரோடு ஒருவர் பேசிப் பிரிந்து போயினர். தாங்களும் சாமளராவும் மேடையின் கீழேயிருந்தது அவர்களுக்கு நன்றாகத் தெரியும்'' என்றாள்.

இளவரசர் சகிக்கவொண்ணாத பிரமையடைந்து, ''ஆகாகா! மோசம்போனேனே! அவர்களா வந்து அப்படி நடித்தவர்கள்! அப்படியானால், எனக்குக் கடிதங்கள் எழுதியவர்கள் யார்?'' என்றார்.

பூர்ணசந்திரோதயம், ''இந்த அம்மணிபாயி சாமளராவ் ஆகிய இருவரும் எழுதியனுப்பியபடி அந்தப்பெண்களே ''ஓர் ஆண்மகன்'' என்று கையெழுத்திட்ட கடிதத்தையும் எழுதிய வர்கள். சாமளராவ் எல்லாக் காரியங்களையும் நடத்தி விட்டு ஒன்றையும் அறியாதவன்போலத் தங்களோடு கூடவே யிருந்து தங்கள் பட்டமகிஷி குற்றவாளி என்று தாங்கள் நம்பும்படி செய்திருக்கிறான்'' என்றாள்.

அந்த வரலாற்றைக்கேட்ட இளவரவர் ஆச்சரிய வசத்தராய் என்ன சொல்வதென்பதை அறியாமல் அப்படியே கலங்கி உட்கார்ந்துபோய், ''அடடா! இந்தக் கொலை பாதகர்கள் எத்தனை காரியங்கள் செய்திருக்கிறார்கள்! சாமளராவ் பரம யோக்கியன் போல் கடைசிவரையில் பட்டமகிஷிக்குப் பரிவாகவே பேசி, நான் தனத்தினிடம் நேரில் கேட்டு, இந்தக் கட்டுக்கதையை உண்மையென்று நம்பும்படி அல்லவா செய்தான். ஆகா! இந்த நாய்களைச் சுண்ணாம்புக் காளவாயில் வைத்துச் சுட்டாலும், அந்தத் தண்டனை போதாதென்றே நினைக்கிறேன். என்ன அக்கிரமம் இது! ஏதோ அற்ப மனஸ்தாபத்தினால் நானும் லலிதகுமாரியும் பேசாமல் இருந்து வருகிறோம். அதை வைத்துக்கொண்டு கயிறு திரித்து இவர்கள் இப்படிப்பட்ட பிரமாதமான விபரீதத்தையே உண்டாக்கி விட்டார்களே. ஒரு பாவத்தையும் அறியாத லலிதகுமாரியின் மேல் ஏற்பட்ட அபவாதம் ஊரு முழுதும் பரவிப் போய் விட்டதே. இனி இந்தக் களங்கத்தை எப்படி விலக்குவது? இந்தச் செய்தி அவளுக்கு எட்டுமானால், அவள் உடனே தன் உயிரை மாய்த்துக் கொள்வாளென்றே நினைக்கிறேன்'' என்றார்.

பூர்ணசந்திரோதயம், ''இவர்கள் அதை மாத்திரமா செய்தார்கள்! இன்னொரு பெரியமோசமும் நடத்தியிருக்கிறார்கள். அதைத் தாங்கள் கேள்வியுற்றால், தாங்கள் அடையும் விசனத்துக்கு எல்லை இராது. அதாவது, என்னுடைய தங்கையான ஷண்முகவடிவை மஹாலக்ஷ்மியின் அவதாரமென்று சொன்னாலும் அது அவளுக்குப் பொருந்தும். அப்படிப்பட்ட உத்தமியை இந்த அம்மணிபாயி தந்திரம் செய்து கோலாப்பூருக்கு வருவித்து, அவ்விடத்திலிருந்து இந்த ஊருக்கு அழைத்துவந்து, நான் இருக்கும் சோமசுந்தரம் பிள்ளையின் வீட்டில் கொண்டு போய் விடுவதாக ஏமாற்றி மருங்காபுரி ஜெமீந்தாருடைய வீட்டில் கொண்டுபோய் விட்டு வந்து

விட்டாள். அந்த இடத்திலிருந்து அவள் தப்பினாளோ, அல்லது, அங்கே ஏற்பட்ட நெருப்பில் அகப்பட்டு இறந்து போய்விட்டாளோ, அதுதான் தெரியவில்லை. நான் பல ஆட்களை அனுப்பிப் பார்த்தேன். அவள் திருவாரூருக்குப் போக வில்லையாம். மருங்காபுரி ஜெமீந்தாருடைய மாளிகையிலும் இல்லையாம். அந்த மனிதர்கள் தேடாத இடம் பாக்கி ஒன்று மில்லை. அம்மணிபாயி கோலாப்பூருக்குப் போய் வந்தபிறகு எல்லாச் சங்கதிகளையும் என்னிடமும் சாமளராவிட மும் சொன்னாள். ஆனால், அவள் என் தங்கையின் விஷயங்களை மாத்திரம் என்னிடம் சொல்ல மறைத்து சாமளராவும் அவளும் தனியாக இருந்த சமயத்தில் அவனிடம் சொன்னாள். நான் பக்கத்து அறையிலிருந்து அவர்கள் பேசியதை உணர்ந்தேன். என் தங்கை காணாமல் போயிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் கலியாணம் செய்துகொள்ள என் மனம் இடந் தரவில்லை. ஆனாலும், தங்களுக்கு வாக்குக் கொடுத்து, தாங்களும் அபாரமான ஏற்பாடுகள் செய்தபிறகு நான் என் உள் விசனத்தைக் கருதிப் பின் வாங்கினால், அதன் காரணத்தை நான் வெளியிட நேருமென்று பயந்தே நான் என் மனசை அடக்கிக் கொண்டிருந்தேன். என் தங்கை காணாமல் போன விஷயம் எனக்குத் தெரியும் என்பதை நான் அவர்களிடமும் காட்டிக் கொள்ள முடியவில்லை. என் தங்கையைப் பற்றிய எந்த விவரத்தையும் நான் தங்களிடம் சொல்லக் கூடாதென்று அவர்கள் என்னிடம் கண்டித்துச் சொல்லி இருந்தார்கள். ஆகையால், நான் தேள் கொட்டிய திருடன்போல விழித்துக் கொண்டிருந்தேன். இப்போது அவள் எங்கே இருக்கிறாளோ தெரியவில்லை. தாங்கள்தான் அதற்குத் தக்க முயற்சி எடுத்துக் கொண்டு முதலில் அவளைக் கண்டுபிடிக்க வேண்டும். இப்போது சமீபத்தில் ஓர் ஆளை நான் திருவாரூருக்கு அனுப்பினேன். என் அத்தை முதலிய யாரும் அங்கே இல்லையாம். பங்களாவின் கதவு பூட்டப்பட்டிருக்கிறதாம். பங்களாவை யாரோ விற்கப் போகிறார்களாம். அதன் விவரம்

எதுவும் எனக்குத் தெரியவில்லை. தாங்கள்தான் உடனே முயற்சி செய்து என் தங்கையைக் கண்டுபிடிக்க வேண்டும்'' என்றாள்.

அந்த வரலாற்றைக் கேட்ட இளவரசர், ''ஆகா! இந்த அம்மணிபாயி அப்படிப்பட்ட துஷ்டையா! ஆகா! அவள் எத்தனை காரியங்கள் செய்திருக்கிறாள்! அவளை அணு அணுவாக வெட்டிச் சித்திரவதை செய்தாலும், அது போதுமான தண்டனையாகாதென்று நினைக்கிறேன். திருவாரூரிலிருந்து ஷண்முகவடிவை அவள் எப்படிக் கோலாப்பூருக்கு வரவழைத்தாள்? அந்த விவரம் உனக்குத் தெரியுமா?'' என்றார்.

பூர்ணசந்திரோதயம், ''தெரியும். அவள் சாமளராவிடம் தான் கோலாப்பூருக்குப் போய்விட்டு வந்த வரலாற்றைச் சொன்ன போது, அதையும் சொன்னாள். ஆகையால், எல்லா விவரத்தையும் நான் மறைவிலிருந்து தெரிந்து கொண்டேன். இப்போது கொஞ்சநேரத்துக்கு முன் ஒருவர் வந்துவிட்டுப் போனாரே. அவருடைய பெயர் கலியாணசுந்தரம் பிள்ளை என்பது. அவர் இந்த ஊரிலுள்ள ஒரு பெருத்த தனிகருக்கு நெருங்கிய உறவினர். அந்தத் தனிகருடைய பெயரை நான் இப்போது சொல்லப் பிரியப்படவில்லை. அவர் நிரம்பவும் துன்மார்க்க புத்தியுடையவர். அவருடைய குணமும் நடத்தையும் இந்தக் கலியாணசுந்தரம் பிள்ளைக்குப் பிடிக்கவில்லை ஆகையால், அவர் அந்தத் தனிகருடைய முகத்திலும் விழிக்கக் கூடாதென்று இந்த ஊரைவிட்டே திருவாரூருக்குப் போய், அங்கே ஒரு சிறிய வீட்டையும் சொற்ப நிலத்தையும் வாங்கிக் கொண்டு இருந்து வருகிறார். அவர் தம்முடைய சொந்தப் பெயரை வைத்துக் கொண்டிருந்தால் இந்தத் தனிகர் அவரைத் தேடிக் கண்டுபிடித்துத் தன்னிடம் வரும்படி உபத்திரவிப்பார் என்றும், தாம் இன்ன இடத்திலிருக்கிறோம் என்பது இந்தத் தனிகருக்குத் தெரியாமலிருக்க வேண்டுமென்றும், அதுவுமன்றி, இந்தத் தனிகருடைய நடத்தை நிரம்பவும் கெடுதலாயிருப்பதால், தாம் இவருடைய

உறவினரென்று உலகத்தாருக்குத் தெரிந்தால், அதனால் தமக்கும் இழிவு ஏற்படுமென்றும் நினைத்து அவர் தம்முடைய பழைய பெயரை மாற்றி வைத்துக்கொண்டு இருந்து வருகிறார். சகலமான உத்தம லக்ஷணங்களும், மேன்மையான குணங்களும் அவர் ஒருவரிடத்திலேயே பூர்த்தியாக நிறைந்திருக்கின்றன வென்று சொல்லலாம். நம்முடைய ஷண்முகவடிவும் அதே மாதிரியான உயர்ந்த லக்ஷணங்கள் பொருந்தியவள். அவர்களிருவரும் ஒருவருக்கொருவர் தகுதியானவர்கள் என்று ஈசுவரனே அவர்களிருவரும் சந்தித்து அறிமுகம் செய்து கொள்ளும்படியான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தினார் என்று நான் நினைக்கிறேன். திருவாரூருக்கு அருகிலுள்ள ஒரு மடத்தி லிருந்த ஒரு பண்டாரம் திருவாரூருக்கு வந்துவிட்டுத் திரும்பி ஊருக்குப் போன ஷண்முகவடிவை ஏமாற்றித் தன்னுடைய மடத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், அவளைப் பலாத்காரம் செய்ய ஏற்பாடு செய்து கொண்டிருந்த சமயத்தில், இவர் தற்செயலாக அங்கே போய், அவளைக் காப்பாற்றி ஊருக்கு அழைத்து வந்தார். அதிலிருந்து இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. அந்தச் சங்கதி எனக்கும் தெரிந்தது. முடிவில் அவர்களிருவருக்கும் ஒருவரை ஒருவர் கலியாணம் செய்து கொள்வதென்று தீர்மானித்தோம். அப்போதும் நான் இந்த வஞ்சகியான அம்மணிபாயியின் கொடிய வலையில் மீளமாட்டாமல் அகப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆகையால், என் தங்கையின் கலியாணத்துக்குக் கூட நான் வர இயலவில்லை என்று அவளுக்கு எழுத நேர்ந்தது. அதை நினைத்தால் இப்போதும் என் மனம் பதறுகிறது. அவர் நேரில் வந்து என்னை அழைத்துக்கொண்டு போவதற்காக இந்த ஊருக்கு வந்த இடத்தில் கூத்தாடி அன்னத்தம்மாளின் மகள் சிவபாக்கியம் அவரிடம் அகப்பட்டு அம்மணிபாயியின் சதியாலோசனையை வெளியிட, அவர் தம்முடைய கலியாணத்தை நிறுத்திவிட்டு தாதிப் பெண்களைப் பின்பற்றி கோலாப்பூர் வரையில் போனாரென்ற விவரமெல்லாம்

அவரே இப்போது சொன்னாரல்லவா? அவ்விடத்தில் அந்தப்பெண்களுக்கு அவர் எவ்வளவோ நீதியும் நல்ல புத்தியும் புகட்டியும், அவர்கள் மாறுபடாமல் அவரையே மயக்கித் தங்களுடைய வலையில் போட்டுக்கொள்ள யத்தனித்தார்கள். அவர் திடமான மனமுடையவர் ஆகையால் இவர்கள் அவருடைய மன உறுதியை அசைக்கமுடியாமல் போயிற்று. அவரைச்சும்மா விட்டுப் போனால், அவர் பூனாவுக்குப் போய், லலிதகுமாரி தேவியாரை நேரில் கண்டு எல்லா விஷயங்களையும் சொல்லி எச்சரித்து விடப் போகிறாரே என்று பயந்து உடனே அம்மணிபாயிக்கு ஆளை அனுப்ப அவள் உடனே பெரிய ராணியம்மாளிடம் தந்திரமாக ஒரு கடிதம் வாங்கிக் கொண்டு கோலாப்பூர் போய், அதை அந்த ஊரில் பெரிய ராணிக்குப் பழக்கமான போலீஸ் கமிஷனரிடம் கொடுத்து அவர் மூலமாக இவரைச் சிறைப்படுத்தி இவரிடத்தி லிருந்த சொந்தக் கடிதங்கள் முதலிய தஸ்தாவேஜிகளை எடுத்துப் படித்துப்பார்த்து, இவர் உண்மையில் இன்னார் என்பதையும் இவருடைய உண்மைப் பெயர் இன்ன தென்பதையும், இன்னம் மற்ற வரலாறு எல்லா வற்றையும் தெரிந்துகொண்டதன்றி, அந்தத் தாதிப் பெண்களுள் ஒருத்தியைச் சிறைச்சாலைக்குள்ளும் அனுப்பி அவருடைய மனதைக் கலைக்கப் பற்பல ஏற்பாடுகளைச் செய்தாள்; அதுவுமன்றி, அவர் ஷண்முகவடிவைக் காதலிக்கிறார் என்பதையும் கடிதங்களிலிருந்து தெரிந்து கொண்டாள். ஷண்முகவடிவு என்னுடைய தங்கை என்பதை அவள் ஏற்கெனவே என்னிடத்திலிருந்து தெரிந்து கொண்டிருந்தாள் ஆதலால், எனக்குத் தெரியாமல் அவளைத் திருவாரூரிலிருந்து கோலாப்பூருக்கு வருவித்து கலியாணசுந்தரம் பிள்ளை துன் மார்க்கத்தில் இறங்கிக் கெட்டுப்போய் விட்டதாக அவளுக்குக் காட்டி அவளுடைய மனதை மாற்றி அவளைத் தந்திரமாகத் தஞ்சைக்கு அழைத்து வந்து மருங்காபுரி ஜெமீந்தாரிடம் அவளை விட்டு அதனால் பெருத்த திரவியம் சம்பாதிக்க

வேண்டுமென்பது அம்மணிபாயியின் எண்ணம். அதே மாதிரி அவள் கடைசி வரையில் நிறைவேற்றிவிட்டு, எல்லா விவரங்களையும் என்னிடமும் சாமளராவிடமும் தெரிவித்தாள். ஆனால், என் தங்கை சம்பந்தப்பட்ட விஷயங்களை எல்லாம் என்னிடம் சொல்லாமல் மறைத்து அதை எனக்குத் தெரியாமல் சாமளராவிடம் சொன்னபோது நான் பக்கத்து அறையில் இருந்து எல்லாவற்றையும் கேட்டேன். அதன்பிறகு மருங்காபுரி ஜெமீந்தாருடைய மாளிகையில் நெருப்புப் பிடித்துக் கொண்ட சங்கதி தெரிந்தது. நான் உடனே ஆள்களைவிட்டு மருங்காபுரி
ஜெமீந்தாருடைய வீட்டிலும் திருவாரூரிலும் தேடச் செய்தே
அவள் எவ்விடத்திலும் காணப்படவில்லை ஆகையால்
முதல் என் மனம் படும்பாடு தெய்வத்துக்குத்தான்
வேண்டும். ஆனால் நான் அம்மணிபாயியின் வஞ்சக
அகப்பட்டு இந்த அரண்மனையில் தங்களி
கொண்டிருந்தேன். ஆகையால், என்னுடைய ம
வெளியிட மாட்டாமலும், இந்த நிலைமை
கொள்ள மாட்டாமலும் தவித்துக் கொண்ட
எனக்கு ஒரு யோசனை தோன்றியது. ந
பஞ்சண்ணா ராவையும் சில ஆள்க
அனுப்பி இந்தக் கலியாணசுந்த
அவரைப் பலவந்தமாக இர
அவரிடம் ஓர்அநாமதேயக்
பூனாவுக்குப் போய் ல
அதனால் எனக்குக்
இனிப் பூனாவுக்கே
எழுதியதோடு,
ஜெமீந்தாரு
அவளை அ
எழுதிபி
வந்த
அ

இடத்தில் இந்தக் கலியாண சங்கதியைத் தெரிந்து கொண்டு இங்கே வந்திருக்கிறார் போலிருக்கிறது. திருவாரூரில் இருந்த என் அத்தை, வேலைக்காரி முதலியோர் எங்கே போனார்கள் என்பதும், அந்தப் பங்களாவை யார் விற்கப் போகிறார்கள் என்பதும் தெரியவில்லை. ஷண்முகவடிவின் அனுமதி யில்லாமல், அப்படிப்பட்ட காரியங்களைச் செய்பவர்கள் யார் என்பதுதான் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது'' என்றாள்.

உடனே நீலமேகம்பிள்ளை தாம் உயிலைப் படித்தபிறகு
ருவாரூருக்குப் போய்த் திரும்பி வந்து இன்ஸ்பெக்டரிடம்
முகவடிவைப் பற்றித் தெரிந்துகொண்ட விஷயங்
ம், மருங்காபுரி ஜெமீந்தாரைப் பார்த்த வரலாற்றையும்
க்டர் ஷண்முகவடிவு, கமலம், லீலாவதி ஆகிய
தேடிப் பிடிக்க முயற்சி செய்து கொண்டிருப்ப
கக் கூறி, முடிவில், ''நீலலோசனி யம்மாள்,
வேலைக்காரிகள் ஆகிய எல்லோரும் இனி
ாயிருப்பது சரியல்லவென்று நினைத்து
ழைத்து வந்து என்னுடைய மாளிகையில்
கிறேன். அந்த பங்களா இனி நமக்குத்
தை விற்க நான்தான் ஏற்பாடு
க்குள்ள ஏராளமான பெருத்த
ி உங்கள் இருவருக்குமே
திலுள்ள அந்தப் பங்களா
ன்று நினைத்தே நான்
றாமல் அப்படிச்

ாடு பேசத்
டுப் பிரிந்து
றைந்து
பாது
கு

நம்முடைய திகில் அதிகப்பட்டு போய்விட்டதே! கமலம் சொன்னதைக் கேட்டபிறகு, ஷண்முகவடிவுதான் ஒரு வேளை இந்த ஊரிலேயே எங்கேயாவது ஜாகை வைத்துக்கொண்டு நீலலோசனியம்மாள் முதலியோரை இங்கேயே அழைத்துக் கொண்டு பங்களாவையும் விற்க ஏற்பாடு செய்திருக்கிறாளோ என்ற சந்தேகம் உதித்தது. அவள் பத்திரமாக இருக்கிறாள் என்ற எண்ணமும், அவளை நாம் எப்படியும் கண்டுபிடித்து விடலாமென்ற எண்ணமும் உண்டாயிற்று. இப்போது நீரே அந்தக் காரியங்களைச் செய்தவர் என்பதிலிருந்து, அவள் எவ்விடத்திலோ அபாயத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாள் என்றல்லவோ நினைக்க வேண்டியிருக்கிறது. இன்ஸ்பெக்டர் என்னென்ன முயற்சிகள் செய்தார் என்பதையும், ஏதாவது தகவல் கிடைத்ததா என்பதையும் நான் கேட்கிறேன். இந்த நகரத்துப் போலீசார் எல்லோரும் இன்றையதினம் இங்கே வந்து அணிவகுத்து நிற்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. போலீஸ் இன்ஸ்பெக்டரும் அவசியம் இங்கே வந்திருப்பார். நீங்கள் கொஞ்ச நேரம் இங்கேயே இருங்கள். நான் கதவைத் திறந்து வெளியிலிருக்கும் சேவகன் எவனையாவது கண்டு இன்ஸ்பெக்டரை அழைத்து வரச் செய்கிறேன்'' என்று கூறியபின் எழுந்து வாசலை நோக்கிச் சென்று கதவை மெதுவாகத் திறக்க, அதற்கு அப்பால் நின்ற ஒரு யௌவன புருஷர் புன்னகை செய்த முகத்தோடு உள்ளே இளவரசர் முதலியோர் இருந்த அறைக்குள் நுழைந்தார். அவ்வாறு அவர் அநாகரிகமாக உள்ளே நுழைந்ததைக் கண்ட இளவரசர் நிரம்பவும் ஆத்திரமடைந்தவராய் கோபப் பார்வையாக அவரைப் பார்த்து, ''என்ன இது? நாங்கள் தனியாக இருந்து சில குடும்ப ரகசியங்கள் பேசுமிடத்தில் என்னுடைய அனுமதி யில்லாமல் வருவது புதுமையாக இருக்கிறதே. வேறே யாராவது அப்படிச் செய்தார்கள் என்றாலும் அதை நம்பலாம். ரக்ஷாமிர்தம் ஜெமீந்தார் இப்படிச் செய்வது என் மனசுக்கு நம்பிக்கைப்படவே இல்லையே! நீர் ரக்ஷாமிர்தம் ஜெமீந்தார் தானா? அல்லது

அவரைப் போன்ற வடிவமுள்ள வேறே மனிதரா என்ற சந்தேகம் கூட இப்போது எனக்கு உண்டாகியது. இந்த ராஜ்யத்தில் ஜெமீந்தார்கள் எல்லோரிலும் சகலமான அம்சங்களிலும் சிறந்தவர் யாரென்றால், எல்லோரும் ரக்ஷாமிர்தம் ஜெமீந்தார் என்று சொல்வார்கள். செல்வத்திலும் சரி, அழகிலும் சரி, உத்தமமான குணவிசேஷங்களிலும் சரி, இன்னும் ஒவ்வொரு விஷயத்திலும் உமக்கு நிகரானவர் நீரேயன்றி வேறே யாருமில்லை என்று சொல்லுகிறார்கள். நான் கூட உமக்குச் சமமாவேனோ என்று நான் பல தடவைகளில் சந்தேகித்ததுண்டு. அப்படிப்பட்ட தெய்வீக லக்ஷணங்களும் சீல குணமும் வாய்ந்தவராகிய நீர் நான் ஒரு ஸ்திரீயோடு தனியாக இருக்கும் இந்த இடத்திற்குள் நுழைவது ஒழுங்காகுமா? எல்லா வற்றையும் உணர்ந்து எல்லோருக்கும் நற்குணமும் நன்னடத்தை யும் கற்றுக்கொடுக்கத் தக்க நிலைமையிலுள்ள உமக்கு நான் புத்தி சொல்வதென்றால் என் மனம் கிலேசமடைகிறது'' என்றார்.

அதைக்கேட்ட ரக்ஷாமிர்தம் ஜெமீந்தார் நிரம்பவும் பணிவாகவும் மிகுந்த கிலேசத்தோடும் பேசத் தொடங்கி, ''மகாராஜா! நான் செய்வது தவறு என்பதை அறிந்தும், ஓர் அவசரமான விஷயத்தைக் கருதி உள்ளே வர நேர்ந்தது. கோபிக்கக்கூடாது. இங்கே இருக்கும் கமலம் என்ற பெண்ணின் தங்கை என் வீட்டிலிருக்கிறாள். அவளை இங்கே அழைத்து வரும்படி ஒரு தாதியை அவசரமாக அனுப்பியிருக்கிறேன். இந்த அறைக்குப் பின்புறவாசல் ஏதாவது இருந்தால் அதன் வழியாக அழைத்துவரும்படி நான் சொல்லி அனுப்பியிருக்கிறேன். அவள் போய்க் கால்நாழிகை நேரமிருக்கும். இன்னம் சொற்ப நேரத்தில் வந்துவிடுவாள். தாங்கள் கதவைத் திறந்தால், நானும் உள்ளே வரலாமென்று கொஞ்சநேரமாக நான் வாசற்படி யிலேயே இருந்தேன். தாங்கள் வெளியிலிருந்தபடி என்னோடு பேசினால், ஜனங்கள் நம்மைப் பார்த்து ஏதாவது நினைத்துக்

கொள்வார்கள் என்று எண்ணி, தாங்கள் கதவைத் திறந்தவுடன் உள்ளே நுழைந்தேன்'' என்றார்.

அதைக்கேட்ட இளவரசர் திடுக்கிட்டு, ''ஹா! ஷண்முகவடிவு உங்களுடைய வீட்டிலா இருக்கிறாள்! இதுவும் தெய்வானுகூலந் தான். அவள் வேறே எவ்விடத்திற்குப் போனாலும், மனிதர் அவளிடம் துர்மோகம் கொள்வர். உம்மிடம் தெய்வலோகத்து அப்ஸ ஸ்திரீயை விட்டு வைத்தாலும் கொஞ்சமும் பயமில்லை'' என்றார்.

அவர்களது சம்பாஷணையைக்கேட்ட கமலமும், நீலமேகம் பிள்ளையும் சகிக்க இயலாத அபாரமான மகிழ்ச்சியும் குதூகலமும், மனவெழுச்சியும் முகமலர்ச்சியும் அடைந்து, ''ஹா! அப்படியா! அவள் இப்போது இங்கேயே வருவாளா?'' என்று மிகுந்த வியப்போடு கூறினர். அதே காலத்தில் இளவரசர் முன்பக்கத்து வாசற்கதவை மறுபடியும் மூடிவிட்டு, ரக்ஷாமிர்தம் ஜெமீந்தாரையும் அழைத்துக்கொண்டு கமலம், நீலமேகம் பிள்ளை ஆகிய இருவரும் இருந்த இடத்தை அடைந்து தமது ஆசனத்தில் அமர்ந்தார். அதே க்ஷணத்தில் அந்த அறையின் பக்கத்துக் கதவு திறந்துகொண்டது; உடனே ''அக்கா கமலம்!'' என்று ஓர் இனிய குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து அற்புதமான ஒரு ஜோதி தோன்றுவதுபோல, திவ்ய தேஜோ மயமான அலங்காரத்தோடு இருந்த ஷண்முகவடிவும் விரைவாக உள்ளே நுழைந்து மற்றவர் இருப்பதையும் மறந்து பரவசமடைந்து கமலத்தை நோக்கி ஓடிவர, அவளைக் கண்ட கமலமும் அதுபோலவே, சகிக்க வொண்ணாத ஆவலும் வாஞ்சையும் உருக்கமும் கொண்டவளாய் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து தனது அருங்குணத் தங்கையை அணுக, இருவரும் தாயைப் பிரிந்து கூடிய கன்றுபோல ஒருவரையொருவர் ஆவலோடு கட்டித் தழுவ, இருவரது கண்களிலிருந்தும் ஆனந்த பாஷ்யமும் மாலைமாலையாகப் பெருகி வழிந்தது. இருவரும் தமது துக்கப் பெருக்கையும் சந்தோஷ எழுச்சியை

யும் தாங்க மாட்டாதவராய்த் தேம்பித் தேம்பி அழுதனர். இருவரது தேகங்களும் பிரசண்டமாருதத்தில் பட்டு அல்லல் படும் மாந்தளிர் போல நடுங்கிப் பதறியது. அவர்களிருவரும் மற்றவர் இருப்பதை மறந்து அவ்வாறு சுவர்க்க போகம் அனுபவித்துக் கொண்டு மௌனத்தில் ஆழ்ந்திருக்க, அந்த நிலைமையைக் கண்ட நீலமேகம் பிள்ளையும் தம்மைமீறித் தடதடத்துப்போய் கண்ணீர் விடுத்து வாய்விட்டுத் தேம்பித் தேம்பி அழுதார். இருவரும் ஒரே மாதிரியான தோற்றத்தோடு இரண்டு அப்ஸர ஸ்திரீகள்போல இருந்ததையும் ஷண்முக வடிவு மகாலக்ஷ்மியின் அவதாரம் போலவும், கமலம் சரஸ்வதியின் அவதாரம் போலவும் இருந்ததைக் காணக்காண அப்படிப்பட்ட இருவரும் தமது தங்கைகள் என்ற நினைவினால் அவளது மெய் புளகித்துப் பரவசமடைந்தது. அப்போதே ஷண்முகவடிவின் முகத்தை நன்றாக உற்றுப்பார்த்த இளவரசர் திடுக்கிட்டுப் பெரிதும் திகிலும் கலக்கமும் முகமாறுபாடும் அடைந்து, ''என்ன ஆச்சரியம் இது! இந்தப் பெண்ணா ஷண்முகவடிவு! ஆகா! எனக்குத் தெரியாமலேயே நான் செய்திருக்கும் பாவக் கிருத்தியங்களுக்கு முடிவு இராது போலிருக்கிறதே! பாவச் செய்கையை ஷண்முகவடிவினி டத்திலும் அல்லவா செய்ய முயன்றேன். ஆகா! என்ன கஷ்டம் இது! என் குழந்தைகளைக் கண்டு நானே துர்மோகம் கொள்ளும்படி ஈசுவரன் செய்ய வேண்டுமா? ஐயோ! நான் இவர்களை இன்னார் என்று தெரிந்துகொள்ள வேறு வழி இல்லையா? நான் இவர்களைக் கண்டு தப்பான எண்ணங் கொண்டுதானா இவர்கள் என் குழந்தைகள் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்? இதனால் என் குழந்தைகளின் மேன்மைக்குணமும், கற்பின் உறுதியும் நன்றாக வெளியான தோடு என்னுடைய துர்க்குணமும் கண்டிக்கப்பட்டது போலாயிற்று. எனக்கு நற்புத்தி புகட்டி என் குழந்தைகளை என்னிடம் கொண்டு வந்து சேர்க்க வேண்டுமென்ற கருத்தோடு கடவுள் இம்மாதிரியான திருவிளையாடல் நடத்தி இருக்கிறா

ரென்றே எண்ண வேண்டியிருக்கிறது. நான் இதுவரையில் அன்னிய மாதரைக்கண்டு துர்மோகம்கொண்டு கெட்ட வழியில் பிரவர்த்தித்து வந்தேன். ஆதலால், அவர்களுக்குச் சொந்தமான புருஷர்களுடைய மனம் எப்படிக் கொதிக்கும் என்பதை நான் பிரத்தியக்ஷமாக அனுபவிக்கும்படி என் சொந்த குமாரத்தி களையே கடவுள் என்னிடம் கொணர்ந்துவிட்டு என்னை நிரம்பவும் கொடுமையாகத் தண்டித்து விட்டார். இந்தத் தண்டனை என் ஆயுட்கால பரியந்தம் போதுமானது. இதை நான் ஒரு நாளும் மறக்கமாட்டேன். இன்றோடு எனக்கு நல்ல புத்தி வந்தது என்று கூறி அபாரமான வெட்கமும் துக்கமும் அடைந்து தமது கைகளால் முகத்தை மறைத்துக்கொண்டு கண்ணீர் விடுத்துக் கலங்கி அழுதார்.

அதைக்கண்ட நீலமேகம்பிள்ளை இளவரசரை நோக்கி, "அப்படியானால், தாங்கள் ஷண்முகவடிவை இதற்குமுன் சந்தித்துப் பேசியிருக்கிறீர்கள் போலிருக்கிறது!" என்றார்.

இளவரசர், "ஆம். இரண்டு மூன்று தினங்களுக்கு முன் ஹேமாபாயி என்ற ஸ்திரீ ஷண்முகவடிவை ஏமாற்றி என்னிடம் கொண்டுவந்துவிட்டாள். அப்போது நான் இவளோடு பேசி இவளை நான் கலியாணம் செய்து கொள்வதாகச் சொன்னேன். ஆகா! அப்போது இவள் சொன்ன நீதியும், காட்டிய கற்பின் உறுதியும் என்னவென்று சொல்லுவேன்! என்னிலும் வயசில் எவ்வளவோ சிறியவளான இந்தக் குழந்தை இவ்வளவு மன உறுதி உடையவளாய் இருக்க, குட்டிச் சுவர்போல வயது முதிர்ந்த நான் மனவுறுதி யில்லாமல் சபலசித்தனாய்த் திரிவதை நினைக்க நினைக்க நானும் ஒரு மனிதனா என்ற எண்ணம் உதிக்கிறது" என்றார்.

நீலமேகம்பிள்ளை, "இங்கே வந்த ஷண்முகவடிவு பிறகு எப்படி தங்களிடமிருந்து தப்பிப் போனாள்?" என்றார்.

இளவரசர், "நான் அன்றையதினம் இரவில் இவளைக் கண்டு மறுநாளைக்குள் எப்படியும் இவள் என்னுடைய பிரியப்படி

நடந்துகொள்ள வேண்டுமென்று சொல்லிவிட்டு வந்தேன். இவளிருந்த இடத்தின் கதவுகளெல்லாம் வெளியில் தாளிடப் பட்டிருந்தன. மறுநாள் காலையில் வேலைக்காரி, இவளிருந்த விடுதிக்குப் போய்ப் பார்க்க, கதவுகளெல்லாம் உட்புறத்தில் தாளிடப்பட்டிருந்தன. ஒன்றை உடைத்து உள்ளே போய்ப் பார்க்க இவள் காணப்படவே இல்லை. கதவுகளெல்லாம் வெளியிலும் தாளிடப்பட்டபடியே இருந்தன. ஆகையால், இவள் முன் பக்கத்திலிருக்கும் பலகணித் திறப்பின் வழியாகக் கீழே விழுந்து இறந்து போயிருப்பாளோ என்று நினைத்து நான் உடனே ஓர் ஆளைக் கீழே அனுப்பிப் பார்த்தேன். அங்கே எவ்விதக் குறிப்பும் காணப்படவில்லை. இவள் எப்படித்தான் மாயமாக மறைந்து போயிருப்பாள் என்று நான் எண்ணமிட்டு யாராவது வேலைக்காரிதான் கதவைத் திறந்து இவளை வெளியில் அனுப்பியிருப்பாள் என்று முடிவு செய்து கொண்டேன். இந்தக் கலியாண வைபவத்தில் வேறு விஷயங் களில் என் கவனம் சென்றதால், நான் இவளைப் பற்றிய நினைவை அதோடு மறந்துவிட்டேன். இவள் எப்படித் தப்பித்துப் போனாள் என்பதை இவளிடமே கேட்டுத்தெரிந்து கொள்வோம்'' என்றார்.

அந்த சம்பாஷணையைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த ரக்ஷாமிர்தம் ஜெமீந்தார், ''மகாராஜாவே! தங்களுடைய சந்தேகத்தை நான் நிவர்த்தி செய்கிறேன். தாங்கள் விட்டுப் போன பின் இந்தப் பெண் தனக்குக் கொண்டுவரப்பட்ட போஜனத்தை உண்பவள்போல நடித்து, வேலைக்காரியை வெளியில் அனுப்பிவிட்டுக் கதவுகளின் உட்புறத் தாழ்ப்பாளை எல்லாம் மாட்டிவிட்டு முன் பக்கத்திலிருந்த பலகணித் திறப்பின் வழியாக வெளிப்பட்டு பக்கத்திலிருந்த சாக்கடைத் தகரக்குழாயைப் பிடித்துக்கொண்டு கீழே இறங்கி கொஞ்சதூரம் வர, அப்போது வளையங்கள் பிடுங்கிக் கொண்டமையால், குழாய் அப்படியே செங்குத்தாய் நேராக எதிர்வீட்டுப் பக்கம்

சாய்ந்தது. இவள் தன் கைப்பிடியை விடாமல் உறுதியாகவே இருந்தாளாம். இவள் இறங்கிய இடத்துக்கு எதிரில் என்னுடைய மாளிகை இருக்கிறது. குழாய் சுமார் 100 அடி உயரம் இருக்கலாம். அது என் மாளிகையில் வந்து படேரென்று சாய்ந்தது. குழாயின் முக்கால் பக்கத்தில் இந்தப் பெண் தொற்றிக் கொண்டிருந்தாள். இவள் இருந்த இடத்திற்குச் சமீபத்தில் மாளிகையின் இரண்டாவது மாடத்தின் ஜன்னல் இருந்தது. அதன் கம்பியை இவள் பிடித்துக்கொண்டு அடியில் சுவர் பிதுங்கி நீண்டிருந்த இடத்தில் கால்களை வைத்துக் கொண்டாள். அடுத்த க்ஷணத்தில் குழாய் ஒரு பக்கமாகச் சாய்ந்து தரையில் விழுந்துவிட்டது. இந்தப் பெண் ஜன்னலின் கம்பியைப் பிடித்துக் கொண்டிராவிட்டால், இவளும் அடுத்த க்ஷணத்தில் குழாயோடு கீழே விழுந்து அதோகதியாய்ப் போயிருப்பாள். தெய்வமே இவளுக்குத் துணையிருந்து அளவற்ற மனோ தைரியத்தை இவளுக்குக் கொடுத்து அப்படிப்பட்ட பெருத்த அபாயத்திலிருந்து இவளைக் காப்பாற்றியது. இவள் வந்து தொற்றிக் கொண்ட ஜன்னலுக்குப் பக்கத்தில் என்னுடைய சயனம் இருந்தது. ஆகையால், நான் அதில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தவன் தகரக்குழாய் வந்து படேரென்று மோதிய ஓசையைக்கேட்டு விழித்துக்கொண்டு வெளியில் பார்த்தேன்; இந்தப் பெண் குழாயிலிருந்து தாவி சரேலென்று ஜன்னலைப் பிடித்துக்கொண்டு அடியிலிருந்த கட்டைச்சுவரில் கால்களை வைத்துக் கொண்டதும், குழாய் கீழே விழுந்ததும் தெரிந்தன. நான் உடனே திடுக்கிட்டுப் பதறிப்போய் சரேலென்று எழுந்து, அந்தப் பெண் கீழே விழுந்து விடுவாளோ என்று பயந்து கலவரமடைந்து, பக்கத்திலிருந்த என் வஸ்திரத்தை எடுத்து முறுக்கி வெளியில் விட்டு இவளுடைய இடுப்பைச் சேர்த்து ஜன்னல் கம்பிகளில் இறுக்கிக் கட்டிவிட்டு, பயப்படாமல் இருக்கும்படி இவளிடம் சொல்லிவிட்டு, நான் உடனே கீழே இறங்கி ஓடி, வேலைக் காரர்களை எழுப்பி நாலைந்து ஏணிகளை வரவழைத்து

ஒன்றாகச் சேர்த்துக்கட்டி முன் பக்கத்தில் வைத்து அது சாயாமல் பல இடங்களில் அதை ஜன்னல்களில் கட்டி, ஓர் ஆளை மேலே ஏற்றி இந்தப் பெண்ணை நிரம்பவும் ஜாக்கிரதையாக கீழே இறக்கிக் கொண்டுவரச்செய்து, இவளை என்னுடைய மாளிகைக்குள் அழைத்துக் கொண்டு போனேன். இவளுடைய உடம்பு கை கால்களெல்லாம் படபடத்து நடுநடுங்கிக் கொண்டிருந்தன. உடனே இவளுக்குத் தாகத்திற்கு தண்ணீர் கொடுத்து ஒரு பக்கத்தில் உட்கார வைத்து இவளுடைய வரலாறுகளை எல்லாம் கேட்டேன். இவள் முதலில் என்னிடம் உண்மையைச் சொல்ல பயந்தாள். இதற்கு முன் பல இடங்களில் முதலில் இவளைக் காப்பாற்றி நல்லவர்கள் போல நடித்தவர்கள் எல்லாம் முடிவில் இவளுடைய விஷயத்தில் துர் எண்ணங் கொண்டு வஞ்சித்துவிட்ட காரணத்தினால், இவள்தன் வரலாற்றைச் சொல்ல பயப்படுவதாகச் சொன்னாள். நான் அப்படிப்பட்ட மனிதனல்ல என்று உறுதிமொழி தந்து இவளைத் தேற்ற, இவள் என்னைத் தனியாக வைத்துக்கொண்டு தன்னுடைய வரலாறுகளை எல்லாம் தெரிவித்ததன்றி, முடிவில் தான் இளவரசரால் சிறை வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து குழாயைப் பிடித்துக்கொண்டு இறங்கியபோது, அது பிய்த்துக் கொண்டு என் வீட்டில் விழுந்த விவரத்தையும் சொன்னாள். அந்த வரலாற்றையும் கேட்டவுடனே என் மனம் பதறியது. இந்தப் பெண்ணுக்கு இப்படிப்பட்ட துன்பங்கள் நேர்ந்தனவே என்ற இரக்கமும் துயரமும் என் மனசில் குடிகொண்டது. நான் உடனே இந்தப் பெண்ணைத் தேற்றி, சில தினங்கள் வரையில் என் மாளிகையில் இருந்தால், நான் கமலத்தைத் தேடிப் பிடிப்பதாகச் சொல்ல, இவளும் அதற்கு இணங்கினாள். அன்றைய தினம் இரவில் நான் இன்னொரு காரியமும் செய்தேன். அரண்மனையில் இருப்பவர்கள் மறுநாள் இவளை எப்படியும் தேடுவார்கள் ஆகையால், தகரக்குழாய் விழுந்திருப்பதிலிருந்து இவள் அதன் மூலமாக வந்து என் வீட்டிலிருக்கிறதாக யூகித்துக் கொண்டால், மறுபடி இளவரசர்

இவளைத் தொடரப் போகிறாரே என்று பயந்து, உடனே ஆட்களைவிட்டு அந்தக் குழாயை அடியோடு எடுத்துக்கொண்டு போய்த் துண்டு துண்டாக உடைத்து அகழிக்குள் எறிந்துவிடும் படி செய்துவிட்டேன். ஆகவே, இவள் இறங்கி வந்த குறிப்பே தெரியாமல் போய்விட்டது. இந்த ஊர்ப் போலீஸ் இன்ஸ்பெக்டரை மறுபடியும் பார்த்து அவரிடம் தன் அக்காளைப் பற்றி விசாரித்துவிட்டு ஊருக்குப்போக வேண்டு மென்று இந்தப் பெண் பிரியப்பட்டாள். நான் இந்த ஊர்ப் போலீஸ் இன்ஸ்பெக்டருக்குப் பல தடவை ஆட்களை அனுப்பிப் பார்த்தேன். அவர் ஏதோ ஓர் அவசர விஷயத்தைக் கருதி ஐம்பது ஜவான்களோடு காசா நாட்டுப்பக்கம் போயிருப்பதாகவும், இன்றையதினம் அரண்மனைக் கலியாணத்திற்கு அவசியம் அவர் வந்துவிடுவார் என்றும் சொன்னார்கள். ஆகையால், அவரைக் காணும் வரையில் என் ஜாகையில் இருக்கும்படி நான் இந்தப்பெண்ணிடம் கேட்டுக் கொண்டேன். அதுபோலவே இவள் இருந்தாள். அரண்மனை யிலிருந்து எனக்குத் திருமணப் பத்திரிகை வந்தது. அதற்காக வந்திருந்து, இவ்விடத்திலேயே இன்ஸ்பெக்டரையும் பார்த்து ஷண்முகவடிவின் சங்கதியை அவரிடம் தெரிவித்துக் கலியாணம் முடிந்தவுடன் அவரையும் அழைத்துக்கொண்டு போகலாமென்று நினைத்து நான் வந்து கலியாண மண்ட பத்தில் மற்ற ஜெமீந்தார்களுக்கிடையில் உட்கார்ந்தி ருந்தேன். கொஞ்சநேரத்திற்கு முன் ஒருவர் கலியாணத்தை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டாரல்லவா; அவர் முடிவாகச் சொல்லிவிட்டுப் போன வார்த்தை என் காதில் விழுந்தது. அதாவது, இந்தப் பெண்ணைப் பார்த்து அவர் கமலமென்று அழைத்து, திருவாரூரிலுள்ள இவளுடைய தங்கை ஷண்முகவடிவு காணப்படவில்லை என்று தெரிவித்தார். அதைக் கேட்டவுடனே எனக்கு உண்மையெல்லாம் விளங்கி விட்டது. அம்மணிபாயி கமலத்தைத்தான் பூர்ணசந்தி ரோதயமாக மாற்றியிருக்கிறாள் என்ற நிச்சயம் ஏற்பட்டது.

உடனே நான் புறப்பட்டுப்போய் ஷண்முகவடிவுக்கு அவளுடைய அக்காளைப்பற்றிய நல்ல செய்தியைச் சொல்ல வேண்டுமென்று நினைத்து எழுந்தேன். உடனே நீலமேகம் பிள்ளை எழுந்து சில விஷயங்கள் தெரிவித்தார். ஆகையால் நான் கொஞ்சம் பொறுத்திருந்து முடிவில் அவர் சொன்னதையும் கவனித்தேன். அதாவது கமலம் இளவரசருடைய பெண்ணாகத் தான் இருக்க வேண்டும் என்றும், இவளை இனி இங்கே அழைத்து வந்தால், இளவரசரால் எவ்வித உபத்திரவமும் ஏற்படாதென்றும் தீர்மானித்துக்கொண்டு உடனே அப்பால் போய் எனக்குத் தெரிந்த ஒரு தாதியைக்கண்டு அவள் உடனே என் ஜாகைக்குப் போய் இந்தச் செய்திகளை எல்லாம் ஷண்முகவடிவினிடம் சொல்லி அவளை உடனே இந்த விடுதிக்கு அழைத்துவரச் செய்துவிட்டு நான் இங்கே வந்து கொஞ்சநேரமாக வாசற்படியில் காத்திருந்தேன். ஏனென்றால், நடந்த விஷயங்களை எல்லாம் ஷண்முகவடிவு வெளியிட லஜ்ஜைப் படுவாளென்று நினைத்து, அதை நான் தெரிவிக்கலாம் என்று வந்தேன். அவ்வளவுதான் வரலாறு'' என்றார்.

அந்த விவரத்தைக்கேட்ட இளவரசரும் நீலமேகம் பிள்ளையும் வியப்பே வடிவாகமாறி, மூக்கின்மேல் விரலை வைத்து, அப்படியே ஸ்தம்பித்து நின்றனர். ஷண்முகவடிவினது கற்பின் உறுதியையும், சமயத்தில் மானம் போவதைவிடப் பிராணன் போனாலும் போகட்டும் என்று செய்த தீரச் செய்கையையும் உணர்ந்து அவர்கள் இருவரும் பூரித்து ஆனந்த பரவசமெய்தினர். கமலம் ஷண்முகவடிவை இறுகத் தழுவி ஆலிங்கனம் செய்தபடி, ரக்ஷாமிர்தம் ஜெமீந்தார் சொன்ன வரலாற்றையும் கவனித்துக் கேட்டாள். ஆதலால், அவள் ஷண்முகவடிவின் குண விசேஷங்களைப் பற்றியும், அவளுக்கு நேர்ந்த அபாயங்களைப் பற்றியும் மாறிமாறி இன்பமும் துன்பமும் அடைந்து முடிவில் அவள் தனது கற்புக்கும் உயிருக்கும் சிறிதும் ஹானியின்றி க்ஷேமமாகத் தப்பியதைப் பற்றியும் தாங்கள்

இருவரும் சந்தித்ததைப் பற்றியும் கரைகடந்த பேரானந்த மெய்திப் புளகிதமடைந்தவளாய் வாஞ்சையின் மேலீட்டினால் தழுதழுத்த நாவினளாய்ப் பேசத் தொடங்கி, "அம்மா ஷண்முகவடிவு, நான் உன்னை விட வயதில் மூத்தவளாக இருந்தாலும், பரிசுத்தமான நடத்தையிலும் மன உறுதியிலும், நீ என்னைவிட ஆயிரம் மடங்கு சிரேஷ்டமானவள் என்பதைப் பற்றி கொஞ்சமும் சந்தேகமே இல்லை. நான் சில மோசக்காரர்களுடைய வலையில் விழுந்து ராஜஸ்திரீ ஆக வேண்டுமென்ற ஆசைப் பேய்க்கு அடிமையாய் உனக்குப் பல பொய்யான தகவல்களை எல்லாம் எழுதி உன்னையும் இளவரசரையும் வஞ்சித்தேன். எனக்கு ராஜஸ்திரீ பதவி கிடைக்க வேண்டுமென்ற கருத்தோடு எத்தனையோ கொடிய சதியாலோசனைகள் செய்யப்பட்டன. ஆனால், உன் விஷயத்திலோ, இளவரசர் தாமாகவே பிரியப்பட்டு உன்னை ராஜஸ்திரீ ஆக்குவதாகச் சொல்லி வேண்டியும், அதை நீ ஒரு திரணமாக மதித்து, உன் உயிர் போவதானாலும், அதைப்பற்றி இலட்சியம் செய்யாமல், உன் கற்பைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சித்தாய். இதனால் யார் பெரியவளென்பது தெரியவில்லையா? நான் வயசிலும் சரீர ஆகிருதியிலும் உன்னைவிட உயர்ந்தவளாய் இருந்தாலும் பரிசுத்தமான நடத்தையிலும், குணவிசேஷங்களிலும் நீயே உயர்ந்தவள்" என்று கூறி ஷண்முகவடிவை ஒரு குழந்தைபோலக் கட்டிப் பிடித்து அத்யந்த பிரேமையோடு கன்னங்களில் முத்தமிட்டாள். ஆனால், ஷண்முகவடிவு நீலமேகம்பிள்ளையை அறியாதவள் ஆதலால், அவர் இருந்ததையும், இளவரசர் இருந்ததையும் கருதி மிகுந்த நாணமும் அச்சமும் அடைந்து வெட்கித் தலைகுனிந்து குன்றிப்போய் மௌனமாக நின்றாள். அதுபோலவே கமலம் ரக்ஷாமிர்தம் ஜெமீந்தாரை அறியாதவளாதலால், அவளும் ஒருவிதக் கிலேசமடைந்து தனது முழு மனதையும் கூசாமல் வெளியிட வெட்கினாள். அவர்களது நிலைமையை உணர்ந்த இளவரசர், அவர்கள் இருவரையும் பக்கத்திலிருந்த இன்னொரு

விடுதிக்கு அனுப்ப, அவ்விடத்தில் ஷண்முகவடிவும் கமலமும் தங்களது மனத்தில் பொங்கியெழுந்த பிரேமை முழுதையும் வெளிப்படுத்தி தங்களது ரகசியங்கள் யாவற்றையும் மனதை விட்டு ஒருவருக்கொருவர் கூறிக் கொண்டனர். ஷண்முக வடிவு தனக்குப் பண்டாரத்தினால் நேரிட்ட அபாயத்தின் விவரங் களையும், கலியாண சுந்தரத்தினது பழக்கம் ஏற்பட்ட விவரத்தையும் அதன்பிறகு தான் கோலாப்பூருக்குப் போய் வந்த வரலாற்றையும் பிறகு மருங்காபுரி ஜெமீந்தாரினது மாளிகையில் தனக்கு நேர்ந்த விபத்தையும் அவ்விடத்திலிருந்து தெய்வச் செயலாகத் தப்பிவந்த காலத்தில் போலீசார் பிடித்துக் கொண்டதையும், இன்ஸ்பெக்டருடன் சேர்ந்து அம்மணி பாயியின் வீட்டிற்குப்போன வரலாற்றையும் அதன்பிறகு இன்ஸ்பெக்டர் தன்னைத் தனியாக விட்டுப்பிரிந்து போக நேர்ந்தபின் தான் அண்டையிலிருந்த ஒரு மடத்தை அடைந்ததும், அவ்விடத்தில் பழைய பண்டாரம் மறுபடியும் தன்னைப் பலாத்காரம் செய்ய முயன்றது முதல் தான் தன்னை நெருப்பினால் கொளுத்திக் கொண்டது வரையிலுள்ள வரலாற்றையும், பிறகு தான் பாயில் வைத்துச் சுற்றப்பட்டிருந்த நிலைமையில் ஹேமாபாயியினால் காப்பாற்றப்பட்டு முடிவில் வஞ்சிக்கப்பட்டு இளவரசரது வலையில் அகப்பட்டுக் கொண்ட வரலாற்றையும் சவிஸ்தாரமாக எடுத்துக்கூறி, முடிவாகத் தன்னைக் காப்பாற்றிய ரக்ஷாமிர்தம் ஜெமீந்தாருடைய மேம்பாடுகளையும், கம்பீர புத்தியையும் பற்றி பன்முறை புகழ்ந்து பேசி, இந்த உலகில் கல்யாண சுந்தரம் ரக்ஷாமிர்தம் ஜெமீன்தார் ஆகிய இருவருக்கும் நிகராகச் சொல்லத் தகுந்த ஆண்மக்களே இருப்பது சந்தேகமென்றும், அவர்கள் இருவரும் தமக்குத் தாமே சமமானவர்கள் என்றும் கூறி முடித்தாள். அவள் தனக்கு நேர்ந்த அபாயங்களை எடுத்துக் கூறியதைக் கேட்டபோது, பூர்ணசந்திரோதயம் பெருத்த திகிலும் குலை நடுக்கமும் அடைந்து கலங்கிக் கண்ணீர் விட்டு அழுததன்றி அத்யந்த பிரேமையோடு தனது தங்கையைக் கட்டித் தழுவி,

''ஐயோ! என் கண்ணே! நான் இல்லாத காலத்தில் உனக்கு என்னென்ன துன்பங்கள் நேர்ந்திருக்கின்றன! ஆகா! அதை வாயால் கேட்கும்போதே எனக்கு நடுக்கம் உண்டாகிறதே. உன் நிலைமையில் நான் இருந்தால், என் கதி என்ன ஆகியிருக்குமோ தெரியவில்லையே! நான் முதன் முதலில் இந்த ஊருக்கு வந்தபோது சோமசுந்தரம் பிள்ளையைக் காணாமல் தவித்த சந்தர்ப்பத்தில் என்னிடமிருந்த பணப் பையை முடிச்சு மாறிகள் அபகரித்துக்கொண்டு போனதைக் காண, என் மனம் எவ்வளவு தவிப்புத் தவித்தது தெரியுமா? ஐயோ! நம்மிடம் ஒரு காசு கூட இல்லையே என்றும், நீங்கள் திருவாரூரில் நிராதரவாக இருக்கிறீர்களே என்று நினைத்து நான் அடைந்த கலக்கமும் கிலியும் கொஞ்சமானவை அல்ல. அதனால், என் மனசில் ஏற்பட்ட ஒரு கவலையில் நான் என் மனவுறுதியையும் பொறுமையையும் இழந்து, இந்த அம்மணிபாயியின் சொற்படி நடந்து தகாத வழியைப் பின்பற்றவும் இணங்கினேன். நீயோ எப்படிப்பட்ட மகா பயங்கரமான விபத்திலும் மனத்தளர் வடையாமல் உறுதியாகவே இருந்து கடைசிவரையில் பரிசுத்தமான வழியிலேயே நடந்து வந்திருக்கிறாய். கடவுள் உன்னுடைய யோக்கியதைக்குத் தகுந்தபடி உன்னைக் காப்பாற்றுவதற்கு நல்ல உத்தம புருஷர்களான கலியாண சுந்தரம் பிள்ளையையும் ரக்ஷாமிர்தம் ஜெமீந்தாரையும் கொண்டு வந்துவிட்டு உன்னைக் காப்பாற்றியிருக்கிறார். என்னைத் துன் மார்க்கர்களுக்கிடையில் மாட்டிவிட்டு, நான் அவர்களுடைய மோசவலையிலிருந்து மீளமாட்டாமல் செய்துவிட்டார். ஆனாலும், நான் இந்த ஊர் இளவரசரை மணந்து பட்டமகிஷி ஆகவேண்டுமென்று ஆசைப்பட்டதைத் தவிர, மனோ வாக்கு காயமாகிய திரிகரண சுத்தியாகிய யாதொரு தீங்கையும் செய்யாமல், என்னைக் காப்பாற்றிக் கொண்டேன். அந்த ஒரு யோக்கியதை மாத்திரம் இல்லாதிருந்தால், நான் மறுபடி உன் முகத்திலேயே விழித்திருக்க மாட்டேன்'' என்று கூறி தான் திருவாரூரை விட்டுத் தஞ்சைக்கு வந்தது முதல்

அதுவரையில் தான் செய்த காரியங்களை எல்லாம் விரிவாக எடுத்துக் கூறியதன்றி, கோலாப்பூர் சிறைச்சாலையில் நடந்த சம்பவங்களெல்லாம் அம்மணிபாயியின் தூண்டுதலினால் செய்யப்பட்ட காரியங்கள் என்றும், கலியாண சுந்தரத்தின் மீது எள்ளளவும் குற்றமில்லை என்றும், அவன் மகா பரிசுத்தமான நடத்தையுடைய புருஷனென்றும், அவன் சிறிது நேரத்திற்கு முன் வந்து கலியாணத்தைத் தடுக்க யத்தனித்ததையும், அப்போது அவன் தன்னைக் காட்டிக் கொடுக்காமல் பெருந்தன்மையோடு நடந்து கொண்டதையும், அதன்பிறகு நீலமேகம் பிள்ளை என்பவர் வந்து தன்னையும் இளவரசரையும் தனியாக அழைத்து உயிலைப் படிக்கச் செய்ததையும், உயிலின் விவரங்களையும் நீலலோசனி அம்மாள் முதலியோர் நீலமேகம் பிள்ளையின் மாளிகைக்கு வந்து விட்டதையும், திருவாரூர் பங்களா விற்பனைக்கு விளம்பரப் படுத்தப்பட்டிருப்பதையும் விரிவாக எடுத்துக் கூறினாள். தாங்கள் இளவரசருக்கும் இராமலிங்கபுரம் ஜெமீந்தாருடைய பத்தினிக்கும் பிறந்த பெண்கள் என்பதையும், நீலமேகம் பிள்ளை தங்களுடைய ஒன்றுவிட்ட சகோதரர் என்பதையும் கேட்ட ஷண்முகவடிவு பெரிதும் பிரமிப்பும் வியப்பும் அடைந்து அப்படியே ஸ்தம்பித்துப்போய் மௌனமாக நின்று விட்டாள். கலியாண சுந்தரம் கடைசி வரையில் பரிசுத்தமாகவே நடந்து வந்திருக்கிறான். ஆதலால், அவன் தன்னை எப்படியும் மணந்து கொள்வானென்ற ஒருவித நம்பிக்கையினால் சற்றுமுன் அவளது மனம் சந்தோஷத்தினால் மலர்ந்தது. ஆனாலும், தாங்கள் ஒரு பிறப்புக் குழந்தைகள் என்பதைக் கேட்ட வுடனே, அந்த நம்பிக்கை அடியோடு மாறிப்போய்விட்டது. தங்களுடைய பிறப்பின் வரலாறு கலியாணசுந்தரத்திற்குத் தெரிந்தால், அவன் தன்னை ஏறெடுத்தும் பார்க்க மாட்டா னென்று உறுதியான எண்ணம் உண்டாயிற்று. ஆகவே, அவள் ஏக்கங்கொண்டு துயரமே வடிவாக நின்றாள். தான் மகாராஜனுடைய மகளாயிராமல், ஓர் ஏழையின் மகளாய்

இருக்கக் கூடாதா என்ற நினைவே அவளது உயிரைப் பருகத் தொடங்கியது. அவ்வாறு அந்தப்பெண்மணிகள் இருவரும் தமது வரலாறுகளை வெளியிட்டு ஒருவரை ஒருவர் தேற்றி ஆறுதல் கூறிக்கொண்டிருக்க, அடுத்த அறையிலிருந்த இளவரசர் நீலமேகம்பிள்ளையை மாத்திரம் தனியாகச் சிறிது தூரத்திற்கு அப்பால் அழைத்துக்கொண்டு போய், "ஐயா! நீலமேகம் பிள்ளை நான் மறுபடியும் யோசித்துப் பார்த்ததில், எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. இவர்கள் என்னுடைய பெண்கள் என்றால், அதன் உண்மையான ரகசியங்களை எல்லாம் நாம் வெளியிட நேரும். பிறகு யாரும் இவர்களைக் கலியாணம் செய்துகொள்ள மாட்டார்கள். மகாராஷ்டிர ஜாதியைச் சேர்ந்த எனக்குப் பிறந்த ஷண்முகவடிவை கலியாண சுந்தரம்பிள்ளை கலியாணம் செய்து கொள்வது கூடாத காரியமாகிவிடும். ஆகையால், இந்த உயிலின் விஷயத்தை வேறே யாருக்கும் சொல்லாமல் மறைத்து வைப்பதே நல்லதென்று நினைக்கிறேன். இவ்விஷயத்தில் இந்தப் பெண்களையும் எச்சரித்து விடுவோம். இன்றைய தினம் கலியாணம் நடத்துவதென்று நான் நிரம்பவும் பிரமாதமான எத்தனையோ ஏற்பாடுகள் செய்துவிட்டேன். ஜனங்களும் லக்ஷக்கணக்கில் வந்து காத்திருக்கின்றனர். அப்படி கூடியிருப்பவர்கள் ஏமாறித் திரும்பிப்போகும்படி நாம் செய்தால் இதில் ஏதோ சூதிருப்பதாக நினைத்து வம்பு பேசி ஹேளனம் செய்யத் தொடங்குவார்கள். ஆகையால், இதே கலியாண மண்டபத்தில் இந்தப் பெண்களிருவருக்கும் கலியாணத்தை முடித்து வைத்து ஜனங்களுக்கு விருந்து நடத்தி அனுப்பி விடுவோம். கலியாணசுந்தரம்பிள்ளை ஏழையாக இருந்தாலும் நல்ல யோக்கியதை வாய்ந்த உத்தம புருஷர். ஆகையாலும், அவரும் ஷண்முகவடிவும் பரஸ்பரம் காதலித்து ஒருவர் விஷய்த்தில் மற்றவர் ஒரே உறுதியாக இருப்பதாலும், அவர்கள் இருவருக்குமே கலியாணம் நடத்தி வைத்துவிடுவோம். அதுபோல கமலத்திற்கும் தக்க புருஷர் ஒருவரை நான்

தேர்ந்தெடுத்து விட்டேன். இதோ இருக்கும் இந்த ரக்ஷாமிர்தம் ஜெமீந்தார் குபேர சம்பத்துடையவர். யௌவன பருவம், அழகு, புத்திசாலித்தனம், நற்குணங்கள், சிரேஷ்டமான நடத்தை முதலியவற்றிற்கு இருப்பிடம் போன்றவர். அவரும் உங்களுடைய ஜாதியைச் சேர்ந்தவர். அவருக்கு இன்னமும் கலியாணமாகாமல் இருக்கிறது. அவரோடு நான் தனியாகப் பேசி அவர் கமலத்தைக் கலியாணம் செய்துகொள்ள இணங்கும்படி செய்கிறேன். இவருக்கும் இதே முகூர்த்தத்தில் கலியாணம் நடத்திவிடுவோம். இவர்கள் இருவரும் உம்முடைய தகப்பனாரின் மூத்த சம்சாரத்தின் குழந்தைகள் என்றும், அவருடைய மூத்த சம்சாரம் இறந்தவுடன் இளைய சம்சாரத்திற்காகப் பயந்து இவர்களை அவர் திருவாரூருக்கு அருகில் ரகசியமாக வைத்திருந்தார் என்றும், அந்த விவரம் உமக்கு இதுவரையில் தெரியாதிருந்தது என்றும், இப்போது உம்முடைய தகப்பனார் இறந்தபிறகு அவரால் எழுதி வைக்கப்பட்டிருந்த ஒரு தஸ்தாவேஜியிலிருந்து அந்த விபரம் உமக்குத் தெரிந்தது என்றும் நாம் ஒருவிதமாக இந்த ரக்ஷாமிர்தம் ஜெமீந்தாருக்கும், கலியாணசுந்தரத்திற்கும் சொல்லி விடலாம். இதனால் எனக்கும் உமக்கும் உம்முடைய தாயாருக்கும், இந்தப் பெண்களுக்கும் யாதொரு அவமானமும் பழிப்பும் இல்லாமல் போகும். நான் போய் ஜனங்களுக்கும் திருப்திகரமான சமாதானம் சொல்லிவிடு கிறேன். இந்த ஏற்பாடு உமக்குச் சம்மதமாக இருக்கிறதல்லவா?'' என்றார்.

அதைக்கேட்ட நீலமேகம்பிள்ளை சிறிதுநேரம் யோசனை செய்து முடிவில் அதை ஒப்புக்கொண்டார்.

உடனே இளவரசர், ''சரி; சந்தோஷம். நான் இந்த ரக்ஷாமிர்தம் ஜெமீந்தாரோடு தனியாகப் பேசி இவர் சம்மதிக்கும்படி செய்கிறேன். நீர் இப்படியே பின்பக்கமாகப் போய் எவனையாவது பாராக்காரனைக் கொண்டு கலியாணசுந்தரம் பிள்ளை இருக்கும் இடத்தைக் காட்டச்செய்து, அவரை

விடுவித்து அழைத்து வரும்படி நான் சொன்னதாகச் சொல்லி, தனிமையாக அழைத்துவந்து ஷண்முகவடிவு இங்கே வந்திருக்கும் செய்தியையும் இப்போது நான் சொன்னபடி உங்களுடைய குடும்ப வரலாற்றையும் நாம் இப்போது நடத்த உத்தேசிக்கும் கலியாண ஏற்பாட்டையும் தெரிவித்து அழைத்துக் கொண்டுவந்து ஷண்முகவடிவும் அவரும் சந்தித்துப் பேசும்படி செய்யும்'' என்றார்.

அப்படியே செய்வதாக நீலமேகம்பிள்ளை ஒப்புக்கொண்டு அவ்விடத்தைவிட்டு வெளியில் சென்றார். பிறகு இளவரசர் ரக்ஷாமிர்தம் ஜெமீந்தாரோடு அரைநாழிகை சாவகாசம் தனியாக இருந்து கலந்து பேசி அவர் கமலத்தை மணந்து கொள்வதற்கு இணங்கும்படி செய்தார். அவ்விடத்தைவிட்டுச் சென்ற நீலமேகம்பிள்ளை கமலம், ஷண்முகவடிவு ஆகிய இருவரும் இருந்த இடத்தை அடைந்து, இளவரசர் கூறிய விஷயங்களைத் தெரிவித்து அவர்களை எச்சரித்துவிட்டு, கலியாணசுந்தரம் சிறைப்படுத்தப்பட்டிருந்த இடத்திற்குப் போய், இளவரசர் ஆக்ஞாபித்ததாகக் கூறி, அவனை விடுவித்து அழைத்துக் கொண்டு வந்து ஒரு தனியான இடத்திலிருந்து, ஷண்முகவடிவு வந்திருக்கும் விஷயத்தையும், அவளும் கமலமும் தமது தங்கைகள் என்ற செய்தியையும், அப்போது நடக்கப்போகும் கலியாண ஏற்பாட்டையும் இன்னம் கலியாணசுந்தரம் தெரிந்து கொள்ளவேண்டிய சகலமான விருத்தாந்தங்களையும் தெரிவித்தார். அந்த எதிர்பாராத சந்தோஷச் செய்திகளைக் கேட்ட கலியாணசுந்தரம் அது பொய்யோ மெய்யோ என்று அயிர்த்தவனாய், சகிக்கவொண்ணாப் பெருமகிழ்ச்சியும் பூரிப்பும் அடைந்து, தனது வருகையை எதிர்பார்த்து ஷண்முக வடிவு தனிமையில் காத்திருந்த இடத்தை அடைந்தான். அடையவே ஒருவரையொருவர் விட்டு நெடுங்காலமாக பிரிந்திருந்த உண்மைக் காதலர்களான அவ்விருவரும் எவ்விதமான ஆனந்தம் அடைந்திருப்பார்கள் என்பதை

மனதால் யூகித்துக் கொள்ளவேண்டுமே அன்றி, அதை விவரித்துச் சொல்வது அசாத்தியமான காரியமாகும். மகா பரிசுத்தனும், உத்தம லக்ஷணங்கள் யாவும் பூர்ணமாக நிரம்பப் பெற்றவனுமான கலியாணசுந்தரத்தின் விஷயத்தில் தான் இடையில் சந்தேகங் கொண்டு அவனை வெறுத்த எண்ணம் ஷண்முகவடிவின் மனதில் உண்டானது. ஆகையால், அவள் குன்றிப்போய் நாணித் தலைகுனிந்து ஒரு பக்கத்தில் ஒடுங்கி நின்றவண்ணம் தழுதழுத்த குரலில் பேசத் தொடங்கி, "தங்களுடைய உண்மையான யோக்கியதையை நான் பல தடவைகளில் அனுபவ பூர்வமாகக் கண்டிருந்தாலும், கோலாப்பூரில் அந்த வஞ்சகர்கள் செய்த சதியை நம்பி நான் தங்கள் விஷயத்தில் சந்தேகம் கொண்டேன். அது பொய்யென்பதை இப்போது நான் தெரிந்துகொண்டேன். தங்கள் விஷயத்தில் இப்படிப்பட்ட சம்சயம் கொண்டதைப் பற்றி என் மனம் இப்போது சங்கடப்படுகிறது இன்னவிதம் என்பதை நான் எப்படி எடுத்துச் சொல்லப் போகிறேன்? பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம் என்பார்கள். அது என் விஷயத்தில் முற்றிலும் நிஜமாயிற்று. என்னுடைய மௌடீகத்தினால் நான் தங்கள் விஷயத்தில் அபராதியாகி விட்டேன். அதைத் தாங்கள் பாராட்டாமல் க்ஷமிக்க வேண்டும்" என்றாள்.

அதைக்கேட்ட கலியாணசுந்தரம் அவளது உண்மையான உருக்கத்தையும் பணிவையும் கண்டு மனம் நைந்து ஆனந்தக் கண்ணீர் விடுத்தவனாய், "பெண்ணே! ஷண்முகவடிவு! நீ என் மேல் சந்தேகம் கொண்டதைப் பற்றி நான் கொஞ்சமும் வருத்தம் பாராட்டவில்லை. அந்த நிலைமையில் யாரும் சந்தேகம் கொள்வது நிச்சயமே. அப்படிஇருக்க, நீ சந்தேகங் கொண்டதைப் பற்றி நான் உன் மேல் வர்மம் பாராட்டுவது மூடத்தனமே அன்றி வேறல்ல. அதுவுமன்றி, நீ மகா பரிசுத்தமான நடத்தையும் உயர்வான குணங்களும்

உடையவளாக இருப்பதனால், அந்தச் சந்தேகாஸ்பதமான நடத்தை உன் மனசுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை என்பது எளிதில் தெரிகிறது. ஆகையால் இதிலிருந்து உன்னுடைய மேன்மை உள்ளபடி வெளியாவதாகவே நான் கொள்ள வேண்டுமன்றி, அதற்காக உன்னை நான் கோபிப்பது நியாயமாகாது'' என்றான்.

★

பிறகு ஒருநாழிகை சாவகாசம் கழிந்தது. இளவரசர் சபா மண்டபத்தை அடைந்து, அவ்விடத்தில் கூடியிருந்த மகா ஜனங்களை நோக்கி மிகுந்த மலர்ச்சியும் புன்னகையும் தோற்றுவித்தவராய்ப் பேசத் தொடங்கி, ''மகா ஜனங்களே! நான் சொல்லப்போகும் சந்தோஷ சங்கதியை நீங்கள் கேட்டால் உங்களை இந்நேரம் நான் காக்க வைத்ததைப் பற்றி நீங்கள் கொஞ்சமும் ஆயாசப்பட மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். அதுவுமன்றி, கொஞ்சநேரத்துக்கு முன் இருவர் வந்து இந்தக் கலியாணத்தைத் தடுத்ததையும், கடைசியில் நான் நீலமேகம் பிள்ளையோடு தனியாகப் போனதையும் கண்டு நீங்கள் நிரம்பவும் கவலை கொண்டிருப்பது சகஜமே. நீங்கள் எதிர் பார்த்துவந்த இன்பமும் சந்தோஷமும் இல்லாமல் போய் விடுமோ என்று நீங்கள் நினைத்திருக்கலாம். ஆனால், இப்போது ஒரு கலியாணத்திற்கு இரண்டு கலியாணங்களாக நடக்கப் போகின்றன. ஆகையால் நீங்கள் எல்லோரும் இரட்டிப்பு ஆனந்தமடைந்து இரட்டிப்பு விருந்து சாப்பிடத் தயாராய் இருக்க வேண்டும்'' என்று வேடிக்கையாக மொழிந்தார்.

அதைக்கேட்ட ஜனங்கள் மிகுந்த உற்சாகமும் களிப்பும் அடைந்தவராய் அவர் எவ்விதமான புதிய செய்தி சொல்லப் போகிறார் என்று நிரம்பவும் ஆவலோடு எதிர்பார்த்தனர்.

இளவரசர் மேலும் பேசத் தொடங்கி, ''முதலில் உங்களுக்கு நான் இன்னொரு சந்தோஷச் செய்தியைத் தெரிவித்துக் கொள்ள நினைக்கிறேன். அதாவது, பூனா விலுள்ள நம்முடைய பட்டமகிஷியின் மேல் ஏற்பட்டது முற்றிலும் அபாண்டமான அவதூறு என்பதும் அவள் மகா சிரேஷ்டமான புனிதவதி என்பதும் நிச்சயமாகத் தெரிந்து போயின. இப்போது இங்கே வந்து பேசிய அம்மணிபாயும், சாமளராவும் சேர்ந்து பட்டமகிஷியை விலக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு செய்த சதியாலோசனையினால் இந்த அபவாதம் ஏற்பட்டதென்பதும் நன்றாக விளங்கிவிட்டது. அவர்கள் அம்மன்பேட்டையிலுள்ள அன்னத்தம்மாளின் பெண்களையும், தங்கையையும் பூனாவில் தாதிவேலைக்கு அனுப்பி அவர்களைக் கொண்டு எனக்குக் கடிதம் எழுதச் செய்து நான் போய்ப் பார்த்த காலத்தில் உண்மையிலேயே கர்ப்பிணியாக இருந்த அம்மாளு என்ற கூத்தாடிப்பெண் பட்டமகிஷியின் ஆடையாபரணங்கள் முடி முதலியவைகளை அணிந்து வேஷம்போட்டுக்கொண்டும், அன்னத்தம்மாளுடைய தங்கை மோகனராவைப் போல ஆண் வேஷம் போட்டுக் கொண்டும் வந்து நடித்தார்களாம். அப்போது முன்னிரவு வேளையாகையால், நான் ஒளிந்துகொண்டு பார்த்தேன். ஆகையால், அதை நான் உண்மை என்றே நம்பி ஏமாறிப் போய்விட்டேன். கொஞ்சநேரத்திற்குமுன் நான் பூனாவுக்கு ஓர் உத்தியோகஸ்தனை அனுப்பி விட்டேன். இந்த விவரங்களை எல்லாம் பட்டமகிஷிக்குத் தெரிவித்து அந்த நான்கு தாதிகளையும் விலங்கிட்டு உடனே இங்கே அனுப்பும் படியும், பட்டமகிஷியிடம் எனக்கிருந்த கோபம் நீங்கி விட்டது ஆகையால், அவள் திரும்பிவந்து என்னோடு அன்னியோன்னி யமாக இருக்கலாம் என்றும் நிருபம் எழுதி அனுப்பி விட்டேன். அதுவுமன்றி, இத்தனை மோசங்களுக்கும், துன்பங்களுக்கும் ஆதாரபூதமாயிருந்த அம்மணிபாயியும், சாமளராவும் கலியாணத்திற்காக வந்திருந்த கூத்தாடி அன்னத்தம்மாளும்

இதோ விலங்கிடப்பட்டுச் சிறைச்சாலைக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் நான் மறுபடியும் கலியாணம் செய்துகொள்வது அக்கிரமச் செய்கை. ஆகையால், நான் இந்தக் கலியாணத்திலிருந்து விலகிக் கொள்வதைப் பற்றி நீங்கள் விசனப்படுவதை விட்டு பெரிதும் சந்தோஷமே அடைவீர்களென்று நம்புகிறேன். அதுநிற்க, இப்போது இங்கே வந்திருந்த பூர்ணசந்திரோதயம் என்ற பெண் உண்மையில் தார்வார் தேசத்து ராஜகுமாரி அல்ல. அவள் இப்போது வந்த நம்முடைய பவானியம்பாள்புரம் ஜெமீந்தா ராகிய நீலமேகம் பிள்ளையின் தங்கை. அவருக்கு இரண்டு தங்கைகள் இருக்கிறார்கள். இருவரும் அவர் தகப்பனாருடைய மூத்த சம்சாரத்தின் குழந்தைகளாம். இளைய சம்சாரத்தின் பகைமையைக் கருதி, அவர்களுடைய தகப்பனார் அந்தப் பெண்களை திருவாரூருக்கு அருகில் ஏதோ ஓரிடத்தில் ரகசியமாக வைத்திருந்தாராம். அந்தப் பெண்களுள் மூத்தவ ளாகிய கமலம் என்பவள் தனது தகப்பனாரைத் தேடிக்கொண்டு இந்த ஊருக்கு வந்திருந்த காலத்தில், அம்மணிபாயி முதலியோர் அவளை ஏமாற்றி, அவளுக்குப் பூர்ணசந்திரோதயம் என்று பெயர் கொடுத்து, அவளை என் பட்டமகிஷியாக்க முயன்றார்கள். நீலமேகம்பிள்ளைக்கு இந்தச் சங்கதியே தெரியாது. அவர் தற்செயலாகக் கலியாணத்திற்கு வந்தவர், ராஜஸ்திரீயைப் பார்க்கக் கூடாதென்ற எண்ணத்தோடு கடைசிவரையில் பார்க்காமல் இருந்தாராம். இவருக்கு முன் வந்தவர் இவள் கமலம் என்று சொன்னதைக் கேட்டு நிமிர்ந்து பார்த்து உடனே உண்மையை உணர்ந்து கலியாணத்தைத் தடுத்தார். ஏனென்றால் நான் மகாராஷ்டிர வம்சம். அவர்கள் பிள்ளை வம்சம். ஆகையால், அந்தப் பெண்ணை நான் கலியாணம் செய்து கொள்ள முறையில்லை அல்லவா; ஆகவே, அவர் எழுந்து தடுத்தார். இந்தப் பெண் தம்முடைய தங்கை யென்று சொன்னால், அதனால் தமக்கு அவமானமும் பழிப்பும் ஏற்படுவதோடு இதுவரையில் தம்முடைய

தங்கையென்பதைத் தெரிந்து கொள்ளாமல் அவர் ஏன் சும்மா உட்கார்ந்திருந்தார் என்ற கேள்வி பிறக்குமாதலால், அதற்குத் தாம் சமாதானம் சொல்லவும் தமது குடும்ப ரகசியங்களை வெளியிடவும் நேருமென்று எண்ணி அவர் உண்மையை மூடிமூடிப் பேசி, நான் அந்தப் பெண்ணைக் கட்டிக்கொள்ள முறையில்லை என்று சொன்னார். முடிவில், அவள் என்னுடைய மகளென்று அவர் துணிந்து சொல்லிவிட்டார். அது உண்மையாகச் சொல்லப்பட்ட தல்ல; ஒரு சங்கேதமாகச் சொல்லப்பட்டது. நானும் நீலமேகம் பிள்ளையின் தகப்பனாரும் இரண்டுடலும் ஒருயிருமாயிருந்த அந்தரங்க நண்பர்கள்; அவருடைய மகளை நான் கலியாணம் செய்து கொள்வது என்னுடைய மகளையே கலியாணம் செய்துகொள்ளும் பாவத்துக்குச் சமமானது என்று எடுத்துக் காட்டுவது போல அவர் மறைவாகப் பேசினார். ஏனென்றால், அதைக் கேட்டு நான் அவசியம் கலியாணத்தை நிறுத்துவேன் என்றும், பிறகு உண்மையைச் சொல்லிக் கொள்ளலாம் என்றும் நினைத்து அவர் அந்த மாதிரியாக மாற்றிப் பேசினார். நான் இப்போது அவரோடு தனியாகப்போய் அவர் காட்டிய சில கடிதங்களைப் பார்த்தேன். அவர் சொன்ன விவரங்களையும் கொஞ்ச நேரத்திற்கு முன்வந்த இன்னொருவர் சொன்ன விஷயங்களையும் ஒத்திட்டுப் பார்த்தேன். உண்மை எல்லாம் விளங்கிப்போய்விட்டது. இவருடைய தங்கைமார் இருவரும் நிரம்பவும் நற்குணங்கள் வாய்ந்தவர்கள். இந்த அம்மணிபாயி முதலியோர் என் பட்டமகிஷியின் விஷயத்தில் செய்த சதியாலோசனையின் விவரம் கமலத்துக்குத் தெரியவே தெரியாது. இவர்கள் அந்தப் பெண்ணைக் கடைசிவரையில் ஏமாற்றி இருக்கிறார்கள். ஆகையால், அந்தப் பெண் விஷயத்தில் யாரும் கொஞ்சமும் துர்அபிப்பிராயம் கொள்ளவே நியாயமில்லை. இவ்வளவு பிரயாசைப்பட்டு நாம் ஏற்படுத்திய இந்தக் கலியாண மண்டபம் வெற்று மண்டபமாக முடிந்தால், அது இந்த அரண்மனைக்கே ஓர் அபசகுனம் போல

இருக்குமென்ற காரணத்தையும், நீங்கள் எல்லோரும் ஏமாற்றம் அடையாமல் சந்தோஷமாய்ப் போகவேண்டும் என்பதையும் கருதி, நான் அந்த இரண்டு பெண்களின் கலியாணத்தையும் இதே முகூர்த்தத்தில் நடத்திவைக்கத் தீர்மானித்து விட்டேன். நீங்கள் எல்லோரும் இன்னம் கொஞ்சநேரம் விஜயம் செய்திருந்து தம்பதிகளை ஆசீர்வதித்து பந்தி போஜனம்செய்து எங்களைக் கௌரவித்துவிட்டுப் போகும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். அந்தப் பெண்கள் இருவரையும் கலியாணம் செய்து கொள்ளப் போகிறவர்கள் யார் என்று அறிய நீங்கள் பிரியப்படலாம். கொஞ்ச நேரத்துக்கு முன் வந்து இந்தக் கலியாணத்தைத் தடுத்தாரே அவர் இந்தக் கமலத்தின் தங்கையை கட்டிக் கொள்வதென்று ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம். மூத்தவளான இந்தக் கமலத்திற்கு கொஞ்ச நேரத்துக்கு முன்புதான் புருஷர் நிச்சயம் செய்யப்பட்டார்; அவர் நம்முடைய ரக்ஷாமிர்தம் ஜெமீந்தாரே. அவருடைய மேலான குணமும், பரிசுத்த நடத்தையும் உங்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆகையால், அவரே இதற்கிணங்குவதிலிருந்து, இந்தப் பெண்ணின் மீது அற்பமும் சந்தேகத்திற்கு இடமில்லை என்றே நீங்கள் கொள்ளவேண்டும். இவ்வளவே செய்தி. நேரமாகிறது. பிள்ளைகளும் பெண்களும் இந்நேரம் அலங்காரம் செய்து கொண்டு ஆயத்தமாக இருப்பார்கள்; ஆகையால், நாம் காலஹரணம் செய்யாமல், அவர்களது பிரியத்தை நிறைவேற்றி வைப்போம்'' என்று மிகுந்த குதூகலத்தோடு கூறினார்.

அவரது சொற்களைக் கேட்ட மகா ஜனங்கள் எல்லோரும் பெருத்த கரகோஷம் செய்து தங்களது பெருங்களிப்பையும் திருப்தியையும் வெளியிட்டனர்.

அடுத்த க்ஷணத்தில் முறையே ரக்ஷாமிர்தம் ஜெமீந்தார், கமலம், கலியாணசுந்தரம், ஷண்முகவடிவு ஆகிய நால்வரும் கலியாண கோலத்தோடு சர்வாலங்கார பூஜிதராய் அழைத்து வரப்பட்டு, நான்கு உன்னத ஆசனங்களில் உட்கார வைக்கப்பட்டனர்.

அவ்வாறு தோன்றிய இரட்டைத் தம்பதிகளின் அற்புத தேஜஸையும் கண்கொள்ளா வடிவழகையும் கண்ட மகா ஜனங்களெல்லோரும் திக்பிரமை கொண்டு மதிமயக்க மடைந்து, அந்த அதிசுந்தர யௌவன வதூவரர்கள் கந்தருவ லோகத்தைச் சார்ந்தவர்களோ, அல்லது, அழகிற்கே தனிப் பீடிகையான ரதிமதனர்களோ வென்று சந்தேகித்து அளவற்ற ஆனந்தமும் குதூகலமும் அடைந்து அவர்கள் மீது வைத்த விழியை எடுக்கமாட்டாமல் சுவர்க்க லோகத்தையே நேரில் காண்பவர் போல பேச்சு மூச்சற்று ஒடுங்கி ஸ்தம்பித்து இன்பமும் வியப்புமே வடிவாக வீற்றிருந்தனர். மேள வாத்தியங்களின் இன்னொலியும், வீணை, புல்லாங்குழல், கேளிக்கை முதலியவற்றின் தெய்வகானமும், பாடகர்களின் கீத முழக்கமும்,பேரிகை, முரசு, டமரிகை, நகார் முதலியவற்றின் பேரிடி முழக்கமும் ஒன்றுகூடி அண்டம் செவிடுபட ஆர்ப்பரிக்க, அந்தணர்களின் மந்திரகானத்தினிடையில் நிகரற்ற உத்தமகுண சௌந்தர்ய பராக்கிரமசாலிகளான ரக்ஷாமிர்தம் ஜெமீந்தாரும் கலியாணசுந்தரமும் முறையே கமலத்திற்கும், ஷண்முகவடிவிற்கும் திருமாங்கல்ய தாரணம் நிறைவேற்றி னார்கள். அன்றுமுதல் ஐந்துநாட்கள் வரையில் அரண் மனையில் மகாஜனங்களுக்குப் பந்திபோஜனம் சம்பிரமமாக நடைபெற்றது. ஓயாமல் வாத்தியக் கச்சேரிகளும், தாசிகளின் நடனமும், சங்கீத கானங்களும்,மல்லக ஜெட்டிகளின் யுத்தங்களும் இரவு வேளைகளில் சிறப்பான ஊர்கோலமும், பாணவேடிக்கைகளும் கதா காலக்ஷேபங்களும் நடைபெற்று ஜனங்களின் மனதை ரஞ்சிக்கச் செய்து கொண்டிருந்தன. இளவரசர், நீலமேகம்பிள்ளை ஆகிய இருவரும் அளவற்ற குதூகலமும் மனமகிழ்ச்சியும் பூரிப்பும் தோற்றுவித்தவர் களாய் குழந்தைகள் போல மாறி எல்லா விளையாடல்களிலும் கலந்து கொண்டு சந்தோஷ நிறைவாகவே தோன்றினர்.

கலியாணச் சடங்குகள் யாவும் நிறைவேறியபின், தம்பதிகளின் கங்கண விசர்ஜனம் செய்யப்பட்ட காலத்தில் இளவரசர், நீலமேகம்பிள்ளை முதலியோர் கலியாண மண்டபத்திற்கு அருகில் வீற்றிருந்து புரோகிதர் முதலியோருக்கு சம்பாவனை வழங்கிக் கொண்டிருந்த தருணத்தில் அந்த ஊர் போலீஸ் இன்ஸ்பெக்டர் திடீரென்று அவர்களுக்கு எதிரில் தோன்றி இளவரசரை வணங்கி நிரம்பவும் பணிவாகப் பேசத் தொடங்கி, "மகாராஜாவே! மாப்பிள்ளைகளில் ஒருவருக்கு நான் ஓர் அவசர சங்கதி கொண்டு வந்திருக்கிறேன். ஆனால், இப்போது முக்கியமான இந்தப்பெரிய சுபகாரியம் முடிந்து தாங்கள் எல்லோரும் சந்தோஷமாக இருக்கும்போது அந்தச் செய்தியைச் சொல்ல, எனக்கு அச்சமாக இருக்கிறது. ஆனால், அதைச் சொல்லாமலும் இருக்க முடியவில்லை" என்று நயமாகக் கூறினார். அதைக் கேட்ட இளவரசரும் புதிய தம்பதிகளும் மற்ற எல்லோரும் திடுக்கிட்டு ஒருவித திகிலும் கலக்கமும் அடைந்து இன்ஸ்பெக்டரது முகத்தை உற்று நோக்கினர். உடனே இளவரசர் இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "ஐயா! இன்ஸ்பெக்டரே! உம்முடைய நற்குணங்களையும், உத்தியோகத் திறமையையும் பற்றி நான் பல மனிதர்களிடம் கேள்வியுற்றிருக்கிறேன். கடைசியாக இந்தக் கலியாணப் பெண்களுள் ஒருத்தியான ஷண்முகவடிவென்னும் பெண்ணுக்கு நீர் செய்த உதவியைப் பற்றி நான் கேள்விப்பட்ட பின், உம்மை அழைத்து நேரில் பேசி உமக்குத் தக்க மரியாதை செய்ய வேண்டுமென்று நினைத்துக் கொண்டி ருந்தேன். நல்ல வேளையாக நீரே வந்தீர். ஆனால், இந்த சுபவேளையில் ஏதோ அபவார்த்தை சொல்ல வந்திருக்கிறீர் போலத் தோன்றுகிறது. யாராவது இறந்து போய் விட்டார்களா? அப்படி இருந்தாலும் பாதகமில்லை; பயப்படாமல் வெளியிடும்" என்றார்.

அதைக்கேட்ட இன்ஸ்பெக்டர், "இன்னம் இறக்கவில்லை. ஆனால், இன்னம் இரண்டொரு நாழிகை நேரத்திற்குள் இறந்து

போய் விடுவார் போலிருக்கிறது. கடைசியாக ஒருதரம் அவர் தம்முடைய பிள்ளையைப் பார்க்க வேண்டுமாம்; என்னிடம் நிரம்பவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்'' என்றார்.

இளவரசர் திடுக்கிட்டு, ''அப்படி இருக்கும் தருணத்தில் இருப்பது யார்? ஏன் தயங்குகிறீர்? தைரியமாகப் பேசும்'' என்றார்.

இன்ஸ்பெக்டர், ''வேறொருவரும் இல்லை. நம்முடைய மருங்காபுரி ஜெமீந்தார்தான் அந்த நிலைமையில் இருக்கிறார். அவர் இறப்பதற்குமுன் தம்முடைய பிள்ளையை ஒருதரம் பார்க்க வேண்டுமாம்'' என்றார்.

இளவரசர் மிகுந்த ஆச்சரியமடைந்து, ''என்ன வேடிக்கை இது! மருங்காபுரி ஜெமீந்தாருக்குப் பிள்ளை ஏது? நீர் யாருக்கு இந்தச் சமாசாரம் சொல்லப் போகிறீர்? ஒருவேளை ரக்ஷாமிர்தம் ஜெமீந்தாருக்கும் அவருக்கும் நெருங்கிய பாந்தவ்வியம் ஏதாவது இருக்குமோ?'' என்றார்.

இன்ஸ்பெக்டர், ''இல்லை. இல்லை. இன்னொரு மாப்பிள்ளை இருக்கிறாரே. அவர் மருங்காபுரி ஜெமீந்தாருடைய தம்பியின் குமாரர். அந்த ஜெமீந்தார் தம்முடைய சகலமான சொத்துக்களையும் அபாரமான சமஸ்தானத்தையும் இவருக்கே எழுதி வைத்திருக்கிறார். கடைசியாக ஒருதரம் பார்த்து இந்த ஷண்முகவடிவு, கமலம் ஆகிய இருவர் விஷயத்திலும் அவர் செய்துள்ள சில தவறுகளை மன்னித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் பிரியப்படுகிறார்'' என்றார்.

அந்தச் செய்தியைக் கேட்ட இளவரசர், ஷண்முகவடிவு, நீலமேகம்பிள்ளை முதலிய எல்லோரும் பெரிதும் வியப்புற்று பிரமிப்படைந்து அப்படியே மலைத்துப் போயினர். கலியாணசுந்தரத்தின் உண்மை வரலாற்றை அறிந்தவளான கமலம் ஒருத்தியே அதைப் பற்றி ஆச்சரியமடையாமல், கலியாணசுந்தரத்திற்கு அதிசீக்கிரத்தில் ஏற்பட இருக்கும்

உன்னத பதவியைக் குறித்து மட்டற்ற ஆனந்தமும் பூரிப்பும் அடைந்தவளாய்ப் புன்னகை செய்துகொண்டிருந்தாள்.

அப்போது இளவரசர், ''ஹா! என்ன ஆச்சரியம்! இவர் நம்முடைய மருங்காபுரி ஜெமீந்தாருடைய தம்பியின் குமாரரா? கமலம் அன்றையதினம் மருங்காபுரி ஜெமீந்தாரையா குறித்துப் பேசினாள்? பேஷ்! நம்முடைய ஷண்முகவடிவின் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! அவளுக்கு வாய்த்த புருஷர் ஏழை வம்சத்தைச் சேர்ந்தவராக இருக்கிறாரே என்ற எண்ணம் இதுவரையில் என் மனசுக்குள்ளாகவே ஒரு பக்கத்தில் இருந்து வந்தது. இப்போது தான் என் மனம் குளிர்ந்தது. அவருடைய தம்பி குழந்தைக்குக் கலியாணராமன் என்றல்லவா பெயர் வைத்திருந்தார்கள். ஓகோ! அதை மாற்றி இவர் கலியாண சுந்தரமென்று வைத்துக்கொண்டாரோ! கிழவருடைய நடத்தை இவருக்குக் கொஞ்சமும் பிடிக்காமையால், அவருடைய சம்பந்தமே இல்லாமல் புது மனிதன்போல இருக்க வேண்டுமென்று இவர் தம்முடைய பெயரையே மாற்றிக் கொண்டு திருவாரூரில் இருந்து வருவதாகக் கமலம் சொன்னாள் அல்லவா; சரிதான். இப்போதுதான் பொருத்தமாக இருக்கிறது. ஆம். அதிருக்கட்டும். இன்ஸ்பெக்டரே! நீர் ஐந்து தினங்களாக இங்கேயே இருக்கிறீரே! நீர் அவரிடம் எப்போது போனீர்? இந்த மாதிரி கலியாணம் ஆகிறதென்கிற சங்கதி அவருக்குத் தெரியுமா?'' என்றார்.

இன்ஸ்பெக்டர், ''மகாராஜாவே! கொஞ்ச காலத்திற்குமுன் அந்த ஜெமீந்தாருடைய மாளிகையில் கட்டாரித்தேவன் என்ற பிரபலத் திருடன் புகுந்து, வீட்டின் ஒரு பாகத்தில் நெருப்பை வைத்துவிட்டு அவருடைய தம்பி மகளான லீலாவதி என்ற பெண்ணையும் தூக்கிக்கொண்டு போய்விட்டான். அதன்பிறகு நானும் இந்த நீலமேகம்பிள்ளையும் அவரிடம் போய்ப் பார்த்தபோது, அவர் எல்லா விவரங்களையும் ஒரு காகிதத்தில் எழுதி என்னிடம் கொடுத்தார். லீலாவதியை மீட்கும்படியும்,

இந்தக் கலியாணராமபிள்ளையைக் கண்டுபிடித்துச் சகலமான சொத்துகளையும் இவரிடம் ஒப்புவிக்கும்படி அவர் எழுதியிருந்தார். நான் இதற்குமுன் இவரை ஒருதரம் தான் பார்த்திருக்கிறேன். முன்பு தினசரி டைரி காணாமல் போனபோது அதை அந்தத் திருடன் திருப்பிக் கொடுப்பதாகச் சொல்லியிருந்த தினத்தன்று அவனுடைய அடையாளம் கண்டுபிடிப்பதற்காக நான் ஒரு பிச்சைக்காரனைப் போல வேஷம்போட்டுக்கொண்டு ரஸ்தாவில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தேன். அன்றையதினம் இவர், லீலாவதி, அம்மணி பாயி ஆகிய மூவரும் ஒருவர் பின்னொருவராக அந்த மாளிகைக்கு வந்துபோனார்கள். அப்போது நான் இவரைப் பார்த்து இவருடைய அடையாளத்தைத் தெரிந்து கொண்டி ருக்கிறேன். பிறகு இந்தக் கலியாணம் நடந்த முதல் தினம் இவர் வந்து கலியாண மண்டபத்தில் உட்கார்ந்தவுடன் நான் இவருடைய அடையாளத்தைக் கண்டுகொண்டு அன்றைய தினம் இரவில், நான் போய் இந்தச் சங்கதியைக் கிழவரிடம் சொன்னேன். அவர் நிரம்பவும் சந்தோஷமடைந்து, கலியாணம் முடிந்தவுடன் தம்பதிகளை அழைத்துவரச் சொன்னார். அதுவுமன்றி சில தினங்களுக்குமுன் நான் என்னுடைய ஜெவான்களை அழைத்துக்கொண்டு காசா நாட்டுக்குப்போய் அந்தக் கட்டாரித்தேவனைப் பிடிக்க யத்தனித்தேன். அவன் எங்கேயோ போய் ஒளிந்து கொண்டான். அவன் அபகரித்துக் கொண்டுபோன கோடி ரூபாய் பெறுமான ஆபரணங்களையும், லீலாவதியையும் நான் கண்டுபிடித்து மீட்டுக்கொண்டு முன்னாக வந்துவிட்டேன். நான் அங்கேயே வைத்துவிட்டு வந்த ஜவான்கள் நேற்று ராத்திரி அந்தக் கட்டாரித் தேவனைப் பிடித்து விலங்கிட்டு விடியற்காலையில் என்னுடைய ஜாகைக்குக் கொண்டு வந்தார்கள். நான் உடனே அவனைச் சிறைச்சாலையில் பந்தோபஸ்து செய்துவிட்டு மருங்காபுரி ஜெமீந்தாரிடம் போய் இந்தச்செய்தியைச் சொல்லி

விட்டு வந்தேன். அவர் இறக்கும் நிலைமையில் இருக்கிறார்; உடனே இவரை அழைத்துவர ஆக்ஞாபித்தார். இங்கே கங்கண விசர்ஜனம் ஆகுமுன், அதைச் சொல்லக் கூடாதென்று நான் பொறுத்திருந்து அது முடிந்தவுடன் வந்தேன்'' என்றார்.

அந்த வரலாற்றைக் கேட்ட இளவரசர் முதலிய எல்லோரும் இன்பமோ துன்பமோ என்று அறிய இயலாத பெருத்த மனக் கிளர்ச்சியும் பூரிப்பும் அடைந்து, கலியாணசுந்தரத்தின் மேம்பாட்டைப் பற்றி எண்ணி எண்ணி கட்டிலடங்காக் களி கொண்டனர். கலியாணசுந்தரமும், நீலமேகம்பிள்ளையும் லீலாவதி திரும்பி வந்ததைப் பற்றி மட்டற்ற சந்தோஷமடைந்து அதைப்பற்றி ஈசுவரனை மனதார ஸ்தோத்திரம் செய்தனர்.

## முடிவுரை

இவ்வளவோடு நாம் இந்தக் கதையை நிறுத்தி இதில் வந்த முக்கியமான சிலரின் முடிவைத் தெரிவிப்போம். கலியாண சுந்தரம், ஷண்முகவடிவு, இளவரசர், கமலம், நீலமேகம் பிள்ளை முதலியோர் உடனே புறப்பட்டு மருங்காபுரி ஜெமீந்தாருடைய மாளிகையை அடைந்தனர். ஆனால் அதற்குள் மருங்காபுரி ஜெமீந்தார் இறந்து போய்விட்டார். ஆதலால், அவர் பெண்டாள நினைத்த ஷண்முகவடிவு, கமலம் ஆகிய இருவரது முகத்திலும் விழிப்பதான அவமானம் அவருக்கு இல்லாமல் போயிற்று. இளவரசர் கூடவே இருந்து அவரது அந்தியக் கிரியைகளை நிரம்பவும் விமரிசையாகவும் சிறப்பாகவும் நடத்தி வைத்து ஒரு குபேரனது சம்பத்துக்கு ஒப்பிடத் தக்க சகலமான ஐசுவரியங்களுக்கும் சமஸ்தானத் திற்கும் கலியாண சுந்தரம் ஷண்முகவடிவு ஆகிய இருவரையும் உரியவர்களாக்கி, அவர்கள் இந்திரன் இந்திராணி போல இருக்கும்படி செய்துவிட்டுத் திரும்பி வந்தார். அதுபோலவே கமலமும் ரக்ஷாமிர்தம் ஜெமீந்தாரும் ரதியும் மன்மதனும்போல எப்போதும் சல்லாபித்துக் கொண்டு உல்லாச தம்பதிகளாயிருந்து வந்தனர்.

இளவரசர் தமது துர்க்குணங்களையும், காமாந்தகார மனப் போக்கையும் விடுத்துப் பெருந்தன்மையும், தர்ம சிந்தனையும் வாய்ந்தவராக மாறி மறுபடியும் தமது பட்டமகிஷியை அழைத்துக் கொண்டு அவளோடு சந்தோஷமாகக் காலம் கழித்ததன்றி, அடிக்கடி தமது பெண்களான கமலத்தையும், ஷண்முகவடிவையும் பார்த்து ஒப்பற்ற ஆனந்தம் எய்தி வந்தார். நீலமேகம்பிள்ளையும் அதுபோல அடிக்கடி தனது தங்கை மார்களைப் பார்த்துப் பெருமகிழ்ச்சி அடைந்தவராய்க் காலங் கழித்து வந்தார். லீலாவதி தமது மருமகப் பிள்ளையின்

தங்கை என்பதைக் கருதி இளவரசர் சிறைச்சாலையிலிருந்த அவளது புருஷனான மாசிலாமணிப்பிள்ளையை விடுவித்து, கலியாண சுந்தரம் அவர்களிருவருக்கும் பெருத்த செல்வத்தை அளிக்கச் செய்ய அவர்களிருவரும் பழைய மனக்கசப்பை மறந்து, ஒருவரிடத்தொருவர் அந்தரங்கமான பிரியம் வைத்து வாழ்ந்து வந்தனர். சதியாலோசனைக் காரர்களான அம்மணி பாயி, சாமளராவ், அன்னத்தம்மாள், அவளது பெண்கள், ஹேமாபாயி முதலிய வஞ்சகர்களெல்லோரும் நிரம்பவும் கொடுமையான தண்டனை அடைந்து முடிவில் நல்ல புத்தியடைந்து நல்ல வழியில் நடந்து வந்தனர். ஏராளமான கொலைகளையும் கொள்ளைகளையும் நடத்திவந்த பரம துஷ்டனான கட்டாரித் தேவன் மரணதண்டனை அடைந்தான்.

ஷண்முகவடிவு சொன்ன அடையாளத்தைக் கொண்டு போலீஸ் இன்ஸ்பெக்டர் கபடசன்னியாசியைக் கண்டுபிடித்து, அவனைப் பல வருஷகாலம் கடினக்காவல் தண்டனை அடையும்படி செய்துவைத்தார். கலியாணசுந்தரம் சிவபாக்கி யத்தைத் தக்க இடத்தில் கலியாணம் செய்து கொடுத்து ஏராளமான செல்வமும் உதவி, அவளது நற்குணத்திற்குத் தக்கபடி அவளை உயர்வான பதவியில் வைத்து சன்மார்க்கத்தில் திருப்பி விட்டான்.

நீலலோசனியம்மாள் பக்ஷவாதநோய் தீர்ந்து மாறிமாறிக் கமலத்தினிடத்திலும் ஷண்முகவடிவினிடத்திலும், நிரம்பவும் பூஜிதையாக இருந்து வந்தாள். எத்தனையோ அரிய காரியங்களை முடித்த மகா திறமைசாலியான போலீஸ் இன்ஸ்பெக்டரை இளவரசர் மறக்கவில்லை. அவருக்கு ஒரு பெருத்த சமஸ்தானத்தைச் சன்மானமாகக் கொடுத்து, அவரைத் தஞ்சை நகரத்தின் போலீஸ் கமிஷனர் பதவிக்கு உயர்த்த, அவர் முன்னிலும் பன்மடங்கு அருமையான காரியங்களைச் செய்து பெருத்த கீர்த்திவானாக விளங்கினார். கலியாணபுரம் மிட்டாதார், சேரங்குளம் இனாம்தார், சூரக்கோட்டைப்

பாளையக்காரர் முதலியோர் பூர்ணசந்திரோதயத்தின் உண்மை வரலாற்றையும் அவள் முடிவில் ரக்ஷாமிர்தம் ஜெமீந்தாரை மணந்து க்ஷேமமாக இருப்பதையும் கேட்டு ஆச்சரியமடைந்த தன்றி, இளவரசரது உதாரணத்தைப் பின்பற்றி நற்குண புருஷர்களாக மாறிப்போயினர்.

பஞ்சண்ணாராவ், ராமன் முதலியோர் அரண்மனையில் கண்ணியமான உத்தியோகங்களில் அமர்த்தப்பட்டு நல்ல வழியில் உபயோகப்பட்டு வந்தனர்.

பூனாவிலிருந்து திரும்பிவந்து இளவரசரை அடைந்த பட்டமகிஷியான லலிதகுமாரி தேவி, யாதொரு கைம்மாறும் கருதாமல் தனது விஷயத்தில் காருண்யம் பாராட்டித் தனக்கு நேர இருந்த இடரை விலக்கமுயன்ற உண்மைப் பரோபகாரி யான கலியாணசுந்தரத்தை ஒருநாளும் மறக்காமல், அவன் பெண்டு பிள்ளைகளோடு அமோகமாக ஆயிரங்காலம் வாழ வேண்டுமென்று சதா காலமும் சர்வேசுவரனை ஸ்தோத்திரம் செய்து கொண்டே மங்களகரமாக இருந்து வந்தாள். தஞ்சை வாசிகள் இப்போதும் உயர்வான குணம், பேரழகு, பரோபகார சிந்தை, புருஷர் பெண்ஜாதி ஒருவருக்கொருவர் காட்ட வேண்டிய வாஞ்சை முதலிய உத்தம குணங்களுக்கு உதாரணம் சொல்ல வேண்டுமானால், ரக்ஷாமிர்தம் ஜெமீந்தார், மருங்காபுரி ஜெமீந்தாராகிய கலியாணசுந்தரம், கமலம், ஷண்முகவடிவு ஆகிய நால்வரையே குறித்து அடிக்கடி புகழ்ந்து பேசுவதை நாம் இப்போதும் கேட்கலாம்.

உலகத்தில் நற்குணத்தினாலும் நன்னடத்தையினாலும் அடையக் கூடாதது ஒன்றுமில்லை. ஆகையால், நமது கதாநாயகர் கதாநாயகிகள் அத்தகைய பெரும் புகழையும், குபேர சம்பத்தையும் அடைந்ததும், பிறந்தது முதல் நாற்பத்தைந்து வயதுகாலம் வரையில் துன்மார்க்கத்திலேயே சென்று கொண்டிருந்த இளவரசரைப் பரிசுத்தமான

நடத்தையுடைய வராக மாற்றியதும், வேறுபல அரிய காரியங்களைச் செய்ததும் ஒரு விந்தையா? காயமும், வாக்கும், மனமும் தீய வழியிலே செல்லாமல் அடக்கி எக்காலத்திலும் நிறை தவறாது ஒழுகுவோர் அடையக்கூடாத நன்மையும் உலகில் இருக்கிறதோ?

சுபம்

புதுவை செந்தமிழ் வாசக சாலையாரால்
கொடுக்கப்பட்ட நற்சாஷிப் பத்திரமும்
தங்கப்பதக்கப் பரிசும்

கனம் வடுவூர்:

# கே. துரைசாமி ஐயங்கார் அவர்களுக்கு

அநேக வந்தனம்; உபயக்ஷேமம்

கற்றோர் மணியே!

நீவிர் தற்கால நவீனகமுறையில் ஜனானுகூலத்திற்கு உடந்தையான நீதிகளைப் புகுத்தியுள்ள **மேனகா, திகம்பர சாமியார்** என்னும் நாவல்களை வெகு பிரியத்துடன் வாசித்து இன்பெய்தினோம். தங்களால் எழுதப்படும் நாவல்களை யாம் வாசிக்க ஆரம்பித்துவிடின் வேறெவ்விதமான அவசர வேலைகளிருப்பினும் அவைகளையும் மறந்து அந்நாவலிற் செறிந்துள்ள சொற்சுவை பொற்சுவைகளால் வசியமாக்கப்பட்டு அது வாசித்து முடி வெய்திய பின்னரே அவைகளைக் கவனிக்கும்படியாய் விடுகின்றது. இதை நோக்க தாங்கள் நாவல் எழுதும் ஆற்றலில் அதிகத் தேர்ச்சியடைந் திருப்பதன்றி ஜனங்களது கவர்ச்சியை முழுதும் கிரகிக்கத் தகுந்த அரிய விஷயங்களை தாங்கள் திரட்டித் தீட்டிவிடும். நவீனகமான முறையானது என்போன்றாரெல்லோரும் மிகுதியாய் மெச்சத் தகுந்ததாகவொளிர்கின்றது. அதில் ஒவ்வொரு பக்கத்திலுங் காணப்படும் பல நன்னீதிகளை அவசியம் கவனிப்போர்கள் நிச்சயமாக நல்லவர்களாவார்கள் என்பது உறுதி. தங்களது நவீனகமுறையில் சிறந்த பேராற்றலை நோக்கித் தங்கட்குப் பலரும் பல நற்சாக்ஷிப் பத்திரங்களும், தங்க வெள்ளிப் பதக்கப் பரிசுகளும் தந்து தங்களை உற்சாகப்படுத்தி இருக்கின்றனர். யாமும் எமது செந்தமிழ் வாசகசாலையாரும் தங்களது ஆற்றலையும் திறமையையும் வியந்து இப் **பொற் பதக்கப் பரிசை** மனப்பூர்வமான வந்தனத்துடன் அளிக்கின்றோம். இதைக் காணும் பல மேதாவிகளும் இன்னும் இதுபோன்ற பதக்கங்களும் நற்சாக்ஷிப் பத்திரங்களும் தந்துதவி தங்கட்கு உற்சாகமுண்டு பண்ணி இன்னும் இதுபோன்ற பல நவீனகத்தை வரையத் தகுந்த பேராற்றலை அதிகப்படுத்துவார்களென்று நம்புகிறோம்; ஆண்டவன் துணை செய்க.

*செந்தமிழ் வாசகசாலை,*
*நெ. 86, காளத்தீஸ்வரன் கோவில் தெரு,*
*புதுவை, 30.3.1921*

*இங்ஙனம்*
**அ.ந. நரசிங்க முதலி**
*அக்கிராசனன்*

# மதிப்புரை

சுதேசமித்திரன் 22.12.1926–ல் எழுதுகிறது:–

## ஸௌந்தர கோகிலம்

*(வடுவூர் ஸ்ரீமான் கே. துரைசாமி ஐயங்கார், பி.ஏ., எழுதியது.*

ஸ்ரீமான் துரைசாமி ஐயங்காரை அறியாதவர்கள் தமிழ்நாட்டில் வெகு சிலரேயிருப்பார்கள். சென்ற பல வருஷங்களாக அவர் வெளியிட்டு வந்த பல நாவல்களினாலும், மாத சஞ்சிகைகளாலும் அவர் தம்முடைய பெயரைத் தமிழ் மக்கள் என்றும் மறவாமற் செய்துகொண்டுவிட்டார். கேவலம் பணத்தாசையால் மனம் போனவாறு கதைகளை எழுதி, படிப்பவர்கள் மனதைக் கெடுத்து வரும் சில ஆசிரியர்களைப் போன்றில்லாது, ஜனானுகூலத்திற்கு உடந்தையான நீதிகளை ஆங்காங்கே புகுத்தி, படிக்கப் படிக்க அலுப்புத் தோன்றாத ஜலப் பிராயமான நடையில், உலகானுபவத்திற்கு ஒத்தவிதமாகக் கதைகளை எழுதி, தமிழ் மக்களின் மனதில் உத்தமமான குணங்களையும் தூய்மையான எண்ணங்களையும் பதிய வைக்க ஸ்ரீமான் துரைசாமி ஐயங்கார் முயன்று வருவதால், அவர் எழுதும் நாவல்களை ஜனங்கள் வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருப்பது சகஜமேயாகும். அவர் சமீபத்தில் வெளியிட்ட, ''மாயா விநோதப் பரதேசி'' என்ற மகுடமுள்ள நாவலை **ஹிந்துப்பத்திரிகையில்** விமரிசனம் செய்த நண்பர் ஆங்கில பிரெஞ்சு மேதாவிகள் பலர் நம்முடைய பழக்க வழக்கங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட மேனாட்டின் அனுபவங்களை ஒட்டியும், அவர்களுடைய ஆஸ்தையை பூர்த்தி செய்து வைக்கக்கூடிய விதமாகவும் எழுதியுள்ள நாவல்களின் உண்மையான உட்கருத்தை உணராமல் மனம்போனவாறும், இந்த தேசத்தின் நிலைமைக்குப் பொருந்தியது போலும் சிலர் திரித்து மொழி பெயர்ந்துள்ள நாவல்களைப் படித்து, தமிழ் நாவல்களிலேயே அடைந்திருந்த வெறுப்பை ஸ்ரீமான் துரைசாமி ஐயங்காருடைய நாவல் போக்கிவிட்டதென்று சொல்லியிருப்பதில் அதிசயமொன்றுமில்லை. சுமார் 2 வருஷங்களுக்கு முன் வெளியான இந்நவீனகத்தின் முற்பாகத்தில் கண்ணபிரான் முதலியார் விவாக சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்டிருந்ததைப் படித்தவர்கள் அவருடைய கதியாதாயிற்றோவென்றும, அவருடைய பெற்றோர்கள் யாரோவென்றும் அவரை விவாகம் செய்துகொள்ள இசைந்திருந்த கோகிலாம்பாள் தனது மன உறுதி தவறாதிருந்தாளோவென்றும் தெரிந்து கொள்ள வெகு ஆவலுடனிருந்திருப்பார்கள். அவர்களுடைய ஆவலை இப்பொழுது நம் முன் இருக்கும் இரண்டாம் பாகம் பூர்த்தி செய்து வைக்கிறது.

முதற் பாகத்தைப்போலவே இரண்டாம் பாகமும் வெகு ரசமாகவும், படிக்கப் படிக்க மேலே என்ன நடக்கிறதோவென்னும் ஆவலைக் கிளப்பிவிடக் கூடியதாகவும் இருக்கிறது. தன்னை மணஞ்செய்து கொள்ளவிருந்த கண்ணபிரான் முதலியாருக்கு எதிர்பாராதவிதமாக ஆபத்து ஏற்பட்டும், அவரையே மணப்பதென்ற உறுதியுடன் கோகிலாம்பாள் அவரைப் பார்க்கச் சிறைக்குச் சென்றதும், வழியில் போலீஸ் இன்ஸ்பெக்டருடைய சூழ்ச்சியால் அவர் வசப்பட்டு, அவருடைய வீட்டிலிருந்து வெகு சாமர்த்தியமாகத் தப்பி வருவதும், பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பதுபோல் வண்டிக்காரனுடைய மோசத்தால் மற்றொரு ஆபத்தில் அவள் சிக்குவதும், திக்கற்றவருக்குத் தெய்வமே துணையென்னும் நீதிவாக்கியம் பொய்த்துப் போகாமல், அவளிடம் மோகாவேசங் கொண்டிருந்த ஒருவர் அவளைப் பரம ஆபத்திலிருந்து மீட்டுவிடுவதும், ஸ்திரீகள் தனித்து வெளியே செல்லக்கூடாதென்பதையும், குற்றங்களை விளக்குவதற்காக ஏற்பட்டிருக்கும் போலீஸ்காரர்களிற் சிலரே தவறான வழியில் நாட்டமுடையவர்களாக இருப்பதையும் அறிவுறுத்துகின்றன. திருவாங்கூர் திவானாக இருந்தவருடைய குடும்ப வாழ்க்கையைப் பற்றிக் கதாசிரியர் செய்திருக்கும் வர்ணனையானது ஸ்திரீ புருஷர்களுக்குள் சகஜமாக இருந்துவரவேண்டிய அன்யோன்ய பாவத்தை அறிவுறுத்துவதாக இருக்கிறது. அரபிக் கதைகளில் பாக்ஷா மாறுவேடத்துடன் நகர் சோதனை செய்து வருவதுபோல் இந்த திவானும் தமது பெண்டாட்டியுடன் வெளியே சென்றிருந்த சமயத்தில் ஒரு உத்தமிக்கு நேர்ந்த இடுக்கணைக் கண்டு கசிந்துருகி, அவளுடைய வரலாற்றை விசாரித்து அவளுக்கு நியாயம் வழங்கியது சில போலீஸ்காரர்கள் சொந்த நன்மையை உத்தேசித்து எத்தகைய தீக்காரியங்களிலும் ஈடுபட்டு விடலாமென்பதை நிரூபணம் செய்து அவர்கள் விடும் சாக்ஷியங்களில் அதிகமாக நம்பிக்கை வைத்து விடக் கூடாதென்பதை நீதிபதிகளுக்கு வலியுறுத்துவதாகவிருக்கிறது. சதிபதிகள் எத்துணை அன்யோன்ய பாவத்துடனிருந்தபோதிலும் உலகில் பலவித வதந்திகள் பரவி வருவது இக்கலியுகத்தில் சர்வசாதாரணமாக இருந்துவருவதை திவான் சாகேப் உலக ஆசையை வெறுக்க நேர்ந்த சந்தர்ப்பங்கள் நிரூபணம் செய்கின்றன. இந்த நவினகத்தின் இதர விசேஷங்களை விரித்து உரைக்கின் வளருமாதலால் இம்மட்டோடு நிறுத்திக் கொள்ளுகிறோம். இப்புத்தகத்தைக் கையிலெடுத்தவர்கள் இதிலுள்ள 376 பக்கங்களையும் படிக்காமல் கீழே வைக்கமாட்டார்களென்பது மிகையாகாது. உத்தமமான தர்மங்களைப் பசுமரத்தாணிபோல் படிப்பவர் மனத்தில் பதியவைக்கக்கூடிய இத்தகைய சிறந்த நவீனகங்களை வெளியிட்டுவரும் **ஸ்ரீமான் துரைசாமி ஐயங்காருக்குத்** தமிழ்நாடு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. இது போன்ற இன்னும் பல நவீனங்களை ஸ்ரீமான் துரைசாமி ஐயங்கார் வெளியிட்டு வருவதற்கு வேண்டிய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தமிழ் மக்கள் அளிப்பார்களென்று நம்புகிறோம்.

---

# ஆங்கிலத்தில் ஷெர்லாக்ஹோம்ஸ்
# நவீன காலத்தில் 007 ஜேம்ஸ்பாண்டு
# அன்றும் இன்றும் என்றும் தமிழகத்தில்


## திகம்பர சாமியார்





1. பூர்ண சந்திரோதயம் பாகம் - 1
2. பூர்ண சந்திரோதயம் பாகம் - 2
3. பூர்ண சந்திரோதயம் பாகம் - 3
4. பூர்ண சந்திரோதயம் பாகம் - 4
5. பூர்ண சந்திரோதயம் பாகம் - 5
6. கும்பகோணம் வக்கீல் பாகம் - 1
7. கும்பகோணம் வக்கீல் பாகம் - 2
8. மாயா விநோதப் பரதேசி பாகம் - 1
9. மாயா விநோதப் பரதேசி பாகம் - 2
10. மாயா விநோதப் பரதேசி பாகம் - 3
11. மேனகா பாகம் - 1
12. மேனகா பாகம் - 2
13. சௌந்திர கோகிலம் பாகம் - 1
14. சௌந்திர கோகிலம் பாகம் - 2
15. சௌந்திர கோகிலம் பாகம் - 3
16. சௌந்திர கோகிலம் பாகம் - 4
17. மதன கல்யாணி பாகம் - 1
18. மதன கல்யாணி பாகம் - 1
19. மதன கல்யாணி பாகம் - 2
20. வித்யாசாகரம்
21. வசந்த மல்லிகா





... ... ... இதற்கு மேலும் வருவார் !